ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது

கலைஞரின் சட்டமன்ற உரைகள்



ஒத்திவைப்பு, கவன ஈர்ப்பு தீர்மானங்களின் மீது

கலைஞரின்
சட்டமன்ற உரைகள்

வெளியீடு :
தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

விற்பனை உரிமை :
பூம்புகார் பதிப்பகம்
127 (ப. எண். 63), பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.

முதல் பதிப்பு : மே, 2008

G1005929

விலை ரூ. **420/-**

894.8115
TAM

உரிமை : ஆசிரியர்க்கே

Printed & bound by Eagle Press, Chennai - 600 013.

என்னுரை

1956ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்றது தி. மு. கழகத்தின் மாநில மாநாடு. தி. மு. கழகம் 1949ல் தொடங்கப் பட்டு ஏழாண்டுகள் ஆகியிருந்தன. அப்போதெல்லாம் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தி. மு. க. குறித்துப் பேசினாலும், எழுதினாலும், பேட்டி கொடுத்தாலும் - ஓர் அறைகூவல் விடத் தவற மாட்டார். "தி. மு. க. காரர்கள் வெட்ட வெளியில் நின்று பேசுகிறார்களே; அவர்களுக்கு மக்கள் ஆதரவு இருப்பது உண்மையானால் சட்டசபைக்கு வந்து பார்க்கட்டுமே !" என்பதுதான் அந்த அறைகூவல் - அவரது அந்த அறைகூவலை அன்பான அழைப்பாகவே கருதி, அறிஞர் அண்ணா அவர்கள், "இனிமேல் வரும் தேர்தல்களில் தி. மு. க. போட்டியிடும்" என்று ஒரு தீர்மானத்தை, திருச்சி மாநில மாநாட்டில் கூடியிருந்த லட்சோபலட்சம் மக்களின் தீர்ப்பாகவே வெளியிட்டார்.

அதன் விளைவாகக் கட்சியின் முன்னணித் தலைவர்கள் தேர்தலில் போட்டியிடும் இடங்களை - அண்ணா அவர்களே; கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் அறிவித்தார். அப்போது நண்பர்கள் வற்புறுத்தலுக்கு இணங்க; நான் எனது பிறந்த ஊரான "திருக்குவளை" உள்ளிட்ட நாகைத் தொகுதியில் நிற்கலாமென்று முடிவு செய்துகொண்டு சென்னைக்கு வந்தேன். சென்னையில் அண்ணா அவர்கள், அன்றைய தலைமைக் கழகமிருந்த ராயபுரம் அறிவகத்தில் இருந்தார்கள். சந்தித்தேன். அண்ணா கையாலேயே என் பெயரை "குளித்தலை தொகுதி"யில் குறிப்பிட்டு; என்னைக் கேட்காமலேயே அறிவித்துவிட்டார். மறுத்துரைக்காமல் குளித்தலையில் வேட்பாளராக நின்றேன். அந்தத் தேர்தலில் தூத்துக்குடி தொடங்கி, நாகை வரையில் இருந்த அனைத்துத் தொகுதிகளிலும் நான் ஒருவன் மட்டுமே குளித்தலையில் வென்றேன். ஆம்; சட்டப்பேரவை நுழைவுக்கான கதவு இப்படி எனக்குத் திறக்கப்பட்டது. 1957ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த இரண்டாவது பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில், நான், பேராசிரியர் க. அன்பழகனார்,

ஏ. வி. பி. ஆசைத்தம்பி, திருமதி சத்தியவாணிமுத்து, ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், விருதாசலம் எம். செல்வராஜ், எம். பி சுப்பிரமணியம், ம. பா. சாரதி, களம்பூர் அண்ணாமலை, ஆனந்தன், இருசப்பன், பி. எஸ். சந்தானம், சி. நடராஜன் ஆகிய நாங்கள் 15 பேர் வெற்றிபெற்று, சட்டப்பேரவையில் இடம்பெற்றோம்.

அன்று முதல் இன்று வரை அனைத்துத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் எனக்கு; ஆம் கழகத்துக்கு; நான் போட்டியிட்ட தொகுதிகளில் வெற்றியைத்தான் அளித்தார்கள்.

இந்த ஐம்பது ஆண்டுக்காலத்தில் நான் சட்டப்பேரவையில், பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆற்றிய உரைகளை அவற்றின் அகல நீளம் கணக்கிடாமல் அப்படியே அச்சியற்றித் தருகிற அரிய பணிக்குத் தன்னை ஒப்படைத்துக்கொண்ட தம்பி சண்முகநாதனை என்னால் மறக்கவே முடியாது. அவரது முயற்சிதான் அடுக்கடுக்கான இந்தத் தொகுப்புகள் என்பேன்.

1938 முதல் 70 ஆண்டுக்கால என் பொது வாழ்க்கையில் – அரசியல் வாழ்வில் ஓர் அங்கமான சட்டப்பேரவையில் தொடர்ந்து 50 ஆண்டுக் காலம் நான் ஆற்றிய பணிகளை, அந்த அவையில் ஆற்றிய இந்த உரைகள் விளக்கிடும் என்பதில் ஐயமில்லை.

சொல்லாடலில் சூடும், சுவையும் மாறி மாறி காணலாம் – அதன் காரணமாக மனித நேயம் – நாகரிகம் – பண்பாடு இவற்றை அணுப்பொழுதும் மறந்ததுமில்லை; அரசியல் பகை காரணமாக அறவே துறந்ததுமில்லை.

அவற்றில் சிலவற்றுக்குச் சான்று கூற விழைகிறேன். நான் பிறந்த ஊர் திருக்குவளையில் என் அன்னையின் பெயரால் "அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி"யை முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம்தான் திறந்துவைத்தார். என் அன்னை அஞ்சுகம் அம்மையார் மறைந்தபோது எனக்கு முன்பு சென்று

என் இல்லத்தில் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தியவர் அன்றைய முதல்வர் திரு. காமராஜர் !

காமராஜருக்கும் எனக்குமிடையே எவ்வளவோ கடுமையான அரசியல் போராட்டம் - ஆனால் அவர் மறைந்த பிறகு சென்னையில் காமராஜர் சாலை - சென்னையிலும், விருதுநகரிலும் காமராஜர் நினைவகம் - கன்னியாகுமரியில் வரலாற்றுச் சின்னமாக காமராஜர் மணி மண்டபம் - சென்னை விமான நிலைய உள்நாட்டு முனையத்திற்கு காமராஜர் பெயர் - அவர் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாட சட்டம் - இத்தனையும் அரசியல் பண்பாட்டின் அடையாளமாக நான் உருவாக்கியது - அதுபோல அவர் நினைவு போற்ற எத்தனையோ ஏற்பாடுகள்.


மனித நேயத்துடன் அரசியல் நடத்தப்பட்டது - அராஜகங்களுக்கிடையிலேயும் அன்பு மலர் பூத்தது.

இப்படி பல வடிவெடுத்த சூழ்நிலைகள் - சமுதாய மாற்றங்கள் - இவைகள் கடந்த ஐம்பதாண்டுகளில் எப்படியெல்லாம் வானத்தில் அலையும் மேகங்களைப் போல மாறி மாறிக் காட்சியான போதிலும் - மனிதனுக்குரிய மாண்பினை மாற்றிக்கொள்ளாமல்தான் என் அரசியல் பாதை அமைந்தது என்பதை நினைவூட்டி;

அரசியல் மாற்றங்களுக்கேற்ப இந்தத் தொகுப்பு உரைகளில் தலைகாட்டும் கருத்துக்கள், வார்த்தைகள், வாசகங்கள் அனைத்துக்கும் ஒரு பொதுமன்னிப்பை அளித்து;

என் நெஞ்சில் எழுந்த எண்ணங்களுக்கு - வாழ்த்து வழங்கி வலிமை சேர்த்திட வேண்டுகிறேன்.

அன்புள்ள,



பதிப்புரை

காலத்தை வென்று, ஞாலத்தில் நிலைத்து நிற்கக்கூடிய வலிவும், பொலிவும் பெற்றவை கலைஞர் அவர்களின் நூல்கள். அவரது நூல்கள் பலவற்றைப் பதிப்பிக்கும் பொறுப்பும் சிறப்பும் தமிழ்க்கனி பதிப்பகத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. கலைஞர் அவர்களுக்கு முழுமையாக நிறைவு தரும் வண்ணம் பதிப்பித்துத் தருவதென்பது மிகவும் கடினமான காரியம். எனினும், ஒவ்வொரு முறையும் திறன் அனைத்தையும் ஒருமுகப்படுத்தி, உழைத்து உருவாக்கிப் பதிப்பித்ததால்தான் மீண்டும் மீண்டும் அந்தப் பெருமை தமிழ்க்கனிப் பதிப்பகத் தார்க்கு கிடைத்து வருகிறது.

கலைஞர் அவர்களின் :

பொன்னர் சங்கர்

தொல்காப்பியப் பூங்கா

தாய் காவியம்

முத்துக்குளியல்

சிந்தனையும் செயலும்

காலப்பேழையும் கவிதைச் சாவியும்

போன்ற கற்கண்டுச் சொல்லோவியங்களைப் பதிப்பித்திடும் நல்ல வாய்ப்புக்களைப் பெற்று நாமணக்க நன்றி செலுத்தி நாளெல்லாம்

மகிழ்ந்திருக்கிறோம். அந்த வரிசையில் மற்றுமொரு வாய்ப்பு தற்போது கிட்டியிருக்கிறது.

''சட்டப்பேரவையில் கலைஞர்'' பொன்விழா கொண்டாடப்படும் இந்தக் குதூகலமான வேளையில், கடந்த ஐம்பதாண்டுகளில், தமிழ்நாடு சட்டப் பேரவையில் கலைஞர் அவர்கள் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறுபட்ட பொருள் களில் ஆற்றிய உரைகளையெல்லாம் தொகுத்துப் பதிப்பிக்கும் பேறு தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கு வாய்த்திருக்கிறது.

ஆளுநர் உரைமீது உரைகள்

தொழில்துறை பற்றி உரைகள்

காவல்துறை பற்றி உரைகள்

நிதிநிலை அறிக்கையின் மீது உரைகள்

காவிரி பிரச்சினை மீது உரைகள்

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது உரைகள்

தகவல்கள், அறிக்கைகள், விளக்கங்கள்மீது உரைகள்

அரசு தீர்மானம், சட்ட முன்வடிவுகள் மீது உரைகள்

மானியம், துணை மானியம், நிதி ஒதுக்கீடுகள் மீது உரைகள்

என சட்டப்பேரவையில் அவர் ஆற்றிய உரைகள் பகுக்கப்பட்டு பதிக்கப்பட்டு வெளிவருகின்றன.

''கேட்டார்ப் பிணிக்கும் தகைய வாய்க் கேளாரும் வேட்பமொழியும்'' சொல்லேருழவர் கலைஞர். திறனறிந்து

சொல்லைச் சொல்லுவதும், பிறிதோர்சொல் அச்சொல்லை வெல்லுஞ்சொல் இன்மையறிந்து சொல்லுவதும் கலைஞர் அவர்களுக்கு இயல்பாக வரப்பெற்ற கலையாகும். செறிந்த சிந்தனை, தேர்ந்த சொற்கள் - இவையிரண்டும் கலைஞரது சொற்பொழிவுகளின் அடிநாதங்களாகும். சட்டப்பேரவையில் கலைஞர் ஆற்றிய உரைகளைப் படிக்கும்போது இந்த உண்மைகளை யாரும் எளிதில் உணர முடியும். பரபரப்பும் விறுவிறுப்பும், ஆழமும் அழகும் மிகுந்திருக்கும் அவரது உரைகள் காலத்தின் கண்ணாடிகளாகும். அவரது உரைகளில் காணப்படும் நுட்பமான புள்ளிவிவரங்களும், வாதத்திறமையும், நகைச்சுவையும் படிப்பவர்களின் கருத்தை நிச்சயம் கவர்ந்திழுக்கக்கூடியவை.

அரசியலிலும், அரசுத்துறைகளின் செயல்பாடுகளிலும் ஆர்வமுள்ளோர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டிய இந்த நூல்களுக்கு தமிழ்கூறும் நல்லுலகில் மிகுந்த வரவேற்பு கிடைத்திடும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு நிரம்ப உண்டு.

- தமிழ்க்கனி பதிப்பகத்தார்

பொருளடக்கம்

உரை எண்.	தேதி	பொருள்	பக்கம்
1.	19.10.1964	உணவு நெருக்கடி	17
2.	29.11.1967	பாசன வசதி	20
3.	11.03.1969	தேசிய கீதத்திற்கான மரியாதை	23
4.	21.03.1969	மொரார்ஜி தேசாய் தெரிவித்த கருத்து பற்றி	27
5.	25.03.1969	தேசிய கீதத்திற்கான மரியாதை	31
6.	19.08.1969	மாநில சுயாட்சி	34
7.	20.03.1970	மின் கட்டண உயர்வு	38
8.	24.03.1970	தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பேசிய கருத்து	43
9.	25.08.1970	நிலப்பறி இயக்கம்	47
10.	26.08.1970	மாநிலத்திற்கு தனிக் கொடி	54
11.	03.09.1970	மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்	60
12.	26.11.1970	திடீர் பிள்ளையார்	68
13.	26.03.1971	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	77
14.	02.04.1971	பாண்டியாறு - புன்னம்புழா	81
15.	26.07.1971	சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம்	84
16.	08.12.1971	இராமனாதபுரம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	88
17.	17.03.1973	பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம்	91

18.	04.08.1973	அரிசி உற்பத்தி பற்றிய பிரச்சினை	97
19.	04.12.1973	பிரிவினைப் பிரச்சினை	107
20.	21.12.1974	இராமருக்கு எதிர்ப்பு	113
21.	28.02.1978	அரசு அலுவலர் பிரச்சினை	117
22.	05.04.1979	வாகைக்குளம் துப்பாக்கி சூடு	121
23.	07.08.1980	நக்சல்பாரி இயக்கம்	127
24.	02.03.1981	அரசாணை எரிப்புப் போராட்டம்	133
25.	15.04.1981	இராமனாதபுரம் கலவரம்	137
26.	16.04.1990	வருவாய்த் துறை அலுவலர் பிரச்சினை	141
27.	16.04.1990	ஆம்பூர் பிரச்சினை	147
28.	21.04.1990	மீனவர் பிரச்சினை	155
29.	12.05.1990	மழை வெள்ள நிவாரணம்	160
30.	23.08.1990	ஆட்டோ சங்கர் பிரச்சினை	163
31.	25.05.1996	விபத்து நிவாரணம்	167
32.	28.05.1996	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	169
33.	19.07.1996	திருவண்ணாமலை தீ விபத்து	174
34.	19.07.1996	வத்திராயிருப்பு - இரு பிரிவுகளிடையே தகராறு	178
35.	20.07.1996	ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பு	181
36.	22.07.1996	லாக்-அப் மரணம்	185
37.	30.07.1996	காவலர் தேர்வு முறை	188
38.	07.08.1996	சேலம் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	191

39.	07.08.1996	காவலர்களிடையே தகராறு	197
40.	09.08.1996	கன்யாகுமரியில் வன்முறைச் சம்பவம்	200
41.	09.08.1996	மாவட்டங்கள் பிரிவினை	204
42.	09.08.1996	நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பிரச்சினை	211
43.	17.08.1996	சென்னை வேப்பேரி வன்முறைச் சம்பவம்	214
44.	17.08.1996	மின்வாரியப் பிரச்சினை	218
45.	19.08.1996	டி. வி. வெங்கட்ராமன் வீட்டில் வன்முறையா?	222
46.	21.08.1996	மண்டல் கமிஷன் பரிந்துரை	239
47.	23.08.1996	விடுதலைப் புலிகள் பிரச்சினை	243
48.	30.08.1996	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	248
49.	30.08.1996	விழுப்புரம் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	252
50.	31.08.1996	பஞ்சாயத்து ராஜ் சட்டம்	255
51.	29.01.1997	கயத்தாறு, கடையநல்லூர் பிரச்சினைகள்	260
52.	31.01.1997	சாயப்பட்டறை பிரச்சினை	267
53.	10.03.1997	கூட்டுறவு தேர்தல்கள்	277
54.	11.03.1997	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	281
55.	12.03.1997	மது விலக்குப் பிரச்சினை	285
56.	15.03.1997	மீனவர்கள் பிரச்சினை	290
57.	17.03.1997	சந்தனக் கிடங்கில் தீ விபத்து	294
58.	20.03.1997	கூட்டுறவு வங்கி ஒன்றில் கொள்ளை	298

59.	21.03.1997	திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சினை	301
60.	24.03.1997	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	306
61.	04.04.1997	லாரிகள் வேலை நிறுத்தம்	311
62.	05.04.1997	சிதம்பரம் நடராஜர் கோவில் பிரச்சினை	317
63.	15.04.1997	காவல் துறை பிரச்சினை	322
64.	24.04.1997	மதுரை லீலாவதி கொலை வழக்கு	328
65.	29.04.1997	தேவர்சிலைக்கு சேதம்	332
66.	14.10.1997	சந்தன மரக் கடத்தல் வீரப்பன்	340
67.	18.10.1997	வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம்	354
68.	31.03.1998	கைத்தறியாளர்கள் பிரச்சினை	359
69.	31.03.1998	மதுரை பேராசிரியர் பரமசிவம் கொலை	363
70.	02.04.1998	குண்டுப்பட்டி பிரச்சினை	367
71.	02.04.1998	சட்டம் ஒழுங்கு	372
72.	02.04.1998	குண்டுப்பட்டி காவலர்கள் பிரச்சினை	375
73.	15.04.1998	பால்விலையேற்றம்	379
74.	15.04.1998	காவிரிப் பிரச்சினை	383
75.	16.04.1998	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	386
76.	21.04.1998	கோவை வெடி குண்டு சம்பவம்	394
77.	23.04.1998	சந்தனக்கடத்தல் வீரப்பன்	403
78.	28.04.1998	காவல் துறை பிரச்சினை	409
79.	05.05.1998	தீ விபத்து நிகழ்ச்சி	414


80.	06.05.1998	மதுக்கடை ஏலம்	422
81.	13.05.1998	சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	426
82.	18.05.1998	எம். ஜி. ஆர். சிலை	428
83.	18.05.1998	சந்தனக் கடத்தல் வழக்கு	431
84.	19.05.1998	மதுக்கடை ஏலத் தகராறு	437
85.	22.05.1998	ஆசிரியர்கள் சங்கப் பிரச்சினை	449
86.	24.11.1998	சித்ரா மரணம் குறித்து பிரச்சினை	453
87.	25.11.1998	தூத்துக்குடி ஸ்டெர்லைட் தொழிற்சாலை	462
88.	25.11.1998	மாஞ்சோலை தேயிலைத் தோட்டப் பிரச்சினை	468
89.	18.02.1999	கர்நாடகாவில் தமிழர்களுக்கு பிரச்சினை	474
90.	20.02.1999	விஷச் சாராயப் பிரச்சினை	480
91.	24.02.1999	மலேசியாவில் பாதிக்கப்பட்ட தமிழர்கள்	490
92.	24.03.1999	பேரவைத் தலைவரைப் பற்றி	498
93.	25.03.1999	ஆடிட்டர் இராஜசேகரன் தாக்கப்பட்ட சம்பவம்	504
94.	26.03.1999	நீதிமன்றத் தீர்ப்பு	514
95.	05.04.1999	காவல் துறையினர் பிரச்சினை	518
96.	07.04.1999	குமரியில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை	522
97.	14.05.1999	கள்ளச் சாராய சாவு	529
98.	18.11.1999	சென்னை மத்திய சிறைச்சாலை சம்பவம்	535

99.	19.11.1999	தூசி காவல் நிலையச் சம்பவம்	542
100.	08.03.2000	சேலம் இரும்பாலை பிரச்சினை	557
101.	31.03.2000	காவல் துறை பிரச்சினை	561
102.	12.04.2000	தடை செய்யப்படாத இயக்கங்கள்	567
103.	17.04.2000	அரிசி விலை மானியம்	570
104.	25.04.2000	எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டம்	578
105.	27.04.2000	அரசு அலுவலர் நலன்	584
106.	28.04.2000	காவல் துறையினர் பிரச்சினை	590
107.	29.04.2000	தேயிலை குறித்த பிரச்சினை	594
108.	02.05.2000	வறட்சி நிவாரணம்	599
109.	03.05.2000	மீனவர்கள் பிரச்சினை	602
110.	04.05.2000	தமிழர்களின் பாதுகாப்பு	610
111.	10.05.2000	வாசுதேவநல்லூர் பிரச்சினை	615
112.	11.05.2000	ஆள்கடத்தல் விவகாரம்	621
113.	16.05.2000	தேயிலை உற்பத்தியாளர்கள் பிரச்சினை	624
114.	13.11.2000	சந்தனமரக் கடத்தல் வீரப்பனிடமிருந்து நடிகர் ராஜ்குமார் மீட்பது குறித்து	630
115.	29.05.2007	காமராஜர் சிலை	655

ஒத்திவைப்பு, கவனஈர்ப்பு தீர்மானங்களின் மீது

கலைஞரின்

சட்டமன்ற உரைகள்



ஒத்திவைப்பு, கவன ஈர்ப்பு தீர்மானங்களின் மீது கலைஞரின் சட்டமன்ற உரைகள்

உணவு நெருக்கடி

உரை : 1 நாள் : 19.10.1964

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சமீபத்திலே நாட்டிலே ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி குறித்து இங்கு கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணைகளை யெல்லாம் சபை முதல்வர் அவர்கள் அவருக்கே உரிய திறமையான கணைகளின் மூலம் சமாளித்திருக்கிறார்கள் என்றாலும், இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைத் தந்திருக்கிறேன். சென்னை போன்ற இடங்களிலும், வேறு பல இடங்களிலும் அரிசிக்கு மக்கள் படுகிற கஷ்டங்களை எண்ணி ஒத்திவைப்புப் பிரேரணைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தொடர்பாக கோவை நகரில் அரிசி கிடைக்காமல் அல்லலுற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள் என்று காரணம் காட்டப்பட்டு ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த ஆறு பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நண்பர் அர்ச்சுனன் கலெக்டரிடம் சென்று வாதாடினார்கள். கலெக்டர் அவர்களும் அர்ச்சுனன் வாதாடிய பிறகு அர்ச்சுனனோடு சென்று அங்கே விசாரித்து கலெக்டர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்த ஆறு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டவர்களை அழைத்துக் கொண்டு சுமார் 2,000 பேர்களோடு எம்.எஸ்.ஸி. திரு. பொன்னுசாமி அவர்களுடைய வீட்டுக்கு அரிசி சுலபமாகக் கிடைக்க வழிவகை காணவேண்டுமென்று சென்றிருக்கிறார்.

அன்னார் அந்த நேரத்தில் அங்கே இல்லாத காரணத்தினால், நகர சபைத் தலைவர் திரு. நஞ்சப்பா அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். அவரும் வீட்டில் இல்லாத காரணத்தினால் ஊர்வலமாகக் கடைத்தெரு வழியாக வரும்போது ஒரு பையனைப் போலீஸ் அதிகாரி நையப்புடைக்கவும், அதைத் தடுத்து 'ஏன் அடிக்க வேண்டும்' என்று திரு. அர்ச்சுனன் கேட்க வாய்த் தகராறு முற்றி, போலீஸ் அதிகாரி பக்கத்தில் இருந்த போலீஸ்காரருடைய துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சுட்டு விடுவேன் என்று பயமுறுத்த, 'சுட்டுக் கொல்லுங்கள் பார்க்கலாம்' என்று அவர் மார்பைத் திறந்து காட்ட, உடனே அவர் தொண்டைக் குழியண்டை துப்பாக்கி கொண்டு சூடு கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட கொடூரமான காட்டாட்சி தர்பார் நடத்தியிருக்கிறார்கள். திரு. அர்ச்சுனனைச் சுட்டுக்கொன்ற போலீஸ் அதிகாரிக்கும் அவருக்கும் பழைய விரோதம் உண்டு என்று சொல்லப்படுகிறது. திரு. அர்ச்சுனனுக்காக வாதாடும் நேரத்தில், அவர் மதுவிலக்குக் கொள்கையை எதிர்த்து, சர்க்கார் திட்டத்தை எதிர்த்துப் போராடினார் என்று எல்லோருக்கும் தெரியும். அவருடைய இந்தப் போராட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உடன்பாடுதானா என்ற . . .

Mr. SPEAKER : This is a matter which may go to a court. Therfore, the hon. Member need not go into the details. Let him be brief.

கலைஞர் மு. கருணாநிதி : ஆகவே போலீஸ் அதிகாரி, அர்ச்சுனன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எந்த விதமான வேறு பயங்கரமான நிலைமையும் ஏற்பட்டுவிடவில்லை என்று மிக துல்லியமாகத் தெரிகிறது. வேண்டுமென்றே, அர்ச்சுனனைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் காரியம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சர்க்கார் இப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளை வளர்ப்பார்களேயானால் அல்லது இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் முயலுவார்களேயானால் அதனால் பெரிய பயங்கரங்கள் ஏற்படுவதுடன் கொள்கை மாறுபடுகிற தலைவர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதினால் இதை ஒரு முக்கிய அவசரப் பிரேரணையாக எடுத்துக்கொண்டு, உடனடியாக ஒரு பொது நீதி விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்

கொள்கிறேன். அப்படி நீதி விசாரணை நடக்கிற வரையிலும் அந்தப் போலீஸ் அதிகாரியை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், அனுமதிக்க வேண்டுமென்றும் சபையின் முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மனிதாபிமானத்தின் காரணமாக.

மேலும் போலீஸ் ஐ.ஜி. கோயம்புத்தூருக்குச் சென்றிருக்கிறார்கள். மேலும் வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன. ஜாயின்ட் கலெக்டர் ரிப்போர்ட் அனுப்பிய பிறகு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பதைப் பற்றி முடிவு எடுக்க முடியும். இந்த நிலைமையில் இப்பிரச்சினை அவசரப் பிரேரணைக்குரியது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசன வசதி

உரை : 2 **நாள் : 29.11.1967**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானம், தீர்மான அளவில் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லையென்றாலும், முக்கியத்துவம் கருதி இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

தென்மேற்குப் பருவமழை காலத்தில் மேட்டூர் நீர்த் தேக்கம் கணிசமான அளவு நிரம்பி, மிகுந்த ஊக்கத்துடனும் கவனத்துடனும் பாசன நீர் வழங்கி குறுவை, ஆடுதுறை 27 நெற்பயிர் காவிரிப் பாசன பகுதிகளில் பொழிந்து விளைந்தது வெளிப்படை. இயல்பாக குறுவை காலத்தில் உபயோகிக்கும் நீர் அளவையே இந்த ஆண்டு இயல்பைவிட அதிகமாகப் பயன்பெறும் அளவில் உபயோகிக்கப்பட்டது.

ஆயினும் தென்மேற்குப் பருவமழை காலத்தில் மேட்டூர் நிரம்பவில்லை. மெர்க்காராப் பகுதிகளில் மழைப் பற்றாக்குறை 13 சதவிகிதம். நீர்த்தேக்கத்திற்குச் சேரும் நீர்வரத்தில் பற்றாக்குறை 17 சதவிகிதம். காவேரி சங்கமுகப் பகுதிகளில் சராசரி மழையில் 46 சதவிகிதமே இவ்வாண்டு மழை பெய்தது.

வடமேற்குப் பருவமழைக் காலத்தில் வானம் மேலும் பொய்த்துவிட்டது. மெர்க்காராப் பகுதிகளில் மழைப் பற்றாக்குறை 60 சதவிகிதம். சராசரி வாரத்திற்கு இப்பருவத் திங்களில் நமக்குக் கிட்டிய நீர்வரத்து 30 சதவிகிதமே. காவேரி சங்கமுகப் பகுதிகளில் அக்டோபர் திங்களில் சற்று அதிகமாக மழை பெய்த போதிலும் நவம்பர் திங்களில் இயல்பைவிடக் குறைவு. 5-11-1967-ம் நாளுக்குப் பின் மழையே இல்லை.

எனினும் இப்போது கிட்டிய விவரப்படி ஆறு லட்சம் ஏக்கர் சம்பாப் பயிர் காவேரி, காவேரி மேட்டூர் திட்ட ஆயக்கட்டு இவைகளில் பயிராகியுள்ளது. சேலம், திருச்சி மாவட்டங்களில் ஒரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரம் ஏக்கர்களும், கீழ் கொள்ளிடம் அணைக்கட்டின் கீழ் ஒரு லட்சத்து பன்னிரண்டாயிரம் ஏக்கர்களும் நடுகை முடிவுறும் நிலையில் உள்ளது. காவேரி பாசனப் பகுதிகளில் குறுவை, ஆடுதுறை 27, அறுவடையான நிலங்களில் இப்போது இரண்டாவது பயிர் நடுகை ஆகிக்கொண்டிருக்கிறது.

நேற்றைய நீர்நிலை மட்டம் மேட்டூரில் 58.1 அடி. நீர்த்தேக்க அளவு 23,291 மில்லியன் கன அடி, நீர்வரத்து 1,449 க்யூசெக்ஸ், வெளியிடப்படும் பாசன நீர் 8,154 க்யூசெக்ஸ். பயிராகியுள்ள சம்பா நிலங்கள் அனைத்தினையும் கணக்கிட்டால் மொத்தத் தேவை எஞ்சிய பயிர் காலத்திற்கு மட்டுமே 43,373 மில்லியன் கன அடி. குறைந்தது நீர் வழங்கிய ஆண்டுகளின் அடிப்படையிலேயே இந்த மொத்தத் தேவை வகுக்கப் பட்டுள்ளது. இருப்பினும் பாசன நீர் வெளிவிடக்கூடிய மொத்தம் 20,000 மில்லியன் கன அடிக்குமேல் மேட்டூரில் தற்போதில்லை. இதுவரை சேர்ந்த பற்றாக்குறையை மீட்கக்கூடிய அளவு மழையும் வரத்தும் இனிமேல் எதிர்பார்ப்பது இயற்கைக்கு ஒவ்வாது என்று அரசுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேவைக்குப் பாதி அளவே மேட்டூரில் இருக்கும் கையிருப்பு நீர்த்தேக்கம். இதை வைத்து நட்டுள்ள சம்பாப் பயிரையாவது சிக்கனப்படுத்தி கட்டுப்பாடு முறைகளைக் கையாண்டு நுண்ணிய கவனத்துடன் நீர் வழங்கி சமாளிக்கும் நிலையில் உள்ளோம்.

காவேரி சங்கமுகப் பகுதிகளில் இன்னும் ஒரு மழையாவது எதிர்பார்க்கலாம். ஓரிரண்டு நாட்களிலேயே அது பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு வேண்டிய கலிப்பு தென் பகுதிகளிலே உருவாகிறது என வானிலை அறிக்கை கூறுகிறது. இது மெய்யாகி மழை பெய்திடின் ஓரளவு தற்காலிகத் தேவையையாவது இது மீட்கும். அந்த அளவுக்கு நீர்த்தேக்கத் திலிருந்து வெளிவரும் நீரைச் சேமிக்க இயலும்.

இந்நிலையில் நடுகையாகியுள்ள பயிரைக் காப்பாற்றுவதே அரசின் இலக்கு. அதற்கு மிகுந்த உறுதியுடனும், சிக்கனத்துடனும், நீர் வழங்குதலை முறையாக்கி முனைந்து செயல்படுவர். இதனால்

ஏற்படும் சிக்கல்களும் வேளாண்மைக்கு ஏற்படும் குந்தகமும் அரசுக்குத் தெரியாமல் இல்லை. அதனைத் தவிர்க்க வொண்ணாது, சிக்கல்களைச் சமாளிக்க சிக்கனத்தைக் கடைபிடிப்பதே முறை. அதற்கு விவசாயிகள் ஒத்துழைப்பு பெரிதும் தேவை. எவ்விதத்தில் கணக்கிட்டாலும் இனிமேல் நடுகை மேற்கொள்வது முற்றிலும் பொருந்தாது. அதன் விளைவாக நீடித்தக்கால நீர்த்தேவையையும் நிறைவேற்ற நீர்த்தேக்கநிலை இல்லை. இது குறித்து ஏற்கனவே அரசினர் செய்திக் குறிப்பு மூலம் முன்னெச்சரிக்கையும் 17-11-1967-ஆம் நாளிலேயே விடுத்துள்ளனர்.

வரும் நாட்களிலே பருவமழைப் போக்கினையும் கிட்டும் மழை அளவினையும் கணக்கில்கொண்டு நிலவும் நிலைக்கொப்ப அவ்வப்போதுள்ள தேவைகளை சமாளிக்கும் முறையில் செயல்படுவர்.

மேலும் மேற்கொள்ளக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்க அரசு தயங்காது என்று உறுதி கூற விழைகின்றேன்.

தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் எல்லாம் சேர்ந்து 200 ஏக்கர்களுக்குமேல் 'பாக்டிரியல் பிளைட்' என்ற நோய் நெற்பயிரினைப் பீடிக்கவில்லை என விவசாய இலாகா இயக்குநர் அரசுக்கு விவரம் தந்துள்ளார். அதற்கு எடுக்கவேண்டிய பாதுகாப்பு முறைகளையும் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு வேண்டிய மருத்துவ முறைகளையும் மாவட்ட விவசாய அலுவலர்களுக்கு மேற்கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. விவசாய அதிகாரிகள், விஸ்தரிப்பு அதிகாரிகள் இவர்கள் அனைவரும் பூச்சி நோயை அழிக்கவும், பரவுதலைத் தடுக்கவும், போதிய காப்பு கட்டுப்பாடு முறைகளை மேற்கொள்ளுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த விளக்கத்தையொட்டி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

தேசிய கீதத்திற்கான மரியாதை

உரை : 3 நாள் : 11.03.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, இன்று எழுதப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்புப் பிரேரணை குறித்து மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் அவரே அந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டிருந்த காரணத்தினால் அதற்கான விளக்கத்தை அளித்திருக்கின்றார்கள். தேசிய கீதம் பாடப்படுவது எப்படி இருக்க வேண்டும், எந்த நிலைகள் அங்கே கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பது குறித்து விவாதிப்பது என்பது தேசிய கீதத்திற்கு நாம் தருகின்ற மரியாதை ஆகாது. ஏனென்றால் அது முடிவெடுக்கப்பட்ட ஒன்றாகும். அரசாங்க நிகழ்ச்சிகள் எதுவானாலும் அல்லது அரசாங்கத் துறையிலுள்ளவர்கள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் எதுவானாலும் அந்த நிகழ்ச்சியின் இறுதியிலே தேசிய கீதம் பாடப்பட வேண்டுமென்பது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு நாட்டில் ஒரு தவறான பிரச்சாரம், நாங்கள் தேசிய கீதத்தை மதிப்பதில்லை. தேசியக் கொடியை அவமதிக்கிறோம் என்றெல்லாம் ஒரு தவறான பிரச்சாரம் நாட்டிலே செய்யப்பட்டு வருகிறது. ஆனால், இப்பொழுது அந்தப் பிரச்சாரத்திற்கு அவ்வளவாக மதிப்பில்லை என்றாலும் ஆரம்பத்திலே செய்யப்பட்டது.

நான் ஒன்றை மாத்திரம் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சி மன்றத்தை திராவிட முன்னேற்றக் கழகம் 1959-ம் ஆண்டு கைப்பற்றிய அந்த நேரம் தொட்டு அங்கே தேசியக் கொடியை ஏற்றி வைப்பதில் திராவிட முன்னேற்றக் கழக மேயர்கள் முன்னின்று இருக்கிறார்கள். தேசிய கீதம் பாடுகின்ற அந்த நிகழ்ச்சிகளில், நாங்கள் அப்பொழுது

எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்திலும்கூட மாநகராட்சி மன்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும்போது, திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வகிக்கும் இந்த ஏறத்தாழ பத்தாண்டு காலங்களில், எல்லா நிகழ்ச்சிகளின் இறுதியிலும் தேசிய கீதம் பாடப்பட்டு, நாங்களும் அதிலே கலந்துகொண்டு அதற்குரிய மரியாதையைச் செலுத்தி வந்திருக்கிறோம்.

ஆனால் இப்பொழுது மதுரையிலே அந்தக் கல்லூரியிலே நடைபெற்ற சம்பவம் குறித்து எதிர்க்கட்சித் தலைவரவர்கள் எந்த அளவுக்கு மனம் புண்ணடைந்து உணருகின்றார்களோ அதைப்போலவே நானும் புண்ணடைந்து அந்த உணர்ச்சியைப் பெறுகின்றேன். ஏனென்றால், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் கூறியது போல தேசிய கீதம் பாடப்பட்ட நேரத்தில் யாரும் ஒலிபெருக்கியைப் பிடித்துத் தடுக்கவில்லை யென்றாலும், சிலர் ஒரு ஓரத்திலிருந்து எதிர்ப்புக் கோஷங்களை எழுப்புவது என்பதுகூட தேசிய கீதத்திற்குக் காட்டும் மரியாதை ஆகாது. அது நம்முடைய பண்பாட்டுக்கு மரியாதை அல்ல. நம்முடைய பண்பாட்டை அழித்துக்கொள்கிறோம் என்றுகூடச் சொன்னால் அது மிகையாகாது என்றே கருதுகிறேன். தேசிய கீதத்தைப் பொறுத்தவரையில், அது தமிழ்நாடு மக்களின் மீது தமிழகத்தின் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற இந்தி மொழியால் ஆக்கப்பட்டது அல்ல. வங்கமொழியால் ஆக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், வங்க மொழிக்கும், தமிழ்மொழிக்கும், வங்கத்திலேயுள்ள மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்புண்டு. அந்த வகையில் மாத்திரம் அல்ல, வேறு யாருக்கும் அந்த எண்ணம் ஏற்பட்டால் அது தமிழ்நாட்டின் துரதிருஷ்டவசமேயாகும் என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

''சங்கே முழங்கு'' என்ற பாடல் இறுதியாகப் பாடப் பட்டதுகூட, ஏதோ அந்த நேரத்திலே கல்வியமைச்சரவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியிலே தேசிய கீதம் பாடப்பட்ட பொழுது குழப்பம் ஏற்பட்டுவிட்டது என்று நாட்டிற்கு அறி விப்பது நல்லது அல்ல என்ற காரணத்தினாலே, அமைதியை

உருவாக்கும் நிலையிலே இருந்திருக்கின்றார்களேயல்லாது வேறல்ல என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்களும் உணர்வார்கள் என்று கருதுகிறேன். அங்கே சங்கே முழங்கு என்ற பாடலை தேசிய கீதத்திற்குப் பிறகு போடக்கூடாது என்று அவர் தடுத்திருந்து அதன் காரணமாக அமளி ஏற்பட்டிருந்தால், அந்த அமளிபற்றிய செய்தி இந்தியாவெங்கும் பரவி, அது அகில உலகச் செய்தியாக ஆகி, ஒரு கல்லூரியில் இந்தியாவின் தேசிய கீதம் பாடப்பட்டபொழுது பெரிய அமளி ஏற்பட்டது என்று செய்தி வருமே தவிர சங்கே முழங்கு என்ற பாடலைப் பாட வேண்டுமென்று அமளி ஏற்பட்டது என்று செய்தி வராது. ஆகவே, இந்தியாவின் பெருமையைக் காப்பாற்றும் வகையிலும், தேசிய கீதத்தின் மீது கொண்டிருக்கும் பற்றை உணர்த்தும் வகையிலும் கல்வியமைச்சரவர்கள் மிகுந்த சாதுர்யமாக நடந்துகொண்டிருக்கிறார்கள்.

இனிமேல், அந்தப் பாடலை மாணவர்கள் விரும்பினால், அப்படி விரும்புகின்ற மாணவர்கள், அதை தேசிய கீதத்திற்கு முன்பு பாடிவிட்டு, கடைசியாகத் தேசிய கீதத்தைப் பாடச் செய்ய வேண்டுமென்பது முறையாகும். மேல்சபையில் மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய கலைஞர் திரு.டி.கே.ஷண்முகம் அவர்கள் தேசிய கீதத்திற்குப் பதிலாக வேறு ஒரு தமிழ்ப் பாடலைப் பாடுவதைப்பற்றிக் கேட்டதை நம்முடைய எதிர்க் கட்சித் தலைவரவர்கள் ஏடுகளிலே பார்த்திருப்பார்கள். நான், நிச்சயமாக அது முடியாது, இந்தியாவின் தேசிய கீதத்தைத்தான் இறுதியில் பாட வேண்டும் என்று கூறியிருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவரவர்கள், எவ்வளவு கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அவ்வளவு கருத்துக்களையும் வெகு அழகாகச் சித்தரித்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அத்தனை பேரும் சொல்லியிருக்கக்கூடிய பொருளை உள்ளடக்கி, எதிர்க்கட்சித் தலைவரவர்கள், குறள்போல, ஏழ்கடலைத் திணித்த குறள் என்பார்களே அதுபோல, அவ்வளவு கருத்துக்களையும் எதிர்க்கட்சி தலைவரவர்கள் வெகு அழகாகக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, இதைப்பற்றி விவாதித்து, தேசிய கீதம் பாடப்பட வேண்டுமா, வேண்டாமா அதை மாணவர்கள் எதிர்க்கலாமா, கூடாதா என்று

விவாதத்திற்குரியதாக தேசிய கீதத்தை ஆக்க வேண்டாம், அது தேசிய கீதத்திற்கு நாம் காட்டும் மரியாதை அல்ல என்று கூறிக் கொண்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுதிக்க வேண்டாமென்ற கருத்தினை பேரவைத் தலைவரவர்களுக்கு கூறிக் கொள்ளுகின்றேன்.

மொரார்ஜி தேசாய் தெரிவித்த கருத்து பற்றி

உரை : 4 **நாள்: 21.03.1969**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே. எதிர்கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் ஹண்டே அவர்கள் கொண்டுவந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தினுடைய உட்பொருளைப் புரிந்துகொள்ளாமல் ஆனால் விளக்கி, இதை விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்பதை அவர் ஆதரித்தார். டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்திருக்கிற மாநிலங்களவையிலே மத்திய அரசாங்கத்தினுடைய நிதி அமைச்சரும் துணைப் பிரதமருமான மாண்புமிகு மொரார்ஜிதேசாய் அவர்கள் வெளியிட்ட சில கருத்துக்களை ஒட்டி, அதன் காரணமாக இந்த மாநிலம் பாதிக்கப்படக்கூடும் என்ற அளவில் அந்தக் கருத்துப்படி இந்த சட்டசபையை ஒத்திவைத்து, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்ற நிலையில் ஒரு பிரேரணையை கொண்டுவந்திருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதை முழுவதும் கவனிக்காத காரணத்தால் இவ்வாறு கூறி இருக்கிறார். ஏனென்றால், டாக்டர் ஹாண்டே அவர்கள் அதைக் கொண்டுவரும்போது மாண்புமிகு வினாயகம் அவர்களோடு இவர் பேசிக்கொண்டிருந்தார். ஆகவே, அதை முழுவதும் கவனிக்கவில்லை. (குறுக்கீடு) இல்லை கவனித்ததாகச் சொல் கிறார். ஹாண்டே அவர்கள் ஒரு பக்கம் நின்று, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாநிலத்திற்கு சாதகமான ஒரு அபிப்பிராயத்தை அழுத்தம் திருத்தமாக கூறியதற்கு நான் அவர்களுக்கும் அவருடைய காங்கிரஸ் கட்சிக்கும்கூட நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், மொரார்ஜி தேசாய் அவர்கள் அங்கு ரிசர்வ் பாங்கு ஓவர் டிராப்ட்களை

அனுமதிக்க மாட்டோம் என்று குறிப்பிட்டார்கள். ரிசர்வ் பாங்கிலே ஓவர் டிராப்ட் பெறுவது என்பது எல்லா மாநிலங் களிலும் நடைபெற்று வருகின்ற ஒன்றாகும். 'வேஸ் அண்ட் மீன்ஸ்' வழிவகைச் செலவினைப் பொறுத்த இந்த ஓவர் டிராப்ட்டை ஒவ்வொரு மாநிலமும் பெறுவதும் அதை ஆண்டு முடிவிலே கட்டி விடுவதும் வழக்கமாக இருந்து வருகிற ஒன்றாகும். அந்த வகையிலே மத்திய சர்க்காருடைய உதவித் தொகை வந்து சேருவதற்குக் காலதாமதமானால், அப்படி கால தாமதமாகிற அந்தக் கட்டத்தில் ரிசர்வ் பாங்கியிலே ஓவர் டிராப்ட்களை வாங்கி அந்தச் செலவைச் சரிக்கட்டுவதும் அந்த உதவி வந்ததும் அதைக் கட்டுவதும் முறையாக இருந்து வருகிறது. 23 கோடி ரூபாய் என்று சொன்னார்கள். 3 கோடி ரூபாய் கொடுத்தாகிவிட்டது. 23 கோடி ரூபாயில் 12-3-1969ல் 15.39 கோடி ரூபாய்தான் இருக்கிறது.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஏதோ இவ்வளவு வரும் என்று தனக்கே தெரியாது என்று குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். அவர்கள் என்ன வாசகம் சொன்னார்கள் என்று அந்தத் தெளிவான வாக்கியம் எனக்குத் தெரியாத காரணத் தினால் நான் அதைப்பற்றி இங்கே குறிப்பிட விரும்பவில்லை. மொரார்ஜி தேசாய் அவர்கள் ரிசர்வ் பாங்கியிலே ஓவர்டிராப்ட் அனுமதிக்கப்பட முடியாது என்று கூறியது ஆச்சரியத்திற்குரிய தாக இருக்கிறது. ஏனென்றால், பழைய அரசால் இப்படிப்பட்ட ஓவர் டிராப்ட் முறைகளைப் பின்பற்றி வந்திருக்கிறது. இந்த அரசும் அப்படித்தான் பின்பற்றி வருகிறது. மற்ற மாநிலங்களும் இந்த முறையைப் பின்பற்றி வருகின்றன. அவர்கள் திடீரென்று அப்படிக் குறிப்பிட்டது உள்ளபடியே தமிழ் நாட்டு மக்கள் அனைவருமே பார்த்து வருந்தத்தக்க ஒன்றாகும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் தன்னுடைய தீர்மானத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல பற்றறாக்குறை பட்ஜெட் போட் டிருப்பது வேண்டும் என்று செய்யப்பட்ட காரியம் என்று மத்திய நிதி அமைச்சர் அவர்கள் வாதிப்பதும் நல்லது அல்ல. இது வேண்டும் என்று போடப்பட்ட பற்றாக்குறை பட்ஜெட் அல்ல.

வருமானங்களைப் பெறுவதற்குக்கூட வரி விதிப்பது என்பது ஒரு முறையானாலும், அப்படி வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பழைய அரசிலிருந்து, நாம் போட வேண்டிய வரிகளைப் போட்டிருக்கிறோம். ஒரு சிலருக்கு தாங்கக் கூடியவர்களுக்கு வரி போட வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருப்பது கழக அரசாகும். தாங்கக் கூடியவர்களுக்கு வரி போட வேண்டும். தாங்க முடியாதவர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்த வகையிலே ஏன் வரி போடவில்லை என்று கேட்டு அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தை ஒரு மாநிலத்திற்கு அளிப்பது சரியான வாதமாகாது. இப்பொழுது அவர்கள் இல்லை என்று கூறிவிட்டாலும் மீண்டும் மத்திய அரசை வற்புறுத்துவதற்கான உரிமை நமக்கு இருக்கிறது. அதைப் போலவே மாநில அரசுக்குக் கொடுக்கவேண்டிய கடமையும் அவர்களுக்கு இருக்கிறது. இந்த உரிமையையும், கடமையையும் எண்ணிப்பார்த்து மத்திய அரசு நடந்து கொள்ளும் என்று கருதுகிறோம். இப்பொழுது மத்திய அரசினுடைய நிதி அமைச்சர் அவர்கள் இல்லையென்று கைவிரித்து விட்டாலும் கூட, ஆமாம். இல்லை என்று எடுத்துக் கொண்டு பேசாமல் இருந்துவிடப் போவதில்லை. தொடர்ந்து நம்முடைய தேவைகளை வலியுறுத்திக் கொண்டே இருப்போம். அப்படி வலியுறுத்துவதற்கு ஒரு நாள் அடையாளமாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார் என்ற அளவிலே எடுத்துக்கொள்ளலாம். ‘‘அதில் ஒரு பகுதியை வேறு ஒரு காரணத்திற்காக ஒத்துக் கொண்டோம். அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து அதை விவாதிக்க வேண்டும்’’ என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறிய கருத்து நம்முடைய கரத்தை வலுப்படுத்துகிறது என்கின்ற அளவில், இந்த நிலையிலே இதை நிறுத்தி விட்டு அவையின் நடவடிக்கைகளில் ஒத்தி வைத்து இதை விவாதத் திற்குரிய ஒன்றாக ஆக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த 23 கோடி ரூபாய் ஓவர்டிராப்ட் எதற்காக ரிசர்வ் பாங்கியிலிருந்து வாங்கினோம் என்பதற்கு உள்ள விவரத்தை யும் இங்கே படித்துவிட விரும்புகிறேன். மத்திய அரசு மாநில அரசுகள் ரிசர்வ் பாங்கிலிருந்து ஓவர் டிராப்ட்கள் வாங்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்துள்ளது. பத்திரிகைகளிலே அதை ஒட்டிய செய்தியும் வந்துள்ளது. அதை ஒட்டி ரிசர்வ் பாங்கு மாநில அரசுக்கு நோட்டீஸ் ஒன்று அனுப்பியிருக்கிறது. நாம் இப்பொழுது 23 கோடி ரூபாய் பெறுமானமுள்ள ரசாயன உரத்தை கையிருப்பு வைத்திருக்கிறோம். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் நாம் வைத்திருக்கும் கையிருப்பின்பேரில் பாங்கில் கடன்வாங்கி சரிக்கட்டலாம். அதைப்போல ரூ.23 கோடி பெறுமானமுள்ள உரத்தின்பேரில் பாங்கில் கடன் வாங்கி இன்றைய ரூ.15 கோடி ஓவர்டிராப்ட்டை நீக்கி விடலாம் என்று நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

இந்த அளவில் ரிசர்வ் பாங்கில் வாங்கப்பட்டிருக்கிற ஓவர் டிராப்ட் எப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நிலைமையையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை என்று நான் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் இந்த மாமன்றத்திற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இது வழக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிற ஒரு முறைதான் என்று இந்த மன்றத்தின் மூலமாக திரு. மொரார்ஜி தேசாய் அவர்களின் அறிவிப்பினால் அதிர்ச்சி அடைந்துள்ள தமிழக மக்களுக்குத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று கருதி, அதற்கு வழிவகை செய்கின்ற வகையில் மாத்திரம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவில் டாக்டர் ஹாண்டே அவர்களைப் பாராட்டி, இந்த அளவோடு இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளாமல் நிறுத்திவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

தேசிய கீதத்திற்கான மரியாதை

உரை : 5 நாள் : 25.03.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சித்தன் அவர்களும், திரு. கருப்பையா அவர்களும் கொடுத்திருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள்- தேசிய கீதம் என்பது ஒரு நாட்டினுடைய மானத்தை, பண்பாட்டை, ஒற்றுமையை எல்லாம் குறிப்பதாகும் என்றார். அதனை அவமதிக்கக்கூடாது என்பதிலே இந்த மன்றத்திலே இருக்கும் யாருக்கும் எந்த விதமான கருத்துவேறுபாடும் இல்லை. இதைப் பற்றி நாலைந்து நாட்களுக்கு முன் குறிப்பிடுகின்ற நேரத்தில் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்ட இதே வார்த்தைகளைச் சொல்லி தேசிய கீதத்தின் பெருமை, தேசியக் கொடியின் பெருமை இவைகள் எல்லாம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதிலே இந்த அரசு எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதையும், நாங்கள் அரசுப் பொறுப்பு ஏற்பதற்கு முன்னால் மாநகராட்சிப் பொறுப்பைத் திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்ற காலத்திலேயே அங்கிருந்த மேயர்கள் எந்த அளவுக்கு இந்தப் பண்பைக் காப்பாற்றி வந்திருக்கிறார்கள் என்பதையும் விளக்கியிருக்கிறேன். தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களையும் தேசிய கீதத்தையும் இணைத்து தேசிய கீதத்தைத் திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் அவமதிக்கிறார்கள் என்ற தவறான பிரசாரத்தை நாட்டில் இருக்கும் சில ஏடுகள் வெகு ஒழுங்காகச் செய்து வருகின்றன. என்ன காரணத்தாலோ தேசிய கீதத்தை மாநிலத்தில் இருக்கிற அமைச்சர்கள் அவமதிக்கிறார்கள் என்று கூறுவது அமைச்சர்களைக் குற்றம் சாட்டுகிறதோ இல்லையோ, தேசிய கீதத்தை அந்தப் பத்திரிகை

யாளர்கள் இப்படிப்பட்ட பிரசாரத்தினால் அவமதிக்கிறார்கள் என்றுதான் கருதுகிறேன்.

தொழிலாளர் அமைச்சர் மாண்புமிகு திரு.ப.உ.சண்முகம் அவர்களிடம் நான் இதைப்பற்றிக் கேட்டேன். என்னிடத்தில் விளக்கிய அளவில், ''அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு விட்டு அவசரமாக மதுரைக்குச் சென்று கூட்டத்திலே பேசி விட்டு, உடனடியாக ரயிலுக்குப் போகவேண்டிய அளவில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நிகழ்ச்சி முடியும்வரை இல்லாமல் கல் நாட்டிவிட்டு வந்து விட்டேன்'' என்றார். அதற்குப் பின் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக் கின்றன. நாங்கள்தான் பாவிகள் என்று வைத்துக் கொண்டாலும், கவர்னர் பெருமான் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள், மத்திய அமைச்சர் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள், மற்ற மாநிலங்களில் காங்கிரஸ் அமைச்சர்கள் கலந்து கொள்ளுகின்ற நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் எல்லாம்கூட அவர்கள், முடிவுறுகிற வரை இல்லாமல் இடையில் போகக்கூடிய அளவுக்கு வேறு நிகழ்ச்சிகளின் காரணமாக அவர்களுக்கும் ஏற்படுவது உண்டு. அவர்கள் போன பிறகு தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடந்து தேசிய கீதம் பாடப்படுவதும் உண்டு. ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளுகின்றவர்கள் அது முடிகிற வரையில் இருந்து தீர வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. அதற்கும் தேசிய கீதப் பிரச்சினைக்கும் முடி போடுவது நல்லது அல்ல.

திரு. கருப்பையா அவர்கள் கொடுத்திருக்கும், ஒத்தி வைப்புத் தீர்மானம் ''நவசக்தி'' பத்திரிகையில் வந்த செய்தியை அடிப்படையாகக் வைத்துக் கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். இங்கே கொடுக்கப்பட்டுள்ள ஒத்தி வைப்புத் தீர்மானங்களில் உள்ள வாசகத்திற்கும், ''நவசக்தி'' பத்திரிகை யில் வெளிவந்த செய்திக்கும் இடையே வாசகத்தில் முரண்பாடு இருக்கிறது. தேசிய கீதம் பாடும்போது தொழிலாளர் அமைச்சர் இடத்தைவிட்டு எழுந்து போய்விட்டார் என்று ஒத்தி வைப்புத் தீர்மானத்திலே இருக்கிறது. ''நவசக்தி'' பத்திரிகையிலே இருப்பது- ''மந்திரி அடிக்கல் நாட்டி முடிந்ததும் அவசரமாகக் காரில் ஏறிச் சென்று விட்டார்; அதன்பின் நடந்த தேசிய கீத நிகழ்ச்சியில் மந்திரி கலந்து கொள்ளவில்லை.'' அவர்தான் போய்விட்டாரே. எப்படி அதன்பின் நடந்த நிகழ்ச்சியில் கலந்து

கொள்ள முடியும்? அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஆதாரமாக இருந்த பத்திரிகைச் செய்தியிலே மந்திரி அவசரமாகப் போய்விட்டார் என்று குறிப்பிட்டிருக்கிறது. ''அதன்பின் நடந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை'' என்பதற்குப் பதிலாக ''கலந்து கொள்ள இயலவில்லை'' என்று போட்டிருந்தால், பொறுப்பான பத்திரிகை பொறுப்பான முறையில் செய்தியை வெளியிட்டது, அவர்களுக்கும் தேசிய கீதத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது என்று ஒத்துக் கொள்ள முடியும். ஆகையால் தேசிய கீதத்தை அவமதிக்கிறோம், அவமித்கிறோம் என்று கூறி ஒரு தவறான பண்பாட்டை தமிழக அரசுக்கு உண்டாக்குகிறோம் என்று கருதிக் கொண்டு அப்படிப்பட்டதொரு நிலையை தமிழ் நாட்டுக்கு ஏற்படுத்த வேண்டாம் என்று மிகுந்த அக்கறையோடு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்த தமிழக ஆட்சியின் முதல் அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்ற அளவில் இப்படிப்பட்ட காரியங்களில் என் அமைச்சரவையில் உள்ள எந்த அமைச்சரும் நிச்சயமாக தேசிய கீதத்தை அவமதிக்க வேண்டுமென்ற அளவில் ஈடுபட மாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிறைய இருக்கிறது. இனி ஒரு நிகழ்ச்சி இப்படி நடைபெற்று விட்டால் அது சரியா இல்லையா என்பதை தயவு செய்து உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் எனக்கு எழுதிக் கேட்டு விவரங்களைத் தெரிந்து கொண்டால் நல்லது. சட்ட மன்றத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைக் கொண்டு வரும்போது, அது பத்திரிகைகளில் வருகிற காரணத்தினால் இந்தியாவில் ஒரு பகுதியில் தேசிய கீதம் இன்று அவமதிக்கப்படுகிறது என்ற செய்தி பகைவர் நாடுகளுக்கு தித்திப்பான செய்தியாக இருக்கும் என்ற காரணத்தினால் இப்படிப்பட்ட முயற்சிகளில் இனிமேல் நண்பர்கள் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவையை ஒத்திவைத்து இதை விவாதிக்கத் தேவையில்லை என்ற கருத்தை தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாநில சுயாட்சி

உரை : 6 நாள் : 19.8.1969

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் மாண்புமிகு ம.பொ.சி. அவர்கள் நாளையதினம் நடத்த இருக்கின்ற மாநில சுயாட்சிப் போராட்டம் குறித்து மாண்புகு உறுப்பினர்கள் திரு. சீமைச்சாமி அவர்களும். திரு.ஆ.கு. சுப்பையா அவர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகம், மாநிலங்கள் மத்திய அரசிடம் இருந்து அதிக அதிகாரங்களைப் பெற்று சுயாட்சித் தன்மையோடு விளங்கிட வேண்டுமென்ற கொள்கையை மிகவும் அக்கறையோடும், தீவிரமாகவும் எடுத்துச் சொல்லி வருகிற கட்சியாகும். இந்தக் கட்சியினுடைய தலைவராகவும், முன்னாள் முதல்வராகவும் இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில சுய ஆட்சியை வலியுறுத்தி அவர்கள் மறைவதற்கு முன்னால்கூட ஒரு பெரும் கட்டுரையை எழுதி இருக்கிறார்கள் என்பதையும் நாடு அறியும். எல்லாக் கட்சி நண்பர்களும் நன்றாக அறிவார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதில் உள்ள அக்கறையின் காரணமாக முதலமைச்சர் என்ற முறையில் நான் டில்லிக்குச் சென்றிருந்த நேரத்திலும், வேறு பல அறிவுப்புகளிலும் 'மாநிலங்களவை அதிக அதிகாரங்களைப் பெற வேண்டும், ஆனால் அப்படிப் பெற வேண்டுமென்று கருதுகிற அதிகாரங்கள் எவை எவை என்று நாம் கூறும்போது, மொத்தத்தில் மூன்று அல்லது நான்கு அதிகாரங்கள் போக மிச்சம் உள்ள எல்லா அதிகாரங்களும் மாநிலங்களுக்கு என்று கூறுவதைவிட, திட்டவட்டமாக வரையறுத்து இன்ன இன்ன

அதிகாரங்கள் என்று நாமே நமக்குள்ளே வரையறுத்துத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காக ஒரு குழுவை அமைக்க வேண்டுமென்று இந்த அரசு கருதுகிறது' என்று நான் அறிவித்திருக்கிறேன். அப்படிப்பட்ட குழுவில் இந்தக் கொள்கைகளை ஒத்துக்கொள்ளுகின்ற அரசியல்கட்சியைச் சார்ந்தவர்கள்தான் இருக்கவேண்டுமென்று இல்லை. இந்தக் கட்சியினுடைய கொள்கைகளைப் புரிந்து கொண்டு நம்முடைய கொள்கைகளுக்கேற்ப என்னென்ன அதிகாரங்களை மாநிலங்கள் மத்திய அரசில் இருந்து பெறலாம் என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூற சட்ட நுணுக்க அறிவும் வேறு பல ஆற்றல்களும் அமைந்த தகைமை சான்றவர்கள் அந்தக் குழுவில் இருக்க வேண்டுமென்று கருதி அப்படிப்பட்ட குழு ஒன்று அமைக்கப் பட்டிருக்கிறது. அந்தக் குழு மூவர் கொண்ட குழுவாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய பணியாக கூட்டாட்சித் தத்துவம் முழுமையும் அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற வேண்டும்; மத்திய அரசு அதிகாரங்கள் குறைக்கப் பட வேண்டும்; மாநில அரசு அதிகாரங்கள் விரிவாக்கப்பட்டு மாநிலங்கள் பூரண தன்னாட்சி உரிமை பெற்று விளங்கத் தேவையான திருத்தங்களை அரசியல் அமைப்புச் சட்டத்திலே செய்வதற்கு அவர்கள் நமக்கு யோசனை கூற வேண்டுமென்ற அடிப்படையில் அந்தக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்குத் திரு.பி.வி.ராஜமன்னார் அவர்கள் தலைவராகவும், திரு.ஏ.லட்சுமணசாமி முதலியார் அவர்களும், திரு.பி.சந்திரா ரெட்டி அவர்களும் உறுப்பினர்களாகவும் இருந்து நல்ல முறை யில் பணியாற்றி மாநிலங்கள் எந்தெந்த அதிகாரங்களை மத்திய அரசிடம் இருந்து பெறலாம் என்பதற்கான திட்டவட்டமான விளக்கங்களைத் தருவதாக ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த எந்த அதிகாரங்களைப் பெறலாம் என்பதற்கான குறிப்புகள் கொடுங்கள். அறிக்கை கொடுங்கள் என்று அந்தக் குழுவின ரிடத்தில் கேட்டுக்கொண்டு இருக்கிறேன். அவர்கள் மூவரும் அரசின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்துழைப்புத் தர ஒத்துக் கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்களுடைய அறிக்கை வந்த பிறகு என்னென்ன அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதிலே திட்டவட்டமான முடிவுக்கு வந்து எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் கூடி முடிவு செய்யலாம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்களும், மாண்புமிகு சுப்பையா அவர்களும் எடுத்துக்காட்டியது போல் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. வேறு மாநிலங்களிலே உள்ள காங்கிரஸ் அல்லாத முதலமைச்சர்கள் மாத்திரமல்ல, காங்கிரஸ் மாநில முதலமைச்சர்கூட இப்படிப்பட்ட அதிகாரங்களைப் பெற வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதற்கு இந்தியா முழுமையும் உள்ள மாநிலங்களில் இருந்து நல்லாதரவு கிடைக்கும்.

ஆகவே, இந்த அதிகாரங்களை வரையறுத்துக் கொண்டு நல்ல முறையில் பிரச்சாரம் செய்து, மற்ற மாநிலங்களுடைய நல்லாதரவையும் பெற்று மத்திய சர்க்காரோடு வாதாட வேண்டும். வாதாடிப் பயன் இல்லை என்றால் போராட வேண்டும். அப்படிப் போராடுகின்ற நேரத்தில் எல்லாக் கட்சிகளும் இணைந்து நின்று அந்தப் போராட்டத்தை நடத்திட வேண்டுமென்றுதான் தமிழரசுக் கழகத் தலைவர், சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். அவர்களும் முதலில் தொடர்ந்து இந்தப் போராட்டத்தை நடத்துவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் என்னுடைய வேண்டுகோளுக்குப் பிறகு அதை ஒரு நாள் அடையாளப் போராட்டமாக மட்டும் நடத்துவதற்கு முன்வந்தார்கள். ஆனால், இன்று காலைப் பத்திரிகைகளில் தொடர்ந்து சென்னையில் போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருப் பதாகச் செய்தி வந்திருக்கிறது. நான் அதைப் பற்றி ம.பொ.சி. அவர்களிடம் கேட்ட நேரத்தில், பத்திரிகைகளில் செய்தி தவறாக வந்திருப்பதாகவும், ஒரு நாள் அடையாளமாக மட்டுந்தான் அந்தப் போராட்டம் நடைபெறுவ தாகவும் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இப்போதுகூட நான் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன்- நான் அன்று கேட்டுக்

கொண்டதைப் போல் இந்தப் போராட்டத்தை கைவிட வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூவர் குழு முடிவுக்குப் பிறகு அனைவரும் இணைந்து, நம்முடைய மாநிலம் மாத்திரமல்லாது எல்லா மாநிலங்களும் இணைந்து நின்று வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைப் பெற தகுந்த யோசனைகளைச் செய்து அதிலே ஈடுபடலாம் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்தப் போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் இப்போது தேவையில்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின் கட்டண உயர்வு

உரை : 7 **நாள் : 20.03.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல் விவசாயிகள் ஏதோ கூட்டம் போட்டு அதன் மூலமாக மின்சாரக் கட்டண உயர்வை எதிர்த்து தங்களுடைய நிலையை விளக்கி மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ மனுக் கொடுப்பது என்ற அளவில் எந்த முடிவையும் எடுக்கவில்லை. அவர்கள் மூன்று கட்டங்களை முன்கூட்டியே அறிவித்திருக்கிறார்கள். முதல் கட்டந்தான் அவர்கள் கூட்டம் போட்டதும் அடையாளமாக ஒருநாள் உண்ணாவிரதம் இருந்ததும். இரண்டாவது கட்டம் மாநில அரசின் அலுவலகங்கள், கலெக்டர் ஆபீஸ் போன்றவற்றின்முன் மறியல் நடத்துவது என்று துண்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். மூன்றாவது கட்டமாக மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தாமல் வரிகொடா இயக்கம் நடத்துவது என்று தீர்மானித்து பத்திரிகைகளில் வந்திருக்கிறது. இந்த மூன்று கட்டங்களும் எந்த நிலைக்குக் கொண்டுபோய் விடும் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உணருவார்கள். ஆனாலும் இதிலே என்ன வன்முறை வந்துவிடும் என்று கேட்டார்கள்.

இதிலே கைது செய்யப்பட்டிருப்பவர்கள் யார் யார் என்று பார்த்தால் குறிப்பிட்ட சில எம். எல். ஏ.-க்களைத் தவிர, சில முற்போக்குக் கட்சிக்காரர்களைத் தவிர பெரும்பாலான மற்றவர்கள் இந்த மின் கட்டணத்தால் பாதிக்கப்பட்டவர்களா என்று பார்க்கும்

போது மன்றாடியார், சமத்தூர் ஜமீன்தார், வேட்டைக்காரன்புதூர் ஜமீன்தார், பாளை ஜமீன்தார் ஆகிய இவர்கள்தான் பாவம், இந்த ஏழைகள் இந்த மின் கட்டண உயர்வால் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்காக உள்ளபடியே நான் வருந்துகிறேன். (ஆரவாரம்.) கம்யூனிஸ்ட் கட்சி அங்கே இணைய வில்லை. பி. எஸ். பி.யும் மற்ற சில முற்போக்குக் கட்சிகளும் அங்கே இணைந்திருக்கின்றன என்றாலும் இதிலே மற்றவர்களும் கலந்துகொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் உச்சவரம்புச் சட்டம். இதை முதல் ஆரம்பமாக வைத்துக்கொண்டு உச்சவரம்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கான முயற்சியைத் தூண்டி விவசாயிகளுடைய படையைத் தயாரிப்பது என்று திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அந்தக் காரணத்தாலேதான் மன்றாடியார் அவர்களுடைய இல்லத்திலே மிராசுதாரர்கள் கூட்டம் நடைபெற்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவரிடத்தில் இதை எடுத்துச் சொல்ல அந்தக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் இன்னும்கூட உச்ச வரம்பின் அளவைக் குறைக்க வேண்டுமென்று கூறியதைக் கேட்டு அங்கிருந்தவர்கள் ஆத்திரப்பட, இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் அங்கே உருவாகியிருக்கின்றன என்ற செய்தி கோவை மாவட்டம் முழுவதும் அனைவருக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். அவருடைய புன்னகைக்குப் பொருள் எனக்கு நன்றாகப் புரிகிறது. இதை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் சிலபேர் அந்தக் காரியத்தில் ஈடுபட்டார்கள். கோவை மாவட்ட விவசாயிகள் சங்கம் என்ற பெயரிலேதான் அவர்கள் இந்த நோட்டீஸைப் போட்டிருக்கிறார்கள். மாவட்ட தாலுகா அலுவலகங்களுக்கு முன்னால் மறியல் போராட்டம் நடத்துவது என்பதாக நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, லாரிகளிலும், கார்களிலும் கொண்டு போய் விவசாயப் பெருங்குடி மக்களை நூற்றுக்கணக்கில் எந்த எந்த இடங்களை குறிப்பிட்டார்களோ அந்த இடங்களில் குவிக்கவும் தொடங்கினார்கள். இதில் வன்முறை ஏற்படும் என்று அரசு கருதியதா என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். இதில் வன்முறை ஏற்படக்கூடும் என்பதற்கு ஒரு

சிறிய உதாரணம் தர விரும்புகிறேன். பல்லடத்திலிருந்து 30 பேர்களைக் கைது செய்து கோவை மத்திய சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும்போது அப்படி வந்த போலீசாரை, 300 பேர்கள் வளைத்துக் கொண்டு எங்களையும் வேண்டுமானால் அழைத்துக் கொண்டு போங்கள், இல்லாவிட்டால் அவர்களை விட்டுவிட்டுப் போங்கள் என்று அவர்களைக் கைது செய்த சில மணி நேரத்திற்குள் இப்படிப்பட்ட அசம்பாவிதமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், காவல்துறையினரும் மிகச் சாதுர்யமாகச் சமாளித்து, மிகவும் அமைதியான முறையில் நடந்துகொண்டு இன்னும் ஒரு பத்துப் பேர்களை கைது செய்து அழைத்துச் செல்லும் அளவிற்கு அதற்குக்கூட இடம் அளித்து அந்த அளவிற்கு வளைந்து கொடுத்து அந்த நிலையைச் சமாளித்திருக்கிறார்கள். ஆகவே வன்முறை எந்த நேரத்திலும் தோன்றக்கூடும் என்பதற்கான அடையாளங்கள், அறிகுறிகள் ஏற்பட்டதன் காரணத்தினால்தான் 144 தடை உத்தரவு அங்கு போடப்பட்டது. 144 தடை உத்தரவின் மூலம் விவசாயிகளை எல்லாம் அடக்கி ஒடுக்கி மிரட்டவேண்டும் அல்லது அவர்களை எல்லாம் தண்டிக்க வேண்டுமென்ற நிலையில் இந்த அரசோ அல்லது அங்கிருக்கிற காவல் துறையினரோ அல்லது மாவட்ட அதிகாரிகளோ எண்ணி யிருப்பார்களேயானால் கைது செய்யப்பட்டவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதை இந்த மன்றத்தில் உள்ள அனைவரும் அறிவார்கள்.

கைது செய்யப்பட்டவர்கள் 10,000, 13,000, 5,000 என்றெல்லாம் அறிக்கைகள் வந்தன. கோவையில் 39 பேர்கள் கைதானார்கள். அவினாசியில் 20 பேர்கள் கைதானார்கள். திருப்பூரில் 32 பேர்கள் கைதானார்கள். பெருந்துறையில் 25 பேர்கள் கைதானார்கள். தாராபுரத்தில் 31 பேர்கள் கைதானார்கள். பொள்ளாச்சியில் 41 பேர்கள் கைதானார்கள். காங்கேயத்தில் 71 பேர்கள் கைதானார்கள். மொத்தத்தில் 265 பேர்கள் கைது செய்யப்பட்டு கோவை மத்தியச் சிறையில் வைக்கப்பட்டார்கள். 19-3-1970 மாலை ஆறரை மணிக்கு அந்த 265 பேர்களும் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

முக்கியமாக வைத்து எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சினை, விவசாயிகள் சங்கத்தின் பிரச்சினை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் கூறியதுபோல் மின்சாரக்

கட்டணத்தைப் பொறுத்ததாகும். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு ஒரு விளக்கத்தை இந்த மன்றத்திற்கு அளிப்பது என் கடமை என்று நான் கருதுகிறேன். மின்சாரக் கட்டணம் 8¼ பைசாவிலிருந்து 10 பைசாவாக உயர்த்தப்பட்டிருக் கிறது. ஆனால் நமக்கு ஒரு யூனிட்டுக்கு ஆகும் உற்பத்திச் செலவு 16 பைசாவாகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்த 16 பைசா உற்பத்திச் செலவில் இதுவரையில் 8¼ பைசா என்ற அளவில் யூனிட் சார்ஜ் வசூலித்தபோது நமக்குக் கிட்டத்தட்ட ஒன்பது கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருந்தது. அதை ஸப்ஸிடியாக, மானியமாகக் கொடுத்து வந்திருக்கிறோம். இப்போது பத்து பைசா என்றாக்கிவிட்டாலும் ஆறு பைசா அளவிற்கு இப்போதும் இந்த அரசு மானியமாக ஆறு கோடி ரூபாய் தருகிறது என்றால் அது விவசாயிகளின் நன்மைக்காகத் தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் 12 பைசா என்றிருக்கிறது. அஸ்ஸாமில் 14 பைசா என்றிருக்கிறது. பீஹாரில் 15 பைசா என்றிருக்கிறது. குஜராத்தில் 14 பைசா என்றிருக்கிறது. ஹரியானாவில் 16.22 பைசா என்றிருக்கிறது. மத்திய பிரதேசத்தில் 11.5 பைசா என்றிருக்கிறது. மராட்டியத்தில் 13.87 பைசா என்றிருக்கிறது. ஒரிஸாவில் 12 பைசா என்றிருக்கிறது. இராஜஸ்தானில் 14.3 பைசா என்றிருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் 15 பைசா என்றிருக்கிறது. மேற்கு வங்கத்தில் 12 பைசா என்றிருக்கிறது. மைசூரில் 10 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் 8 பைசா என்றிருக்கிறது. கேரளத்தில் எட்டு பைசா என்றிருப்பதற்குக் காரணம், கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் குறைந்த பரப்பளவிற்கு குறைந்த தூரத்திற்குத்தான் மின்சாரம் எடுத்துச் செல்லப்படுவதால் விலை குறைவாக இருக்கிறது. மேலும் அங்கே நீர் மின் நிலையங் களிலிருந்து மட்டும்தான் உற்பத்தி செய்யப்படுவதாலும், மற்ற மாநிலங்களுக்கு அவர்கள் மின்சாரம் கொடுக்கக்கூடிய நிலைமை இருப்பதினாலும் யூனிட்டின் விலை அங்கு குறைவாக இருக்கிறது. நமக்கும் அவர்கள் மின்சாரம் விற்றுக்கொண்டிருக் கிறார்கள். மைசூரிலிருந்தும் கேரளாவிலிருந்தும் நாம் மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கி பிறகு அந்த மின்சாரம் செல்வதற்கான பரந்த அளவிற்கான போக்குவரத்துச் செலவு எல்லாம் மேற்கொண்டு அதற்காகிற செலவு, விவசாயிகளைப்போய்

எட்டிப்பிடிப்பதற்கான செலவு ஆகிய எல்லாம் சேர்ந்து 16 பைசா என்றளவிற்கு வருகிறது. ஆக 8¼ பைசா என்றிருந்ததை பத்து பைசா என்று ஆக்கியிருக்கிறோம். இதில்கூட இப்போதும் நாம் ஆறு பைசா அளவில் சப்ஸிடி கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதில் நமக்கு ஆறு கோடி ரூபாய் என்ற அளவில் இழப்பு ஏற்படுகிறது.

திரு. பூவராகன் அவர்கள் சொன்னார்கள், இங்குமட்டு மல்ல மற்ற மாவட்டங்களிலும் இதற்கான கிளர்ச்சிகள் தொடங்கப் பட இருக்கின்றன என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய புதுக் கட்சியை வலுப்படுத்துவதற்கு அந்தக் கிளர்ச்சிகள் பயன்படுமானால் அவர்கள் அதைப் பயன்படுத்திக்கொள்ளட்டும். ஆனால் உண்மை நிலையை உணர வேண்டும். இதைப் பற்றித் தமிழ்நாட்டிலுள்ள தலைசிறந்த பத்திரிகைகள் எல்லாம் இந்த மின்சாரக் கட்டணத்தை உயர்த்தவேண்டும் என்ற அளவில்கூட தலையங்கங்கள் எழுதியிருக்கின்றன. ஆகவே இதில் விவசாயிகள் யாரும் அதிகமாகப் பாதிக்கப்படவில்லை. சர்க்கார் இன்னும் ஆறு கோடி ரூபாய் இழப்பில்தான் விவசாயிகளுக்கான நல்ல காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. கைது செய்யப் பட்டவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு விட்டார்கள். இது ஒன்றே விவசாயிகளிடத்திலும் கைது செய்யப்பட்டவர் களிடத்திலும் இந்த அரசுக்குள்ள அனுதாபத்தைக் காட்டும். இந்த விஷயத்தில் மட்டுமல்ல தொடர்ந்து பல்வேறு கிளர்ச்சிகளிலும் அரசு, நமது சபாநாயகர் அவர்கள் ஒரு நேரத்தில் சுட்டிக் காட்டியதைப்போல், திருவள்ளுவர் அவர்கள் கூறியிருப்பது போல்

“கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர்”

என்ற நிலையை அரசு மேற்கொண்டிருக்கிறது. நேற்றோடு இந்தக் கிளர்ச்சியும் நடைபெறவில்லை, இன்று அதாவது 20-ம் தேதி யாரும் கைது செய்யப்படவில்லை. ஆகவே இதற்காக அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அவசியமில்லை என்ற என் கருத்தினைக் கூறி அமைகிறேன்.

தேசிய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் பேசிய கருத்து

உரை : 8 **நாள் : 24.03.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்டின் அவர்கள் அவசர முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானத்தை இங்கு அளித்து அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

டில்லியில் நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் நானும், நிதியமைச்சர் அவர்களும் கலந்துகொண்டு அளித்துள்ள கருத்துக்கள் விரிவாகப் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. தமிழ் நாட்டினுடைய தேவைகளை ஒவ்வொரு தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்திலும் நாங்கள் வலியுறுத்தத் தவறுவது இல்லை என்பதையும், வற்புறுத்திக் கேட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதையும், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டங்கள் கூடுகிற நேரங்களில் மாத்திரம் அல்லாமல் வேறு நேரங்களிலும் பொறுப்பு வாய்ந்த மத்திய அமைச்சர்களை நேரிலே சந்தித்து வலியுறுத்திக் கேட்டும், கடிதங்கள் மூலமாக வலியுறுத்திக் கேட்டும் தமிழ் நாட்டின் தேவைகளை உணர்த்திக்கொண்டு வருகிறோம். அந்த அடிப்படையில்தான் இப்போது 21, 22 ஆகிய நாட்களில் நடை பெற்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் பிரதமர் அவர்கள் பேசி முடித்த பிறகு விவாதத்தைத் தொடங்கி வைத்தவன் என்ற முறையில் தமிழ்நாட்டினுடைய தேவைகளை நான் குறிப்பிட்டுக் காட்டினேன். தமிழ்நாட்டின் தேவைகள் எவையெவை, என்னென்ன குறிப்பிட்டுக் காட்டப்பட்டன என்பவைகள் எல்லாம் விளக்கமாக இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் அறியத்தக்க வண்ணம் ஏடுகளிலே வந்திருக்கின்றன. பல ஆண்டு காலமாக நாம் இந்த அவையிலும், மத்திய அமைச்சர்களிடத்திலும்

எடுத்துச்சொல்லி வருகிற அந்தக் கோரிக்கைகளைத்தான் மீண்டும் மீண்டும் எழுப்பி வருகிறோம்.


அங்கே நான் என்னுடைய உரையை இறுதியாக முடிக்கிற நேரத்திலே, "சேலம் இரும்பாலையைப் பற்றி இதுவரையில் நீங்கள் பலமுறை வரும், வரும் என்கிற அறிவிப்பைத் தந்தாலும், இந்த வளர்ச்சிக்குழு கூடியிருக்கின்ற இந்தக் கட்டத்திலேகூட அது பற்றி இறுதியான அறிவிப்பைத் தரவில்லை. ஆகவே, அந்த அறிவிப்புத் தேவை" என்பதைச் சுட்டிக்காட்டினேன். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையாக மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. மார்டின் அவர்கள் கேட்டார்கள் - 'அதிலே எவ்வளவு தொகை நமக்கு ஒதுக்கியிருக்கிறார்கள்? என்று. 'நீங்கள் எவ்வளவு கேட்டீர்கள்?' என்றும் கேட்டார்கள். 175 கோடி ரூபாய் கூடுதல் தொகையை ஒன்பது மாநிலங்களுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலம் அதிலே அறவே புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதாவது ஒதுக்கினால்தானே, இவ்வளவு ஒதுக்கினார்கள், இவ்வளவு அதிகத் தொகை தேவை என்று சொல்ல முடியும். ஆகவே, அடிப்படைக் குறைகளை ஆராய்ந்து இந்த மாநிலத்திற்கு இவ்வளவு ஒதுக்க வேண்டுமென்று கேட்பதைவிட, 175 கோடி ரூபாயில் எதுவும் இல்லையென்று புறக்கணிக்கப் பட்டிருக்கும் நிலையைச் சுட்டிக்காட்டி ஏதாவது ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களேயானால், அதற்குப் பிறகு இவ்வளவு தொகையை ஒதுக்க வேண்டுமென்ற வாதத்தில் இறங்குவது பொருத்தமுடையதாக இருக்கும்.

வறட்சிப் பணிகள் என்ற பெயரால் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த இந்த ஆண்டு 25 கோடி ரூபாயும், வருகிற நான்கு ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே எவ்வளவு ஒதுக்கப்பட்டது. நீங்கள் கேட்டது எவ்வளவு என்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், அதிலும் அவர்கள் நம்முடைய தமிழ் மாநிலத்திற்கு, தமிழ்நாட்டிற்கு எதுவும் ஒதுக்கவில்லை. ஆகவேதான் கடைசி நிபந்தனைகளாக வைத்தோம் - சேலம் இரும்புத் தொழிற்சாலைக்கான அறிவிப்புத் தேவை; 175 கோடி ரூபாயில் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது, நிவாரணம் தேவை; 100 கோடி ரூபாயிலும், வேலைவாய்ப்புக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலும் தமிழகம் ஏமாற்றப்பட்டிருக்கிறது;

அதற்கும் பதில் தேவை. இந்தப் பதில்கள் அளிக்கப்படாத வரையில் நான்கு கோடி தமிழ் மக்களின் சார்பில் இந்தத் திட்டத்திற்கான ஒப்புதலை, சம்மதத்தைத் தரத் தயாராக இல்லை என்று எடுத்துச்சொன்னேன். மறுநாள் பேசிய நம்முடைய நிதியமைச்சர் அவர்களும் பிரதமர் அவர்கள் உரையில் இதைக் கோடிட்டுக் காட்டுவார்கள் என்று காத்திருந்து, கோடிட்டுக் காட்டாத காரணத்தால் இறுதியாக, முதல்நாள் முதலமைச்சர் எடுத்துச்சொன்ன நிபந்தனைகள் என்னவாயிற்று, அதற்கு என்ன பதில் என்று கேட்டார்கள். அதற்கு அங்கே பதில் அளிக்கப்படவில்லை. இந்த வகையிலே தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குச் சம்மதம் தரவில்லை என்ற காரணத்தால் அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள எதையும் பெற்றுக்கொள்ளப் போவதில்லையென்று அர்த்தமல்ல. நம்முடைய உணர்ச்சிகளைக் காட்டியிருக்கிறோம். நம்முடைய உணர்ச்சியை இந்த வகையில் தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் காட்டியிருக்கிறோமே அல்லாமல் திட்டத்தையே ஏற்றுக்கொள்ளப் போவதில்லை, திட்டமே தேவையில்லை என்ற நிலைக்குச் செல்லவில்லை. வருவதை விடுவதாக இல்லை. அதே நேரத்தில் தமிழர்களின் உணர்ச்சியை எடுத்துக்காட்டும் வகையில் நீண்ட நெடும் காலமாக சேலம் உருக்காலைத் திட்டம் வரும் வரும் என்று அறிவிக்கப்பட்டும் இன்னும் வராமல் இருக்க என்ன காரணம், அதைப்பற்றி அறிவித்தாக வேண்டுமென்ற அடிப்படையில்தான் நான், நிதியமைச்சர் இருவரும் பேசுகின்ற நேரத்தில் இந்த விஷயங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறோமே தவிர வேறு அல்ல.

தேசிய வளர்ச்சிக் கூட்டத்தில் கொடுக்கப்பட்ட அறிவிப்பில்கூட சேலத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லை அதிலே- Advance action for additional steel capacity in the Fifth Plan, என்று போட்டு அதற்காக 110 கோடி ரூபாய் ரிவைஸ்டு அவுட்லே என்ற அளவில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அடிஷனல் அவுட்லே என்ற அளவில் 90 கோடி ரூபாய் என்று குறிக்கப் பட்டிருக்கிறது. அதே நேரத்தில் என். எம். டி. சி. என்பதற்காக கூடார்முக் - இதைக் குதிர்முக், குதிரை மூக்கு என்றெல்லாம் சொல்கிறார்கள் - என்று பெயர் குறிப்பிட்டு 15 கோடி ரூபாயில் பிராஜக்ட் ஏற்படுத்துவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவேதான் சேலம் என்று குறிப்பிடப்படவில்லை என்பதை அழுத்தந்திருத்தமாகக் கேட்டிருக்கிறோம். அவை தமிழர்களின் உணர்ச்சியைப் பிரதிபலிக்க எடுத்துச்சொல்லப்பட்ட வார்த்தைகள் ஆகும். இந்த உணர்ச்சிக்கு மத்திய அரசு மதிப்பு அளிக்கும் என்று நம்புகிறேன். மதிப்பளித்து ஆவன செய்ய வேண்டும்; செய்வதற்கு முன்வருவார்கள் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கை வீண்போகாது என்று கருதுகிறேன். அந்த நம்பிக்கை நாசமாகுமானால் இந்தச் சட்டமன்றத்தில் இருக்கும் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒன்று சேர்ந்து அதற்குப் பிறகு என்ன செய்வது என்பதை யோசிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்த விஷயத்தை இந்த அளவுக்கு நிறுத்திக்கொள்ளுவது நல்லது என்ற அளவில் திரு. மார்ட்டின் அவர்கள் கொண்டுவந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்ற கருத்தைக் கூறி அமைகிறேன்.



நிலப்பறி இயக்கம்

உரை : 9 **நாள் : 25.08.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இங்கு தரப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது பலர் தங்களுடைய பெயர்களைத் தந்திருந்தாலும் ஒவ்வொரு கட்சியின் சார்பிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறினார்கள். அவர்கள் அதைப்பற்றி நிறையப் பேசுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கிட்டத்தட்ட ஒத்திவைத்து விவாதிக்கின்ற நேரத்தை எடுத்துக்கொள்வது ஒரு தந்திரம். ஆனால் இந்த மன்றத்தில் நாம் அனைவரும் ஒப்புக் கொண்டிருக்கக்கூடிய ஒரு மரபும் ஆகி வந்திருக்கிறது. அந்த அடிப்படையில் நமது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நீண்ட நேரம் பேசுவார்கள் என்று பார்த்தேன். அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்டதோடு முடித்துக்கொண்டு விட்டார்கள்.

அதைப்போலவே நண்பர் திரு. சங்கரய்யா அவர்களும் எப்படிக் கைது செய்யலாம் என்ற கேள்வியைக் கேட்டதோடு தங்கள் உரையை முடித்துவிட்டார்கள். கோவில்பட்டி நண்பர் திரு. அழகர்சாமி அவர்களும் இது உப்பு சத்தியாக்கிரகத்தைப் போன்றது என்று குறிப்பிட்டார்கள். நாம் உப்பு சத்தியாக்கிரகம் எதற்காக நடத்தப்பட்டது என்பதையும், இந்த உப்பு சத்தியாக் கிரகம் எதற்காக நடத்தப்பட்டிருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்கத் தவறிவிடக்கூடாது.

இந்த அரசாங்கத்தின் கொள்கை என்ன என்று கேட்ட திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கத்தின் கொள்கை, சட்டப்படி காரியங்கள் நடைபெற வேண்டும் என்பதுதான். நிலங்கள்

தவறான முறையில் பலரிடத்தில் குவிந்திருக்குமானால் அவற்றைப் பெற்று, நிலம் அவர்களுக்கு வழங்குகிற காரியத்தைச் சட்டபூர்வமாகச் செய்யவேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை. இது திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும் என்று கருதுகிறேன்.

இதில் முன்கூட்டி பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். நிலப்பறி இயக்கம் எந்த எந்த நாட்களில் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டிருந்ததோ அதற்கும் முந்தியே அந்த இயக்கம் நடைபெறாதவாறு தடுக்கப் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை எடுத்துக்கொண்டது பற்றி காங்கிரஸ் தரப்பு நண்பர்கள் என்ன கருதுகிறார்கள் என்று பார்த்தேன். நண்பர் திரு. சித்தன் அவர்கள் the failure of Government to deal with land grate problem in the state - என்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிலப்பறி இயக்கத்தைச் தடுத்து நிறுத்துவதிலே அரசு தவறிவிட்டது. நடவடிக்கை எடுப்பதில் இந்த அரசாங்கம் தவறிவிட்டது என்பது காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. சித்தன் அவர்களுடைய குறிக்கோளாகும். நான் இந்த நிலப்பறி இயக்கம் நடத்தப்படுவதாக அறிவிக்கப் பட்டிருந்த நிலங்களின் உடைமையாளர் - பூண்டி வாண்டையார் அவர்களுக்கும், குன்னியூர் ஐயர் அவர்களுக்கும் மற்றும் எல்லாக் கட்சிகளிலும் உள்ள நிலஉடைமையாளர்கள் அவர்களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் தந்திருக்கிற கருத்தை அர்ப்பணிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

இந்த நிலப்பறி இயக்கத்திற்காகத் தீட்டப்பட்ட திட்டங்கள் என்ன என்ன, இது எவ்வாறு நடைபெறுவதாக இருந்தது என்பதை நான் இந்த இடத்தில் இப்போது உங்களிடத்தில் கூறுவது பொருத்தமுடையதாகும் என்று கருதுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியில் 1970, மே திங்கள் 21-ம் நாளிலிருந்து 24-ம் நாள் வரையில் கூடிய இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு, கீழ்க்காணும் செயல் திட்டத்தை மேற்கொள்வதாக முடிவு செய்தது :-

(அ) 1-7-90-ல் ஊர்வலங்கள் நடத்தியும் வருவாய்த்துறை அலுவலகங்கள் முன்பாக ஆர்ப்பாட்டங்கள் செய்தும் பின்னர்

பொதுக்கூட்டங்கள் நடத்தியும், 'நிலப் போராட்ட நாளை'க் கடைப் பிடித்தல்.

(ஆ) 9-8-70 பொறுக்கியெடுக்கப்பட்ட சில இடங்களி லிருந்து கட்சித் தலைவர்கள் தலைமையில், நிலத்தை வசப்படுத்து மிடங்கள் நோக்கி கட்சித் தொண்டர்கள் 'பாதயாத்திரை செல்லல். 9-8-70 முதல் 14-8-70 வரையில் பொதுக்கூட்டங்கள் நடத்துதல், உண்டியல் பணம் வசூல் செய்தல், ஊர்வலம் நடத்துதல்.

(இ) 15-8-70-தொண்டர்கள் தங்கள் தலைவர்களின் தலைமையில் தேர்ந்தெடுத்த நிலங்களில் நுழைந்து சாகுபடி செய்யத் தொடங்குவர் அல்லது அந்த நிலத்தைச் சாகுபடி செய்யத் தக்கதாகச் செய்வர். அவர்கள் கைதுசெய்யப்பட்டால், இப்பணியைத் தொண்டர்கள் தொகுதி தொகுதியாகத் தொடர்ந்து நிறைவேற்றுவர்.

திட்டமிட்ட நிலப்பறிக் கிளர்ச்சிக்கு ஆதரவு தேடுவதற்கு 'நிலப் போராட்ட நாள்' கொண்டாட இந்தியப் பொதுவுடைமைக் கட்சிக் கிளைகள், 1-7-70-ம் நாள் தமிழ் நாட்டின் சில இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்தின. பல இடங்களில் குறிப்பிடப்பட்ட தலைவர்களின் தலைமையில் 15-8-1970-ல் இக்கிளர்ச்சியை நடத்த இக்கட்சி முடிவு செய்தது.

தஞ்சாவூரில் 1970 ஜூலை 3-ம், 4-ம் தேதிகளில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் மாநிலச் செயற்குழுக் கூட்டத்தில் இக்கிளர்ச்சியில் பங்குகொள்ள 10,000 தொண்டர்களை இம்மாநிலம் முழுவதிலும் சேர்ந்து, கிளர்ச்சியின் போது தடை உத்தரவுகளை மீறவும் இக்கட்சி முடிவெடுத்தது. தமிழ்நாட்டில் சுமார் 10,000 தொண்டர்கள் இக்கிளர்ச்சியில் பங்கு கொள்ள முன்வந்துள்ளனர் என்றும், முதல் நாளில் இந்த இயக்கத்தை இக்கட்சியின் முதன்மைத் தலைவர்கள் தலைமை தாங்கி நடத்துவது என்றும், தடுப்பு நடவடிக்கையாகத் தலைவர்கள் கைது செய்யப்பட்டால் மற்றவர்கள் தலைமறைவாகி இக்கிளர்ச்சியைக் அமைத்து வெற்றிகரமாக நடத்துவர் என்றும், தெரிய வந்தது. நிலக்கிழார்கள் தடுத்துத் தாக்கும் செயலில் இறங்கினால் கட்சித்தொண்டர்கள் திருப்பித் தாக்கி நிலத்தை வலுவில் கைப்பற்ற முயல்வர் என்றும், மார்க்ஸிஸ்ட் பொதுவுடைமையாளரும் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியினரும் இந்த இயக்கத்தில் குறிப்பாக கிராமப்பகுதிகளில் சேர்ந்து

ஒத்துழைப்பர் என்றும் பொதுவுடைமைக்கட்சி நம்புவதாகவும் அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஆயினும், இந்தக் குறிப்பிட்ட கட்சியினர் இந்த இயக்கத்தை ஒத்துக்கொள்வது இல்லை என்ற முடிவினை அறிவித்திருக்கிறார்கள். ஆயினும் இங்கு நான் குறிப்பிட்டதைப் போல "நிலக்கிழார்கள் தடுத்துத் தாக்கும் செயலில் இறங்கினால் கட்சித் தொண்டர்கள் திருப்பித் தாக்கி நிலத்தை வலுவில் கைப்பற்ற முயல்வர்" என்பதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். இது அவர்களது பத்திரிகையில் எல்லாம் எழுதப்பட்டிருக்கிறது. "பிரதமர் நிலத்தில் நிலப்பறி இயக்கம் நிகழ்ந்த நேரத்தில் அந்த இடத்தில் கிளர்ச்சி செய்ய வந்த நேரத்தில்தானே கைது செய்யப்பட்டார்கள், இங்கே முன்கூட்டியே கைது செய்துவிட்டார்களே இது என்ன நியாயம்?" என்றார்கள்.

நான் முன்பே குறிப்பிட்டபடி நிலப்பறி இயக்கத்தை நடக்கவிட்டு, நிலக்கிழார்கள் தடுத்துக் தாக்கும் செயலில் இறங்கினால் கட்சித் தொண்டர்கள் திருப்பித் தாக்கி நிலத்தைக் கைப்பற்ற முயல்கிறபோது அந்த இடத்தில் ரத்த ஆறு ஓடும் என்பதை நாம் எண்ணிப் பார்க்க மறந்துவிடக்கூடாது. சொத்துக்கு உரியவர்கள் தங்களுடைய சொத்து பறிக்கப்படுகிற நிலைமையில் யாராவது அங்கு ஆக்கிரமிப்பார்களானால் அதைத் தடுத்து நிறுத்த பலாத்காரத்தை உபயோகிக்கக்கூட சட்டத்தில் இடம் இருக்கிறது என்பதை வழக்கறிஞர் பெருமக்கள் நன்கு உணர்வார்கள். சட்டப்படியான அந்த உரிமையைப் பயன்படுத்தினால் என்ன நடைபெறும்? ஒவ்வொரு கழனியிலும், வயல் வெளியிலும் என்ன நடைபெற்றிருக்கக்கூடும் என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும்.

ஆகவேதான் பொதுவுடைமைக் கட்சியின் முடிவு அரசுக்குத் தெரிந்ததும் இதுகுறித்து இக் கட்சியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணிக்குமாறும், வாராந்தர அறிக்கைகளை அனுப்புமாறும், நடக்கக்கூடுமென ஊகிக்கும் நேர்வுகளை முன்கூட்டியே தெரிவிக்குமாறும், சட்டம், ஒழுங்கு நிலையைக் கண்காணிக்குமாறும் சட்டமும் ஒழுங்கும் சிறப்பாக நிலைநிறுத்தப் படுவதற்குத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், இக்கிளர்ச்சி நடந்தால் அமைதிக்குலைவு ஏற்படாது காக்குமாறும் தக்க கட்டளைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப் பட்டுள்ளன. காவல்துறை சூப்ரண்டுகளுக்குத் தக்கக்

கட்டளைகளை அனுப்புமாறு சென்னை, காவல்துறை இன்ஸ்பெக்டர் - ஜெனரல் கேட்டுக்கொள்ளப்பட்டார். அச்சுறுத்திய வண்ணம் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தொண்டர்களின் நிலப்பறிக் கிளர்ச்சி நடைபெறுமென்று அடுத்து அரசுக்குத் தெரியவந்தது.

நிலப்பறிக் கிளர்ச்சியில் கலந்துகொள்ள முயற்சிகள் எடுத்த நபர்கள் இ. பி. கோ. சட்டத்தின் பல பிரிவுகளின் கீழ் பல குற்றங்கள் செய்யக் கூட்டு முயற்சிகள் எடுத்ததை அடிப்படையாக வைத்து மாநில முழுதும் மேற்படி குற்றங்களுக்காகவும், தடையுத்தரவை மீறியதற்காகவும் போலீசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். வழக்குகள் நீதிமன்றத்தில் இருக்கின்றன.

ஆயினும் கைது செய்யப்பட்ட நாளும், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் தேர்தல் நாளும் ஒருசேர வந்தமையால் தேர்தலில் கலந்துகொள்ள விரும்புவோர் இந்திய பொதுவுடைமைக் கட்சியினர் மேற்கொள்ளும் நிலப்பறிக் கிளர்ச்சியில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்ற உறுதிமொழி எழுதிக் கொடுத்தால் அவர்கள் விடுவிக்கப்படலாமென அரசு ஆணையிட்டது. அதற்கிணங்க ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலில் வேட்பாளர்களாக இருக்கக் கூடியவர்களும் ஓட்டளிக்க வேண்டிய நிலைமையில் உள்ளவர்களும் அரசாங்கத்தின் ஆணையை ஏற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்தார்கள். அவர்கள் அத்தனைபேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆகவே கைது செய்யப்பட்ட காரணத்தினால் வேட்பாளராக நிற்கக்கூடிய தகுதியையோ உரிமையையோ ஜனநாயகத்திற்குப் புறம்பாக இழக்கின்ற நிலைமையோ ஏற்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். மேலும் அவர்கள் போட்டியிட்ட இடங்களில் வெற்றி வாய்ப்பு உள்ள இடங்களில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஆகவே கைது செய்யப்பட்டு அவர்கள் சிறையில் வைக்கப்பட்ட காரணத்தினால் ஊராட்சி ஒன்றியத் தேர்தலில் கலந்துகொள்வது தடைப்படுத்தப்படவில்லை என்பதை நான் தந்திருக்கிற இந்த விளக்கங்களின் மூலமாக நீங்கள் அறிவீர்கள்.

மேலும், கைது செய்யப்பட்டிருப்பவர்களுக்கு சிறைச் சாலைகளில் எவ்வளவு வசதிகள் அளிக்க முடியுமோ அந்த

அளவுக்கு வசதிகள் வழங்கப்படுகின்றன. திருச்சி மாவட்டத்தில் இருக்கிற சிறையில் இடம் போதவில்லை என்ற காரணத்தினால் தனியாக லட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாய் அளவுக்குக் கொட்டகைகள் போடப்பட்டுத் தனித்தனிக் கூட்டமாக அந்தக் கொட்டகைகளில் இருக்கிற அளவு வைக்கப்பட்டிருக்கிறார்கள். தண்ணீர் வசதி, மற்ற வசதிகள் இல்லை என்று கூறப்பட்ட வுடனேயே சிறைச்சாலை சம்பந்தப்பட்ட தொழில் அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்த்து அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் செய்தார்கள். திருச்சியில் இட நெருக்கடியாக இருப்ப தனால் அங்கிருந்து மற்ற சிறைச்சாலைகளுக்கும் பரவலாக மாற்றப்பட்டு வருகிறார்கள்.

சில பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு 3 மாதம், 6 வாரம் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சுமார் 500 பேர்கள் கிளர்ச்சியில் ஈடுபடவில்லை என்று எழுதிக்கொடுத்துவிட்டு விடுதலை பெற்று இருக்கிறார்கள். இந்த நிலையில் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் ஒருவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் 'ஹேபியஸ் கார்ப்பஸ்' மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தமிழ்நாட்டில் பொதுவுடைமைக் கட்சியின் முதன்மைத் தலைவர்களைக் கைது செய்ததை எதிர்த்து இவர் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இம்மனு, உயர்நீதிமன்றத்தில் முடிவுறா நிலையில் உள்ளது. அவர்களை எல்லாம் விடுதலை செய்யவேண்டுமென்று டெல்லி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் என்னிடம் கேட்ட நேரத்தில், போராட்டத்தைச் கைவிட்டதாகத் தெரியவில்லை. கைவிட்டதாக அறிவிப்பு வருமேயானால் அவர்களை விடுதலை செய்வது பற்றிக்கூட இந்த அரசு பரிசீலனை செய்யும் என்று கூறி இருக்கிறேன்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களைக் கைது செய்து நீண்ட நாள் சிறையிலே வைத்திருக்கவேண்டுமென்ற எண்ணம் நிச்சயமாக இந்த அரசுக்கு இல்லை. இந்த அரசு நிலம் இல்லாதவர் களுக்கு நிலம் வழங்குவதற்குச் சட்டரீதியாக நடவடிக்கை எடுத்து லட்சக்கணக்கான பட்டாக்கள் வழங்கி வருகிறது. காட்டு நிலங்களைக்கூட ஆக்கிரமிப்போம் என்று சொன்னார்கள். உண்மையான காடாக இருந்தால் அவற்றை விட்டுவிட்டு, காடு என்கிற பேரால் உள்ள மேடு பள்ளங்களாக இருக்கிற நிலங்களையும் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்ற

நோக்கத்துடன், சேலம், திருச்சி மாவட்டங்களில், வேறு பல மாவட்டங்களிலும் நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து அளிக்கின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, நிலம் இல்லாதவர்களுக்குச் சாகுபடிக்கு நிலம் கொடுப்பதற்கு வேண்டிய எல்லாக் காரியங்களையும் அரசு செய்துகொண்டு வருகிறது.

இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு கிளர்ச்சி தேவை யில்லை என்று அரசு கருதுகின்றது. அந்தக் கிளர்ச்சியும், அறநிலையில், அமைதியான நிலையில் உருவாகாமல் அந்தக் கிளர்ச்சியின் காரணமாகத் தமிழ்நாட்டில் இருக்கிற ஒவ்வொரு வயல் வெளியும் போர்க்களங்களாக மாறிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினால், பாதயாத்திரை என்று இரண்டிரண்டு பேர்களாகக் கிளம்பி ஆயிரம் இரண்டாயிரம் என்று நிலத்தில் பிரவேசிக்கின்ற நிலையில் புரட்சிகள் ஏற்படும் என்ற காரணத்தினால் 9-ம் தேதியே முன்கூட்டியே அவர்களை காவல் துறையினர் கைது செய்து, இருக்கின்றார்கள். அந்த விஷயத்தில் அரசாங்கம் மிகவும் முன் எச்சரிக்கையாகவே நடந்திருக்கிறது. தமிழ்நாட்டில் நிலப்பறிக் கிளர்ச்சியால் எந்தவிதமான வன்முறையும் நடைபெறவில்லை. திரு. சித்தன் அவர்கள் இந்த அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தவறிவிட்டது என்று தன்னுடைய தீர்மானத்தில் கூறியிருப்பது முறை ஆகாது என்பதை எடுத்துக் கூறி இந்த ஒத்திவைப்பு தீர்மானம் அவசியம் இல்லை என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



மாநிலத்திற்கு தனிக் கொடி

உரை : 10 **நாள் : 26.08.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திற்கு ஒரு தனிக் கொடி வேண்டுமென்கிற கோரிக்கையின் அடிப்படையில் இன்று தமிழ் நாட்டு சட்ட மன்றத்திலும் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு டெல்லி நாடாளுமன்றத்திலும் நேற்றையதினம் டெல்லி மாநிலங்கள் அவையிலும் பெரும் விவாதங்கள் நடைபெறுகிற நிலை உருவாகியிருக்கிறது. நம் தமிழ் நாட்டுக்கு என்று, நம்முடைய மாநிலத்திற்கு என்று கேட்கிற இந்தத் தனிக் கொடி பிரிவினை எண்ணத்தோடோ அல்லது தமிழ் நாடு தனியாக இந்தியாவிலிருந்து துண்டித்துக்கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்தோடோ கேட்கப்படுவதல்ல என்பதை நான் மிகுந்த உறுதியோடு பல முறையும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

மாநிலங்கள் அவையில் இந்தக் கொடி பற்றிய பிரச்சினை வந்தபோது பதில் உரை ஆற்றிய இந்திய பிரதமர் அவர்கள் நாட்டை பலவீனப்படுத்துவதான எந்த முயற்சியும் எதிர்க்கப்படும் என்றும் தேசியக்கொடி அல்லது தேசிய கீதத்தின் முக்கியத் துவத்தை குறைக்கக்கூடிய எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் ராஜ்ய சபையில் கூறிய இந்த வாசகத்தை எழுத்துக்கு எழுத்து இந்த அரசு அப்படியே ஒப்புக்கொள்கிறது என்பதை நான் இங்கு மிகுந்த மரியாதையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இதைக் கூறிய பிரதமர் அவர்கள் மற்றொன்றையும் கூறியிருக்கிறார்கள். கவர்னர்களுக்கும், மாநிலங்களுக்கும் தனிக்கொடி வைத்துக்கொள்ளும் பழக்கம் புதியதல்ல. அமெரிக்கா உட்பட பல நாடுகளில் இது இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அது மாத்திரமல்லாமல் இது ஏதோ பிரிவினை முழக்கத்தின் அடிப்படையோ என்றெல்லாம் சந்தேகப்பட்டவர்களுக்கு பதில் அளிக்கத்தக்க விதத்தில் இந்தியப் பிரதமர் அவர்கள் தமிழ்நாடு அரசாங்கத்திற்கு பிரிவினை நோக்கம் எதுவும் இருப்பதாக நான் நினைக்கவே இல்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்தக் கொடிப் பிரச்சினையை பிரிந்து போகவேண்டும் என்கிற எந்த ஒரு எண்ணத்தையும் அடிப்படையாக வைத்து இதனை நாம் எண்ணிடவில்லை என்பதற்கு ஏற்பத்தான் நாம் கொடியின் அமைப்பையும் உருவாக்கினோம். கொடியின் அமைப்பு இந்த விதமாகத்தான் இருக்கும். (கொடியின் படத்தைக் காண்பித்தார்கள்.) இதுதான் நம் மாநிலத்திற்கு என்று நாம் கேட்டிருக்கிற தனிக் கொடியாகும், இதில் ஒரு பகுதியில் இந்திய தேசியக் கொடியும் இன்னொரு பகுதியில் நம்முடைய தமிழ் நாடு அரசின் சின்னமும் இருக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். இது ஒன்றும் புதிதல்ல என்று பிரதமர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கேற்ப பிரிட்டிஷ் காமன்வெல்த்திலும் இதைப்போலவே பல கொடிகள், பல மாநிலங்களுடைய அடையாளங்களும் அமையத்தக்க அளவிற்கு யூனியன் ஜாக் ஒரு புறத்திலும் மறு புறத்தில் அந்தந்தப் பகுதிகளுடைய சின்னங்கள் அமைகிற வகையிலும் கொடிகள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் குறிப்பிட்டதைப் போல் யு. ஸ். ஏ-யில் இருக்கிற கொடிகளின் அமைப்புகள் நிறைய அளவில் இருக்கின்றன. ஸ்விட்ஸர்லாந்த் நாட்டில் அதன் மொத்த மக்கள் தொகை 62 இலட்சம் பேர்கள்தான். அப்படி 62 இலட்சம் பேர்கள் இருக்கிற அந்த சின்னஞ்சிறிய நாட்டில் 25 மாநிலக் கொடிகள் இருக்கின்றன. 25 மாநிலக் கொடிகளும் இவ்வளவையும் சேர்ந்து 'அலா ஸ்விட்ஸர்லாந்த்' - சிகப்பு வடிவத்தில் ஒரு கொடி அமைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் ஸ்விட்ஸர்லாந்த் முழுமைக்கும் ஆன தேசியக் கொடியாகும். ஸ்விட்ஸர்லாந்த் நாட்டிலுள்ள மாநிலங்களில் ஒரு மாநிலத்திலுள்ள மக்கள் தொகை 33,000. அவர்களுக்கும் தனியாக ஒரு கொடி இருக்கிறது. இன்னொரு மாநிலத்திலுள்ள மக்கள் தொகை 25,000. அது நித்துவால்டன். அதற்கும் ஒரு கொடி இருக்கிறது. இப்படி ஒரு இலட்சம், இரண்டு இலட்சம்

12,000 பேர்கள், 25,000 பேர்கள் என்று மக்கள் தொகை கொண்டுள்ள மாநிலங்களுக்கு ஸ்விட்ஸர்லாந்தில் தனித்தனி சின்னங்கள் அமைந்த கொடிகள் இருக்கின்றன. இந்தக் கொடிகளோடு ஸ்விட்ஸர்லாந்தில் தேசியக் கொடியும் விழாக் காலங்களில் பறக்க விடப்படுகிறது. ஆனால் தேசியக் கொடி பறக்க விடப்படுகிற கம்பங்கள் சற்று உயர்ந்ததாகவும் அந்தந்த மாநிலங்களின் கொடிகள் பறக்க விடப்படுகிற கம்பங்கள் அதைவிட சற்றுத் தாழ்ந்ததாகவும் இருக்கின்ற வேறுபாட்டைத் தவிர வேறு எந்த வேறுபாடும் இங்கு கிடையாது. அங்கெல்லாம் தனித்தனியாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் அரசியல் சட்டம் இருக்கிறது. ஆகவே தனித்தனியாக கொடிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று கூறக்கூடும்.

நம் தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று நீண்ட நெடுங்காலமாக நாம் வலியுறுத்தி வருகிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள், அண்ணா அவர்கள் இருந்தால் இந்தக் கொடிப் பிரச்சினையை அப்படியே விட்டு விடுவார்கள், ஏனென்றால் முன்பு அவர்கள் நாட்டுப் பிரிவினை விஷயத்தை விட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். அண்ணா அவர்கள் மறைகிற நேரத்தில் எழுதிவைத்துவிட்டுப்போன உயில்தான் மாகாண சுயாட்சி என்பதாகும். நாங்கள் அந்த உயிலை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் மாநிலங்களுக்கு அதிகப்படியான அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதைப்பற்றி நான் இங்கு விரிவாக பேச விரும்பவில்லை.

ஆனால் இந்தக் கொடியைப் பொறுத்தவரையில் எந்த விதமான பிரிவினை நோக்கத்தின் அடிப்படையிலும் இந்தக் கொடியை நாங்கள் கேட்கவில்லை. ஒரு பெரியவர்கூட எழுதியிருப்பதாக அல்லது கூறியிருப்பதாக இன்று காலையில் நான் பத்திரிகையில் பார்த்தேன். ஏதோ சில நாட்கள் இருந்து விட்டுப்போகிறவர்கள் கிடைத்த சிம்மாசனத்தில் சிங்காரமாக அமர்ந்துவிட்டு போகலாமே தவிர, ஏன் இந்த வம்புக்களுக்கு எல்லாம் வருகிறார்கள் என்று கூறியிருப்பதாக ஒரு பத்திரிகையில்

நான் பார்த்தேன். ஏதோ எல்லோரும் சேர்ந்து ஒரு இடத்தில் எங்களை உட்கார வைத்துவிட்டு சில நாட்களுக்குத்தான் இருக்கப் போகிறீர்கள் என்று கூறி வாழ்த்துவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை; ஏனென்றால் பெரியவர்கள் சபித்தால் அது திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் அது வாழ்த்தாக மாறி கழகத்தை வாழ வைத்துக்கொண்டுதான் இருக்கிறது. எங்களுடைய ஜாதகமே எப்படியாவது ஒரு பெரியவர் எங்களை சபிக்கவேண்டும், அப்படி சபிக்கிற நேரத்தில் நாங்கள் வாழ்வது என்பது ஒரு முறையாக இருந்து வருகிறது. அந்தப் பெரியவர் வாழ்த்தினால் இன்னொரு பெரியவர் சபிப்பார். ஒரு பெரியவர் சபித்தால் இன்னொரு பெரியவர் வாழ்த்துவார். ஆகவே வாழ்த்துவதும் சபிப்பதும் மாறி மாறி ஒருவர் சபிக்க இன்னொருவர் வாழ்த்த என்று எங்கள் ஆரம்ப காலத்திலிருந்தே இது எங்களது ஜாதகமாகிவிட்டது அந்த ஜாதக அடிப்படையில் நாங்கள் சில நாட்கள் அல்ல பல நாட்கள் இந்த அவையில் திராவிட முன்னேற்றக் கழகம் அமைச்சரவை நடத்தக்கூடிய வாய்ப்பினை தமிழ்நாட்டு மக்கள் தருவார்கள் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். (ஆரவாரம்.)

இந்தக் கொடிகள் மூலம் உள்நாட்டில் பெரிய போராட்டங்கள் எல்லாம் ஏற்படும் என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். எங்களது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அந்தப் பெரியவரின் கருத்தை நான் நெஞ்சாற மதித்து அதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தனித்தனி கொடிகள் வைத்துக் கொண்டால் எப்படி உள்நாட்டுக் குழப்பம் வரும் என்பது தெரியவில்லை. கொடிகள் இல்லாத மாநிலங்களில் உள் மாநிலப் போர்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அப்படிப் பட்ட மாநிலங்கள் இருக்கும்போது நாம் நம் மாநில அளவில் ஒரு தனிக் கொடி அமைத்துக்கொள்ளவேண்டும். தேசியக் கொடியை நாம் புறக்கணிக்கக்கூடாது. நம் தேசியக் கொடியும் அதில் இருக்கவேண்டும் என்ற ஆசையின் அடிப்படையில்தான் நாம் இந்திய அரசுக்கு அதைப்பற்றி எழுதினோம். ஆகவே, அந்த நிலைமை குறித்து இந்த அவையில் ஒரு அறிக்கையை முன் வைப்பதன் மூலம் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு

தேவை இல்லை என்ற கருத்தினை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

தனிக் கொடி கேட்பதால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு எவ்வித மாறுபட்ட கருத்தும் இந்த அரசுக்குக் கிடையாது என்பதை உறுதியாகக் கூறுகிறேன். தேசியக் கொடி இப்போது போலவே எப்போதும் பயன்படுத்தப்படும். அதன் மதிப்பை குறைத்திட வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்குத் துளியும் இல்லை.

இந்த அரசு, கடந்த ஜூன் மாதத்தில் நமது தேசியக் கொடியை நாம் உத்தேசித்துள்ள மாநில அரசின் கொடியில் சேர்க்க எண்ணியதால், நாம் அனுப்பிவைத்த 'மாதிரி' கொடிக்கு அனுமதி வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தது, அதற்கு, நமது பிரதமர் அவர்கள் மற்ற மாநில முதலமைச்சர்களை எல்லாம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவு எடுக்கப் போவதாக இந்த அரசுக்குப் பதில் அளித்துள்ளார்கள்.

நாம் உத்தேசித்துள்ள மாநில அரசின் கொடியில் நமது தேசியக் கொடி ஒரு பகுதியிலும், நமது மாநில அரசின் சின்னம் மற்றொரு பகுதியிலும் பொறிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாகவும், இந்திய அரசியல் சட்டப்படியும் தனிக் கொடி வைத்துக்கொள்வதை மறுப்பதற்கு அரசியல் அமைப்புச் சட்டத்தில் எவ்வித இடமுமில்லை என்பதை நான் இந்த மாமன்றத்திற்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாம் உத்தேசித்துள்ள மாநிலக் கொடியில் தேசியக் கொடி இடம் பெறுதல் கூடாது என்று மத்திய அரசு தீர்மானிக்குமேயானால் நமது மாநிலத்திற்கு எத்தகைய கொடியை அமைப்பது என்பது பற்றி பிறகு நாம் யோசிக்கலாம்.

சுவிட்ஸர்லாந்து, மேற்கு ஜெர்மனி, அமெரிக்கா, கனடா, போன்ற பெடரல் ரிபப்ளிக் முறையுடைய நாடுகளிலெல்லாம் அந்த பெடரேஷனைச் சேர்ந்த அங்கங்கள் தனிக் கொடி வைத்துக் கொண்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

நாம், இந்தப் பிரச்சினையில் மத்திய அரசின் முடிவை எதிர்நோக்கியிருக்கிற இந்தச் சூழ்நிலையில் இம்மாமன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசரமும், அவசியமும் இருப்பதாக அரசு கருதவில்லையாதலால், அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டிய தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்

உரை : 11 நாள் : 03.09.1970

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழரசுக் கழகத் தலைவர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்தைப் பற்றி, கொண்டு வந்த நாள் அன்றும், இன்றும் நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உட்பட மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் விவாதத்தில் கலந்து கொண்டு, கருத்துக்களை எல்லாம் வெளியிட்டார்கள். நான் அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இங்கு விரிவான ஒரு உரையை நிகழ்த்த விரும்பவில்லை. ஏனென்றால், நான் தமிழரசுக் கழகத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவ தெல்லாம், பொதுவாக இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளப் போகிறேன். வலியுறுத்த வேண்டாம் என்பதற்குக் காரணம் அந்தத் தீர்மானத்தினுள் பொதிந்திருக்கிற கருத்துக்கள் எனக்கு ஏற்புடையவையல்ல என்பதால் அல்ல. அந்தக் கருத்துக்களை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ளுகிறேன்.

மாநில சுய ஆட்சி என்று அவர் குறிப்பிட்டிருப்பது, மத்தியிலே மேலும் மேலும் அதிகாரங்கள் குவிவதைத் தடுக்க வேண்டுமென்று அவர்கள் கோடிட்டுக் காட்டியிருப்பதும், அதிகாரங்கள் பரவலாக ஆக்கப்பட வேண்டுமென்று, மாநிலங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியிருப்பதும், திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களாகும். கழகத்தின் சார்பில் நடைபெறுகின்ற இந்த ஆட்சி அதனை வலியுறுத்தி வருகின்ற காரணத்தாலே எந்தெந்த திட்டவட்டமான அதிகாரங்கள் நாம் பெறமுடியும், பெறுவதற்கான வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன,

894.81
TA
ANNA CENTENARY LIBRARY
CHENNAI - 600 085.

எந்தெந்த அதிகாரம் பெறுவதற்கு இன்றுள்ள அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்பதைப்பற்றி எல்லாம் ஆராய்வதற்காக அரசின் சார்பில் 3 மேதைகள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட் டிருக்கிறது. இந்தக் குழுவின் அறிக்கை விரைவில் நமக்குத் தரப்படவிருக்கிறது. அந்த அறிக்கை வந்த பிறகு எந்த அடிப்படையில் ஆராய்ந்து அரசாங்கத்தின் சார்பிலே ஒரு தீர்மானத்தை மாநில சுய ஆட்சி பெறவேண்டும் என்கிற தீர்மானத்தை என்னென்ன அதிகாரத்தை நாம் பெறவேண்டு மென்ற அளவிலே தயாரித்து இந்த மன்றத்திலே நாம் தருகின்ற கருத்து, இந்தத் தீர்மானத்துக்கு அவர் வடிவம் கொடுக்க வேண்டுமென்ற அளவிலே இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்கள் வலியுறுத்த வேண்டாம் என்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

G00592 9.

இந்த மாநில சுய ஆட்சி அல்லது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கோருவது எல்லாம் பிரிவினை அடிப்படையில் எழுகின்ற கருத்துக்கள் என்று சிலரால் பேசப்படுவது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும். திராவிட நாடு கேட்டீர்கள், திராவிட பிரிவினையை விட்டுவிட்டீர்கள். ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று கூறுகிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட தெலுங்கில் "தானிக்கிப் பேரு ஏமி. . ." என்றார். ஆனால் காரணங்கள் அப்படியேதான் இருக்கின்றன என்று கூறுவது; பிரிவினையை விட்டது நியாயம் இல்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவர் மாத்திரம் அல்ல, இந்தக் குற்றச்சாட்டை சாட்டுகிற எல்லோரும் உணர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பிரிவினைக் கேட்கப்பட்டது உண்மை. ஆனால் பேரறிஞர் அண்ணா அவர்கள் "அந்தப் பிரிவினை கொள்கையை விட்டு விட்டோம். ஆனால் அதற்குரிய காரணங்களுக்காக நாம் போராடுவோம்" என்று கூறியது எந்த விதத்தில் தவறு உடையது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

பிரிவினைக்குக் காரணங்கள் நம்முடைய நாடு புறக்கணிக்கப்படுகிறது. தெற்குப் பக்கத்திலுள்ள நாடுகளில் எல்லாம் தொழில் வளம் இல்லை. தொழில் வளம் பெருக வேண்டுமென்பதற்கு யாரும் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.

நம்முடைய உரிமைகள் எல்லாம் புறக்கணிக்கப்படுகின்றன. ஆகவே, நாங்கள் பிரிந்து போகவேண்டுமென்று கேட்ட நேரத்திலே, இந்தியாவினுடைய பாதுகாப்பு, இந்தியாவின் பலம் குறைந்துவிடும் என்றார்கள். இந்த அடிப்படையிலே பிரிவினைக் கோரிக்கை தேவையில்லை என்று விட்டுவிட்ட பிறகு நம்முடைய நாட்டுக்குத் தேவையான உரிமைகள், அடிப்படை சாதனங்கள் தரப்படாததாலே இந்தக் காரணங்கள் அப்படியே வந்திருக்கின்றன. என்ன காரணத்திற்காக பிரிவினை கேட்கிறோம் என்று சொன்னோம்? "பிரிவினை கேட்காதீர்கள். இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படும்" என்று கூறிய நேரத்திலே, பிரிவினைக் கேட்கவில்லை. ஆனால் அதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன. குறைபாடுகள் இருக்கின்றன. இவைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று கூறுவது பிரிவினைவாதம் ஆகாது.

மாநில சுய ஆட்சி மத்தியில் கூட்டாட்சி தத்துவத்தை அழித்துவிட வேண்டுமென்பதற்காக; இந்தியா வலிவானதாக, பலமானதாக இருக்கவேண்டுமானால், மாநிலங்கள் சுய ஆட்சி பெற்று அதிக அதிகாரங்கள் பெற்று அமைந்துவிடுமானால் இந்தியாவிலேயே அமளி ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு இந்திய ஒருமைப்பாட்டு நிலையில் அமளிகளும் ஆர்ப்பாட்டங்களும் ஏற்பட வேண்டுமென்று யாரும் கருதிக்கூடப் பார்க்கத் தேவையில்லை. அமளிகள், சச்சரவுகள், தகராறுகள் இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்றால், அதற்கு தக்க சூழ்நிலை பிரச்சினை அடிப்படையிலே ஏற்படுகின்றதே தவிர, வேறு இல்லை. இன்றைக்கு மாநில சுய ஆட்சி இல்லை. ஆனால் மாநிலங்கள் இருக்கின்றன. மைசூருக்கும் தமிழகத்திற்கும் இருக்கிற நதி நீர்த் தகராறு பற்றிக்கூட மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

ஆக, மாநில சுயாட்சி இல்லாத நேரத்திலேயே நீர்த் தகராறு இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். மாநில சுயாட்சி ஏற்பட்டால்தான் தகராறுகள் ஏற்படலாம் என்று முன்கூட்டியே ஏதோ ஒரு ஆபத்து வரப்போகிறது என்று கனவு காணுவதற்குத் தேவையே இல்லை. நான் வலியுறுத்தி, வலியுறுத்திக் கூறிக்கொண்டு வந்திருக்கிறேன். முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நடைபெறுகின்ற மாநாட்டுத் தீர்மானங்களிலும், செயற்குழுத் தீர்மானங்களிலும் தெளிவாக விளக்கி வந்திருக்கிறோம்.

இந்தியாவினுடைய ஒருமைப்பாட்டுக்குட்பட்டு, இந்தியாவினுடைய ஒற்றுமையைப் பலவீனப்படுத்தாத அளவிலேதான், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கேட்கிறோம். மாநில சுயாட்சித் தத்துவத்தை முன் வைக்கிறோம் என்று கூறி வந்திருக்கிறோம்.

இன்றைக்கு நாம் கேட்கிற தனிக் கொடியை அதோடு இணைத்து மாநில சுயாட்சி, தனியாட்சிதான், தனிநாடு கோரிக்கை தான் என்று வாதிடுவது விந்தையாக இருக்கிறது; நான் இடை மறித்துப் பேசுகின்றபொழுது சொன்னேன். கவர்னர் அவர் களுக்கு தனிக் கொடி இருக்கிறது. ஜனாதிபதி அவர்களுக்கு தனிக் கொடி இருக்கிறது. சென்னை மேயருக்குத் தனிக் கொடி இருக்கிறது. மாநில அளவிலே அமைச்சர்களுக்கும் தனிக்கொடி இருப்பதாலே எந்தத் தவறும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும். நான் முதலிலே மாநிலத்திற்குத் தனிக்கொடிதான் கேட்டேன் என்றும், இந்திரா காந்தி அம்மையாரிடத்திலே அட்ஜஸ்ட் செய்து மந்திரிகளுடைய வீடுகளுக்கும் கார்களுக்கும் மட்டும் அது இருந்தால் போதும் என்று கூறிவிட்டதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஜூன் மாதத்திலேயே எழுதிய கடிதத்திலே அமைச்சர்களுடைய வீடுகளுக்கும் கார்களுக்கும் ஒரு தனிக் கொடி வேண்டுமென்ற அளவிலேதான் கேட்கப்பட்டிருக்கிறது? இந்த வண்ணத்திலே இந்த வடிவத்திலே ஒரு கொடி இருக்க வேண்டும் என்றுதான் எழுதிக்கேட்கப்பட்டதே தவிர வேறு ஒன்றும் இல்லை.

உங்கள் அளவிலேயே கொடி எப்படி இருக்க வேண்டு மென்று சொல்லியிருக்கிறீர்கள், கொடியினுடைய வடிவத்தைச் சொல்லிவிட்டு, கொடியினுடைய வண்ணத்தைச் சொல்லிவிட்டு எதற்காக சட்டமன்றத்திலே கொண்டுவர வேண்டுமென்று அவர்கள் கேட்டார்கள். கொடி என்றால் அதற்கு எத்தனையோ விதிமுறைகள் இருக்கின்றன. பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தேசியக் கொடியை இந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்தியபொழுது அந்தக் கொடியை எந்த நேரம் பறக்கவிடவேண்டும், எந்த எந்த நேரத்தில் கொடி இருக்கலாம், எந்த நேரத்திற்குள் அந்தக்கொடி இறக்கப்படவேண்டும், எந்த எந்த விழாக்களிலே பறக்கவிடப்பட வேண்டும், துக்க காலத்தில் எத்தனை நாட்களுக்கு,

எந்த எந்த தகுதியுடையவர்களுக்கு எப்படி, எத்தனை நாட்களுக்கு இறக்கியிருக்கவேண்டுமென்றெல்லாம் விதிமுறைகளைச் சொன்னார்கள்.

மாநில அளவிலே கொடி அமைக்கப்பட்டால், தேசியக் கொடிக்கு சில விதிமுறைகள் இருக்கின்றன, அதைப்போன்று அதற்கும் என்ன என்ன விதிமுறைகள் என்று மேலவையிலே கேட்கப்பட்ட நேரத்திலே அந்த விதிமுறைகளை நீங்களே வகுத்துக்கொள்வீர்களா அல்லது அவையிலே உறுப்பினர் களிடையே கலந்துகொண்டு விதிமுறைகள் வகுக்கப்படுமா? என்று கேட்ட நேரத்திலே, அவையைக் கலந்து கொண்டுதான் செயல்படுத்தப்படும் என்று சொன்னேன். இப்பொழுது கேட்கப் பட்டிருக்கின்ற கொடி மாநில அமைச்சர்கள் வீடுகளிலும் கார்களிலும் பறக்கவிடப்படுவதற்காகத்தான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற கொடி என்ற வகையிலேதான் தவிர, தேசிய ஒருமைப்பாட்டைக் குலைப்பதாக இருக்காது.

தேசியக் கொடியைப் பறக்க விடுவதற்கு நாங்கள் கூச்சப் படுகிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். நாங்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்ட நேரத்திலே இப்படிப்பட்ட தவறான பிரச்சாரங்கள் செய்யப்பட்டன. தேசிய கீதத்தை அவமதித்தோம், தேசிய கீதம் பாடப்படும்பொழுது வெளியேறுகிறோம் என்றெல்லாம்கூடச் சொல்லப்பட்டது. ஆனால் மக்கள் நேரடியாகக் கண்டார்கள். உண்மைதானா என்று. நாங்கள் கலந்துகொள்கின்ற எந்த விழாவிலும் தேசிய கீதம் பாடப்படுகின்ற பொழுது எப்படி நடந்துகொண்டோம் என்பதை மக்கள் கண்டார்கள், உணர்ந்து கொண்டார்கள். தேசியக் கொடியை அவமதிக்கிறோம் என்று சொன்னார்கள். உள்ளபடியே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அப்படிக் கூறியிருக்கக்கூடாது. தேசிய கொடியைப் போட்டுக்கொண்டு போவதால் அதைக் காங்கிரஸ் கொடி என்று நினைத்துக் கொள்வார்கள். அதனால் அவமானமாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அவர்களுக்கு, இந்த மந்திரி சபைக்கு இந்த ஆட்சிக்கு தேசியக் கொடியிடம் எவ்வளவு மரியாதையும் மதிப்பும் இருக்கிறதோ அந்த அளவுக்கு மதிப்பும் மரியாதையும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் உண்டு.

நாங்கள் அதை அவமானமாகக் கருதுகிறோம் என்று கூறுவது தேசியக் கொடிக்கு அவர் தருகின்ற மதிப்புக் குறைவான வார்த்தை என்று கருதுகிறேன். அந்தக் கருத்திலே அவர்கள் சொல்லி இருக்கமாட்டார்கள்.

நாங்கள் கொடியைப் போட்டுக்கொண்டு போனபோது குழப்பம் ஏற்பட்டதுண்டு. மூதறிஞர் ராஜாஜி அவர்கள், "தேசியக் கொடி இதுதான் என்று சொல்லிவிடுங்கள். காங்கிரஸ்காரர்களே உங்கள் கட்சிக்கொடியை மாற்றுங்கள், இல்லாவிட்டால் எது தேசியக் கொடி, எது கட்சிக்கொடி என்ற குழப்பம் இருக்கிறது" என்று சொன்னார்கள். எத்தனையோ கிராமங்களில் சில காங்கிரஸ் காரார்கள் - இராட்டை போடப்பட்டிருப்பது காங்கிரஸ்கொடி, அசோகச் சக்கரம் போடப்பட்டிருப்பது தேசியக்கொடி என்ற இந்த வித்தியாசத்தைக்கூட உணராமல் - அசோகச் சக்கரம் போடப் பட்ட கொடியைக் கட்சிக் கொடியாக ஏற்றிவைத்த காட்சிகளைப் பார்த்திருக்கிறோம். சில காலங்களில் நாங்கள் போகிற நேரத்திலே மாலைகளை வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள் எங்களைப் பார்த்து காங்கிரஸ்காரர்கள் வருகிறார்கள் என்று நினைத்துக் கொண்டு பின்னால் தள்ளிப்போய் விடுகிறார்கள். ஆகவே அந்தக் காரியத்திற்காக அல்ல நாங்கள் தனிக்கொடி கேட்பது. அப்படியிருந்தால் வெள்ளைக் கொடியிலே அரசாங்கத்தின் சின்னம் போதும் என்று எண்ணியிருப்போம். இந்தக் கொடியிலே தேசிய கொடியும் நம் அரசாங்கத்தினுடைய கோபுரச் சின்னமும் இருக்க வேண்டுமென்றுதான் இரண்டையும் சம அளவில் வைத்து இரு பிரிவுகளாக வைத்துக் காட்டியிருக்கிறோம்.

ராஜபாளையத்திலே ஒரு நிகழ்ச்சி நடந்திருப்பதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதைப்பற்றிக் காவலர் நடவடிக்கை எடுப்பார்கள். தனிக்கொடி பற்றிப் போட்டு, தேசியக் கொடியை ஒரு பக்கத்திலே போட்டு, கோபுரத்தை ஒரு பக்கத்திலே போட்டு, ஒரு நாயையும் போட்டு காங்கிரஸ்காரர்கள் வைத்திருக்கிறார்கள் என்று தினமலர் பத்திரிகையிலே வந்ததை நான் மதுரையிலே பார்த்தேன். என்னிடம் அதைப்பற்றிக் கேட்டார்கள். தேசியக் கொடி சின்னம், கோபுரச் சின்னம், இரண்டையும் போட்டவர்கள் தன்னுடைய படத்தையும் அதிலே போட்டுக்கொண்டார்களோ என்னவோ என்று சொன்னேன்! இப்படியெல்லாம் செய்வது

நீங்கள்தானே தவிர, நாங்களல்ல. மன்னிக்கவும், நான் இதைச் சொல்வதற்காக, அந்தக் கொடியில் உள்ள தேசியக் கொடியை எதிர்ப்பதால் நீங்கள் தேசத் துரோகிகள் ஆகிறீர்கள். அந்தக் கொடியில் உள்ள கோபுரச் சின்னத்தை எதிர்ப்பதால் நாஸ்திகர்கள் ஆகிறீர்கள். இப்படி தேசத் துரோகிகளாகவும் நாஸ்திகர்களாகவும் ஏன் மாறுகிறீர்கள் என்பது புரியவில்லை.

மாநிலத்திற்கு ஒரு கொடி என்றால் ஊராட்சி மன்றத்திற்கும் கொடி கேட்பார்கள் என்று சொல்வது மாநிலத்திற்கு ஒரு கொடி என்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகச் செய்யப்படுகிற வாதமே தவிர வேறு இல்லை. கன்னியாகுமரியிலே பார்த்தேன். படகுகளில் தனிக்கொடிகள் இருக்கின்றன. விமான நிலையத்திற்குத் தனிக்கொடி இருக்கிறது. மதுரையிலே விமான நிலையத்திலே நீல நிறமுள்ள கொடியில் தேசியக் கொடி பொறிக்கப்பட்ட கொடி பறந்தது. உடனே சிலர் என்ன இது மாநிலத்திற்கு கேட்கப்பட்ட தனிக் கொடியா என்று கேட்டபொழுது, இது மாநிலக் கொடியா, கருணாநிதி வருகிறார் என்பதற்காக இருக்கிறதா என்று கேட்டபொழுது, இல்லை இல்லை நீண்டகாலமாக இது இருக்கிறது. விமான நிலையத்திற்கான கொடி இது என்று விமான நிலையத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே தனித்தனியாக உள்ள அமைப்புகளுக்கு, அதிகாரிகளுக்குக் கொடி இருக்கிற நேரத்திலே மாநில அமைச்சர்களுக்கும் கொடி இருக்கவேண்டும் என்பதைப் பார்த்து எதிர்க்கட்சித் தலைவர் ஆனந்தப்படவேண்டிய காரியமே தவிர இது வேறில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அந்தக் கொடியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஏனென்றால், எதிர்க்கட்சித் தலைவர் நல்ல மரியதையோடும், கிட்டத்தட்ட அமைச்சரளவிற்கு நடத்தப்பட வேண்டுமென்ற கருத்தை இதே அவையிலே கூறியிருக்கிறேன். அதற்கான மசோதா வெகுவிரைவிலே வரவிருக்கிறது. ஆகவே, அந்த அளவிலே மாநிலத்திற்கு என்று ஒரு கொடி போடுவது பிரிவினை மனப்பான்மையோடு போடப்படும் கொடி அல்ல என்பதைத் திட்டவட்டமாக நான் இங்கு கூற விரும்புகிறேன்.

இந்தக் கொடியைப்பற்றிய பிரச்சினை டெல்லி நாடாளு மன்றத்திலேயும், மாநிலங்களவையிலேயும் வந்த நேரத்தில், இந்தியப் பிரதம மந்திரி திருமதி. இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்திய தேசியக்கொடிக்கோ அல்லது இந்திய தேசிய கீதத்திற்கோ எந்தவிதமான இன்னலும் வருவதை இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்காது, நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று நம்முடைய பிரதம மந்திரி அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் அப்பொழுதே சொன்னேன். பிரதம மந்திரி அவர்கள் கூறியதை எழுத்திற்கு எழுத்து அப்படியே வரவேற்கிறேன் என்று.

மாநில சுயாட்சித் தத்துவத்தின் அடிப்படையில் மாநிலத்திற்கென்ற ஒரு தனிக்கொடி என்று கேட்கிறோமே தவிர, பிரிவினை கோஷம் எள்ளளவும் இல்லை, துளியளவும் இல்லை என்று சொல்லிக்கொண்டு, தமிழரசுக் கழகத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானத்தைப் பொறுத்த வரையிலே, இந்தத் தீர்மானத்திற்கு நல்ல வடிவம் கொடுத்து, இந்தத் தீர்மானத்தை இன்னும் விரிவுபடுத்தி, மாநில சுயாட்சி தேவை என்பதற்கான காரணங்கள் என்ன என்பதை விரிவாக விளக்கி இதே மன்றத்திலே ஒரு தீர்மானத்தை வெகு விரைவிலே நாம் கொண்டுவரவேண்டியிருப்பதால் இப்போதைக்கு இதை வலியுறுத்த வேண்டாமென்று நான் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.



திடீர் பிள்ளையார்

உரை : 12 **நாள் : 26.11.1970**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திடீர் வினாயகரைப் பற்றி எப்போதும் இருக்கும் வினாயகர் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்து தன்னுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இந்தத் திடீர்ப் பிள்ளையாரைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் - மிகுந்த ஆழ்ந்த ஆஸ்திகப் பற்றும், அவர்கள் குறிப்பிட்டதுபோல் தெய்வீகப் பற்றும் கொண்ட ராஜாஜி அவர்கள் - "இந்தப் பிள்ளையார்க் கதையின் மூலம் மதத்திற்குக் கேடு உண்டாக்க வேண்டாம்'' என்றுதான் பிள்ளையார் சிலையைப் பற்றி அறிக்கை விடுத்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் எங்கிருந்தாலும் அவர்கள் சொல்லும் நல்ல கருத்துக்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளுவோம் என்று - இன்று அல்ல, ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். உங்கள் பக்கத்தில் இருக்கும்போதுகூட அந்தக் கருத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதற்காக நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன்.

இந்தப் பிள்ளையார் விவகாரத்தில் தலைமையேற்றுப் பிரச்சினையைப் பெரியதாக ஆக்கிக்கொண்டிருக்கும் ஒரு பிரமுகர் இந்த வேலையை இப்போது மாத்திரம் செய்பவர் அல்ல. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இதே மாதிரி ஒரு காரியத்தைச் செய்ய முயன்றபோது அந்தப் பகுதியில் உள்ள அண்ணாங்காராச் சாரியார் போன்ற ஆஸ்திகப் பிரமுகர்கள் மறுப்பு அறிக்கை விடுத்திருக்கிறார்கள்.

தியாகராயநகரில் சிவா-விஷ்ணு ஆலயம் என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. இந்தப் பிரமுகர் அந்த ஆலயத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருக்கிறார். இவர் ஒருநாள் திடீரென்று ஒரு நோட்டீஸ் போட்டு பக்தர்களை அழைத்து ஒரு விஷயத்தைச் சொன்னார். 'இரவு என்னுடைய கனவில் சிவா, விஷ்ணு இருவரும் வந்து இந்த ஆலயத்தில் ஐயப்பசாமியை வைத்துக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும்' என்று கூறியதாகக் கூறிக் கும்பாபிஷேகத்திற்காக நிதி திரட்டும் முயற்சிகளையும் மேற்கொண்டு, அதற்கான காரியங்களில் அந்தப் பிரமுகர் ஈடுபட்டார்.

உடனடியாக, அந்தக் கோயிலின்பால் அன்பு கொண்ட வரும், ஆத்திகருமான அண்ணங்காராச்சாரியார் ஒரு அறிக்கை விட்டார். அந்தப் பெரியவர் விட்ட துண்டுப் பிரசுரத்தில் குறிப்பிட்டது –

''சாஸ்திரத்திலே ஏற்கனவே உள்ள ஒரு பழைய ஆலயத்தில் வேறு எந்தப் புதிய தேவதையையும் பிரதிஷ்டை செய்யக்கூடாது என்ற ஒரு திட்டமான சட்டம் இருக்கிறது. ஆகவே, இதுபோல் மகத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆலயக் கமிட்டியாருக்கோ அல்லது ஜெனரல் பாடிக்கோ எந்தவிதமான உரிமையும் கிடையாது. ஆலயம் சரிவர நடந்து வருவதை மேற்பார்வையிடுவதுதான் அவர்களின் அலுவலே அன்றி இவ்விஷயத்தில் தலையிட அவர்களுக்குத் தகுதி கிடையாது. இப்பிரச்சினையைத் தெளிவாகத் தீர்க்க ஆகம சாஸ்திரத்திலே பாண்டித்யமுள்ள பல வித்வான்களின் முடிவே சிறந்தது. . . . . ஆகவே, மேற்கண்டவாறு ஒவ்வொருவரும் தான் கனவில் கண்டவற்றையெல்லாம் நம் ஆலயத்துக்குள் புகுத்த எண்ணினால் அதற்கு முடிவில்லாமற் போவதோடு ஆலயம் ஆலயமாகவும் இருக்காது".

என்று அண்ணங்காராச்சாரியார் விடுத்த அறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறார்.

மேலும், அண்ணங்காராச்சாரியார் தனது துண்டுப் பிரசுரத்தில், காஞ்சி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் சாஸ்தாவைப்

பிரதிஷ்டிக்க அனுமதி தந்ததாக அந்தப் பிரமுகர் தெரிவித்ததை மறுத்துள்ளார்.

அப்போதே ஐயப்பசாமியை உருவாக்கி கும்பாபிஷேகம் நடத்துவதற்காகப் பணம் வசூலிக்கும் காரியத்தில் இறங்கியவர் இன்றைக்குத் திடீர் பிள்ளையார் விஷயத்திலும் தலைமையேற்று இந்தப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார் என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'நாங்கள் நாத்திகர்கள், ஆகவே, அங்கே பிள்ளையார் இருக்க வேண்டாம், கோயில் இருக்க வேண்டாம்' என்று முடிவு கட்டியதாக திரு. வினாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது உண்மையாக இருக்குமானால் நாட்டிலே இருக்கும் எவ்வளவோ பிள்ளையார் கோயில்கள் இடித்துத் தள்ளப்பட்டு, அகற்றப்பட்டு இருக்க வேண்டும். எந்தக் கடவுளும் இருக்க வேண்டாமென்று நாங்கள் கூறவில்லை. இந்தப் பிள்ளையார் வந்த விவகாரத்தைப் பார்க்க வேண்டும். பிரச்சினைக்குரிய இடத்தில் இந்த நிலை ஏற்படுகின்றபோது அரசு அதிலே அக்கறை செலுத்தவேண்டி யிருக்கிறது.

அந்த வட்டாரத்தில் ஒரு இடத்தில் மசூதி கட்டுவது அல்லது பள்ளிவாசல் கட்டுவதிலே ஒரு பிரச்சினை. இந்துக் களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் மனக் கசப்பு ஏற்படும் விதத்தில் மாச்சரியங்கள் உருவாயின. உடனே, நாங்கள மாவட்டள் ஆட்சித் தலைவரை அழைத்து 'நீங்கள் முன்நின்று பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள்' என்று கேட்டுக்கொண்டோம். மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பாருடனும் கலந்து பேசி எடுத்த முடிவிற்கு இசைவாக இந்துப் பெரியவர்களிடமிருந்தும், முஸ்லீம் பெரியவர்களிடமிருந்தும் கைப்படடிக் கடிதம் வாங்கி வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே பள்ளிவாசல் கட்டுவதற்காகக் குறிப்பிட்டிருந்த இடத்தை விட்டுவிட்டு போலீஸ் லைன் இருக்கும் இடத்தில் பள்ளிவாசல் கட்ட ஒப்புதல் அளித்துவிட்டார்கள். போலீஸ் லைனில் எந்த இடத்தில் பள்ளிவாசல் கட்டுவதற்காகத் திட்டமிடப்பட்டதோ அந்த இடத்தில் இந்தப் பிள்ளையார் திடீரென்று வந்தார். அப்படிப் பிள்ளையார் வந்ததற்குக்

காரணமும் நன்றாகத் தெரிகிறது. போலீஸ் லைனுக்குப் பக்கத்தில் பள்ளிவாசல் கட்டக்கூடாது என்று அந்தப் பகுதியில் இருந்த சிலர் விரும்பிய காரணம் தவிர வேறு காரணம் எதுவும் நிச்சயமாக இருக்கமுடியாது.

தங்களுடைய கொள்கைளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக, தங்களுடைய எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காக, குறிப்பிட்ட இடத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சியை இந்துக்களுக்காக ஏற்றுக்கொள்ளுவதாக இருந்தால் இந்த பிரச்சினை மவுண்ட் ரோடில் ஏற்பட்டால் அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? இதே போன்று கிறிஸ்தவர்கள் எல்லாம் சேர்ந்து கொண்டு, ஜெமினிக்குப் பக்கத்திலே பூமி வெடித்தது, 'இந்து' ஆபீசுக்குப் பக்கத்திலே பூமி வெடித்தது, 'ஆனந்தவிகடன்' ஆபீசுக்கு எதிரே பூமி வெடித்தது. 'கல்கி' ஆபீசுக்கு முன்னாலே பூமி வெடித்தது - ஒரு சிலுவை வந்தது, இந்த இடத்தில் இயேசு நாதருக்கு ஒரு கோயில் கட்டவேண்டும், ஒரு மாதா கோயில் கட்டவேண்டும். சிலுவை வெடித்ததால் கிறிஸ்தவர்கள் எல்லாம் வணங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டு அதை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவது என்றால் அதைவிட அபத்தம் வேறு எதுவும் இருக்கமுடியாது. ஆகவே, உங்களுடைய எண்ணங்களை நிறைவேற்றிக்கொள்ள கடவுளை நீங்கள் இழுக்காதீர்கள் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாங்கள் கடவுளை நம்பவில்லை, கடவுள் நம்பிக்கை இல்லாததால்தான் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று திரு. வினாயகம் அவர்கள் சொன்னார்கள். இதிலே மிக முக்கியமான பிரச்சினையைக் கவனிக்க வேண்டும். கடவுளை நாம் ஏற்றுக் கொள்ளுகிறோமா அல்லது கடவுள் நம்மை ஏற்றுக் கொள்ளுகிறாரா என்பதுதான் கேள்வி. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தமட்டில் கடவுள் நம்மை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அந்தக் காரியங்களைச் செய்து வருகிறோம். நீங்கள் கடவுளை ஏற்றுக் கொள்ளுகிறீர்கள். கடவுளைச் சாதாரணமாக ஆக்கி ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று கூறுகிறீர்கள். கடவுளை உங்கள் பொறுப்பில் வைத்திருக்கிறீர்கள். நாங்கள் கடவுளை மிக உயர்ந்த

இடத்தில் வைத்து கடவுள் எங்களை ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு எங்களைப் பண்படுத்திக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருக் கிறோம். இதிலே, நீங்கள் 'நாத்திகம்' என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டு எங்களை பார்த்து 'நாத்திகர்கள்' என்று சொல்லுவதுதான் ரொம்ப வேடிக்கையாக இருக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட வினாயகர் சிலையைப் பொறுத்து இன்றைக்கு வந்திருக்கிற அறிக்கையைப் பற்றித் திரு. வினாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதைப் போலீஸ் கமிஷனருக்கும் எழுதி அனுப்பி யிருப்பதாகக் கூறினார்கள். இவ்வளவு நாட்களாக இவர் இதைச் சொல்லாமல் சட்டசபை ஆரம்பிக்கும் நேரமாகப் பார்த்துச் சொல்லி இருக்கிறார். குமுதம் பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் போதுகூட இந்தவிதமாக எந்தக் கருத்தையும் அறிவிக்கவில்லை இவர். இப்போது என்ன சொல்லியிருக்கிறார்? முதலில் கொடுத்த வாக்குமூலத்தின்போது தன்னைப்பற்றி என்ன கூறியிருக்கிறார்? செல்வராஜ் என்ற இந்தப் போலீஸ்காரர் முன்பு இதைப்போலவே பிள்ளையார் வியாபாரம் செய்திருக்கிறார். முதல் வாக்கு மூலத்திலேயே கொடுத்திருக்கிறார். தியாகராயநகரில் உள்ள ஒரு நடிகரின் வீட்டுக்கு யாரோ ஒருவர் பிள்ளையாரை வைக்க வந்தார். பிள்ளையாரைப் பொதுவாகத் திருடித்தான் வைப்பது வழக்கம் என்ற காரணத்தால் அந்த நடிகர் மாம்பலம் போலீஸ் ஸ்டேஷனுக்குப் ஃபோன் செய்தார். பிள்ளையாரைத் திருடிக் கொண்டு வந்தவர், ஃபோன் செய்ததை அறிந்து போலீசார் வந்தவுடன் பிள்ளையாரை அப்படியே ஓரிடத்தில் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தார். அந்தப் பிள்ளையாரை செல்வராஜ் எடுத்துச் சென்று தன்னுடைய வீட்டில் மரத்தடியில் வைத்துக் கொஞ்ச நாள் பூஜை செய்து வந்தார். இன்னொரு பெரியவர் அவரிடம், எச்சம் விழக்கூடிய இடத்தில் பிள்ளையாரை வைத்திருக்கிறாரே, ஏதாவது கோயில் கட்டி வைக்கக்கூடாதா என்று கேட்டார். உடனே, அந்தப் பிள்ளையாரை அவர் தியாகராயநகர் காய்கறி வியாபாரிகளிடம் கொடுத்துவிட்டார். செல்வராஜ் கொடுத்த அந்தப் பிள்ளை யாருக்குத் தியாகராயநகரில் கோயில் கட்டி வைத்திருக்கிறார்கள். இது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது. இந்தச் செய்தி

பத்திரிகையில்கூட வந்திருக்கிறது. செல்வராஜ்தான் இந்தப் பிள்ளையாரைக் கொடுத்தார் என்றுகூட வந்திருப்பதாகக் கவனம்.

பிள்ளையாருக்கும் இந்த கான்ஸ்டபிளுக்கும் நீண்ட நாட்களாகவே தொடர்பு இருந்து வந்திருக்கிறது என்பது நமக்கு நன்றாகத் தெரிகிறது. இன்றைக்குக் கொடுத்திருக்கும் அறிக்கையின்படி கமிஷனருக்கு எழுதிக் கொடுத்திருப்பதில் கூட என்ன சொல்லியிருக்கிறார்?

திரு. கே. வினாயகம் : இதுவரையில் அந்த போலீஸ் காரர் கொடுத்த ஸ்டேட்மெண்ட் அனைத்தும், குமுதத்திற்குப் பேட்டியளித்தபோது குறிப்பிட்டதும்கூட "அண்டர் ட்யூரஸ்" அப்படிக்கொடுத்தார். இப்போதுதான் உண்மையாக மனத்தில் இருக்கும் குழப்பத்தைத் தீர்த்துக்கொள்ள ஸ்டேட்மெண்ட் கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது. முன்பு கொடுத்த ஸ்டேட் மெண்ட்டை இன்றைக்குச் சொல்லுவது வழக்கு மன்றத்தில் எங்களைப் போன்றவர்கள் சொல்ல வேண்டியதாகும். இப்போது அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதை முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : அதே ஆள் நாளையதினம் நேற்று கொடுத்தது மனச்சாட்சிக்கு விரோதமானது என்று சொல்லக்கூடும். தன்னைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் வற்புறுத்தப்பட்டு ஒரு வாக்குமூலம் கொடுக்க ஆளாக்கப் பட்டேன் என்று சொன்னால், அதைப்பற்றி விசாரிக்க வேண்டியது தான். டிப்பார்ட்மெண்டார் அதைப்பற்றி விசாரிப்பார்கள். விஸ்வனாத ஐயர் என்ற இன்ஸ்பெக்டர் தன்னை இப்படியெல்லாம் சொல்லச் சொன்னார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவரும் விசாரிக்கப்படவேண்டியவராக இருக்கலாம். பிள்ளையாருக்கும் இவருக்கும் அதிகத் தொடர்பு இருப்பதினால் அவர், தலைமீது வைத்திருக்கக்கூடும். ஆனால், பிள்ளையார் வந்தது ஏமாற்று வேலை என்பதை யாரும் மறுக்க முடியாது.

இதில் யார் குற்றவாளி என்பதில் வினாயகம் அவர்கள் இந்த ஹெட் கான்ஸ்டபிளுக்காக வாதாடினால் வாதாடட்டும். ஆனால், திடீர்ப் பிள்ளையாருக்காக வாதாட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஹெட் கான்ஸ்டபிள் என்ன சொல்லி

யிருக்கிறார்? பிள்ளையார் விஷயமாக மற்றப் போலீஸ் ஆபீஸர்கள் யாரையும் பிக்சருக்குக் கொண்டுவர வேண்டாம் என்றும், எல்லாம் உன் ஒருவனோடே இருக்கட்டும். நீ ஒன்றும் பயப்படாதே என்றும் விஸ்வனாத ஐயர் இவருக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். அந்த ஹெட் கான்ஸ்டபிள் அப்படி ஒரு ஸ்டேட்மென்ட் கொடுக்க வற்புறுத்தப்பட்டார் என்று சொல்கிறார். இதில் தண்டிக்கப்பட வேண்டியவர் அந்த விஸ்வனாத ஐயரா அல்லது அந்த ஹெட் கான்ஸ்டபிளா என்பதில் வேண்டுமானால் கருத்துவேறுபாடு இருக்கலாம். ஆகவே, அதுகுறித்து அதுபற்றிய விசாரணைக்குப் பிறகு முடிவு எடுத்துக் கொள்ளலாம்.

ஆனால், அங்கே திரும்பவும் பிள்ளையார் வைக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப் பற்றிய பிரச்சினை பற்றி இப்போது நாம் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்படி வைக்க வேண்டிய தேவை இல்லை.

பத்திரிகைகளில் படம் எல்லாம் போட்டார்கள். சுவரொட்டிகள் எல்லாம் போட்டார்கள். பிள்ளையாரை ஜெயிலில் வைத்திருப்பதாகவும் நாவலரை ஒரு போலீஸ்காரர் போலவும், என்னை ஒரு போலீஸ்காரர் போலவும் படம்போட்டு ஊர் எல்லாம் ஒட்டி, தி.மு.க.-வின் சாதனை 3 அல்லது 4 என்று போட்டார்கள். ஆனால் அந்த ஹெட் கான்ஸ்டபிள் அந்தக் குட்டை உடைத்திருக்கிறார். அப் பிள்ளையார் ஜெயிலில் இல்லை. இதுவரை என் வீட்டிலேதான் இருந்தார் என்று அவர் குட்டை உடைத்திருக்கும் வகையில் - அவர் குட்டை உடைத்தது மட்டுமல்ல - சுவரொட்டிகள் போட்டவர்களுக்கும் நல்ல சூடு கொடுத்திருக்கிறார் என்பதில் அந்த ஹெட் கான்ஸ்டபிள் மீது எனக்கு மெத்த சந்தோஷம், நன்றி! பிள்ளையார் ஜெயிலில் இருக்கிறார், ஜெயிலில் இருக்கிறார் என்று பிரசாரம் செய்தவர் களுக்கு சூடு கொடுக்கும் விதத்தில், அந்தப் பிள்ளையார் தன் வீட்டிலேயே இருந்ததாக அந்த ஹெட் கான்ஸ்டபிள் இன்றைய செய்திகளில் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

இப்போது அவருக்குள்ள கவலை, அவர்கள் ஸஸ்பென்ஷனில் வைக்கப்பட்டிருக்கிறார். அது நீக்கப்பட வேண்டும் என்பதுதான். முதலில் 'உங்களுக்காக எது வேண்டுமானாலும் செய்கிறேன்' என்று

அந்த ஹெட் கான்ஸ்டபிள் விஸ்வனாத ஐயரிடம் பவ்யமாகச் சொல்லியிருக்கிறார். இன்ஸ்பெக்டர் விஸ்வனாதனுக்காக அதை ஒப்புக்கொண்டதாக 20-ம் தேதி சொல்லியிருக்கிறார் கமிஷனருக்கு அனுப்பிய கடிதத்தில்! ஆனால் 22-ம் தேதி ஐ.ஜி.-க்கு அனுப்பிய கடிதத்தில், நானும் சில கான்ஸ்டபிள்களும் மேல் நாட்டு மதுபானங்கள் வைத்திருப்பதைக் கண்டுபிடித்து ஒரு கேஸ் போட்டது இன்ஸ்பெக்டர் விஸ்வநாதனுக்குப் பிடிக்கவில்லை என்றும், அதனால் இன்ஸ்பெக்டருக்கு தன்மேல் கோபம் ஏற்பட்டிருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட விசுவநாதன் சொன்னார் என்பதற்காக, உங்களுக்காக எதை வேண்டுமானலும் செய்கிறேன் என்று இவர் எப்படிச் சொல்லியிருக்க முடியும்? ஆகவே, அவர் கூறியிருப்பது ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறது. அவர் முன்பு கொடுத்த வாக்குமூலம் குழப்பமானதா அல்லது அவர் இப்போது கொடுத்திருப்பது குழப்பமானதா என்பது ஆராயப்படவேண்டிய விஷயம்.

அந்தப் பிள்ளையாருக்கு வசூலான பணத்திற்காக ஒரு அதிகாரியைப் போட்டது என்பதினால் அரசாங்கம் அதை அங்கீகரித்ததாகப் பொருள் அல்ல. ஐயப்பனுக்குக் கோவில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்யவேண்டும் என்று நினைத்து, அண்ணங்காராச்சாரியாரின் அறிக்கைக்குப் பிறகு மௌனியாகிவிட்ட ஆசாமி, இப்போது பிள்ளையாரை வைத்துச் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தில் ஈடுபட்டபோது, ரூ. 30,000 வரை சேர்ந்தபோது ஏமாற்று வேலையில் ஈடுபடுகிறவர்களை அங்கே அனுமதித்தால் பணத்தைச் சுருட்டிக்கொண்டு போய்விடுவார்களே என்பதற்காகவே அறநிலைய அதிகாரிகள் அங்கு சென்றார்களே தவிர, அதை அங்கீகரித்து விட்டார்கள் என்று பொருள் அல்ல. அறநிலையத்துறை அந்தப் பிள்ளையாரை அங்கீகரிக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை. மக்களை ஏமாற்றும் நோக்கத் தோடா அல்லது இந்து முஸ்லீம் கலவரத்தை உருவாக்குகிற ஒரு சூழ்நிலையில் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து அந்த இடத்தில் பிள்ளையார் வந்ததாகச் சொன்னார்கள். அப்படியானால் பிள்ளையார் நேரடியாகவே வந்திருக்கலாம். உண்மைப் பிள்ளையாரே வந்திருக்க வேண்டும். அப்படி வருவதை விடுத்து

கல் பிள்ளையார்தான் வரவேண்டுமா? உண்மைப் பிள்ளையாரே வந்திருக்கக்கூடாதா? இதுபற்றிய நீதி விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்கள். விசாரணை வைப்பதற்குத் தயார், பிள்ளையாரே வந்து சாட்சி சொல்வதாகயிருந்தால், மறுமலர்ச்சி யுகத்தில் பல்வேறு நாடுகளும் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் அப்பலோவை அனுப்புவதில் ரஷ்யாவும் அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், 'பார் பார் பிள்ளையார் பார்' என்று 'பட்டணம் பார், பட்டணம் பார்', என்பதைப்போல் சொல்வது சில அரசியல்வாதிகளுக்கு வேண்டுமானால் நல்ல காரியமாக இருக்கலாம். ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் ஆண்டவன் விவகாரத்தில் யார் யாருக்கு நம்பிக்கையிருக்கிறதோ அவர்கள் மனதை புண்படுத்த வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்குக் கிஞ்சித்தும் கிடையாது. ஆனால் ஆண்டவன் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு யார் யார் பித்தலாட்டங்களை செய்ய எண்ணுகிறார்களோ அதை நிச்சயம் அனுமதிக்காது இந்த அரசாங்கம் என்று கூறி, இது குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்கவேண்டிய அவசியம் இல்லை என்று குறிப்பிட்டு அமைகிறேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 13 **நாள் : 26.3.1971**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே அவர்கள், தேர்தலுக்குப் பிறகு ஏற்பட்ட சம்பவங்கள் என்கின்ற பெயரில், எதையும் குறிப்பிட்டுச் சொல்லாமல், பொதுவாக ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தந்து, அதன்மீது சில கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள்.

தேர்தல் முடிந்த பிறகு அனைவரும் சகோதரர்களாகப் பழகிட வேண்டுமென்று, தேர்தலுக்குப் பிறகு எந்தவிதமான கலவரங்களும் நாட்டிலே ஏற்பட்டு, தமிழ்நாட்டினுடைய பண்பாட்டையும், அரசியல் நாகரிகத்தையும் கெடுத்துவிடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கக் கூடாது என்றும் நான் ஓர் அறிக்கை விடுத்ததையும் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆனால், அவர்கள் இங்கே அந்த அறிக்கையைப் புகழ்ந்து பேசினார்கள் என்றாலும், அந்த அறிக்கை மற்ற கட்சிகளினுடைய தலைவர்களால் -அவர்கள் குறிப்பிட்ட ஜனநாயகக் கூட்டணியினுடைய தலைவர்களால்- எள்ளிநகையாடப்பட்டது என்பதைத்தான் நான் இங்கே வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான், முதலமைச்சர் என்ற முறையிலோ அல்லது முற்போக்குக் கூட்டணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவன் என்ற முறையிலோ அந்த அறிக்கையை விடுத்திருந்தாலும், எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும் அதுபோன்றதொரு அறிக்கையை விடுத்திருப்பார்களேயானால், நான் விடுத்த அறிக்கைக்கு மேலும் வலுவளிக்கின்ற வகையிலே அவை அமைந்திருக்கக்கூடும். ஆனால், என்ன காரணத்தாலோ- 4ந் தேதியன்று நான் அறிக்கை விடுக்கிறேன் - 6ந் தேதியன்று மதிப் பிற்குரிய காமராஜ் அவர்களுடைய அறிக்கை வெளிவருகிறது.

எங்கு கலவரம் நடந்தாலும் அதை ஒரு மணி நேரத்தில் எங்களுடைய தொண்டர்கள் சென்று அடக்குவார்கள் என்று 6ந் தேதி அவருடைய அறிக்கை வருகிறது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளால் கலவர எண்ணங்கள் நாட்டில் ஆங்காங்கே தலைகாட்டத் தொடங்கி விட்டன என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. டாக்டர் ஹாண்டே அவர்கள், அவர்களுடைய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிக்காரர்கள் தாக்கப் பட்டதாகக் குறிப்பிட்டார்கள். என்னிடத்தில் இருக்கிற பட்டிய லைப் பார்த்தால் முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்தவர்கள் தான் பல இடங்களில் தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக ஆம்பூர் போன்ற இடங்களில் முஸ்லீம் மக்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக வாக்களித்தவர்களை - முஸ்லீம் மக்களை - தாக்கி, அவர் களுடைய வீடுகளையெல்லாம் தீயிட்டும் சேதப்படுத்தியும் இருக்கிறார்கள். முஸ்லீம்களுடைய குடிசைகள் எல்லாம் தீயிடப் பட்டு, சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

18-3-71ல் தஞ்சை மாவட்டத்திலே உள்ளூர் என்ற ஊரின் பஞ்சாயத்தின் தலைவர்- திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்- கொலைசெய்யப்பட்டிருக்கிறார். இப்படி பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்படியான நிகழ்ச்சிகள் முற்போக்குக் கூட்டணித் தொண்டர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அதே நேரத்தில் சில சம்பவங்கள் அந்தத் தரப்பிலும் நடைபெற்றிருக்கலாம். ஆனால் காவல் துறை யினர் கையைக்கட்டிக்கொண்டு பார்த்துக்கொண்டிராமல் அவ்வப்போது ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். வாக்குகள் எண்ணப்படுவதற்கு முன்னரே எப்படி எப்படி காவல் துறை நடந்துகொள்ள வேண்டுமென்பது குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களையும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் அழைத்துப் பேசி, சுமுகமான சூழ் நிலையை உண்டாக்குவதற்கு எவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்பது குறித்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு அதன் படியே காவல் துறையினரும், மாவட்ட ஆட்சித் தலைவரும் கலந்து பேசி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏதோ

ஒன்றிரண்டு சம்பவங்கள் நடைபெற்றிருந்தாலும்கூட, நாம் அதைப் பொருட்படுத்துவதற்கில்லை.

இந்த நாட்டில் பல ஆண்டுக் காலமாக முடக்கப் பட்டிருந்த ஜாதிப்பிரச்சினை இந்தத் தேர்தலிலே தலைதூக்குவ தற்கான சூழ்நிலையை யார் ஏற்படுத்தினார்கள்? அந்தக் குற்றத்திற்கு யார் பொறுப்பாளி? ''பிராமணர்களாகிய நீங்கள் துணிவானவர்கள், பலவான்கள்'' என்றெல்லாம் பேசப்பட்டது. நேற்று குளித்தலையில் நடந்த ஊர்வலத்தின் போது, அக்ரகாரத்திலிருந்து கற்கள் வீசப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட விஷயங்கள் எல்லாம் கவலையை அளிக்கக்கூடியது. தமிழ்நாட்டிலே போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்த வகுப்புக் கலவரங்கள் அற்ற தன்மை, ஜாதிக் கலவரங்கள் அற்ற தன்மை ஆகியவற்றை என்றென்றும் தொன்றுதொட்டு கடைப்பிடிக்க எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எல்லா கட்சித் தலைவர்களும் பொறுப்புடன் இதிலே ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு வேண்டுகோளாக விடுக்கிறேன். ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் தந்த தீர்மானத்தை விவாதிக்க இந்த அவையை ஒத்திவைக்க வேண்டியதில்லை என்று கூறி முடிக்கிறேன்.

டாக்டர் எச்.வி.ஹாண்டே: தலைவர் அவர்களே, உங்கள் பக்கத்திலே அப்படி இல்லை. இரண்டு மூன்று பேர்கள்தாம் அவதிப்பட்டிருக்கிறார்கள். எங்கள் சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த திரு.பாலகிருஷ்ணன் அவர்கள். 31-வது டிவிஷனைச் சேர்ந்தவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள்.

DR. H.V.HANDE: I am trying to give maximum co-operation. Again the Hon. Chief Minister is trying to bring in communities. we will try to avoid communities. Let us have an understanding.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அந்த வேண்டுகோளைத்தான் எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துச்சொன்னேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்தத் தேர்தலின் போது நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். சேரன்மாதேவி சட்டப்பேரவை உறுப்பினர் அங்குள்ள சூழ்நிலையை எடுத்துச் சொன்ன நேரத்திலே நான் உடனே தொலைபேசி மூலமாக அங்குள்ள அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக 3 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு பாரபட்சமற்ற முறையிலே எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

பாண்டியாறு - புன்னம்புழா

உரை : 14 **நாள் : 2.4.1971**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவரவர்களே, பாண்டியாறு- புன்னம் புழா நதிகளின் நீரை மின்சாரத்திற்குப் பயன்படுத்துவதோடு விவசாயத்திற்கும் பயன்படுத்தலாமா என்று தமிழ்நாடு அரசு யோசித்தது உண்மை. ஆனால் கேரள அரசைக் கலந்து கொள்ளாமல் அந்த முயற்சியில் ஈடுபடவோ, சாலியாறுக்குச் செல்ல வேண்டிய தண்ணீரைத் தடுத்து கேரள மக்களுக்கு பாதகமாக தமிழ்நாட்டு விவசாயத்துக்கு பயன் படுத்திக் கொள்ள, எந்தவித தடுப்புகளை அமைக்கவோ இந்த அரசு முற்படவில்லை.

இதுபற்றி கேரள அரசுக்கு பிப்ரவரி 19-ஆம் தேதியில் தமிழக அரசு ஒரு கடிதம் எழுதியிருக்கிறது. அதில், கேரள அரசுடன் உடன்பாடு ஏற்படும் வரையில் பாண்டியாறு-புன்னம் புழாவிலிருந்து தண்ணீர் திருப்பிவிட மாட்டாது என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறது. என்ன காரணத்தாலோ, அந்தக் கடிதம் கேரள முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்படவில்லை என்று அறிகிறேன். நேற்று, அவர் கேரள சட்டமன்றத்தில் வெளியிட்ட கருத்தினை அறிந்ததும், உடனடியாக நான், அவருக்கு ஒரு கடிதம் எழுதியதோடு அதில் பிப்ரவரி 19-ல் தமிழக அரசு எழுதியுள்ள கடிதத்தையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இது சம்பந்தமாக முதலில் இரு மாநில அதிகாரிகளும் சந்தித்துப் பேசி, பிறகு அமைச்சர்கள் மட்டத்தில் பேசி அதற்குப் பிறகு ஒரு உடன்பாட்டுக்கு வரலாம் என்றும் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன்.

மின்சார உற்பத்திக்குப் பதிலாக பாண்டியாறு- புன்னம் புழா தண்ணீரை நாம் விவசாயத்துக்குப் பயன்படுத்தப் போவதாக கேரள முதல்வர் கூறுவது சரியானதல்ல.

மின்சார உற்பத்திக்குத் தேவையானது போக விவசாயத் திற்குத் தண்ணீரை பயன்படுத்தலாமா என்பதுதான் தமிழக அரசின் எண்ணமாகும். அதனை ஒருதலைப்பட்சமாக நிறை வேற்றும் முயற்சி ஏதும் தமிழக அரசுக்குக் கிடையாது. கேரள அரசிற்கும், நமக்கும் சுமுகமான உறவே இருந்து வருகிறது. அந்த உறவின் அடிப்படையில் இரண்டு அரசுகளும் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதில் எந்தவிதமான சங்கடமும் இருக்காது என்று நான் நம்புகிறேன். பத்திரிகைகளிலே கேரள முதலமைச்சர் அவர்கள் கேரள சட்ட மன்றத்தில் பேசி இருப்ப தாக வந்திருக்கிறது. அந்தச் செய்தியின் அடிப்படையில்தான் நேற்றைய தினம் அவருக்குக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும், மாண்புமிகு சுப்ரமண்யம் அவர்களும் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானத்தை அளித்திருக்கிறார்கள். நானும் அந்த அடிப்படையில் இங்கே எனது பதிலைத் தந்திருக்கிறேன். அவர் என்னென்ன பேசினார் என்பதெல்லாம் அதிகாரப் பூர்வமாக நமக்குக் கிடைத்த பிறகுதான் அதைப்பற்றி முடிவாக நிர்ணயிக்க வேண்டும். என்ன இருந்தாலும் மாநில அரசுகளுக்கு இடையே உறவு நிலையிலே இதைப் போன்ற விஷயங்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளப்படவேண்டியிருக்கிறது. இப்படிப் பேசித் தீர்க்கப்பட வேண்டுமென்பதிலே நாம் ஆழ்ந்த அக்கறை உள்ளவர்கள் என்பதை இந்த மன்றத்திலே உள்ள அனைவரும் நன்கு அறிவார்கள்.

நமது மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், மற்ற மாநிலங்களோடு, பிரச்சினைகளைப் பேசித் தீர்ப்பதிலே எந்த விதமான தவறும் இல்லை என்பதை நான் பொன்னப்ப நாடா ரிடத்திலே மிகுந்த பணிவோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏதோ நடக்கிற அரசு கழக அரசு என்ற காரணத்திற்காக மற்ற மாநில அமைச்சர்கள் நம்மைப் பற்றிச் சொல்லும் செய்திகளை யெல்லாம் தலைப்புக் கொடுத்து வெளியிடுகிற நேரத்திலே

நாங்கள் நாட்டிலே திறமைக் குறைவாக நடந்து கொள்வதாகச் செய்திகளை வெளியிடுகின்றன. அதிலும் குறிப்பாக பொன்னப்ப நாடார் அவர்கள் சார்ந்து இருக்கிற கட்சிப் பத்திரிகை ஏதோ தலைப்புக் கொடுத்து நம்முடைய மாநிலத்தைப் பற்றிக் குறைவாக மதிப்பிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நவசக்திப் பத்திரிகையில் கருணாநிதிக்கு கேரள முதலமைச்சர் எச்சரிக்கை என்று வருகிறது. இப்படிக் கேரள மாநிலத்தில் உள்ள அவர்கள் பத்திரிகைகளில்கூட எச்சரிக்கை விடுவதாக, அந்த மாநிலத்தில் அவர்களுக்கு எதிரான பத்திரிகைகளில்கூட இப்படிச் செய்திகளை வெளியிடமாட்டார்கள். ஆனால் நம்முடைய நாட்டில் நாங்கள் தமிழக அரசில் இருக்கும் ஒரே ஒரு பாவத்தால் எந்த மாநிலத்தில் எந்த அமைச்சர் எந்தச் செய்தியைச் சொன்னாலும் அது எங்களுக்காக விடப்படுகிற எச்சரிக்கையாக்கப்படுகிறது. இன்னும் சொல்லப் போனால் இங்கே உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்தான் அங்கே முதலமைச்சராக இருக்கிறார்கள். இங்கே உள்ள கம்யூனிஸ்ட் பத்திரிகைகளிலே இதைப் போன்ற செய்திகள் வருமா என்றால் வராது. அவர்கள் இந்த மாநிலத்தில் உரிமைகள் என்று வரும்போது இந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக நிற்பார்கள். அந்த அந்த மாநிலத்தின் உரிமைகளுக்காக ஆங்காங்கு இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி வாதாடும். அதே போல்தான் நிஜலிங்கப்பா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இது ஏதோ கழக அரசிற்கு வருகிறது ஆபத்து, அதற்கு மாத்திரம் தருகிற பதில் என்று எண்ணாமல் தமிழ்நாட்டு மக்களின் உரிமை பாதிக்கப்படுகிற நேரத்திலே நாம் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் இயங்க வேண்டுமென்று இதனை எடுத்துக்கூற கடமைப்பட்டு இருக்கிறேன். கேரள அரசுக்கும், நமக்கும் இருக்கிற சுமுகமான சூழ்நிலையை கேரள முதலமைச்சரோடு பேசித் தீர்த்துக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம் என்பதை எடுத்து விளக்க இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவிலே இதை விவாதிக்கத் தேவையில்லை, விட்டு விடலாம் என்று தங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

சேது சமுத்திரத் திட்டம், தூத்துக்குடி துறைமுகம்

உரை : 15 **நாள் : 26.07.1971**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஐயத்தைப் போக்கும் வகையில் நான் தூத்துக்குடித் துறைமுகத் திட்டம், சேது சமுத்திரத் திட்டம் ஆகிய இந்த இரண்டு திட்டங்களைப்பற்றி தற்போதுள்ள நிலைமைகளைச் சற்று விரிவாக விளக்க விரும்புகிறேன்.

தற்போது தூத்துக்குடியில் உள்ள துறைமுகம், இந்தியாவிலேயே மிகப்பெரிதான நடுத்தரத் துறைமுகமாகும். இதனை ஒரு ஆழ்கடல் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும்பொருட்டு 1970-ல் "நடுத்தரத் துறைமுக அபிவிருத்திக் குழு" பரிந்துரைத்தது. ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இத்திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்கு இந்திய அரசு 24.4 கோடி ரூபாய் மதிப்பீட்டுடன் ஒப்புதல் அளித்தது. இத்திட்டம் மத்திய அரசுத் திட்டமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தைத் தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பு சட்டத்தின் 258- பிரிவின் கீழ் இந்திய அரசிடம் ஒப்படைத்துள்ளது. முயல் தீவிற்கு அண்மையில் செயற்கைத் துறைமுகம் ஒன்று அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கடலில் 2,745, 1,275 மீட்டர் பரப்புள்ள இடத்தில் கப்பல்துறை அமைத்தும், கப்பல் போகவும் வரவும் 122 மீட்டர் அகலம் உள்ள வழி அமைத்தும், 1,275 மீட்டர் இடைவெளியிட்டு சுமார் 3,900 மீட்டர் நீளமுள்ள 2 அலைத் தடுப்புச்சுவர்கள் (வடக்கு-தெற்கு) கட்டியும் மேற்படிச் செயற்கைத் துறைமுகம் அமைக்கப்படும். இத்துறைமுகத்தில் கீழ்க்காணும் ஐந்து துறைகளுக்கு இடவசதியளிக்கப்படும் :-

நிலக்கரித் துறை 1
உப்புத் துறை 1

சிமெண்டுத் துறை 1
பொதுச் சரக்குத் துறை 1
கப்பல் பழுது பார்த்தல் சரக்குத் துறை 1

இப்போதைக்கு இவற்றில் ஆழம் 32 அடியாக இருக்கும். பின்னர் 35 அடி அளவிற்கு இவற்றை ஆழப்படுத்த முடியும். பிற்காலத்தில் உரத் துறையில் மேற்கொண்டு போக்குவரத்து ஏற்படுவதையொட்டி உரத் துறைக்காக மேலும் ஒரு இட வசதி ரூ.1.6 கோடி செலவில் கட்டத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திட்டக் குழுவின் போக்குவரத்துப் பிரிவின் தலைமை அதிகாரியான திரு. லூத்ராவும் முன்னாளைய காரியதரிசி திரு.திருமலை, ஐ.ஏ.எஸ். அவர்களும் சேர்ந்து தயாரித்த அறிக்கையின்படி, இத்துறைமுகத்தின் வழியாக கீழ்க்கண்ட அளவு போக்குவரத்து நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:-

1971-72 ..... 22.35 லட்சம் டன்.
1975-76 ..... 35.10 லட்சம் டன்.
1980-81 ..... 44.20 லட்சம் டன்.

இத்திட்டத்திற்கு 1971 மே மாதம் முடிய ரூ.16.827 கோடி (மொத்தம்) செலவாகியுள்ளது. 1972-ம் ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் இரண்டு கப்பல்கள் தங்குமிடங்களையும் 1973 மார்ச் திங்களுக்குள் மற்ற இரண்டு கப்பல்கள் தங்குமிடங்களையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது தெற்கு அலைத் தடுப்புப் பகுதியில் நாள் ஒன்றுக்கு சுமார் 3 ஆயிரம் டன் கற்களும் வடக்கு அலைத் தடுப்புப் பகுதியில் நாள் ஒன்றுக்குச் சுமார் ஒரு ஆயிரம் டன் கற்களும் போடப்படுகின்றன. திட்டமிட்ட நாளுக்கு முன்பாக இத்திட்டத்தை முடிப்பதற்காகக் கற்கள் போடுவதின் அளவை நாள் ஒன்றுக்கு 5,000 முதல் 6,000 டன் வரை அதிகரிக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. போதிய அளவு நிதி ஒதுக்கீடு கிடைத்தால் இத்திட்டம் 1972-73-ல் முடிவு பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேது சமுத்திரத் திட்டம்:-இந்தியாவின் மேற்குக் கரையையும் கிழக்குக் கரையையும் இணைக்கும் கடற்பாதையை மேம்படுத்துவதற்காகவும், அதன் நீளத்தைக் குறைப்பதற்காகவும், மன்னார் வளைகுடாவை வங்காள விரிகுடாவுடன் இணைப்பதுதான் சேதுசமுத்திரத் திட்டத்தின் நோக்கமாகும்.

1965-ம் வருடம் மே மாதம் இந்திய அரசினால் நியமிக்கப் பட்ட தலைமைப் பொறியாளரும், திட்ட ஆலோசகருமான திரு. சி.வி.வேங்கடேஸ்வரன் இத்திட்டம் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை நடத்தினார். ஆய்வுகளை முடித்து இதுகுறித்து இவரும் முன்னாளைய திட்ட அதிகாரி திரு.ஆர்.நடராசன், ஐ.ஏ.எஸ்., அவர்களும் சேர்ந்து தயாரித்த விரிவான அறிக்கை ஒன்றை முன்னாளைய இந்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் அவர்களிடம் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் சமர்ப்பித்தனர். இவ்வறிக்கையில் சேது சமுத்திரத் திட்டம் பொருளாதார ரீதியிலும், தொழில் நுட்ப வகையிலும் இயன்ற ஒன்றாகும் என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டுள்ளது. பல இணைப்புகளை ஆராய்ந்ததில் இராமேஸ்வரம் இணைப்பும் மண்டபம் இணைப்பும் சிறந்தவை என்று கண்டறியப்பட்டது. இவ்விரண்டு இணைப்புகளில் இராமேஸ்வரம் இணைப்பில் நீளமும் செலவும் குறைந்ததாக இருக்கிறது, எனவே இராமேஸ்வரம் இணைப்பே சிறந்தது என்று இவ்வறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டின் திட்ட மதிப்பீடு முறையே ரூ.37.50 கோடி, ரூபாய் 55.00 கோடியாகும். திட்ட அறிக்கையைக் கூர்ந்து நோக்கினால் இத்திட்டம் தொழில் நுட்ப வகையில் இயன்ற ஒன்றாகும் என்பதும், பொருளாதார வகையில் சாத்தியமானது என்பதும், வியாபார ரீதியில் இலாபகரமானது என்பதும், அரசியல் ரீதியில் மதிநுட்பம் வாய்ந்தது என்பதும் சந்தேகத்திற்கிடமின்றிப் புலனாகும்.

இத்திட்டம் பேராசையானது என்றும், பொருளாதார ரீதியில் இயலாத ஒன்று என்றும் "மக்கள் சபை மதிப்பீட்டுக்குழு" குறிப்பிட்டுள்ளதென்று சொல்லப்பட்டது. இது இப்பொழுது கூறியதல்ல, 1969-ல் சொல்லப்பட்டது. அதற்குப்பின் நிலை எவ்வளவோ மாறிவிட்டது. அப்பொழுது "மெட்ராஸ் ஔட்டர் ஆர்பர்" திட்டமோ அல்லது தூத்துக்குடித் துறைமுகத் திட்டமோ இதில் ஏதாவது ஒன்றுக்குத்தான் அனுமதி வழங்க முடியுமென்று மத்திய அரசு கூறிற்று. ஆனால் இந்த அரசின் முயற்சியால் இவை இரண்டிற்குமே அனுமதி பெறப்பட்டு, இப்பொழுது வேலை நடைபெற்று வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சேது சமுத்திரத் திட்டம் முடிந்தவுடனேயே அதிக வருவாயுள்ளதாக அமைவதுடன், பின்வரும் ஒவ்வொரு

ஆண்டிலும் இரட்டிக்கக்கூடியதுமாகும். இதனால் கிடைக்கக்கூடிய வருவாயில் பெரும் பங்கு அயல்நாட்டு நாணய மாற்றாக இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இது குறித்து ஏற்கனவே கூட்டுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு.ஆதித்தனாரும், பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.சாதிக் பாட்சாவும், மத்திய அமைச்சர் மாண்புமிகு திரு. இராஜ்பகதூர் அவர்களுடன் நேரில் கலந்துரையாடியதில் மத்திய அமைச்சர் இத்திட்டத்திற்குப் பேராதரவு தருவதாகவும் வாக்களித்துள்ளார். ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் திட்டத்திற்கும் தகுந்த முதன்மையிடம் அளிக்குமாறு மத்திய அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்களையும் இவ்வரசு கேட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதித்து விவாதித்திடத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இராமனாதபுரம் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 16 நாள்: 8.12.1971

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே நம்முடைய நண்பர் திரு.சுப்பு, எம்.எல்.ஏ. அவர்கள் இருக்கின்ற பகுதியில் ஏற்பட்டுள்ள கலவரங்கள் குறித்து அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பு அவர்கள் வைத்து, அதன் தொடர்பாக சில விஷயங் களைப் பேசியிருக்கிறார்கள். அநேகமாக இப்போது பேசிய அதே பாணியில்தான் திரு. சுப்பு அவர்கள் மேடையிலும் பேசுகிறார்கள். அவர்கள் ஏதோ அமைச்சர்கள் இப்படிப் பேசுகிறார்கள், கட்சித் தலைவர்கள் இப்படிப் பேசுகிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள்.

இன்றைக்கு கம்யூனிஸ்ட் கட்சி தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட, திராவிட முன்னேற்றக் கழகத் தோழமையி லிருந்து கம்யூனிஸ்ட் கட்சி பிரிந்துவிடக்கூடிய சூழ்நிலை ஏற்படுமானால், அந்த நல்ல காரியத்தை நண்பர் திரு.சுப்பு போன்றவர்கள் செய்தார்கள் என்பதை இந்த உலகம் அறியும். அந்த அளவுக்கு நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.சுப்பு அவர்கள் மேடைகளிலும் பேசுகிறார் என்பதைக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவருடைய பேச்சுக் குறிப்புகள் அவ்வப் போது தொகுத்து வரப்பெற்று, அதைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கிருக்கிறது என்பதை இந்த அவையும் அறியும்; நாமும் அறிவோம்.

திரு.சுப்பு அவர்கள் யாரோ ஒருவர் அவரைப்பற்றிப் பேசியதாக, குறிப்பாகச் சொன்னார்கள். அவர்கள் அமைச்சர் களைப் பற்றியும், தி.மு.க.கழக மாவட்டச் செயலாளர்களைப்

பற்றியும், அவர்களுடைய ஜாதியைப் பற்றியும், குறிப்பாக என்னைப் பற்றியும், என் ஜாதியைப் பற்றியும் எந்த அளவுக்குக் கீழ்த்தரமாகப் பேசிவருகிறார்கள் என்பதை நான் அறிவேன். ஆனாலும் இங்கே குறிப்பிடப்பட்ட கருத்துக்களைப் பற்றி காவல் துறையினர் எந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் என்பதை, அவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பி யுள்ள காரணத்தால் இங்கே வைப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

சென்னை மேயர் கலந்து கொண்ட ஒரு பொதுக்கூட்டத் தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் கல் வீசி யிருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி என்று நான் சொல்லும்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிலே உள்ள அத்தனைபேரையும் குறிப்பிடுவதாகத் தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது. திரு.சுப்பு போன்ற கம்யூனிஸ்ட் கட்சியினரைக் குறிப்பிடுகிறேன்.

திரு.கே.டி.கே.தங்கமணி: சுப்பு கட்சி என்று தனியாக ஒரு கட்சி கிடையாது. எல்லாம் ஒரே கட்சிதான்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: சேர்ந்துக் கொள்வதாக இருந்தால் நான் வருத்தப்படவில்லை. கூட்டத்திலே கலவரம் செய்து, கல்வீசி, சென்னை மேயரின் மீது கல் வீசியதன் தொடர்பாக 27 கம்யூனிஸ்ட் கட்சியினர் அங்கே கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

22-10-71ல் சத்திரப்பட்டியில் நடைபெற்ற கலவரத்தின் காரணமாக 6 கம்யூனிஸ்ட் கட்சியினரும், 9 தி.மு.க.-வினரும் காயமடைந்தார்கள். இதுபற்றி வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டிருக்கிறது. மற்றும் அதே பகுதியில் 17 கம்யூனிஸ்ட் கட்சியினரும், 14 தி.மு.க-வினரும் கைது செய்யப்பட்டு, கோர்ட்டிலே வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

12-11-71 அன்று ஊத்துப்பட்டி கிராமத்தில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 7 கம்யூனிஸ்ட் கட்சியினர் மீதும், 5 தி.மு.க.வினர் மீதும் குற்றப்பத்திரிகைகள் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. இதை வைத்துக்கொண்டு பார்த்தால் இருதரப்பிலும் கலவரங்களில் ஈடுபட்டவர்கள் யாராக

இருந்தாலும் கட்சி வேறுபாடு இல்லாமல் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக் கின்றன. இதில் தி.மு.க.-வை விட்டுவிட்டு கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் கைது செய்யப்பட்டார்கள் என்று சொல்வது எவ்வளவு தவறானது என்பதற்கு நான் தெரிவித்த புள்ளி விவரங்களே போதுமான சான்றாகும் என்று கருதுகிறேன். அவர்கள் சொன்னதைப்போல அந்தக் காலத்து முதுகுளத்தூர் எதுவும் அந்தப் பகுதியில் நடந்துவிடவில்லை. ஏதோ ஆங்காங்கு திரு. சுப்பு அவர்களின் பேச்சின் தொடர்பாக சில சம்பவங்கள் ஏற்பட்டிருக்கின்றன. சிறுசிறு கலவரங்கள் ஏற்பட்டன என்றாலும் காவல்துறையினர் அவ்வப்போது கண்காணிப்புடன் இருந்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கட்சி வேறுபாடு இல்லாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே, இதைப்பற்றி விவாதிக்க அவையை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டம்

உரை : 17 **நாள் : 17.3.1973**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புப் பிரச்சினையைக் கொண்டுவந்த கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் இது தீராத பிரச்சினை என்று குறிப்பிட்டார்கள். இது தீராத பிரச்சினை அல்ல; ஏற்கனவே தீர்த்து வைக்கப்பட்ட பிரச்சினையை வைத்துக்கொண்டுதான் பட்டதாரி ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். இந்த அவையிலும், மேலவையிலும் நானும் மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்களும் இந்தப் பிரச்சினை குறித்து, அரசு எந்த அளவுக்கு அக்கறை எடுத்துக்கொண்டது என்பதையும் எத்தனை முறை ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளோடு நாங்கள் பேசியிருக்கிறோம் என்பதையும் இறுதியாக அவர்கள் போராட்டம் தொடங்குவதற்கு முன்புகூட, மேலவையிலும், பேரவையிலும் அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்பட்டுவிட்டன என்பதை எடுத்துக் காட்டியும் அதிலே அவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைப் போக்குவதற்காக மீண்டும் அழைத்து அந்தச் சந்தேகத்திற்கான விளக்கங்கள் எல்லாம் அளிக்கப்பட்டன என்பதையும் வெகு விரிவாக நாங்கள் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

அதற்குப் பிறகும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். அவர்கள் போராட்டத்தை நிறுத்துவதாகச் சொல்லவில்லை. முதல் அமைச்சர் அவர்கள் அப்படிச் சொல்வது தவறு என்றெல்லாம் கூறினார்கள். போராட்டத்தை நிறுத்துவதாகச் சொல்லித்தான் சென்றார்கள் என்று மேலவை உறுப்பினர் திரு. ராஜா ஐயர் அவர்கள் அங்கு எழுந்து சாட்சியம்கூட அளித்

தார்கள். இவ்வளவுக்கும் பிறகும் போராட்டம் நடைபெற்றிருக் கிறது. திரு. தங்கமணி அவர்கள் சொன்னதைப்போல் இதில் அரசு ஏதோ விடாப்பிடியாக இருக்கவேண்டும் அல்லது கௌரவப் பிரச்சனையாகப் பார்க்க வேண்டும் என்பதல்ல. ஆசிரியர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும் இது போன்ற ஒரு கிளர்ச்சியில் ஈடுபடுவது ஆட்சிப் பொறுப்பில் எந்தக் கட்சி இருந்தாலும் எதிர்காலத்தில் வளரவேண்டிய சமு தாயத்திற்கு அது உகந்ததாக இருக்காது என்ற உணர்வைத்தான் நான் பலமுறை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். ஆனால் பொறுப்புமிக்க எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்து பேசி ஒரு முடிவு காணவேண்டும் என்று தங்கமணி அவர்கள் கூறினார்கள்.

இன்று காலையில்கூட பொறுப்பு மிக்க தலைவர்கள் சிலர் என்னை என் இல்லத்தில் சந்தித்தார்கள். காலையில் தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர்கள் கழகத்தின், இன்று அந்தப் போராட் டத்தை நடத்துவதற்காக அமைக்கப்பட்டிருக்கிற திரு. மயில்சாமி அவர்களும், சிங்காரவேலு அவர்களும் கையெழுத்திட்டு என்னிடத்தில் காலையில் ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கையின்படி போராட்டத்தை அவர்கள் நிறுத்தி விட்டதாகக் கூறியிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.) அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது, ‘‘5-3-1973-ல் இருந்து தமிழ்நாடு பட்டதாரி ஆசிரியர் கழகம் நடத்திவரும் நேரிடை நடவடிக்கை தொடர்பாக 16-3-1973 வெள்ளியன்று கூடிய நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவை அரசிற்குச் சமர்ப்பிக்கின்றது’’ என்று தொடங்கி, ‘‘1-4-1970-க்குப் பிறகு பணியில் சேர்ந்த பட்டதாரி ஆசிரிர்களின் பணிவரை முறைப்படுத்தப்படுவது பற்றிய தமிழக அரசின் ஆணைக்கும், 10 ஆண்டுகள் பணி புரிந்த பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு நிலை பெற தகுதி உடையோர் ஆவர் என்ற அரசின் அறிவிப்பிற்கும், தமிழக அரசின் விளக்கங்கள் திருப்தியளிப்பதாக இருப்பதாலும்,

இணைப்பு சம்பந்தமான முயற்சியில் அரசு ஈடுபடும் வகையில் அதன் கவனத்தை ஈர்ப்பதில் நமக்கு வெற்றி கிடைத்திருப்பதாலும், தனியார் துறை பள்ளி ஆசிரியரின் பணிப்பாதுகாப்பிற்கு வகை செய்யும் விதத்தில் மசோதா இறுதி வடிவமாகி சட்டமன்றத்திற்கு வர இருப்பதாலும்,

மற்றக் கோரிக்கைகளைக் கவனிப்பதற்கான அரசின் கவனத்தை ஈர்க்க இதுவரை நடத்திய நடவடிக்கை போதுமானது என நடவடிக்கைக் குழு கருதுவதாலும் என்று சில கருத்துக்களைத் தொடர்ந்து சொல்லி போராட்டத்தை நிறுத்திக் கொள்கிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதில் கையெழுத்து இட்டிருப்பவர்கள் திரு. மயில்சாமி, திரு. சிங்காரவேலு என்ற நடவடிக்கைக் குழுவில் உள்ளவர்கள்.

அந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிற மற்றும் சிலர் திரு. ராஜா ஐயர், எம். எல். சி., திரு. சுவாமிநாதன், எம். எல். சி., திரு. கணபதி, எம். எல். சி., ஆகியோர் கையெழுத்திட் டிருக்கிறார்கள். இந்த அறிக்கையை என்னிடத்தில் தருகிற நேரத்தில் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும் உடன் இருந்திருக்கிறார்கள். இவ்வளவு சாட்சியங்களோடு இப்படி ஒரு அறிக்கை என்னிடம் தரப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (ஆரவாரம்).

இதைத் தெரிவிப்பதோடு அவர்கள் போராட்டத்தை அவர்களே முன்வந்து நிறுத்திக் கொண்டதற்காக எனது மகிழ்ச்சியை அறிவிக்கிறேன். போராட்டத்தில் ஒரு பகுதியினர் ஈடுபட்டாலும் கடமையுணர்ச்சியோடு மற்றொரு பகுதியினர் தொடர்ந்து பணியாற்றி வந்தமைக்கு எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் அந்த ஆசிரியப் பெருமக்களுக் கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட சிலர் தங்கள் செயலுக்காக வருந்தி கடிதம் எழுதித் தந்து மீண்டும் தொடர்ந்து பணிபுரிய

வந்திருப்பதற்காக அவர்களது கடமையுணர்ச்சியையும் நான் வரவேற்கிறேன். அதேபோல் போராட்டத்தில் ஈடுபட்ட மற்ற ஆசிரியர்களும் கடமை உணர்வோடு பணியாற்ற முன் வருவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். போராட்டத்தை அவர்கள் நிபந்தனையின்றி எல்லாக் கட்டத்திலும் வாபஸ் பெற்றுக்கொண்ட காரணத்தினால் சிறையில் உள்ள ஆசிரியர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்). இதற்கு மேல், அவையை ஒத்திவைத்துப் பேச எதுவும் இல்லை என்பதை தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி: முதலமைச்சர் அவர்கள் சொன்னதில் மகிழ்ச்சியடைபவர்களில் நானும் ஒருவன். சாதாரணமாக ஒரு போராட்டம் முடிகிறபோது ஒரு க்ளாஸ் எப்போதும் சேர்ப்பது உண்டு என்று சொல்லி. ''No action of any sort will be taken against anybody for taking part in the struggle in any form''

அதாவது எந்தவிதமான 'விக்டிமைசேஷனும்' இருக்கக் கூடாது. அவர்களுடைய சர்வீஸ் பாதிக்கக்கூடிய முறையில் மற்றவைகள் இருக்கக்கூடாது. இன்று சிலர் கடமையுணர்ச்சி யோடு வந்தார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். நாங்கள் அம்மாதிரியாக-போராட்டம் நடக்கிறபோது அவர்கள் வந்து வேலை செய்கிறார்கள் என்றால் அவர்களைக் கடமையுணர்ச்சி உள்ளவர்கள் என்று நாங்கள் எல்லாம் கருதுவதில்லை. அப்படி முதல் அமைச்சர் அவர்கள் கருதுவதாக இருக்கலாம். அவர்களை எல்லாம் நாங்கள் வேறு முறையில்தான் கருதுவது வழக்கம். அவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படக் கூடாது, எடுக்கப்பட மாட்டாது என்ற உத்தரவாதம் வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது அரசாங் கமும் ஆசிரியர்களும் உட்கார்ந்து செய்துகொண்ட ஒப்பந்தம் அல்ல. அப்படி ஒப்பந்தமாக இருந்தால் இரண்டு பேர்களும் கூடக் கையெழுத்துப் போட்டு இன்னின்ன நடவடிக்கைகள்

எடுக்கப்பட மாட்டாது, ஆகவே வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விடுங்கள் என்று சொல்லாம். அவர்களாகவே நாங்கள் போராட்டத்தைக் கைவிட்டு விட்டோம் என்று அவர்களாகவே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே தாங்களாக போராட்டத்தை கைவிட்டுவிட்டதாக எழுதிக்கொடுத்திருப்பதால் அரசே யாரையும் கேட்காமல் அவர்களையெல்லாம் இன்று மாலை விடுதலை செய்துவிடலாம் என்றிருக்கிறது.

அவர்களின் பேரில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றார்கள். இந்த அரசு யாரையும் பழி வாங்கிப் பழக்கப் பட்டதல்ல. சேலத்தில் நடைபெற்ற கைத்தறியாளர்கள் மறியல் போராட்டத்தில்கூட விடுதலையானவர்கள் போக மறியலில் ஈடுபட்டுத் தண்டிக்கப்பட்டவர்கள் சிறையிலே இருந்தார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. ஏ.ஆர். மாரிமுத்து அவர்களும் என்னிடம் அதைப்பற்றிச் சொன்னார்கள். அவர்களை எல்லாம் விடுதலை செய்து விடலாம் என்று. 300, 400 பேர்கள் இருப்பார்கள். அவர் களையெல்லாம் விடுதலை செய்யச் சொல்லி நேற்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே யாரையும் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இல்லை.

கடமையுணர்ச்சியோடு வந்தவர்களுக்கு அவர்கள் வைக்கும் பெயர் வேறு என்று சொன்னார்கள். அவர்கள் அவர்க ளுடைய அகில உலகக் கண்ணோட்டத்தில் அந்தப் பெயர்களை எல்லாம் வைப்பார்கள். ஆனால் நாங்கள் தமிழ்நாட்டு பண்பாட்டுக் கண்ணோட்டத்தோடு அவர்கள் கடமையுணர்ச்சி யோடு பணியாற்றினார்கள் என்றுதான் நாங்கள் அதற்குப் பெயர் வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம். யாரையும் அரசு பழி வாங்க முயலவில்லை. அப்படிப் பழி வாங்கும் எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது.

ஆசிரியர்கள் பிரதிநிதிகளோடு, மேலவை உறுப்பினர்கள் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும்கூட அவற்றைப்பற்றிக் கூறியிருக் கிறார்கள். அவர்கள் விடுதலை பெற்ற பிறகு அந்த ஆசிரியர்

சங்கப் பிரதிநிதிகள் என்னையும், கல்வி அமைச்சர் அவர்களை யும் சந்திக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சந்திக்கத் தயாராகயிருப்பதாகச் சொல்லியிருக்கிறோம். அப்படிச் சந்திக்கும்போது எவை எவை எப்படிப் பேச வேண்டுமோ அப்படிப் பேசி அந்தப் பிரச்சனைகள் தீர்க்கப்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

அரிசி உற்பத்தி பற்றிய பிரச்சினை

உரை : 18 நாள்: 4.8.1973

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிகளினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும் கொடுத்துள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது உணவு அமைச்சர் அவர்கள் பல விளக்கங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். முதலிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒன்றரை லட்சம் டன் அரிசி உற்பத்தி செய்யப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் அனைவருமே அரிசியை உண்பவர்கள் என்று கணக்கு எடுத்துக் கொண்டாலும். தேவை ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற விவரம் நம்மிடத்திலே இருக்கின்றது. தேவை ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம் டன்களுக்கு மேற்படாது என்ற நிலையிலே ஒன்றறை இலட்சம் டன்கள் ஆண்டொன்றுக்கு உற்பத்தி செய்யப்படுகிறது என்பது நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். இந்த அடிப்படையிலே இன்றைக்குக் கன்னியாகுமரி மாவட்டத்திலே எழுந்துள்ள பிரச்சினையை அணுகுவது சரியானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்கு அங்கே அரிசி குறித்து, விலையேறி விட்டது என்றும், கிடைக்கவில்லை என்றும் கூறப்பட்டு, சில அரசியல் கட்சிகள் அங்கே போராட்டங்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு பழைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டம் பழிவாங்கப்படுகிறது என்ற பழிச்சொல்லை இந்த அரசின் மீது தொடர்ந்து சுமத்தி வருகிறார்கள். கன்னியாகுமரி

மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு உருவான தற்குப் பிறகு எந்தெந்த வகையிலே மிக ஆர்வத்தோடு அங்கே யுள்ள பிரச்சனைகள் கவனிக்கப்பட்டு வருகின்றன என்பதைப் புள்ளி விவரங்களோடு எடுத்துச்சொல்ல முடியும். அண்மை யிலே இரண்டு, மூன்று திங்களுக்கு முன்பு மீனவப் பெருமக்கள் உணவு நிலைமையிலே- வழக்கமாக அவர்கள் புசிக்கின்ற கிழங்குகள் அவர்களுக்குக் கிடைக்காமல் போனபோது-நான்கு வாரங்களுக்குக் கிட்டத்தட்ட 18 ஆயிரம் மீனவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய நிலத்தீர்வை தமிழ்நாட்டோடு நீண்ட நெடுங்காலமாக இணைக்கப்பட்டு ஒருமித்த ஒரு நிலை ஏற்படவில்லை என்ற அந்த மாவட்டத்தினருடைய குறைபாட்டை அண்மையில் போக்கும் முறையிலே சில திருத்தங்களைச் செய்து தமிழ் நாட்டோடு இணைக்கும் வகையில் அந்த நிலத் தீர்வையை எடுத்த முயற்சியில் ஏற்கெனவே ஐந்தாறு ஆண்டுக்காலமாக விவசாயிகள் கட்டவேண்டிய பாக்கி ஏறத்தாழ 23 இலட்சம் ரூபாய் இருந்தது. அதைக் கன்னியாகுமரி மாவட்டத்திலேயுள்ள விவசாயமக்களுக்குத் தள்ளிக் கொடுத்துவிட வேண்டும், அதை அரசு வற்புறுத்தக் கூடாது என்று சொன்ன அந்த மாவட்ட மக்களின் யோசனையையும் அரசு ஏற்றுக்கொண்டு அதையும் தள்ளிக் கொடுத்திருக்கிறது.

நான் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றபொழுது அங்குள்ள சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப் பினர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் என்னைச் சந்தித்தார்கள். நண்பர் ஜேம்ஸ் அவர் களும் சந்தித்தார்கள். சந்தித்து, அங்குள்ள சில இடங்களிலே உணவு பகிர்ந்தளிக்கப்படுவதில்லை என்று சில குறைபாடு களைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு நேராகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அழைத்து உடனடியாக அனைத்துக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், அங்குள்ள ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் அனைவரையும் கூட்டிவைத்து நீங்கள் ஒரு முடிவு செய்து எந்த வகையிலே அரசு இங்கே இந்த அரிசி நிலைமை

யிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். நாங்கள் உடனடியாகத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று அவர்களிடத்தில் சொல்லிவிட்டு வந்தேன். அதற்குப் பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்னிலையில் எல்லாக் கட்சித் தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஒருங்குகூடிச் சில முடிவுகளை எடுத்து அரசுக்கு அனுப்பினார்கள். அவைகளைப்பற்றி அங்குள்ள நிலைமைக்கேற்றவாறு அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது என்பதையும் யாரும் மறுக்க இயலாது. பல்வேறு கோரிக்கைகள் அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வரிசையாகச் சொல்லவேண்டுமென்றால், முதலிலே, முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறை உள்ள இடங்களில் அரிசியின் அளவை வயது வந்தவர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 1500 கிராம் ஆகவும், சிறுவர்களுக்கு 800 கிராம் ஆகவும் உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை தரப்பட்டது. இக்கோரிக்கையை மார்ச் திங்களில் இந்த விகிதப்படி முறைப்படுத்தப்பட்ட பங்கீட்டு முறையுள்ள இடங்களில் அரிசி வழங்க வேண்டுமென்று அரசு ஏற்று நடவடிக்கை எடுத்தது. ஆகவே புறக்கணிக்கப்படவில்லை, கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்படவில்லை என்பதற்கு இது முதல் உதாரணம்.

பிறகு, அடுத்த கோரிக்கை, நாகர்கோவிலிலிருந்து கல்குளம் வட்டத்திற்குக், கொண்டுவரப்படும் அரிசியின் விலை யைச் சரிப்படுத்த வேண்டும் என்பது. இந்தக் கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு கோட்டாறுச் சந்தையிலிருந்து கல்குளம் வட்டத்திற்கு எடுத்துச் செல்லப்படும் அரிசி, விற்பனை விலை இவற்றினை நிர்ணயித்தும் அவற்றினைக் குடும்ப அட்டைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யவும் மாவட்ட ஆட்சியாளருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதுவும் நடைமுறைப்படுத்தப் பட்டது.

மூன்றாவது கோரிக்கையாக முறைப்படுத்தப்பட்ட விநி யோக முறையைக் கல்குளம் வட்டம் முழுவதுக்கும் அல்லது பற்றாக் குறையுள்ள கிராமங்களிலாவது விஸ்தரிக்க வேண்டும் என்ற எச்சரிக்கை இருந்தது. அதற்கு, கல்குளம் வட்டத்தில் நெல்

உற்பத்தி செய்கிறவர்கள் தவிர மற்றவர்களுக்குக் குடும்ப அட்டைகள் மூலம் அரிசி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நான்காவது கோரிக்கை, சுய தேவைக்கு எடுத்துச் செல்லும் அளவு, அரிசி, நெல் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடு தளர்த்தப்பட வேண்டுமென்பது. அதையும் அரசு ஏற்றுக் கொண்டு, சுய தேவைக்கு எடுத்துச்செல்லும் சிறு அளவு அரிசி, நெல் இவைகளுக்குக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டது. ஆனால் இவ்விதம் கொண்டு செல்லும் அரிசி, நெல் அளவினைக் குடும்பக் கார்டுகளில் பதியும்படியும் ஆணையிடப்பட்டது.

இப்படி வரிசையாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் இடையிலே உணவு அமைச்சரவர்களை ஜூன் மாதத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று அவைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்கள் அதிகாரிகளோடு கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்றார்கள். அங்கேயுள்ள எல்லாக் கட்சிச் சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் ஆகியவர்களோடு கலந்து உணவு அமைச்சரவர்கள் பேசி மிக முக்கியமாக எல்லையிலும், உள்பகுதியிலும் அமல் செய்யப்படும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள், கேரள மாநிலத்திற்கு அரிசி கள்ளக் கடத்தல் மூலம் கொண்டு செல்வதைத் தடுப்பதற்காக மிக அவசியம் என்றும், அவற்றை நீக்கினால் இம் மாவட்டத்தில் உணவு நிலைமை சீர் அழியும் என்றும் சுட்டிக்காட்டினார். அமைச்சர் வெளியிட்ட கருத்தினையும் அப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுதும்கூட பழைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினராக உள்ளவர்கள் எல்லையிலே இருக்கும் செக் போஸ்டை எடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கவில்லை. ஆகவே, அமைச்சரின் கருத்து அப்பொழுது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு.ராஜாராம் நாயுடு அவர்களும். திரு.ஜேம்ஸ் அவர்களும் உணவு அமைச்சரைச் சந்தித்து, தற்பொழுது வழங்கப்படும்

1,500 கிராம் அரிசி போதவில்லை என்றும், அதை அதிகரிக்க வேண்டுமென்றும் கூறினார்கள். அதை அரசு உடனடியாக ஏற்று வயது வந்தவர்களுக்கு 1,800 கிராமும், சிறுவர்களுக்கு 900 கிராமும் வழங்க அதற்கான ஆணையைப் பிறப்பித்தது. ஆகவே, எடுத்துச் சொல்லும் விஷயம் எதுவும் புறக்கணிக்கப் படவில்லை என்பதற்காகத்தான் இவைகளைக் கோடிட்டுக் காட்டினேன்.

அடுத்து, கார்டுகள் வழங்கப்படுவதில் சீர்திருத்தம் தேவை. கார்டுகள் வழங்கப்படவில்லை என்ற கருத்து சொல்லப்பட்டது. உங்களுக்கு ஒரு விவரத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அங்கு ஜனக்கணக்கெடுப்புப்படி மக்கள் தொகை 12½ இலட்சம் பேர். ஆனால் வழங்கப்பட்ட அட்டைகள்படி மக்கள் தொகை 13¾ இலட்சம் பேர். 12½ இலட்சம் பேர் 13¾ இலட்சம் கார்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அவைகளில் என்னென்ன தவறுகள் ஏற்பட்டிருக் கின்றன என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டு இப்பொழுது அந்தக் கார்டுகளில் கிட்டத்தட்ட 10,000 முதல் 12,000 கார்டுகள் வரையில் நீக்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்து முயற்சி செய்யப் படுகிறது. 2,000 கிராம் அரிசி கொடுக்கப் பட்டிருக்கிறது என்றாலும், சில இடங்களில் தரப்பட வில்லை, அதற்கு அதிகாரிகளே காரணம் என்றாலும் அவைகளெல்லாம் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமே அல்லாமல் போராட் டத்தின் மூலம் தீர்த்துக்கொள்ளப்பட வேண்டிய விஷயம் என்று நான் கருதவில்லை. ஏனென்றால் பலமுறை பேசிப்பேசி, நான் பழைய காங்கிரசை மட்டும் சொல்லவில்லை, அ.தி.மு.க. கம்யூனிஸ்ட் கட்சி, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் என்னிடத்திலேயும், உணவு அமைச்சரிடத்திலேயும், அதிகாரி களிடத்திலேயும் பேசியிருக்கிறார்கள். அந்த வகையில் பேசித் தீர்க்கும் ஒரு பிரச்சினையாக நான் இதைக் கருதுகிறேன்.

திடீரென்று போராட்டம் தொடங்கியது. அம்மையார் அவர்கள் சொன்னார்கள், சிலரைப் பிடித்து விட்டு விடு கிறார்கள், சிலர் உள்ளேயே வைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். திரு.பொன்னப்ப நாடார் அவர்கள் அப்படி

யெல்லாம் இல்லை என்று சொன்னார்கள். இப்படி இது இங்கே மட்டும் நடைபெறுவதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தி லேயும் எதிர்க்கட்சிகளுக்கிடையே இப்படிப்பட்ட ஒரு போட்டி யிருக்கிறது. அந்தக் கட்சி சோடையான கட்சி, இந்தக் கட்சி வீரம் நிறைந்த கட்சி என்று நான் குறிப்பிடவில்லை. அப்படிப்பட்ட பிரச்சாரம் அங்கே நடக்கிறது. நேற்று நான் குறிப்பிட்டதைப் போன்று அந்தப் போட்டி அரசாங்கத்தோடு போராடுவதில் யார் தீவிரமாக இருக்கிறார்கள் என்ற நிலைமையை உருவாக்கி விடுமோ என்று நான் ஐயறுகின்றேன். முதலிலே 19ஆம் தேதி போராட்டம், மறியல் போராட்டம் நடைபெற்றது. 19-ஆம் தேதி முதல் 27-ஆம் தேதி வரையில் 117 பேர்கள் கைது செய்யப் பட்டார்கள். அவர்கள் 27ஆம் தேதி வரையில் சிறையில் வைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. மறியல் செய்யும் காரணத்தினால் போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவும், அலுவ லகத்திற்கு வருகின்றவர்களுக்கு இடைஞ்சலாகவும் இருக்கும் என்ற முறையில் உடனடியாக அவர்கள் அகற்றப்பட்டுக் கைது செய்யப்பட்டு, மாலையிலேயோ அல்லது மறுநாள் காலையி லேயோ விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அதைப் போலவே திரு.பொன்னப்ப நாடார் போன்ற பழைய காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களும் அ.தி.மு.க.வை சேர்ந்தவர்களும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்தவர்களும்...

திரு.கே.ஏ.மதியழகன்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றுதான் கட்சியிருக்கிறது. திரும்பத்திரும்ப அ.தி.மு.க. என்று சொல்கிறார்களே.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: ஹாண்டே அவர் களுக்கு ஏ.டி.எம்.கே. என்றுதான் சொன்னார்கள்.

திரு. கே.ஏ. மதியழகன்: நானும் திருவாரூர் முன்னேற்றக் கழகம் என்று சொல்லுவேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கிறது. அ.தி.மு.க. என்று சொல்வது அதுவும் பெரிய இடத்தில் உள்ள முதலமைச்சர் கூறுவது முறையல்ல. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள

மக்களுக்கு சோறுதான் போடவில்லை என்றாலும் பெயரைச் சாப்பிட்டு விடுகிறீர்களே.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: அண்ணாவை நான் சாப்பிட மாட்டேன்.

திரு. கே.ஏ.மதியழகன்: சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது இவர் பேசுவது என்ன முறை?

திரு. கே.ஏ. மதியழகன்: அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று இருக்கும் ஒரு கட்சியை, அ.தி.மு.க. என்றால் எப்படி?

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: தலைவரவர்களே திரு.ஹாண்டே அவர்கள் பேசும்பொழுதுகூட ஏ.டி.எம்.கே. என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது மதிக்குக் கோபம் வரவில்லை.

திரு. கே.ஏ. மதியழகன்: அதையும் திருத்திக்கொள்ள வேண்டியதுதான். என்றாலும் நீங்கள், முதலமைச்சராக இருப்பவர்கள், வெளியிலே எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம், இங்கே அப்படிச் சொல்லலாமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: நான் திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லிவிட்டு உங்களுடைய கட்சியை அப்படிச் சொன்னால் சரி. ஆனால் நான் தி.மு.க. என்றுதான் சொல்கிறேன். அதைப்போல சி.பி.ஐ., சி.பி.எம். என்று சொல் கிறேன். அப்பொழுது யாரும் கோபித்துக் கொள்வது கிடையாது.

காங்கிரஸ் (ஓ) 40, ஏ.டி.எம்.கே. 55, சுதந்திரா 5, சி.பி.எம். 5, சி.பி.ஐ.6, ஃப்ரீடம் ஃபைட்டர்ஸ் 6 ஆக, 117 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆனால் அவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

அதற்குப்பிறகு, பத்து நாளைக்குப் பிறகு மறுபடியும் போராட்டம் எந்த வகையில் திரும்பியது என்றால் திருநெல் வேலியிலிருந்து சட்ட விரோதமாக அரிசியை எடுத்துச்சென்று கன்னியாகுமரிக்குள்ளே நுழைவது என்ற போராட்டத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஈடுபட்டதுதான் வேதனைக்குரியது. அதிலே ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 பேரும், அ.தி.மு.க.வைச் சேர்ந்த 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

பயங்கரமான நிலைமையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தைக் காப்பாற்ற வேண்டும். அதே நேரத்தில் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களையும் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் உணவு அமைச்சர் கூறியது போல் திருநெல்வேலி மாவட்ட எல்லையில் செக் போஸ்ட் போடப் பட்டிருக்கிறது. அதே போல் மதுரை மாவட்டத்திலும், கோவை மாவட்டத்திலும் செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்றன.

அப்படி செக் போஸ்ட்கள் போடப்பட்டிருக்கின்ற நிலையில் திருநெல்வேலியிலிருந்து நாங்கள் அரிசியைக் கடத்திச் செல்வோம், அதை யாரும் தடுக்கக்கூடாது, செக் போஸ்ட்டை மீறி நாங்கள் எடுத்துச்செல்வோம் என்ற முறையில் ஆளும் காங்கிரஸ் கட்சி வழி காட்டினார்கள். அதை அங்கிருக்கும் பழைய காங்கிரஸ் கட்சியோ மற்றக் கட்சிகளோ ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை- எனக்குத் தெரிந்த வரை யில் இல்லை. ஏற்றுக் கொண்டார்களோ என்னவோ தெரியாது. இதன் காரணமாக ஆளும் காங்கிரஸ் கட்சி 19 பேரும், அ.தி.மு.க. 9 பேரும் ஆக 28 பேர் கைது செய்யப்பட்டார்கள். கடந்த மாதம் 27ஆம் தேதிக்குப் பிறகு 3-8-73 வரை மறியலில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து யாரையும் விடவில்லை என்று சட்ட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்து நாள் வரை அவர்களைக் கைது செய்து விட்டு வந்தோம். அவர்கள் மறுபடி யும் தொடர்ந்து அதையே நடத்திக் கொண்டிருந்த காரணத்தால் விடுதலை செய்யவில்லை. காங்கிரஸ் (ஓ) 58 பேர் அ.தி.மு.க. 17 பேர், சுதந்திரா 9 பேர், கட்சிச் சார்பற்றவர்கள் என்ற

பெயரில் 85 பேர் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கு ஒரு போராட்டம் தேவையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொடர்ந்து பேச்சு வார்த்தை மூலமாக முடிவெடுத்து 1,400 கிராம் அரிசி இன்றைக்கு 2,000 கிராம் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் பேச்சு வார்த்தைகள் மூலமாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியாதா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கள்ளக் கடத்தல்காரர்களைப் பிடிக்கவேண்டுமென்று தமிழ்நாடு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் மணலி அவர்கள் கூறினார்கள். அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வேன்- மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டிலேயே நான் திட்ட வட்டமாக அறிவித்தேன். உணவுப்பொருள் கடத்தல்காரர்கள் மீது பாதுகாப்புச் சட்டம் பிரயோகிக்கப்பட வேண்டும். அதற் கான வழிவகைகளை ஆராய வேண்டுமென்று சொன்னேன். அதற்கேற்ப கோவை மாவட்டத்தில் 13 பதுக்கல்காரர்கள் இன்றைக்குச் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள். என்பதை இந்த அவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது மாத்திரமல்ல. நேற்றயதினம் கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று பேர் கடத்தல்காரர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ச் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்வேன். இது பதினாறோடு நின்றுவிடாது. இன்னும் யார் யார் கடத்தல்காரர்களோ அவர்களையெல்லாம் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பிடிக்க எல்லா முயற்சிகளையும் காவல் துறையினர் நிச்சயமாக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்பதை நான் அறிவித்து அங்கிருக்கும் குறைபாட்டை எடுத்துச்சொல்லி நிவர்த்திக்கச் சட்டமன்றம் கூடியிருக்கும் இந்த நேரத்தில் இந்த அரசோடு கலந்துபேச வாய்ப்பு இருக்கும் காரணத்தால் நிவர்த்தித்துக் கொள்ள முடியும் என்று கூறி, இதிலே ஆற அமர உட்கார்ந்து பேசித் தீர்த்துக்

கொள்ளவேண்டிய காரியமாக இருக்கின்ற நிலையில் இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டிய தேவையில்லை, இதை அனுமதிக்கத் தேவை இல்லை என்று கூறி அமைகிறேன்.

பிரிவினைப் பிரச்சினை

உரை : 19 நாள்:4.12.1973

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பெரியார் அவர்கள் பிரிவினையைக் கேட்பது இன்று நேற்றல்ல. 1963-ம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தலைமையில் இயங்கிய அந்தக் காலத்தில் பிரிவினைக் கொள்கையை விட்டுவிட்ட பிறகும் பெரியார் தொடர்ந்து பிரிவினையை வலியுறுத்தி வந்திருக்கிறார். அப்பொழுதெல்லாம் பெரியார் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆதரித்துக்கொண்டிருக்கவில்லை என்பது மாத்திரமல்ல, மாறாக, காங்கிரஸ் கட்சிக்கு பேராதரவு நல்கி வந்தார்கள். அப்பொழுது காங்கிரஸ் ஒன்றாக இருந்த நேரம். அந்த காலத்தில் முதலமைச்சராக காமராசர் அவர்கள் வீற்றிருந்த போதும், தொடர்ந்து பக்தவத்சலம் அவர்கள் வீற்றிருந்தபோதும், பெரியார் அவர்களுடைய ஆதரவை காங்கிரஸ் கட்சி பெற்றிருந்தது. தேர்தல் நேரங்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காக பெரியார் அவர்களுடைய பெரும் பிரச்சாரம் காங்கிரஸ் கட்சிக்குப் பயன்படுத்தப்பட்டது.

ஆனால், காங்கிரஸ் கட்சி பெரியாருடைய கொள்கைகள் அனைத்தையும் ஒத்துக்கொண்டதா என்றால், இல்லை. பெரியார் காங்கிரஸ் கட்சியை ஆதரிக்கறார். ஆனால், காங்கிரஸ் கட்சி பெரியாருடைய எல்லா கொள்கைகளையும் ஒத்துக்கொள்ள வில்லையென்று அன்றைக்கிருந்த முதலமைச்சர் காமராசர் அவர்களே எடுத்துக்கூறி இருக்கிறார்கள். அப்பொழுதும் பெரியார் அவர்கள் பிரிவினை பேசினார். தன்னுடைய

பத்திரிகையில் பிரிவினையைப்பற்றி எழுதினார். அவர் நடத்திய ஊர்வலங்கள்-இப்பொழுதாவது ஊர்வலங்கள் நடைபெறு கின்றன- காங்கிரஸ் கட்சி ஆண்டபொழுது சிலைகள் உடைக்கப்பட்டன. பிள்ளையார் சிலையை உடைப்பதற்கு ஒரு நாளும் குறிக்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் பிள்ளையார் சிலைகள் உடைக்கப்பட்டன. அப்பொழுது காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார்கள். நான், காமராசருக்கு இதிலே சம்பந்தம் உண்டு என்று சொல்லவில்லை. பிள்ளையாரை உடைக்கவேண்டுமென்று சொன்ன பெரியாரோடு தொடர்பு கொண்டிருந்தார். அப்படி தொடர்புகொண்டிருந்த காரணத் தினாலே, காமராசரும் பிள்ளையார் உடைக்க சம்மதம் கொடுத்து விட்டார் என்று அர்த்தம் அல்ல. ஆகவே, இந்தப் பிரச்னையை அணுகுகிற நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசை குறை சொல்கிற நோக்கத்தோடு இந்தப் பிரச்சனையை தயவு செய்து அணுகக்கூடாது என்று நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

டெல்லியிலிருந்து வந்துள்ள ஒரு கடிதம்பற்றிப் பேசப் பட்டது. அதற்கு ஏன் இன்னும் பதில் எழுதவில்லை என்றுகூடக் கேட்கப்பட்டது. ஏற்கனவே கேரள மாநிலம் பற்றி இங்கே ஒரு பிரச்னை வந்தபொழுது நான் ஒரு விவரம் சொன்னேன். 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கேரள முதலமைச்சருக்கு எழுதப் பட்ட கடிதத்திற்கு ஆகஸ்டு மாதம் பதில் வந்தது என்று குறிப் பிட்டேன், இதை நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து விவரங்களைச் சேகரித்துக் கடிதம் எழுத நாட்கள் அல்ல மாதக் கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட்டது. அதைப்போல் டெல்லியிலிருந்து மாநில அரசுக்கு உடனடியாகப் பதில் வந்து விடுவதும் இல்லை.

24ஆம் தேதியன்று டெல்லியிலே உள்ள அடிஷனல் செகரட்டரியிடமிருந்து நம்முடைய தலைமைச் செயலாளருக்கு கடிதம் வந்தது, பெரியார் பிரிவினைக்கொள்கைமீது தமிழக அரசு கேட்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தக் கடிதம் எழுதப் பெற்ற அடுத்த இரண்டு மூன்று நாட்களுக்குள்ளாகவே புதுடெல்லி நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்னை எழுந்தபோது உள்துறை அமைச்சர் உமா சங்கர் தீக்சித், ஈ.வெ.ரா. பிரிவினை

கேட்பதற்கு நான் அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கமாட்டேன் என்று சொல்கிறவர்கள் மாநில அரசுக்குக் கடிதம் எழுதி முக்கியத்துவம் அதற்குத் தரவேண்டுமென்று வற்புறுத்த மாட்டார்கள் என்று அவ்வளவு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை என்று அவர்களே கூறியபிறகு மாநில அரசு அதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டுமா என்பது பெரிய பிரச்னை ஆகும்.

பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் தென்னகம் வந்த போது நிருபர்கள் சந்தித்துக் கேட்டபோது அவர்களும் இது போன்ற பதிலைத்தான் சொல்லியிருக்கிறார்கள். திராவிடர் கழகத்தைத் தடைசெய்யவீர்களா என்று கேட்டதற்கு அந்தக் கட்சி தடைசெய்கின்ற அளவிற்கு பலம் வாய்ந்ததா என்று எதிர்க் கேள்வி பதிலளித்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இங்கே எழுப்பப்பட்டது, பிரிவினைக்கொள்கைமீது தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பது ஆகும். அது மட்டுமல்ல, அமைச்சர்கள் பெரியார் அவர்கள் நடத்துகின்ற கூட்டங்களிலே கலந்துகொள்கிறார்களே அது பற்றியும் கேட்கப்பட்டது. பிரிவினை கேட்டுப் பெரியார் நடத்து கின்ற கூட்டங்களிலே அமைச்சர்கள் கலந்துகொள்ளவில்லை; சமுதாய சீர்திருத்தம், பெரியார் சிலைத் திறப்பு விழா ஆகிய கூட்டங்களிலேதான் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள் கிறார்கள், சில நேரங்களிலே நான்கூட கலந்து கொண்டிருக் கிறேன். நாங்கள் அந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு வேறு இடங் களுக்கு சென்றதற்குப் பிறகு பெரியார் அவர்களோ அல்லது மற்றவர்களோ பிரிவினை பற்றிப் பேசியிருக்கலாம் அப்பொழுது கூட நாங்கள் அங்கு இருந்ததால் அந்தக் கருத்துக்கள் எங்களுக்கு ஒத்த கருத்துக்கள் அல்ல என்று பதில் அளித்திருக் கிறோம். காமராஜ், பக்தவத்சலம் ஆகியவர்களுடைய காலத்திலேகூட பெரியாருடைய கருத்துக்கள் எங்களுக்கு ஒத்த கருத்துக்கள் இல்லை என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதேபோல் நாங்களும் பெரியாருடைய ஒன்றிரண்டு கருத்துக்கள் எங்களுக்கு ஒத்த கருத்துக்கள் அல்ல என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

தனிநாடு கேட்கின்றவர்கள் தடுக்கப்படுகின்றார்களா என்று கே.டி.கே. தங்கமணி அவர்கள் கேட்டார்கள். அதே மதுரையிலே தனிநாடு கோரி ஊர்வலம் நடத்தினார்கள். அவர்களில் 92 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். அந்த மாநாட்டிற்கு சிறப்புரையாற்ற பெரியார் அவர்கள் சென்றார்கள். ஆனால் அந்த மாநாடு நடைபெறுவதாக இருந்த இடம் பூட்டப்பட்டு காவல் துறையினரால் சீல் வைக்கப்பட்டது. தனிநாடு கோரிவந்த அந்த ஊர்வலமும் தடைசெய்யப்பட்டது, அது மாத்திரம் அல்ல. 92 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். ஆகவே தனிநாடு பிரிவினை என்ற அளவிற்கு முழக்கங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றில் ஈடுபடுகின்ற நிலையிலே அவர்கள் உடனடியாகத் தடைசெய்யப்பட்டு இருக்கிறார்கள்.

பெரிய நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை என்பதற்கான காரணத்தை நான் சொல்வதைவிட உள்துறை அமைச்சர் உமா சங்கர் தீக்சித் அவர்கள் சொல்லியிருப்பதும், பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சொல்லியிருப்பதும்தான் காரணங்கள் என்று எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அண்மையிலே சென்னையிலே நடைபெற இருப்பதைப் பற்றிக் குறிப்பிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள், பல்வேறு கட்சித் தலைவர்கள் முறையிட்டு எனக்கு எழுதியிருக்கிறார்கள். இங்கேயும் கடவுளர் படங்கள், சிலைகள் களங்கப்படுத்தப்படலாம், அதைக் கண்காணிக்கவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். அதைத் திராவிடக் கழக நண்பர்களுக்கு எடுத்துச்சொல்லி இப் பொழுது அந்த ஊர்வலம் கைவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடவுளர்களைப் பெரியார் அவர்கள் தான் களங்கப்படுத்துகிறார்களா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாட்டிலே உள்ள கோயில்களிலே, புத்தகங்களிலே, கடவுளர்கள் களங்கப்படுத்தப்படவில்லையா, அதைத்தான் பெரியார் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். வேண்டுமானால் என்னுடன் வந்தால், தேவாலயங்களிலேயும், கோயில்களிலேயும் கடவுளர்கள் எப்படி எப்படி களங்கப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை என்னால் எடுத்துக்காட்டமுடியும். அதுகூடத் தேவையில்லை என்ற அளவிற்கு பக்தர்கள் மனதைப்

புண்படுத்தவேண்டாம், அவர்களே அந்தச் சிலைகளையும் படங்களையும் பார்த்துக்கொள்ளட்டும், நாம் அவர்களுடைய மனதைப் புண்படுத்தவேண்டாம் என்று பெரியார் அவர்களுடைய திராவிடக் கழகத்திற்கு எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது.

அண்மையிலே பெரியார் அவர்களைச் சந்தித்துப் பேசியதற்குப் பிறகு, அண்மைக்காலத்திலே அவர்களுடைய அறிக்கைகள் அவர்கள் பிரிவினை கேட்கவில்லை என்ற நம்பிக்கையை கொடுக்கின்றது. சமத்துவம், சாதிமதபேதமற்ற சமுதாயத்தை அமைக்க வழிவகுக்கின்ற தன்மையிலே இப்பொழுதுள்ள அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும், இல்லாவிட்டால் பிரிவினை கேட்பேன் என்றுதான் காரணமாகச் சொல்கிறார்கள். இதுவே நல்ல அறிகுறியாகும். அவர்களுடைய கட்சி பலம் வாய்ந்த கட்சியாக இல்லாவிட்டாலும், அவர்கள் பெரியவர்கள், இந்த நாட்டுக்காகப் பல ஆண்டுக்காலம் உழைத்தவர்கள். பங்களாதேஷ் போராட்டத்தின்போது தமிழ்நாட்டிலே உள்ள ஒருவர் பாகிஸ்தானை ஆதரித்து அறிக்கைவிட்ட நேரத்திலே அவர்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டதற்கு நான் என்ன பதில் சொன்னேனோ அதே பதிலை இப்போதும் சொல்கிறேன் என்று கூறி இந்த அவையை அதற்காக ஒத்திவைக்கத் தேவையில்லை என்று கூறி அமைகிறேன்.

திரு. கே.டி.கே. தங்கமணி: மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறதே, அதற்கு பதில் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: 24ஆம் தேதியன்று கடிதம் எழுதியிருக்கிறார்கள். சிலர் மாதக்கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள் பதில் எழுத. நான் கேரள மாநிலத்திலிருந்து வந்திருந்த பதிலைப்பற்றிக்கூடக் குறிப்பிட்டேன். மத்திய அரசு, இன்னும் சொல்லப்போனால் சோஷலிஸத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்ற முறையிலே வேண்டுகோள்கள் பற்றி பதில் எழுதாமல் வருடக்கணக்கிலேகூட அங்கே தேங்கிக்கிடக்கின்றன. அந்தக் கடிதம் நவம்பர் 24ஆம் தேதி எழுதப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு 27, 28ஆம் தேதியில்,

உள்துறை அமைச்சர், பதில் எதிர்பார்க்கப்படுகிறது. என்று குறிப்பிட்டிருக்கிறார். அது ஆராயப்பட்டு நிச்சயமாகப் பதில் மத்திய அரசுக்கு அனுப்பப்படும்.

இராமருக்கு எதிர்ப்பு

உரை : 20 **நாள் : 21.12.1974**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வருகின்ற 25-ம் தேதியன்று திராவிடக் கழகத்தினர் பெரியார் திடலில் இராமர், சீதை, இலக்குமணர் ஆகியோர் களுடைய உருவங்களுக்கு தீயிடுவதாக அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை ஒட்டி அம்மையார் அவர்கள் ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் கொண்டுவந்து அதன்பேரில் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அவர்களே, குறிப்பிட்டார்கள், இன்று நேற்று அல்ல, திராவிடக் கழகத்தினர் பல ஆண்டு காலமாகவே இப்படிப்பட்ட செயல்களைச் செய்து வருகிறார்கள் என்று. 1953-ம் ஆண்டு இராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில் பெரியார் அவர்கள், இன்றைக்கு அறிவித்திருப்பதைப் போல ஒரு இடத்தில் அல்ல, தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் இன்று அறிவித்திருப்பதைப்போல தனிப்பட்ட ஒரு இடத்திற்குள்ளே அல்ல, பகிரங்கமாக வீதிகளிலும், தெருக்களிலும் பிள்ளையார் சிலையை உடைப்பது என்று திட்டமிட்டு, அப்படி சிலைகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் உடைக்கப்பட்டன. அப்போது இராஜாஜி அவர்கள் அதுபற்றி எந்தவிதமான நடவடிக்கையும் சட்டப்படி எடுக்கவில்லை. அப்படி சிலைகளை உடைத்த இடங்களிலும் யாரும் உடைத்த காரணத்திற்காக கைது செய்யப்படவும் இல்லை. அவர்கள் அந்தப் பிரச்சினையை அலட்சியப்படுத்துவதுதான் சிறந்தது என்ற வகையில் ஒரு கொள்கையை வகுத்து தீவிரமான நடவடிக்கை எதுவும் எடுக்காமலேயே விட்டு விட்டார்கள்.

ஆகவே, இவைகள் பல ஆண்டுகளாவே திராவிட கழகத்தின் சார்பில் அவர்களுடைய கொள்கைக்கு ஏற்ப நடைபெற்று வருகின்ற சம்பவங்களாகும். ஆனாலும் இவை காரணமாக மற்றவர்களுடைய மனம் புண்படுகிறது என்ற நேரத்திலும் இவற்றின் விளைவுகள் வேறு வகையிலே விபரீதமாக ஆகிவிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நேரத்திலும் இந்த அரசு தலையிட்டு சட்டம், ஒழுங்கு, அமைதி இவைகளை காப்பாற்றுகின்ற பொறுப்பினை நிச்சயம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதை நான் தட்டிக்கழிக்க விரும்பவில்லை.

இதிலே ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. இன்றைக்கு திராவிடக் கழகம் நடத்துகின்ற இராவண லீலா எப்படி உருவாயிற்று என்றால் வடக்கே இராம லீலா நடத்தப்படுவதன் எதிர் ஒலியாகத்தான் இராவண லீலா இங்கே நடத்தப்படுகிறது. அங்கே இராம லீலா நடத்தப்படுகின்ற இடங்களுக்கு நாட்டுப் பிரதமர் மத்திய அமைச்சர்கள் இவர்களெல்லாம் செல்வதும், அந்த இராம லீலா உற்சவத்தில் இராவணன், கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோர்களுடைய உருவங்களை அவர்கள் எரிப்பதை இவர்கள் கண்டு ரசிப்பதும், தமிழகத்தில் இராவணன் ஒரு தமிழன், இராவணன் ஒரு திராவிடன் என்ற வகையிலே உருவாக்கப்பட்டிருக்கிற வரலாற்று அடிப்படையில் அவரைப் போற்றிக்கொண்டிருக்கிற பகுத்தறிவாளர்களின் வரலாற்று அணியை ஒப்புக்கொண்டிருக்கிற திராவிடக் கழகத்தினரிடத்தில் ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அதன் காரணமாகத்தான் இன்றைய திராவிடக் கழகத் தலைவராக விளங்குகிற மணியம்மையார் இந்தியப் பிரதமருக்கு அது குறித்து ஒரு கடிதம் எழுதி, அதிலே தாங்கள் இங்கே பதிலுக்கு இராவண லீலா நடத்தவேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கு மதிப்பு மிகுந்த இந்திரா காந்தி அவர்கள் எழுதிய பதில் கடிதத்தில் - அந்தக் கடிதம் எல்லா பத்திரிகைகளிலும் வெளியாகியிருக்கிறது - நாட்டினுடைய பொருளாதார நிலைமைகளை நாம் இன்றைக்கு கவனிக்க வேண்டுமேயல்லாமல், இப்படிப்பட்ட காரியங்களில் நம்முடைய சிந்தனையை செலவிடக்கூடாது' என்று குறிப்பிட்டார்கள்.

பிரதமரின் அறிவுரை சிலாக்கியமான அறிவுரைதான். ஆனால் இராவண லீலா நடத்துபவர்களுக்கு மாத்திரம் பொருந்துகிற அறிவுரை அல்ல, இராம லீலா நடத்துகிறவர்களுக்கும் சேர்த்துத் தான் இந்த அறிவுரை பொருந்தும் என்பதனை நாம் மறந்துவிட இயலாது. இராவணன் ஒரு திராவிடன், தமிழன் என்ற அளவிலே வரலாறு இருக்கிறது.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் எழுதிய உலக சரித்திரம் என்ற நூலில் அவர் தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதத்தில், பிரியதரிசினி என்ற தலைப்பிட்டு எழுதிய கடிதத்தில் இராமாயணம் அரிய திராவிட போராட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கதைதான் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற இராமன் கடவுளா அல்லது ஒரு கதாபாத்திரமா என்கின்ற சர்ச்சை முடிந்தபாடில்லை. வால்மீகி எழுதிய இராமன் கடவுளாக சித்தரிக்கப்படவில்லை. இன்னும் தமிழ் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் கம்பன் இராமனை ஒரு கதாபாத்திரமாகத்தான் உருவாக்கியிருக்கிறான். இந்த ஆராய்ச்சி இன்னும் முடியவில்லை. இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இப்பொழுது பிரச்சினை என்னவென்றால் இராவணனை அங்கே கொளுத்துவதன் மூலமாக இராவணனிடம் அன்பு கொண்டிருக்கிற ஒரு சாராரை பகுத்தறிவாளர்களை அது புண்படுத்துகிறது என்பதனால் பல ஆண்டுகள் வேண்டுகோள் விடுத்தும், இராம லீலா தொடர்வதன் காரணமாக இராவண லீலா நடத்தும் முயற்சியை இவர்கள் இங்கே மேற்கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதன் மூலம் எங்களுடைய வெறுப்பை முழு அளவில் காட்டிவிட்டோம் என்பதனை திராவிடக் கழகம் உணர்த்திவிட்டது. இந்த உணர்வுகளை இந்த உருவங்களைக் கொளுத்தித்தான் காட்டவேண்டும் என்பதல்ல. இப்படிப்பட்ட எதிர்ப்பு தமிழகத்தில் உருவாகியிருக்கிறது என்பதைக் கருதி, வடபுலத்தில் நடைபெறுகிற இராம லீலாவை அடுத்த ஆண்டிலாவது நிறுத்துவதற்கு மத்தியில் உள்ளவர்கள் முயற்சி எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுக்க

வேண்டும். இல்லாவிட்டால் போட்டா போட்டியைப் போல நடந்து, சட்டம், ஒழுங்கு, அமைதி பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகும். ஆகவே, மத்திய அரசு இதில் தலையிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிற பொறுப்பையும் தமிழக அரசு ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறது. இந்த வாக்குறுதியின் அடிப்படையில் 25-ந்தேதி திராவிடக் கழகம் நடத்த இருக்கின்ற, இராமர், இலக்குமணர், சீதை ஆகியவர்களுடைய உருவங்களை எரிக்கின்ற இந்தக் காரியத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஒருவேளை அதைக் கைவிட மறுத்தால் அதன் காரணமாக எழக்கூடிய விளைவுகளுக்கு அரசுதான் பொறுப்பு என்கின்ற வகையில் சட்டப்படி அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும் என்பதனையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். எப்படி பக்தர்களின் மனது புண்படக்கூடாது என்பதில் அக்கறை செலுத்துகிறோமோ அதைப்போலவே பகுத்தறிவாளர்களுடைய மனமும் புண்படக்கூடாது என்பதிலும் அனைவரும் அக்கறை செலுத்தவேண்டும் என்பதை எடுத்துச்சொல்லி, நான் கொடுத்த விளக்கத்திற்குப் பின்பும், வேண்டுகோளுக்குப் பின்பும் இந்தக் காரியங்கள் கைவிடப்படாமல் நிறைவேற்றப்படுமானால், அதன் விளைவுகளின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகளை எடுக்க அரசு தயங்காது. ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு அலுவலர் பிரச்சினை

உரை : 21 **நாள் : 28.02.1978**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மிக, மிக முக்கியமான ஒரு பிரச்சினைமீது இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் மற்றுமுள்ள எதிர்க்கட்சியின் சார்பிலும் இங்கே அமர்ந்திருக்கிறோம். அண்மையில் நம்முடைய நிதியமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில் தமிழக என்.ஜி.ஓ. வினருக்கு ஏற்பட்டுள்ள அதிருப்தியினை காட்டுகின்ற வகையில் அவர்கள் அமைதியான முறையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படி ஈடுபட்டவர்களில் முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அருகாமையிலுள்ள சென்னைச் சிறைச்சாலையில் போதிய இடம் இருந்தும்கூட, அங்கே வைக்காமல் வேண்டுமென்றே வேலூர் சிறைச்சாலைக்கு கொண்டுசென்று அடைத்திருப்பதன் மூலமாக அவர்களை அச்சுறுத்துகின்ற தன்மையிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறதோ என்ற ஐயப்பாட்டினை எங்களுக்கு ஏற்படுத்துகின்ற வகையில் இருக்கிறது. பிரச்சினை எவ்வாறு எழுந்தது என்பதை முதலிலே கவனிப்போம்.

நிதி நிலை அறிக்கையில் தமிழ்நாடு என்.ஜி.ஓ. வினருக்கு சம்பள உயர்வு என்ற பெயரில் ரூ. 200-க்கும் குறைவாக சம்பளம் பெறுகிறவர்களுக்கு ரூ. 25, 200 ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகிறவர்களுக்கு ரூ. 15 அளிக்கப்படும் என்று சொல்லிவிட்டு, மார்ச் மாதம் - ஒரு மாதம் மட்டுமே கொடுக்கப்படும் என்று கோட்டிட்டு காட்டியிருப்பதால் என்.ஜி.ஓ. வினர் பெருத்த ஏமாற்றத்திற்கு ஆளாகி இருக்கிறார்கள்.

ஆனால் நிதியமைச்சரோ அல்லது அறிக்கையைத் தயாரித்த அதிகாரிகளோ வாக்கிய அமைப்பை மிகத் தந்திரமாக வெளியிட்டிருக்கின்றார்கள். பத்திரிகைகள்கூட மாதாமாதம் 200-க்கு குறைவாக சம்பளம் பெறுவோர் 25 ரூபாயும், 200-க்குமேல் சம்பளம் பெறுவோர் 15 ரூபாயும் கூடுதலாகப் பெறுவார்கள் என்ற வகையிலே செய்தி போட்டார்கள். இந்த அறிக்கையைப் பார்க்கிற நேரத்தில்தான் என்.ஜி.ஓ. வினருக்கு ஒரு பொங்கல் இனாம், தீபாவளி இனாம் கொடுப்பதுபோல் ஒரே ஒரு மாதத்திற்குத்தான் ரூ. 25, ரூ. 15 என்று இருப்பது தெரிய வருகிறது, அறிவிப்பு இருக்கிறது.

நிதி நிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தால் அதிலே கூட ஆங்கிலத்திலே கட்டம்போட்டு காட்டப்பட்டிருக்கிறது 'லம்ப் நான் ரிக்கரிங்' என்று. ஒரு முறை மொத்த நிவாரணமாக அது கொடுக்கப்படும் என்றுதான் இருக்கிறது. அதைப் படிக்கின்ற நேரத்தில் தொடர்ந்து தரப்படுகின்ற பணம் அல்ல அந்த ரூ. 25, ரூ. 15 என்பது தெளிவாக ஆக்கப்பட்டிருக்கிறது.

அதிலே அடுத்தபடியாக சொல்லப்படுகிறபோது, ஏப்ரல் மாதத்தில் இருந்து ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வந்து விடுவதாகத் தெரிகிறது. பரிந்துரைகள் எப்போது வரும் என்று கூறப்படவில்லை. அந்த வார்த்தைகள் ஜாக்கிரதையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. அலுவலாளர்களை, குறிப்பாக, என்.ஜி.ஓ.க்களை அது ஏமாற்றுகின்ற வகையில் அமைக்கப் பட்டிருக்கிறது. அந்த வாக்கிய அமைப்பாளர்களைப் பாராட்ட வேண்டும். ஆனால் அதனுடைய விளைவுகளைப் பாராட்ட முடியாதவனாக இருக்கிறேன். ஏப்ரல் மாதத்திலேயே ஊதியக் குழுவின் பரிந்துரைகள் வந்து அது நிறைவேற்றப்படும் என்ற வகையில் தரப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மை அதுவல்ல. ஊதியக்குழுவின் பரிந்துரை எப்போது வரும் என்று அதிலே அறுதியிட்டுக் கூறப்படவில்லை. ஊதியக்குழுவின் பரிந்துரை இன்னும் 6 அல்லது 7 மாதம் கழித்தும் வரலாம். அப்படி வந்தபிறகு அந்தப் பரிந்துரைக்கு ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கப்பட்டு, ஏப்ரல் மாதத்தில் இருந்து அவர்களுக்குச் சம்பளம் அளிக்கப்படும். அதுதான் உண்மையே தவிர வேறல்ல. எந்த வகையிலும், என்.ஜி.ஓ.வினர் இன்று பெரும் ஏமாற்றத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே அவர்கள்

கேட்கும் பணம் எவ்வளவு, அவர்களுடைய கோரிக்கை எத்தகையது என்பதெல்லாம் நாங்களும் ஆளும் கட்சியின் பொறுப்பிலே இருந்தவர்கள் என்ற முறையில் அதை எந்த அளவுக்கு நிறைவேற்ற முடியும் என்று அறிந்தவர்கள்தான் நாங்கள்.

ஆனால் அந்த கோரிக்கைகளை அவர்கள் எடுத்து வைக்கின்ற நேரத்தில் அரசின் அணுகுமுறை எப்படி இருந்திருக்க வேண்டும் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்வது தவறாகாது என்று கருதுகிறேன். அரசு அணுகுமுறை சரியல்ல என்று சொல்வதால் நாங்கள் எல்லாம் சேர்ந்து தூண்டி விடுகிறோம் என்று சொல்வது தவறு. அவ்விதம் அரசு எடுத்து சொல்வது முறையற்றதாகும். ஆந்திர மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்யும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி போராட்டங்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார். அது ஏடுகளில் வந்திருக்கிறது.

பிரச்னைக்கு ஆளானோர் எதிர்க்கட்சியின் துணையை நாடும்பொழுது அவைகளைத் தூண்டிவிடுவது என்று சொல்வதற்குப் பதிலாக துணை நிற்பது குற்றமல்ல. அது அரசியலில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற முறையில் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும். அந்த வகையிலேதான் இந்தப் பிரச்சினையில் என்.ஜி.ஓ-க்கள் முதலமைச்சரை அணுகிப் பேசி அதை முடித்துக்கொள்ள வேண்டுமென்று பலமுறை வேண்டுகோள் விடுத்தும், அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் அவர்கள் போராட்டத்தை அறிவிப்பதற்கு முன்னால் கூட என்னிடத்திலே கலந்து பேசினார்கள். நானும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியரும் அவர்களுக்கு எடுத்துச்சொன்னது ஊதியக் குழு பரிந்துரைகள் விரைவாக அறிவிக்கப்படவிருக்கிறது. அது பற்றிய அறிவிப்பு வரவு செலவு திட்டத்தில் வரும். பொறுத்திருங்கள், போராட்டம் வேண்டாம் என்று சொன்னேன். போராட்டம் அறிவித்த பின்னால்கூட அந்த சங்கத்தின் செயலாளர் ஒருவர் என்னிடத்திலே தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது நீங்கள் உடனடியாக அமைச்சர்களைச் சந்தியுங்கள், அவர்களைச் சந்தித்துப் பேசுங்கள். பிறகு போராட்டத்திற்கு தேதி கொடுங்கள்

என்று சொன்னேன். அதற்கு அவர்களிடமிருந்து வந்த பதில் 'அமைச்சர் அவர்களைச் சந்திக்க முயன்றோம், முடியவில்லை' ஆகவே, போராட்டம் அறிவித்து விட்டோம்' என்று சொன்னார்கள். போராட்டம் அறிவிப்பதற்கு முன்னால் முதலமைச்சர், மற்ற அமைச்சர்களைச் சந்திக்கவேண்டும் என்றால் முடியாமல் போய்விட்டது அவர்களுக்கு. அப்படிப் பேசியிருந்தால் சுமுகமாக பிரச்சினை முடிந்திருக்கும். மாறாக, அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை சரியல்ல என்று நான் கருதுகிறேன். அதையொட்டி நிதியமைச்சரின் கவனத்திற்கு நான் இதை கொண்டுவருகிறேன்.

நாஞ்சில் மாவட்டம், நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்குச் சொந்தமான மாவட்டம், அந்த மாவட்டத்தில் இருந்து தொலைபேசி மூலம் எனக்கு அறிவிப்பு வந்தது. 70-க்கும் மேற்பட்ட வருவாய்த்துறை ஜூனியர் அசிஸ்டென்டுகள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை இழக்க வேண்டிய காரணங்கள் வேண்டுமானால் சரியாக இருக்கலாம். ஆனால் மனிதாபிமானத்தோடு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும். அவர்கள் இன்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தாலும், சாகும் வரை உண்ணா விரதம் என்று மாறாமல் பார்த்துக்கொள்ளும் கடமை இந்த அரசுக்கு இருக்கிறது. ஆகவே, பேச்சுவார்த்தை மூலம் நிவாரணம் தேட வேண்டும்.

அதற்குப் பிறகு நேற்றைய தினம் கைது செய்யப் பட்டிருக்கின்ற என்.ஜி.ஓ.-க்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும். அவர்களை எல்லாம் அழைத்துப் பேசவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டு அந்த வகையில் உறுதி அளிக்க வேண்டும் என்ற வகையில் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வாகைக்குளம் துப்பாக்கி சூடு

உரை : 22 **நாள் : 05.04.1979**

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் இங்கே குறிப்பிடும்போது அண்ணாமலைப் பல்கலைக் கழக சம்பவத்திற்கு அன்று அவையின் முன்னவராக இருந்த நாவலர் அவர்கள் நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியைச் சொன்னார் என்று சுட்டிக்காட்டினீர்கள். அதற்குப் பிறகு 26ஆம் தேதி என்று கருதுகிறேன் - அந்தச் சம்பவத்தைப் பற்றி ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு இந்த மன்றத்திலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை - நேற்றைய தினம் அருப்புக்கோட்டைக்கு அருகாமையிலுள்ள வாகைக்குளம் என்ற ஊரில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றியதாகும். அந்த வாகைக்குளம் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் வாகைக்குளம், பூலாங்காடு, கீழ்குடி, கள்ளிகாதி ஆகிய இந்தப் பகுதிகள் அடங்கிய இடத்திலே வாழ்கிற விவசாய பெருங்குடி மக்கள் மிக முக்கியமாக கரும்பு, துவரை, மிளகாய் ஆகிய பொருள்களை அங்கே உற்பத்தி செய்கிறார்கள். அந்தப் பகுதியிலே நிலத்தடி நீரின் வாயிலாக வளம் பெற்றுள்ள இடமாகும். நான் குறிப்பிட்டுள்ள இந்த இடங்கள் முப்போக விளைச்சல். அது மாத்திரமல்ல; அங்கு விளைவிக்கப்படுகின்ற துவரை, மிளகாய் போன்ற பொருள்களை கல்கத்தா, பம்பாய், போன்ற நகரங்களுக்கு அனுப்பி அங்கிருந்து அவை ஏற்றுமதியாகின்றன என்று சொல்லும் அளவுக்கு அந்தத் திட்டு போன்ற பகுதி வளம் கொழிக்கின்ற பகுதியாக இருந்து

கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியிலிருந்து கடலாடிக்குக் குடிதண்ணீர் திட்டம் கொண்டு செல்லப்பட வேண்டுமென்று கடந்த ஆண்டில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டு வாகைக் குளத்திலிருந்து 35 மைல் தூரத்திலுள்ள கடலாடிக்குப் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைக் கொண்டு செல்ல முயற்சிகள் நடைபெற்றன. அப்போதே அங்குள்ள விவசாயிகள் நிலத்தடி நீர் இங்கிருந்து குடிதண்ணீராக மாற்றப்பட்டு அகற்றப்படுமானால் இங்கே ஊற்றுக்கண்கள் அடைபட்டுவிடும். இந்தப் பகுதியில் நாங்கள் வளமாக விவசாயம் செய்துகொண்டிருக்கிறோம், அதை கெடுத்து விடாதீர்கள் என்று முறையீடு செய்தார்கள்.

ஆனால் அந்த முறையீடு அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. கடலாடிக்குக் குடிதண்ணீர் கொடுக்க வேண்டாமா அது முக்கியமான பிரச்சினையல்லவா. அது நியாயமான கேள்விதான். அதை திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே ஆராய்ந்து பார்த்து, மலட்டாறு என்கிற ஒரு ஆறு, அதற்கு மலட்டாறு என்று பெயர் வந்ததற்குக் காரணம், அதனுடைய தண்ணீர் அனைத்துமே பக்கத்திலே உள்ள வங்க கடலிலே போய் வீணாகி விழுந்து விடுகிறது என்ற காரணத்தால்தான் அந்தப் பெயர் வந்தது என்று அந்தப் பகுதியிலே சொல்வார்கள். அதற்கும் கடலாடிக்கும் 5 மைல் தொலைவுதான் இருக்கிறது. மலட்டாற்றிலிருந்து கடலாடிக்குத் தண்ணீர் கொண்டு வருகின்ற ஒரு திட்டத்தை கழக ஆட்சி பரிசீலித்துக் கொண்டிருந்தது. அதற்கிடையில் கழக அரசு கவிழ்க்கப்பட்டது. ஆகவே அந்தத் திட்டம் என்ன ஆயிற்று, இந்தப் புதிய திட்டம் ஏன் உருவாயிற்று என்பது எல்லாம் புரியாத புதிர்களாகவே இருக்கின்றன.

இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல், நேற்று மாத்திரமல்ல, தொடங்கப்பட்ட, அந்தத் திட்டம் ஆரம்பிக்கப் பட்ட நாள் முதல் விவசாயிகளுடைய ஏகோபித்த எதிர்ப்பு அந்த நான்கு பகுதிகளிலிருந்து கிளம்பிக் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் நடைபெற்ற சம்பவம் கடந்த 7, 8 நாட்களாக தொடர்ந்து நடைபெற்ற சம்பவத்தினுடைய முடிவுரை என்று சொன்னால் மிகையாகாது. தினத்தந்திப் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. கடந்த 28ஆம் தேதி ஆழ்கிணறு தோண்டும் வேலை நடந்தது. ஆனால் விவசாயிகள் செய்த எச்சரிக்கையின் காரணமாக யாரும்

வேலைக்கு வரவில்லை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதே பத்திரிக்கையிலே, நான்கு நாட்களுக்கு முன்பு.

> "மதுரை மாவட்டம் செம்பட்டியிலிருந்து கான்ட்ராக்ட்டர் வேலைக்கு ஆள் சென்றார்கள். இதை 1,500 விவசாயிகள் எதிர்த்தார்கள். வெளியாட்கள் வேலை பார்க்காமல் திரும்பிப் போனார்கள். உதவி கலெக்டரும் உதவி போலீஸ் சூப்பிரசிண்டெண்டும் சென்று, விவசாயிகளை கலைந்து செல்லும்படி சொல்லியும் மறுத்ததால் அன்று தடியடி நடந்தது."

என்று தினத்தந்தி ஏடு கூறுகிறது. அதற்குப் பிறகு நண்பர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் விவசாயிகளை அழைத்துப் பேசி அவர்களுடைய கோரிக்கைக்கு செவி சாய்த்து இந்த அரசு ஒரு நல்ல முடிவு எடுத்திருக்கலாம். அதற்கு மாறாக 3 பேர்கள் சாகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த மூன்று பேர்களில் ஒருவர் அரசு என்பவர் சுடப்பட்டு செத்து இருக்கிறார். இந்த அரசு, 6, 7 மாதங்களுக்கு முன்பு இதே ஆழ் கிணறு தோண்டுகிற திட்டத்தை எதிர்த்து கிளர்ச்சி செய்த காரணத்தால் போலீஸ் அவரை பிடித்து அங்குள்ள பம்புசெட்டு அறையிலே பூட்டி, அவரை நையப் புடைத்து நொறுக்கியது மட்டுமல்ல, அவருக்குச் சொந்தமான ஆடுமாடுகளை கிணற்றிலே தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இதை அறிந்து மாவட்ட போலீஸ் அதிகாரி உடனே அதுபற்றி விசாரணை செய்து டி.ஒய். எஸ்.பி. யையும் தாக்கியதற்கு காரணமாக இருந்த போலீஸ்காரரையும் சஸ்பெண்ட் செய்தார்கள் என்ற செய்திகள் வந்தன. அதற்குப் பிறகு நேற்று நடந்த சம்பவத்தில் அதே அரசு கிளர்ச்சி நடைபெற்ற இடத்திலே அல்ல ஓட ஓடத் துரத்தப்பட்டு ஊருக்குள்ளே சுடப்பட்டு செத்திருக்கிறார். அரசு சுடப்பட்டு செத்தார். அதே இடத்திலே முத்துவேலு அம்மாள் என்கின்ற ஒரு தாயும் – பத்திரிகையில் வந்த வயது கணக்கு 50 என்று குறிப்பிட்டிருந்தாலும் – எனக்கு காலையிலே கிடைத்த தகவலின் படி அந்த அம்மையாருடைய வயது 30, 40 இருக்கும் என்று கூறினார்கள். சர்க்கரை என்பவரும் துப்பாக்கிப் பிரயோகத்தால் கொல்லப்பட்டிருக்கிறார்கள். விவசாயச் சங்கத் தலைவர் புலி உடையார்த் தேவர் என்பவர் எனக்கு அனுப்பியிருக்கிற தந்தியின்படி 10 பேர்கள் சுடப்பட்டு செத்திருக்கிறார்கள் என்று

கொடுத்திருக்கிறார்கள். படுகாயமுற்ற 17 பேர்களுக்கு கமுதி, அருப்புக்கோட்டை மருத்துவமனைகளிலே சிகிச்சை அளிக்கப் படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கமுதியிலும், அருப்புக் கோட்டையிலும் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை அளிப்பதற்கு போதுமான வசதிகள் இல்லை என்று தெரிந்தும் கூட அங்கேயே காயமுற்றவர்களை வைத்திருப்பது சரியல்ல. அவர்கள் மதுரை மருத்துவமனைக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே அருப்புக்கோட்டையிலே உள்ள தாசில்தார், அந்தப் பகுதியிலே போலீசார் தலையிட்டு, பம்பு செட்டுக்களை உடைத்து, அதன் காரணமாக 64,000 ரூபாய் நஷ்டம் அந்த விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது என்று தாசில்தார் குறிப்பெழுதினார். அதன் விளைவு, தாசில்தார் மாற்றப்பட்டாரே தவிர, 64,000 ரூபாய் நஷ்டயீடு அந்த பம்பு செட்டை இழந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

விசாரணைக் கமிஷன் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். நேற்றைக்கு, 5,000 ரூபாய் அந்தக் குடும்பங்களுக்குத் தரப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். விசாரணைக் கமிஷன் வைத்திருப்பது சுட்டது சரியா அல்லவா என்பதை ஆராய்வதற்காக மாத்திரம், ஆராய்ந்து தீர்ப்புக் கூறுவதற்காக மாத்திரம் என்று இருந்தால் பயனில்லை. இதற்குரிய சூழ்நிலைகள் எப்படி வளர்ந்தன, அதை வளரவிட்டதற்குக் காரணமாக இருந்த காரணகர்த்தா யார் என்பதையும் ஆராய்கின்ற வகையில் இந்த விசாரணைக் கமிஷன் அமைய வேண்டும்.

நான் ஒன்றைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அங்கே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக நண்பர் சிவசாமி அவர்கள் போட்டியிட்டு, நம்முடைய முதலமைச்சருக்கு அடுத்தபடியாக வாக்குகளை அங்கே பெற்றவர்கள். அவருக்கு ஏராளமான வாக்குகள் விழுந்த இடம் பூலாங்கால், கீழக்குடி, கள்ளக்கறி, வாகைக்குளம் ஆகிய பகுதிகள். இந்திரா காங்கிரசைச் சேர்ந்த அவர்களுக்குப் பெரும் பான்மையான வாக்குகள் ஏராளமாக விழுந்த இடம்.

எனவே, திட்டமிட்டே அந்தப் பகுதியில் அவர்களுக்கு வாக்களித்த மக்கள் பழி வாங்கப்படுகிறார்கள் என்ற உணர்ச்சியும் இன்றைக்கு அங்கே ஏற்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், உரையாற்றுகின்ற பொழுது கடந்த சட்டமன்றத் தேர்தலிலே இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பாக நம்முடைய முதலமைச்சரவர்களை அந்தத் தொகுதியிலே எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு முதலமைச்சர் பெற்ற வாக்குகளுக்கு அடுத்த எண்ணிக்கையில் வாக்குகள் கிடைத்தன என்பதையும், பெரும்பகுதி வாக்குகள் சில கிராமங்களிலிருந்து கிடைத்தன என்றும் சொல்கிறார்கள். இப்பொழுது இருக்கும் புதிய ஓட்டு எண்ணிக்கை முறைப்படி, எந்த கிராமத்தில் யாருக்கு, எவ்வளவு அதிகமாக வாக்குகள் விழுந்தன என்று யாரும் எடுத்துச்சொல்ல முடியாது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அதைப்பற்றிச் சொல்லாமல் இருப்பது நல்லது. அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுப்பதும் நல்லது.

கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பிரச்சாரம் செய்கிற நேரத்திலும், மக்கள் தங்களுடைய ஆதரவை இன்னாருக்கு அளிக்கிறோம் என்று சொல்லும் நேரத்திலும், சுலபமாக அவைகளை உணர்ந்துகொள்ள முடியும் என்பதை தேர்தலில் அடிக்கடி நின்று பழக்கப்பட்ட நம்முடைய அமைச்சர் எட்மண்ட் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியமில்லை என்றே கருதுகிறேன்.

எனவே வீணாக - நல்லமுறையிலே ஒரு திட்டம் - மலட்டாற்றிலிருந்து 5 மைல் தொலைவில் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை இருக்கும்பொழுது, விவசாயிகள் ஓராண்டு காலமாகத் தொடர்ந்து எதிர்த்துக்கொண்டு வந்தும், நிறைவேற்றியே தீருவோம் என்று பிடிவாதம் காட்டியதன் காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்கிறது.

எனவே வைக்கப்பட்டிருக்கின்ற விசாரணை, துப்பாக்கிச் சூடு சரியா, அல்லவா என்பதற்காக மாத்திரம் அல்லாமல், இதற்கான சூழ்நிலைகளையும் ஆராய்கின்ற வகையிலே அந்த நீதிபதிக்கு இப்படிப்பட்ட குறிப்புகளையும் தர வேண்டும். இல்லா விட்டால் இந்த நீதி விசாரணை ஏதோ ஒரு நாடகமாகத்தான் முடிந்துவிடும் என்பதையும் நான் தெரிவித்து, இதுபற்றி விரிவாகப் பேச வேண்டியிருக்கின்ற காரணத்தினால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேச தாங்கள் அனுமதி வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

நக்சல்பாரி இயக்கம்

உரை : 23 **நாள்: 07.08.1980**

கலைஞர் மு.கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி சில கருத்துக்களைச் சொல்கின்ற இந்த நேரம்-நெஞ்சை நெகிழச்செய்யக்கூடிய சம்பவம் நேற்றைய தினம் வடஆற்காடு மாவட்டத்தில் நடைபெற்று, நேற்று மாலை பத்திரிகைச் செய்திகளாகவும் மற்றும் வானொலி போன்ற சாதனங்களில் செய்தியாகவும், இன்று காலைப் பத்திரிகைகளிலே விளக்கமான செய்தியாகவும் வெளியிடப் பட்டிருக்கிறது. பரபரப்பு மிகுந்த பதட்டமான சூழ்நிலையை உருவாக்கக்கூடிய இந்தச் சம்பவத்தை நாம் எத்தகைய நிலையிலே அணுகிடவேண்டும் என்பதற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில் நாங்கள் எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்கள் பயன்படும் என்று நான் நம்புகிறேன்.

சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கிற, புரையோடிவிட்ட சில நிகழ்ச்சிகள், ஆதிக்கத்தை தகர்த்தெறிய வேண்டும் என்று ஆர்த் தெழுந்திருக்கிற உணர்வுகள், பொருளாதாரத்திலே படு பாதாளத்திலே போய்க்கொண்டுள்ள ஏழ்மை நிலை விவகாரங்கள் இவைகளின் காரணமாக உணர்ச்சிக் கொந்தளித்த சில இளைஞர்கள், நாட்டிலே பல்வேறு பகுதிகளில் தாங்கள் கொண்ட கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக தொடக்கூடாத எண்ணியும் பார்க்கக்கூடாத வன்முறைச் செயல்களை பெரும் கருவியாக ஆக்கிக்கொண்டு கொலைகள் மூலமும், தாங்கள் கடைபிடிக்கின்ற வன்முறைச் செயல்கள் மூலமும் தங்கள் லட்சியம் ஈடேறும் என்று எண்ணி அதன் தொடர்பாக வடக்கே சில மாநிலங்களில் காணப்பட்ட சம்பவங்கள் மெல்ல மெல்ல தெற்கேயும் பரவி, குறிப்பாக தமிழகத்திலே தர்மபுரி, வட ஆற்காடு மாவட்டங்களில் பல்வேறு கொலை நிகழ்ச்சிகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது.

நக்சல்பாரி இயக்கம் என்ற பேரால் இந்த இயக்கத்தை நடத்துகிறவர்கள் தாங்கள் ஒரு குறிக்கோளுக்காக அந்த இயக்கத்தை நடத்துகிறோம் என்று குறிப்பிட்டாலும், அந்தக் குறிக்கோளை எய்திட அவர்கள் கையாளுகின்ற முறைகளை இந்த அவையிலே இருக்கின்ற எந்த உறுப்பினரும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவைக்கு வெளியே இருக்கிற ஏழ்மையிலே நெளிகின்ற சாதாரண, சாமானிய பொதுமக்கள் கூட இத்தகைய பயங்கரமான வன்முறை நிகழ்ச்சிகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க மாட்டார்கள். தாங்கள் வறுமையிலே பாதிக்கப்பட்டாலும்கூட, தாங்கள் பல சங்கடங்களிலே இன்றைக்கு அமிழ்த்தப்பட்டு, பொட்டுப் பூச்சிகளாய் புன்மைத் தேரைகளாய் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தினா லும்கூட, இத்தகைய சம்பவங்கள் நாட்டிலே உருவெடுக்கக் கூடாது என்பதிலே, சாதாரண சாமானிய மக்களிலும்கூட ஆழ்ந்த எண்ணம் படைத்தவர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த அவை அறியும். எனினும், அடிக்கடி இந்தச் சம்பவங்கள் இப்போது அண்மைக் காலமாக வடஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

பெரிய முதலாளிகள், நிலப்பிரபுக்கள், நிலத் திமிங் கிலங்கள், செல்வந்தர்கள், இவர்களை வேட்டையாடி வீழ்த்தி விடுவதன் மூலம் தங்களுடைய எண்ணம் நிறைவேறும் என்று அத்தகைய இளைஞர்கள் அல்லது வாலிபர்கள் இந்தத் தீவிர இயக்கத்திலே பங்குகொண்டு இருப்பது மிகமிக வருந்தத்தக்க ஒன்றாகும். இதிலே அவர்கள் மற்றவர்களைக் கொல்வது மாத்திரம் அல்ல. தாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைகள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக கடைப்பிடிக்கின்ற தவறான மார்க்கத்தின் காரணமாக, அவர்களும் அதிலே பலி யாகிக் கொள்ளுகின்ற அந்தக் கொடுமையான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழக அரசு நடைபெற்ற காலத் திலே இப்படிப்பட்ட சம்பவங்கள் ஒன்றிரண்டு நடைபெற்று, அதிலே தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட சில நக்சலைட்டுக் கைதிகளுக்குக்கூட கழக அரசு காலத்தில் அவைகளை ஆயுள் தண்டனையாக மாற்றிக் கொடுக்கப்பட்ட சம்பவங்களும்

உண்டு. ஏனென்றால் அவர்கள் கொண்டிருக்கின்ற கொள்கைகளில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அல்லது உண்மையான சோசலிசம், சமதர்ம சமத்துவம், ஏற்றத்தாழ்வற்ற நிலை நாட்டிலே உருவாக வேண்டும் என்று எண்ணுகின்றவர்களுக்கு அந்த இளைஞர்களுடைய உள்ளத்திலே ஆழப்பதிந்திருக்கின்ற அந்தக் கொள்கையின்பால் ஏற்படுகின்ற அந்த அன்பின் காரணமாகவும், இரக்கத்தின் காரணமாகவும்கூட இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனாலும் தொடர்ந்து நாள்தோறும் காலை மாலை என்கின்ற வேறுபாடு இல்லாமல் நடைபெற்றுக்கொண்டே இருக்குமானால் நம்முடைய நாட்டில் ரத்தச் சகதியிலே மனிதர்களுடைய தலைகளை தாமரை மொட்டுக்களாக மிதக்கவிடுகின்ற ஒரு சூழ்நிலைக்கு உள்ளாகிவிடுமோ என்கிற கவலை, என்னை மாத்திரமல்ல, நாட்டிலே இருக்கிற அனைவரையும் இன்றைக்கு வாட்டிக் கொண்டிருக்கிறது.

வடாற்காடு மாவட்டத்தில் சில நாட்களுக்கு முன்பு நடேசனார் என்ற மிராசுதார் வெட்டிக் கொல்லப்பட்டார், தீவிர வாதிகளால், நக்சலைட்டுகளால் என்ற செய்தி வந்தது. அவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று நான் வடாஆற்காடு மாவட்டத்தில் உள்ள கழக சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசியபோது கேட்டேன். அவருக்கு 10-12 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே 50,000-60,000 ரூபாய் சொத்து உடையவர்கள்கூட அந்த ஆதிக்கபுரியினர் பட்டியலில் வைக்கப்பட்டு, கொல்லப்பட்டு இருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு நயினார் என்பவர் 1 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர் -திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளைச் செயலாளராக இருந்தவர்- அவர்கூட இந்த நக்சலைட்டுகளின் கொலை வெறிக்கு உள்ளாக்கப்பட்டு இருக்கிறார் ஓராண்டு காலத்திற்கு முன்பு.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு இடைக்காலத்தில் நடைபெற்ற கவர்னர் ஆட்சியில்கூட, வடாற்காடு மாவட்டம் பொன்னேரி என்ற கிராமத்தில் ஊராட்சி மன்றத்தின் முன்னாள்

தலைவராக இருந்த கேசவ ரெட்டி அவர்கள் இப்படி அவருடைய வீட்டிலேயே பாம் எறியப்பட்டு அவர் குடும்பத்தாரோடு, குழந்தை குட்டிகளோடு பிணமானார் என்று அந்த சோகச் செய்திகளை எல்லாம் நாம் கடந்த சில மாதங்களாகப் பத்திரிகையில் பார்த்துக்கொண்டு வருகிறோம்.

இத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கைது செய்து அந்த நிலைமையை அடக்கவேண்டும் என்பதற்காக தமிழக அரசு மிகத்தீவிரமாகக்கூட, அதற்காக ஒரு தனியான சிறப்புப் போலீஸ் அதிகாரிகளை எல்லாம் அங்கே நியமித்து, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காகச் சில அதிகாரிகள் அங்கே சென்று ஒரு கிராமத்திலே அந்த நக்சல்பாரி வாலிபர்களை கைதுசெய்து அழைத்து வருகிற நேரத்தில் அந்தக் காரின் மீது குண்டு வீசப்பட்டதோ அல்லது பத்திரிகையில் வந்திருக்கிற செய்திகளைப் போல் (அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிற வரையில் எங்களுக்குச் சரியான விளக்கம் தெரிவதற்கு வழியில்லை) அந்தக் காரில் இருந்த நக்சல்பாரிகள் தங்களுடைய மடியில் கட்டியிருந்த குண்டுகளை வெடித்து, சேதம் உண்டானதோடு மாத்திரமல்லாமல், காரில் இருந்த 6 உயிர்கள் பலியாக்கப்பட்டு உள்ளன. அதிலே 3 உயிர்கள் கடமை ஆற்றுவதற்காக தங்களுடைய வாழ்வை ஒப்படைத்துக் கொண்டவர்கள்-காவல் துறையைச் சேர்ந்தவர்கள்-ஒரு இன்ஸ்பெக்டர், இரண்டு காவல் துறை நண்பர்கள். இந்த 3 பேரும் பெரிய மிட்டா-மிராசு இல்லை; கோடீஸ்வரர்கள் அல்ல; நிலப்பிரபுக்கள் அல்ல; நிலத் திமிங்கலங்கள் அல்ல. சாதாரணமாக அரசாங்கத்தின் சம்பளத்தில் தங்களுடைய வயிற்றைக் கழுவிக்கொண்டு இருக்கின்ற சாதாரண அரசு அலுவலாளர்கள். அவர்கள் தங்களுடைய கடமையைச் செய்தார்கள். கைதுசெய்து கொண்டு வந்தார்கள். அது காவல் துறையினரின் கடமை. அதற்காக அவர்களும் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைக் கொல்கிற நேரத்தில் அந்தக் காரில் இருந்து கைது செய்யப்பட்ட நக்சல்பாரி கைதிகளும் தங்களுடைய உயிரை பலிகொடுத்து இருக்கிறார்கள்.

தன்னுடைய கடமையை ஆற்றுவதற்காகச் சென்று, தங்கள் உயிரை பலிகொடுத்த, அந்த 3 காவல் துறை நண்பர்களுக்கும்

திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பாக வீர வணக்கத்தையும், அதே நேரத்தில், தான்கொண்ட கொள்கைகளை நிறைவேற்று வதற்கு தவறான மார்க்கத்தை எடுத்து, அதன் காரணமாக, அந்த மரணப்படுக்கையில் தங்களைத் தள்ளிக்கொண்ட அந்த பரிதாபத்திற்குரிய வாலிபர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், இந்த நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப் படாமல் இருப்பதற்கு வழி என்ன என்பது சமுதாய ரீதியில், அரசியல் ரீதியில் பொருளாதார ரீதியில் அணுகவேண்டிய மிகப் பெரிய பிரச்சினை என்றாலும்கூட, நாட்டிலே அன்றாடம் சட்டம்-ஒழுங்கு, அமைதி இவைகளுக்கு அறைகூவல் விடுத்து, அதைச் சீர்குலைக்கும் முயற்சியில் இதுபோன்ற நிலை தொடர்ந்து நிகழா வண்ணம் அரசு மாத்திரமல்ல, அரசுக்கு உறுதுணையாக எல்லா கட்சிகளும் இருக்க வேண்டும் என்ற என்னுடைய பரிபூரணமான இருதய சுத்தியான எண்ணத்தை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மாத்திரமல்ல, இங்கே பேசுகின்ற ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் கூட, அரசின் சார்பாக பேசுகின்ற அமைச்சரும் கூட, அந்தத் தீவிரவாதிகளாக இருக்கும் வாலிபர் களுக்கு, அந்த இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

உங்களுடைய கொள்கைகள் நிறைவேற இது அல்ல மார்க்கம். நாம் விவாதிக்கலாம். என்னென்ன குறைகள் உங்களுடைய குறைகள், எந்தெந்த முறையில் அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டும். உங்களுடைய குறைகளை நாம் கலந்து பேசி விவாதிக்கலாம். எனவே, வன்முறைச் செயல்களைக் கைவிட்டு விடுங்கள். அந்த அணுகுமுறை தேவையில்லை. அந்த முறையில் நம்முடைய அணுகுமுறையை மாற்றி அமைத்துக்கொண்டு, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்காக, காவல்துறையைப் பயன்படுத்தக் கூடாது என்று சொல்லவில்லை. மக்களின் உயிருக்கும், உடைமைக்கும், வீடுகளுக்கும், பாதுகாப்பு அளிக்க வேண்டியது காவல் துறையினரின் கடமை. காவல்துறை அந்தக் கடமையை ஆற்றித் தீர வேண்டும்.

அந்தக் கடமை ஆற்றுகிறபோது, அந்தக் காலத்தில் உயிர்விட்ட 3 போலீஸ் அதிகாரிகளுக்கு அரசின் சார்பாக முதலமைச்சர் அவர்கள் ரூபாய் 90,000, ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் 30,000 என்கிற விகிதத்தில் அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு இன்னும்கூட அதிகம் கொடுக்கலாம். கொடுத்தது குறைவு என்று குற்றம்சாட்ட விரும்பவில்லை. அவர்கள் செய்து இருக்கின்ற அந்த வீரச்செயலுக்கு, அவர்கள் புரிந்த அந்தச் செயலுக்கு, தங்களுடைய இன்னுயிரை ஈந்தளித்த அவர்களுக்கு 30,000 ரூபாய் என்பதை ரூபாய் 50,000 என்று கொடுக்கலாம். இலட்சம் கூட கொடுக்கலாம். அப்படிக் கொடுத்தாலும் இழந்துவிட்ட அந்த உயிர்களை அந்தக் குடும்பத்தாருக்கு மீட்டுத்தர நம்மால் இயலாது. அதைப்போலத்தான் அந்தக் காரிலே இருந்து செத்துப்போய்விட்ட அந்தக் கைதிகள் நிலையும். எனவே, இதை எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அணுகி, தமிழகத்திலே ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்படுவதற்கு வழிவகுத்தாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்க அரசாங்கம் முன்வருகிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் அந்த ஒத்துழைப்பைத் தர தயாராக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டி, ஏன் நடைபெறுகிறது என்பதை நோய் நாடி, அதனுடைய முதல் தொடக்கம் நாடி, அந்த நோயை அகற்ற வேண்டும் என்பது பழமொழி; அதற்கேற்ப அரசும் மற்றுமுள்ள கட்சிகளுடைய தலைவர்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதற்காக அதைப்பற்றி விவாதிப்பதற்கு அவையை ஒத்திவைத்து பேசுவதற்கு நீங்கள் நேரம் அளிப்பீர்கள் என்ற நம்பிக்கையோடு, இந்தத் தீர்மானத்தில் எனக்குக் கொடுத்த நேரத்தில் இந்த அளவுக்கு கருத்துக்களை எடுத்துச் சொல்ல தாங்கள் அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

அரசாணை எரிப்புப் போராட்டம்

உரை : 24 நாள் : 2.3.1981

கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! தமிழகத்தில் கடந்த மாதம் 22ஆம் நாளன்றும், நேற்றையதினம் அதாவது மார்ச் முதல் நாளன்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தலைமைக் கழக நிர்வாகிகளும் துணைப் பொதுச்செயலாளரும், முன்னாள் அமைச்சர்களும், மாவட்டக் கழகச் செயலாளரும், தொண்டர்களும் கலந்துகொண்டு நடத்திய அமைதி வழி அறப் போராட்டத்தில் தமிழ்நாடு அரசு அண்மையில் அறிவித்துள்ள கைலாசம் கமிஷனுக்கான விசாரணைக்குரிய விஷயங்கள் அடங்கிய டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் அடங்கிய அரசு ஆணையின் நகலை எரிப்பது என்று அறிவித்து அவ்வாறு அந்த நிகழ்ச்சிகள் அமைதியான முறையில் மாநிலம் முழுவதும் நடைபெற்று இருக்கின்றன. அதிலே கலந்து கொண்டு அரசு ஆணையைக் கொளுத்தியவர்கள் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் என்பதும் அவர்களில் 15 ஆயிரம் பேர் ஏறத்தாழ கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள் என்பதும் எங்களுக்குக் கிடைத்துள்ள தகவலாகும். ஆனால் இந்த எண்ணிக்கையைக் குறைத்துச் சொல்லவேண்டும் என்ற வகையில் 4,581 பேர் என்று போலீசார் ஒரு கணக்கை பத்திரிகையாளர்களுக்குத் தந்திருக்கிறார்கள். அதாவது மேலே உள்ள அதிகாரிகள் தங்களுக்குத் தந்துள்ள தகவல்படி அதிகமானவர்களைக் கைது செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டாலும் எவ்வளவு குறைத்து கைது செய்ய முடியுமோ அவ்வளவு குறைத்து கைது செய்யுங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள் என்று அவர்கள் அறிவித்ததாகக் கட்சி சார்பற்ற பத்திரிகைகளிலேகூட செய்தி வந்திருக்கின்றது.

இப்படி அரசு ஆணையைக் கொளுத்தியவர்கள் மீது இ.பி.கோ. 285 சட்டப்பிரிவின்படி வழக்குகள் தொடரப்

பட்டிருக்கின்றன. அவ்வாறு தொடரப்படுவதாக அறிவிக்கப் பட்டிருக்கின்றது. 285-வது பிரிவு ஒரு பொருளைக் கொளுத்தி

இன்னொருவர் மீது போட்டு அவரது உயிருக்கோ அல்லது உடமைக்கோ ஆபத்து ஏற்படுத்தினால் அதற்காகப் பயன் படுத்தக்கூடிய பிரிவாகும். அந்தச் சட்டப் பிரிவைப் பயன்படுத்தி ஏறத்தாழ 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே ஒருமுறை பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் களுக்கு எதிராக ஒரு ஆணை வந்தபோது திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள் அரசு ஆணையைத் தீயிட்டுக் கொளுத்தினார்கள். அதன்பிறகு ஆசிரியப் பெருமக்கள் தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாத அரசு ஆணை ஒன்றை தீயிட்டுக் கொளுத்தினார்கள். இந்தச் சட்டப் பிரிவு அப்பொழுதெல்லாம் யார் மீதும் பிரயோகிக்கப்படவில்லை. இந்தச் சட்டப்பிரிவு பயன்படுத்தப் பட்டதும் இல்லை. ஆனால் இப்பொழுது அந்தச் சட்டப்பிரிவு எரிசாராய வழக்கு விசாரணை நியமனத்திற்கான ஆணையை அதன் நகலைக் கொளுத்தியதற்காகப் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது.

அந்த ஆணையின் நகலைக் கொளுத்தியதற்கு முக்கியமான காரணம், இந்தச் சட்டமன்றத்திலேயே கடந்த கூட்டத் தொடரிலேயே நான் பேசும்போதுகூடச் சொன்னேன். 1979ம் ஆண்டுமுதல் இந்த எரிசாராயப் பிரச்சனையிலே பல்வேறு குறைபாடுகள், பல்வேறு ஊழல்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதை பல ஆதாரங்களோடு இங்கே சுட்டிக்காட்டி, அவைகளையும் இந்த அவையிலே தங்கள் அனுமதியோடு படித்துக் காட்டியிருக்கிறேன், அதற்குப் பிறகு 10 தினங்களுக்கு முன்புகூட மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்த அறிக்கையிலேகூட தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு எரிசாராயம் கொண்டுபோக ஏற்றுமதி பெர்மிட் வழங்கியது சம்பந்தமாக என்று பொதுவாகத்தான் குறிப்பிட்டார்கள்.

ஆனால், நான் சொன்னது போல 1979ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற தவறுகளைப் பற்றி விசாரணை செய்வது சம்பந்தமாக டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் என்று இல்லாமல்

அல்லது முதலமைச்சர் அவர்களே! இங்கு அறிவித்தது போன்று பொதுவாகக் கேரளத்திற்கு ஏற்றுமதி செய்வதில் வழங்கப்பட்ட பெர்மிட்டுகளைப் பற்றி என்றுகூட இல்லாமல் அவர்கள் அந்த ஆணையில் டெர்மஸ் ஆப் ரெபரன்சில் - 1980ஆம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற்ற தவறுகளை என்று இரண்டு மாதங்களை மட்டும் குறிப்பிட்டு குறுகிய வட்டத் திற்குள் அந்த விசாரணையைக் கொண்டு வந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு இடையே உள்ள இப் பிரச்சனையை ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியைக் கொண்டு திரு. கைலாசம் அவர்களைக் கொண்டு விசாரணை.... (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சபையை எதற்காக ஒத்திவைக்க வேண்டும் என்பதற்கான காரணங்களை சற்றுச் சுருக்கமாகச் சொன்னால் நல்லது என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் மு.கருணாநிதி: அப்படிப்பட்ட விசாரணையை ஏற்றுக்கொள்ள முடியாது என்பதற்காகவும், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் தொடர்பான பிரச்சனையாக இருக்கிற காரணத்தினால், ஒரு மேல் மட்ட விசாரணைக்கு இந்த மாநில அரசே முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணத் தாலும் 22ஆம் தேதியன்றும், 1ஆம் தேதியன்றும் தமிழ்நாடு முழுவதும் இந்தப் போராட்டம் நடைபெற்றிருக்கிறது. இந்தப் பிரச்சனையில் 15,000 பேர்களுக்கு மேல் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். ஆனால் போலீசார் ஒரு தவறான எண்ணிக் கையைக் கொடுத்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சனையிலே திடீரென்று நமது முதலமைச்சர் அவர்கள் இந்திரா காங்கிரஸைச் சேர்ந்தவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டிருக் கிறார்கள் என்று சொல்லியிருகிறார்கள். அப்படி அவர்கள் தவறு செய்திருப்பார்களேயானால் அவர்களையும் சேர்ந்து விசாரிப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அந்த விசாரணையை மேல்மட்ட விசாரணையாக நடத்துவதற்கும் தாயாராக இருக்கிறோம். ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்று சொல்லி அவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்று நேற்றுகூட ஒரு விழாவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது

நடவடிக்கை எடுக்க திராவிட முன்னேற்றக் கழகம் தயங்காது அவர்களை விசாரணைக்கு உட்படுத்துவதற்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தடங்கலாக நிற்காது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

இந்திரா காங்கிரஸ் எம்.எல்.ஏ. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் சொல்லிவிடுகிற காரணத்தினாலே இந்த மிகப் பெரிய பிரச்சனையை, முறைகேட்டை மறைத்துவிட முடியும் என்ற கருத்து தேவையில்லை என்பதையும், இதுபோன்ற பிரச்சனைகள் எழுவதை தவிர்க்கவேண்டும் என்பதற்காகத்தான் மாநில அளவிலான நீதிபதி மட்டும் போதாது, மேல் மட்ட விசாரணை வேண்டும் என்கிற அறப்போராட்டத்தை நாங்கள் நடத்தியிருக்கிறோம். பெரிய பெரிய அதிகாரிகள்கூட ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் அமைதியாக எல்லா இடங்களிலும் நடைபெற்றது என்று அவர்கள் குறிப்பிட்டதாகப் பத்திரிகைகளிலேகூடச் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால் மதுராந்தகத்திலே அப்படி கைது செய்து அழைத்துச்சென்ற ஒருவர் மீது வழியில் சென்ற ஒருவர்கூட கல்லால் அடித்தார் என்ற நிகழ்ச்சியைப் பத்திரிகைகளில் பார்த்தோம். அவர் மீது போலீசார் எந்தவித நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரிய வில்லை.

எனவே 15,000 பேருக்கு மேல் ஈடுபட்டுள்ள மிகப் பெரிய போராட்டத்தின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு இந்த அரசு தங்களுடைய கருத்துக்களை, தாங்கள் எடுத்துள்ள முடிவு களை மாற்றிக்கொண்டு ஒரு திருத்தம் காண முயலுவதற் காகவும், மேல் மட்ட விசாரணைக்குத் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவும் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் கலவரம்

உரை : 25 **நாள்: 15.4.1981**

கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இராமநாதபுரம் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள இருசாரார் சார்பிலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் இந்த அவையின் முன் கொண்டுவருகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறேன்.

கடந்த சில நாட்களாக இராமநாதபுரம் நகரத்திலேயும், அதை சுற்றியுள்ள சிற்றூர் பகுதிகளிலும் கொலையும், கொள்ளையும், தீ வைப்புச் சம்பவங்களும், அதன் தொடர்பாகத் துப்பாக்கிப் பிரயோக நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன. ஏதோ ஒரு சிறிய நிகழ்ச்சியின் அடிப்படையில் இத்தகைய வன்முறை சம்பவங்கள் கடந்த ஒரு மாத காலமாகவே அரும்பி, இன்று நாட்டு மக்களுடைய கவனத்தைத் திருப்புகின்ற அளவிற்கும், மிகுந்த கவலையை நாட்டின் அமைதியில் அக்கறைகொண்ட ஒவ்வொருவருடைய உள்ளத் திலும் எழுப்புகின்ற அளவிற்கு ஏற்பட்டுள்ளது என்பதை மிகுந்த வருத்தத்தோடு இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த இரண்டொரு நாட்களுக்கு முன்புகூட வெள்ளா, ஆணைக் குடியிருப்பு, இருஞ்சூர் மடை, தெய்வசிறுநல்லூர், களறி, கைலாச மங்கலம் ஆகிய சிற்றூர்களில் உள்ள நூற்றுக் கணக்கான வீடுகள் தீ வைக்கப்பட்டு, முற்றிலும் அழிந்து சாம்பலாகி விட்டிருக்கின்றது என்ற செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. பல கிராமங்களில் உள்ள வைக்கோல் படப்புகள் தீ வைக்கப்பட்டு, அவற்றோடு இல்லாமல் உயிர் சேதங்கள், உடமைச் சேதங்கள், நூற்றுக்கணக்கான கால் நடைகள் உயிர் இழக்கக்கூடிய கொடுமைகள் இங்கே நடை பெற்றிருக்கின்றன. ஏதோ ஒரு அரசியல் கட்சி சண்டை யாகவோ, அல்லது இரண்டு குழுக்களிடையே ஏற்பட்ட

மோதுதலாகவோ இல்லாமல் வகுப்புக் கலவரம் என்ற அளவிற்கு, ஏற்கனவே, தங்களுடைய உரிமைகளை, சலுகைகளை பெற வாதாடுகின்ற, போராடுகின்ற, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், அதேபோல் தங்களுடைய உரிமைகளை சலுகைகளைப் பெற வாதாடுகின்ற, போராடுகின்ற தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதுதல் என்பதை எண்ணுகின்ற நேரத்தில் உள்ளபடியே ஒன்றே குலமாக, ஒற்றுமையாக வாழ வேண்டுமென்று உத்தமர்கள் பலர் நீண்ட நெடு நாட்களாக நம் நாட்டிலே செய்து வந்த பிரச்சாரம் இன்னும் முழுமையான வெற்றி அடையவில்லை என்பதை எண்ணித்தான் நாம் வருந்த வேண்டிய சூழ்நிலையில் இன்றைக்கு இருக்கிறோம்.

இன்றைக்கு அணுகுமுறை என்ன என்பதை எல்லாம் ஆலோசிப்பதற்கு இடையே, எழுந்துள்ள குமுறலை, கொதிப்பை, கொந்தளிப்பை அடக்குவதற்கு, உடனடியாக- நாம் ஈடுபடவேண்டிய செயல்முறைகள் எப்படி இருக்க வேண்டுமென்று விவாதிப்பதற்கும், அந்த விவாதத்தினுடைய கருத்துகள் அரசின் சார்பிலே கேட்டு, அதற்கேற்ற நடவடிக்கைகளை கட்சிச்சார்பற்ற முறையிலே அனைவரும் கலந்து எடுப்பதற்கும் உதவிகரமாக இருக்கும் என்கின்ற எண்ணத்தோடு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கே கொண்டுவர முற்பட்டேன். கடந்த ஒரு மாத காலமாகவே இராமநாதபுரம் வட்டாரத்திலே இந்த சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதிலே யார், யாரை முதலில் தாக்கினார்கள், என்ன காரணத்தினால் தாக்கினார்கள், யார் குற்றவாளிகள் என்கின்ற ஆராய்ச்சியிலே நான் ஈடுபட விரும்பவில்லை. அப்படி ஈடுபடுகின்ற காரணத்தினால் இருக்கின்ற நிலைமை மேலும் தீவிரப்படுத்தப்பட்டு, மேலும் வன்முறை சம்பவங்கள் அங்கே உருவாகி மீண்டும் ஒரு முதுகுளத்தூர் ஏற்பட்டுவிடக் கூடுமோ என்கின்ற அச்சத்தின் காரணமாகத்தான் நான் அந்த ஆராய்ச்சியிலே ஈடுபட விரும்பவில்லை. எனினும் காவல் துறையினர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை காலந்தாழ்ந்து எடுத்த காரணத்தினால் எந்த அளவிற்கு வன்முறைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை இங்குச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இனிமேலாவது பலத்த காவல் துறை பாதுகாப்போடு அங்கே பாதிக்கப்படுகின்ற மக்கள் மேலும் பாதிக்கப்படாமல் அவர்

களது உடைமைகள், உயிர்கள், குழந்தை குட்டிகள், கால்நடைச் செல்வங்கள் இத்தனையும் பாதுகாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற அந்த அடிப் படையிலேதான் இதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

கடந்த இரண்டொரு நாட்களுக்கு முன் வெளிவந்த 'இந்து' பத்திரிகையில்கூட அங்கே காவல் துறையினர் எப்படி எந்த அளவிற்கு செயல்பட்டனர் என்பதை வேடிக்கையாக அல்ல, வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள். இராமநாதபுரம் நகரத்திலே அண்ணாநகர் என்ற ஒரு பகுதி இருப்பதாகவும் அந்தப் பகுதி எப்படி இருக்கிறது என்பதையும் இந்து பத்திரிகை வருணித்துக் காட்டுகிறது.

Anna Nagar was the main target of attack. It is common knowledge in the town that this colony is noted for large scale illicit distillation of arrack and bootlegging too. But why did the police take so long to bring the situation under control?

என்று கேட்டுவிட்டு, அங்கே இருக்கிற நிலவரத்தை வருணிக்கிற போது,

Shabb-looking youths, armed with spears, clubs, iron rods, and knives were walking the streets quite freely the whole of Saturday as if they were in full command of the situation.

Their main haunt was the Railway feeder road and surprisingly there was not a single policeman in this area in spite of the fact that the railways was the only mode of communi cations since Friday afternoon.

At midnight on Saturday this correspondent was an eye-witness to the reign of terror unleashed on the railway station platform when some men, a few of them in an intoxicated state and all of them armed with iron rods walked up and down the platform, peering into the faces of the waiting passengers and passing uncharitable comment on women.

When the men left after this further creepy exercise, a jeep arrived on the scene and three police officers alighted from it. The Panic-Stricken passenger thought that their saviours had arrived at last to protect them. But it was evident that the police officers had arrived on a hunt for coffee to be taken to

their superioras. The flask which one of them carried proved their mission.

அந்தப் போலீஸ் அங்கே வந்ததுகூட கலவரத்தையோ ஏற்படக்கூடிய அமளியையோ அடக்குவதற்காக அல்ல, அவர் களுடைய மேலதிகாரிகளுக்கு காபி வாங்குவதற்காக போலீஸ் ஜீப் வந்ததே தவிர, கலவரங்களை அடக்குவதற்கு அமைதிப் படுத்துவதற்கு அமளி உருவாக்காமல் பார்ப்பதற்கு இல்லை என்றுதான் 'இந்து' பத்திரிகை எழுதிக்காட்டுகிறது. அப்படிப் பட்ட ஒரு சூழ்நிலையில் பலத்த காவல்துறையினருடைய கண்காணிப்பு இல்லாத காரணத்தால் கடந்த ஒருவார காலமாக இராமநாதபுரம் நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது. பாலைவன மாகக் காட்சி தருகிறது. கடைகண்ணிகள் அங்கே அடைக்கப் பட்டுக் கிடக்கின்றன. அந்தப் பகுதியிலே பேருந்து போக்கு வரத்தும் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. இராமநாதபுரம் நகரத் திலே மாத்திரம் 144 தடை உத்திரவு போடப்பட்டிருக்கிறது. பக்கத்திலே உள்ள கிராமங்களில் அந்தத் தடையுத்தரவு இல்லை. நகரத்திலே பெரும்பான்மையாக இருப்பவர்கள் கிராமங்களிலே உள்ளவர்களைத் தாக்குவதும் கிராமங்களிலே பெரும்பான்மையாக உள்ளவர்கள் நகரத்திலே உள்ளவர்கள் மீது படையெடுப்பதுமான சூழ்நிலை தடுத்து நிறுத்தப்படாவிட்டால் ஒரு பயங்கரமான வகுப்புக் கலவரத்தை அந்தப் பகுதியிலே மாத்திரமல்ல, மாநில அளவிலே ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தின் காரணமாக இப்படிப்பட்ட நிலைமை கடுகளவும் உருவாகக்கூடாது என்ற அக்கறையின் காரணமாக இந்த அவையை ஒத்திவைத்துவிட்டு நாம் அதைப்பற்றி விவாதித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் அனைவரும் பொறுப்பேற்கின்ற நிலைமையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் கொண்டு வருகிறேன்.

வருவாய்த்துறை அலுவலர் பிரச்சினை

உரை : 26 **நாள்: 16.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்னை குறித்து இந்த மாமன்றத்தில், பல நேரங்களில் பேசப்பட்டு, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்களும், நானும் விளக்கங்களை அளித்திருக்கின்றோம். கடந்த இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு, மாலை நேரத்தில் இந்த மாமன்றம் கூடியபோது, நண்பர் ரமணி அவர்கள், நான் அப்பொழுது வந்திருப்பதைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தப் பிரச்சினையை எழுப்பினார்கள். அன்று வருவாய்த்துறை அமைச்சரவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்த காரணத்தால், நானே விளக்கங்களை அன்றைக்கு வழங்கினேன்.

நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் இங்கே பேசும்பொழுது அரசினுடைய அணுகுமுறை சரியில்லை என்று சொன்னார். நான் இதை விவாதத்திற்கு உள்ளாக்க விரும்ப வில்லை. யாருடைய அணுகுமுறை சரியில்லை என்பது நாட்டுக்கு மிக நன்றாகத் தெரிந்துள்ள ஒன்றாகும்.

ஏற்கெனவே இருந்த அரசுகளை எதிர்த்து இப்படிப் பட்டப் போராட்டங்களில், திராவிட முன்னேற்றக் கழகம் பக்கபலமாக இருந்ததை மறந்து விடலாமா என்று கேட்டார். ஏற்கனவே, பேச்சு வார்த்தைகளுக்கே அழைக்கப்படாத ஒரு சூழ்நிலை இருந்ததையும், இன்றைக்கு இந்த அரசு பலமுறை பேச்சு வார்த்தைகளுக்கு இணக்கம் தெரிவித்து, அவர்களோடு பேசியிருப்பதையும் மறந்துவிடக் கூடாது.

நான் அன்றைக்கு அறிவிக்கும்பொழுதே திட்டவட்ட மாகச் சொல்லியிருக்கின்றேன். இதிலே முதலமைச்சருக்குத் தெரியாமல் வருவாய்த்துறை அமைச்சர் ஏதோ முடிவு எடுப்பதைப் போலவும், முதலமைச்சருக்குச் சரியான தகவல்கள் தரப்படவில்லை என்பதைப் போலவும் ஒரு கூற்று. பிரச்சாரம் செய்யப்படுகிறது. அதை நான் அன்றைக்கே மறுத்திருக்கிறேன். இருவரும் கலந்து பேசித்தான் இந்தப் பிரச்சினையிலே நாம் எப்படி அணுகி தீர்த்துவைக்கவேண்டும்; ஒரு நல்ல முடிவு ஏற்படுவதற்கு எப்படி வழிகோல வேண்டும் என்று சிந்தித்துச் செயல்பட்டு வருகின்றோம்.

நான் அன்றைக்குப் பேசும்பொழுது திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கின்றேன். பல கோரிக்கைகள்- வருவாய்த் துறை அலுவலர்கள் வைத்த கோரிக்கைகள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அவை எவை எவை என்பது குறித்துப் பத்தி ரிகையிலேயே விளம்பரம் தரப்பட்டிருக்கின்றன. ஏனென்றால், அறிக்கைகள் வாயிலாக வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருப்பவர்கள் தருகின்ற விளம்பரங்களால் சில அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும்கூட குழப்பத்திற்கு ஆளாகக் கூடாது. அரசு தன்னுடைய, என்றைக்கும் உள்ள பண்பான அணுகு முறையோடு அவர்களை அழைத்துப் பேசி, அவர்கள் வைத்த கோரிக்கைகளில் எதை எதை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக் கிறோம் என்பதையும், எதிலே சிக்கல் உருவாகி இருக்கிறது என்பதையும் தெரிவித்து இருக்கிறோம்.

அநேகமாக, மீதம் உள்ளது இரண்டு கோரிக்கைகள்தான்- ஒன்று, இந்த பர்சனல் பைல் என்பது. அதைப்பற்றி அன்றைக்கு விளக்கி இருக்கிறேன். பர்சனல் பைல் என்பது இரகசியக் குறிப்பேடு போன்றது அல்ல; அது ஒரு திறந்த புத்தகம். அது மாத்திரம் அல்ல. பொது மக்களுக்குப் பணியாற்றுவதற்கு நாம் மேலும் சுறுசுறுப்பாக, பொறுப்புணர்வோடு ஈடுபட வேண்டு மென்பதற்காக உள்ள புத்தகமே தவிர, அது கான்பிடன்ஷியல் ரிக்கார்டு அல்ல- இரகசியக் குறிப்பேடு அல்ல என்பதையும், மத்திய அரசு ஏற்கனவே அறிவித்ததைப் போல, அவர்களுடைய திறமை ஆய்வு செய்யப்படுகிற அந்த நிலைமையையும் நாம்

ஏற்றுக்கொள்ளாமல், அரசு ஊழியர்களுடைய சுதந்திரம் பாதிக்கப்படக்கூடாது என்பதிலே இந்த அரசு கண்ணும் கருத்துமாக இருக்கிறது என்பதையும் அன்றைக்கு நான் சுட்டிக்காட்டி இருக்கின்றேன். அப்படி இருந்தும்கூட அம்புரோஸ் குழுவினரால் சொல்லப்பட்ட சில பரிந்துரைகளை ஏற்று இப்பொழுது அந்த பர்சனல் ரிஜிஸ்டரிலே இருக்கின்ற சங்கடங் களைக்கூட ஓரளவு சீர்திருத்தலாம், அதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதும் பேச்சுவார்த்தையிலே வருவாய்த்துறை அமைச்சரவர்களால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீதம் உள்ளது, துணைத் தாசில்தார் பதவி பிர்க்கா அளவிலா, ஜோனல் அளவிலா என்பதும், ஜோனல் அளவில் டெபுடி தாசில் தார் என்று பிரச்சினை வந்ததும், வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள், அப்படியானால், வேலை நிறுத்தத்தை கைவிடுங்கள். அதைப்பற்றிப் பிறகு பேசலாம் என்று சொல்லியிருக்கிறார். இதிலே என்ன தவறு இருக்க முடியும்?

எல்லா கோரிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பிரச்சினைக்குரியதாக இருந்த இரண்டு கோரிக்கைகளில் ஒன்றைப் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டு, அதிலும் சில திருத்தங்கள் செய்வதாக அரசு ஏற்றுக்கொண்டு, மீதமுள்ள பிர்க்கா அளவு டெபுடி தாசில்தார் என்பதில், ஜோனல் அளவில் டெபுடி தாசில்தார் என்று அவர்கள் சொன்ன பிறகு, அப்படி யானால் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுங்கள், அதைப் பற்றிப் பிறகு பேசலாம் என்று அவரும் சொன்னார். நானும் அன்றைக்கு இந்த அவையிலே பகிரங்கமாக அறிவித்து இருக்கிறேன். ஒரு நல்ல முடிவு காணலாம். வேலை நிறுத்தத்தை திரும்பப் பெற்று, பேச்சுவார்த்தைக்கு வந்தால், அதைப்பற்றிச் சிந்தித்து ஒரு நல்ல முடிவு காணலாம், இந்த ஜோனல் அளவில் டெபுடி தாசில்தார் என்பது பற்றி என்று கூறி இருக்கிறேன். அதற்குப் பிறகும் பிடிவாதமாக இருப்பவர்கள் யார் என்பதைத் தான் எண்ணிப்பார்க்க வேண்டும். திரு. வரதராசன் பேசும்போது சொன்னார்கள். மிரட்டுகிற பாணியில் இந்த அரசு ஈடுபடுவதாக. இவைகள் எல்லாம் சில பத்திரிகைகளுக்கு தித்திப்பான செய்தி களாக இருக்கும். ''அரசு மிரட்டுகிறது- வரதராசன் அறைகூவல்'' என்றுகூட பத்திரிகைகளில் போடுவார்கள். நான் அதைப்

பற்றியெல்லாம் கவலைப்படவில்லை. இருந்தாலும் இருக்கிற நிலைமையை நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும்.

நீங்கள் உடனடியாக எங்களுடைய எல்லா கோரிக்கை களையும் ஏற்காவிட்டால், மாநிலம் தழுவிய அளவில் போராட்டம் நடத்துவோம். எல்லா அரசு அலுவலர்களையும் சேர்த்துக்கொண்டு போராட்டம் நடத்துவோம் என்று சொல்வது மிரட்டலா? அல்லது நாங்கள் கடைப்பிடிக்கிற அணுகுமுறை மிரட்டலா என்பதை நாடு நன்றாக சிந்திக்கும் என்று நான் கருதுகிறேன். இப்போதும் சொல்கிறேன், மிரட்டுகிற பாணியோ அல்லது அணுகுமுறை தெரியாத அரசோ அல்ல இந்த அரசு. ஒருவேளை நான் சொன்னால் அது பத்திரிகையில் வந்தால், சில பத்திரிகைகள் தவறாகக்கூடப் பிரசுரித்து விடுகிறார்கள், என்ன சொன்னேன் என்பதை சரியாகப் புரிந்துகொள்ளாமல். எனவே, அதை எழுதியே படிக்கிறேன். வருவாய்த்துறை அமைச்சரோடு பலமுறை பேச்சுவார்த்தை நடைபெற்று, அந்தப் பேச்சுவார்த்தையில் பல கோரிக்கைகள் இந்த அரசால் ஏற்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு கோரிக்கை களைப் பிறகு பேசி தீர்க்கலாம் என்றும், வேலை நிறுத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அரசு விளக்கி இருக்கிறது. இப்போதும் இந்த அவையின் சார்பாக- இந்த அவையின் உறுப்பினர்கள் சார்பாக இந்த அலுவலர்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். அரசு இப்படிப்பட்ட விஷயத்தில் கவுரவப் பிரச்சினை பார்க்கத் தயாராக இல்லை. ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்றுதான் அரசு விரும்புகிறது. அவர்களும் நம்மவர்கள்தான். அவர்கள் வேறு யாரும் அல்ல. அவர்களும் சேர்ந்துதான் இந்த அரசை நடத்திக்கொண்டிருக் கிறார்கள் என்பதை இந்த அரசு புரிந்துகொள்ளாமல் இல்லை.

அவர்கள் கேட்டுள்ள இந்தப் பிரச்சினைகளில், உள்ள சிக்கல்களைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், பேசலாம். வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கிக்கொண்டு வாருங்கள். பிறகு பேசலாம். ஏனென்றால், பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பிறகு, மீதம் இருக்கிற ஒன்றிரண்டு பிரச்சினைகளுக்காக வேலை

நிறுத்தம் தொடரத் தேவையில்லை என்றுதான் இப்போதும் சொல்கிறேன்.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே, ஒரு கிளாரிபி கேஷன் பெற விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர் களிடமிருந்து ஒரு சின்ன விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். அன்று தொழிலாளர் நல மானியத்தில் பேசும்போது, முதல மைச்சர் அவர்கள் இங்கே இருக்கும்போதுதான் எங்களுக்கு, எதிர்க்கட்சிகளுக்கு இப்படிப்பட்ட விஷயங்களில் கருத்து சொல்வதற்கு வசதியாக இருக்கும். நான் ஏதோ சாமர்த்தியமாக செய்யவேண்டும் என்பதற்காக சொல்லவில்லை. அதுதான் எங்களுக்கு வசதி, அதுதான் நியாயம் என்ற முறையில்தான் சொன்னேன்.

இப்போதுகூட எங்களுக்கு என்ன தோன்றுகிறது என்றால், அரசுக்கும் அவர்களுக்கும் இடையே வித்தியாசம் ஒன்றும் தெரியவில்லை. சோனல் என்பதை பேசலாம் என்ற ஒரு நிலையை உறுதியாக வருவாய்த்துறை அமைச்சர் அவர்களும், அவருடைய அதிகாரிகளும் எடுத்துவிட்டால், அவர்கள் அதை ஒப்புக்கொண்டு அவர்கள் முதலில் வைத்த கோரிக்கையி லிருந்து, இந்த கோரிக்கைக்கு மாறி, ஒப்புக்கொள்ளலாம் என்று அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் டிபரன்ஸ் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகவே, முதலமைச்சர் அவர்களிடம் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், இப்போது முதல்வர் அவர்களும் வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்கள். இந்த அவையின் சார்பாக, இன்றைக்கே அவர்களை நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்களைக் கூப்பிட்டு, -அவர்கள் மேற்கொண்டு தங்களுடைய ஒர்க்கிங் கமிட்டியில் எப்படி பேசுகிறார்களோ அப்படி பேசட்டும்;- பேசுவதில் என்ன தடை? நேற்றைய தினம் பேச்சுவார்த்தை நடந்தபோது, இறுதியாக அவர்களிடத்தில் கையெழுத்திடாத குறிப்பு கொடுக்கப்பட்டது. நீங்கள் 16ஆம் தேதி வேலைக்கு வரவில்லை என்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர்களுக்குக் குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. கையெழுத்தில்லாமல் ஒரு குறிப்பு கொடுக்கப்பட்டிருப்பது

என்பது உண்மையாகும். அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். இவ்வளவுக்கும் பிறகு சுமூகமாக இதைத் தீர்ப்பதற்கு, அவர் களைக் கூப்பிட்டு பேசுவதில் பிரச்சினைகள் எதுவும் தடையாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அந்த ஒரு விளக்கத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொடுத்தால் இன்றைக்கே பேச்சுவார்த்தையை அவர்கள் தொடங்கலாம்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் இவ்வளவு விளக்கமாகக் கூறிய பிறகும் மீண்டும் நம்முடைய ரமணி அவர்கள் இதிலே விளக்கம் கேட்கிறார்கள். நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். அதைத்தான் இப்போது திரும்பவும் சொல்கிறேன். இன்றைக்கு வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு இருக்கின்றவர்களுக்கு ஏதோ கையெழுத்திடாத ஒரு கடிதம் கொடுக்கப்பட்டதாக அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கடிதத்திலே என்ன வாசகம் இருக்கிறது என்று சொன்னாரோ, அதைத்தான் இந்த அரசு இந்த அவை யிலே சொல்லியிருக்கிறது. பகிரங்கமாகவே சொல்லியிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடாமல் தரவேண்டும் என்பது அல்ல; (குறுக்கீடு) - தெரியும் நான் பார்த்திருக்கிறேன்- தரவேண்டும் என்பது அல்ல. பத்திரிகை விளம்பரங்களில்கூட எது சொல்லப்பட்டதோ, அதைத்தான் இந்தக் கையெழுத்திடாத கடிதத்திலும் சொல்லப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன், அவர்கள் வைத்த பத்துக்கும் மேற்பட்ட கோரிக்கைகளில் ஒன்றிரண்டைத் தவிர, எல்லாக் கோரிக்கைகளையும் இந்த அரசு ஏற்றுக் கொண்டுவிட்ட பிறகு, அந்த ஒன்றிரண்டிலேகூட மிச்சம் ஒரே ஒரு கோரிக்கை, டெபுடி தாசில்தார் பிர்க்கா அளவிலா, அல்லது ஜோனல் அளவிலா என்கிற இந்த ஒரே ஒரு பிரச்சினை, அதைப் பற்றி பிறகு அமர்ந்து பேசித் தீர்க்கலாம் அவர்கள் ஜோனல் அளவு போதும் என்ற அளவிற்குக்கூட வந்து இருக்கிறார்கள். அதைப்பற்றிப் பிறகு பேசித் தீர்க்கலாம், இன்றைக்கு வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுவிட்டதாக இன்று மாலையிலே செய்தி வருமானால் நாளைக்கு நானே அவர்களோடு அமர்ந்து பேசத் தயாராக இருக்கிறேன்.

ஆம்பூர் பிரச்சினை

உரை : 27 **நாள்: 16.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூரில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவம் குறித்து இந்த மாமன்றத்திலே பல உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அவர்கள் அளித்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தின் வாயிலாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதேபோல, திண்டுக்கல்லில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் முன்பு வந்தபோது அதிலே முதலில், இந்தக் குற்றங்களுக்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்பதைப்பற்றியெல்லாம் விவாதிக்கப்பட்டு, அன்றைய தினம் திண்டுக்கல்லில் ஏற்பட்ட சூழ்நிலைக்கு பெரும்பாலும் இந்து முன்னணி, அவர்களுடைய பேச்சுகள், அவர்கள் வழங்கிய துண்டுப் பிரசுரங்கள் காரணமாக இருந்தன என்று குறிப்பிட்டிருந்தேன்.

இன்றைய தினம் ஆம்பூர் நிகழ்ச்சிகளைப் பார்க்கும் போது ஏற்கெனவே அங்கேயுள்ள இந்த முன்னணியினருக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் அதைப்போலவே இந்து முன்னணியினர் மற்றும் இஸ்லாமியப் பெருமக்களுக்கும் மோதுதல் சில பல நேரங்களில் ஏற்பட்டு அதனுடைய மொத்த விளைவாக இந்த நிகழ்ச்சி ஆம்பூரில் அம்பேத்கார் அவர்களுடைய பிறந்தநாள் அன்று நடைபெற்று இருந்தது.

நம்முடைய திரு. உகம்சந்த் அவர்கள் பேசும்போதும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசும் போதும், திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசும்போதும்

போலீசார் பெரும் தவறு செய்துவிட்டார்கள் என்பதைப்போல் கருத்துக்களை அறிவித்தார்கள். போலீசார், அவர்கள் சார்பிலே வழங்கியுள்ள அந்த அறிக்கையை முதலிலே நான் இங்கே படித்தால் அவர்கள் யார் பக்கமும் அங்கே சேராமல் நடைபெற்ற நிகழ்ச்சிகளை, மோதுதலைக் குறைத்து வந்திருக்கிறார்கள். அது சரியா, அல்லவா என்று சீர்தூக்கிப் பார்க்க வேண்டியது அரசின் கடமையும் கூட, அதைப்போலவே எதிர்க்கட்சியிலே அமர்ந்து இருக்கின்ற உறுப்பினர்களுடைய கடமையும்கூட. 14.4.1990 அன்று ஆம்பூர் நகரத்தில் அம்பேத்கார் அவர்களின் 100வது பிறந்தநாள் விழாவைக் கொண்டாட ஆம்பூர் பி. காஸ்பாவைச் சேர்ந்த டாக்டர் பார்த்தீபன் என்பவர் ஊர்வலம் ஒன்றுக்கு அனுமதி கேட்டு குடியாத்தம் காவல் துறை கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்திருந்தார்கள். இதன் பேரில் ஓ.ஏ.ஆர். திரையரங்கம், எம்.சி.ரோடு வழியாக பஸ் ஸ்டாண்ட் அருகிலே உள்ள விழா மேடையை ஊர்வலமாகச் சென்றடைய அனுமதி வழங்கப்பட்டது. 3,000 பேர் வரை கூட்டம் வரும் என்று எதிர்பார்த்து ஒரு கூடுதல் காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் இரு காவல்துறை துணை கண்காணிப்பாளர் தலைமையில் சுமார் 150 போலீசார் பாதுகாப்புப் பணிக்கு நியமிக்கப்பட்டார்கள். இதன்றி ஊர்க்காவல் படையினரும் பெண் போலீசாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டார்கள். வாணியம்பாடி தாசில்தாரும் உடன் இருந்தார். ஊர்வலம் 14.4.1990 அன்று மாலை 4.15 மணிக்கு ஆரம்பமானது. ஊர்வலத்தில் ஆம்பூர் பி. கஸ்பா மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இருந்து 2,500 பேர் என்ற அளவிலே ஆதிதிராவிட மக்களும், 500 இஸ்லாமிய மக்களும் கலந்து கொண்டார்கள். இந்த ஊர்வலத்தினர் அனுமதிக்கப்பட்ட ஓ.ஏ.ஆர். திரையரங்கு வழியாக எம்.சி. ரோட்டை அடையாமல் அனுமதிக்கப்படாத வளையல்காரத் தெரு வழியாக எம்.சி. ரோட்டை அடைய அனுமதி கேட்டார்கள். ஊர்வலத்தின் தலைவர்கள் அசம்பாவிதம் எதுவும் நிகழாது என உறுதிமொழி அளித்ததன் பேரில் அவர்கள் கேட்ட வழியிலேயே அனுமதி கொடுக்கப்பட்டது. ஊர்வலம் எம்.சி. ரோட்டை அடையும் வரை எந்தவிதமான பிரச்சினையும் எழவில்லை.

1988ஆம் ஆண்டிலேயிருந்து ஆம்பூரிலே ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கும் அருகாமையிலே உள்ள கீழ்முருங்கை என்ற

கிராமத்து ஆதிதிராவிட மக்களுக்கும் பகை இருந்து வந்துள்ளது. மேலும் ராம் லீலா ரதம் சென்ற சமயம் ஆம்பூர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலே விரோதம் தோன்றியது. இந்தக் காரணங்களால் ஊர்வலத்தில் சென்றவர்கள் ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினார்கள். ஊர்வலம் எம்.சி. ரோட்டைத் தொட்டவுடன் வி.எஸ்.எம். என்ற தனியார் பேருந்து மீது கல் எறியப்பட்டது. பணியிலே இருந்த காவல்துறை அதிகாரிகள் கல்லெறிந்த பகுதியினரை விரட்டினார்கள். எம்.சி. ரோட்டில் விழா மேடையை அடைவதற்கு முன் ஊர்வலத்தினர் டாக்டர் கந்தராஜ் என்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினைச் சேர்ந்தவரின் மருத்துவமனை மீது கல் வீசியதில் 25,000 ரூபாய் அளவுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டது. அதற்குப் பின் எந்தக் கட்சியிலும் தொடர்பு இல்லாத ஜி.கே. மூர்த்தி என்பவரின் ஏ.எஸ்.எ. பேக்கரி மீது கல் எறிந்தார்கள். பிறகு சாலையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வாகனங்களை அடித்து 25,000 ரூபாய் அளவுக்குச் சேதம் ஏற்படுத்தப்பட்டது.

ஓரத்தில் வைக்கப்பட்டிருந்த சிறு கடைகள் சிலவற்றை யும் அடித்து நொறுக்கினார்கள். பின்னர் விழா மேடைக்கு அருகிலேயுள்ள, பாரதீய ஜனதா, கட்சியைச் சேர்ந்த திரு. உமாசங்கர் என்பவருடைய 'ராஜ்கமல்' திரையரங்கத்தை கல்லால் எறிந்து கடுமையாகச் சேதப்படுத்தியதில் சேதத்தினுடைய மதிப்பு ரூ. 25 ஆயிரம் என்கிற அளவுக்கு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு இடத்திலும், பாதுகாப்புக்குப் போடப்பட்டிருந்த காவல்துறையினரும் ஊர்வலத்தோடு வந்த காவல்துறையினரும், சேதம் விளைவித்தவர்களை விரட்டினார்கள். ஊர்வலத்தினர், திரையரங்கத்தையும், லாரிகள், வேன்கள் போன்ற தனியார் வாகனங்களையும், சேதப்படுத்தாமல் காக்க, திரையரங்கம் அருகே, காவல் துறையினர் நடவடிக்கை எடுத்தபோது, ஊர்வலத்தினர், காவல்துறையினரை, கல்லாலும் தடியாலும், சோடா பாட்டில்களாலும் தாக்கத் தொடங்கி அதிலே காவல் துறையைச் சேர்ந்த 30 பேர் வரையில் காயமுற்றார்கள். நிலமைகள் கட்டுக்குள் அடங்காமல் போகவே, பாதுகாப்புப் பணியில் இருந்த வாணியம்பாடி தாசில்தார் உத்தரவின் பேரில் கண்ணீர் புகைக்குண்டுகள் 18 பயன்படுத்தப்

பட்டன. வீசப்பட்ட கண்ணீர் புகைக் குண்டுகளை ஊர்வலத் தினர் எடுத்து, திருப்பி, போலீசார் மீது வீசித் தாக்கினார்கள். நிலைமைகள் மேலும் கட்டுக்குள் அடங்காமல் இருக்கவே, தாசில்தார் உத்தரவின்பேரில் தடியடிப் பிரயோகம் நடத்தப் பட்டது. இந்த நிலைமையிலும், கலவரம் செய்தவர்கள், சோடா பாட்டில்களையும், கம்பு, கத்தி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தியும் காவல்துறையினர் மீது தாக்குதலைத் தொடர்ந்ததில் மேலும் பல காவல்துறையினர் காயமடைந்தனர். இதுவரையில் எடுத்த எல்லா நடவடிக்கைகளும், எச்சரிக்கையும் பலன் அளிக்காமல் போகவே, பொருட்சேதத்தை தடுக்கவும், தற்காப்புக்காகவும் தாசில்தார் உத்தரவின்படி தகுந்த எச்சரிக்கைக்குப் பின், துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. மொத்தம் 6 குண்டுகள் சுடப்பட்டன. துப்பாக்கிச் சூட்டில் அதே இடத்தில், சங்கிலிக் குப்பத்தைச் சேர்ந்த மனோகரன் என்பவர் மகன் வில்சன் ராஜ் என்பவர் இறந்தார். 8 பேர் காயம் அடைந்தார்கள். அவர்களில், வேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டு, பெரியவிலக்கம் கிராமத்தைச் சேர்ந்த சிவலிங்கம் என்பவரது மகன் ராமு என்பவர் மரணமுற்றார். காயம் அடைந்த 7 பேரில் மசூத் என்ற ரசூலைத் தவிர மற்ற அனைவரும் ஆதிதிராவிடர்கள். காயம் அடைந்தவர்களில் அசோகர் என்பவரும், மசூத் என்ற ரசூல் என்பவரும், வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஜான் அருண்குமார், பழனிவேல், தங்கராஜ் ஆகியோரும், வேலூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். சி.எம்.சி. மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த ரவீந்திரன், பெருமாள் ஆகியோர் சிகிச்சை முடிந்து, வீட்டிற்கு அனுப்பப்பட்டார்கள். காவல் துறையினரில், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், மற்றும் 6 ஆய்வாளர்கள் உள்பட, மொத்தம் 48 பேர் காயம் அடைந்தார்கள். இவர்களில் 4 பேர் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். இறந்தவர்களின் சவ அடக்கம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் 15.4.1990 அன்று நடந்து முடிந்தது. ஊர்வலத்தினர் கலைந்து சென்றபோது, சாணங் குப்பம் பகுதியிலே, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துப் பேருந்துகள் மூன்றின் மீது கல்

எறிந்து சேதப்படுத்தியதில், பெரும் சேதம் விளைந்தது. சேதத்தின் மதிப்பு 16 ஆயிரம் ரூபாய் என்று கணக்கிடப் பட்டது. சரக்கு ரெயில் ஒன்றின் மீது கல் எறிந்ததால், அந்த என்ஜின் முன் பகுதி கண்ணாடி உடைந்தது; உதவி டிரைவரின் கண்ணிலும் காயம் ஏற்பட்டுள்ளது. கலவரத்தில் ஈடுபட்டவர் களில், இதுவரை 115 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கலவரம் பற்றித் தகவல் கிடைத்தவுடன், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், காவல்துறையினருடன் ஆம்பூர் வந்து, அமைதியை நிலைநாட்டிட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். தற்சமயம் 3 காவல்துறை கண்காணிப்பாளர்கள் மேற் பார்வையில் பாதுகாப்புப்பணிகள் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளன. தமிழக சிறப்பு காவல் படையைச் சேர்ந்த 3 கம்பெனிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. 14.4.1990 அன்று இரவு 8 மணிக்குப் பின்னர் எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ளப்பட்டது. காவல்துறைத் தலைவரும், வேலூர் சரக காவல்துறை துணைத் தலைவரும், ஆம்பூரில் முகாம் இட்டுள்ளனர். மாவட்ட ஆட்சித் தலைவர் ஆம்பூர் சென்று பாதுகாப்பு ஏற்பாட்டினைப் பார்வையிட்டார். இப்போது, நிலைமை சீராக உள்ளது என்று அளிக்கப்பட்டுள்ள இந்த காவல்துறையினுடைய அறிக்கை, நடைபெற்ற நிகழ்ச்சிகளைக் குறித்து அளிக்கப்படுகிறதேயல்லாமல், யார் சார்பிலேயும் சென்று அறிக்கைவிட்டதாகச் சொல்ல முடியாது. இப்படி ஒரு நிலைமை வருமென்று தெரிந்து, ஏராளமான காவல்துறையினர் அங்கே குவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து இங்கே கூறப்பட்டது. ஆனால் நான் இங்கே அடிக்கடி தெரிவித்து இருப்பதைப் போல, 5 கோடி மக்கள் கொண்ட இந்த மாநிலத்தில் சுமார் 40 ஆயிரம் அல்லது 42 ஆயிரம் என்ற அளவிற்கு இருக்கின்ற காவல் துறையினர்- இந்த 5 கோடி மக்களுக்கிடையே இந்த பெரிய நிலப்பரப்பில், இந்த மாநில நிலப்பரப்பில், எங்கெங்கு என்னென்ன நடைபெற முடியும் என்பதை முன்பாகவே அறிந்து, மின்னல் வேகத்தில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைத் தடுத்து நிறுத்துவது என்பது இயலாத காரியமாகும். கடந்தகாலத்தில் இருந்த எந்த அரசு நடைபெற்ற போதும், இப்படிப்பட்ட காரியங்கள்

நடைபெற்றிருந்தன. இருந்தாலும்கூட, ஆம்பூர் போன்ற இடங்களில் இது போன்ற ஓர் ஊர்வலம் நடைபெற்ற நேரத்திலே, தக்க பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் கூடுதலாகவே அங்கு காவல்துறையினர் சென்றிருக்கிறார்கள்.

ஒரு ஊர்வலம் அதுவும் ஒரு பெரிய அரசியல் அறிஞருடைய நூற்றாண்டு விழா ஊர்வலம் நடைபெறும்போது இத்தகைய கலவரத்தை யாரும் எதிர்பார்த்து இருக்க முடியாது. ஒரு பெரிய கூட்டம் திரளுகிற நேரத்திலே போதுமான அளவுக்கு காவலர்கள் இருக்க வேண்டும் என்ற கருத்தை நாம் ஏற்றுக்கொள்வது என்றாலும்கூட ஆம்பூர் என்ற அந்தப் பகுதியிலே 3 ஆயிரம் பேர், 4 ஆயிரம் பேர் செல்கிற அந்த ஊர்வலத்தில், அதுவும் அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா ஊர்வலத்தில் இப்படி ஒரு நிகழ்ச்சி நடைபெறும் என்று எதிர்பார்த்து இருக்க இயலாது. ஆனால் அதற்கான மூல காரணங்கள் இருந்து இருக்கின்றன. ஆம்பூர் பாரதீய ஜனதா கட்சியின் சார்பிலே வெளியிடப்பட்ட ஒரு துண்டு அறிக்கையில் அம்பேத்கார் விழாவை இந்துக்களாகிய நாம் கொண்டாடலாம். இந்து முன்னணியின் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டிருக்கிற புத்த மதக்காரர்கள் கொண்டாடலாம், அம்பேத்கார் புத்த மதத்தைச் சேர்ந்த காரணத்தால், ஆனால் வெளிநாட்டு மதத்தைச் சேர்ந்தவர்கள் கொண்டாடலாமா என்று பாரதீய ஜனதா கட்சியின் சார்பிலே ஒரு துண்டு அறிக்கை அங்கே வெளியிடப் பட்டு இருக்கிறது. இவைகள் எல்லாம் அங்கே ஒரு புகைச்சல் ஏற்படுவதற்கு முன்னோடியாக அமைந்து இருக்கின்றன என்பதை நாம் மறுக்க இயலாது. இருந்தாலும்கூட ஊர்வலத்தில் சென்றவர்கள், சற்று அமைதியைக் கடைப்பிடித்து இருப்பார் களேயானால் இவ்வளவு பெரிய ரகளை, அமளி வருவதற்கு இடம் இருந்து இருக்காது என்று நான் கருதுகிறேன். திண்டுக்கல்லில் நடைபெற்ற கலவரங்களுக்கு இந்து முன்னணி அங்கே காரணமாக இருந்ததைப்போல இங்கே ஊர்வலத்தன்று நடைபெற்ற காரியங்களுக்கு இந்து முன்னணி காரணமாக இருந்தது என்று நான் கூறமாட்டேன். இந்து முன்னணியின் கொள்கைகள் நமக்குப் பிடிக்காதவைகளாக இருந்தாலும்கூட அதனுடைய நடவடிக்கை அன்றைய தினம் அந்த ஊர்வலத்தைப்

பொறுத்தவரையில் அப்படி அமைந்ததாக என்னால் கருத இயலாது. ஆனால் ஊர்வலத்தில் செல்கின்ற ஆதிதிராவிடர்கள், இஸ்லாமிய மக்கள்- இவர்களுடைய உணர்வுகளைத் தூண்டி விடுகின்ற அளவுக்கும், அவர்களைக் கொச்சைப்படுத்துகின்ற அளவுக்கும் பாரதீய ஜனதா கட்சியின் சார்பிலே இந்து முன்ன ணியின் சார்பிலே அவர்கள் வெளியிட்டுள்ள அந்தத் துண்டு அறிக்கை எல்லோரையும் புண்படுத்தக்கூடியவை என்பதை மறுக்க இயலாது.

நம்முடைய லத்தீப் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்தத் தெருவிலே போகலாம், இந்தத் தெருவிலே போகக் கூடாது என்று போலீசார் எப்படி நிர்ணயிக்கலாம் என்று கேட்டார்கள். நான் அவருக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்பு கிறேன். ஏற்கெனவே இராம ஜென்ம பூமிக்காக செங்கல் எடுத்துச் சென்றபோது இந்து முன்னணியைச் சேர்ந்தவர்கள் சென்னையிலே ஊர்வலம் நடத்திய நேரத்திலே கடற்கரை ஓரமாக வந்த ஊர்வலம் திருவல்லிக்கேணி உள்ளே நுழைந்து தான் தீர வேண்டும் என்று சொன்னபோது நம்முடைய காவல் துறையினர் கண்டிப்பாக அதற்கு இடம் தர முடியாது என்று மறுத்து விட்டார்கள். திருவல்லிக்கேணி வழியாகச் சென்றால் அங்கு இருக்கின்ற மசூதிகள், இஸ்லாமியப் பெருமக்களுடைய இல்லங்கள்- இவைகளை எல்லாம் கடந்து செல்கிற நேரத்தில் ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடும்; அதன் காரணமாக சிறு பொறி பெரும் தீயாக மாறக்கூடும் என்பதற்காகத்தான் அன்றைக்குக் காவல் துறையினர் இந்து முன்னணியினுடைய ஊர்வலத்தை திருவல்லிக்கேணிக்குள்ளே போகக்கூடாது என்று தடுத்தார்கள். அப்போதும் அப்படித்தான் கேட்டார்கள். காவல் துறை எப்படித் தடுக்கலாம்? இந்தத் தெருவுக்குப் போ, இந்தத் தெருவுக்குப் போகக்கூடாது என்று எப்படிச் சொல்லலாம் என்று கேட்டார்கள். அதைப்போல நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் கேட்பது எனக்கு வேதனையாக இருக்கிறது. இந்த ஊர்வலம் செல்கிற நேரத்திலே இந்த ஊர்வலத்தில் செல்கின்றவர்கள் வாழ்கின்ற இடங்களில் இவர்களாலேயோ அல்லது அவர்களா லேயோ அசம்பாவிதம் ஏற்படும்; அதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் சில தெருக்களில் செல்லக்கூடாது என்று

அனுமதி வழங்கப் போலீசார் தயங்கி இருந்திருக்கக்கூடும் என்பதை நான் உணர்கின்றேன். எனினும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் விரும்பத்தக்கதல்ல என்பதை எப்படி இந்த அரசு கருதுகிறதோ அதைப் போலத்தான் எதிர்க்கட்சியிலே உள்ள வர்கள் அனைவரும் கருதுவார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அங்கே இதுபோன்ற சூழ்நிலைகள் உருவாவதற்கு கடந்த 2, 3 மாத காலத்துக்கு முன்பு இருந்தே சில தொடக்கங்கள் ஏற்பட்டன என்பதை நம்முடைய குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டி இருக்கின்றார்கள். ஆனாலும் தொடர்ந்து இப்படிப்பட்ட இடங்களில் காவல் துறையினர் தனிக்கவனம் செலுத்தி வருகின்றார்கள். அதையும் மீறித் திடீரென்று வெடித்து விடுகின்ற இந்தச் சம்பவங்களுக்கு காவல் துறையை முழுப் பொறுப்பாக ஆக்குவது நியாயமல்ல. எனினும் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களை எல்லாம் நாம் அறவே புறக்கணித்து விடுவதற்கில்லை. அவைகளிலே உண்மை இருக்கக்கூடும். அவைகளை எல்லாம் ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதி அளிக்கலாமா என்பதை முதலமைச்சர் யோசிக்க வேண்டும் என்று நம்முடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரால் இந்த அரசின் சார்பில் உயிரிழந்த குடும்பத்தாருக்குத் தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும் என்று ஆணையிடப்பட்டு இருக் கிறது என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதுபோல நிகழ்ச் சிகள் நம்முடைய தமிழ் மாநிலத்தில் எங்கும் நடைபெறாமல் காப்பாற்றுகின்ற அந்தப் பெரும் பொறுப்பை நாம் அனைவரும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறி அமைகின்றேன்.

மீனவர் பிரச்சினை

உரை : 28 **நாள்: 21.04.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து முதலில் இந்த நிகழ்வினையும், அது தொடர்பாக நாங்கள் மேற் கொண்டுள்ள முயற்சிகளையும், விளைந்துள்ள நிலையையும் சுருக்கமாக இங்கே சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பிறகு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு இயன்ற அளவுக்கு விளக்கம் அளிக்கவும் நான் முன்வருகின்றேன்.

தமிழக மீன் வளத்துறை இயக்குநர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தோடு தொடர்புகொண்டு காணாமல்போன மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். தமிழக அரசு இந்த விஷயத்தில் முழுக்கவனம் செலுத்தி, காணாமல் போன மீனவர்களை மீட்பதற்கு விரைவான முயற்சி களை எல்லாம் எடுத்துள்ளது. காணாமல் போன மீனவர்களைப் பற்றி தகவல்களைப் பெறவும், அவர்களை மீட்கவும், இராமநாத புரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் முயற்சிகளை எடுத்து வருகிறார். 20.4.1990 அன்று காலை பேசாலை மீனவர் சங்கத்திலிருந்து இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவருக்கு ஒரு அயல்நாட்டுத் தந்தி வந்துள்ளது. அதில் 12 படகுகளும், 57 தமிழக மீனவர்களும், பேசாலை மீனவர் சங்கக் கட்டிடத்தில் பத்திரமாக இருப்பதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பேசாலை என்ற இடம் இலங்கையின் வடக்குப் பகுதியான தலைமன்னாரிலிருந்து 12 கிலோ மீட்டர் கிழக்கிலே உள்ளது. இந்த இடம் தனுஷ்கோடியிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காணாமல் போன நமது மீனவர்கள்

மன்னார் அருகில், இலங்கைக்கு அருகே பத்திரமாக உள்ளதாக வும், அவர்களைப் பாதுகாப்பாக இராமேஸ்வரத்திற்கு அனுப்பி வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இலங்கையி லுள்ள பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மூலமாக சென்னை மீன் வளத்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு நேற்று மாலை தகவல் வந்துள்ளது. தனுஷ்கோடிக்கு அப்பால் கடல் பகுதியில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள காரணத்தினால் மீனவர்கள் திரும்பி வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், தகவல் பெறப்பட் டுள்ளது. தனுஷ்கோடிக்கும், தலைமன்னாருக்கும் இடையே கடல் பரப்பிலே தூரம் மிகக்குறைவாக இருப்பதால் எல்லை பற்றிய வரையறையை துல்லியமாக மதிப்பிடுவதில் மீனவர் களுக்கு சிரமங்கள் இருக்கின்றன என்பதையும் அவர்கள் நமக்குத் தகவலாகத் தந்துள்ளார்கள். இந்த எல்லை சரியாக வகுக்கப்படாத காரணத்தாலே, அல்லது வகுக்கப்படுகின்ற எல்லையிலே சில நேரங்களில் குழப்பம் ஏற்படுகின்ற காரணத் தினாலே, சில நேரங்களில் வேண்டுமென்றே எல்லையை மீறிச் செல்கின்ற காரணத்தினாலே ஒரு நாட்டு மீனவர்கள் இன்னொரு நாட்டு மீனவர்களால் சிறை பிடிக்கப்படுவது அல்லது கடத்திச் செல்லப்படுவது என்பது இயற்கையாக நடைபெற்று வரும் ஒன்று. நம்முடைய கடற்கரை ஓரங்களில் 12 nautical Miles-Tenitorial Waters என்று பொருள். அது மாண்புமிகு உறுப்பினர் களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் அப்படி அதைக் கடந்து சென்றால் பாஸ்போர்ட் மற்றும் எமிகிரேசன் சட்டங் களின்படி அது குற்றமாக ஆக்கப்படுகிறது. 12 Nautical Miles எல்லை என்கின்ற இந்த நிலைமை நம்முடைய இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே மிகுந்த குழப்பத்தை சில இடங்களில் ஏற்படுத்துகின்றது. வேதாரண்யத்திலிருந்து இலங்கையினுடைய எல்லை, ராமேஸ்வரத்திலிருந்து இலங்கையினுடைய எல்லை குறிப்பிட்ட 12 மைலுக்குக் குறைவாக இருப்பதால் அங்கே சரி பாதியாக 12 மைல் எது என்று வகுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால்தான் பிரச்சினை அடிக்கடி ஏற்பட்டிருக் கிறது. அவர்களைப் பற்றி எல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் டெல்லிக்குச் சென்று அங்குள்ள அமைச்சரிடம்

பேசுவார் என்று அறிவித்தீர்களே, அது என்ன ஆயிற்று என்று இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு வினாவை எழுப்பினார். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் அவர்களைச் சந்தித்து இது குறித்து அவரிடத்திலே நீண்ட நேரம் விவாதித்திருக்கிறார். அதைப்பற்றிய குறிப்பை மாத்திரம் இங்கே இப்போது குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு மாநாட்டிற்கு ஏப்ரல் 11, 12 தேதிகளில் டெல்லிக்குச் சென்றிருந்தபோது மீனவர் பிரச்சினை குறித்து மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் வெளியுறவு அதிகாரிகளோடும் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி, தமிழக மீனவர்கள் இலங்கைக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க, மேலும் தீவிரமாக கடலோர கப்பல் படையை (Coast Guard) உபயோகிக்க வேண்டுமென்றும், இந்திய இலங்கை கடல் எல்லையைத் தெளிவாக மீனவர்கள் தெரிந்துகொள்ள ஏற் பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதை அடுத்து, மத்திய அரசும் உடனடியாக இதைப் பரிசீலித்து ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளது.

இலங்கை அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, நமது மீனவர்கள் கடத்தப்பட்டு, இன்னல்களுக்கு ஆளாக்கப்படக் கூடாது என்று மத்திய அரசு வலியுறுத்தும் என்றும் திரு. குஜ்ரால் அவர்கள் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்களி டத்திலே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நான் சில நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அத்துமீறி நம்முடைய எல்லைக்குள்ளே மீன்பிடிக்க வந்தவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில், சில நிகழ்வுகளிலே இங்கே கைது செய்யப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறார்கள். 7.12.1988இல் கவர்னர் ஆட்சி நடைபெற்றபோதுகூட இரவு மூன்று மணி அளவில் பர்மாவைச் சேர்ந்த 12 மீனவர்கள் நவீன மீன் படகிலே நமது கடல் எல்லைக் குள்ளே நுழைந்து மீன் பிடித்ததற்காக கைது செய்யப்பட்டு, 13.3.1989 அன்று அவர்கள் மீது மேல் நடவடிக்கை கைவிடப்

பட்டு, திருப்பி அனுப்பப்பட்டார்கள். 7.12.1988லே கைது செய்யப்பட்டவர்கள் அவர்கள். அதற்குப் பிறகு 28.3.1989, இந்த ஆட்சி வந்த பிறகுகூட, காலை 10.15 மணிக்கு ஸ்ரீலங்காவி லிருந்து எரிக்காலம்பட்டி மன்னாரைச் சேர்ந்த நஷிர் என்பவர் இப்படி எல்லையை மீறி இங்கே வந்ததற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பிறகு விசாரணை செய்யப்பட்டு 29.5.1989 அன்று அவர்கள்மீது மேல் நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 7.1.1990 அன்று மாலை 4 மணி அளவில் 'சாவின்' என்ற ஒரு மீன்பிடிப் படகிலே வந்தவர் இங்கே கைது செய்யப்பட்டார். அது பர்மாவிலிருந்து வந்த படகாகும். அதற்குப்பிறகு அவர் ஜாமீனிலே விடுதலை ஆனார். இருப்பினும் அந்தப் படகு இன்னும் திருப்பி அனுப்பி வைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லை களை மீறுவது பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. கடந்த காலத்திலே 4, 5 ஆண்டுக்காலத்திலே, இடையிலே ஐ.பி.கே.எப்., கப்பல்கள் நின்றுகொண்டிருந்த காரணத்தால் நம்முடைய மீனவர்களேகூட அதைத்தாண்டிச் செல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அந்தக் காவல் படை அங்கேயில்லை. இவர்கள் தெரியாமலோ அல்லது தெரிந்தோ, எப்படியோ அந்த இடத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் அப்படிச் செல்கிற வர்களை அங்கே எச்சரித்து, நீங்கள் வராதீர்கள் என்று சொல்லி திருப்பி அனுப்புவதற்குப் பதிலாக அவர்களை அங்குள்ள சிலர்- அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும் சரி, அல்லது இலங்கை இராணுவ வீரர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தப் போராளிகளாக இருந்தாலும் சரி, அவர்களை எச்சரித்து அங்கேயிருந்து திருப்பியனுப்பாமல், அவர்களைக் கைது செய்து கொண்டுபோய், அங்கே வைப்பதும், அது ஒரு பெரிய பரபரப்பான செய்தியாக தமிழகத்திலே பரவுவதும் நல்லதல்ல என்ற அந்த உணர்வில் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களையும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர், சி.பி.ஐ. சார்பாக நண்பர் அழகர்சாமி அவர்கள் ஆகியோர் சொன்ன அந்தக் கருத்துக்கள் எனக்கு உடன்பாடான கருத்துக்களே தவிர, அதிலே நான் வேறுபட

வில்லை. அவர்கள் எச்சரித்து அனுப்பப்பட வேண்டும். நீங்கள் எல்லையைத் தாண்டி வரக்கூடாது என்று எச்சரித்து அனுப்பப் பட வேண்டுமேயல்லாமல், இப்படி அவர்களை அங்கேயே வைத்து, இரண்டு நாள் விளையாட்டுகாட்டுவதோ அல்லது நல்லமுறையில் நாங்கள் உபசரித்து அனுப்பினோம் என்று சொல்லுவதோ இங்குள்ள தமிழர்களுக்குத் திருப்தியை அளிக் காது என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத்தலைவர் அவர்களே இங்கே குறிப்பிட்டார்கள். நான் அன்றைக்கே சொல்லி இருக்கிறேன். எந்தப் போராளிகளாக இருந்தாலும், அவர்கள் ஆயுதங்களோடு தமிழகத்திலே உலவுவதற்கு இந்த அரசு இடம் தராது என்பதை நான் மீண்டும் ஒரு முறை வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளுடைய பெயரால் இங்கே நடைபெறுகின்ற சில தீவிர பிரச்சாரங்களைப் பற்றிகூட காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் சொல்லி, பத்திரிகைகளைக் காட்டி நினைவு படுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சாரங்களும் தடை செய்யப்படும் என்பது மாத்திரமல்ல. இன்றைக்கு நான் சொல்லுகின்ற கருத்துக்களை எச்சரிக்கையாக அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், தொடர்ந்து அப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுவார்களானால், யாராக இருந்தாலும் அவர்களை சட்டம் விட்டுவைக்காது என்பதையும் நான் தெரிவித்துக்கொண்டு, நீங்கள் எல்லாம் எடுத்துச்சொன்ன அந்தக் கருத்திலே உங்களு டைய உணர்வுகளோடு நானும் ஒன்றுபடுகிறேன் என்று கூறி, இதற்கு மேல் இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தலைவரவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மழை வெள்ள நிவாரணம்

உரை : 29 **நாள்: 12.05.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, புயல் குறித்தும் அது தவிர்க்கப்பட்டது குறித்தும், மழையின் காரணமாக ஓரளவு தமிழ்நாட்டிலே சில பகுதிகளில் குறிப்பாக சென்னையில், செங்கை-அண்ணா மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஆதி திராவிட மக்கள், மீனவ மக்கள் ஆகியோர் குறித்தும், இந்த அவையில் 2 அல்லது 3 தடவைகளுக்கு மேலாக விளக்கங்களை அளித்து இருக் கின்றேன். எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். ஏதோ மத்திய அரசு விளம்பரத்திற்காக ஒரு செய்தியை அறிவித்ததாக. நேற்று நான் இங்கு வைத்த விளக்கத்திற்குப் பிறகும் அதைச் சிலபேர் புரிந்துகொள்ளாமல் இருப்பது விந்தையான ஒன்றாகும். ஏனென்றால் 39 கோடி ரூபாய் இதுபோன்ற நிவாரணங்களுக் காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நாடாளு மன்றத்தில் மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறார். முன்பெல் லாம் என்ன நிலை என்றால் புயலோ அல்லது வெள்ளமோ ஏற்பட்டு அல்லது வறட்சியோ ஏற்பட்டு நிவாரணம் தேவை என்றால் மாநில அரசு உடனடியாக மத்திய அரசுக்கு எழுதி, நேரில் சென்று அமைச்சர்களைச் சந்தித்து, தந்தி கொடுத்து, இவ் வளவுக்கும் பிறகு அங்கிருந்து மாநில அரசையும் நம்பாமல், அவர்கள் ஒரு குழுவை அனுப்பி, அந்தக் குழு மாநிலத்திலே எது வறட்சிப் பகுதி, எது வெள்ளப் பகுதி, எது புயலால் பாதிக்கப்பட்ட பகுதி என்றெல்லாம் ஆராய்ந்த பிறகு, அவர் களுடைய கருணை உள்ளத்திற்குத் தகுந்தபடி இவ்வளவு கொடுக்கலாம் என்று மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அதற்குப் பிறகு மத்திய அரசு அவர்கள் 40 கோடி ரூபாய்

என்றால் 20 கோடி ரூபாய் அல்லது 10 கோடி ரூபாய் என்று வழங்கி, இதுபோன்ற ஒரு பரிதாபகரமான நிலைமை, மாநிலங் களுக்கு உரிமை அற்ற ஒரு நிலை கடந்த காலத்திலே இருந்து வந்தது.

இப்போதுள்ள நிலை அப்படி அல்ல. முதலிலேயே ஒவ்வொரு மாநிலத்திற்கும் அங்கு வறட்சி ஏற்பட்டால், வெள்ளம் ஏற்பட்டால், புயல் வந்தால் நிவாரணப் பணிகளுக் காக இவ்வளவு தொகை என்று அவர்கள் ஒதுக்கிவிடுகிறார்கள். அப்படி ஒதுக்கப்பட்ட தொகை 39 கோடி ரூபாய். இந்த வெள்ளத்திற்கு நாம் செலவு செய்தது போக மீதிப் பணம் அப்படியே இருக்கும். அடுத்து ஒரு பெரிய பாதிப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு வறட்சியோ, வெள்ளமோ, புயலோ வருமானால் அந்தப் பணத்தை நாம் செலவழித்துக் கொள்ள லாம். அல்லது இந்த ஆண்டு முழுவதும் அத்தகைய செலவே இல்லாமல் போனால் அடுத்தஆண்டு இதைப்போன்று 39 கோடி ரூபாயோ 50 கோடி ரூபாயோ தரப்படும்போது இந்த ஆண்டு மிச்சப்பட்ட தொகை அத்தோடு அன்றைக்கு ஒரு திரண்ட தொகையாகச் சேர்ந்துவிடும். இதுதான் இன்றைக்குள்ள நிலைமை. எனவே, மத்திய அரசு கேட்டு, பணம் இப்போது தரவில்லையே தவிர, கேட்காமல் ஏற்கனவே ஒதுக்கி இருக்கிறது என்ற உண்மையைத்தான் நேற்றைக்கு நான் இந்த அவையிலே எடுத்து வைத்தேன்.

மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியதுபோல் மற்ற எல்லா நிவாரணப் பணிகளும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மீனவர்களுடைய கஷ்டங்கள், ஆதி திராவிட மக்களுடைய கஷ்டங்கள், குடிசைவாழ் மக்களுடைய கஷ்டங்கள் இவைகளை எல்லாம் உணர்ந்து உடனுக்குடன், புயல் பாதிப்பு வந்துவிடக்கூடாது என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. அதற்குப் பிறகு இப்போது ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கான நிவாரணப் பணிகளும் இப்போது நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைப்பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் ஒரு அறக்கட்டளையிலே இருந்து ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் அனுப்பியிருப்பதாக நேற்றைய தினம் தகவல் தந்துள்ளார். இந்தப் பணம் வந்து சேர்ந்ததா, அளிக்கப்பட்டு விட்டதா என்று எல்லாம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். விரைவிலே அது வந்து சேரும், வந்து சேர்ந்த உடன் அந்தப் பணம் அளிக்கப்படும்.

அதைப்போலவே ஆந்திர மாநில முதலமைச்சரும் ஒரு நல்ல உள்ளத்தை, நல்ல எண்ணத்தை பரிமாறிக்கொள்ளக் கூடிய வகையில் 10 லட்சம் ரூபாய் இங்கே நம்முடைய நிவாரண நிதிக்காக அவர்கள் நேற்றைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அவருக்கும், துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்களுக்கும் தமிழக அரசின் சார்பாக, இந்த அவையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



ஆட்டோ சங்கர் பிரச்சினை

உரை : 30 **நாள்: 23.08.1990**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களும், நண்பர் பாண்டியன் அவர்களும் ஆட்டோ சங்கர் சிறையிலிருந்து தப்பியதன் அடிப்படையில் சில கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். நண்பர் பாண்டியன் அவர்கள் இந்த நீதி விசாரணை எந்த நீதியைத் தெரிந்துகொள்ள, எந்த நீதியை வரவழைக்க என்ற அடிப்படையிலே தன்னுடைய கருத்தை இங்கே அமைத்து, வினா எழுப்பினார்கள். நீதிபதி விசாரணையைத்தான் நாம் சுருக்கி நீதி விசாரணை என்று சொல்கிறோம். ஏற்கெனவே இந்த வழக்கு, மாநில கிரைம் பிராஞ்சுக்குத் தரப்பட்டு, புலன் விசாரணையில் அவர்கள் ஈடுபட்டு இருக்கிறார்கள்.

நான் நேற்றைக்கு முன் தினமும், நேற்றும் அறிவித்ததைப் போல, அந்தச் சிறைச்சாலையில் உள்ள சூப்பிரின்டென்டண்ட் உள்பட 13 அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு 3 பேர்கள் கைது செய்யப்பட்டு, மற்றவர்கள் தற்காலிகமாக வேலை நீக்கமும் செய்யப்பட்டு இருக்கிறார்கள். இது ஒரு பெரிய நடவடிக்கை என்பதை யாரும் மறுக்க இயலாது. அந்த நடவடிக்கை எடுத்து, ஒரு அதிகாரியைக் கொண்டே விசாரணை என்கிற அளவிலே கூட நிறுத்தி இருக்கலாம். அப்படிப்பட்ட - விவாதத்தில் - கருத்துக்கள்கூட அதிகாரிகள் மட்டத்திலே எடுத்துச் சொல்லப்பட்டது. இருந்தாலும்கூட ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரிப்பதன் மூலம் நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் இங்கே எடுத்துச்சொன்ன பல்வேறு கருத்துக்களுக்கான உண்மைகள் வெளிப்படும். வெளிப்பட வேண்டும் என்பதிலே

நான் மிகுந்த உறுதியாக இருக்கிற காரணத்தாலேதான், அவைகள் வெளிவரவேண்டும் என்பதற்காகத்தான் நீதிபதியைக் கொண்டு அந்த விசாரணை நடைபெற வேண்டும் என்ற அந்த முடிவை எடுத்து, நேற்றைய தினம் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

உண்மையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இவைகள் எல்லாம் எந்த அடிப்படையிலே நடைபெற்று இருக்கின்றன. எத்தகைய திரைமறைவுப் பணிகள் கடந்த ஆண்டுகளில் நடந்திருக்கின்றன. அரசுக்குத் தெரியாமல், அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வராமல் அரசினுடைய கண்களை மறைத்துவிட்டு, அரசு அதிகாரிகள் சிலரே இதுபோன்ற ஒரு சமுதாய விரோதியினுடைய செயல்களுக்கு உடன்பாடாக இருந்து இருப்பதும், அவன் சிக்கிக்கொண்ட பிறகு அவனையும் அவனுடைய கூட்டாளிகளையும் விடுவிப்பதற்கு உடந்தையாக இருந்திருப்பதும் மன்னிக்க முடியாத குற்றங்களாகும். அப்படிப்பட்ட குற்றவாளிகளை அடையாளம் காட்டுவது மாத்திரம் அல்ல, அவர்களுக்கு யார் யார் ஒத்துழைத்தார்களோ, அவர்களையும் அடையாளம் காட்ட வேண்டும். இந்த மாநில கிரைம் பிராஞ்ச் புலன் விசாரணையோடு முடிவுற்று ஓடியவர்கள் பிடிக்கப்பெற்று, ஓடுவதற்குக் காரணமாக இருந்த சில பேர்கள் தண்டிக்கப் பட்டால் மட்டும் போதாது என்பது என்னுடைய எண்ணம்.

அதற்குப் பின்னாலே, பின்னணியிலே, எத்தனை பேர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான், ஆரம்பகாலத்திலே மிகுந்த பரபரப்போடு ஆட்டோ சங்கர் கைது செய்யப்பட்ட காலத்திலே வெளிவந்த பல விவரங்கள், அதற்குப் பிறகு, அவைகள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து 'ஃபேட் அவுட்' ஆகிவிட்ட நிலையிலே மறைந்துவிட்ட பல விஷயங்கள், இவைகள் எல்லாம் மீண்டும் கிளப்பப்படுவதற்கு நீதிபதி விசாரணை தேவை என்கிற முடிவை அரசின் சார்பிலே எடுத்திருக்கிறோம். அந்த விசாரணையிலே நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தனக்குக் கிடைத்த தகவல்களை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்த அவையிலே பேசுவதோடு அமை

யாமல், அவர்கள் கடந்த இரண்டு நாட்களாக ஓர் எதிர்க்கட்சிக்கு உரிய இலக்கணத்தோடு என்னென்ன கடமைகளைச் செய்ய வேண்டுமோ அந்தக் கடமைகளை எல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அவர்கள் சொன்ன கருத்துக்களும் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளவேண்டிய நல்ல கருத்துக்கள். அவ்வளவு கருத்துக்களும் உண்மையா அல்லவா என்பது பிரச்சினைக்குரியதாக இருந்தாலும்கூட, உண்மை எது, உண்மை அல்லாதது எது என்பது நாட்டுக்குத் தெரிந்தாக வேண்டும். அதற்கு நீதிபதியினுடைய விசாரணை நிச்சயமாகப் பயன்படும் என்ற கருத்தை நண்பர் பாண்டியன் அவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிலே பணியில் உள்ளவர்களை நியமிப்பதைப் பற்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் அவர்கள் சொன்ன கருத்தை பாலசுப்பிர மணியம் அவர்கள் இங்கே நினைவுபடுத்தி இருக்கிறார்கள். ஆனால் அந்தக் கருத்து தனக்கு ஒத்தது இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். பணியில் உள்ளவர்களை இந்த நீதிபதி விசாரணைக்கு அமர்த்துவதா, அல்லது ஓய்வு பெற்ற ஒருவரை அமர்த்துவதா என்ற முடிவை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்கள் எடுத்து நமக்கு அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அத்தகைய அறிவிப்பு வந்த பிறகு, அவர்கள் யாரை வைத்து இந்த விசாரணையை நடத்தலாம் என்று கருதுகிறார்களோ, அது நாட்டுக்கு செய்தியாக அறிவிக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தோடு சேர்த்து பாண்டியன் அவர்கள் வேறொரு வழக்கைப் பற்றியும்- சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார் என்று பத்திரிகையிலே செய்தி வந்ததாகச் சொன்னார். சந்தனக் கடத்தல் வீரப்பன் தமிழ்நாட்டிலே இல்லை என்பதுதான் எங்களுக்கும் கிடைத்துள்ள தகவல். இது நம்முடைய காவல்துறையை மாத்திரம் குற்றம் சொல்வதாக கருதிவிடக்கூடாது. இதிலே எல்லா அதிகாரங்களையும் காவல் துறைக்கு- இங்குள்ள அரசு மாத்திரமல்ல, கர்நாடகத்திலே உள்ள அரசும் சேர்ந்து எல்லா அதிகாரங்களையும் காவல்துறைக்கு- அளித்திருக்கிறது. கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் வீரேந்திர

பாட்டீலை டில்லியிலே சந்தித்தபோது அவரோடு இதைப்பற்றி நான் பேசியிருக்கிறேன். அவரும் இதைப்பற்றி என்னிடத்திலே விவாதித்திருக்கின்றார். இரு தரப்பு, இரு அரசுகளுடைய போலீசாரும் கலந்து பேசி, மிகுந்த ஒற்றுமையோடு இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

அவர்கள் குறிப்பிட்ட தேவாரம் போன்ற அதிகாரிகளைப் பயன்படுத்த இந்த அரசு தயங்காது. அவருக்கு வேறு பணிகள் இருக்கின்ற காரணத்தால் இந்தப் பணி ஒப்படைக்கப்படாமல் இருந்திருக்கலாம். அவரை இந்தப் பணியிலே ஈடுபடுத்துவ திலே இந்த அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் கிடையாது. எப்படியும் இதுபோன்ற சமுதாய விரோதிகளை, அரசுக்கு வர வேண்டிய வருமானத்தை வேறு வழியிலே இன்றைக்கு திருடிக் கொண்டிருக்கிற இத்தகைய கொள்ளைக்காரர்களைப் பிடிப்ப திலே அரசு தீவிரமாக இருக்கும். இதிலே இரண்டு அரசுகளும்-கர்நாடகம், தமிழகம் ஆகிய இரண்டு மாநில அரசுகளுமே-மும்முரமாக ஈடுபட்டு இருக்கின்ற காரணத்தால் விரைவிலே அந்தத் திருடர்கள் பிடிபடுவார்கள் என்பதையும் நான் தெரி வித்துக் கொண்டு, இந்த நீதிபதி விசாரணையில் மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்களைப் போன்ற உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற தகவல்களை எல்லாம் தரவேண்டும். ஏனென்றால் மறைந்து கிடக்கின்ற ஒரு பேருண்மை நாட்டுக்கு வெளியிடப்படவேண்டுமென்ற அந்த ஆசையின் காரணமாக இதைத் தெரிவித்து அமைகிறேன்.

விபத்து நிவாரணம்

உரை : 31 நாள் : 25.05.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த விபத்தின் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களும் சில கருத்துக்களை எடுத்துச்சொல்லி, உயிரிழந்தவர்களுடைய குடும்பங்களுக்கு மேலும் நிதியுதவி அளிக்கவேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் சார்பில் மிகத் தாமதமாக வந்துசேர வேண்டிய தொகை உடனடியாக பொதுப்பணித்துறை அமைச்சருடைய ஏற்பாட்டின் காரணமாகவும், அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவருடைய முயற்சியின் காரணமாகவும் உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்துத் துறை அமைச்சர் குறிப்பிட்டதைப் போல வழக்கமாக அரசின் சார்பில் 3 ஆயிரம் ரூபாய்தான் நிதியாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த நிதி வழங்கப்பட்டிருக்கிறது, மேலும் நிதி வழங்கப்பட வேண்டும் என்று திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இலட்சக்கணக்கில் வழங்கலாம் என்று திரு. தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த விபத்திற்கு என்ன காரணம் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே எடுத்துக்காட்டி, ஓட்டுநர்களை ஓய்வுபெறச்செய்து மீண்டும் வாகனங்களை ஓட்டச் செய்ய ஒரு முறை வகுக்க வேண்டும் என்று எடுத்துக் காட்டினார்கள். அத்துடன் நல்ல பயிற்சி பெற்றவர்களை ஓட்டுநர்களாக நியமிக்கவேண்டும் என்ற ஒரு அரிய

கருத்தையும் இங்கே எடுத்துக்கூறியிருக்கிறார்கள். இந்தக்கருத்துக்கள் எல்லாம் போக்குவரத்துத் துறையால் மேற்கொள்ளப்படும் என்றாலும்கூட, நாம் எவ்வளவு எச்சரிக்கையாகச் சென்றாலும் எதிரே வருகின்ற வேறு வாகனங்களிலே ஓட்டுநர்களாக இருப்பவர்கள் இந்த எச்சரிக்கையோடு வருகின்றார்களா என்பதுதான் இப்போதுள்ள பெரும் பிரச்சினையாகும். இந்த விபத்திலேகூட, நம்முடைய போக்குவரத்துத் துறையைச் சார்ந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தினுடைய அந்தப் பேருந்து ஓட்டுநரால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றும், இதற்கு முழுமுதற் காரணம் எதிரே வந்த அந்த ஆம்னி பஸ் மோதியது என்றும், அதன் காரணமாக இந்தப் பெரும் விபத்து ஏற்பட்டது என்றும் எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. எனவே, இந்தத் துறையிலே உள்ள எல்லோருடைய மனமும் திருந்தியாக வேண்டும். மிக வேகமாகச் செல்ல வேண்டும். அதுவும் இரவு நேரங்களில் மிக வேகமாகச் செல்ல சாலைகளில் இடம் இருக்கிற காரணத்தினால், போக்குவரத்து குறைவாக இருக்கிற காரணத்தினால், அப்படிப்பட்ட வாய்ப்புகள் இருப்பதாலும் இத்தகைய விபத்துக்கள் தவிர்க்க முடியாதவைகளாக ஆகிவிடுகின்றன. எனினும், இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களைத் தள்ளி வைத்து விடாமல், போக்குவரத்து துறை கவனத்திலே எடுத்துக்கொள்ளும் என்ற உறுதியை என் சார்பிலும் அளித்து, இன்னும் சிலர் யார் என்றே தெரியாத, அடையாளம் தெரியாத நிலையிலே இருக்கிற காரணத்தினால் அவர்களுடைய குடும்பங்களைப் பற்றியும் விசாரித்து மற்றும், இறந்தவர் களுடைய குடும்பங்களைப் பற்றியும் விசாரித்து, உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்தவுடன் என்றில்லாமல், திரு. ஞானசேகரன் இங்கே கூறியவாறு மேலும் ஒரு பத்தாயிரம் ரூபாய் நிதியாக அந்தக் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 32 **நாள் : 28.05.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்பின்மீது உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் துப்பாக்கிச் சூடு, இந்த ஆட்சி அமைந்தபிறகும் தொடர்ந்து நடைபெறுகிறது என்பதை வேதனையோடு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஒரு சிலர் குற்றச்சாட்டாகவே அதைக் கூறி இருக்கிறார்கள். இந்தத் துப்பாக்கிச் சூடு எதுவும், அரசை எதிர்த்து ஒரு கோரிக்கை காரணமாக, நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூடு அல்ல. அவரவர்கள் ஆங்காங்கு தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக அல்லது வகுப்பு விரோத சர்ச்சைகளின் காரணமாக மோதிக்கொண்டு, அதைத் தீர்த்து வைக்க காவலர்கள் தலையிடுகிற நேரத்தில் கலவரங்கள் மேலும் முற்றி போலீசார் தாக்கப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூடுகள் ஆகத்தான் இவை காணப்படுகின்றன.

இன்னும் போலீசார் பழைய போக்கிலேயே இருக்கிறார்களோ என்ற சந்தேகம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மனித உடலில் ஈரல் முக்கியமான உறுப்பு. அதிகமாகக் குடிப்பவர்களுக்கு அந்த ஈரல் கெட்டுப்போய் உயிருக்கே ஆபத்து வருவதுண்டு. ஆனாலும் கெட்டுப்போன ஈரல், பெரும்பகுதி கெட்டுப்போனாலும், மீதம் மிகச்சிறிய அளவு என்று சொன்னாலும் உயிருக்கு ஆபத்து இல்லை, அவரைப் பிழைக்க வைத்துவிடலாம் என்பது மருத்துவ நிபுணர்களுடைய கணிப்பு. தமிழகத்திலே காவல்துறை என்ற ஈரல், முக்கால் பகுதி கெட்டுப்போய் (மேசையைத் தட்டும் ஒலி) கால் பகுதிதான் மிச்சம் இருக்கிறது. அந்தக் கால் பகுதியை வைத்துக்கொண்டு இந்த

அரசு என்கின்ற மருத்துவர், இந்த மாநிலத்தை உயிர்ப்பிக்கலாம் என்ற கருத்தோடு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதிகாரிகள் மாற்றங்களையெல்லாம் ஏடுகளிலே பார்த்திருக் கிறீர்கள்; செய்திகளிலே காணுகிறீர்கள். நான் விடுத்துள்ள என்னுடைய பிறந்தநாள் குறித்த அறிக்கையிலேகூட, என் மனம் புண்ணாகியிருக்கிறது என்று சொன்ன காரணமே, எந்த திசையை நோக்கினாலும் இந்தச் சிக்கலை எப்படி எடுப்பது என்கின்ற சிக்கல்தான் என்னை வாட்டிக்கொண்டிருக்கிறது. இந்த நேரத்திலே சில பேர் இதைப் பயன்படுத்திக்கொண்டு அரசுக்கு ஒரு கெட்ட பெயரை உண்டாக்க வேண்டும் என்ற சூழ்நிலையில், சில நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றார்கள். அதுபோன்ற நிகழ்வுதான் இந்த நிகழ்வு என்று நான் சொல்ல மாட்டேன். இதிலே வேதனை என்னவென்றால், மோதிக் கொண்டவர்கள் இருவருமே கிறித்துவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதிலே ஒரு வேறுபாடு, ஒரு பகுதியினர் தலித் கிறித்துவர்கள், இன்னொரு பகுதியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த கிறித்துவர்கள். கிருத்துவச் சமுதாயத்தவர் தலித்துக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தவர்களும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டு, அதிலே கொலையுண்டவரும் ஒரு தலித் ஆதிதிராவிடர். சுடப்பட்டு மாண்டவரும் ஒரு ஆதிதிராவிடர் என்பதை எண்ணும்போது வேதனைப்படாமல் இருக்க முடியாது. அந்த உணர்வோடு இந்த அறிக்கையை உங்கள் முன்னால் நான் வைக்கிறேன்.

திண்டுக்கல் நகர், தெற்கு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேட்டுப்பட்டியில் உள்ள வி.கே.எம். திரையரங்கில், சவுரியார் பாளையத்தைச் சேர்ந்த செல்வம் என்பவரின் மகன் ஆரோக்கியம் என்கிற ஜான் பிரிட்டோ, வயது 18-தலித் கிறித்துவர் - என்பவர் 24-5-1996 அன்று இரவு 10.00 மணியளவில் திரைப்படம் பார்த்துவிட்டு, மேட்டுப்பட்டியைச் சேர்ந்த கட்டாரி என்கிற அந்தோணி, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் மற்றும் அவரது நண்பர்களோடு பேசிக்கொண்டு வந்தபோது ஏற்பட்ட வாய்த் தகராறு காரணமாக, கட்டாரி என்கிற அந்தோணி மற்றும் அவரது சகோதரர்கள் சேவியர், லாரன்ஸ், அலெக்ஸ் மற்றும் பத்து பேர்கள் ஆரோக்கியத்தை தடி, கத்தி, அரிவாள் ஆகிய ஆயுதங்களால்

தாக்கிக் கொலை செய்தார்கள். இதை அறிந்த சவுரியார் பாளையத்தைச் சேர்ந்த தலித் கிறித்துவர்கள், கட்டாரி என்கிற அந்தோணியை உடனே கைது செய்யுமாறு கோரி, சவுரியார் பாளையத்திலே உள்ள மதுரை - திண்டுக்கல் புறவழிச் சாலையில் போக்குவரத்தைத் தடை செய்ததோடு, அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த இரண்டு பேருந்துகளின் கண்ணாடி களுக்குச் சேதம் விளைவித்தார்கள். தகவல் அறிந்த காவல் துறையினர் அங்கே சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்ததின் பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

25-5-1996 அன்று காலை சுமார் 6.00 மணியளவில் சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் மீண்டும் மதுரை - திண்டுக்கல் புறவழிச் சாலையில் போக்குவரத்துக்குத் தடை செய்ததனால், போக்குவரத்து வேறு பாதையில் மாற்றிவிடப்பட்டு, பின்னர் அவர்கள் சமாதானம் செய்யப்பட்டு, சுமார் 7.00 மணியளவில் வாகனப் போக்குவரத்து சீர் செய்யப்பட்டது. மீண்டும் 8.30 மணியளவில் சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் மேட்டுப்பட்டிக்குச் சென்று ஆரோக்கியம் என்பவரது கூரைவீட்டுக்குத் தீ வைத்தும், அவரது வீட்டுச் சாமான்களுக்கு சேதம் விளைவித்தும் உள்ளனர். மேலும், பத்து பெட்டிக் கடைகளுக்கும் சேதம் விளைவித்தார்கள். அப்போது அங்கு பணியில் இருந்த காவல் படையினர் கலகக்காரர்களை விரட்டியபோது அவர்கள் ஓடி விட்டார்கள்.

மீண்டும், சவுரியார்பாளையத்தைச் சேர்ந்தவர்கள், அரிவாள் மற்றும் ஆயுதங்களோடு மேட்டுப்பட்டி கிராம மக்களைத் தாக்கும் நோக்கத்தோடு புறப்பட்டபோது, பணியில் இருந்த காவல்துறையினர் தடுத்து நிறுத்த முயன்றபோது, அவர்கள் தாக்கப்பட்டதில், வடமதுரை காவல் ஆய்வாளர் மற்றும் எட்டு காவலர்கள் காயம் அடைந்தார்கள். கலகக்காரர்கள், காவல் துறை வாகனங்கள் இரண்டுக்குச் சேதம் விளைவித்ததோடு, ஒரு வாகனத்தில் இருந்த மாற்று டயருக்கு தீ வைத்துக் கொளுத்தினார்கள்.

கலகக்காரர்களைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தும் கலைந்து செல்லாததால், திண்டுக்கல் கோட்டாட்சியர் அனுமதியோடு

கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்யப்பட்டது. அது பலன் அளிக்காததால், தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டதில் அக் கூட்டத்தில இருந்த சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த அந்தோணி மகன் லூர்துராஜ், முனியப்பன் மகன் பாலாஜி மற்றும் பெரியநாயகம் மகன் வேளாங்கண்ணி ஆகியோர் காயமடைந்து சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

தடியடிப் பிரயோகம் பயனளிக்காததால், சட்ட விரோதமாகக் கூடியிருந்த கும்பலைக் கலைப்பதற்கு, கோட்டாட்சியர் ஒப்புதலோடு காவல்துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதில், அந்தக் கும்பலில் இருந்த சவுரியார்பாளையத்தைச் சேர்ந்த செல்வம் மகன் ஜெகன் (வயது 20), இன்பராஜ் மகன் கணபதி (வயது 22), துரைராஜ் மனைவி ரோகிணி (வயது 49) ஆகியோர் காயம்பட்டு, திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். இம்மூவரில், ஜெகன் என்பவர் மருத்துவமனையில் 10.15 மணிக்கு இறந்துவிட்டார். மற்ற இருவரும் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.


ஆரோக்கியம் கொலை செய்யப்பட்டது குறித்து, திண்டுக்கல் நகர் தெற்கு காவல் நிலைய குற்ற எண் 526/96-ல் இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 342, 302 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து நான்கு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டு கம்பெனிகளும் மற்றும் மாவட்ட ஆயுதப் படையினரும் திண்டுக்கல் நகரில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள். ஊரகத் தொழில்துறை மற்றும் பதிவுத்துறை அமைச்சரும் கூடுதல் காவல்துறைத் தலைவர் (சட்டம் – ஒழுங்கு) அவர்களும் திண்டுக்கல் சென்று இரு பிரிவினரையும் சந்தித்து அமைதி நிலவ அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டுள்ளார்கள். துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஜெகனின் பிரேதம் அன்று பிற்பகலில் ஒப்படைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. சவுரியார்

பாளையம் மற்றும் மேட்டுப்பட்டி ஆகிய இடங்களில் ரோந்துப் பணியும், பாதுகாப்புப் பணியும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இப்போது பூரண அமைதி நிலவுகிறது.

இந்தச் சம்பவத்தில், துப்பாக்கிச் சூட்டில் இறந்த ஜெகன் என்பவருடைய குடும்பத்திற்கு ரூபாய் ஐம்பதாயிரமும், கொல்லப்பட்ட ஆரோக்கியசாமியின் குடும்பத்திற்கு ரூபாய் ஐம்பதாயிரமும், அதிக அளவில் காயமடைந்த இரண்டு பேருக்கு தலா பத்தாயிரம் ரூபாய் வீதமும், சிறிய அளவில் காயமடைந்த வர்களுக்கு தலா ஐந்தாயிரம் ரூபாய் வீதமும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே நீதி விசாரணை என்ற கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்கு அடிப்படையாக, கலைந்து செல்லுமாறு கண்ணீர்ப் புகையோ, பிரம்படியோ நடத்தப்பட வில்லை. இவையெல்லாம் ஆராயப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. இவையெல்லாம் நடந்திருந்தபோதிலும்கூட, இன்னும் உள்ள ஐயப்பாட்டைத் தவிர்த்துக் கொள்வதற்கு நீதி விசாரணை எந்த மட்டத்தில் நடத்தலாம் என்பதை அரசு ஆலோசித்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திருவண்ணாமலை தீ விபத்து

உரை : 33 நாள் : 19.07.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் எனக்குத் தரப்பட்டுள்ள இந்த அறிக்கையின் சுருக்கத்தைப் படித்துவிட்டு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ள பிரச்சினைகளின் பேரில் சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

11-7-1996 அன்று இரவு சுமார் 11-00 மணியளவில் திருவண்ணாமலை - சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை நகரிலுள்ள அருணாசலேஸ்வர ஆலயம் முன்பாக கோவிலுக்குச் சொந்தமான அடிமனைப் பகுதியில் ஒரு கடையின் கூரையிலிருந்து எதிர்பாராதவிதமாக தீபற்றி எரியத் தொடங்கியுள்ளது. உடனடியாக திருக்கோவில் உதவி ஆணையர் தீயணைப்புத் துறைக்கும், காவல்துறைக்கும் தகவல் தெரிவித்துவிட்டு விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார். சுமார் 11½ மணிக்கு திருவண்ணாமலை தீயணைப்பு நிலையத்திலிருந்து ஒரு வண்டி வந்து தீயணைப்புப் பணியில் ஈடுபட்டது. ஒரு கடையில் வைத்திருந்த கேஸ் சிலிண்டர் வெடித்ததன் காரணமாகத்தான் தீ அதிகமாகப் பரவி பல்வேறு இடங்களுக்குச் சென்று சேதம் ஏற்படுத்தியுள்ளது. ஒரு தீயணைப்பு வண்டி போதுமானதாக இல்லாததால், சுற்று வட்டாரத்திலுள்ள தீயணைப்பு வண்டிகளை அந்த இடத்திற்கு அனுப்பிவைக்க மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஏற்பாடுகள் மேற்கொண்டார். தீ அதிகமாகப் பரவியதால் பதினாறு கால் மண்டபத்திற்கும் பரவி, தீயின் சேதம் அதிகமாகி மண்டபம் தீக்கிரையாகியுள்ளது. இதற்கிடையே, அருகே இருந்த இரண்டு தேர்கள், (இரண்டும் மரத்தினால் ஆன தேர்கள்) மற்றும் வெள்ளியினால் ஆன விலையுயர்ந்த வாகனங்களையும், திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் காவல்துறைப் பணியாளர்கள் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டு பாதுகாத்து இருக்கிறார்கள். 12-7-1996 அன்று காலை சுமார் 4.00 மணி

யளவில்தான் தீயணைக்கும் பணி முடிவுற்று இருக்கிறது. இந்தப் பதினாறு கால் மண்டபம் பர்மா தேக்கு மரத்தாலும், செப்புத் தகட்டினாலும் சிற்ப வேலைப்பாட்டுடன் 120 ஆண்டுகளுக்கு முன்பு கிருஷ்ணதேவராயர் காலத்திலே கட்டப்பட்டதாகும். அந்த மண்டபத்தில் 26 பெரிய கடைகளும் மற்றும் அருகில் மண்டபத்திற்கு வெளியே இருந்த 29 கடைகளுமாக மொத்தம் 55 கடைகள் முழுவதுமாக சேதம் அடைந்துவிட்டன. இதைத் தவிர இந்த மண்டபத்தில், உள்ளே சிறிய கடைகளாக இருந்த 25 கடைகளும் சேதம் அடைந்துவிட்டன. மொத்ததில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இந்த தீ விபத்தினால் சேதம் அடைந்திருக்கும் என்று இதுவரை கணக்கிடப்பட்டுள்ளது. 12ஆம் தேதி காலையில் தீ விபத்துப் பற்றி செய்தி எனக்குக் கிடைத்தவுடன் உடனடியாக அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சருமான மாண்புமிகு பிச்சாண்டி அவர்களைத் திருவண்ணாமலைக்கு அனுப்பி வைத்தேன். தேவையான நிவாரணப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறி அனுப்பினேன்.

அடுத்த கார்த்திகை தீபத்திற்குள் பதினாறுகால் மண்டபத்தைச் சீரமைக்க வேண்டுமென்றும், அங்கே கடைகள் வைத்திருந்தவர்களுக்குத் தற்காலிக அடிப்படையில் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளிலே கடைகள் அமைத்துத்தர உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. மண்டபத்திலே வசித்து வந்த 9 குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் என்ற முறையிலே ரூ.1000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. திருக்கோயில் புனரமைப்பு மற்றும் அறப்பணி நிதியிலிருந்து திருப்பணிக்காக ரூ.15 லட்சம் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. தீ விபத்து எதிர்பாராத விதமாக ஏற்பட்டதே தவிர, சதி வேலை எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தற்போது நிலைமை அங்கே அமைதியாக உள்ளது.

இங்கே சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே தங்களுடைய கருத்துக்களைக் கூறியுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் திருவேங்கடம் அவர்களும், மணிவர்மா

அவர்களும், தாமரைக்கனி அவர்களும் இந்த 15 லட்ச ரூபாய் நிவாரணத் தொகை போதுமானதாக இருக்காது. இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்று கட்டிக்காட்டியிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு உறுதியாகத் தெரிவித்துக்கொள்வேன், இந்த 15 லட்ச ரூபாய் என்பது அந்த பதினாறுகால் மண்டபத்தின் திருப்பணிக்கான முதல் ஒதுக்கீட்டுத் தொகைதான். இந்தப் பணிக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறதோ அவ்வளவு தொகையும் ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, கடைகளுக்கு இழப்பீடு பற்றிப் பேசப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் பேசும்போது, கடைகளுக்கெல்லாம் எப்படி அனுமதி அளிக்கப்பட்டது. நிர்வாகம் தவறு செய்திருக்கிறதா என்று சுட்டிக் காட்டினார். இந்த அரசு வருவதற்கு முன்பு இருந்த கடைகள் அவைகள் எல்லாம். இன்னும் சொல்லப்போனால், கடந்த அரசுக்கு முந்தைய அரசு வருவதற்கு முன்பே இருந்த கடைகள் அந்தக் கடைகள் எல்லாம். எனவே கடைகளை கோயிலுக்குள் உள்ள பிரகாரங்களின் நடுவிலே அமைத்து வியாபாரம் செய்வது என்பது காலம் காலமாக பல திருக்கோயில்களிலே கடைப் பிடிக்கப்பட்டு வருகின்ற முறையாக இருக்கின்றது. இதைத் தடுப்பது என்றால் அங்கே அரசியல் வந்துவிடுகிறது. 100 கடைகளை அகற்றுகிறீர்கள், அவர்கள் பிழைப்புக்கு என்ன செய்வார்கள் என்று சில அரசியல்வாதிகள் குரல் கொடுப்பார்கள். ஆத்திகர்கள் மிகச்சிறிய கோயிலைச் சேர்ந்தவர்கள் - இதைத் தடுக்க இயலுவதுமில்லை. தீ விபத்து கோயிலின் உள்ளேயிருந்து ஏற்படவில்லை, கடையிலிருந்து தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது. மிகவும் சரித்திரப் பிரசித்தி வாய்ந்த ஒரு இடம். இந்தப் பெரும் சேதாரத்திற்கு அதுவும் பதினாறு கால் மண்டபம் அழிவதற்கு கடைகள்தான் காரணமாக இருந்திருக் கின்றன என்றாலும்கூட, இந்தக் காரணத்தைச் சொல்லி அந்தக் கடைக்காரர்களைப் பழிவாங்க முடியாது. அதுபற்றி உரிய விசாரணை நடத்தி உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருக்கின்ற கடைக்காரர்களுக்கு அவர்கள் மீண்டும் கடை வைத்துக்கொள்ள விரும்பினால், அதைப்பற்றி விசாரித்து அந்த இடங்களிலே அனுமதிக்கலாமா என்பது பற்றி ஆய்ந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். உண்மையிலேயே கடைகளிலே பலர் இழப்புக்கு ஆளாகியிருந்தால், அதைப்பற்றியும்

விசாரணை செய்து அவர்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் பற்றி ஒரு பிரச்சினை வந்தது. நம்முடைய அருமை நண்பர் லத்தீப் அவர்கள் எழுந்து பேசிய காரணத்தினால், நான் ஒரு விளக்கத்தைத் தெரிவிக்க வேண்டியவனாக இருக்கிறேன். இது இஸ்லாமிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் கலெக்டராக இருக்கின்ற மாவட்டத்தில் மட்டும் உள்ள கோயில்களியே தீ விபத்து ஏற்படுவதில்லை. இஸ்லாமியர் அல்லாத பலர் கலெக்டராக இருந்த பல மாவட்டங்களிலும் - தென்காசியிலே தேரே எரிந்திருக்கிறது. எனவே, இதைச் சிலபேர் மதவாத ரீதியாக, வகுப்புவாத ரீதியாக, மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணாக அணுகி, இதை ஒரு சாக்காக வைத்து, கலெக்டர் மீது சிலபேர் குறை சொல்லத் தொடங்குவது என்றாலும்கூட உள்ளபடியே, எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த கலெக்டராக இருந்தாலும் அவர்களுக்குள்ள பொறுப்பை உணர வேண்டும் என்பதிலே இந்த அரசு அழுத்தம் திருத்தமாக இருக்கிறது.

சென்று வந்த அமைச்சர் திரு. பிச்சாண்டி அவர்கள் என்னிடத்தில் எடுத்துக் கூறினார்கள். சட்டமன்ற உறுப்பினர் களெல்லாம் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தார்கள்; பொதுமக்களும் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தார்கள் என்று. அதுபோல உடனடியாக நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் அணுகி, அவரும் கலெக்டரோடு தொடர்பு கொண்டு பேசி அவர் விளக்கங்களை அளித்திருக்கிறார். இனி நடக்கவேண்டிய காரியங்கள் நல்லமுறையில் நடக்கும் என்ற உறுதியை நான் தெரிவித்து இதை வேறுவகையான பிரச்சினையாக ஆக்காமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உரிய நடவடிக்கையை எடுப்பதற்கு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானமும் பயன்பட்டு இருக்கிறது என்ற வகையில், கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் களுக்கெல்லாம் நன்றி கூறி அமைகின்றேன்.

வத்திராயிருப்பு - இரு பிரிவுகளிடையே தகராறு

உரை : 34 **நாள் : 19.07.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களிடமிருந்து வந்துள்ள கவன ஈர்ப்பு மீது, முதலில், நடந்த நிகழ்ச்சியைக் கூறிவிட்டு பின்பு அவர் எழுப்பியுள்ள சில பிரச்சினைகளுக்குப் பதில் அளிக்க விரும்புகின்றேன். காமராஜர் மாவட்டம், வத்திராயிருப்பில் 12-7-1996 அன்று காளியம்மன் கோவில் திருவிழாவை முன்னிட்டு அனைத்து சமூகத்தினரும் கலந்துகொள்ளும் வகையில் ஜல்லிக்கட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஜல்லிக் கட்டு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது இரு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே முதலில் வாய்த் தகராறு ஏற்பட்டு, அதிலே சமாதானம் எற்படாமல், கைகலப்பிலே போய் முடிந்தது. இந்தச் சம்பவத்தின்போது ஒரு பிரிவைச் சேர்ந்த மூன்று பேர் கத்தியால் குத்தப்பட்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டார்கள். இதிலே நீராத்தலிங்கம் என்பவர் மரணம் அடைந்தார். அழகர்சாமி மற்றும் ராமர் ஆகியோர் மதுரை, இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு, அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்களுடைய உடல்நிலை தேறி வருகின்றது. இதுகுறித்து வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 10 குற்றவாளிகளில் ஒரு காவலர் உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்தச் சம்பவத்தின் பின்விளைவாக வத்திராயிருப்பைச் சேர்ந்த கண்ணன் மற்றும் 7 பேர், மேலப்பாளையத்தைச் சேர்ந்த மயில்சாமி என்பவரை 13-7-1996 அன்று ஆகாசம்பட்டியில் அரிவாள் கொண்டு தாக்கி இருக்கிறார்கள். விருதுநகர், அரசு மருத்துவமனைக்கு மயில்சாமி கொண்டுவரப்பட்டபோது அவர் உயிர் பிரிந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதுகுறித்து வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு 7 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதையும் தொடர்ந்து 13-7-1996 அன்று இரவு ஆகாசம்பட்டியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் மாதூர்குளத்தில் மற்றொரு பிரிவினருக்குச் சொந்தமான 3 பம்பு செட்டுகளையும், தென்னை மரங்களையும் மற்றும் மற்றொருவருக்குச் சொந்தமான பம்பு செட்டையும் சேதப்படுத்தி இருக்கிறார்கள். இதுகுறித்தும் வழக்கு ஒன்று வத்திராயிருப்பு காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 12,13,14 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் வத்திராயிருப்பில் முகாமிட்டு, தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு மேற்கொண்டிருக் கிறார். அந்தப் பகுதியில் பாதுகாப்பிற்காக தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் நான்கு கம்பெனிகளும், மாவட்ட ஆயுதப் படையினரும் முகாமிட்டிருக்கின்றார்கள். காவல் துறையின் பெரிய அதிகாரிகள் அங்கே சென்று அமைதியை ஏற்படுத்த அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக் கின்றார்கள். தற்போது அங்கே அமைதி நிலவுகிறது.

இதையொட்டி மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள், அவர்கள் எழுப்பிய பிரச்சினையின்போது வெளிப் படுத்திய உணர்வுகளை நான் நிச்சயமாக மதிக்கின்றேன். ஏனென்றால் இதுபோன்ற சிறு சம்பவங்களிலிருந்து, சிறு பொறி, பெரும் தீ என்ற அளவிற்கு, வகுப்புக் கலவரங்கள், ஜாதிக் கலவரங்கள் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை தமிழ்நாட்டில் ஆங்காங்கே ஏற்படுவது வரவேற்கத்தக்கதல்ல, வருந்தத்தக்க செய்தியாகும். அதற்கு யார் காரணமாக இருந்தாலும், அவர்கள் இந்தச் சமுதாயத்திற்கு ஒரு பெரும் பழியைத் தேடித் தருகிறார்கள் என்றுதான் எண்ணவேண்டும். இன்றுள்ள நிலையில் பல்வேறு பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக் கொண்டு சமாதானமாக, சகோதரர்களாக வாழவேண்டும். இந்த மண் ஒற்றுமைக்கும், சகோதரத்துவத்திற்கும் 'இந்தியாவிலேயே புகழ் பெற்ற மண்' என்ற தமிழ் மண்ணின் பெருமையை இன்றைக்குத் தரைமட்டமாக ஆக்குவதற்கு எடுக்கப்படுகின்ற எந்த முயற்சியையும், எந்தத் தூண்டுதலையும் இந்த அரசு அனுமதிக்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜல்லிக்கட்டு என்ற விளையாட்டிற்கே தடை விதித்திட வேண்டும் என்ற ஒரு கருத்தை தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள். ஜல்லிக்கட்டு என்பது, சங்க காலத்திலேயிருந்து

போற்றிப் புகழப்படுகின்ற, தமிழர்களுடைய வீர விளையாட்டு களிலே ஒன்று. ஆனால், அந்தக் காலத்திலே இலக்கியமாகக் கருதப்பட்ட, வீரமாகக் கருதப்பட்ட சில விஷயங்கள் இந்தக் காலத்திற்கு ஏற்றதா என்ற கேள்விக்குறியும் நியாயமானதே யாகும். எனவே, இந்த ஜல்லிக்கட்டைத் தடை செய்வது பற்றி உடனடியாக நான் எதுவும் பதில் சொல்லிவிட முடியாது. எல்லோரிடத்திலும் கலந்து பேசி, அதிகாரிகளிடத்திலே கலந்து பேசி, ஜல்லிக் கட்டிலே ஈடுபடுகிறவர்கள் மீது எத்தகைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி நிறுத்தலாம் என்பதை யெல்லாம் கலந்து பேசித்தான், முடிவெடுக்க வேண்டும். எல்லா வீர விளையாட்டுகளிலுமே, இப்படிப்பட்ட மோதல் ஏற் படாமலேகூட சாவுகள் ஏற்படுகின்றன. இரங்கத்தக்க நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன, விபத்துகள் ஏற்படுகின்றன. ஆட்களோடு ஆட்கள் மோதிக்கொள்ளாவிட்டாலும், ஜல்லிக் கட்டு விரட்டப்படுகின்ற காளைகளே மோதி பலபேருடைய உயிர்களுக்கு இன்றைக்கு ஆபத்து ஏற்படுகிறது. இருந்தாலும் வீர விளையாட்டுகள் உலகமெங்கும் இன்றைக்கு அனுமதிக்கப்படுகின்ற காரணத்தால், நமக்குத் தெரிந்த வீர விளையாட்டாக, புராதான விளையாட்டாக, ஜல்லிக்கட்டு இன்றைக்கு நியாயப்படுத்தப்பட்டு வருகிறது. அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும். ஆனால் உடனடியாகத் தடை செய்வோம் என்றெல்லாம் என்னால் சொல்ல இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதியுதவி அளித்ததில், இராஜபாளையத்திற்கும், வத்திராயிருப்பிற்கும் வேறுபாடு இருந்ததாக, திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள்; அதை பரிசீலித்து, அப்படி வேறுபாடு இருந்தால், அந்த வேறுபாடு நியாயமற்ற முறையிலே இருந்திருக்குமேயானால், அது களையப்படும் என்ற உறுதியையும் தெரிவித்து, இந்த அளவோடு அமைகிறேன்.

ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பு

உரை : 35 **நாள் : 20.07.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களுக்காக ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு கொண்டு வந்ததன் மூலம் சில விளக்கங்களை இந்த அவைக்குத் தருகிற வாய்ப்பை எனக்கு ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உணர்வோடு, நன்றி உணர்வோடு இந்த அறிக்கையை இந்த அவையின் முன்னால் தங்கள் அனுமதியோடு வைக்கிறேன்.

மத்திய உள்துறை அமைச்சகத்திலிருந்து 12-7-1996 அன்று தமிழக அரசுக்கு அனுப்பப்பட்ட தகவலில் தமிழக முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு கொடுக்கப்பட்டு வந்த தேசிய பாதுகாப்புப் பிரிவு - என்.எஸ்.ஜி. காவலை விலக்கிக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்த முடிவு செல்வி ஜெயலலிதாவிற்கு மாத்திரமல்லாமல் உத்திரப்பிரதேச முன்னாள் முதலமைச்சர் மாயாவதி மற்றும் அஸ்ஸாம் மாநில முன்னாள் முதலமைச்சர் பூமிதார் வர்மன் ஆகியோருக்கும் பொருந்தும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டு இருந்தது. இந்த அறிவுரையின் அடிப்படையில் செல்வி ஜெயலலிதாவிற்குத் தரப்பட்டிருந்த என்.எஸ்.ஜி. பாதுகாவலர்கள் 16-7-1996 அன்றுமுதல் பாதுகாப்புப் பணியிலிருந்து வாபஸ் பெறப்பட்டனர். எனவே இதில் மாநில அரசு பரிந்துரை செய்வது என்ற பேச்சிற்கே இடம் இல்லை. மத்திய புலனாய்வுப் பிரிவு 3-6-1991 அன்றைய தினம் தெரிவித்துள்ளபடி செல்வி ஜெயலலிதா 'இசட்' பிரிவில் வைக்கப்பட்டு அதற்கான அளவில் பாதுகாப்புகள்

தரப்படுகின்றன. இந்தப் பிரிவில் உள்ளவர்களுக்குத் தரப்பட வேண்டிய பாதுகாவலர்கள் 3 இன்ஸ்பெக்டர்கள், 2 சப் - இன்ஸ்பெக்டர்கள், 2 தலைமைக் காவலர்கள், 20 காவலர்கள் ஆகும். இது தவிர, சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு காவல் தொடர்பாக ஒரு சப் - இன்ஸ்பெக்டர், 3 தலைமைக் காவலர்கள், 10 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். ஆக மொத்தம் செல்வி ஜெயலலிதாவிற்கு 3 இன்ஸ்பெக்டர்கள், 3 சப்-இன்ஸ்பெக்டர்கள், 5 தலைமைக் காவலர்கள், 30 காவலர்கள் என்ற வகையில் 41 பேர்கள் அவரது பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டுள்ளார்கள்.. இந்தப் பாதுகாப்பு ஏற்பாட்டுக்காகவே ஆண்டு ஒன்றுக்கு ஆகும் செலவு 18.86 லட்சம் ரூபாயாகும். இதுதான் 'இசட்' பிரிவுக்குரிய பாதுகாப்பாக மாநில அரசால் தரப்படவேண்டியதாகும். இதில் எதையும் குறைக்காமல், இன்றுள்ள இந்த மாநில அரசு முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவிற்கு இந்தப் பாதுகாப்பை அளித்து வருகிறது.

செல்வி ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, எஸ்.எஸ்.ஜி என்ற ஒரு சிறப்புப் பாதுகாப்புக் குழு அமைப்பை அவருக்குப் பாதுகாப்புத் தருவதற்காகவே அ.இ.அ.தி.மு.க. அரசு பொறுப்பிலே இருந்தபோது உருவாக்கினார். 1993ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றத்தில் அந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கே தனியாக ஒரு சட்டமும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டது. இவைகள் அன்னியில், எஸ்.எஸ்.ஜி. என்ற இந்த அமைப்பில் ஒரு ஐ.ஜி.பி., 2 எஸ்.பி.க்கள், 1 அடிசனல் எஸ்.பி., 9 டி.எஸ்.பி.-க்கள், 1 டி.எஸ்.பி. (டெக்னிக்கல்), 36 இன்ஸ்பெக்டர்கள், அவர்களில் 5 பேர் இன்ஸ்பெக்டர்கள் (டெக்னிக்கல்) 106 சப்- இன்ஸ்பெக்டர்கள் தவிர 13 சப்-இன்ஸ்பெக்டர்கள் (டெக்னிக்கல்) 104 தலைமைக் காவலர்கள், 30 நாயக்குகள், 301 காவலர்கள். அஃதன்னியில் டெக்னிக்கல் அதிகாரிகள் 2 பேர்கள் என்ற வகையில் மொத்தம் 606 காவல்துறை அலுவலர்கள் இருந்து வந்தார்கள். அந்தச் சட்டப்படி, அந்தச் சட்டம் இப்போதும் இருக்கிறது, முதலமைச்சரின் இந்தக் காவலுக்கு என்று. ஆனால் நான் பயன்படுத்திக்கொள்ளவில்லை அந்தச் சட்டத்தை. (மேசையைத் தட்டும் ஒலி).

இதுதவிர, 180 காவலர்கள் அடங்கிய - இது தவிர, இந்த 606-ஐத் தவிர - 180 காவலர்கள் அடங்கிய தமிழ்நாடு சிறப்புக்

காவல் படையைச் சேர்ந்த 3 கம்பெனிகளும் முன்னாள் முதலமைச்சருடைய வீட்டு பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதையும் சேர்த்து மொத்தத்தில் 786 காவல் துறையினர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாதுகாப்புப் பணியில் இடம் பெற்றார்கள். இஃதன்னியில் இந்தப் பிரத்தியேக அமைப்பில் நிர்வாகப் பணிகளைக் கவனிப்பதற்காக அமைச்சுப் பணியாளர்கள் 60 பேர்களும் பணியாற்றினார்கள்.

இந்தத் தனிப்பிரிவின் உபயோகத்திற்காக ஒரு டாடா சீரா, ஒரு டாடா எஸ்டேட் உட்பட 70 வாகனங்கள் இருந்தன. மேலும் தேசிய பாதுகாப்புப் படைப் பிரிவை என்.எஸ்.ஜி. 6 அலுவலர்கள் இரண்டு வண்டிகளிலே கூடுதலாக வழிக்காவல் பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தார்கள். இப்படி 6 பேர்கள் வீதம் 3 ஷிப்டுகளாக இருந்தவர்கள்தான் தற்போது மத்திய அரசின் உள்துறை அமைச்சகத்தால் திரும்பப் பெறப்பட்டிருக்கிறார்கள். இந்த 18 பேர்கள்தான் திரும்பப் பெறப்பட்டு இருக்கிறார்கள்.


முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா, சென்னை தவிர்த்து வெளி மாவட்டங்களுக்கு அப்போது சுற்றுப்பயணம் செல்லும்போது ஹெலிகாப்டர் தளம், தங்கும் இடம், செல்லும் வழி மற்றும் விழா நடைபெறும் இடங்களில் தமிழக அரசின் சிறப்புப் பாதுகாப்புக் குழு தவிர, ஆயிரக்கணக்கான பேர்கள், காவல் துறை அதிகாரிகளும், அலுவலர்களும், பல்வேறு மாவட்டங்களிலேயிருந்தும், டி.ஜி.பி. உட்பட, தமிழ்நாடு சிறப்புக் காவல் பிரிவிலிருந்தும் வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டார்கள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் கடந்த 5 ஆண்டுக்காலத்தில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பாதுகாப்புச் செலவிற்காக மொத்தம் செலவழிக்கப்பட்ட தொகை மாத்திரம் 21 கோடியே 23 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் ஆகும்.

தற்போது முதலமைச்சர் என்ற முறையில் எனக்குத் தரப்படும் பாதுகாப்புக்காக ஒரு ஷிப்டில் என்னோடு இருப்பவர்கள் 1 டி.எஸ்.பி. 1 இன்ஸ்பெக்டர், 1 சப்-இன்ஸ்பெக்டர், பைலட், எஸ்கார்ட் வண்டிகளிலே 3 நாயக்குகள், 9 காவலர்கள், ஆக மொத்தம் 15 பேர்கள் இருக்கிறார்கள். இது தவிர வீட்டில் பாதுகாப்பு பணியிலே 10 பேர்கள் இருக்கிறார்கள். இது ஒரு

ஷிப்டிற்கு என்ற போதிலும், அனைத்து ஷிப்டுகளுக்கும் என்று சேர்த்துப் பார்த்தால்கூட, மொத்தம் 60 பேர்கள்தான் என் பாதுகாப்புக்காக மாறி மாறி வருகின்றார்கள்.

முன்னாள் முதலமைச்சர் என்ற முறையிலே விடுதலைப் புலிகளால் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று மத்திய அரசு மாநில அரசுக்குக் கடிதம் மூலம் அறிவித்த பிறகு, எனக்கு அப்போது என்ன பாதுகாப்பு தரப்பட்டது என்றால், 2 சப்-இன்ஸ்பெக்டர்கள், ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் மாற்றி மாற்றி வருவார்கள். இது தவிர, வீட்டிலே 5 பேரும், எஸ்கார்ட் காரில் 3 பேரும் ஆக மொத்தம் 10 பேர்கள் இருந்தார்கள். இதுகூட 1993ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதற்கொண்டுதான் தரப்பட்டது.

இங்கே மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிட்டார்கள், 27 பேர்கள்தான் என்று. 27 பேர்கள் என்பது எஸ்.எஸ்.ஜி. சார்பிலே 27 பேர்கள், சிட்டி போலீஸ் தரப்பில் 16 பேர். ஆக மொத்தம் இப்போது 41 பேரை முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்களுடைய பாதுகாப்பிற்காக இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



லாக்-அப் மரணம்

உரை : 36 நாள் : 22.07.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சியைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டுவதும், சுட்டிக்காட்டி அதைப்பற்றிச் சுருக்கமாக, அதன் தொடர்பான சில நிகழ்வுகளை மட்டும் எடுத்துச் சொல்வதும், அதற்குப் பிறகு தங்களுடைய அனுமதியோடு அமைச்சர்கள், அல்லது முதலமைச்சர் அதற்கான விளக்கத்தைத் தருவதும் முறையாக இருக்க வேண்டுமென்ற காரணத்தால்தான் இந்த சிறப்புக் கவன ஈர்ப்பை இந்த அவையிலே அறிமுகப் படுத்தி, இதை எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் களும் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஒரு பரந்த உள்ளத்தோடு ஜனநாயகத்தை நிலைநாட்டியிருக்கிறீர்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் அமைச்சரிடத்திலிருந்தே, எதிர்காலத்திலே இருக்க வேண்டுமென்ற ஆசையோடு, அமைச்சரிடத்திலிருந்தே என்னென்ன நிகழ்ச்சிகளையெல்லாம் கோர்த்துச் சொல்ல வேண்டுமோ அத்தனையையும் சொல்லிவிட்டார். நாட்ராம் பள்ளி காவல் நிலைய சரகத்தைச் சேர்ந்த பூசாரியூரில் நடைபெற்ற ஒரு வன்முறைச் சம்பவத்திற்கு, ஒரு கொலைக்கு நடவடிக்கை எடுப்பது பற்றிச் சொல்லியிருந்தால் நான் அதன் தொடர்ச்சியாக மற்றவற்றையெல்லாம் சொல்லியிருப்பேன். நான் சொல்லவேண்டியவை அனைத்தையும் அவரே சொல்லி விட்ட காரணத்தால் நான் சொல்லவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விட்டது. அவரைத் தொடர்ந்து நம்முடைய மார்க்சிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. மணி

அவர்களும் இந்தச் சம்பவங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன. இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். இந்தச் செய்திகளுக்கு, செழுமிய கருத்துக் களுக்கு எதிரான கருத்துக்கள் எதையும் நான் சொல்வதாக இல்லை. அவர்களுடைய கருத்துக்களோடு, என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்ள வேண்டித்தான் நான் இங்கே நின்றுகொண்டிருக்கிறேன்.

ஒன்றை மறந்துவிடக்கூடாது. இதுபோன்ற சம்பவங்கள் கடந்த காலத்தில் நடைபெற்றபோது எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இன்னும் சொல்லவேண்டு மேயானல் நடைபெற்ற சம்பங்களுக்கு யாரோ, எவரோ காரணம் என்று இல்லாமல், உரியவர்கள் பலரே காரணமாக இருந்திருக் கிறார்கள். அதுவும் இந்த அவைக்கும், இந்த நாட்டுக்கும் மிக நன்றாகத் தெரியும். அப்படியில்லாமல் கடந்த இரண்டு மாதக் காலங்களிலே நடைபெற்ற சம்பவங்களில் அரசு எவ்வளவு வேகமாக, கண்டிப்பாக, தயவுதாட்சண்யம் பார்க்காமல் நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் உணர்வார்கள் என்றே நான் நம்புகிறேன்.

நீதிமன்றத்தில் ஒரு கொலை நடைபெற்ற உடனே, காவல் துறையினருக்கு கட்டளையிடப்பட்டு, அன்று இரவே சிலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் ஏறி வந்த கார் கைப்பற்றப்பட்டது., தொடர்ந்து பல பேர் கைது செய்யப்பட்டு, இன்னும் ஓரிருவர் மிச்சம் என்ற அளவில் அத்தனை பேர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டு லாக்-அப் கொலைகள். ஒருவர் லாக்-அப் மரணம் அடைந்தார். இன்னொருவர் வழியில் போலீஸாரால் அடித்துக் கொல்லப்பட்டார் என்ற இரண்டு செய்திகள் இந்த இரண்டு மாத காலத்தில் வந்தபோது உடனடியாக அந்தப் போலீசார்மீது தயவு தாட்சண்யம் காட்டாமல், எந்த அரசியல் குறுக்கீடும், தலையீடும் இல்லாமல்-நிச்சயமாக வரவும் இல்லை. வந்திருந்தாலும் இந்த அரசு பொருட்படுத்தி இருக்காது, புறக்கணித்திருக்கும் அந்த அளவிலே - உடனடியாக காவல்

துறை அதிகாரிகள் வேலைநீக்கம் செய்யப்பட்டு அல்லது வேலையிலிருந்து தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டு அவர்கள் கைதுசெய்யப்பட்டும் இருக்கிறார்கள். காவல்துறை அதிகாரிகள் இந்த இரண்டு நிகழ்வுகள் குறித்து கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக இருந்தவர்கள், உதவிகரமாக இருந்தவர்கள் காவல் துறையினர்தான் என்பதை அவையிலுள்ள யாரும் மறந்துவிட முடியாது. நாட்டு மக்களும் நிச்சயமாக மறந்துவிட மாட்டார்கள்.

கண்டிப்பாக நடவடிக்கை எடுப்பதன் மூலமும், குற்றங்களை அனுமதித்த காவல் துறையினர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமும் இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு இன்றைக்கு நடந்து வருகிறது. இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், நாட்ராம்பள்ளி, பூசாரியூர் நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், ஒரு வீட்டிற்கு போலீஸ்காரர்களைப்போல் சென்று, சாராய வேட்டைக்கு வந்தவர்களைப் போலச் சென்று இராணி என்ற ஒரு பெண்ணைக் கொலை செய்யும் அளவுக்கு ஒரு கொடுமை நடைபெற்று இருக்கிறது. உடனடியாக அங்கு போலீஸார் சென்று அந்தக் கொடுமையை நிகழ்த்தியவர்களைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இன்னும் ஓரிரு நாட்களில் கைதுசெய்யப்படுவார்கள். பிடிபடுவார்கள் என்ற செய்தி இன்று காலையிலேகூட எனக்கு வந்திருக்கிறது. அதற்கு மேல் செய்தியைச் சொன்னால் அவர்கள் தப்பிவிடக்கூடும். ஆகவே, இங்கு சொல்ல விரும்பவில்லை. ஏற்ற நடவடிக்கை இந்நிகழ்விலும் எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதுமாதிரி நிகழ்வுகள், வன்முறைச் சம்பவங்கள், விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நிச்சயமாகக் கட்டுப்படுத்தப்படும் என்ற உறுதியை உங்கள் அனைவருக்கும் நான் அளித்து, இந்த அளவில் அமைகிறேன்.

காவலர் தேர்வு முறை

உரை : 37 **நாள் : 30.07.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் காவலர்கள் மற்றும் சப். இன்ஸ்பெக்டர்கள் தேர்வு பற்றி எழுப்பியுள்ள இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பில் அவர்கள் கொடுத்த புள்ளி விவரம் தவறானது : ஆனால் நிலைமை உண்மையானது. 4.12.1995 அன்று கடந்த ஆட்சியில் 10,000 காவலர்களை தமிழகக் காவல் துறைக்காக தேர்ந்தெடுக்கப்போவதாக தமிழக அரசு ஆணை பிறப்பித்தது. அந்தத் தேர்வுக்கு வந்தவர்களின் மொத்தத் தொகை 1,59,103 பேர். அதில் 48,990 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உடலளவில் அந்தத் தேர்வு நடைபெற்றது. பிறகு 12,499 பேர் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்பட்டார்கள். அதில் தேர்வு பெற்ற 6,568 பேர் மருத்துவ சோதனைக்காக அழைக்கப்பட்டார்கள். இவையெல்லாம் காவலர் பணிக்கானவை.

அதைப்போலவே, பெண் வேட்பாளர்கள் 39,344 பேர் தேர்வுக்காக வந்தார்கள். அதில் 9,522 பேர் தேர்வு பெற்று எழுத்துத்தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டார்கள். இதிலிருந்து 5,885 பேர் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்பட்டார்கள். அதில் 3,275 பேர் மருத்துவ சோதனைக்காக அழைக்கப் பட்டார்கள். 8.1.1996 முதல் 16.2.1996 வரை தேர்வுகள் நடைபெற்றன. தற்போது தற்காலிகமாக பட்டியல் தயாரிக்கப் பட்டுள்ளது. இட ஒதுக்கீடு முறையும் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்ட காவல் துறை அதிகாரிகள் மகாநாட்டில் Psychology

Test மனவியல் சோதனை - செய்து காவலர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்து பேசப்பட்டது. ஆனால் இறுதியாக வருங்காலத்தில் தேர்வுசெய்யப்படுபவர்களுக்கு அந்தத் தேர்வினை நடத்தலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இந்தப் பிரச்சினை நீண்டகாலமாக முடிவு காணப்படாமல் இருந்ததாலும், காவல் துறையிலே ஏராளமான காலியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாலும், கடந்த ஆட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ளலாம் என்றும், எதிர்காலத்தில் காவலர்களைத் தேர்ந்தெடுக்கும்போது 'மனவியல்' தேர்வினையும் இணைத்துக் கொள்ளலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, ஏற்கெனவே தேர்வு செய்யப்பட்ட இந்த 10,000 காவலர்கள், எந்த முறையிலே தேர்வு செய்யப்பட்டிருந்தாலும், வேறுவழி இல்லாமல், அவர்களையெல்லாம் பணிக்கு அமர்த்தலாம் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறையில் காலியாக உள்ள சப்-இன்ஸ்பெக்டர் பணியிடங்களை நிரப்ப புதிதாக 500 சப்-இன்ஸ்பெக்டர் பணியாளர்களை தேர்வு செய்ய கடந்த ஆட்சியில் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1994ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக விளம்பரம் ஏடுகளிலே வெளியிடப்பட்டது. பின்னர் மேலும் காலியிடங்கள் ஏற்படக்கூடும் என்று முடிவு செய்து, கூடுதலாக 600 சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்வு செய்யலாம் என்று அரசு முடிவு செய்து ஆணை பிறப்பித்தது. சீருடைப் பணியாளர் தேர்வாணையம் 1,100 சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்வு செய்து காவல் துறை இயக்குநருக்கு அனுப்பியது. புதியதாகத் தேர்வு செய்யப்பட்ட 1,100 சப்-இன்ஸ்பெக்டர்களையும் ஒட்டு மொத்தமாகப் பயிற்சிக்கு அனுப்ப பயிற்சிக் கல்லூரிகள் இல்லாததாலும், அவ்வாறு அனுப்பினாலும் பிற்காலத்தில் பதவி உயர்வில் பல சிக்கல்கள் ஏற்படும் என்று கருதியதாலும், முதலில் 500 பேர்களை மட்டுமே பயிற்சிக்கு அனுப்பலாம் என்று கருதி, முதல் 300 பேர்கள் சென்னை அசோக் நகரில் உள்ள பயிற்சிக் கல்லூரியிலும், 200 பேர்கள் வீராபுரத்திலுள்ள பயிற்சிக் கல்லூரியிலும் பயிற்சிக்காக 1.3.1996 முதல் அனுப்ப பட்டார்கள்.

பயிற்சிக் காலம் இரண்டரை ஆண்டுகள் என்பதாலும், பல பணியிடங்கள் காலியாக உள்ளதாலும், மீதமுள்ள 600 நபர்களையும் பயிற்சிக்காக அனுப்பலாம் என்று அரசு 14-3-1996இல் ஆணை பிறப்பித்தது. இந்த நிலையில், தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு விட்டதால், தேர்தல் நடத்தை விதிகளின்படி, தேர்வு செய்யப்பட்ட 600 சப்-இன்ஸ் பெக்டர்களைப் பயிற்சிக்கு அனுப்ப இயலவில்லை. தற்போது மீதமுள்ள 600 பேரையும் பயிற்சிக்கு அனுப்பலாம் என்று இந்த அரசு முடிவெடுத்திருக்கிறது.

1992ஆம் ஆண்டு தீயணைப்புத் துறைக்கான ஆட்களைத் தேர்ந்தெடுக்க கடந்த கால ஆட்சியில் முடிவு செய்து, சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையத்திடம் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது. 1,069 பேர்களை இதற்காக வாரியம் தேர்ந்தெடுத்து பட்டியலை அனுப்பியபோதிலும், தேர்தல் காரணமாக ஆணை பிறப்பிக்கப்படாமல் இருந்தது. தீயணைப்புத் துறையின் இயக்குநர் தற்போது காலியிடங்கள் 1,312 இருப்பதால், இவர்களுக்கெல்லாம் ஆணை பிறப்பிக்கலாம் என்று தெரிவித் திருப்பதால், அவ்வாறே அவர்களையெல்லலாம் பணியிலே சேர்க்கலாம் என்றும், அடுத்த தேர்வு முதல் மனவியல் சோதனைகளையும் செய்து தேர்ந்தெடுக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் எந்த வகையிலே தேர்ந்தெடுக்கப்பட்டி ருந்தாலும், சில முறைகேடுகள் நடைபெற்றிருந்தாலும் - இது காவல்துறை அதிகாரிகளுடைய மகாநாட்டிலே வெளிப் படையாக பெரிய அதிகாரிகளால் எடுத்துச்சொல்லப்பட்ட உண்மை - இப்படி இந்த அரசு மனமுவந்து இவர்களை யெல்லாம் சேர்த்துக்கொள்ளலாம் என்று கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு உத்தரவிட்டிருப்பதை திரு. ஞானசேகரன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பணியிலே அமர்கின்றவர்கள், எப்படிப் பணியிலே சேர்ந்தோம், என்ன கொடுத்து சேர்ந்தோம், எப்படி வசூலிப்பது என்றெல்லாம் தங்களுடைய கடமையை ஆற்றும்பொழுது எண்ணாமல், நாட்டுக்கு நல்ல முறையிலே கடமையாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் இதனோடு இணைத்து வெளியிடுகின்றேன்.

சேலம் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 38 **நாள் : 07.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் துறையின் சார்பாக சேலம் மாவட்ட அதிகாரிகள் சார்பாக எனக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்களை இந்த அறிக்கையின் வாயிலாக நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியுள்ள சில கருத்துக்களைப் பற்றி கூற விரும்புகின்றேன்.

சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி காவல்நிலைய எல்லைக் குட்பட்ட சின்னப்புத்தூரில் 28-7-1996 அன்று சித்தன் என்ற சாராய வியாபாரியின் மனைவி மாரியம்மாள் என்பவர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக 4-8-1996ல் எட்டாம் நாள் படைப்பு நடந்தது. அந்தச் சடங்குக்கு சுமார் 50 நபர்கள் வந்திருந்தார்கள். அதில் பாதிப்பேர் மது அருந்தவில்லை. ஏனையோர் சுண்டல் சாப்பிட்டுவிட்டு மது மற்றும் சாராயம் அருந்தினார்கள். அவர்களில் இன்று கடைசியாகக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பின்வரும் 11 நபர்கள் வயிற்றுப் போக்கு, வாந்தி போன்ற உபாதைகளினால் பாதிக்கப்பட்டு 5-8-1996 அன்று மரணமடைந்து விட்டார்கள். இப்படி சாராயம் சாப்பிட்டு மரணமடைந்துள்ளவர்களின் பெயர்கள் வருமாறு:-

எம்.ஜி.ஆர் என்ற சின்னையன் - வயது	35
செல்வம் - வயது	38
சின்னத்தம்பி - வயது	50
பூங்காவனம் - வயது	54
சின்னம்மாள் - வயது	65

முருசேகன் - வயது 65
பழனிசாமி - வயது 35
சௌத்திரம் என்ற சௌந்தரராஜன்
பெருமாள் - வயது 45
ஆறுமுகம் - வயது 45
11வது நபராக சேகர் - வயது 45

மேற்கண்ட 11 நபர்களும் சின்னப்புத்தூரைச் சேர்ந்தவர்கள். மேலும் 3 நபர்கள் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு:-

பாலன் என்ற சுருட்டையன் - வயது 40
குமார் - வயது 50
சண்முகம் - வயது 42

மேலும் கந்தசாமி - வயது 43 என்பவர் சேலம், செல்வம் மருத்துவமனை என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

மேற்கூறிய மரணங்கள் குறித்து சேலம், அஸ்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 807/96, பிரிவு 174 குற்றவியல் முறை சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து, தீவிர புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. கள்ளச் சாராயத்தை அந்தச் சடங்குக்கு வந்தவர்களுக்குக் கொடுத்த சித்தன் என்றும் ரொட்டிக்காரன் என்றும் அழைக்கப்படும் நபர் 6-8-1996 அன்று காலை சுமார் 11-00 மணியளவில் சேலம் புதுப்பேருந்து நிலையம் அருகில் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி சித்தன் என்ற ரொட்டிக்காரனும், அவரது மனைவி மரணமடைந்த மாரியம்மாள் என்பவரும் பல ஆண்டுகளாக கள்ளச்சாராயம் விற்று வருகிறார்கள். சித்தன் மீது சேலம், அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் 1994ஆம் ஆண்டு மே மாதம் முதல் 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை 6 வழக்குகள் தொடரப்பட்டிருக் கின்றன. காலஞ்சென்ற மாரியம்மாள் மீதும், தமிழ்நாடு மது விலக்கு அமல் சட்டத்தின் கீழ் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 1996ஆம் ஆண்டு ஜூலை வரை 13 வழக்குகள் தொடரப்பட்டி

ருக்கின்றன. மேலும், மேற்கண்ட இருவர் மீதும் சேலம் நகர மதுவிலக்கு அமல் பிரிவினர் சில வழக்குகளைத் தொடுத்து உள்ளார்கள். சித்தன் மீது 2 வழக்குகளும், காலஞ்சென்ற மாரியம்மாள் மீது 8 வழக்குகளும் தொடரப்பட்டுள்ளன. சித்தன் என்பவர் 1992ஆம் ஆண்டு மதுவிலக்குப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு சுமார் 10 மாத காலம் சிறையிலிருந்து விடுதலை ஆனவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மது விலக்குச் சட்டத்தைத் திறமையாக அமல்படுத்தத் தவறியதற்காகவும், மேற்குறிப்பிட்ட சித்தன் மற்றும் மாரியம்மாள் ஆகிய இருவரையும் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கத் தவறிய ஒழுங்கீனத்திற் காகவும், அஸ்தம்பட்டி காவல்நிலைய அதிகாரிகள் வேலூர் சரக காவல்துறைத் துணைத் தலைவரால் 6-8-1996 அன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பணி நீக்கம் செய்யப்பட்டவர்களுடைய விவரம் :

பிலிப்ஸ் தாமஸ், ஆய்வாளர்,

எம். ஸ்ரீரங்கன், உதவி ஆய்வாளர்

கே. சிகாமணி, தலைமைக் காவலர் எண் 497

யாபத் ஜோஸப், தலைமைக் காவலர் எண் 647

தேவதாஸ் காந்தி, தலைமைக் காலவர் எண் 867

கே. மாது, தலைமைக் காவலர் எண் 1001

டி. காதர் ஷெரிப், தலைமைக் காவலர் எண் 1565

மேலும், சேலம் நகர மது விலக்கு அமல் பிரிவைச் சேர்ந்த பின்வரும் காவல்நிலைய அதிகாரிகள் 6-8-1996 அன்று தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அதன் விவரம்:

கே. சுபாஷ் சந்திர போஸ், ஆய்வாளர்

கே. முனியப்பன், உதவி ஆய்வாளர்

வி. இராமச்சந்திரன், தலைமைக் காவலர் எண் 500

வி. சேகரன், தலைமைக் காவலர் எண் 1232

இதுபோன்ற சம்பவங்கள் இனி வருங்காலங்களில் நடைபெறா வண்ணம் தடுப்பதற்கு மதுவிலக்கு அமுல்பிரிவு காவல் துறைத் தலைவர் மற்றும் வேலூர் சரக காவல்துறைத் துணைத்தலைவர் ஆகியோர்கள் சேலத்தில் முகாமிட்டு மதுவிலக்குச் சோதனை களை தீவிரமாக முடுக்கிவிட்டு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இறந்த நபர்களின் சவங்கள்மீது சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை நடந்து கொண்டிருக்கிறது. பிரேதப் பரிசோத னைக்குப்பின், உடல்கூறு, உள்ளுறுப்புகள் இராசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, எந்த நச்சுப் பொருளால் மரணம் நேர்ந்தது என்று விரைவில் கண்டுபிடிக்கப்பட்டு மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது அந்தக் கிராமத்தில் பதட்டம் ஏதும் இல்லை. இருப்பினும் நிலைமை தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பது தரப்பட்டுள்ள துறைத் தகவல். அந்தத் தகவலின் அடிப்படையிலே நான் தந்துள்ள அறிக்கை இதுவாகும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் இதைப்பற்றி பேசும்போது கள்ளச்சாராயம் தமிழகத்திலே ஒழிக்க முடியாதபடி ஒரு வலிவினைப் பெற்றிருக்கிறது என்பதையும், அதற்கு காவலர்கள் பல இடங்களில் துணை இருக்கின்றார்கள் என்பதையும், காய்ச்சப்படாத இடங்களிலேகூட துணை இல்லாவிட்டாலும் காய்ச்சு என்று சொல்லுகின்ற அளவிற்கு தூண்டுதலாக இருக்கின்றார்கள் என்பதையும் மறைமுகமாகவும், நேரடியாகவும் இங்கே எடுத்துக் கூறினார்கள். கள்ளச்சாராயப் பானைகள் மீது துப்பாக்கிக் குண்டு பாயும் என்று சொன்ன முதலமைச்சர் அவர்களே, உங்களுக்கு அறைகூவல் விடுவது போல இந்தக் காரியங்கள் நடைபெறுகின்றன என்று திரு. தாமரைக்கனி அவர்கள் மிகுந்த ஆத்திரத்தோடு தன்னுடைய கருத்தை வெளிப்படுத்தினார். அதே உணர்வு இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதையும் நான் எடுத்துக்காட்டத் தயங்கவில்லை. ஏனென்றால் காவலர்கள் கடந்த காலத்தில் - கடந்த காலம் என்பதை ஏதோ 5 ஆண்டுக்காலம் என்ற அளவிலே நான் நிறுத்த

விரும்பவில்லை. அதற்கு முன்பும்கூட- மாமூல் என்கிற பெயரால் கள்ளச்சாராய வியாபாரிகளிடத்திலே தொகையைப் பெற்று அதைத் தூண்டுகின்றவர்களாயும் துணை நிற்கின்றவர் களாயும் மாறியிருப்பது வெள்ளிடைமலை. யாரும் மறுக்க இயலாத ஒரு கூற்று. இருந்தாலும் அவர்கள் மீது அவ்வப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுத்தான் வருகின்றன. இன்றைக்கு 11 காவலர்கள், அஃதன்னியில் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் போன்றவர்கள் எல்லாம் தாற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. அதைப் பார்த்து மற்றவர்கள் அஞ்சி அல்லது சமுதாயக்கேடுக்கு நாம் ஒத்துழைப்பு தருகிறோம் என்று வெட்கித் தலைகுனிந்து, இனி இந்தக் காரியங்களில் ஈடுபடாமல் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்களா என்றால் இல்லை. ஒரு குற்றத்திற்கான தண்டனையை ஒரு குற்றவாளி அனுபவிக்கிற நேரத்தில் அதைப் பார்த்து இன்னொருவர் குற்றத்தினை செய்யாமல், குற்றவாளி ஆகாமல் இருக்கின்ற நிலை சமுதாயத்திலே இல்லை.

அரசியல் கட்சிகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொல்லப் பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கள்ளச்சாராயம் காய்ச்சுகின்றவர்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே வாய்ப்பு வசதிகள் செய்து தரப்படுவதாக யாரோ வெளியிட்ட அறிக்கையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். அவர்களெல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்பது நாட்டுக்கு மிக நன்றாகத் தெரியும். நான் அதைப்பற்றி விளக்க விரும்ப வில்லை. நாங்கள் மகிழ்ச்சியாக, உற்சாகமாக இருக்கிறோம். அஞ்சிவிடவில்லை என்பதைக் காட்டிக்கொள்வதற்காக தினந்தோறும் அறிக்கைகள் மூலமாக நாட்டு மக்களை சந்திக்கின்றவர்களைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஏனென்றால் நாடு அவர்களுக்கு நல்ல தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தீர்ப்பினைத்தான் தொடர்ந்து நாடு அவர்களுக்கு வழங்க இருக்கிறது என்பதையும் நான் மிகமிக நன்றாக அறிவேன்.

இருந்தாலும், இந்த பதிலின் மூலமாக நான் சொல்ல விரும்புவது காவல் துறையிலுள்ள கயவர்களை நான் மன்னிக்கத் தயாராக இல்லை. அவர்களுடைய தவறுகளை மறைக்கவும் தயாராக இல்லை. காவல் துறையில் உள்ளவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் போதவில்லை என்று எண்ணுவார்களேயானால், சம்பளத்தினை அதிகப்படுத்தித்தர வேண்டுமென்ற கோரிக்கையினை வைக்கலாம். நான் ஒன்றை மாத்திரம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் பரிசீலனையிலே இருக்கின்ற ஒரு விஷயம். அதை அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்து பேசி அறிவிக்க இருக்கின்றேன். இருந்தாலும் பரிசீலனையில் இருப்பதைச் சொல்ல விரும்புகிறேன். பணத்திற்காகத்தானே இன்றைக்கு இருக்கின்ற காவலர்கள் கள்ளச்சாராயத்தினை ஊக்கப்படுத்து கின்றார்கள். அவர்களுக்குத் துணையாக இருக்கின்றார்கள்? எனவே, அந்தப் பணத்தைப் பெற அவர்களுக்கு ஒரு வழி சொல்ல நான் விரும்புகிறேன். எந்தவொரு காவல் துறை அதிகாரியும் கள்ளச் சாராய வியாபாரிகளைக் கண்டுபிடித்து, உண்மையான குற்றங்களை நிரூபிப்பாரேயானால், அவருக்கு குடியரசு தினத்திலோ அல்லது ஆகஸ்ட் 15 விடுதலை நாள் விழாவிலோ ஒரு பதக்கம், காந்தி பெயரால், மகாத்மா காந்தி பதக்கம் என்ற ஒரு பதக்கம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமாத்திரம் அல்ல, பத்தாயிரம் ரூபாயும் அவர்களுக்குப் பரிசாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) மகாத்மா பதக்கத்தாலும் இந்தப் பத்தாயிரம் ரூபாயாலும் இந்த மாமூல் தொலைகிறதா என்று பார்ப்போம் என்று சொல்லி, இது பரிசீலனையில் இருக்கின்றது என்பதையும் எடுத்துக் கூறி, இந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்த எல்லா மாண்புமிகு உறுப்பினர் களும் எடுத்துக் கூறிய கருத்துக்களின் அடிப்படையில், அரசு கள்ளச் சாராயத்தை ஒழிப்பதிலே தீவிர நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

காவலர்களிடையே தகராறு

உரை : 39 **நாள் : 07.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26-7-1996 அன்று மூன்றாவது நடுவர்மன்ற நீதிபதி திரு. சங்கரநாராயணனுக்கும், கடைய நல்லூர் காவல்நிலைய தலைமைக் காவலர் பழனிச்சாமி மற்றும் சேரன்மகாதேவி காவல்நிலைய முதல்நிலைக் காவலர் முருகன் ஆகியோருக்கும் இடையே நடைபெற்ற தகராறு குறித்து இதே அவையிலே, 3-8-1996 அன்று விரிவாகப் பேசப்பட்டு, நானும் பதிலளித்து, எடுத்துள்ள நடவடிக்கை விவரங்களையும் அறிவித்திருக்கிறேன். இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது குறித்து, வழக்கறிஞர்களிடமிருந்தோ அல்லது நடுவர் திரு. சங்கரநாராயணனிடமிருந்தோ அரசாங்கதிற்கு எந்தவிதமான தகவலும் தரப்படாத நிலையில், இதுகுறித்து கழகத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர் மதுரை வேலுசாமி அவர்களுக்கு, அவர்கள் அனுப்பியிருந்த அந்தப் புகார் மனுவை நானே கேட்டுப் பெற்று, அதற்கான பதிலை இதே அவையில் சொன்னதோடு, தவறு காவலர்கள்மீது இருந்ததோ, இல்லையோ, எதற்கும் பலிக்கடாவாக வேண்டியவர்கள் அவர்கள் என்ற முறையிலேயும், அந்தத் துறையினர் மேலும் கவனமாகப் பணியாற்ற வேண்டும் என்பதை அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதற்காகவும், வழக்கறிஞர்கள் விடுத்துள்ள கோரிக்கைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காகவும், அந்த இரண்டு காவலர்களையும் - தலைமைக் காவலர் மற்றும் முதல்நிலைக் காவலர் ஆகிய இருவரையும் - உடனடியாக தற்காலிகப் பணிநீக்கம் செய்ததோடு, அவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன்படி அவர்கள் அன்றே கைது செய்யப்பட்டும் இருக்கிறார்கள்.

காவல்துறையின் தரப்பில், நீதிபதி பேருந்திலோ அல்லது பின்னர் காவல் நிலையத்திலோ அவர் தான் யார் என்பதை

தெரிவித்திருந்தால் இத்தகைய நிகழ்ச்சிகள் நேர்ந்திருக்காது என்று தெரிவித்தபோதும்கூட, நான் அவர்களிடம் நீதிபதி என்பதற்காக மாத்திரமல்ல, பொதுமக்களிடம்கூட காவலர்கள் பணிவாக நடந்து கொள்வதுதான், நல்லது என்று கூறினேன். அதன் காரணமாக அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும் அன்று நான் அவையிலே பதில் கூறும்போது இந்தச் சம்பவம் குறித்து நீதி விசாரணை மாவட்ட அளவிலான நீதிபதியைக் கொண்டு அல்ல, உயர்நீதிமன்ற அளவிலான ஒரு நீதிபதியைக் கொண்டு நீதி விசாரணை நிச்சயமாக நடத்தப்படும் என்று அறிவித்ததோடு அதைப்பற்றி உயர்நீதிமன்றத்திற்கு அனுமதி கேட்டு முறையாக எழுதப்பட்டுள்ளது. இதற்குப் பிறகும் வழக்கறிஞர்கள் தொடர்ந்து போராட்டத்திலே ஈடுபட்டு வருவதோடு சேரன்மகாதேவி இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றொரு கோரிக்கையை வைத்தார்கள். இந்தக் கோரிக்கையையும் ஏற்று சேரன்மகாதேவி இன்ஸ்பெக்டர் காளையாப்பிள்ளை வேலூர் சரகத்திற்கும், சப்-இன்ஸ்பெக்டர் முகமது மைதீன் இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் மாற்றப்பட்டுள்ளார்கள். மேலும் இந்த இருவர்மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க காவல்துறை இயக்குநர் ஆணை பிறப்பித்திருக்கிறார். அது மாத்திரமல்ல, இந்தச் சம்பவம் குறித்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கு விசாரணைகூட மாநில குற்றப்பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணையிலோ நீதி விசாரணையிலோ உண்மைகள் தெரியவரும்போது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவும், இந்த அரசு தயாராக இருக்கிறது. இவ்வளவுக்குப் பிறகும் மீண்டும் ஒரு கோரிக்கை. தற்போது டி.எஸ்.பி. மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைத்தான் அன்றைக்கு திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். அவர் பேசினார் என்பதற்காக அதைத் தள்ளி விடுவதில்லை. இப்படி தொடர்ந்து போலீசார் மீதே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால் போலீசார், அவர்களுடைய கட்டுப்பாடு என்னாவது என்று கேட்டார்கள். நான் ஒரு அமைதிநிலை வேண்டுமென்பதற்காக அவர்கள் வைத்த கோரிக்கைகளை எல்லாம் ஏற்று படிப்படியாக தற்காலிகப் பணி நீக்கம் செய்வது, கைது செய்வது, வழக்கு போடுவது, மாநிலக் குற்றப் பிரிவிற்கு

மாற்றுவது என்று இவ்வளவும் செய்து, சப்-இன்ஸ்பெக்டரையும், இன்ஸ்பெக்டரையும் வேறு ஊர்களுக்கு வேறு மாவட்டங் களுக்கு மாற்றிய பிறகும் டி.எஸ்.பி. மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி காவல் துறை கண்காணிப்பாளர் அவர்கள் தந்துள்ள தகவல்படி நீதிபதி திரு. சங்கரநாராயணனை காவல் நிலையத்திலே நல்ல முறையில் நடத்தினார்கள் என்றும், அவர் யார் என்று சொன்னதும் மரியாதையாக நடத்தினார்கள் என்றும் திருப்தியாக அவர் தெரிவித்திருக்கிறார். மேலும் இரண்டு தினங்கள் காவல் துறையின் ஜீப் ஒன்றைப் பயன்படுத்தி திருச்செந்தூர் கோவிலுக்கு அந்த நடுவர் திரு. சங்கரநாராயணன் போய்விட்டு வந்தார். இவ்வளவு சுமுகமாக நடந்துகொண்டவர் பின்னர் தன்னுடைய நிலையை ஏன் மாற்றிக்கொண்டார் என்றும் நெல்லை காவல்துறை கண்காணிப்பாளர் எங்களுக்கு இந்தத் தகவலைத் தந்திருக்கிறார். இந்தச் சூழ்நிலையிலே மதுரை, திருநெல்வேலி ஆகிய இரண்டு இடங்களிலே மாத்திரம் வழக்கறிஞர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடருவோம் என்று கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு கதை உண்டு. ஒரு பாம்பு ஒரு சாமியார் இடத்திலே சென்று என்னைப் பார்த்தால் எல்லோரும் அடிக்கிறார்கள். பயப்படுகிறார்கள் என்ன செய்யலாம் என்று கேட்டது. சாமியார் சொன்னார் நீ யாரையும் கடிக்காமல் இரு, அடிக்க மாட்டார்கள் என்று சொன்னார், பாம்பு 10 நாள் கழித்து சாமியாரிடத்திலே உடம்பெல்லாம் புண்களோடு சென்றது. என்ன என்று கேட்டார் சாமியார். என்னை கண்டபடி அடிக்கிறார்கள் யாரையும் கடிக்காமல்தான் இருந்தேன் என்று. 'நான் கடிக்காமல்தான் இருக்கச் சொன்னேன். படம் எடுத்துச் சீறாமலா இருக்கச் சொன்னேன்' என்று சாமியார் கேட்டார். இந்தக் கதையோடு இந்தத் தீர்மானத்திற்கான என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

கன்யாகுமரியில் வன்முறைச் சம்பவம்

உரை : 40 நாள் : 09.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புக் கவன ஈர்ப்பில் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ப. ரங்கநாதன், திரு. இரா. தாமரைக் கனி, திரு சி வேலாயுதன், திரு. டி. மணி, திரு. ஜி. பழனிசாமி, டாக்டர் வே. ஆல்பன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதில் அரசியல் கட்சிகளுக்குத் தொடர்பு உண்டு என்ற வாதத்தை சிலரும், இதில் அரசியல் கட்சிகளுக்குத் தொடர்பே இல்லை என்ற வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்களும் எடுத்துவைத்திருக் கிறார்கள். ஆனால் இந்தச் சம்பவத்தில் தொடர்புபடுத்தப்பட்டு கொலையுண்டவர்கள் பெயர்கள், கொலை செய்தவர்களின் பெயர்கள், இவைகளையெல்லாம் பார்க்கும்போது அரசியல் கட்சிகளுக்குச் சம்பந்தம் இருக்குமா என்ற கேள்விக்கு, நிச்சயம் இருக்கக்கூடும் என்ற பதில்தான் கிடைக்கின்றது.

இருந்தாலும் இரண்டு அரசியல் கட்சிகளுக்கு இடையே நடைபெற்ற ஒரு வன்முறைப் போர் என்று எடுத்துச்சொல்லி, அதற்கு என்னுடைய பேச்சு மேலும் தூண்டுதலாக ஆகிவிடக் கூடாது என்ற அடக்க உணர்வோடு நடைபெற்ற சம்பவத்தையும் காவல் துறையினர் நடந்து கொண்ட முறையினையும் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொடர்ந்து கடந்த சில மாதங்களாக கன்னியாகுமரி மாவட்டத்தில் இதுபோன்ற வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான வழக்குகள் காவல் துறையினால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்றாலும்கூட உரிய

குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை என்கின்ற குறை பாட்டை நான் இங்கே தெரிவிக்காமல் இருக்க முடியாது.

2-8-1996 அன்று இரவு 11.45 மணிக்கு ரவி, சந்திரன், ஸ்ரீகுமார் மற்றும் 10 நபர்கள் சேர்ந்து சற்றும் எதிர்பாராத விதத்தில் அபாயகரமான ஆயுதங்களோடு லெனின் என்பவருடைய அண்ணன் ஸ்டாலின், அவரது தாயார் ரோஸ்மேரி ஆகிய இருவரையும் ஆயுதங்களால் தாக்கி சம்பவ இடத்திலே கொலை செய்திருக்கிறார்கள். வீட்டில் அவர்களோடு இருந்த லெனினுடைய சித்தப்பா மகன் வினோத் என்பவன் சத்தம் போடவே, அவனையும் கொலை செய்து விடுவதாக மிரட்டிவிட்டு ஓடியிருக்கிறார்கள். இந்தச் சம்பவம் குறித்து குற்றவாளிகள் மீது திருவட்டாறு காவல் நிலைய குற்ற எண் 428/96-ல் பிரிவுகள் 147, 148, 452, 427, 323, 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் 3-8-1996 அன்று காலை 5 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணையில், குற்றவாளிகள் நாட்டு வெடிகுண்டை வீசி வெடிக்கச் செய்திருப் பதாகத் தெரிகிறது. எதிரிகளிடம் சிக்காமல் தப்பிய லெனின் தன்னுடைய தாயும் அண்ணனும் கொலை செய்யப்பட்ட விவரம் தெரிந்து நண்பர்கள் கண்ணன், சிங் மற்றும் சில நபர்களுடன் சேர்ந்து செறுகோவிலிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தெற்கே ஈச்சன்விளை என்ற இடத்தில் ரவியின் அண்ணன் விஜயகுமார் என்பவரை 3-8-1996 அன்று காலை சுமார் 6.30 மணிக்குஅதே இடத்தில் வெட்டி, பழிவாங்குகிற நிலையில் படுகொலை செய்திருக்கிறார்கள். விஜயகுமாருடைய தாயார் செல்லம்மாள் என்பவரின் புகாரின் பேரில் இச்சம்பவம் குறித்து குழித்துறை காவல் நிலைய குற்ற எண் 495/96-ல் பிரிவு 147, 148, 341 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அறிந்த மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர், தக்கலை துணை கண்காணிப்பாளர் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று சட்டம்-ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். செறுகோல், ஈச்சன்விளை, இரவிபுதூர்க்கடை ஆகிய இடங்களில் ஆயுதம்

தாங்கிய காவலர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளார்கள். குலசேகரம், களியக்காவிளை, அருமனை ஆகிய காவல் நிலைய ஆய்வாளர்கள் தலைமையில் 3 காவல் படைகள் ரோந்துப் பணியிலும், குற்றவாளிகளைக் கைது செய்யும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

குற்றவாளிகள் தலைமறைவாக இருந்து வருகிறார்கள். குற்றவாளிகளைக் கைது செய்ய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை தெரிவித்திருக்கிறது. நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும், அங்கே எந்தவிதமான பதட்ட நிலையும் தற்போது இல்லை என்றும் காவல் துறை சார்பாக அரசுக்கு அறிக்கை தரப்பட்டிருக்கிறது. நான் அந்த அறிக்கையை முழுமையாக ஏற்றுக்கொள்பவன் அல்ல. எனென்றால் எந்த ஒரு சம்பவத்திலும் காவல் துறை சார்பாக அறிக்கை தரப்படுகிறபோது அது நூற்றுக்கு நூறு உண்மை என்று எடுத்துக்கொள்ள இயலாது. நான் ஆளும் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினாலேயே, அதிலும் குறிப்பாக காவல்துறைக்கும் அமைச்சராக இருக்கின்ற காரணத்தினாலேயே காவல் துறையினருடைய அலட்சியப் போக்கு, அவர்களுடைய மெத்தனம் இவைகளுக்கெல்லாம் என்றைக்கும் வக்காலத்து வாங்கமாட்டேன் என்பதை இந்த அவைக்கு நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் மணி அவர்கள் இங்கே ஒன்றை எடுத்துக் காட்டினார்கள். பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்திலே காவல்துறை அங்கே வளர்ந்து வருகின்ற மதவெறி போன்ற செயல்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையிலே, முன்னின்று அதை நடத்தாவிட்டாலும்கூட அதற்குப் பக்கபலமாக இருப்பார்களோ என்ற சந்தேகம் இருந்து வருகிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள்.

நம்முடைய பழனிசாமி அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, தாமரைக்கனி சொன்னதைப்போல், ரங்கநாதன் எடுத்துக்

காட்டியதைப்போல், தமிழ்நாட்டில் மதவெறி தலை தூக்கக்கூடாது. மதத்திலே அவரவர்களுக்கு பற்று இருப்பது என்பது வேறு, அது வெறியாக மாறி, இன்னொரு மதத்தைத் தாக்குவது என்பது வேறு என்பதை நாம் நன்கு உணர்ந்து இருக்கிறோம். தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் திராவிட இயக்கமும், சமதர்மத்திலும், சமூகநலத்திலும் அக்கறை கொண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சி போன்ற இயக்கங்களும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் வளர்க்கப்பட்ட காங்கிரஸ் பேரியக்கமும், அந்த இயக்கத்திலே உள்ளவர்களும் தமிழ்நாட்டிலே ஒரு அமைதி நிலவவேண்டும் என்பதற்காக பெரும்பாடுபட்டிருக்கிறார்கள். இஸ்லாமியர்களுக்கும், இந்துக்களுக்கும் இடையிலே மோதல் ஏற்படக்கூடாது, அவர்கள் சகோதரர்களாக வாழ வேண்டும் என்ற அந்தக் கடமை உணர்ச்சியை, கண்ணிய உணர்ச்சியை, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் போன்றவர்கள் போதித்து இருக்கிறார்கள். எனவே இந்த மண் அப்படிப்பட்ட பெரியவர்களால் பண்படுத்தப்பட்ட மண். இந்த மண்ணில் மதக்கலவரங்களுக்கு இடமில்லை, கடவுள் பெயராலோ, மதத்தின் பெயராலோ வன்முறையை யார் தூண்ட முயற்சித்தாலும் அவர்கள் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட வேண்டும் என்பதில் (மேசையைத் தட்டும் ஒலி.) இந்த அரசு நிச்சயமாக முன் நிற்கும் என்பதைத் தெரிவித்து, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் அவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல காவல் துறை இன்னும் செம்மையாகச் செயல்பட, இன்னும் முனைப்பாகச் செயல்பட, ஏற்ற நடவடிக்கைகளை உடனடியாக இந்த அரசு எடுக்கும் என்பதையும் தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

மாவட்டங்கள் பிரிவினை

உரை : 41 நாள் : 09.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் மாண்புமிகு உறுப்பினர்கள் கோமதி சீனிவாசன், திருஞான சம்பந்தம், தாமரைக்கனி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். தாமரைக்கனி அவர்கள் எந்தப் பகுதி எந்தப் பகுதியோடு சேர வேண்டும் என்பதிலே மிகத் தெளிவாக அந்த ஊரினுடைய பெயரையெல்லாம் இங்கே உச்சரித்திருக்கிறார். (சிரிப்பு) அதனால் இந்தப் பிரச்சினையிலே அவர் எவ்வளவு உணர்வுபூர்வமாக தெளிவாக இருக்கிறார் என்பது மிக நன்றாகத் தெரிகிறது. (குறுக்கீடு)... பேசுகிற தமிழ் எப்படி இருந்தாலும், தாமரைக்கனி என்கின்ற பெயர் நல்ல தமிழ்.

இந்த மாவட்டங்களைப் பிரித்ததில் சில இடங்களில் சில கருத்து மாறுபாடுகள் வெளியிடப்பட்டு, வழக்கமாக ஒரு குழு, அதிகாரிகள் கொண்ட குழு, அமைக்கப்பட்டு அந்தக் குழுவினுடைய அறிக்கையை அடிப்படையாக வைத்து அரசு முடிவுகளை எடுத்திருக்கின்றது. அதுதானே எப்போதும் நடைபெறுகின்ற முறை? அந்த முறையையே பின்பற்றியது இந்த அரசு. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஏற்கெனவே நாகப்பட்டினத்தை தலைநகராகக் கொண்டு நாகை-காயிதே மில்லத் மாவட்டம், முன்னாள் முதல்வர் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டது. அந்த மாவட்டத்தின் தலைநகர் நாகப்பட்டினம் என்றபொழுதே, அப்போது-நாகை என்பது அந்த மாவட்டத்திலே ஒரு ஓரத்திலே ஒதுங்கியிருக்கின்ற ஒரு ஊர். திருவாரூர்தான் நான்கு, ஐந்து இரயில் பாதைகள் சந்திக்கின்ற ஒரு ஜங்ஷன். எனவே - திருவாரூர்தான் தலைநகரமாக இருக்க வேண்டும் என்று, அன்றைக்கு, மக்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகமோ,

மற்ற அரசியல் கட்சிகளோ அதற்கான போராட்டத்தைத் தொடங்கவில்லை. ஏனென்றால், இதையெல்லாம் பெரியதாக ஆக்கி, இதுபற்றிய கிளர்ச்சிகளை நடத்தத் தேவையில்லை என்ற உணர்வோடு வாளா இருந்துவிட்டோம். ஆனால் திருவாரூரிலே உள்ளவர்கள், அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் நாகைக்குச் செல்வது மெத்த சிரமமாக இருக்கிறது என்று ,நாடாளுமன்ற உறுப்பினர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர்களும் மற்றும் திருவாரூரிலே உள்ள வணிகப் பெருமக்களும், அந்த வட்டாரத்தைச் சேர்ந்த வணிகப் பெருமக்களும் நான் அண்மையில் திருவாரூர் சென்றிருந்தபோது ஒரு முறையீட்டை என்னிடத்திலே கொடுத்து, திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஒரு மாவட்டம் அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்கள். எனக்கும் நீண்டநாளாக ஒரு எண்ணம். திராவிட இயக்கத்திலே, தந்தை பெரியார் அவர்களால் பெரிதும் பாராட்டப்பட்ட, பேரறிஞர் அண்ணா அவர்களால் பெரிதும் புகழப்பட்ட, அன்றைய சென்னை மாகாண அரசியலில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு எதிராக அமர்ந்து கண்ணியமான முறையிலே வாதங்களை எடுத்து வைத்த, திருவாரூருக்கு அருகிலே உள்ள பெரும் பண்ணையூரைச் சேர்ந்த சர் ஏ.டி.பன்னீர்செல்வம், அன்று ஒரு நாள் இந்தியாவினுடைய ஆலோசகராக இங்கிலாந்துக்குச் சென்ற போது, இந்துமாக் கடலிலே அவர் விமானத்தோடு மூழ்கி இறந்த அந்தத் துயரச் செய்தி, மாணவப் பருவத்திலே என்னுடைய மனதிலே கப்பிக் கொண்டிருந்த காரணத்தாலும், அத்தகைய ஒரு பெருந்தலைவரை, தஞ்சைத் தரணி இழந்திருக்கிறது என்ற காரணத்தாலும், அவருடைய பெயரை அந்தப் பகுதிக்குச் சூட வேண்டும் என்ற எண்ணத்தின் முனைப்பின் காரணமாக அப்படிப் பிரிக்கப்படுகின்ற மாவட்டத்திற்குப் பன்னீர்செல்வம் மாவட்டம் என்ற பெயர்சூட்டி அது இந்த அவையிலும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த மாவட்டத்தினுடைய பெயர் சூட்டப்பட்டு, எந்தெந்த ஒன்றியங்கள் அதிலே இணைவது என்ற முடிவும் எடுக்கப்பட்டது. ஏன் ஒன்றியங்கள் வாரியாக இந்தக் கணக்கைச் செய்தோம் என்றால், உள்ளாட்சி மன்றத் தேர்தல் வருகின்ற காரணத்தால், ஒன்றியம் வாரியாக இந்த மாவட்டங்கள்

பிரிக்கப்பட்டால்தான் குழப்பம் இல்லாமல் இருக்கும், இல்லாவிட்டால் அதை ஒரு காரணமாகக் காட்டி உள்ளாட்சி மன்றத் தேர்தலை நிறுத்திட யாராவது வழக்குத் தொடருவார்கள் என்பதற்காக, இத்தனை ஒன்றியங்கள் ஒரு மாவட்டத்திலே என்ற அளவிலே பிரிக்கப்பட்டன. அப்படிப் பிரிக்கப்படும்பொழுது நாகை - காயிதே மில்லத் மாவட்டத்திற்கு எத்தனை ஒன்றியங்கள், தஞ்சை - இப்பொழுது இருக்கின்ற தஞ்சை மாவட்டத்திற்கு எவ்வளவு ஒன்றியங்கள், திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திற்கு எத்தனை ஒன்றியங்கள் என்று பிரிக்கப்பட்ட பொழுது, மதுக்கூர் ஒன்றியத்தை நீங்கள் திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்தோடு சேர்க்கக்கூடாது என்று ஒரு குழுவினர் என்னை சந்தித்தார்கள் நண்பர் மாரிமுத்து அவர்கள் தலைமையிலே - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர் - அவருடைய தலைமையிலே - என்னை சந்தித்தார்கள். அவர்களுடைய கோரிக்கையிலே இருந்த நியாயத்தை உணர்ந்து, மதுக்கூரை திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலே சேர்ப்பதால், அங்கே வட்ட அளவிலே சில சிக்கல்கள் ஏற்படுகின்றன என்ற நியாயத்தை உணர்ந்து, அதை ஏற்றுக்கொண்டு, மதுக்கூரை திருவாரூர் - ஏ.டி. பன்னீர்செல்வம் மாவட்டத்திலே சேர்க்க வேண்டாம் என்ற முடிவை மேற்கொண்டோம். இதைப் பார்த்தவுடன் நாமும் ஏன் போராடக் கூடாது என்று, வலங்கைமானிலே உள்ள சிலர் - பொதுமக்கள் அல்ல சில உறுப்பினர்கள் குறிப்பிட்டதுபோல எல்லா பொதுமக்களும் அல்ல, ஒரு சில அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் விவசாயச் சங்கம் என்ற பெயரால் உள்ளவர்கள் தான் - இந்தப் போராட்டத்தை அறிவித்து, அவர்கள் முதலிலே கடை அடைப்பு செய்தார்கள். அப்பொழுது நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு கோ. சி. மணி அவர்களிடத்திலே கூறி, நேரில் போய் அவர்களுக்கு விவரங்களை விளக்குமாறு சொன்னேன். ஏனென்றால், திருவாரூருக்கும் வலங்கைமானுக்கும் ஒன்றும் அதிக தூரம் இல்லை. ஏறத்தாழ தஞ்சைக்கும் வலங்கைமானுக்கும் உள்ள தொலைவுதான். அதுமாத்திரமல்ல, சில பேருக்கு இந்த பன்னீர் செல்வம் மாவட்டம் என்ற பெயர் பிடிக்காத காரணத்தாலேயே, வலங்கைமானை பன்னீர்செல்வம் மாவட்டத்தோடு இணைக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதிலே, வலங்கைமானிலே

உள்ளவர்களுக்கு என்ன காரணத்தாலோ பன்னீர்செல்வத் தினுடைய பெயர் பிடிக்கவில்லை. பன்னீர்செல்வம் மாவட்டத்திலே தங்களுடைய ஊர் பெயர் இருக்கக்கூடாது என்கின்ற அந்த எண்ணத்தோடு அவர்கள் இந்த கடை அடைப்பு போன்றவைகளை செய்தார்கள். மாண்புமிகு அமைச்சர் மணி அவர்கள் அங்கே சென்று, அவர்களிடத்தில் எல்லாம் பேசி ஒரு சமாதானத்தை ஏற்படுத்தினார். மாவட்ட ஆட்சித் தலைவரோடும் நான் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவரையும் அனுப்பி வைத்தேன். அவரும் சென்று, அவர்களுக்கு விவரங் களைக்கூறி இருக்கிறார். இவ்வளவுக்கும் பிறகு, ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று திட்டமிட்டு 8-8-1996 அன்று சாலை மறியலிலே ஈடுபடப் போவதாக அறிவித்தார்கள். சாலை மறியலிலே ஈடுபடுவதை எந்த அரசும் அனுமதிக்க முடியாது. ஏனென்றால் மறியல், என்பது ஜனநாயகத்திலே ஒரு போராட்ட முறை. ஆர்ப்பாட்டம் ஜனநாயகத்தில் மற்றொரு போராட்ட முறை.

ஆர்ப்பாட்டம் என்றால், ஒரு குறிப்பிட்ட கோரிக்கைக் காக ஒரு அலுவலகத்திற்கு முன்னால் வந்து நின்று தங்களுடைய எண்ணங்களை முழக்கமாகச் செய்துவிட்டு திரும்புவது ஆர்ப்பாட்டம். மறியல் என்பது, முன்கூட்டியே ஒரு குறிப்பிட்ட அலுவலகத்தைக் குறித்து அந்த அலுவலகத்திற்கு முன்னால் சென்று, அலுவலகத்திற்குள் யாரும் செல்லாமல், அதிகாரிகள் செல்லாமல், பணியாற்றுகின்றவர்கள் செல்லாமல் தடுக்க முயற்சிப்பது. அப்படி தடுக்கும்பொழுது போலீசார் அவர்களைக் கைது செய்வார்கள். இது மறியல், இதுபோன்ற மறியலை திராவிட முன்னேற்றக் கழகத்திலே, எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் அண்ணா தலைமையிலே நாங்கள் நடத்தி இருக்கிறோம். அண்ணா கைது செய்யப்பட்டு வேலூர் சிறையிலேயே இருந்து இருக்கிறார். மறியல் போராட்டத்திலே ஈடுபட்ட காரணத்திற்காக மறியலிலே ஈடுபட்டுவிட்டு, அதன் காரணமாக கைது செய்யப்பட வேண்டும் என்ற எண்ணத்தோடு போராட்டம் நடத்துகிறவர்கள், நாங்கள் மறியலில் ஈடுபட்டோம், எங்களை விடுவித்துவிடுங்கள் என்று கேட்பது ஒரு போராட்ட முறையாகக்கூட எனக்குத் தெரியவில்லை. வேண்டுமானால் அரசு தானாக விடுவிக்கலாம். சாலை மறியல் என்பது என்னவென்றால்,

ஒரு குறிப்பிட்ட இடம் அல்ல. சாலையிலே எங்கு வேண்டுமானாலும் நின்றுகொண்டு வாகனங்களை, போக்குவரத்து சாதனங்களை, நடந்து செல்கின்ற மக்களை எல்லாம் மறிப்பது தான் சாலை மறியல். அது மறிக்கப்படுகின்றவர்களுக்கும் மறிப்போர்களுக்கும் இடையிலே கூட ஒரு மோதலை ஏற்படுத்தக் கூடும். அதனால் வன்முறைச் சம்பவங்கள் ஏற்படக்கூடும்.

சாலை மறியல் - நிச்சயமாக நான் சொல்கிறேன் - கடந்த காலத்திலே சில இடங்களில் நடைபெற்று இருந்தாலும்கூட, இனி வருங்காலங்களில் நிலைமை எந்த அளவுக்கு முற்றிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்து - எந்த ஒரு அரசியல் கட்சியும் போராட்ட உரிமை பெற்ற கட்சிதான், எந்த போராட்ட முறைகளை எந்தக் கட்சியானாலும் ஜனநாயக முறையிலே வன்முறைக்கு சற்றும் இடம் தராத முறையிலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு அங்கே மறியலோ ஆர்ப்பட்டமோ அல்லது அவர்கள் எண்ணுகின்ற எந்தப் போராட்டமோ நடத்தலாம். அறிவித்துவிட்டு நடத்தலாம்.

ஆனால் இந்தப் போராட்டம் அறிவிக்கப்பட்ட இடம் ஒன்று, நடத்திய இடம் ஒன்று, நடத்தியது மாத்திரமல்ல - நான் முதலிலேயே சொன்னேன். போலீஸ் அறிக்கையை நூற்றுக்கு நூறு அப்படியே நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று. ஆனால் நூற்றுக்கு நூறு ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றால் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்வேன் என்றுதான் அதற்குப் பொருள். அந்த வகையிலே நானே தொலைபேசியிலே மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டும், காவல் துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டும், நான் சேகரித்த தகவலைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

பாதுகாப்பு நடவடிக்கையாக போதுமான காவலர்கள் ஆயுத்தம் செய்யப்பட்டு மூன்று இடங்களில் - ஒரு இடத்தில் திருவையாறு துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையிலும், மற்றொரு இடத்தில் தஞ்சை ஊரக உதவி காவல் கண்காணிப் பாளர் தலைமையிலும், மற்றொரு இடத்தில் கும்பகோணம் துணை காவல் கண்காணிப்பாளர் தலைமையிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. நேற்று காலையிலே அரிதுவாரமங்கலம், அவனிதநல்லூர் கிராமங்களில் இருந்து

சுமார் ஆயிரம் பேர் அம்மாப்பேட்டை நோக்கி அரிவாள், சவுக்குக் கட்டை, சைக்கிள் செயின் போன்ற பயங்கர ஆயுதங்களோடு சாலை மறியலில் ஈடுபடப் போவதாகக் கூறிக் கொண்டு மாவட்ட விவசாய சங்கத் தலைவர் கலியமூர்த்தி, மக்கள் சக்தி இயக்கத்தை சார்ந்த ஜெயபாலன் ஆகியோர் தலைமையில் வந்திருக்கிறார்கள். இருகரை சாலை சந்திப்பில் நேற்று காலை 10-45 மணியளவில் உதவி காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அவர்களை நிறுத்தி பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறார்கள். அவர்கள் கைதாக சம்மதித்து காவல் துறை வாகனங்களில் ஏறிக்கொண்டிருந்த போது கூட்டத்திலே ஒரு பகுதியினர் வன்முறையில் ஈடுபடத் தொடங்கினார்கள். அய்யம்பேட்டை இன்ஸ்பெக்டர் கோதண்டம் சைக்கிள் செயினால் தாக்கப்பட்டு காயம் அடைந்து இருக்கிறார். தொடர்ந்து காவல் துறையினர் மீது சரமாரியாக கல்வீச்சுக்கள் நடைபெற்றன. இதிலே தஞ்சை ஊரக உதவி காவல் கண்காணிப்பாளர் ராஜூ தலையில் பலத்த காயமடைந்த நிலையில் இரண்டு கண்ணீர்ப் புகை குண்டுகள் முதலில் வீசப்பட்டன. இது எதிர்பார்த்த பலனைத் தராததால் மீண்டும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளரை வன்மையாகத் தாக்கி கடத்த முயன்றிருக்கிறார்கள். வேறு வழியின்றி தன்னையும் மற்றும் அடிபட்டுக் கொண்டிருக்கிற மற்ற காவல் துறையினரையும் காப்பாற்ற வேண்டி அவர் துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டிருக்கிறார் அதிலே பலன் இன்மையால் பின்னர் கூட்டத்தை நோக்கி கீழே இறங்கி சுட்டத்தில் மூன்று பேர் காயம் அடைந்திருக்கிறார்கள். பின்னர் சாலை மறியல் செய்ய வந்த கூட்டம் கலைந்து சென்றுவிட்டது. அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 147, 148, 323, 324, 336, 332 மற்றும் 307-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வன்முறையில் ஈடுபட்ட 21 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். பின்னர் 1.30 மணியளவில் 93 பேர் சாலை மறியல் செய்வதற்காக அம்மாப்பேட்டை வந்தபோது அவர்களும் கைது செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் நடைபெற்ற நிலவரம்.

இதிலே இப்போதே பன்னீர்செல்வம் மாவட்டத்தில் மிகக் குறைவான ஒன்றியங்கள்தான் இருக்கின்றன. இதையும் எடுத்து மீண்டும் தஞ்சைக்கே கொடுத்து விட்டால், வைத்துக்கொள் என்றுகொடுத்து விட்டால், பிறகு பன்னீர்செல்வம் மாவட்டம் என்று தேவையே இல்லை. அப்படி ஒரு முடிவுக்கு அங்கேயுள்ள இந்த ஒன்றியங்கள் எல்லாம் வந்து பன்னீர்செல்வம் பெயரில் தனி மாவட்டம் ஒன்று தேவையில்லை. திருவாரூர் தலைநகராக இருப்பதற்குத் தகுதியில்லை, ஏனென்றால் நீ அந்த ஊர்க்காரன், என்ற ஒரு முடிவை அவர்கள் அறிவித்து விடுவார்களானால், அவர்கள் உளப்பாங்கை நான் நன்றாகப் புரிந்துகொண்டு, அந்த மாவட்டத்திற்குப் பெயரை வைப்பதையேகூட கைவிட்டுவிடத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒன்று, இதுபோன்ற வன்முறைச் செயல்களால் தொடர்ந்து கலவரங்களில் ஈடுபட்டு, அரசு எடுக்கிற முடிவை எல்லாம் மாற்றிவிட முடியும் என்று யாரும் கருதுவார்களானால், அரசு காட்டுகிற பொறுமைக்குப் பெயர் கோழைத்தனம் என்று யாரும் கருதிவிடக் கூடாது என்ற எச்சரிக்கையை மாத்திரம் விடுத்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

நெய்வேலி நிலக்கரி நிறுவனப் பிரச்சினை

உரை : 42 **நாள் : 09.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி பகுதியிலே உள்ள கிராம மக்கள்பால் மிகுந்த அக்கறைகொண்டு, ஆர்வத்தோடு இந்தப் பிரச்சினை விரைவில் தீரவேண்டும் என்று எண்ணுகின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்களுடைய இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு மிக முக்கியமானது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதுபற்றி சில விவரங்களைக் கூறுவது என்னுடைய கடமை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், அதன் இரண்டாம் சுரங்க விரிவாக்கம் மற்றும் அனல் மின் நிலையம் அமைப்பதற்காக சுமார் 9 ஆயிரம் ஏக்கர் நிலம், 1978-79ஆம் ஆண்டில் கையகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்திற்காக நிலம் கொடுத்த நபர்கள் தங்களுக்கு நியாயமான இழப்பீடு அளிக்கப்பட வில்லை என்பதற்காக, கடந்த 16 அல்லது 17 ஆண்டுகளாக கிளர்ச்சியிலே ஈடுபட்டு, கோரிக்கைகளை வைத்து வருகின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகளின்படி, அதிகரிக்கப்பட்ட நஷ்ட ஈடு கொடுப்பதற்கு சுமார் 100 கோடி ரூபாய் கூடுதல் தொகை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திற்குத் தேவைப்படும் என்பதால் அதனைத் தவிர்க்கும் பொருட்டு, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகமே, நீதிமன்றத்தில் வழக்காட விரும்பியது. 1989-90ஆம் ஆண்டில், தி.மு.க. அரசு இடையிலே பொறுப்பேற்று வந்தபோது, அதுகுறித்து பேசி, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிர்வாகம் நஷ்டஈட்டுத் தொகையாக 20 கோடி ரூபாய் வரையிலும் கொடுக்க முன்வந்தது.

மேலும் இதைப்பற்றி தொடர்ந்து நடந்த கூட்டத்தின் முடிவுகளின்படி தென் ஆற்காடு மாவட்ட ஆட்சியாளர், 36 கோடி ரூபாய் நஷ்ட ஈட்டுத் தொகை பெற்றுத்தர ஒப்புக்கொண்டார்கள். ஆனால் நிலம் இழந்த விவசாயிகளுடைய கோரிக்கையின்படி 50.67 கோடி ரூபாய் தேவைப்பட்டது. இதற்கிடையில், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் முன்பாக வழக்காடியதில் உயர்நீதிமன்றம், நஞ்சை, முந்திரித் தோப்பு ஆகியவைகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 30 ஆயிரம் வீதமும், பாசனப் புஞ்சை ஏக்கர் ஒன்றுக்கு 25 ஆயிரம் வீதமும், மானாவாரி நிலம் ஏக்கர் ஒன்றுக்கு 15 ஆயிரம் ரூபாய் வீதமும், மாமூல் கறம்புக்கு ஏக்கர் ஒன்றுக்கு 12,500 ரூபாய் வீதமும், இத்துடன் 30 சதவீதம் ஊக்கத் தொகையும், நிலம் எடுத்த தேதியிலிருந்து 9 சதவீத வட்டியும் கொடுக்க வேண்டும் என்று, 1996-ஆம் ஆண்டு பிப்ரவரி - மார்ச் மாதத்தில் தீர்ப்பு அளித்தது.

நீதிமன்றம் வழங்கிய அதிகரித்த நஷ்ட ஈட்டை நிர்வாகம் கொடுக்க மறுத்து மேல்முறையீடு செய்தபோதிலும் பின்னர் நிலம் இழந்தவர்களுடைய குடும்பத்திற்கு ஓரளவிற்கு அதிக நஷ்ட ஈடு கொடுக்க முன்வருவதோடு சில நிபந்தனைகளுக்குட் பட்டு வேலைவாய்ப்புகளும் தர நிர்வாகம் முன்வந்ததோடு இந்தத் திட்டத்திற்கு நில உரிமையாளர்கள் சம்மதிக்கவில்லை யென்றால் உச்சநீதிமன்றத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டு செல்ல நேரிடும் என்றும், நிர்வாகம் கருத்து தெரிவித்தது. மாவட்ட ஆட்சியாளர் தன்னுடைய அறிக்கையில் நெய்வேலி பழுப்புநிலக்கரி நிறுவனத்தின் நிர்வாகம் நிலமிழந்த விவசாயக் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முன்பு ஒப்புக்கொண்டது என்றும், நிலம், வீடு போன்ற தங்களது அசையா சொத்துக்களை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் திட்டத்திற்காக விட்டுக்கொடுத்த கிராமவாசிகள் 10,000 பேர் வேலைவாய்ப்பிற்காகக் காத்துக்கொண்டிருக் கிறார்கள் என்றும், இந்நிறுவனம் சுரங்கத் திட்டத்தை விரிவுபடுத்துவதற்காக மேற்கொண்டுள்ள முயற்சிகளால்

இன்னும் பல குடும்பங்கள் வெளியேற்றப்படும் நிலை ஏற்படும் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது என்.எல்.சி. நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள், மற்றவர்களின் சங்கங்களும் நிலமிழந்தவர்களும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள், எனவே, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு என்.எல்.சி. அதிகாரிகள் மற்றும் அரசு அதிகாரிகள், கிராம மக்களுடைய நிலம் இழந்தவர்களுடைய பிரதிநிதிகள் கொண்ட ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து விவாதித்து முடிவு எடுக்கலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஆலோசனை தெரிவித்துள்ளார். நீண்டகாலமாக இருந்து வருகின்ற இந்தப் பிரச்சினையை விரைவில் முடிக்கவேண்டுமென்ற அக்கறை மாண்புமிகு திரு. அழகிரி அவர்கள் இங்கே சொல்லிக் காட்டியதைப் போல் இந்த அரசுக்கும் இருக்கிறது. திரு. அழகிரி போன்றவர்கள் மற்றும் அந்த வட்டாரத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரின் துணையோடும் இந்த நிலம் இழந்தவர்களுக்காக அங்கே பாடுபடுகின்ற சங்கங்களுடைய உதவியோடும் ஒரு உயர் மட்டக் குழுவை அமைத்து, விவாதித்து விரைவிலே நல்ல முடிவை உருவாக்க இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்த அமைகின்றேன்.

சென்னை வேப்பேரி வன்முறைச் சம்பவம்

உரை : 43 நாள் : 17.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை வேப்பேரி மெட்ரிகுலேஷன் பள்ளியில் நடைபெற்ற ஒரு வன்முறைச் சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ்.திருநாவுக்கரசு, திரு.ஜி.பழனிசாமி, திரு.ப.ரங்கநாதன், திரு. டி.மணி, திரு. ம அப்துல் லத்தீப், திரு. பி.வெங்கடசாமி, திரு. ஜி.கே. மணி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டு, எல்லோருடைய உணர்வுகளின் பிரதிபலிப்பாக இந்த வன்முறைகள் தமிழகத்தில் தொடர்ந்து பரவிடா வண்ணம் தடுத்திட வேண்டுமென்ற நல்ல எண்ணத்தை வெளியிட்டிருக் கிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து எனக்குத் தரப்பட்டுள்ள, காவல் துறையினுடைய அறிக்கையை அவைமுன் வைப்பது முக்கியம் என்று கருதுகிறேன். நேற்று 16-8-1996 அதிகாலை சுமார் 2.00 மணி அளவில் வேப்பேரி, வள்ளியம்மாள் தெரு, 16ஆம் எண் இல்லத்திலே உள்ள 'செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிகுலேஷன் மேனிலைப்பள்ளி, வளாகத்திற்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அந்தப் பள்ளிக்குச் சொந்தமான டி.சி.பி. 9681 என்ற பதிவு எண் கொண்ட பேருந்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு நாட்டு வெடிகுண்டுகள் வெடித்து, அதன் காரணமாக, அந்தப் பேருந்தின் டீசல் டாங்க், கண்ணாடிகள் மற்றும் சில இருக்கைகள் சேதம் அடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பள்ளியின் அலுவலர் திரு. ஜெயபால் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில், வழக்கு

ஒன்று ஜி-1 வேப்பேரி காவல் நிலைய குற்ற எண் 1339/96, பிரிவு427, 450 இந்தியத் தண்டனைச் சட்டம் மற்றும் பிரிவு 3 இந்திய வெடிமருந்துச் சட்டப்படி பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. வெடி மருந்துப் பரிசோதனை வல்லுநர்கள், மோப்ப நாய்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டார்கள். புலன் விசாணையின்போது, அந்தப் பள்ளி வளாகத்திற்கு வெளிப்புறத்தில், சாலை ஓரத்தில் வெடிக்காத நாட்டு வெடிகுண்டு ஒன்றும், தமிழக மக்கள் விடுதலைப் படை என்ற அமைப்பினால் வெளியிடப்பட்டதாகக் கருதப்படும் கையால் எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மூன்றும் கைப்பற்றப் பட்டுள்ளன. இந்தச் சம்பவம் நடைபெற்றபோது, பள்ளியின் நடைக்கூடத்தில், அந்தப் பள்ளியின் காவலரும், அந்தப் பேருந்தின் ஓட்டுநரும் படுத்திருந்தார்கள். இந்தச் செயல், தமிழக மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்தவர்களால் செய்யப் பட்டிருக்கலாம் என்பதால் வழக்கினை க்யூ-பிரிவுக்கு மாற்றி புலன் விசாரணை நடத்தும்படி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடித்த இடத்தின் வெளியே, சாலையில் வெடிக்காத நாட்டு வெடிகுண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வெடித்த குண்டுகளும் அதே வகையைச் சேர்ந்ததாக உள்ளன என்றும் தெரிய வந்ததுள்ளது. வெடிக்கப்பட்டவை நாட்டு வெடிகுண்டுகளாக இருந்தபோதிலும் தீவிரமாக கவனம் செலுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று காவல் துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. துண்டுப் பிரசுரத்திலிருந்த கையெழுத்தும், தமிழக மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த ராஜாராமன் என்பவரது கையெழுத்தும் ஒன்றுபோல இருப்பதால் அவரை விரைந்து தேடுகின்ற முயற்சியிலே காவல் துறை ஈடுபட்டுள்ளது. இது 1992 முதல் நடைபெறுகின்ற சம்பவங்களில் ஒன்றாகும். 1992ஆம் ஆண்டு இதே ராஜாராமன் இதேபோல நான்கு வன்முறைச் சம்பவங்களில், வெடிகுண்டுகளை வெடிக்கின்ற சம்பவங்களிலே ஈடுபட்டு கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் தேடப்பட்டு வருகின்ற ஒரு நபர் ஆவார். இப்போது அவருக்கும், இந்தச் சம்பவத்திற்கும் தொடர்பு இருக்கும் என்று கருதப்படுகின்ற காரணத்தினாலும், அவருடைய கையெழுத்தும்,

துண்டுப் பிரசுரத்தில் இருந்த கையெழுத்தும் ஒன்றாக இருப்பதாகப் போலீசார் கருதுவதாலும், அவர் தீவிரமாகத் தேடப்பட்டுவருகின்றார்.

அந்தப் பள்ளியிலே தமிழ் பேசக்கூடாது என்று தடை இருப்பதாக இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட அந்தச் செய்திகளுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தன்னுடைய மறுப்புரையை, அந்தப் பள்ளியின் சார்பிலே வரப்பெற்ற தகவல்களை அடிப்படையாகக் கொண்டு இங்கே வெளியிட்டு இருக்கின்றார்கள். தொடர்ந்து பெய்த மழை, அந்த மழை விட்டும் தூவானம் விடவில்லை என்பதைப் போல், இந்த நிகழ்ச்சி இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது. ஆனால், இந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கவலைப்பட்டு வெளியிலே அறிக்கை விடுகின்றவர்கள், இதுபோன்ற ஒரு அறிக்கையை இந்த அரசின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகின்ற இந்த நிலையை, கடந்தக் காலத்திலே பின்பற்றி இருப்பார்களே யானால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது. வெடிகுண்டுக் கலாச்சாரம் பரவுகிறது என்று சொன்ன ஒரு காரணத்திற்காக சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் எந்த அளவிற்குப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை, இந்த அவையிலே உள்ள அனைவரும் மிக நன்றாக அறிவார்கள். அதை எப்படிக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் என்ற வகையில், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் சொன்னதை மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்ததே தப்பு என்பதற்காக, கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர்கள் எல்லாம் அன்றைக்குப் பதவி விலக்கம் செய்யப்பட்டார்கள். ஆனால், இங்கே நீங்கள் என்ன சொன்னாலும் அதைக் கேட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கின்ற அரசு இங்கே இருக்கிறது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எடுத்துச் சொல்லி - நம்முடைய நண்பர் வெங்கடசாமி அவர்கள் கூட 'பாம்ப் பிளாஸ்ட்' என்று ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தினார். உள்ளபடியே, இது திரு. திருநாவுக்கரசு குறிப்பிட்டதைப் போல போலீசார் கட்டிவிட்ட கதையல்ல. நாட்டு வெடிகுண்டு என்பது பற்றி திரு. அப்துல் லத்தீப் அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். அதிலே திரி வைக்கப்பட்டு உடனடியாகக் கொளுத்தியவுடனே

வெடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையிலே உள்ள நாட்டு வெடிதான் அது. நாம் ஒற்றை வெடி என்று சொல்கிறோமே அதைப்போல, அதைவிடச் சற்றுப் பயங்கரமான, சற்று வலிமை வாய்ந்த ஒரு வெடி திரியைப் பற்றவைத்துவிட்டு, வைத்தவர்கள் ஓடிவிட்டிருக் கிறார்கள். அது 'டைம் பாம்' போல ஒரு 'பாம்' அல்ல.

அதை வெடித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் என்ன உன்னதமான கருத்தைச் சொன்னாலும், புரட்சிகரமான கருத்தைச் சொன்னாலும் தமிழ்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுகிறோம். தமிழுக்காகப் பாடுபடுகிறோம், தமிழ் உணர்வுக்காகப் பாடுபடுகிறோம் என்று சொன்னாலும், யாராக இருந்தாலும், குறிக்கோள் நல்ல குறிக்கோளாக இருக்கலாம். குறிக்கோளை அடையச் செல்கின்ற பாதை அதைவிட நல்லதாக இருக்க வேண்டுமென்று உத்தமத் தலைவர் காந்தியடிகள் சொன்ன அந்தக் கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு இந்த அரசு இத்தகைய வன்முறைச் சம்பங்கள் தொடராவண்ணம் இயன்ற வரையிலே தன்னுடைய பணியினை நிகழ்த்தும் என்ற உறுதியைக் கூறி, இந்த அளவிலே அமைகிறேன்.

மின்வாரியப் பிரச்சினை

உரை : 44 **நாள் : 17.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை குறித்து நீண்டகாலமாகத் தமிழகத்திலே விவாதம் நடைபெற்று வருகின்றது. நிலக்கரி இறக்குமதி செய்ததில் கடந்த கால ஆட்சி தரமற்ற நிலக்கரியை இறக்குமதி செய்யத் துணை இருந்ததாகவும், அந்த தரமற்ற நிலக்கரியை அதிக விலை கொடுத்து வாங்கியதாகவும் ஒரு புகார் எழுந்து, அந்தப் புகாரின் அடிப்படையில் நண்பர் வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள்கூட வழக்கினைத் தொடுத்தார் என்பது அனைவருடைய நினைவிலும் இருக்கும் என்றே கருதுகின்றேன். அதன்பேரில் இங்கே சட்டமன்றம் நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்தில் திடீரென்ற அன்றைய அரசு ஒரு கமிஷனை அமைத்தது. சந்துர்க்கர் கமிஷன் என்று ஒரு விசாரணை அமைத்தது. அந்தக் கமிஷன் செயல்படவே இல்லை. ஒருவேளை செயல்படாததற்காகவே அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டது. இதற்கிடையே வாழப்பாடி இராமமூர்த்தி அவர்கள் உயர்நீதிமன்றத்திலே இந்த நிலக்கரி ஊழலை விசாரிப்பதற்கு சி.பி.ஐ. விசாரணை தேவை என்று முறையீடு செய்தார்.

இந்த ஆட்சி வந்துவிட்ட பிறகும் அந்த முறையீடு குறித்து விசாரணை நடைபெற்றபோது, மின்சார வாரியத்தின் சார்பாக, இந்த அரசின் கருத்துப்படி, நீதிமன்றத்தில் இதை சி.பி.ஐ. இடம் ஒப்படைக்கவேண்டும் என்ற வாழப்பாடி இராமமூர்த்தியி னுடைய கருத்தை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை,

அதை ஏற்றுக்கொள்கிறோம் என்று எடுத்துக்கூறியதன் காரணமாக, நீதிமன்றம் சி.பி.ஐ. விசாணைக்கு உத்தரவிடும் என்று இன்னமும் நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இந்த அரசு, கடந்த கால அரசு நியமித்திருந்த அந்த சந்துர்க்கர் கமிஷனையும் ரத்து செய்துவிட்டது. ஏனென்றால் சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று கூறும்போது, ஒரு கமிஷனைப் போட்டு குறுக்கே நந்திபோல கமிஷன் இருக்கிற காரணத்தால், விசாரணை ஒழுங்காக நடைபெறும் என்று இந்த அரசு முன்கூட்டியே அந்த நடவடிக்கை எடுத்து இருக்கிறது. இப்போது நண்பர் சுப்பிரமணிய சுவாமி அவர்கள் தொடர்ந்துள்ள இந்த வழக்கில் நீதிமன்றம் ஒரு உத்தரவு பிறப்பித்திருப்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவார்கள். இந்த நிலக்கரிப் பிரச்சினையில் அதிகாரிகளை மீறிக் காரியங்கள் நடைபெற்றன. அதிகாரிகள் தடுத்தும் கேளாமல் எப்படி கொடைக்கானல் ஓட்டல் காரியம் நடைபெற்றதோ அதுபோல எத்தனையோ நடைபெற்றிருக்கின்றன. அவைகளிலே ஒன்றாகப் பொதுப்பணித்துறைச் செயலாளர் மறுத்தும்கூட அந்தக் காரியம் நடைபெற்றது. அவர் குறிப்பிலே எழுதினார். உயர்ந்த கலோரி அளவு கொண்ட நிலக்கரி தரக்கூடிய நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு தமிழ்நாடு மின் வாரியம் நடந்து கொண்டுள்ளது என்று சொல்கிறார். அப்படி உயர்ந்த கலோரி அளவு கொண்ட நிலக்கரி தரக்கூடிய நிறுவனங்கள் ஒப்பந்தப் புள்ளியிலே இருந்து விலக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பிட்டு, தமிழ்நாடு மின்வாரியம் நடந்து கொண்டுள்ளது என்று குற்றச்சாட்டுக் கூறியவர் வேறு யாரும் அல்ல; பொதுப்பணித்துறையினுடைய செயலாளர். இரண்டாவதாகச் சொல்கிறார், மத்திய நிலக்கரித் துறை இந்த ஒப்பந்தப் புள்ளியை ஏற்க வேண்டாம் என்று கூறிய பிறகும் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மத்திய நிலக்கரித் துறையினுடைய கருத்தையும் மீறி ஒப்பந்தப்

புள்ளியை அன்றைக்கு ஏற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதையெல்லாம் மனதிலே வைத்து அன்றைய பொதுப்பணித் துறைச் செயலாளர் பல்வேறு காரணங்களைச் சுட்டிக்காட்டி 'SAIL' போன்ற நிறுவனங்கள் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகளை வாங்கும்போது கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றவேண்டும் என்று குறிப்பு எழுதியுள்ளார். அவைகளைப் பின்பற்றாமல் ஆணை வழங்கப்பட்டு இந்த நிலக்கரி ஊழல், இந்த மோசடி நடைபெற்றிருக்கின்றது.

நேற்றைய தினம் வெளிவந்த செய்திக்குப் பிறகு, நீதி மன்றத்தினுடைய செய்திக்குப் பிறகு, நேற்று இரவு நடைபெற்ற நிகழ்ச்சியை நான் இங்கே சொல்லியாக வேண்டும். வன்முறையைப் பற்றி இங்கே எல்லோரும் பேசினீர்கள். குண்டு வெடிப்பதைப் பற்றி இங்கு பலரும் பேசினீர்கள். ஆனால் இந்த நிலக்கரி ஊழல் நடைபெற்ற நேரத்திலே தலைமைச் செயலாளராக இருந்த திரு. டி.வி. வெங்கட்ராமன், இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் எங்கே உண்மைகளை வெளியிட்டு விடுவாரோ என்ற அச்சத்தில் நேற்று இரவு அவருடைய வீட்டிலே புகுந்து குண்டர்கள் 7, 8 பேர் அவரைக் கட்டிப்போட்டு நையப்புடைத்து, அவர் இன்று காலையிலே 'மலர் மருத்துவமனை'க்குப் சென்று இருக்கிறார். 'ரெக்கார்டுகளைக்கொடு. எங்களுக்கு எதிராக நீ அவர்களோடு சேர்ந்துவிடக் கூடாது, ரெக்கார்டுகளை எல்லாம் கொடு' என்று மிரட்டப்பட்டிருக்கிறார். ஒருவேளை அவரும் அதிலே சேர்ந்து இருந்த காரணத்தால், அவருக்கு இந்த இரகசியங்கள் எல்லாம் தெரியும் என்ற அந்த நிலையிலே தாக்கப்பட்டு இருக்கிறார். அவருடைய மகனும் தாக்கப்பட்டு இருக்கின்றார். இப்படிப்பட்ட கொடுமை, அராஜகம் இந்த ஆட்சி வந்த பிறகும் நடைபெறுகிறது என்பதால் நான் வெட்கப் படுகிறேன். நான் நியாயப்படுத்த விரும்பவில்லை. அதற்கு சமாதானம் கூற விரும்பவில்லை. இந்த ஆட்சி வந்த பிறகுகூட இப்படிப்பட்ட

காரியங்களைச் செய்ய முடியும் என்று சில குண்டர்கள் தூண்டிவிடப்படுகிறார்கள் என்றால், தாங்கள் தப்பித்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக தங்களோடு சேர்ந்து இருந்தவர்கள், இந்தக் காரியத்திலே ஈடுபட்டவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால், அது எவ்வளவு கொடூரமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏற்கெனவே செய்த அநியாயங்களுக்குப் பதில் கிடைத்து விட்டவர்களுக்கு, தொடர்ந்து செய்கின்ற அநியாயங்களுக்கும் பதில் நிச்சயமாகக் கிடைக்கத்தான் போகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் எடுத்துக்கூறி அமைகின்றேன், நன்றி.

டி.வி. வெங்கட்ராமன் வீட்டில் வன்முறையா?

உரை : 45 **நாள் : 19.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையின் துணைத்தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. கே. சுப்பராயன், திரு. பி. வெங்கடசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை வெளியிட்டு, இதற்குப் பின்னணி என்ன என்பதைக் கண்டுபிடிக்கவேண்டுமென்பதை வலியுறுத்திப் பேசியிருக் கின்றார்கள். பின்னணி என்ன என்பதை இந்த அவையில் அன்றைக்கு நான் உரையாற்றியபோதுகூட திட்டவட்டமாகச் சொல்லவில்லை. உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போல் அன்று நான் இதுகுறித்து உரையாற்றியது உண்மை. திரு. ஞானசேகரன் அவர்கள், நிலக்கரி ஊழல் சம்பந்தமாக ஏறத்தாழ 700 கோடி ரூபாய் மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டு, ஊழல் மகாசமுத்திரத்திலே போய் கலந்தது சம்பந்தமாக ஒரு பிரச்சினையை எழுப்பினார். அது இந்த அவையிலே எழுப்பப்படவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலே, உரிய நேரத்திலே, காலை 8 மணி அளவிலே தரப்பட்டது. ஆனால். திருநாவுக்கரசு அவர்கள் இங்கே குறிப்பிடுகின்ற அந்த நிகழ்ச்சி அவர் இந்த தீர்மானத்தைக் கொடுத்த பிறகு நடைபெற்ற நிகழ்ச்சி அல்ல. அதை முதலில் திருநாவுக்கரசு திருத்திக்கொள்ள வேண்டும். விடியற்காலை 5 மணி அளவிலே, முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டி.வி. வெங்கடராமன் அவர்களுடைய வீட்டில் அந்த அசம்பாவிதம், வன்முறைத் தாக்குதல் நடைபெற்றிருக் கிறது. நான்தான் இங்கே பேசும்போது அதைச் சுட்டிக்காட்டிப்

பேசினேன். அதுவரையிலே திரு. ஞானசேகரன் அவர்களுக்கு இந்தத் தகவல் தெரியவில்லை என்பதோடு நான் சொன்ன பிறகுதான் இந்த அவைக்குத் தெரியும். நான் அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டேன், 'நிலக்கரி ஊழலில் ஒருவேளை அவரும் அதிலே சேர்ந்திருந்த காரணத்தால், அவருக்கு இந்த இரகசியங்கள் எல்லாம் தெரியும் என்ற நிலையிலே தாக்கப் பட்டிருக்கிறார். அவருடைய மகனும் தாக்கப்பட்டு இருக்கிறார். இப்படிப்பட்ட கொடுமை, அராஜகம் இந்த ஆட்சி வந்த பிறகும் நடைபெறுகிறது என்பதால் நான் வெட்கப்படுகிறேன். நான் எதையும் நியாயப்படுத்த விரும்பவில்லை. சமாதானம்கூற விரும்பவில்லை. இந்த ஆட்சி வந்தபிறகும்கூட இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய முடியும் என்று சில குண்டர்கள் தூண்டி விடப்படுகிறார்கள் என்றால், தாங்கள் தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, தங்களோடு சேர்ந்து இருந்தவர்கள், இந்தக் காரியத்திலே ஈடுபட்டவர்கள் தாக்கப்படுகிறார்கள் என்றால், அது எவ்வளவு கொடூரமானது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும், அதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். இது ஏடுகளிலே வந்தபோது, அதைப்பற்றி அவரவர்களும், இதற்கு முன்னாள் முதலமைச்சர்தான் காரணம் என்று நான் சொன்னதாக யூகித்துக் கொண்டால் - மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் கூறியதைப்போல யூகித்துக் கொண்டால் - அதற்கு நான் பொறுப்பாளியல்ல. அவர்கள் யூகித்துக்கொள்கிறார்களோ, இல்லையோ, முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா யூகித்துக் கொண்டது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. ஒருவேளை, குற்றம் உள்ள நெஞ்சு குறுகுறுக்கும்' என்ற அடிப்படையிலே, யூகித்துக் கொண்டார்களோ என்னவோ, அதுவும் எனக்குப் புரியவில்லை. அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சியை, உறுப்பினர்கள் தந்துள்ள கவன ஈர்ப்பின் அடிப்படையிலே நான் இங்கே தொகுத்துச் சொல்ல வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும்.

17-8-96 அன்று அதிகாலையில், ஆயுதங்கள் தாங்கிய கும்பல் ஒன்று, அடையாறு, இந்திரா நகர் முதல் நிழற்சாலை எண் 6-இல் வசித்து வரும் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. டி. வி. வெங்கட்ராமன் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்று, அங்கிருந்த காவலாளியை ஆயுதங்களைக்

காட்டி மிரட்டி, கட்டிப்போட்டு விட்டு, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து திரு. டி. வி. வெங்கடராமன் அவர்களுடைய குடும்பத்தாரை வீட்டின் தரைத்தளத்தில் உள்ள - கிரவுண்ட் புளோர், தரைத்தளத்தில் உள்ள - முன்கூடத்திலே கட்டிப் போட்டுவிட்டு, வெங்கடராமன் அவர்களுடைய மகன் திரு. வி. ராம்குமார் அவர்களை ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி, அவரை அவருடைய தந்தையின் அறைக்கு அழைத்துச் சென்று, அவரையும் அங்கு இருந்த வெங்கடராமன் அவர்களையும் துன்புறுத்தி, அவரிடமுள்ள கோப்புகளைக் கொடுக்கும்படி வற்புறுத்தி இருக்கிறார்கள்; 'ஆவணங்களைக் கொடு, ஆவணங்களை கொடு' என்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கு அவர்கள், கோப்புகளைப்பற்றி தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று கூறியபோது, மேலும் துன்புறுத்தி அவர்கள் இருவரையும் ராம்குமாரின் அறைக்கு அழைத்துச் சென்று, பின்னர் 'வீட்டில் பணம் மற்றும் விலையுயர்ந்த பொருள்களை எங்கே வைத்து இருக்கிறீர்கள்' என்று கேட்டு இருக்கின்றார்கள். அப்போது ராம்குமார் தன்னுடைய மற்றும் தன்னுடைய குடும்பத்தாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சி, பணம் மற்றும் நகைகள் வைக்கும் இடங்களை, தாக்க வந்தவர்களுக்குக் காட்டி இருக்கிறார். அந்த நபர்கள் ஒரு செல்லுலார் போன், ஃபேக்ஸ் இயந்திரம், ரொக்கம் 10 ஆயிரம் ரூபாய் மற்றும் 50 பவுன் மதிப்புள்ள தங்க நகைகள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டு, வெங்கடராமன் மற்றும் ராம்குமார் ஆகியோரை தரைத் தளத்திற்கு, குடும்பத்தினரைக் கட்டிப்போட்டுள்ள முன்கூடத்திற்கு, அழைத்துவந்து அவர்கள் இருவரையும் கட்டிப்போட்டு விட்டு தப்பிச் சென்று விட்டார்கள்.

குற்றம் நடந்த இடத்தை டி.ஜி.பி. கமிஷனர் ஆஃப் போலீஸ் மற்றும் அதிகாரிகள் சென்று பார்வையிட்டார்கள். விரல் ரேகை பதிவு நிபுணர்கள், மோப்ப நாய்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டு தடயங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக ஜே.2 அடையாறு காவல் நிலைய குற்றப் பிரிவில் குற்ற எண் 916/96, பிரிவு 147, 148, 448, 342, 323, 324 மற்றும் 380 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. தாக்கப்பட்டவர்களில் முன்னாள் தலைமைச் செயலாளர்

திரு. டி.வி. வெங்கடராமன் மற்றும் அவருடைய மகன் ராம்குமார் ஆகியோர் அடையாறு மலர் மருத்துவமனையிலே புறநோயாளிகளாக சிகிச்சை அளிக்கப்பட்டார்கள். போலீசார் 20-க்கு மேற்பட்டவர்களை, சென்னையிலே உள்ள குண்டர்கள் எனப்படுபவர்களை நேற்றைக்குப் பிடித்து அடையாள அணிவகுப்பு நடத்தி, அவர்களில் குற்றவாளிகள் இருக்கிறார்களா என்று இதுவரையிலும் கேட்டு இருக்கிறார்கள். அதிலே குற்றவாளிகள் தென்பட்டதாக அல்லது அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதாகத் தெரியவில்லை. இவர்களை கோப்புகள் எங்கே, எங்கே என்றுதான் தாக்கி இருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும், அந்தக் கோப்புகள் ஒருவேளை நிலக்கரி ஊழல் சம்பந்தப்பட்ட கோப்புகளா, அல்லது திரு. வெங்கடராமனோ அல்லது அவருடைய மகனோ நடத்துகின்ற சில வியாபாரங்கள் சம்பந்தப்பட்ட கோப்புகளா என்பது நமக்குத் தெரியாது. ஆனால், நிலக்கரி சம்பந்தப்பட்ட கோப்புகளாக இருக்கக்கூடுமோ என்ற சந்தேகம் எழுவது இயற்கை. ஏனென்றால், அன்றைக்குத்தான் நீதிமன்றத்திலே ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டு, அந்த நிலக்கரி ஊழல் சம்பந்தமாக போலீசார் விசாரணை நடத்த வேண்டும் என்று டி.ஜி.பி.-க்கு தாக்கீது அனுப்பப்பட்டு இருக்கிறது ஒரு வழக்கின் அடிப்படையிலே. எனவே, உடனடியாக அதாக இருக்குமோ என்று எண்ணுவதிலே எந்தத் தவறும் இல்லை.

ஆனால், முன்னாள் முதலமைச்சர், மற்றவர்கள் சென்றார்கள்; நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் எல்லாம் சென்று இருக்கிறார்கள்; அதைப்பற்றியெல்லாம் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. திருநாவுக்கரசு அவர்கள் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே இப்படி தாக்கப்பட்டவர்களுடைய வீடுகளுக்கும் சென்று விசாரித்து இருக்கிறார்; இப்பொழுதும் சென்று விசாரித்து இருக்கிறார்; அது ஒரு மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்ட செயல் என்பதால் அதைப்பற்றி நான் இங்கே பேச விரும்பவில்லை. அப்போது செய்ததும் கடமை, இப்போது செய்ததும் அவருடைய கடமை என்பதால் விட்டு விடுகிறேன். ஆனால், நம்முடைய ஞானசேகரன் எடுத்துக் காட்டியதைப் போல 'தராசு' அலுவலகத்திலே தாக்குதல் நடைபெற்றது; வடசென்னையிலே ஏழுமலை என்ற பிரமுகர்

கொலை செய்யப்பட்டார்; வழக்கறிஞர் விஜயன் மீது தாக்குதல் நடைபெற்றது; வழக்கறிஞர் சண்முகசுந்தரம் மீது தாக்குதல் நடைபெற்றது. துணை வேந்தராக இருந்த அனந்தகிருஷ்ணன் மீது தாக்குதல் நடைபெற்றது; தேர்தல் ஆணையாளர் சேஷன் அவர்களை விமான நிலையத்திலே இருந்து ஒரு நாள் முழுவதும் வெளியே வரவிடாத அளவிற்கு கேரா செய்யப்பட்டது; திரு. சேஷன் தங்கி இருந்த ஹோட்டலே தாக்கப்பட்டு தூள் தூளாக நொறுக்கப்பட்டது; ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா மீது திராவக வீச்சு நடைபெற்றது; ஆர்.சி. பாண்டா. ஐ.ஏ.எஸ். மீது தாக்குதல் நடைபெற்றது; எச்.எம். பாண்டே, ஐ.ஏ.எஸ். தாக்கப்பட்டார்; சுப்பிரமணியன் சுவாமி அவர்களை பலமுறை தாக்க முயற்சி நடைபெற்று நீதிமன்றத்திலேயே ஆபாச நடனங்கள் எல்லாம், இங்கே எடுத்து விளக்க முடியாத நிர்வாண நடனங்கள் எல்லாம் அங்கே நடைபெற்றன. ஏன், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள் பேசவிருந்த கூட்டத்திற்கே தடை, கூட்டத்திலே தாக்குதல். திராவிட முன்னேற்றக் கழகத்தார் இல்லாவிட்டால் அன்றைக்கு மதுரையில் திருநாவுக்கரசு அவர்களுடைய உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட தாக்குதல் எல்லாம் நடைபெற்றதை மனச்சாட்சி உள்ளவர்கள் யாரும் மறந்திருக்க முடியாது.

இதைத்தான் இங்கே நம்முடைய ஞானசேகரன் அவர்கள் கேட்டார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரி வீட்டில் தாக்குதல் என்றால் - இப்போதாவது அவர் முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி, முன்னாள் தலைமைச் செயலாளர், இவரும் முன்னாள் முதலமைச்சர் -- செல்வி ஜெயலலிதா அவர்கள் அன்றைக்கு அவர் ஆட்சியில் இருக்கும்போதே ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தாக்கப்பட்டபோது, அவர்களைச் சென்று நலம் விசாரிக்க அம்மையார் அவர்களுக்குத் தோன்றவில்லை. அவர்களை மாத்திரமல்ல, எப்போதுமே அவர்களுக்கு இதுபோன்ற காரியங்களில் சென்று விசாரிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றுவதில்லை. அவர்களுடைய கட்சியினுடைய பிரதான அவைத் தலைவராக இருந்த வள்ளிமுத்து அவர்கள் மரணம் அடைந்தார்கள். ஆனால், சுப்பராம ரெட்டியாருடைய சாவிற்கு ஹெலிகாப்டரையோ அல்லது விமானத்தையோ எடுத்துக்கொண்டு உடனடியாகச் சென்று அஞ்சலி செலுத்தியவர்கள், அவைத் தலைவர்

வள்ளிமுத்துவினுடைய சாவைப்பற்றிக் கவலைப்படவே இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அவ்வளவு ஏன்? மோகனரங்கம் என்கிற அந்தக் கட்சியினுடைய மிகப்பெரும் புள்ளி, எங்கும் தொலைவில் இறந்து விடவில்லை. பக்கத்திலே உள்ள தாம்பரத்திலேதான் அவர் உயிர் விட்டார். அவரைக்கூடச் சென்று பார்க்கவில்லை. மோகனரங்கம் சாதாரண ஆள் அல்ல, அந்தக் கட்சியில், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டவர். எம்.ஜி.ஆர். அவர்கள் அவருடைய பெயரையே, நகராட்சிக் கட்டிடத்திற்கு, வைக்க விரும்பினார் என்பதும் அனைவருக்கும் தெரிந்த செய்தியாகும். ஆனால், இங்கெல்லாம் ஏற்படாத அந்த மனித நேயமும், மனித உணர்வும், திடீரென்று, முன்னாள் தலைமைச் செயலாளர் டி.வி. வெங்கடராமன் அவர்கள் தாக்கப்பட்ட உடனே ஏன் ஏற்பட்டது என்ற கேள்வி எல்லோருக்கும் எழுவது இயற்கைதான்.

இதுகுறித்து மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர், வீராசாமி அவர்கள் விடுத்த அறிக்கை பற்றி இங்கே பேசப்பட்டது. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். அமைச்சர்கள் தருகிற அறிக்கையின் அடிப்படையில் போலீசார் நடந்து கொண்டால் என்ன செய்வது என்று கேட்டார்கள். அதெல்லாம் அந்தக் காலம். அந்தக் காலத்திலே இப்படி அமைச்சர்கள் வழிகாட்டுவது உண்டு. ஆனால் இந்தக் காலத்திலே, நானே ஒரு தகவலைச் சொன்னாலும் கூட, அமைச்சர்களே ஒரு தகவலைச் சொன்னாலும் கூட, அந்த அடிப்படையில்தான் போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நியதி இல்லை, எடுக்க மாட்டார்கள். அப்படி எடுத்தால் அவர்கள் சரியான காவல்துறையினர் அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனவே, நடுநிலை தவறாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு நாட்டம் கொண்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கோப்பு எங்கே, கோப்பு எங்கே என்று கேட்டார்களே, அந்த கோப்பு என்ன? அந்தக் கோப்பைத் தேடி – ஏதோ ஹிந்து பத்திரிகையில் வந்திருப்பதாகச் சொன்னார்கள்; இது ஆளுங்கட்சியினுடைய வேலையென்று கேங்ஸ்டர்கள்

சொன்னார்கள் என்று. ஆகவே இதிலிருந்து அந்த ரிப்போர்ட்டருக்கு, ஹிந்து பத்திரிகைக்குத் தகவல் கொடுத்த ரிப்போர்ட்டருக்கு கேங்ஸ்டரை அடையாளம் தெரிந்திருக்கிறது. எனவே போலீசார் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்குப் பதிலாக அந்த ரிப்போர்ட்டரையே கூட அழைத்து உங்களிடத்தில் பேசிய அந்த கேங்ஸ்டர் யார் என்று கேட்டால் அதற்கு அவர் பதில் சொல்லி அடையாளம் காட்டினால் அது அரசுக்கும் பயனுள்ளதாக இருக்கும், புலன் விசாரணைக்கும் பயனுள்ளதாக இருக்கும். நட்பு முறையில்தான் - எனக்கு எந்த கோபமும் கிடையாது அந்த ஹிந்து பத்திரிகை மீது, அந்த ரிப்போர்ட்டர் மீது. அவர் ஒரு கேங்ஸ்டரைப் பார்த்து இருக்கிறார். அவர் சொல்லி இருக்கிறார் இது ஆளுங்கட்சியினுடைய வேலை என்று. கேங்ஸ்டர்தான் தப்பித்துக்கொள்வதற்காகக்கூட அப்படிச் சொல்லி இருக்கலாம். இருந்தாலும் கேங்ஸ்டரைப் பார்த்து இருக்கிறார் ஹிந்து பத்திரிகை ரிப்போர்ட்டர் என்கிறபோது யார், எப்படி இருந்தார் என்று அடையாளம் சொன்னால் கம்ப்யூட்டர் மூலமாகவாவது அவருடைய படத்தை வெளியிட்டு, அவரைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதற்கு ஹிந்து ரிப்போர்ட்டர் உதவ வேண்டுமென்று இந்த அவையின் சார்பாக நான் ஹிந்து நிர்வாகத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கோப்பு, அதைப்பற்றி ஒன்றைச் சொல்லியாக வேண்டும். இந்தக் கோப்பிலே, நிலக்கரி ஊழல் கோப்பிலே, திரு. வி. சுந்தரம். ஐ.ஏ.எஸ். என்ற பொதுப்பணித்துறையினுடைய அதிகாரி ஒரு குறிப்பை எழுதினார். "More high quality collieries might have either stayed away from the tender or were eliminated during the so-called discussions and negotiations. It is relevant to refer to the telex message, dated 17-6-1993 from the Secretary (Coal). Government of India advising us not to proceed with our tender. Irrespective of the merit of this message, it is advisable not to antagonise the Coal Ministry, who is the mainstay for supply of coal. As the total value of this tender involves around Rs. 365 crores, it is imperative to

exercise a lot of caution in our handling and dispensation. Considering the factors aforesaid, I would like to reiterate that we should avoid proceeding with the tender. as any award based on the tender will lead to controversy, adverse publicity and disrepute to the Government." அதாவது அதிகாரிகள் எல்லாம் என்னோடு ஒத்துழைக்கவில்லை, நான் சொன்னதைக் கேட்கவில்லை என்று நேற்றுகூட அந்தச் செயற்குழுவிலே அம்மையார் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அதிகாரிகள், இவர்கள் சொன்னதைக் கேட்கவில்லையா, அதிகாரிகள் சொன்ன நல்ல விஷயங்களை அம்மையார் கேட்கவில்லையா என்பதை இதிலேயிருந்து நீங்கள் எல்லாம் தெரிந்து கொள்ளலாம்.

'அதிக கலோரி அளவு உள்ள நிலக்கரி வழங்குவதற்கான தகுதி வாய்ந்த நிறுவனங்கள் எல்லாம், தமிழ்நாடு மின்சார வாரியம் நடத்திய பேச்சுவார்த்தையின்போது ஓரம் கட்டப்பட்டு விட்டன. அதிகாரிகள் சொன்னது இதெல்லாம். மத்திய அரசின் நிலக்கரித்துறைச் செயலாளர், இந்த ஒப்பந்தப்புள்ளி மீது தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அறிவுறுத்தினார். மத்திய அரசின் இந்தக் கருத்துரையை மீறி நிலக்கரி வாங்குவது மத்திய அரசின் வெறுப்பைச் சம்பாதிக்கத்தான் வழி வகுக்கும். இந்த ஒப்பந்தப்புள்ளி 365 கோடி ரூபாய் மதிப்புள்ளதால், மிகவும் எச்சரிக்கையாக இதைக் கையாளவேண்டும். மேலே குறிப்பிட்ட காரணங்களின் அடிப்படையிலே இந்த ஒப்பந்தப்புள்ளியைத் தவிர்க்க வேண்டும். அப்படித் தவிர்க்காவிட்டால், பல்வேறு பிரச்சினைகளுக்கும், அவதூறுப் பிரச்சாரங்களுக்கும், அரசாங்கத்திற்கு இழுக்கு ஏற்படுத்தவும் வாய்ப்பு ஏற்படும்'. இவ்வாறு, அந்தக் கோப்பில் பொதுப்பணித்துறையின் செயலாளராக இருந்த திரு. வி. சுந்தரம், ஐ.ஏ.எஸ். பொதுப்பணித் துறைச் செயலாளர் எழுதினார். இப்படி எழுதிய பிறகு என்ன ஆயிற்று என்றால், அதுவரையிலே இந்த மின்சாரத் துறையும் சேர்த்து பொதுப்பணித்துறையின் கீழ்தான் இருந்தது. உடனே அதை இரண்டாகப் பிரித்தார்கள். பொதுப்பணித்துறைக்கு ஒரு செயலாளர், மின்சாரத் துறைக்கு ஒரு செயலாளர் என்று இரண்டு செயலாளர்கள் உருவாக்கப்பட்டு விட்டார்கள். இந்த திரு. சுந்தரம்

எழுதிய பல பக்கங்கள் அடங்கிய இந்தக் குறிப்புகள் மாத்திரம் தனியாக எடுக்கப்பட்டு, அவைகள் மாத்திரம் அப்போது தலைமைச் செயலாளராக இருந்த, பிரச்சினைக்குரிய இந்த திரு. டி.வி. வெங்கடராமன் அவர்களால் பின்வருமாறு குறிப்பு எழுதப்பட்டு - எங்கேயும் தேடிப்போக வேண்டாம், என்னிடம் இருக்கிறது, அந்தக் குறிப்பு எழுதப்பட்டு, - அந்த ஆவணம், அந்த ரெக்கார்ட்ஸ் எல்லாம் என்னிடம் இருக்கிறது. தேடிக் கொண்டு, எங்கேயும் போக வேண்டிய அவசியம் இல்லை. ஹிந்து ரிப்போர்ட்டர் சொன்னது மாதிரி, தேடிக்கொண்டு போகவேண்டிய அவசியம் இல்லை. அவருடைய கையெழுத்தோடு இருக்கிறது. அவர் எழுதியிருக்கிறார். 'A sealed cover sent to me by Secretary, P.W.D. is enclosed. I understand that this is intended for Secretary, Energy Secretary, Energy may please take over.'

Sd/- T.V. Venkatraman/5-10-93
Chief Secretary

தலைமைச் செயலாளர், திரு. டி.வி. வெங்கடராமன், இவ்வாறு அனுப்பிய, குறிப்பின் கீழ், அப்போது புதிதாக மின்சாரத் துறை செயலாளராகப் பணியில் சேர்ந்த திரு. ஏ.பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்., பின்வருமாறு எழுதிப் பெற்றுக் கொண்டுள்ளார்.

"Received in two parts (1) p.21-32; (2) p.223-244

sd/-A.P. Muthusamy"

இதைவிட இன்னும் பயங்கரமான இடையில் உள்ள, நடுவில் உள்ளதெல்லாம் கிழித்தாயிற்று. மீதம் இருந்ததை, பிரச்சினைக்குரிய திரு. வெங்கடராமன், மின்சாரத்துறைச் செயலாளருக்கு அனுப்பி வைத்தார்கள். இதுதான் நான் இப்போது உங்களிடம் படித்துக் காண்பித்தது. இதுதான் இந்தக் கோப்பிலே இருப்பது. ஆக, அதிகாரிகள் தன்னை ஏதோ செய்து விட்டார்கள், அவர்கள் எல்லாம் கட்டுப்பட்டு இருக்கவில்லை, அல்லது நியாயத்தை எடுத்துச் சொல்லவில்லை, எனக்குப் புறம்பாக நடந்தார்கள் என்று இன்றைக்கு அறிக்கை விடுகின்றவர்கள், அன்றையதினம் மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி இவ்வாறு விளக்கமாகப்

பல பக்கங்கள் நிலக்கரியை வாங்கக்கூடாது என்று எழுதிய பிறகும் வாங்கி இருக்கிறார்கள். அதுதான் ஊழல் விவகாரங்கள். இதில் வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் நடைபெறப்போகிறது.

அதுமாத்திரமல்ல. கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஓட்டலுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று தெரிவித்த அதிகாரியை பதவியிலிருந்து உடனடியாக மாற்றினார்களா, இல்லையா? அவரை மாற்றிவிட்டு, மூன்றாம் நாள் வேறு ஒரு அதிகாரியைக் கொண்டு, அந்த அனுமதியை வழங்கினார்களா இல்லையா? அதிகாரிகள் தடுத்தும் கேட்கவில்லையே? அதிகாரி நல்லதைச் சொன்னாரே, அதை ஏற்றுக்கொண்டார்களா?

அதேபோல், நான் இங்கே வணிகவரித்துறை மானியத்திலே எடுத்துக் காட்டினேன். LAB feed stock - அதற்கு 16 சதவீதம் வரியை மூன்று சதவீதமாக வணிகவரித்துறைச் செயலாளர் எதிர்ப்புத் தெரிவித்த பிறகும் ஏற்றுக் கொண்டார்களா? இல்லை. ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து, அந்த வரியைத் தள்ளி, ஏறத்தாழ அரசுக்கு 46 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதா, இல்லையா? அதிலே பாதிக்கு மேலே ஊழல் நடைபெற்றதா, இல்லையா? அதிகாரிகள் சொன்னதைக் கேட்டார்களா?

தமிழ்நாடு மாவு ஆலைகள் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று நீதிமன்றங்கள் எல்லாம் அரசுக்குச் சாதகமாக தீர்ப்பு வழங்கியிருந்தும்கூட, இவர்கள், அந்தச் சங்கத்திற்குச் சாதகமாக அந்த வரியை ரெட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுத்து, அதைத் தள்ளியதன் காரணமாக 20 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்பட்டதா, இல்லையா? அதிகாரிகள் சொன்னதைக் கேட்டார்களா? அதிகாரிகள் நல்லதைச் சொல்லவில்லையா?

ஊராட்சிகளுக்கு, கலர் டி.வி. வாங்குவதற்கு, நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் உட்பட, முதலமைச்சர் உட்பட கையெழுத்துப் போட்டார்களே, எல்லா அதிகாரிகளும் தடுத்தார்களே, 14,500 ரூபாய் என்று டி.வி. விலை சொல்கிறார்கள், 40 ஆயிரம் டி.வி. என்கிறபோது, அப்போதுள்ள விலையே 12 ஆயிரம், 12,500 ரூபாய்தான். 2000 ரூபாய், 3000 ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. 40,000 டி.வி. பெட்டிகள்

என்கிறபோது ரூ. 11,000த்திற்கு கொடுப்பதற்குத் தயாராக இருப்பார்கள் என்று சொல்லியும்கூட ரூ. 14,500-க்கு மாத்திரமல்ல, ரூ. 12,500 ரூ, 10,500 என்பதையெல்லாம்கூட ரூ. 14,500 என்று ஆக்கி வாங்கினார்களே, அதிகாரிகள் தடுத்தார்களே, நிதித் துறைச் செயலாளரே தடுத்தாரே, அவர் அதிகாரி இல்லையா? நல்லதைச் செய்யவில்லையா? அதையும் மீறித்தான் அந்த டி.வி. பெட்டிகள் வாங்கியதில் பெரும் ஊழல், ஏறத்தாழ ரூ. 13 கோடி அளவிற்குப் பெரும் ஊழல் நடைபெறவில்லையா? இப்படி யெல்லாம் ஊழல்கள் நடைபெற்றிருக்கின்ற காரணத்தினாலேதான் திடுமென்று இந்தப் பிரச்சினை நடந்து முடிந்து மாலையிலே அவருடைய இல்லத்திற்குச் சென்று குசலம் விசாரித்திருக் கிறார்கள் என்பதில் சிலருக்குச் சந்தேகம் ஏற்படுவது சகஜம். ஆனால் சந்தேகத்தின் அடிப்படையில் காவல்துறை நடவடிக்கை எடுக்காது என்பதை மாத்திரம் அல்லது அமைச்சர்கள் சொல்கிறபடி காவல்துறை நடவடிக்கை எடுக்காது என்பதை மாத்திரம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அப்படித்தான் சொல்லியிருக்கிறேன். இப்போது புதியதாக வந்திருக்கிற டி.ஜி.பி. யிடம் இதைத்தான் சொல்லியிருக்கிறேன். நானே சொன்னதுகூட தவறாக இருந்தால் மறுப்புச் சொல்லுங்கள், இதுதான் நான் அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கின்ற வாக்கு. அந்த உறுதியை நீங்கள் நம்பலாம் என்பதையும் நான் எடுத்துக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து அவருடைய வீட்டிற்குக் காவலைப் பற்றிச் சொன்னார்கள். காலையிலேகூட பிரச்சினைக்குரிய திரு. டி.வி. வெங்கடராமன் அவர்கள் தொலைபேசியில் என்னோடு தொடர்பு கொண்டு பேசினார். அவரிடத்திலே விவரங்களைக் கேட்டேன். போலீசாரிடத்திலே, பத்திரிகையாளரிடத்திலே சொன்னதைத் தவிர வேறு எதுவும் என்னிடத்திலே சொல்லவில்லை அவர். அவர் பேசும்போது நான் கேட்டேன், ஏன் இரண்டு காவலர் இருந்தார்களாமே, அதை எடுத்தபோது நீங்கள் அரசுக்கு அறிவித்திருக்கலாமே என்று சொன்னபோது, சொன்னார், இல்லை சார், எப்போதும் அது எங்களுக்கு எல்லாம் உரியது அல்ல. ஐ.ஏ.எஸ். ஆபீசர்கள் அல்லது தலைமைச் செயலாளராக

இருந்தால்கூட அவர்கள் ரிடையர் ஆன பிறகு பாதுகாப்புப் போட வேண்டுமென்பது ஒன்றும் முறை கிடையாது. மரபு கிடையாது. தேவைப்பட்டால் போடுவார்கள். தேவைப்பட்டபோது இரண்டு பேர் போட்டிருந்தார்கள். புதிய கவர்ன்மென்ட் வந்தவுடன் எடுத்து விட்டார்கள். அவ்வளவுதானே தவிர, அதை ஒன்றும் பெரியதாக எடுத்துக்கொள்ளவில்லை, என்று என்னிடத்திலே சொன்னார். ஆனால் இப்போது மீண்டும் பாதுகாப்பு இருக்கிறதென்று சொன்னார். அது தொடர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். தொடரும் என்று சொல்லியிருக்கிறேன். குற்றவாளிகளாக இருந்தாலும்கூட, குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருந்தாலும்கூட, ஊழல் புரிந்தவர்களாக இருந்தாலும்கூட, அவர்களுக்கு உரிய பாதுகாப்பை இந்த அரசு நிச்சயமாகக் கொடுக்கும், கொடுத்து கொண்டிருக்கும் என்பதை எடுத்துக்காட்டுகின்றேன். அதற்காக பெரும் கிளர்ச்சி எல்லாம் நடைபெறும் என்று திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொன்னார்கள். நானும் நீங்களும் சேர்ந்து நடத்தாத கிளர்ச்சிகளா? அதைவிடவா பெரிய கிளர்ச்சி நடத்தப் போகிறார்கள்? எந்தக் கிளர்ச்சியையும் சமாளிக்கின்ற ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதைக் கூறி அமைகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, காலை நாளேடு ஒன்றில் வந்துள்ள ஒரு செய்தியினை (குறுக்கீடு) பத்திரிகையின் பெயரைச் சொல்லலாம், சொன்னால் வேறு பத்திரிகைகளில் போட மாட்டார்கள், அந்தப் பத்திரிகைக்கு விளம்பரம் வந்துவிடும் என்று. அதனால்தான் நான் சொல்ல வில்லை. பத்திரிகைக்காரர்களைப் பற்றி எனக்குத் தெரியும். நாளேடு ஒன்றில் வந்துள்ள செய்தியினை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரங்கநாதன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும் எடுத்துக்காட்டி, தங்களுடைய அச்சத்தையும் ஐயப்பாட்டையும் வெளிப்படுத்தி, எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்ற அறிவுரையை இந்த அரசுக்கு வழங்கி யிருக்கிறார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் அதற்காக.

மத்திய அரசினுடைய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் மாண்புமிகு திரு, என்.வி.என். சோமு அவர்கள் சேலத்திலே

அளித்துள்ள ஒரு பேட்டியில் 'இலங்கையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தொடர்ந்து அகதிகள் வருகை அதிகமாகி வருகிறது, அகதிகளுடன் விடுதலைப் புலிகளும் தமிழகத்திற்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல் வந்துள்ளது. எவ்வளவு எண்ணிக்கையில் புலிகள் ஊடுருவியுள்ளார்கள் என்பது கணக்கிடப்படவில்லை. அகதிகள் என்ற போர்வையில் புலிகள் ஊடுருவ வாய்ப்பு உள்ளது. உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்று சொன்னதாகச் செய்தி வந்துள்ளது.

அவர் என்ன சொன்னார் என்பதை அவரிடத்திலே கேட்டுத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். சில நேரங்களில் சில பத்திரிகைகளில் செய்திகளை வெளியிடும்போது, தவறானதாக வந்துவிடுகின்றன. நான் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையிலும், பத்திரிகையைத் தொடங்கியவர் என்ற முறையிலும் சொல்கிறேன். ஒருமுறை 'முரசொலி' பத்திரிகையிலேயே, கருணாநிதி பிறந்த நாள் என்பதற்குப் பதிலாக, கருணாநிதி இறந்தநாள் என்று உப தலைப்பே போட்டார்கள். இதை நான் சொல்வது, இன்னொரு பத்திரிகையைப் பற்றிச் சொல்வதற்காக. இரண்டு நாளைக்கு முன்பு, விடுதலை நாள் நிகழ்ச்சியில் நான் பேசியதைப் பத்திரிகைகள் வெளியிட்ட போது, "விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு மறைந்த மானமறவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகின்றேன்" என்று நான் பேசியதை, மானமற்றவர்களுக்கு - விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு மறைந்த மானமற்றவர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறேன் என்று ஒரு பத்திரிகையில் செய்தி வெளியாகி இருந்தது. அதுபோல, சொல்லுக்குச் சொல் என்று அப்படியே ஒரு பேட்டி., பத்திரிகையில் வெளிவந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. மேலும் இப்படிச் சொல்லியிருந்தால், அதிலே பெரும் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நேற்றுவரையிலே 1000 பேர் அகதிகளாக இலங்கையிலிருந்து, தமிழீழத்திலிருந்து இங்கே தமிழகத்திற்கு வந்திருக்கின்றார்கள். ஏற்கெனவே ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட அகதிகள் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். அவர்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டிய பெரும் பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கின்றது. அதற்கான உதவியை மத்திய அரசிடமும் நாம் கேட்டுப் பெற்று வருகின்றோம்.

இப்போதும் கடந்த 6,7 ஆண்டுகாலமாக இலங்கைப் பிரச்சினையிலே வாய் மூடிக்கொண்டிருந்த மத்திய அரசை, சற்றுப் பேச வைத்திருக்கின்றோம். அதில் சட்டமன்றத்திலே எழுப்பிய குரல் காரணமாக, நான் மத்தியிலே உள்ள அரசோடு தொடர்பு கொண்டதன் காரணமாக, மத்திய அரசின் சார்பிலே வெளியிடப்பட்டுள்ள ஒரு அறிக்கையில், இலங்கையில் நடைபெறுகின்ற சம்பவம், கவலை தரக்கூடியதாக இருக்கின்றது என்ற சொற்றொடர் இடம் பெற்றிருக்கின்றது. கவலை தரக்கூடியது என்பது கண்டிக்கத்தக்கது என்ற வகையிலே மாறுவதற்கு வெகு காலம் ஆகாது என்று நான் கருதுகிறேன்.

ஆயிரம் பேர் இன்றைக்கு அகதிகளாக வந்திருக் கிறார்கள் என்றால் அங்கே மும்முரமான அளவில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகிறது என்பதுதான் பொருள். அன்றைக்கு இங்கே உறுப்பினர்கள் பேசும்போது தெரிவித்ததைப்போல விடுதலைப் புலிகளுடைய பிரச்சினை வேறு. அப்பாவித் தமிழர்கள் அங்கே அடிபட்டு, உதைபட்டு, குடும்பத்தை இழந்து குழந்தைகள் தவிக்க, பெற்றோர் கதற, வாழ வழி இல்லாமல் தமிழகத்திற்கு ஓடி வருகிற, அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பது என்பது வேறு. எனவே இந்த இரண்டு நிலைகளையும் வெவ்வேறாகக் கருதி நாம் நம்முடைய பணியினை ஆற்ற வேண்டியிருக்கிறது. தமிழகத்தைத் தங்களுடைய வன்முறைக் களமாக ஆக்கிக் கொள்ளக்கூடாது. அது எந்தப் போராளியாக இருந்தாலும் சரி. அவர் எல்.டி.டி.ஈ. யாக இருந்தாலும் சரி ஈ.பி. ஆர்.எல். எஃப்பாக இருந்தாலும் சரி, டெலோவாக இருந்தாலும் சரி, வேறு யாராக இருந்தாலும் சரி, எந்த தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தமிழ்நாட்டை வன்முறைக் களமாக ஆக்கிக்கொள்ள இடம் தரமாட்டோம் என்கின்ற உறுதிப்பாட்டோடு இந்த அரசு தன்னுடைய பணிகளைத் தொடர்ந்து நடத்திவரும் என்ற உறுதியை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இன்றைக்கு மாய்மாலக் கண்ணீர் வடிப்போர்கள் சிலபேர், பத்திரிகையிலே அறிக்கை விடுவோர்கள் தங்களுடைய செயற்குழுவிலே தீர்மானம் நிறைவேற்றுகிறவர்கள் எல்லாம் ஏதோ தமிழ்நாட்டிலே திராவிட முன்னேற்றக் கழக அரசுதான்

விடுதலைப் புலிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தது என்றெல்லாம் சொல்கிறார்கள். 1991ஆம் ஆண்டுக்கு முன்பு ஹிந்து பத்திரிகையிலே, 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையிலே செல்வி ஜெயலலிதா அளித்த பேட்டியை ஒருமுறை எடுத்து அவரே படித்துப் பார்த்தாலும் அல்லது இன்றைக்கு அவர் சொல்லுகின்ற அறிக்கைகளை வெளியிடுகின்ற பத்திரிகைக்காரர்கள் படித்துப் பார்த்தாலும் உண்மை தெரிய வரும். கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு எந்த உதவியும் செய்யவில்லை, என்று என்மீது குறைப்பட்டு கண்டித்தே பேட்டி கொடுத்து இருக்கிறார். 'விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். செய்ததைப்போல கருணாநிதி எந்த உதவியும் செய்யவில்லை' என்றே என்மீது குறை கூறி இருக்கிறார். அவர்கள் கேட்டிருக்கிறார்கள் 'பத்மநாபா படுகொலைக்குப் பிறகும் அவர்களுக்கு முதலமைச்சர் கருணாநிதி எப்படி உதவிகளைச் செய்யமுடியும்' என்று கேட்டபோது அதற்கு ஜெயலலிதா என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? அது 'ஹிந்து'விலும், 'எக்ஸ்பிரஸி'லும் இருக்கிறது. என்னிடத்திலே அந்த காப்பிகள் எல்லாம் இருக்கின்றன. என்ன சொன்னார் என்றால் 2,3 மாதங்களுக்கு முன் நடைபெற்ற விஷயம். இப்போது விடுதலைப் புலிகள் நல்லவர்களாக ஆகி விட்டார்கள். எனவே, அவர்களுக்கு உதவி செய்வதிலே தவறு இல்லை, என்று கூறியிருக்கிறார். எம்.ஜி.ஆருடைய சிலையைத் திறக்க வந்த இளம் தலைவர் ராஜீவ் காந்தி அவர்களுடைய முன்னிலையிலே ஜெயலலிதா அவர்கள் பேசினார்கள். விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு தரவேண்டும்; தமிழ்நாடு அரசு இன்னும் உதவிகளைச் செய்ய வேண்டும் என்று தி.மு.க. அரசுக்கு அன்றைக்கு வற்புறுத்தி வேண்டுகோளை விடுத்தார்கள். ஆனால் இன்றைக்கு திடீரென்று விடுதலைப் புலிகளை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் வளர்க்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் கட்சிகளும் ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தந்தது உண்மை. அதை யாரும் மறுக்க முடியாது. அது காங்கிரஸ் கட்சியானாலும் வேறு எந்தக் கட்சியானாலும் ஒவ்வொரு வகையிலே அவரவர்களுடைய கோணத்தில் அவரவர்களுடைய கொள்கை அடிப்படையில் அங்கே உள்ள பல விடுதலைப் போராளிகள் குழுக்களிலே சில குழுக்களுக்கு ஆதரவு தந்தது

உண்மை. இங்கே அவர்களுக்கு நூற்றுக்கணக்கிலே, ஏன் ஆயிரக்கணக்கிலே முகாம்கள் இருந்தது எல்லாம் உண்மை. 1983ஆம் ஆண்டிலேயிருந்து விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்திலே அபயம் தரப்பட்டது. அவர்களுக்கு முகாம்கள் அமைக்க இடம் தரப்பட்டது. அவர்களுக்கு எல்லாவிதமான ஆதரவும் தரப்பட்டது. எம்.ஜி.ஆர். அவர்கள் பகிரங்கமாகவே 4 கோடி ரூபாய் காசோலையை அவர்களுக்கு வழங்கினார். நானேகூட என்னுடைய பிறந்தநாள் விழாவின்போது வசூலிக்கப்பட்ட பணத்தையெல்லாம் அவர்களுக்குப் பகிர்ந்தளித்து இருக்கிறேன். ஒவ்வொரு கட்சியும் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறது. இன்றைக்கு காங்கிரஸ் கட்சியினுடைய, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தற்காப்புத் தலைவராக இருக்கின்ற அருமை நண்பர் இலக்கியச் செல்வர் குமரி அனந்தன்கூட படகிலே இலங்கைக்குச் செல்ல அன்றைக்கு வரிந்து கட்டிக்கொண்டு, நெடுமாறன் சென்ற படகிலே ஏறிச் சென்று - இவர் ஏறிய காரணத்தாலோ என்னவோ, படகு கவிழ்ந்து பிறகு திரும்பி வந்தார்கள். அதெல்லாம்கூட நாடறிந்த விஷயங்கள் ஆகும். இலங்கைப் பிரச்சினைக்காக இந்திரா காந்தியினுடைய படத்தையேகூட அன்றைக்கு குமரி அனந்தன் அவர்கள் எரித்தார்கள். இப்படித் தீவிரமாக ஈழப் பிரச்சினைக்காக தமிழ்நாட்டிலே உள்ள எல்லோரும் கட்சி சார்பற்ற முறையிலே நாம் கலந்துகொண்டு நம்முடைய பங்களிப்பைச் செய்திருக்கிறோம். ஆனால் பத்மநாபா படுகொலைக்குப் பிறகும், ராஜீவ் காந்தியினுடைய படுகொலைக்குப் பிறகும் தமிழ்நாட்டு மக்கள் தங்களைக் கொஞ்சம் பின்வலித்துக்கொண்டு - ஆதரவு தராமல், பின்வலித்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பது உண்மைதான். இருந்தாலும் இன்றைக்கு இலங்கைத் தரணியில் ஈழப் பகுதியிலே களத்தில் நிற்பவர்கள் பிரபாகரன் தலைமையிலே உள்ள விடுதலைப் புலிகள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால் களத்தில் இருக்கின்ற இருவரிடையிலேதான் சண்டை நடக்க வேண்டுமே தவிர, அவர்கள் குண்டு வீச்சானாலும், துப்பாக்கிப் பிரயோகமானாலும், தாக்குதலானாலும், டாங்கிப் படைகளானாலும், களத்திலே நிற்பவர்கள் இருவருக்கிடையே நடைபெற வேண்டியதல்லாமல், அப்பாவித் தமிழர்கள், அப்பாவி மக்கள் கொல்லப்படுவதை நாம்

ஏற்றுக்கொள்ள இயலாது. எனவே, அந்தக் கண்ணோட்டத்துடன் மத்திய அரசு இதை அணுகுகிறது; அணுக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இதற்கிடையிலே இங்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்ற அகதிகளைக் காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்பு நமக்கிருக்கிறது என்பதைக் கண்ணீர்மல்கத் தெரிவித்துக் கொண்டு, நாம் சிந்துகின்ற கண்ணீரை அவர்களுக்கு அர்ச்சித்து, கண்ணீரைத் தவிர வேறு எதுவும் அவர்களுக்கு நாம் உதவிட இயலாது என்ற நிலையை நாம் புரிந்துகொண்டு அவர்களை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம் என்று கூறிக் கொள்கிறேன்.

அவர்களோடு ஊடுருவி, மத்திய அமைச்சர் சொன்னதைப் போல, எல்.டி.டி,ஈ.யினர் – விடுதலைப் புலியினர் வருவார்களே யானால் அவர்களையெல்லாம் தனியாக, தனி முகாமிலே வைப்பதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு, சோதனைகள் நடத்தப்படுகின்றன. அதிலே போலீசார், கடற்படையினர் அனைவரும் தீவிரமாக இருக்கிறார்கள்; மேலும் இருப்பார்கள் என்ற உறுதியை அளித்து இந்த அளவில் அமைகின்றேன்.



மண்டல் கமிஷன் பரிந்துரை

உரை : 46 **நாள் : 21.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை மிக மிக முக்கியமான ஒன்றாகும். முதலில் இங்கே விவாதிக்கப் பட்ட பிரச்சினையைவிட மிக முக்கியமானதாகும். ஏனென்றால் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீட்டில் கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு மேலாக உச்ச நீதிமன்றம் வழங்கியிருக்கின்ற தீர்ப்பின் காரணமாக பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது உண்மை. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையில், சமூக நீதி கோருகின்ற பிரச்சினையில் யாருக்கும் சளைத்த ஒரு இயக்கம் அல்ல, இன்னும் சொல்லப்போனால், மண்டல் கமிஷன் பரிந்துரையை நிறைவேற்ற வேண்டுமென்று அந்நாள் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களிடத்தில் தொடர்ந்து வலியுறுத்தி, இந்தச் சட்டமன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி, மண்டல் கமிஷன் பரிந்துரையை திரு. வி. பி. சிங் அவர்கள் ஆணையாக அறிவித்த காலகட்டத்திலேகூட, ''மண்டல் கமிஷன் பரிந்துரை பற்றிய கருத்துக்களை எழுதி அனுப்புமாறு இந்தியாவிலே உள்ள எல்லா மாநில முதலமைச்சர்களுக்கும் எழுதினேன். ஆனால் ஒரே ஒரு மாநில முதலமைச்சர்தான் அதற்கான விவரங்களை எனக்கு அனுப்பி இருக்கிறார். அவர்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கருணாநிதி'' என்று வெளிப்படையாகவே (மேசையைத் தட்டும்

ஒலி) திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்தார்கள். எனவே அந்த அளவுக்கு மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேறுவதற்கு,சமூக நீதி தமிழ்நாட்டுக்கு மாத்திரம் அல்ல. இந்தியா முழுமையும் கிடைப்பதற்குப் பாடுபட்ட இயக்கம், பாடுபடுகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெறுகிறது என்றாலும்கூட, இந்த ஆட்சி அமைவதற்குக் தோழமையாக இருந்த, துணையாக நின்ற தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியானாலும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியானாலும், இந்திய தேசிய லீக் ஆனாலும், பார்வார்டு பிளாக் கட்சியானாலும், பாட்டாளி மக்கள் கட்சியானாலும், வேறு பல இயக்கங்கள் ஆனாலும், அத்தனையும் உண்மையிலேயே இட ஒதுக்கீட்டில் இதயசுத்தியான நிலையில் பாடுபட்டு வருகின்ற உண்மையை நாடு மிக நன்றாக அறியும். என வே, இதிலே, இந்தச் சட்டமன்றத்திலே உள்ள யாருக்கும் மாறுபட்ட கருத்து நிச்சயமாகக் கிடையாது. அளிக்கப்பட்டுள்ள உச்சநீதிமன்றத் தினுடைய தீர்ப்பு இன்றைக்குப் புதிதாக அளிக்கப்பட்டது அல்ல. ஏற்கெனவே இருந்த அரசு இங்கே நிறைவேற்றிய ஒரு சட்டத்தை உச்சநீதிமன்றத்திலே உரிய நேரத்திலே நினைவுபடுத்தாத காரணத்தால், எடுத்துச்சொல்லி வாதாடாத காரணத்தால், ஏற்பட்ட விளைவுதான் இன்றைக்கு நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிற சங்கடமான ஒரு சூழ்நிலை ஆகும். நான் நடந்தவைகளைப் பற்றிப் பேசி வருந்திப் பயனில்லை என்பதால் அதை மேலும் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால் நாம் தொடர்ந்து அதற்காகப் பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்று இதே மன்றத்திலே நம்முடைய திரு. ஞானசேகரன் எடுத்துக் காட்டியதைப் போல், வற்புறுத்திக் கூறியிருக்கிறேன். உறுதியாகக் கூறியிருக்கிறேன். சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆலடி அருணா அவர்களும் இங்கே ஆற்றிய உரையிலே அதைப்பற்றி விரிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். உச்சநீதிமன்றத்திலே இப்போது அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு தற்காலிகமான தீர்ப்புதான் என்பதையும் கான்ஸ்டிடியூஷன் பெஞ்சில் இந்த நிலை பற்றி அரசு மேல்முறையீடு செய்யும் என்பதையும், அதற்கு இடையிலே கூட வழக்காடுவதற்கு என்னென்ன வழிமுறைகள் உண்டோ அவைகளை எல்லாம் இந்த அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது

என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மீண்டும் கவனப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

இதற்கிடையே திராவிடர் கழகத்தின் சார்பில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் ஜீவன் ரெட்டி, பரிபூரண ஐயங்கார் ஆகிய இருவருடைய உருவச்சிலைகளைக் கொடும்பாவி கொளுத்தப் போகிறோம், 23 ஆம் தேதி அந்த நிகழ்ச்சி நடைபெறும் என்று அவர்களுடைய பத்திரிகை மூலமாக, அறிக்கை மூலமாகப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். அதிலே வீரமணி அவர்கள் தலைமை தாங்கி சென்னையிலே அந்தக் காரியத்தை நடத்தப் போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதோடு விடவில்லை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இதிலே ஏதோ அக்கறை இல்லாதது போலவும், ஆளும் கட்சியாக ஆகிவிட்ட காரணத்தால் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டது போலவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்போதுமே திராவிடர் கழகத்திற்கு, தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் சில காரியங்களைச் செய்கிற ஆர்வம் பிறக்கும், தி.மு.க. ஆட்சி இருந்தால்தான் பூணூல் அறுக்கின்ற காரியங்கள் நடக்கும். ஜெயலலிதா ஆட்சியிலே நடந்ததா? எண்ணிப்பாருங்கள், நடக்காது, ஏனென்றால், அவர்களுக்கு சங்கடத்தைக் கொடுக்க மாட்டார்கள். தி.மு.க. ஆட்சி வந்தால் பூணூல் அறுப்பார்கள். ஜெயலலிதா ஆட்சியிலேகூட இந்தத் தீர்ப்பு வந்ததுண்டு, இரண்டுமுறை இந்தத் தீர்ப்பு வந்திருக்கிறது. அப்போது உச்சநீதிமன்ற நீதிபதிகளுடைய கொடும்பாவியைக் கொளுத்தினார்களா என்றால் கொளுத்தவில்லை, கொளுத்த மாட்டார்கள், அப்போதுஅந்தத் தீர்ப்பின், ஆணையின் நகலைத்தான் கொளுத்தினார்கள், அவர்கள் கொடும்பாவியைக் கொளுத்தவில்லை. இன்றைக்கு கொடும்பாவியைக் கொளுத்துகிறார்கள் என்றால் - அது ஏன், உச்ச நீதிமன்றத் தினுடைய தீர்ப்பை நாம் ஏற்றுக்கொண்டதாகப் பொருள் அல்ல. இந்த அரசைப் பொறுத்தவரையில் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால்தான், அது சரியான தீர்ப்பாக அமையவில்லை என்ற காரணத்தால்தான் மேற்முறையீட்டுக்கே செல்கிறோம். 'கான்ஸ்ட்டிடியூசன் பெஞ்சை' நம்பியிருக்கிறோம், அப்பீல் செய்கிறோம்.

இடைக்காலத்திலே ஏதாவது சட்டரீதியாக வழி பிறக்காதா என்றும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். எனவே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு அது ஜீவன்ரெட்டியாக இருந்தாலும் அல்லது பரிபூரண ஐயங்காராக இருந்தாலும், யார் அளித்த தீர்ப்பாக இருந்தாலும், சமூக நீதிக்கு ஏதோ ஒரு வகையிலே எதிராக இருந்தால் அதை நாம் நிச்சயமாக ஆதரிக்க மாட்டோம், ஆதரிக்கவும் இல்லை, அது வேறு.

ஆனால், அதேநேரத்தில் உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடைய கொடும்பாவியைக் கொளுத்துவது என்பது வேறு. அது இந்த அரசால் அனுமதிக்க முடியாத ஒன்று. ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகளுடைய தீர்ப்பைக் கொளுத்தியபோது, ஜெயலலிதா ஆட்சியில் அப்படிக் கொளுத்தியவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் - திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள். எனவே உருவ பொம்மைகளை, உச்ச நீதிமன்ற நீதிபதிகளுடைய உருவ பொம்மைகளைக்கொளுத்த இந்த அரசு அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு காரியத்தில் ஈடுபடுகிறவர்கள் அதற்குரிய தியாகத்தையும் செய்துதான் தீரவேண்டும். அதற்குரியவைகளை அனுபவித்துத்தான் தீர வேண்டும். அதில் நான் திராவிடர் கழகத்திற்கு எந்தவிதமான அறிவுரையும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதே நோக்கத்திலேதான் அவர்கள் அந்தப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள். அந்தக் காரியத்தில் ஈடுபடும்போது என்ன என்ன நடக்கும் என்று எதிர்ப்பார்த்துதான் அவர்கள் ஈடுபடுவார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே அப்படி நடந்தால் அதற்கு நான் பொறுப்பாளி அல்ல. இதற்கு இடையிலேகூட அவகாசம் இருக்கிறது, அவர்கள் செயல்களை நிறுத்திக்கொள்வதற்கு என்று கூறி அமைகிறேன்.

விடுதலைப் புலிகள் பிரச்சினை

உரை : 47 **நாள் : 23.08.1996**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையின் துணைத்தலைவர் அவர்களே, தமிழகத்தில் அதிர்ச்சியைத் தரக்கூடிய ஒரு செய்தியாக இன்று பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள செய்தி அமைந்திருப்பதாக எடுத்துக்காட்டி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. சுப்பராயன் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ரங்கநாதன் அவர்களும் அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி அவர்களும் எடுத்துச்சொன்ன வாதங்களை முற்றிலும் ஏற்றுக்கொள்ளாமல் இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்களும் இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். திரு. லத்தீப் அவர்களுடைய கருத்தை மறுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் அவருடைய எண்ணங்களை இங்கே வெளியிட்டு இருக்கிறார்கள்.

நான் முதலில் பொதுவாகத் தமிழ்நாட்டை வன்முறைக் களமாக ஆக்கிக்கொள்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும் அல்லது ஈழத் தமிழகத்தினுடைய உரிமைக்காக வேறு வகைகளில் போராடுகிற ஈ.பி.ஆர்.எல்.எப்., 'டெலோ' போன்ற அமைப்புக்களாக இருந்தாலும், எந்தப் போராளிகளாக இருந்தாலும், அவர்களை தமிழக அரசு வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருக்காது என்பதை நான் திட்டவட்டமாக இதே அவையில் சொல்லி இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த நிகழ்வைப் பொறுத்தவரையில் சிவபெருமாள் என்பவரும், சேட் என்ற அப்துல் ரஹீம் என்பவரும் ஏற்கெனவே

இராமேசுவரத்தில் கள்ளக்கடத்தல் தொழில் புரிந்து வருபவர்கள். கள்ளக் கடத்தலில் ஈடுபடுகிறவர்களுக்கு இந்த விடுதலைப் புலிகளைப் பயன்படுத்திக் கொள்வது - அவர்கள் இவர்களைப் பயன்படுத்திக் கொள்கிறார்களோ இல்லையோ, கள்ளக் கடத்தல் காரர்கள் விடுதலைப் புலிகளைப் பயன்படுத்திக் கொள்வது, அதன் காரணமாக ஆதாயம் பெறுவது, அதையே ஒரு தொழிலாக, ஏதோ தாங்கள் பெரியதாக விடுதலைப் புலிகளுக்கு பாடுபடுகிறவர்கள், தமிழ் ஈழத்திற்காக கோரிக்கை முழக்கம் எழுப்புபவர்கள் என்று கூறிக்கொண்டு, அந்த நிழல் மறைவில் இத்தகைய சமூக விரோதத் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக் கிறார்கள். அண்மையில்கூட, உங்களுக்கு நினைவு இருக்கும் என்று கருதுகிறேன். தேர்தல் நேரத்தில் ம.தி.மு.க.வைச் சேர்ந்த ஒரு வேட்பாளர், திருமயம் தொகுதியில் போட்டியிட்ட ஒரு வேட்பாளர் - அவர் பெயர் பாவாணன் - அவரும் மற்றும் மகேந்திரன் என்ற ம.தி.மு.க.வினுடைய இளைஞர் அணியினைச் சேர்ந்த ஒருவரும், மொத்தம் 7 அல்லது 8 பேர், கள்ளக் கடத்தலிலே ஈடுபட்டு, விடுதலைப் புலிகளுக்காக இந்தக் கடத்தலில் அவர்கள் ஈடுபட்டார்கள் என்று பிடிபட்டு, தேர்தல் நேரத்தில், வாக்குகள் எண்ணப்படுகிற அந்தக் காலகட்டத்தில், அவர்கள் சிறை பிடிக்கப்பட்டு, இன்னமும் திருச்சி சிறையில் தான் இருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளுக்காக தமிழ்நாட்டிலே மானசீகமான ஆதரவைத் தருவது என்பது வேறு. இப்படிச் செயல்வடிவமான ஆதரவைத் தருவது என்பது வேறு. அன்றைக்கே வேறு ஒரு பிரச்சினையில் இங்கே உறுப்பினர்கள் பேசும்போது, விடுதலைப் புலிகளுடைய பிரச்சினையையும், அங்கே அப்பாவி மக்கள் படுகொலைக்கு ஆளாகிறார்கள், சந்திரிகா அரசின் காரணமாக, கொடுமையின் காரணமாக, என்ற அந்தப் பிரச்சினையையும் தனித் தனியாகப் பிரித்துப் பார்த்து, அந்த அப்பாவி மக்களுக்காக நாம் நம்முடைய அனுதாபத்தைத் தெரிவிக்கவேண்டும் என்று எல்லா உறுப்பினர்களும் இங்கே எடுத்துக்காட்டியிருப்பதை நானும் மறந்துவிடவில்லை, அவையிலுள்ள நீங்கள் யாரும் மறந்திருக்க முடியாது. ஆனால் இந்த நிகழ்வைப் பொறுத்த வரையில், அவர்கள் டி.வி. டவரைத் தாக்குவதற்கு முயன்றார்கள், அப்போது பிடிபட்டார்கள். அவர்களிடத்திலே டிவி. டவரைத்

தகர்ப்பதற்கான 10 ஜெல்லட்டின் குச்சிகள், 10 டிடனேட்டர்கள், 4 மீட்டர் நீளமுள்ள ப்யூஸ் ஒயர், தீப்பெட்டி இவைகள் எல்லாம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும், அவர்கள் டி.வி. டவரைத் தகர்ப்பதற்குத்தான் முயற்சித்ததாகவும், அதற்குள் பிடிபட்டுவிட்டதாகவும் சொன்னதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. காவல்துறையும் அவ்வாறுதான் தகவல் அனுப்பியுள்ளார்கள் - நான் விரைந்து பெற்ற வகையில், அவர்களும் அப்படித்தான் தகவல் அளித்திருக்கிறார்கள். அந்த 19ஆம் தேதி நடைபெற்ற சம்பவம். மறுநாள் 20ஆம் தேதி, ராஜா, ரவிச்சந்திரன் என்ற இருவரும், இதே தீவிரவாத முயற்சியிலே கலந்திருந்தார்கள் என்பதற்காக அவர்களும் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே இவர்கள் அந்த டவரை உடைப்பதற்காகச் சென்றவர்களா, அல்லது பிடிபட்ட பிறகு அப்படிச் சொல்பவர்களா என்பது எல்லாம் முடிந்த முடிவாக இங்கே எடுத்துக்கூற முடியாது. நான் திரு. லத்தீப் அவர்களுடைய சந்தேகத்திற்கும் மதிப்பு அளிக்கிறேன். அதேநேரத்திலே, மன்ற உறுப்பினர்களுடைய, இந்த நாடு பற்றிய, சமூக விரோதச் செயல்களை வீழ்த்திட வேண்டும், என்பது பற்றிய அந்த உணர்வுகளுக்கும் மதிப்பு அளிக்கிறேன். ஒன்றை உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த வன்முறையாளர்களுக்கும் அவர்கள் நல்ல லட்சியத்திற்காக பாடுபடுகின்ற போராளிகளாக இருந்தாலும், அவர்களுக்கும் சட்டவிரோதமான காரியங்களை, வன்முறைக் காரியங்களை தமிழ்நாட்டில் நடத்துவதற்கு நாம் இடம் தரமாட்டோம் என்ற உறுதியை உங்களுக்கு எல்லாம் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

4 பேர்கள் பிடிபட்டு இருக்கிறார்களே என்றார்கள். திரு. தாமரைக்கனி கருதுவது போல் இல்லை. தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகள் வந்துவிடுகிறார்கள் என்று அவர் சொன்னார். அதைப்போல அல்ல. இப்போது இவர்கள் பிடிபட்டார்கள் என்றால் போலீசார் தீவிரமாக இருந்து, அவர்கள் அந்த முயற்சியிலே ஈடுபடுவதற்கு முன்பே பிடித்திருக்கிறார்கள் என்பதைப் பாராட்டி இருக்க வேண்டும். அல்லது ஒருவேளை திரு. லத்தீப் அவர்கள் சொல்வதைப் போல, அவர்கள் உண்மையிலே குற்றவாளி அல்ல, போலீசார் வேறு மாதிரியாகக்

கதை கட்டி இருக்கிறார்கள் என்றால், அதையும் தெரிந்து கொண்டு அதற்கான நடவடிக்கையையும் இந்த அரசு எடுத்தாக வேண்டும் என்பதை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி, அதைப் பற்றி உடனடியாக விசாரிக்க டி.ஜி.பி. அவர்களையே நான் அந்த இடத்திற்கு அனுப்பி, அதுபற்றிய முழு அறிக்கையையும் தருமாறு கேட்டுக் கொள்ள இருக்கிறேன் என்பதையும் தெரிவித்து, நிச்சயம் இதுபோன்ற ஊடுருவல்கள் தமிழ்நாட்டிலே அனுமதிக்கப்பட மாட்டாது என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தில்லையாடி வள்ளியம்மாள் அவர்களைப் பற்றி பொது வாழ்க்கையிலே நான் அடியெடுத்து வைத்த இளமைக் காலத்தில் மிக அதிகமாகப் பேசியவன். நான் மாத்திரமல்ல, நம்முடைய பேராசிரியர் போன்றவர்கள், நாஞ்சிலாரைப் போன்றவர்கள் எல்லாம் திருப்பூர் குமரன், தில்லையாடி வள்ளியம்மாள் இவர்களைப் பற்றி காங்கிரஸ் மேடையிலே, நீங்கள் எல்லாம் பேசியதைவிட, அதிகமாகப் பேசினோம். காரணம் அவர்களுக்கு எல்லாம் வடநாட்டிலே எந்த நினைவுச் சின்னமும் இல்லையே என்று எடுத்துக்காட்டுவதற்கு இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1970ஆம் ஆண்டில் தில்லையாடி வள்ளியம்மாளுக்கு ஒரு நினைவுச் சின்னத்தை தமிழகத்திலே தில்லையாடி வள்ளியம்மாள் நகர் என்ற பெயராலே உருவாக்கி இருக்கிறது. ஒரு அழகான நினைவுச் சின்னம் அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நாகப்பன் பெயரை மாத்திரம் சொன்னார்கள். நாகப்பன், நாராயணசாமி என்ற இரு ஆதிதிராவிட சகோதரர்கள் அங்கே தென் ஆப்பிரிக்காவிலே மகா உத்தமர் காந்தியடிகளோடு இணைந்து போராடியவர்கள். அவர்களுடைய நினைவுச் சின்னமாகவும் அங்கே தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு, நாராயணசாமி பகுதி, நாகப்பன் பகுதி என்ற பெயர்கள் எல்லாம் தில்லையாடியிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே ஊருக்கே தில்லையாடி வள்ளியம்மாள் நகர் என்ற பெயர் சூட்டப் பட்டிருக்கிறது. எனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்களுக்கு உள்ள அக்கறை இந்த

அரசிற்கும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தென் ஆப்பிரிக்காவிலே காந்தியடிகளோடு சேர்ந்து அங்கே நடைபெற்ற போராட்டத்திலே ஈடுபட்டவர் தில்லையாடி வள்ளியம்மாள். காந்தியடிகள் இந்தியாவிலே வந்து சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது, தெற்குப் பகுதியிலே வந்தபோது முதன்முதலாகக் காணவேண்டுமென்று விரும்பிய இடமே தில்லையாடிதான். தில்லையாடி வள்ளியம்மாள் வீட்டிற்குச் சென்று அங்கு அமர்ந்து காந்தியடிகள் அவருடைய நினைவைப் போற்றினார்கள் என்பதும் வரலாறு ஆகும். அப்படிப்பட்ட தில்லையாடி வள்ளியம்மாளுடைய நினைவுச் சின்னம் அகற்றப்பட்டிருக்குமேயானால் அதற்காக நெல்சன் மண்டேலாவிற்கு தமிழக அரசின் சார்பாக கடிதம் எதுவும் எழுத இயலாது. மத்திய அரசின் சார்பாக கடிதம் எழுதவேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மத்திய அரசுக்கு அதுபற்றி தமிழக அரசு கடிதம் எழுதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 48 நாள் : 30.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையினுடையத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன், திரு. அப்துல் லத்தீப். திரு. டி.மணி, திரு. பெரியசாமி, திரு. தாமரைக்கனி ஆகியோர் இங்கு அளித்து, அதன்மீது பேசியுள்ள கருத்துக்களையொட்டி சில விவரங்களை, விளக்கங்களை இங்கே அளிக்க நான் கடமைப் பட்டிருக்கிறேன். வைகை வீரன் அழகு முத்து மாவட்டம், உத்தமபாளையம் டி.எஸ்.பி. காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. சுப்பண்ணன், வேலூரில் துறை விசாரணையில் கலந்து கொண்ட பிறகு அவருடைய மனைவி திருமதி சுந்தராம்பாள் மற்றும் மகன் டாக்டர் சுகுமார் ஆகியோரோடு 26-8-1996 அன்று இரவு கிருஷ்ணகிரியிலே உள்ள வி.கே. விருந்தினர் மாளிகையில் தங்கினார். இங்கே உறுப்பினர்கள் கேட்டது போல அரசு தங்கும் விடுதிகள் இருக்கும்போது அங்கே ஏன் ஒரு அதிகாரி தங்கினார் என்பது விடையிறுக்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் மறுக்கவில்லை.

அடுத்து, 27-8-1996 அன்று அதிகாலை சுமார் 2 மணி அளவில், 4 அல்லது 5 அடையாளம் தெரியாத நபர்கள் தங்களுடைய முகத்தின் கீழ்ப் பகுதியைத் துணியால் மறைத்துக் கொண்டு அங்கே வந்து கதவை உடைத்து விருந்தினர் மாளிகையிலே நுழைந்தார்கள் என்றும் எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. வந்தவர்களில் ஒருவர் அங்கு தூங்கிக் கொண்டிருந்த விருந்தினர் மாளிகையின் காவலாளி புங்கன் என்பவரைப் பிடித்து வைத்துக்கொண்டார் என்றும் தகவல்.

திரு. சுப்பண்ணனும், அவருடைய மனைவியும் தூங்கிக் கொண்டிருந்தஅறையில் மற்றக் குற்றவாளிகள் நுழைந்து, சுப்பண்ணனைப் பற்றி அவரிடம் விசாரித்தபோது, அவர் தன்னை ஒரு காவல் துறை அதிகாரி என்று சொல்லாமல் ஒரு ஆசிரியர் என்று கூறியிருக்கிறார். ஆசிரியர் என்றால் அனுதாபப்பட்டு விட்டு விடுவார்கள் என்று எண்ணினார் போலும். எனவே ஆசிரியர் என்று கூறியிருக்கிறார் என்று எனக்குத் தகவல். நான் இவையெல்லாம் முற்றாக நம்பி இங்கே எடுத்துச் சொல்வதாக யாரும் கருதிக்கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் தகவல் என்று குறிப்பிடுகிறேன். வந்தவர்கள் திரு. சுப்பண்ணனையும், அவருடைய மனைவியையும் இரும்புத் தடி மற்றும் கம்பால் மாறி மாறி அடித்து காயங்களை ஏற்படுத்தினார்கள். சுப்பண்ணனின் கையிலைக் கிழித்து அவருடைய கைகள் மற்றும் கால்களைக் கட்டிப்போட்டார்கள், மேலும் சுந்தராம்பாளுடைய தாலி, தங்க டாலர் சங்கிலி, 2 தங்க மோதிரங்கள், 1 வெள்ளி மோதிரம் மற்றும் அவர் கொண்டு வந்திருந்த அவரது மகளின் தங்க நெக்லஸ், தங்க மோதிரம், தங்கக் காது வளையம், தங்கக் கைகடிகாரம் ஆகியவற்றைக் கொள்ளையடித்தார்கள். கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் மொத்த அளவு 32 சவரன். ரொக்கத் தின் மதிப்பு 30,500 ரூபாய். ஒரு காவல்துறை அதிகாரியிடத்தில் 30,500 ரூபாய் எப்படி ரொக்கம் இருந்தது என்பதும் கேள்விக்குரிய பிரச்சினை. அதையும் அரசு விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அலுவல் நிமித்தம் வைத்திருந்த உத்தமபாளையம் காவல் நிலையத்திற்குச் சொந்தமான எண் எம்.ஆர்.ஆர். 57, பாடி எண் 162/00151/380 என்ற கைத்துப்பாக்கியையும் 5 தோட்டாக்களையும் பறித்துச் சென்றுவிட்டார்கள். இதைவிட அவலம் வேறு ஒன்றும் இருக்க முடியாது. ஒரு காவல் துறை அதிகாரியைக் கட்டிப் போட்டுவிட்டு கைத்துப்பாக்கியை எடுத்துச் சென்று இருக்கிறார்கள்.

நாம் படங்களிலே, பல பேர் காவல் துறை அதிகாரிகளாக நடிப்பதைப் பார்த்து இருக்கிறோம். நம்முடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், ரஜினிகாந்த் அவர்கள், விஜயகாந்த் அவர்கள், கமலஹாசன், சரத்குமார், சத்தியராஜ் போன்றவர்கள் எல்லாம் (குறுக்கீடு) திருநாவுக்கரசு போன்றவர்கள் எல்லாம்

(சிரிப்பு) காவல்துறை அதிகாரிகளாக நடித்து இருக்கிறார்கள். அவர்கள் இப்படிப்பட்ட கொள்ளையர்களைப் பந்தாடுகின்ற காட்சியையும் நாம் அந்தப் படங்களில் பார்த்து இருக்கிறோம். அவர்கள் 10 பேர் 20 பேரைப் பந்தாடுவார்கள். ஒரு 3, 4 பேரைக்கூட எதிர்த்துத் தாக்கவில்லை என்ற அளவில் இந்தக் காவல் துறை அதிகாரி பணத்தையும் பறிகொடுத்து, நகை நட்டுகளையும் பறிகொடுத்து, மனைவியின் தாலியையும் பறிகொடுத்து, கைத்துப்பாக்கி, அதோடு கூடிய 5 தோட்டாக் களையும் பறிகொடுத்து இருக்கிறார் என்றால், இது பெரிய வெட்கக்கேடான ஒரு செய்திதான். நான் அதை மறுக்கவில்லை.

சுப்பண்ணன் மகன் குமார் தங்கி இருந்த அறைக்குச் சென்று தேடிப் பார்த்ததில், குற்றவாளிகளுக்கு அங்கு எதுவும் கிடைக்கவில்லை. சுப்பண்ணனுடைய பெட்டிகளைச் சோதனை செய்தபோது, அதில் இருந்த காவல் துறை சீருடையைக் கண்ட உடனே, குற்றவாளிகள் டாக்டர் சுகுமாரையும் காவலாளி புங்கனையும் கட்டிப்போட்டு அறையின் உள்ளே விட்டுவிட்டு ஓடி விட்டார்கள். அந்தக் காவல் துறையினுடைய சீருடை, பெட்டியில் இருந்ததைப் பார்த்த உடனேயே பயந்து ஒடுகின்ற கோழைத்தனமான இந்தக் கொள்ளையர்களிடத்திலேதான் இந்த டி.எஸ்.பி. அடிபட்டு இருக்கிறார். துப்பாக்கியைப் பறிகொடுத்து இருக்கிறார் என்பது அதைவிட கேவலமான ஒன்று என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பிறகு சுப்பண்ணனிடம் வந்த குற்றவாளிகள் கன்னடம், தெலுங்கு மற்றும் தமிழிலே பேசினார்கள் என்று குறிப்பிடப் படுகிறது. ஒருவேளை அவர்கள் தமிழ் பேசுகின்றவர்களாக இருந்து, தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக தங்களுக்குத் தெரிந்த கன்னடத்திலும் தெலுங்கிலும் பேசி இருக்கலாம்; அல்லது உள்ளபடியே கன்னடம், தெலுங்கு மொழிப்பகுதியைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கலாம். அதுவும் விசாரணைக்குரிய ஒன்று.

சுப்பண்ணனுடைய புகாரின் பேரில் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய குற்ற எண் 800/96, இந்திய தண்டனைச் சட்டம் 397-வது பிரிவின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்

அடைந்தவர்கள் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் புறநோயாளியாக சிகிச்சைப் பெற்றுத் திரும்பி உள்ளார்கள். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சம்பவம் நடத்த இடத்தில் முகாம் இட்டு உள்ளார். சம்பவ இடத்தில் கைவிரல் ரேகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காவல் துறை விரல் ரேகை பதிவுக் கூடங்களில் பதிவாகி உள்ள ரேகைகளோடு ஒப்பிடுவதற்கு சேலம், வேலூர், திருவண்ணாமலை, பெங்களூர் ஆகிய இடங்களுக்கு அலுவலர்கள் அனுப்பப்பட்டு இருக்கிறார்கள். தனிக் குழுக்கள் பல அமைக்கப்பட்டு தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதியிலும் மற்றும் ஆம்பூர், தாரமங்கலம், அவிநாசி, பெங்களூர், குப்பம், கோலார், பலப்பனேரி ஆகிய இடங்களிலும் விசாரணை செய்ய அனுப்பப்பட்டுள்ளனர். சந்தேகிக்கப்பட்ட நபர்கள் சுமார் 60 பேர்களிடம் விசாரணை செய்யப்பட்டுள்ளது. சில சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்து குற்றவாளிகளின் அடையாளம் குறித்து சில விவரமான தகவல்கள் கிடைத்து உள்ளன. அதன் அடிப்படையில், தீவிர விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு உள்ளன என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையில் தொடர்ந்து அரசின் விசாரணை, காவல் துறையின் விசாரணை நடைபெறும் என்ற உறுதியையும் அவை உறுப்பினர்களுக்கு அறிவித்துக் கொள்கிறேன்.

விழுப்புரம் - சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 49 நாள் : 30.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் விரும்பத்தகாத வன்முறை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றுள்ள செய்தி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவராஜ் திரு. தாமரைக்கனி, திரு. டி. மணி, டாக்டர் கிருஷ்ணசாமி திரு. வேலாயுதன், திரு. ஜி. பழனிசாமி, திரு. எம்.ஏ, லத்தீப் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை இங்கே வெளியிட்டு, உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள்.

விழுப்புரம் ராமசாமி படையாட்சியார் மாவட்டத்தைச் சேர்ந்த தி.மு.கழகத் தொண்டர் படை அமைப்பாளர் மின்னல்ராஜ், அவருடைய நண்பர்கள், விழுப்புரம் நகரைச் சேர்ந்த கோவிந்தன் மற்றும் அவருடைய நண்பர்கள் ஆகியோருக்கிடையே கடந்த சில ஆண்டுகாலமாக முன்விரோதம் இருந்தது. இதிலே மின்னல் ராஜோடு அவருடைய அணியிலே, இந்தப் போராட்ட அணியிலே இடம் பெற்று இருந்தவர் லெ்ப்ட் குமார் என்ற அ.இ.அ.தி.மு.க-வைச் சேர்ந்தவரும் இடம் பெற்றிருந்தார். கட்சிப் பாகுபாடு இல்லாமல் அந்தப் போராட்டம் அங்கே நடைபெற்றிருக்கிறது. 1992-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3-ஆம் தேதி இரவு, கோவிந்தன், அவரது சகோதரர் கண்ணன் ஆகியோரும் மின்னல் ராஜ் குழுவினரும் மோதிக்கொண்டார்கள். இரண்டு தரப்பினரிடையே நடைபெற்ற மோதலில் கோவிந்தன் கொல்லப்பட்டார். இதுகுறித்த வழக்கு, 1992ஆம் ஆண்டிலேயே விழுப்புரம் நகர் காவல் நிலையத்திலே கடந்த ஆட்சியிலே பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்கில் விழுப்புரம் முதன்மை குற்றவியல் நீதிபதி அவர்கள் முன்னால் விசாரணை

நடைபெற்றது. இதிலே இந்த மின்னல்ராஜ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர் படை அமைப்பாளர். அந்தப் பகுதியிலே கழகத் தோழர்களிடத்திலும் பொதுமக்கள் இடத்திலும் செல்வாக்கு படைத்தவர் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. எனவே, விழுப்புரம் நகரத்திலே பரபரப்பாக பேசப்பட்ட இந்த வழக்கில் நேற்றையதினம் தீர்ப்புக் கூறப்பட்டதால் தீர்ப்பைத் தெரிந்துகொள்ள நீதிமன்றத்தின் முன்னால் பெரிய கூட்டம் கூடியிருந்தது. இதில் மின்னல்ராஜின் குழுவினரும், ஆதரவாளர் களும் பெரும்பான்மையாக இருந்தார்கள். நேற்றையதினம் நீதிபதி அவர்கள், மின்னல்ராஜ், (தி.மு.க-வைச் சேர்ந்தவர்) லெ஼ப்ட் குமார், (அ.இ.அ.தி.மு.க-வைச் சேர்ந்தவர்) அசோக், குமரன், பழனி, ரமேஷ் ஆகிய 6 பேருக்கு ஆயுள் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார். இதிலேயிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளலாம். 1992 முதல் 1996ஆம் ஆண்டுவரை நடைபெறுகின்ற இந்த வழக்கில் அரசின் தலையீடு எதுவும் இல்லாமல் ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம். இந்த தீர்ப்பு வெளியிடப் பட்டவுடன் இந்தத் தகராறு நடைபெற்றது.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாடிய வழக்கறிஞர், அ.இ.அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாவட்ட வழக்கறிஞர் அணியின் செயலாளர் கு.ப.பழனிப்பன் என்பதும் குறிப்பிடத்தக்கது. நேற்றைய தினம் மாலை 4-15 மணியளவில் மின்னல்ராஜின் ஆதரவாளர்கள் சுமார் 15 பேர் தீர்ப்பைக் கேட்டு, ஆத்திர மடைத்து, அந்த நீதிமன்ற வளாகத்திற்குள் நிறுத்தப்பட்டிருந்த நீதிபதியின் காரைத் தாக்கியிருக்கிறார்கள். காரின் முன்பக்கக் கண்ணாடி உடைந்துவிட்டு இருக்கிறது. காரின் மீது கற்களைக் கொண்டும் தாக்கிவிட்டு ஓடியிருக்கிறார்கள். தகவல் கிடைத்ததும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், மாவட்ட ஆட்சித் தலைவரின் பொறுப்பு வகிக்கும் மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி மற்றும் விழுப்புரம் நகர காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஆகியோர் சென்று மாவட்ட அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதிபதி அவர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளார்கள். நீதிபதிகளின் வீடுகளுக்கும்,

நீதிமன்றங்களுக்கும், விழுப்புரம் நகரத்தின் முக்கியமான இடங்களுக்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, ரோந்துப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக விழுப்புரம் நகரக் காவல் நிலையக் குற்ற எண் 493/66 இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 506 (2) மற்றும் (3) பொதுச் சொத்துக்களுக்கு நாசம் மற்றும் சேதம் விளைவித்தலைத் தடுக்கும் சட்டத்தின் பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, ராஜு என்பவரின் மகன் துரை மற்றும் 6 பேர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் இருக்கும் வருவாய்த்துறை அதிகாரியிடம் தொலைபேசி மூலமாகத் தொடர்புகொண்டு கேட்டபோது தற்போது விழுப்புரம் நகரத்தில் எந்தப் பதட்டமும் இல்லை என்றும், நகரம் அமைதியாக உள்ளது என்றும் கூறியுள்ளார்கள். இவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் வன்முறையில் ஈடுபட்டவர்களை இந்த அரசு பொறுத்துக்கொண்டு இருக்காது என்பதையும், வன்முறையிலே ஈடுபட்டவர்கள் யாராக இருந்தாலும் நான் முதலமைச்சர் என்ற முறையிலே, அவர்கள் கட்சிக்காரர்களாக இருந்தாலும்கூட, அவர்கள் இந்தக் குற்றத்தைச் செய்துவிட்டு கட்சிக்காரர்களாகத் தொடர்ந்து இருக்கமுடியாது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து, கட்சியை விட்டு விலக்கப்படுவார்கள் என்பதை கழகத்தினுடைய தலைவர் என்ற முறையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு பசுவின் கன்றைக் கொன்றதற்காக மகனைத் தேர்க்காலில் வைத்த மனு நீதி சோழன் - நடந்த கதையோ, நடக்காத கதையோ தெரியாது - பிறந்ததாகச் சொல்லப்படுகின்ற திருவாரூரைச் சேர்ந்தவன் நான் என்பதைத் தெரிவித்து, இதிலே நிச்சயமாக உரிய நீதி வழங்கப்படும் என்பதையும் இங்கே கூறி அமர்கின்றேன்.

பஞ்சாயத்து ராஜ் சட்டம்

உரை : 50 நாள் : 31.08.1996

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எழுந்துள்ள இந்தப் பிரச்சினை, அதைப் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மிகுந்த ஆவேசத்தோடு இங்கே எழுப்பியுள்ள இந்தப் பிரச்சினை அரசின் கவனத்திற்கு வாரததல்ல. இந்தியாவினுடைய பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அவர்களுடைய காலத்திலேயே பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்டபோதே, அதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சார்பிலும், ஆட்சிப் பொறுப்பிலே இல்லாமல் அகற்றப்பட்ட பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும் மிக விளக்கமாக எடுத்துக்கூறி பஞ்சாயத்து ராஜ் சட்டம் இன்னும் பல திருத்தங்களோடு நிறைவேற்றப்பட வேண்டும் : அதிலே நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு அம்சம். ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை நிச்சயமாக பஞ்சாயத்துத் தேர்தல், நகராட்சித் தேர்தல், மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று ஆகவேண்டும் என்ற அந்தக் குறிப்பை மாத்திரம்தான் ஏற்றுக்கொள்ள முடியும்: இன்றைக்கு நீங்கள் கொண்டு வருகின்ற இந்தப் பஞ்சாயத்து ராஜ் சட்டம், முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்ற கருத்தை எடுத்துக் கூறியிருக்கிறோம். பஞ்சாயத்துக்கள் இன்னும் அதிக சுயாட்சித் தன்மையோடு விளங்க வேண்டும் என்ற அந்தக் கருத்திலோ அவைகளுக்கு மாநில அரசு மாத்திரமல்ல, மத்தி அரசும் நிதி வழங்க வேண்டும் என்கின்ற அந்தக் கருத்திலோ நாங்கள் வேறுபடவில்லை. ஆனால், இந்தியாவிலேயே மற்ற

மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டக்கூடிய வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் என்கின்ற இந்த இரண்டு அடுக்கு அளவோடு பஞ்சாயத்து நிலையை அமைத்தார்கள். அதற்கு முன்பெல்லாம் டிஸ்ட்ரிக்ட் போர்டு மெம்பர். டிஸ்டரிக்ட் போர்டு தலைவர் என்றெல்லாம் இருந்து அது ஒரு தனி சாம்ராஜ்யமாகவே விளங்கி வந்ததை வேரோடு அழித்துவிட வேண்டும்: அகற்ற வேண்டும் என்ற நல்ல நினைப்போடு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஊராட்சி மன்றங்கள் அதற்கு மேல் அடுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் என்ற நிலையைத் தோற்றுவித்தார்கள். அதை மாற்றிவிட்டு மறுபடியும் ஜில்லா போர்டுகளைப் போல மாவட்ட ஊராட்சி எல்லாம் அமைவது தேவைதானா என்ற இந்தக் கேள்வியை திராவிட முன்னேற்றக் கழகம் எழுப்பாமல் இருந்திடவில்லை. ஆனால், நாடாளுமன்றத்தில் இந்த அளவிற்கு எல்லா கட்சிகளும் வாதிட்டனவா என்றால் இல்லை என்று நான் மனக்குறையோடு கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இங்கே பெண்கள் தொகுதி ஆக்கிவிட்டார்கள்: ஆதிதிராவிடர் தொகுதிகளாக ஆக்கிவிட்டார்கள் என்றெல்லாம் வருந்துகின்றவர்கள், வேதனைப்படுகின்றவர்கள் எல்லா கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே உள்ளவர்களுக்குக்கூட அந்தக் குறைபாடு உண்டு. அதனால்தான் சிதம்பரத்திலேகூட கழகத்தைச் சேர்ந்த ஒருவரே வழக்கு போட்டு, நேற்றையதினம் அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டிருக்கிறார். எல்லோருக்கும் இந்த அதிருப்தி இருக்கிறது. ஆனால் இந்த அதிருப்திக்கு என்ன காரணம். இந்தச் சூழ்நிலைக்கு என்ன காரணம் என்றால் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே சில நார்ம்ஸ் கடைப்பிடிக்க வேண்டும் என்று கட்டாயமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதைக் கடைப்பிடிக்காமல் ஊராட்சி ஒன்றியத் தேர்தலையோ அல்லது நகராட்சித் தேர்தலையோ, மாநகராட்சித் தேர்தலையோ நடத்தினால், இதுதான் சாக்கு என்று யாராவது ஒருவர் சென்று தடை பெற்றுவிட முடியும். அந்தத் தேர்தல் நடைபெறாமலே செய்துவிட முடியும். எனவே, ஒரு சிறு அளவுகூட அதற்கு வழிவகை இல்லாமல் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு நாம்

ஏற்பாடுகளைச் செய்த காரணத்தாலேதான், எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டு தேர்தலை நடத்துகின்றோம். எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டு என்றால் தேர்தல் நடத்துவதற்கு ஒத்துக்கொண்டு.

முன்பு இருந்த ஆட்சியிலே 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு என்றுகூட ஒதுக்கினார்கள். அதை வைத்தே ஒருவர் வழக்குமன்றம் சென்று இடைக்காலத் தடை பெற்று, தேர்தல் நடைபெற முடியாமல் போயிற்று. ஆனால் 50% பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தேவையா, அந்த விதிமுறை தேவையா என்றால், இல்லை. ஏனென்றால், தமிழ்நாட்டில் முக்கால் பகுதியினருக்கு மேற்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்வர்களாகத்தான் இருக்கிறார்கள். எனவே, அது நகராட்சியானாலும், ஊராட்சியானாலும், பேரூராட்சியானலும் எந்த இடத்திலும் அவர்கள் போட்டியிடக் கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தால் அது தேவையில்லாத ஒரு சட்டம். அதை மாநில அரசு தன்னுடைய அதிகாரத்துக்கு உட்பட்டு கொண்டுவர முடியும் என்ற நினைப்போடு கொண்டு வந்த காரணத்தால், அது நீதிமன்றத்திலே அடிப்பட்டுப் போயிற்று. தேல்தல் நடத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

இன்றைக்கு அப்படிப்பட்ட ஒரு சிறிய சந்து பொந்துகூட சட்டத்திலே இல்லாமல், தேர்தல் நடத்தக் கூடாது என்று எண்ணுகின்றவர்களுக்கு வழியில்லாமல் இந்தச் சட்டத்தின்படியே நாம் தேர்தலை நடத்துகிறோம். எப்படியும் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு நகரத்திலும், நகரத்திலுள்ள வட்டத்திலும், வார்டுகளிலும் உள்ள ஏழை-எளிய மக்கள், பொதுமக்கள், அவர்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள், விளக்கு வசதிகள், சாலை வசதிகள், அடிப்படை வசதிகள் இவைகளைப் பெற வேண்டுமானால் - இன்றைக்குக் கோட்டையைச் சுற்றி அதிகக் கூட்டம் இருப்பதற்குக் காரணமேகூட. அங்கே யாரிடத்திலே போய் சொல்லுவது என்று தெரியாத காரணத்தால், இங்கிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களை நாடி அந்தந்த ஊர்ப் பொதுமக்கள் வந்துகொண்டு இருக்கிறார்கள். என்னைச் சந்திக்கவோ, அமைச்சரைச் சந்திக்கவோ மட்டுமல்ல, ஏராளமானவர்கள் அந்தந்த ஊர்களிலிருந்து அமைச்சர்களைச் சந்திக்க வருகிறார்கள் என்றால், அவர்களுடைய ஊர்ப்

பிரச்சினைகளாக இருக்கலாம். பொதுவாக, பெரும்பாலான வர்கள் பொதுப் பிரச்சனைக்களுக்காகவே வருகிறார்கள். இவைகளெல்லாம் ஓரளவிற்கு நின்று, ஆங்காங்கே மக்கள் பிரதிநிதிகள் கிராமங்களில் பேரூராட்சிகளில், நகராட்சிகளில் அமைந்துவிடுவார்களேயானால், அரசாங்கத்தினுடைய திட்டங் களெல்லாம் வெகுவிரைவில் சென்று மக்களை அடையும் என்பதற்காகத்தான். எப்படியும் ஊராட்சித் தேர்தலை, நகராட்சித் தேர்தலை விரைவில் நடத்தி முடிக்க வேண்டுமென்று தேர்தல் விரைவில் அறிவித்து, கவர்னர் உரையிலும் அறிவித்து, நிதிநிலை அறிக்கையிலும் அறிவித்து இன்றைக்கு தேர்தலை நடத்த நாம் தயாராக இருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொல்கின்ற அந்தக் குறைபாடுகள் தவறு என்று நான் சொல்லவில்லை. உதாரணமாக இதே சென்னை மாநகரத்திலே மைலாப்பூரில் 9 பெண்கள் தொகுதிகள் இந்தத் தேர்தலில். ஆனால் சைதாப்பேட்டையில் ஒரு பெண் தொகுதிகூட கிடையாது. இப்படி இருப்பதற்கு என்ன காரணம் என்றால், ஒவ்வொன்றையும் ஒன்றாக ஆக்கி, ஒரு தொகுப்பாக வைத்துக் கொண்டு அதிலே ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பார்த்து எடுக்க வேண்டுமென்று நார்ம்ஸ் இருக்கிறது. அதை மீறி நாம் செயல் பட்டால் உடனடியாக கோர்ட்டுக்குச் செல்வார்கள். தேர்தல் நடைபெற முடியாமல் போய்விடும். எனவே இந்தத் தேர்தலை எப்படியாவது நடத்தி முடித்து, அடுத்த பஞ்சாயத்துத் தேர்தல் நகராட்சித் தேர்தல் வருவதற்கு முன்பாக, மைய அரசோடு கலந்து பேசலாம். ஏனென்றால், எல்லா மாநிலங்களிலும் இந்தத் தேர்தல் அநேகமாக நடந்து முடிந்துவிட்டது. நாம்தான் பாக்கியாக இருக்கிறோம். எனவே, நாம் இந்தத் தேர்தலை நடத்தி முடித்துவிட்டு, மைய அரசோடு பேசி, அடுத்தத் தேர்தலையாவது எத்தகைய குழப்பங்களும் இல்லாத அளவில் நடத்துவதற்கு ஒரு சூழ்நிலையை உருவாக்கலாம் என்று எண்ணுகிறேன். எனவே இதில் முக்கியப் பொறுப்பு எதுவும் மாநில அரசுக்குக் கிடையாது. இந்தக் குறைபாடுகளுக்கெல்லாம் மாநில அரசு பொறுப்பல்ல. ஏற்கெனவே இருந்த மத்திய அரசு வகுத்தளித்த நார்ம்ஸ்படி தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது. எனவே

யாரையும் குறை சொல்லாமல், எப்படியாவது தேர்தலை நடத்தி முடித்து, மக்களோடு தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை அரசின் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

கயத்தாறு, கடையநல்லூர் பிரச்சினைகள்

உரை : 51 **நாள் : 29.01.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பைக் கொண்டு வந்து, கயத்தாறு மற்றும் கடையநல்லூரில் நடைபெற்ற நிகழ்ச்சிகளையெல்லாம் சுட்டிக்காட்டி, அரசு தவறு செய்து விட்டது என்ற குற்றத்தையும் சுமத்தியுள்ளார். நான் இதற்கு மிக விரிவான ஒரு விளக்கத்தை இங்கே அளித்திட விரும்பவில்லை. காரணம், இது குறித்து மாவட்ட நீதிபதி இரா. மாணிக்கம் அவர்களைக் கொண்டு நீதி விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்த கமிஷனுடைய முடிவுகள் அல்லது அறிக்கை விரைவிலே தரப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எவ்வளவு விரைவாக அந்த அறிக்கை வரவேண்டுமோ அவ்வளவு விரைவாக வருவதற்கு நீதிபதி அவர்களும் நிச்சயமாக முன்வருவார்கள் என்ற எதிர்பார்ப்பும் இந்த அரசுக்கு இருக்கிறது. அறிக்கை வந்தவுடன் அந்த அறிக்கையிலே சுட்டிக்காட்டப்படுகின்ற செய்திகளின் அடிப்படையில், பரிந்துரைகளின் அடிப்படையில் நிச்சயமாக இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்கிடையில், இங்கே டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னதை நான் மறுத்துக் கூறுவது, ஒருவேளை நீதி விசாரணை நடக்கும்பொழுது கிருஷ்ணசாமி அவர்கள் அங்கே வைக்கின்ற வாக்குமூலத்திற்கு எதிரானதாக ஒரு முதலமைச்சரே இத்தகைய நிலையை எடுத்திருக்கிறார் என்ற அளவில், அவருக்கு

விரோதமானதாக ஆகிவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்திலே தான் நான் இங்கே அதைப்பற்றி விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால், எனக்கு அங்குள்ள அதிகாரிகள் அனுப்பியுள்ள அந்த அறிக்கையிலேயுள்ள சில குறிப்புகளை மாத்திரம் இங்கே படிக்க விரும்புகிறேன். அப்படிப் படிப்பதால் அனைத்தையும் நான் ஏற்றுக்கொண்டேன் என்று பொருளல்ல. இந்த அவைக்கு அதிகாரிகள் மட்டத்திலேயிருந்து என்ன தகவல்கள் தரப்பட்டன என்பது அறிவிக்கப்பட வேண்டுமென்ற ஒரு நிலையிலேதான் அதைப் படிக்கின்றேனேயல்லாமல், முழுவதையும் ஏற்றுக்கொண்டு படிப்பதாக அவையிலேயுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கொள்ளக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

7-1-1997 அன்று காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தனது தொகுதியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து கயத்தாறு ஊராட்சி ஒன்றியத் தலைவர் முதல் அந்த ஒன்றியத் தொகுதியிலே அடங்கும் அனைத்து ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருடன் விவாதிக்க எண்ணியிருப்பதாகவும், அதற்கு ஏற்பாடு செய்யுமாறும் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார். அதே நாளில் நண்பகல் 12 மணிக்கு மேல் பிற்பகல் 3 மணி வரையில் பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறவும் திட்டமிருப்பதாகத் தெரிவித்து, அதற்காக, சம்பந்தப் பட்ட அரசு அதிகாரிகளை அழைக்குமாறும் அதிலே எழுதியிருந்தார். இந்த விவரங்களை அவர் நாளேடுகளின் மூலமாகவும் விளம்பரம் செய்திருந்தார்.

30-12-1996 அன்று கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கியுள்ள 45 ஊராட்சி மன்றங்களில் 39 ஊராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஒருமனதாக, காரணம் எதுவும் கூறாமல், சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் கிருஷ்ண சாமி அவர்கள் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தைப் புறக்கணிக்கப் போவதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளார்கள். 3-1-1997 அன்று கயத்தாறு ஊராட்சி ஒன்றியக்குழுக் கூடி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, 7-1-1997 அன்று கூட்டம் நடத்தக்கூடாது எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளளது.

இதற்கிடையே, இந்த நிகழ்ச்சிகளெல்லாம் நடை பெறுவதற்குச் சில மாதங்களுக்கு முன்பு 3-9-1996 அன்று ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமியின் உதவியாளரும், கொடியங்குளத்தைச் சேர்ந்தவருமான கணேசன் என்பவர், கிராம வளர்ச்சிப் பணி ஒப்பந்தங்களைத் தன்னிடம் தரக் கோரிட, அதன் காரணமாக கயத்தாறு வட்டார வளர்ச்சி அலுவலருக்கும், அவருக்கும் தகராறு ஏற்பட்டு, அப்பொழுது அந்த அதிகாரியை பணிகளைச் செய்யவிடாமல் கணேசன் தடுத்ததாகவும், 5- 9- 1996 அன்று கணேசன் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இந்த நிகழ்ச்சியைக் காரணமாகக் காட்டி, விரும்பத்தகாத சம்பவங்கள் ஏதும் 7-1-1997 அன்று ஏற்பட்டுவிடுமோ என்பதற்காக ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் அனைவரும் 7-1-1997 அன்று ஒட்டுமொத்தமாக தற்செயல் விடுப்பில் சென்றுவிட்டார்கள் என்றும் அந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

7-1-1997 அன்று, மனுநீதி நாள் நடத்த தன்னோடு 250 பேரை, டாக்டர் கிருஷ்ணசாமி, கயத்தாறு ஒன்றிய அலுவ லகத்திற்கு அழைத்து வந்தபோது, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் கோவில்பட்டி, கோட்ட வருவாய்த் துறை அதிகாரி ஆகியோர் மட்டுமே அலுவலகத்திலே இருந்திருக்கிறார்கள்.

இதுவரையில் பார்க்கும்போது ஒரு எம்.எல்.ஏ. மக்களைச் சந்தித்து, ஊராட்சி ஒன்றிய, ஊராட்சித் தலைவர்களுடைய உதவியோடு, அவர்களைத் துணைக்கு வைத்துக் கொண்டு, அவர்களுடைய குறைபாடுகளை, முறையீடுகளைத் தெரிந்து கொள்வதிலே உள்ள உரிமையைத் தடுக்கிற வகையிலே ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி என்ற அளவில், அவரே இங்கு எடுத்துக் காட்டியதைப் போலவும், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் இங்கே எடுத்து விளக்கியதைப் போலவும் ஓர் உரிமைப் பிரச்சினையாக, இந்த அவையிலே எழுப்பப்பட்டிருக்கு மேயானால், உரிமைக் குழு, தங்களுடைய உத்தரவின்படி கூட்டப் பட்டு, அந்த உரிமைக் குழுவிலே இருசாராரும் அழைக்கப்பட்டு, விளக்கம் கேட்கப்பட்டு, உரிமைக் குழு எந்த முடிவை எடுக்கிறதோ, அந்த முடிவின்படி, அது தண்டனை என்றாலும் சரி, அல்லது எந்த முடிவை எடுத்தாலும் சரி. அன்படி அதை நிறைவேற்றி வைக்கின்ற பொறுப்பும் கடமையும் அந்த உணர்வும்

தங்களுக்கு உண்டு என்பதை நான் மிக நன்றாக அறிவேன். அப்படி உரிமைப் பிரச்சினை எதுவும் இங்கே இதுவரையில் தரப்படவில்லை. தங்களிடத்திலே நேரடியாக அதைப்பற்றி கூறி, விசாரிக்க வேண்டுமென்று டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கேட்கவில்லை என்பதைத் தாங்களே இந்த அவையிலே கூறியிருக்கிறீர்கள்.

இந்த நிலை ஏற்பட்டவுடன், டாக்டர் கிருஷ்ணசாமி அவர் களுக்கும் எனக்கும் ஒன்றும் தொலைதூரம் இல்லை. நாங்கள் ஒருவருக்கொருவர் பழகாதவர்களும் அல்லர், இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றக் கழகத்திலே, ஒரு காலத்திலே அவர் உறுப்பினராக இருந்தவர்; என்னைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருந்தவர்; இன்றைக்கு அவர் தலைவராக மாறியிருக் கிறார்; மகிழ்ச்சியடைகிறேன். அவர் திராவிட முன்னேற்றக் கழத்தின் சார்பிலே ஒரு காலத்திலே வேட்பாளராகக்கூட நிறுத்தப் பட்டிருக்கிறார். அந்தத் தேர்தல் பிரச்சாரத்திற்கு நான் பல இடங்களுக்குச் சென்று அவருக்காக தேர்தல் பிரசாரம் செய்திருக்கிறேன். எனவே, ஒரு தம்பி என்ற முறையில், உடன் பிறப்பு என்ற முறையிலேதான் அந்தக் காலத்திலே நான் அவரை நடத்தியிருக்கிறேன். அவரும் என்னிடத்திலே பழகியிருக்கிறார். இப்போதுகூட அவர் இந்த அவைக்கு வந்தபிறகு இந்த அரசுக்கு விரோதமாக எந்தச் செயலிலும் ஈடுபட்டார் என்று நான் குற்றம் சாட்டமாட்டேன். எனவே, ஒரு சுமுகமான சூழ்நிலை இருக்கிற காலகட்டத்திலே, இப்படிப்பட்ட ஒரு சம்பவம் கயத்தாறில் நடைபெற்றதும், உடனடியாக ஒரு தொலைபேசி மூலம் அவர் பேசியிருப்பாரேயானால் - எனக்கு வருகிற தொலைபேசிகளை என்னுடைய உதவியாளர்கள் எடுத்து, பிறகு செயலாளரிடத்திலே கொடுத்து, அதற்குப் பிறகு என் கைக்கு வந்து சேருமென்ற நிலை இல்லாமல் - இரவே தொலைபேசி மூலம் அவர் தொடர்பு கொண்டிருந்தால், விடியற்காலையிலே, தொடர்பு கொண்டிருந்தால், நானே தொலைபேசியை எடுத்து என்னவென்று கேட்டு, உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க முடியும்.

அதைச் செய்யாமல், அந்த அலுவலகத்திலே, அவர்கள் பூட்டுப்போட்டது போதாது என்று மேலே இன்னொரு பூட்டுப்

பூட்டு, அந்தப் பூட்டுகளுக்கு மாலை அணிவித்து, ஊராட்சி ஒன்றியத் தலைவருடைய பெயர் இருந்த பெயர்ப் பலகையை உடைத்து, சில வன்முறைக் காரியங்கள் அங்கே நடைபெற்றன. அதை, கிருஷ்ணசாமி முன்நின்று நடத்தினார் என்று நான் சொல்ல மாட்டேன்; நடந்தது இவற்றிற்குப் பிறகு, மாவட்ட ஆட்சிய ரிடத்திலே சென்று, கிருஷ்ணசாமி அவர்கள் முறையிட்டிருக் கிறார்கள். அவர்கள், இவரை உட்காரவைத்து நீண்டநேரம் பேசியிருக்கிறார். ஆனாலும் இவர் கேட்பதாக இல்லை அங்கே மறியல், ஆர்ப்பாட்டம் இவையெல்லாம் நடைபெற்றிருக்கின்றன. கயத்தாறிலே, இதற்கிடையிலே, வியாபாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கிருஷ்ணசாமியினுடைய ஆதரவாளர்களுள் சிலர், வியாபாரிகளை மிரட்டியதாகவும், கடைகளை மூடும்படி கட்டாயப் படுத்தியதாகவும் கண்டனம் தெரிவித்து அவர்கள் ஓர் ஊர்வலம் நடத்தி ஒரு புகார் செய்து, செய்த அப்புகாரின்மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இப்படியெல்லாம் விளைவுகள் ஒன்றன்பின் ஒன்றாக, அடுக்கடுக்காக, கிளைகிளையாகக் கூடி, ஒரு காரியம் நடைபெற்று விட்டது. அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். 'ஜாமீன்' கோரியிருக்கிறார் என்ற செய்திகூட, எனக்கு மறுநாள் காலையிலேதான் அறிவிக்கப்பட்டிருக்கிறது. உடனடியாக நான் சொன்னது; ஜாமீன் கோரினால், போலீஸ் தரப்பிலே அதை மறுக்காமல் உடனடியாக அவரை விடுதலை செய்து விடுங்கள்; நான் அவரிடத்திலே பேசிக் கொள்கிறேன்" என்றுதான் நான் சொன்னேன். அவர் விடுதலை செய்யப்படுகிற செய்தி தெரிந்தும் கூட, கடையநல்லூரில் 15 பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன. 15 பஸ்கள் கொளுத்தப்படும்போது - ஒரு பஸ் கொளுத்தப்படுகிற போது வேடிக்கை பார்த்திருக்கலாம்; 2 பஸ்கள் கொளுத்தப்படுகிற போது வேடிக்கை பார்த்திருக்கலாம்; 15 பஸ்கள் அங்கே பஸ்பம் ஆகிற நேரத்திலே - போலீஸ் இலாகா என்று ஒன்று, தமிழ்நாட்டிலே இருக்கவே தேவையில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்கத் தவறக்கூடாது. அங்கே நடைபெற்ற சம்பவம், தடியடிப் பிரயோகம் அல்லது துப்பாக்கிச் சூடு, இவையெல்லா வற்றையும் நியாயப்படுத்துகிறேன் என்று தயவு செய்து யாரும் கருதக்கூடாது. இவ்வளவு விளைவுகள் வராமல், ஆரம்பத்திலேயே

தடுத்திருக்க முடியும். அதுவும் சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள், அமளி, அமைதியின்மையான சூழ்நிலைகள் ஏற்படக்கூடாது என்பதிலே இந்த அவையிலே இருக்கிற எல்லா உறுப்பினர்களையும்போல, டாக்டர் கிருஷ்ணசாமி அவர் களுக்கும், அக்கறை உண்டு. அந்த அக்கறையின் அடிப்படையில், அவர் செயலாற்றியிருப்பாரேயானால், இவ்வளவு விபரீதங்கள் ஏற்பட்டிருக்காது. கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு பஸ்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

அவர்களுக்கு நஷ்டஈடு தரவேண்டும் என்றுதான் சொன்னார். நஷ்டஈடு தருவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. ஆனால் உண்மையிலேயே என்ன நிலைமையில் அது நடைபெற்றது என்பதை அறிய வேண்டும். அதற்கு முன்பு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விரோதமாக ஒரு செயல் அங்கே நடைபெற்றுவிட்டது என்று அவர் இங்கே சொன்னது யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. அவர் சொன்னதை அல்ல. அப்படி நடந்திருந்தால் கயத்தாறில் பஞ்சாயத்து யூனியன் சேர்மனும் மற்றவர்களும் நடந்திருந்தால் அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனென்றால் அண்ணல் அம்பேத்கர் பாடுபட்ட பிறகும், தந்தை பெரியார் பாடுபட்ட பிறகு, அண்ணா பாடுபட்ட பிறகும், பெருந்தலைவர் காமராஜர் பாடுபட்ட பிறகும், தமிழகத்திலே இன்னமும் இத்தகையை சூழ்நிலை இருப்பதை அது வேரோடு கிள்ளி எறியப்பட வேண்டும் என்ற அளவிலே நாம் அனைவரும் ஒரு முனைப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு துளியும் சாதி வெறியோ அல்லது ஆணவமோ தலைகாட்டுவதை நாம் ஏற்பதற்கு இயலாது. எனவே கிருஷ்ணசாமி போன்ற வளரக் கூடிய வாலிபர்கள் எதிர்காலத்திலே இந்தச் சமுதாயத்திலே தங்களுக்கும் ஒரு பெரும் அங்கம் உண்டு, பங்கு உண்டு என்கிற அளவிலே வளரக்கூடியவர்கள், வளர வேண்டுமென்று நான் என்றைக்கும் விரும்புகின்றவன். நான் ஏற்கெனவே முதலமைச்சராக இருந்தபோது சட்டமன்றத்திலே எதிர்வரிசையில் இருந்த காங்கிரஸ் நண்பர்களில் சில இளைஞர்களைப் பார்த்து நான் அப்போதே சொல்லியிருக்கிறேன். நீங்கள் எல்லாம் வளருவதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன். எப்படியோ

இளைஞர்கள் சமுதாயத்திலே என்ன எதிர்த்தாலும்கூட, இந்த ஆட்சியை எதிர்த்தாலும்கூட, அவர்கள் எந்தக்கட்சியாக இருந்தாலும் இளைஞர்கள், வாலிபர்கள் வளருவதை நான் விரும்புகிறேன் என்று சொல்லியிருக்கிறேன். ஏனென்றால் நாட்டுக்காக, மக்களுக்காக, சமுதாயத்திற்காக என்ற அந்த முறையிலே நான் சொல்லியிருக்கிறேன். அதைத்தான் கிருஷ்ணசாமி அவர்களுக்கும் நான் சொல்ல விரும்புகிறேன். நாமாக நம்மை ஓரளவுக்கு அடக்கிக்கொண்டு நம்முடைய உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டு நம்முடைய தலைமையிலே வருகின்றவர்கள் வேகமாக செயல்பட எண்ணுகிற நேரத்தில் அதை, கொதிக்கின்ற அந்த நெருப்பை தண்ணீர் ஊற்றி அணைக்க வேண்டுமே அல்லாமல் அதற்கு பெட்ரோல் ஊற்றிவிடக்கூடாது என்ற அந்த உணர்வோடு செயல்பட வேண்டும் என்பதைக் கூறி, நானும் இதைப் பற்றி அதிகமாக விளக்கமளித்து அதிலே பெட்ரோல் ஊற்றிவிட விரும்பாமல் தண்ணீர் ஊற்றி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (குறுக்கீடு).

சாயப்பட்டறை பிரச்சினை

உரை : 52 நாள் : 31.1.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற தலைப்பின் வாயிலாக திருப்பூர் வட்டாரத்திலே எழுந்துள்ள பிரச்சினை குறித்து இங்கே சில கருத்துக்களைக் கூறியிருக் கிறார்கள். திருப்பூர் வட்டத்திலே உள்ள தொங்குட்டிப் பாளையம், உகாயனூர், வடக்கு அன்னாசிப்பாளையம், பெருந்தொழுவு ஆகிய 4 கிராமங்களிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள கிணறுகளிலிருந்து நிலத்தடி நீரை திருப்பூர் நகரில் இயங்கி வரும் சாயப்பட்டரை மற்றும் தொழிற்சாலைகளுக்கும் டேங்கர் லாரிகள் மூலம் எடுத்துச் செல்வதால் இப்பகுதியில் நிலத்தடி நீர் குறைந்து, விவசாயம் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும், விரைவில் அந்தப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையும் ஏற்படக்கூடும் என்றும், எனவே தடை செய்யுமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் 26-11-1997 அன்று நள்ளிரவு முதல் லாரிகளில் தண்ணீர் எடுத்துச் செல்வதை தடுத்துநிறுத்தப் போவதாக தெரிவித்து துண்டறிக்கைகளை வெளியிட்டார்கள். இது தொடர்பாக 25-ந் தேதியே கோட்டாட்சியர் அவர்களும் மற்றும் இது சம்பந்தப்பட்ட கிராமவாசிகளும், தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்களும் கலந்து பேசுகிற ஒரு ஏற்பாடு செய்யப்பட்டு அந்தப் பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முடிய வில்லை. மீண்டும், மீண்டும் 2, 3 நாட்களுக்குப் பிறகு 27-ம் தேதி மாலை 5 மணி அளவில் திருப்பூர் வருவாய்க் கோட்ட அலுவலர் முன்னிலையிலே அந்தக் கூட்டம் நடைபெற்றது. அதில் விவசாயிகளும் கலந்து கொண்டார்கள். அந்தத் தொழிற்

சாலையை நடத்துகின்ற உரிமையாளர்களும் கலந்து கொண்டார்கள். அதிலும் சுமுகமான முடிவு எதுவும் ஏற்படாமல் திரு.சுப்பராயன் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல 4-2-1997 வரையில் ஒரு இடைவெளி தரப்பட்டு அதற்கு பிறகு ஒரு சுமுகமான முடிவுக்கு வரலாம் என்றும் அதுவரை லாரி மூலம் தொழிற்சாலைகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்ற தண்ணீரை தடுப்பதில்லை என்றும் விவசாயிகளும் பொதுமக்களும் உறுதி கூறியிருக்கிறார்கள்.

4-ஆம் தேதிக்குப் பிறகு என்ன பிரச்சினை என்பதுதான் திரு. சுப்பராயன் அவர்கள் இங்கே எழுப்பியுள்ள கவலை தோய்ந்த கேள்வியாகும். 4-ஆம் தேதிக்குப் பிறகு இந்தப் பிரச்சினை சுமுகமாக முடிவு பெற மாற்றுத் திட்டங்கள் ஏதாவது இருந்தால் அதை யோசிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலை வருக்கும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நண்பர் திரு. சுப்பராயன் போன்றவர்களும், சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றும் அந்த வட்டாரத்திலே உள்ள நண்பர்கள், பொதுப் பிரச்சினையிலே நாட்டம் கொண்டவர்கள், நகராட்சிமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், ஒன்றியத்தினுடைய தலைவர்கள் ஊராட்சிமன்றத் தலைவர்கள் எல்லாம் ஒருங்கிணைந்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும். ஏற்படுத்துவார்கள் என்று அரசு எதிர்பார்க்கிறது. மாற்று ஏற்பாடு எதுவாயினும்- இந்தச் சிரமத்தைத் தீர்ப்பதற்கு - அதை நிறைவேற்றுவதற்கும் அரசு தயங்காது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனிபாபா அவர்கள் படு கொலைக்கு ஆளானது குறித்தும், அதைத் தொடர்ந்து தாம்பரத்தில் ராம்ஜி என்று அழைக்கப்படுகின்ற ராமச்சந்திரன் படு கொலைக்கு ஆளானது குறித்தும், அதையொட்டி கீழக் கரையில் நடைபெற்ற சம்பவத்தில் கமாலுதீன் படுகொலைக்கு ஆளானது குறித்தும், தமிழகத்தில் சில இடங்களில் ஏற்பட்டுள்ள, பரபரப்பான, பதற்றமான சூழ்நிலைகளைக் குறித்தும் பத்து

உறுப்பினர்கள் அவரவர்கள் சார்ந்துள்ள கட்சிகளின் சார்பாகத் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள். தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ரங்கநாதன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக திரு.சிவபுண்ணியம் அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பாக திரு.லத்தீப் அவர்களும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு.தாமரைக்கனி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு.தீரன் அவர்களும், அகில இந்திய ஃபார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக திரு.சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு.மணி அவர்களும், பாரதீய ஜனதா கட்சியின் சார்பாக திரு. வேலாயுதன் அவர்களும், தேவேந்திர சங்கத்தின் சார்பாக திரு.கிருஷ்ணசாமி அவர்களும், ஜனதாதளக் கட்சியின் சார்பாக திரு. வெங்கடசாமி அவர்களும் வெளியிட்டுள்ள கருத்துக்களை ஆழமாக நாம் நோக்கும் போது, நடைபெற்றுள்ள சம்பவங்களுக்காக இந்த அரசாங்கத்தைக் குறை கூற வேண்டும் என்ற உள் நோக்கம் எதுவும் இல்லாமல் இச் சம்பவங்கள் இனி தமிழகத்தில் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள அனைவரும் பொறுப்பேற்க வேண்டும் என்ற உள்ளுணர்வோடு கூறப்பட்ட கருத்துக்களாகவே அமைந்துள்ளன. நம்முடைய நண்பர் திரு.வெங்கடசாமி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள், தமிழ்நாட்டில் இந்துக்கள், முஸ்லீம்கள் ஒருவரோடு ஒருவர் உறவுமுறை கொண்டாடி வாழ்ந்து வந்த சூழ்நிலையை எடுத்துக் காட்டி, இன்று அது பாழ்பட்டு வருவதையும் வேதனையோடு இங்கே தெரிவித்தார்கள். நெல்லை போன்ற மாவட்டங்களில் இந்து, முஸ்லீம் இருவரும் எந்த அளவிற்கு உறவு மனப் பான்மையோடு பழகுகிறார்கள் என்பதை நான் அறிந்திருக் கின்றேன். எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, 'மாமா' என்று அழைப்பதும், 'மாப்பிள்ளை' என்று அழைப்பதும், ஒருவருக்கொருவர் இனிமையாகப் பழகுவதும், தஞ்சை போன்ற மாவட்டங்களில் 'அண்ணாச்சி' என்று ஒருவரை ஒருவர் அழைத்துக் கொள்வதும் நாடே அறிந்த உண்மையாகும். ஆனால், அந்த உறவு முறை ஊனமுற்றுப் போகின்ற அளவிற்குக்

கடந்த பத்து ஆண்டுக்காலமாக - இங்கே வைக்கப்பட்ட பட்டியல், திரு. லத்தீப் அவர்கள்கூடச் சொன்னார்கள், ஒரு தரப்புப் பட்டியலைத்தான் முதலமைச்சர் வைத்தார் என்று. ஒரு தரப்பிலே சொல்லப்பட்ட கருத்துக்களுக்குப் பதில் அளிக்கின்ற வகையிலேதான் நேற்றைக்கு நான் 27 பேர், எந்த ஆண்டிலே யிருந்து எந்த ஆண்டு வரையிலே கொல்லப்பட்டார்கள் என்ற பட்டியலை வைத்தேன். திரு. லத்தீப் அவர்கள் இன்றைக்குக் கொடுத்த அந்தப் பட்டியலைப் பார்க்கும்போது இந்த 10, 12 ஆண்டுக் காலத்தில், தமிழ்நாட்டில் இரு தரப்பிலும், இந்துக்கள் எனப்படுவோர் தரப்பிலும், இஸ்லாமியர் தரப்பிலும் 50-க்கு, 60-க்கு மேற்பட்டவர்கள் படுகொலைக்கு ஆளாக்கப்பட்டிருக் கின்றார்கள். இவைகளையெல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய பெரும் பொறுப்பு அரசுக்கு மாத்திரமல்ல, இந்த அரசை ஒழுங்குற நடத்துகின்ற பொறுப்பை ஏற்றிருக்கின்ற எதிர்க் கட்சிகளுக்கும் உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். பழனிபாபா அவர்கள் நான் நேற்றைக்கே விளக்கிக்காட்டியதைப் போல எல்லா கட்சிக்காரர்களிடத்திலும் உறவும் கொண்டிருந்தார்; பகையும் கொண்டிருந்தார். எல்லா கட்சித் தலைவர்களையும் மதிக்கவும் கற்றிருந்தார்; அவர்களுடைய கருத்துக்களை மறுத்துப் பேசுகின்ற அந்தத் தன்மையையும் பெற்றிருந்தார். இங்கே, நம்முடைய திரு.தீரன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல் இருந்தாலும்கூட, அவருடைய வாழ்க்கை முறை நன்முறையில் அமைந்தது என்பதை நானும் கூட அறிவேன். மனித நேயப் பண்பு வளர வேண்டும் என்று அவர் கருதினாலும்கூட அவர் தலைமை தாங்கிய இயக்கத்திற்கு அவர் வைத்திருந்த பெயர் ''ஜிக்காத்'' என்பதாகும். 'மதத்தைப் பரப்பும் புனிதப் போரில் உயிர் நீத்தல்' என்பதுதான் ஜிக்காத் என்பதற்குப் பொருள் என்று நான் அறிகிறேன். ஆகவே, மதத்தைப் பரப்புகின்ற புனிதமான ஒரு காரியத்தை போர் என்று வர்ணித்துக்கொண்டு அதில் உயிர்நீத்திட வேண்டும் என்கின்ற அளவுக்கு ஒரு குறிக்கோளை வைத்துக்கொண்டுள்ள ஒரு பெயர், அவர் தலைமை தாங்கிய இயக்கத்திற்கு இருந்தது.

அதைப்போலவே, இந்துக்களில் தீவிரவாதிகளாக இருக்கின்றவர்களோ, அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆக இருந்தாலும் சரி, இந்து முன்னணியாக இருந்தாலும் சரி, அவர்களும் மதத்தைப் பரப்ப ஒரு போர் நடத்துவது என்ற குறிக்கோளோடு, அவர்களும் இந்தியாவிலே, தமிழகத்திலே இன்றைக்குப் பவனி வந்துகொண்டு இருக்கிறார்கள். இதன் விளைவாகத்தான், இருதரப்பிலும் உள்ள தீவிரவாத எண்ணம் கொண்ட இளைஞர்கள், வாலிபர்கள் அவர்களுடைய செயல்களால்தான் 10 ஆண்டுக் காலத்திலே தமிழகத்தில் ஒரு 50, 60 கொலைகள் இரு தரப்பிலும் விழுந்திருக்கின்றன என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. சிறு சிறு செய்திகள் தீப்பொறியாக மாறி, அந்தத் தீப்பொறியிலிருந்து ஒரு ஊரே, நகரமே எரிகின்ற அளவுக்கு விளைவுகள் ஏற்பட்டு அந்த வேதனையை இன்றைக்கு நாம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம்.

இப்பொழுது கொலை செய்யப்பட்டவர்கள் களத்திலே நின்று போராடி கொலை செய்யப்பட்டவர்களா என்றால், இல்லை. திரு. பழனிபாபா அவர்கள், நண்பர் வீட்டுக்குச் சென்று பேசிக்கொண்டு இருந்துவிட்டு திரும்புகின்ற நேரத்தில் கோடாலி கொண்டு அவர் கொல்லப்பட்டார். தாம்பரத்திலே ராம்ஜி என்கிற ராமச்சந்திரன் வழிமறிக்கப்பட்டு கொல்லப் பட்டிருக்கிறார். இதிலே வேடிக்கை என்னவென்றால், அவர் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்பதுகூட, பத்திரிகைகளில் குழப்பமான ஒரு செய்தியாக வந்துகொண்டு இருக்கிறது. அவர் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்திலே வலுவானவர் என்று ஒரு செய்தியும், திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக அவர் தன்னுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டார் என்ற ஒரு செய்தியும்கூட அடுத்தடுத்து வந்தது என்பதை எல்லாம் நீங்கள் அறிவீர்கள்.

பழனிபாபா எப்படி எல்லோரிடத்திலும் பழகக்கூடிய பண்பு வாய்ந்தவரோ, அவருடைய மேடைப் பேச்சுக்கும் செயலுக்கும் எப்படிப் பெரும் இடைவெளி இருந்ததோ, அதைப்போலவே தாம்பரத்திலே படுகொலைக்கு ஆளான ராமச்சந்திரன். அந்த வட்டாரத்திலே எல்லாக் கட்சிகளுடனும்

நட்புரிமையோடு பழகக்கூடியவர். எல்லோருடைய நன் மதிப்பையும் பெற்றவர். சுருக்கமாகச் சொன்னால், வேலா யுதத்தைப் போன்றவர் என்று எடுத்துக்கொள்ளலாம். அந்த அளவுக்கு இனிமையாகப் பழகக்கூடியவர். எல்லோருடைய அன்பையும், பேராதரவையும் பெறக்கூடிய அளவுக்கு அந்த வட்டாரத்திலே அவர் விளங்கிய காரணத்தினால்தான் அவருடைய சாவுச் செய்தியைக் கேள்விப்பட்டதும் எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் சென்று மலரஞ்சலி செலுத்தி, இடுகாட்டுக்குச் செல்கிற வரையிலும் அந்த ஊர்வலத்திலே நடந்து சென்று, அவருக்குத் தங்களுடைய மரியாதையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அதைப்போலவே, கீழக்கரையில் நடைபெற்ற அந்தச் சம்பவம், எப்படி அந்த சம்பவம் உருவானது என்றால், முஸ்லீம் இளைஞர்கள் ஒரு ஊர்வலத்தை நடத்த முற்பட்டார்கள். அதற்கு அனுமதி கொடுக்கிற நேரத்திலே அதிகாரிகள். 'இந்துக்களின் தெரு வழியாகச் செல்லக் கூடாது' என்ற ஒரு நிபந்தனையைப் போட்டார்கள். அதை அவர்கள் கேட்கவில்லை. திருவல்லிக் கேணியில் விநாயகர் ஊர்வலம், 'திருவல்லிக்கேணி சாலை வழியாகச் செல்லக் கூடாது, முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இடம்' என்று சொன்னபோது 'அதை மீறி ஊர் வலத்தை நடத்துவோம்'' என்று சொன்னார்கள். தடுக்கப் பட்டார்கள். நல்ல வேளையாக இங்கே அமைதிக் குறைவு எதுவும் ஏற்படாமலே விநாயகர் ஊர்வலம் முடிந்தது. அங்கே முஸ்லீம் இளைஞர்கள் கீழக்கரையில் இந்துக்களின் தெரு வழியாகத்தான் செல்வோம் என்று பிடிவாதம் பிடித்துச் சென்றார்கள். அவர்கள் செல்ல முற்பட்ட போது, முஸ்லீம் அல்லாதவர்கள், இந்துக்கள் எனப்படுவோர் அதைத் தடுத்திட முனைந்தார்கள். கைகலப்பு ஏற்பட்டது. பிறகு கலவரம் மூண்டது, தீ வைக்கின்ற அளவுக்கு நிலைமை உருவாயிற்று. கமாலுதீன் என்கின்ற ஒருவர், அந்தக் கடைக்குள்ளேயே கருகிச் சாகவேண்டிய ஒரு அவலம் ஏற்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் எண்ணிப்பார்க்கின்றபோது, இந்த மதவெறியை மாய்ப்பதற்கு, மாண்புமிகு உறுப்பினர்கள் -

நம்முடைய ரங்கநாதன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார், தாமரைக்கனியும் அதை வழிமொழிந்தார். மற்ற உறுப்பினர் களும் இங்கே பேசும்போது எடுத்துச்சொன்னார்கள். -ஜாதி மாநாடுகள் மதவெறியைத் தூண்டுகின்ற மாநாடுகள் இவை களில் அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ளக் கூடாது, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவைகளை ஊக்கப் படுத்தக் கூடாது என்றெல்லாம் சொன்னார்கள்.

நாட்டில் ஜாதி மாநாடு, மத மாநாடு நடைபெறுகிற தென்றால் சிறுபான்மையினர் என்ற அளவிலே இருக்கின்ற மக்கள் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள பெரும்பான்மையோர்களாக இருக்கின்ற பகுதிகளிலே உள்ள தலைவர்களை, அரசியல்வாதிகளை அழைப்பது என்பது ஒரு வாடிக்கையாகி விட்டது. இன்று, நேற்றல்ல, பல்லாண்டு காலமாகவே தமிழ்நாட்டிலே அந்த நிலைமை இருக்கிறது. கூடுமானவரையில் ஜாதி வெறியைத் தூண்டுகின்ற கூட்டம், மத வெறியைத் தூண்டுகின்ற கூட்டம் இவைகளில் கலந்துகொள்ளக் கூடாது என்று நானும் இங்கே சொல்லப்பட்ட கருத்துகளுக்கு ஒத்த கருத்துடையவன் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

தந்தை-பெரியார் அவர்கள், உத்தமர் காந்தி அடிகளை அவர் கொல்லப்படுவதற்கு முதல்நாள் வரையிலே எதிர்த்தவர், அவருடைய கொள்கைகளை சாடியவர். இன்றும் எனக்கு நினைவிருக்கிறது. காந்தியடிகள் கொல்லப்படுவதற்கு முதல் நாள் வந்த ''விடுதலை'' பத்திரிகையில் ''கந்த மூலாதிகளை சிபாரிசு செய்கிறார் காந்தி முனிவர்- அண்ணாதுரை தாக்கு'' என்று செய்தி வந்தது. முதல் நாள் வந்த ''விடுதலை'' பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்தது. அதற்கு மறுநாள் காந்தி கொல்லப்பட்ட பிறகு தந்தை பெரியார் அவர்கள் என்ன அறிக்கை விட்டார்கள் என்றால், இந்தத் தேசத்திற்கு காந்தி தேசம் என்று பெயர் வைக்க வேண்டுமென்று அறிக்கை விட்டார்கள் தந்தை பெரியார். காந்தியடிகள் கொல்லப்பட்டவுடன் வட புலத்திலும், அங்கிருந்து சிறிது சிறிதாக ஊடுருவி தென்புலத்திலும், குறிப்பாக தமிழகத்திலும் காந்தியடிகளைக் கொன்றவன்

ஒரு முஸ்லீம் என்ற ஒரு தவறான வதந்தி கிளப்பப்பட்டு, அந்த வதந்தி பரவுகிற நேரத்தில் ஈரோடு போன்ற இடங்களில் உள்ள முஸ்லீம்கள் தாக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, வானொலி நிலையத்தினர் தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் அழைத்து, வானொலியிலே பேசச்செய்து, காந்தியடிகளுடைய கொலைக்கு இஸ்லாமிய சமுதாயத்தினர் யாரும் காரணம் அல்ல என்ற செய்தி விளக்கப்பட்டு, தமிழகத்திலே அமைதி அன்று பாதுகாக்கப்பட்டது.

மறுநாள் ''விடுதலை'' பத்திரிகையிலே தலைப்புச் செய்தி காந்தியடிகளைக் கொன்றவன் ஒரு மராத்திய பிராமணன் என்ற செய்தி வந்தது. அன்றையதினம் நன்னிலத்திலே, சன்னா நல்லூரில் ஒரு பொதுக்கூட்டம். தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொள்கிற ஒரு பொதுக்கூட்டம். நானும் அந்தக் கூட்டத்திலே பேசுகிறேன். அப்போது எனக்கு வயது 24 அல்லது 25. நான் ''விடுதலை'' பத்திரிகையை வேதப்புத்தகமாகக் கருதுபவன். இப்போது வேதாபுத்தகமாகி விட்டது. (சிரிப்பு) அப்போது வேதப்புத்தகமாகக் கருதியவன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பத்திரிகையைப் படித்த நான் மாலையிலே, தந்தை பெரியார் அவர்களுக்கு முன்பு பேசும்போது சொன்னேன், மகாத்மா காந்தியடிகளைக் கொன்றவன் ஒரு மராத்திய பிராமணன் என்று கடுமையாகப் பேசினேன். அப்போதிருந்த துடிப்பின் காரணமாக கடுமையாகப் பேசினேன். நான் பேசி முடித்த பிறகு, ஐயா அவர்கள் பெரியார் அவர்கள் பேச எழுந்தார்கள். நான் பேசும்போதே பின்னால் சத்தம் கேட்டது. தடியைத் தட்டுகிற சத்தம் கேட்டது. இருந்தாலும் என்னுடைய வேகம், அப்போதிருந்த வேகத்தில் பேசி முடித்ததும், பெரியார் அவர்கள் எழுந்து சொன்னார். கருணாநிதி சொன்னார், காந்தியை கொன்றது மராத்தியப் பிராமணன் என்று இல்லை, காந்தியைக் கொன்றது துப்பாக்கி என்று சொன்னார், சொல்லிவிட்டுச் சொன்னார், மத வெறி என்ற துப்பாக்கி என்று பெரியார் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். கூட்டம் முடிந்து வேனில் வரும்போது நான் வேடிக்கையாக பெரியாரிடத்தில்- நாங்களெல்லாம் பழகிய காரணத்தால்; அப்படி பழகியவர்களில்

நான், பேராசிரியர் மற்றும் இன்றைக்கு இருக்கின்ற கழக நண்பர்கள் அனைவரும் அருகிலிருந்து பழகியவர்கள்- வேனில் வரும் போது சொன்னேன். ஐயா, நீங்கள் துப்பாக்கி என்று சொன்னீர்கள். அதுகூட இல்லை. தோட்டாத்தானே காந்தியைக் கொன்றது என்று சொன்னேன். என் முதுகில் தட்டி, அசடு, உனக்குத் தெரியாது, நீ பிராமணன் என்று சொல்லக்கூடாது என்றார். விடுதலையில் வந்திருக்கிறது அப்படி என்று சொன்னேன். அவன் போட்டதும் தப்புதான். இஸ்லாமியர் அல்ல என்று சொல்லிவிட்டோம். பிராமணன் என்று நீ பேசினால் நாளைக்கு பிராமணன் அக்கிரஹாரத்திலே கலவரம் நடந்தால் அதற்கு யார் பொறுப்பு என்று சொன்னார்கள். பிராமணனை, பார்ப்பனனைப் பற்றி பெரியார் கொண்டிருக்கின்ற அந்தக் கொள்கைக்கும், அவர்களுடைய வீடுகளில், வீதிகளில் கலவரம் இருந்துவிடக் கூடாது என்று அவர் எண்ணிய எண்ணத்திற்கும் உள்ள தொடர்பைத்தான் நான் உங்களுக்குக் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். அந்த அளவுக்கு ஒரு சிறு துளி வன்முறை ஏற்பட்டுவிடக் கூடாது. ஜாதிக்கலவரத்தால், மதக் கலவரத்தால் தமிழ்நாட்டில் அமைதி கெட்டுவிடக் கூடாது என்று கருதிய தலைவர் தந்தை பெரியார் அவர்கள். ஆனால் இன்றைக்கு சிறிய விஷயங்களானாலும், அதைப் பெரிதுபடுத்தி- இங்கே பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போன்று- அதன் காரணமாக பெரிய வம்புகள், அமளிகள், ரத்த ஆறுகள் ஓடுகின்ற நிலைகள் உருவாகுகின்ற அளவுக்கு நம்மை அறியாமலேயே நாம் இன்றைக்கு சென்று விடுகின்றோம். இதை எண்ணிப்பார்த்து எப்படி அரசுக்கு நாங்களெல்லாம் ஒத்துழைப்பு கொடுக்கிறோம் என்று சொன்னீர்களோ, அதைப் போல, ஜாதி, மத வெறியை இன்றைக்கு அடக்குவதற்கு, இதுபோன்ற கொலைகளைத் தடுப்பதற்கு இந்த அரசு உங்களோடு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது, நீங்கள் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இனியாவது தமிழகத்திலே இதுபோன்ற கொலைகள் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதைப்போல இந்தச் சட்டமன்றத்திலே

வீற்றிருக்கின்ற உங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. தீவிரவாத இயக்கங்களை நடத்திக்கொண்டிருக்கின்ற அந்த வாலிபர்களுக்கு அறிவுரை சொல்ல வேண்டிய பொறுப்பு, அதாவது, சமுதாயத்திலே இருக்கின்ற பெரியவர்களுக்கெல்லாம் இருக்கிறது என்பதை எடுத்துக் கூறி, இந்த அளவில் இந்த விளக்கம் போதுமானது என்று கருதி, நேற்றைக்கே நான் நீண்ட விளக்கத்தை அளித்துவிட்ட காரணத்தினால், இந்த விளக்கத்தை இத்தோடு நிறுத்திக்கொண்டு எந்தவிதக் கடுமையான நடவடிக்கை எடுத்தும் தமிழகத்திலே அமைதியை நிலைநாட்ட இந்த அரசு தொடர்ந்து பாடுபடும் என்ற சூளுரையை மாத்திரம் உரைத்து அமைகின்றேன், வணக்கம்.

கூட்டுறவு தேர்தல்கள்

உரை : 53 நாள்: 10.3.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே திரு.தாமரைக்கனி அவர்கள் விடுத்துள்ள சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடைய அறிக்கைகள், குறிப்பாக பால்பண்ணை மேம்பாட்டுத் துறை அறிக்கை, காவல் துறை அறிக்கை, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை இவைகள் எல்லாம் எனக்கு வந்துள்ளன என்றாலும்கூட, இவைகளைப் பற்றியெல்லாம் இங்கே விரிவாக எடுத்துரைக்க நான் விரும்பவில்லை. இது தேவையும் இல்லை என்று கருதுகிறேன். ஏனென்றால் அந்தத் தேர்தல் நடைபெறவில்லை மீண்டும் நடைபெற இருக்கின்ற தேர்தல்தான், தேர்தலில் இதுபோன்ற கலவரங்கள் ஏற்பட்டு, தேர்தலை மீண்டும் நடத்த வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கூறுகிற நேரத்தில் தேர்தலை ஒத்திவைத்துவிட்டு, பின்னர் இந்த அரசு தேர்தலை-கூட்டுறவுத் தேர்தலை- நடத்தியதற்குப் பல உதாரணங்கள் உள்ளன. குறிப்பாக சென்னை, தியாகராய நகரில் நடைபெற்ற ஒரு கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் சி.பி.எம். கட்சியினர், இதுபோன்ற ஒரு புகாரைச் சொல்லி தேர்தலை மீண்டும் நடத்த வேண்டும், முடிவுகளை அறிவிக்கக்கூடாது என்று கோரிக்கை வைத்ததை நான் ஏற்றுக்கொண்டு அந்தத் தேர்தலின் முடிவுகளை அறிவிக்காமல் மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டது. அந்தத் தேர்தல் முடிவுகள் தி.மு.க. சார்புடையவர்களுக்கு ஆதரவாக அமைந்தது- இரண்டாவதாக நடத்தப்பட்ட தேர்தல். எனவே, திருவில்லிப்புத்தூரில் நடைபெற்ற இந்தத் தேர்தலும் மீண்டும் நடைபெற இருக்கிறது; நடத்துவோம் என்ற உறுதியைத் தெரிவிக்கிறேன்.

அதிகாரிகளிடமிருந்து வந்துள்ள விவரங்களை மாத்திரமே வைத்துக்கொண்டு, நான் அந்த அடிப்படையிலே எதுவும் பேச விரும்பவில்லை. ஆனால் ஒரு தனியார் பேருந்தினுடைய ஓட்டுநர், தில்லை மூர்த்தி என்பவர் தன்னுடைய, தான் ஓட்டி வந்த பேருந்தின் மீது கல் எறிந்ததாக நண்பர் தாமரைக்கனி, அவரது மகன் இன்பத்தமிழன் மற்றும் 117 பேர் மீது புகார் கொடுத்து இருக்கிறார். அந்தப் புகார் திருவில்லிபுத்தூர் காவல் நிலையக் குற்ற எண் 140/97, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 147, 148, 341 ஆகியவற்றின் கீழ், பொதுச் சொத்து சேதத் தடுப்புச் சட்டம் 2 மற்றும் 3 பிரிவுகளின் கீழ், வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கலவரத்தில் ஈடுபட்ட சீனிவாசன் மற்றும் 13 பேர் 3-3-1997 அன்று கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த வழக்குகளில் முறைப்படி விசாரணை முடித்து, தாமரைக்கனி, அவருடைய மகன் இன்பத்தமிழன், மற்றும் 58 நபர்கள்மீது 4-3-1997 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் யாரும், தாமரைக்கனியோ அவருடைய மகனோ கைது செய்யப் படவில்லை என்பதை இந்த மன்றமே மிக நன்கு அறியும்.

தாமரைக்கனி அவர்கள் தன்னைத் தாக்கியது சம்பந்தமாக காவல் நிலையத்தில் ஏதும் புகார் கொடுக்கவோ மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெறவோ இல்லை என்றும் அதி காரிகளுடைய குறிப்பு எனக்குத் தெரிவிக்கின்றது. வாக்குவாதம் மோதலாக ஆகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். மேலும் இதனை விசாரித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்தத் தீர்மானத்தைப் பற்றி விவாதிப்பது தேவையில்லை என்று, மாண்புமிகு தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு. திரு.மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று உள்ள சூழ்நிலையில் பல்வேறு மாவட்டங்களில் அமைதியை உருவாக்குவதில் எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் நல்ல எண்ணத்தோடு,

முனைப்போடு பணியாற்றிக்கொண்டிருக்கிற நேரத்தில் இது பற்றி விரிவாக ஒரு விளக்கத்தைத் தந்து ஆறிவிட்ட புண்ணை கிளறிவிட நான் விரும்பவில்லை. இந்தச் சம்பவங்கள் இரு தரப்பாருக்கிடையிலே, இருபிரிவு வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடையே நடைபெற்று. இறுதியாக 3-3-1997 அன்று இரவு 11-30 மணிக்கு கோவில்பட்டி கோட்ட வருவாய் அதிகாரி, காவல் துறை துணைக்கண்காணிப்பாளர் மற்றும் கிராமத்தினுடைய முக்கிய பிரமுகர்கள் 16 பேர் அடங்கிய சமாதானக் குழு ஒன்றுகூடி பின்வரும் தீர்மானங்களை நிறை வேற்றியுள்ளது.-

எதிர்காலத்தில் மாணவர்கள் நடத்தை குறித்து ஒரு வரைமுறையை வகுக்க பள்ளிக்கூடம் திறப்பதற்கு முன்பாகவே ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்பது ஒரு தீர்மானம்.

இரண்டாவது 3-3-1997 அன்று நடைபெற்ற சம்பவம் குறித்து பதிவு செய்யப்பட்ட வழக்குகளில் சட்டப்படி நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது இன்னொரு தீர்மானம். அதன்படி இதுவரையிலே 8 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஒருவர் நீதிமன்றத்திலே சரண் அடைந்து உள்ளார். கயத்தாறில் காவல் துறையின் தக்க பாதுகாப்புக் குழு கூட்டப்பட்டு நிலைமை கண்காணிக்கப்படுகிறது. இப்போது அங்கே அமைதி நிலவிக்கொண்டிருக்கிறது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த மேல்நிலைப்பள்ளி மாண வர்கள் பிளஸ்-2, தேர்வு 12ஆம் தேதி எழுத வேண்டியிருப்ப தால், 10-3-1997 முதல், அதாவது இன்றுமுதல் பள்ளிக் கூடத்தைத் திறப்பதற்கு வழிவகை செய்யுமாறும், சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். இதற்காக 7-3-1997 அன்று மாலை 5.00 மணிக்கு கோவில்பட்டி வருவாய் கோட்ட ஆட்சியர், கோவில்பட்டி வருவாய் வட்ட ஆட்சியர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் இருதரப்பு பிரதிநிதி களையும், ஆசிரியர் பெற்றோர் பிரதிநிதிகளையும் அழைத்துப்

பேசி 10ஆம் தேதி பள்ளியைத் திறப்பது என்றும், தேர்வு நடைபெறும்போது தேர்வு எழுதும் மாணவர்களைத் தவிர மற்ற மாணவர்கள் யாரும் வரக்கூடாது என்றும், தேர்வு நடைபெறும் நாட்களில் அமைதிக் குழுவிலே இடம் பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும் பள்ளிக்கூடத்திற்கு கண்காணிப்புக்கு வரவேண்டும் என்றும், இருதரப்பினரும் ஒருவருக்கொருவர் சமாதானமாக நடந்துகொள்ள வேண்டும் என்றும் முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. தற்போது அங்கே எந்தவிதமான பிரச்சினையும் கிடையாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 54 **நாள் : 11.3.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் அவரைத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.கே. சுப்பராயன் அவர்களும், அதைத் தொடர்ந்து இந்திய தேசிய லீக் கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு.ம.அப்துல் லத்தீப் அவர்களும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சட்டசபையின் அதன் தலைவர் மாண்புமிகு திரு.எஸ்.திருநாவுக்கரசு அவர்களும் கூறிய இந்தச் செய்தி முற்றிலும் உண்மையானது. சந்தேகத்திற்கு இடமில்லாமல் உண்மையான செய்தியாகும். சற்று முன்புதான் இந்தச் செய்தி முழுமையாக எனக்குக் கிடைத்தது. காவல் துறைக்கும் நான் அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறேன் என்ற முறையில் காலையில் இந்தச் செய்தி எனக்கு ஒரு குறிப்பாகக் கிடைத்த போதிலும், முழுமையான செய்தி வரட்டும் என்று காத்திருந்து சற்று முன்பு காவல் துறையினர் - பெரிய அதிகாரிகள், டி.ஜி.பி. அவர்கள் மற்றும் சென்னை மாநகரப் போலீஸ் கமிஷனர், கூடுதல் ஆணையர் ஆகியோர் - இன்று விடியற்காலை கைப்பற்றப்பட்ட பயங்கரமான, ஆபத்து நிறைந்த, அழிவு சக்திகள் என்று அட்டியின்றிக் கூறக்கூடிய அந்தப் பொருட்களோடு தலைமைச்செயலகத்திற்கு வந்து, அந்தப் பொருட்களையெல்லாம் காண்கின்ற ஒரு நிலையை எங்களுக்கும் உருவாக்கித் தந்தார்கள். நானும், எதிர்க்கட்சித் தலைவரும், சுப்பராயன் அவர்களும், அப்துல் லத்தீப் அவர்களும், அவைகளைக் கண்டோம். அதுபற்றிய செய்திக்

குறிப்பை இங்கே நான் இந்த அவையில் தங்கள் அனுமதியோடு வைக்க விரும்புகிறேன்.

தமிழகக் காவல்துறை இயக்குநர் திரு.ராஜசேகரன் நாயர், ஐ.பி.எஸ். அவர்களின் அறிவுரைப்படியும், சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு.வி.கே.ராஜகோபாலன், ஐ.பி.எஸ். மற்றும் கூடுதல் ஆணையர் திரு.ரவி ஆறுமுகம், ஐ.பி.எஸ்., அவர்களின் ஆலோசனையின் பேரிலும், ரகசியத் தகவலின் பேரில் இன்று அதிகாலை சுமார் 3.00 மணி அளவில் சென்னை மாநகர இணை ஆணையாளர் திரு.முத்துக்கருப்பன், ஐ.பி.எஸ். அவர்களின் தலைமையில், துணை ஆணையாளர்கள் திரு.கலி முல்லாகான், ஐ.பி.எஸ்., திரு.சிதம்பரசாமி ஐ.பி.எஸ்., உதவி ஆணையாளர்கள் ஏ.சி., மௌரியா பாஸ்கரன், சாரங்கன் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் குழுக்கள் அமைக்கப் பட்டு, கொடுங்கையூர், முத்தமிழ் நகர், மேற்கு அவின்யூ, நிழற் சாலையில் ஒரு தனி வீட்டில் தங்கியிருந்த முஸ்லீம் தீவிரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் நடத்தப்பட்டது. அந்த வீட்டில் தங்கியிருந்த முகமதுகான் என்ற சிராஜூதீன் வயது 26 என்பவரைக் கைது செய்து அப்போது அந்த வீட்டிலிருந்து தப்பி ஓட முயன்ற சாகுல்ஹமீது என்ற அப்தார், வயது 22 என்ப வரையும் மடக்கிப்பிடித்து, அந்த வீட்டிலிருந்து அதிசக்தி வாய்ந்த பயங்கரமான வெடி குண்டுகளும், வெடி மருந்துகளும், ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டு உள்ளன.

அத்தீவிரவாதிகளால் பயன்படுத்தப்பட்டு வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. சம்பவ இடத்தை காவல்துறை இயக்குநர் அவர்களும், சென்னை மாநகர காவல் துறை ஆணையர் அவர்களும், கூடுதல் ஆணையர் அவர்களும் பார்வையிட்டுள்ளார்கள்.

கைப்பற்றப்பட்ட வெடிபொருள்கள் இதற்கு முன்பு சிந்தாதிரிப்பேட்டை, இந்து முன்னணி அலுவலகம்; சேத்துப் பட்டு, ஆர்.எஸ்.எஸ். அலுவலகம், ஆழ்வார்பேட்டை மணி ரத்தினம் வீடு; பிராட்வே, லைட் ஆஃப் ஏசியா ஓட்டல், மண்ணடி லக்கி ஓட்டல், எழும்பூர் இம்பீரியல் ஓட்டல் ஆகிய இடங்களில் வெடித்த வெடிகுண்டு; வகைகளோடு ஒத்து இருந்தன. கைது செய்யப்பட்ட நபர்களில் முகமதுகான்

என்பவர் அல் உமா அமைப்பாளர் திரு.பாட்சா- கோயம்புத்தூர் பாட்சாவின் சகோதரர் என்று தெரிய வருகிறது. பிடிபட்ட இருவரிடமும் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த அதிரடி சோதனையில் கலந்துகொண்ட அதிகாரிகள் கைப்பற்றப்பட்ட பொருட்களோடு தலைமைச் செயலகத்திற்கு வந்து அவற்றை என்னிடத்திலே காட்டியிருக் கின்றார்கள். அந்தப் பொருள்கள் இங்கே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரும், மற்றும் உறுப்பினர்களும் சுட்டிக்காட்டி யதைப்போல பிரம்மாண்டமான ஒரு கட்டிடத்தை இடிக்கக்கூடிய அளவிற்கு சக்திவாய்ந்த வெடிகுண்டுகளாகும். இங்கே ஒரு 88 பொருள்களுடையப் பெயர்கள் குறிப்பிடப் பட்டு இருக்கின்றன. அவைகளை எல்லாம் இங்கே கூறி நேரத்தை வீணடிக்க விரும்ப வில்லை. ஏனென்றால் இவைகள் எல்லாம் போலீஸ் அதிகாரியால் பத்திரிகையாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிகின்றேன். எனவே அவைகளையெல்லாம் சொல்ல விரும்பவில்லை.

என்னென்ன விதமான பாம்கள் இருக்கின்றன என்றால்- ஒரு டைம் பீஸ் இருக்கிறது. அதை யாராவது பயன்படுத்தினால், அது பயன்படுத்தும்போதே வெடித்து உயிர்க்கு ஆபத்தை உருவாக்கக்கூடிய ஒரு டைம்-பீஸ்; சைக்கிள் பெல் - அந்த சைக்கிள் பெல்லை பயன்படுத்தினால், அது உயிருக்கு ஆபத்தை உருவாக்கக்கூடிய அளவிற்கு வெடிக்கக்கூடியது. ஒரு மேடைக்குக் கீழே டிபன் கேரியரைக் கொண்டு வருபவர்போல், ஒரு விவசாய வேடத்தில் கையிலே டிபன் கேரியர் கொண்டுவருவது போல வந்து ஒருவர் அமர்ந்தால், அதை போலீசார் ஏதோ டிபன் கேரியர் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறார் என்று எண்ணி விட்டுவிட்டால் சிறிது நேரத்தில் அந்த டிபன் கேரியரிலே இருக்கிற பாம் வெடித்து- அதிலே மாத்திரம் 5½ கிலோ ஜல்லட்டின், டிபன் கேரியரில் வைக்கப்பட்டிருக்கிறது. அது வெடித்தால் அந்த மேடை மாத்திரம் அல்ல, ஒரு வீடே, அவர்கள் சொன்னதைப்போல, நான் குறிப்பிட்ட ஒரு கட்டிடத் தைச் சொல்ல விரும்பவில்லை-10 மாடிக் கட்டிடம் கூட இடிந்து நொறுங்கக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் சுட்டிக்காட்டி

யதைப் போல, பிடிபட்டது பெரிதல்ல, இனியும் பிடிபடாமல் தப்பித்துக்கொண்டு இருக்கின்ற பொருட்களும், ஆட்களும் பிடிபட வேண்டும். அதற்கு எல்லாக் கட்சிகளுடைய ஒத்து ழைப்பும் வேண்டும். இதுதான் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள மார்க்கமா என்பதை பிடிப்பட்டுள்ள அந்த இளைஞர்கள் மாத்திரம் அல்ல. பிடிபட வேண்டிய நிலையிலே உள்ள இளைஞர்களும், தீவிரவாதம் என்கின்ற கொள்கையை உள்ளத்திலே ஏந்தி, கரங்களிலே இதுபோன்ற பயங்கர ஆயுதங் களை ஏந்திக்கொண்டு இருக்கின்ற அந்த இளம் வாலிபர்களும் எண்ணிப்பார்க்க வேண்டும். லட்சிய ஈடேற்றத்திற்கு நாம் நம்முடைய உயிரைத் தியாகம் செய்யலாம்; ஆனால், பல பேரு டைய உயிரை மாய்த்துத்தான் அவர்களுடைய பிணங்களின் மீது நடந்து சென்றுதான் லட்சியக் கனியைக் கொய்ய வேண்டும் என்ற அந்த எண்ணத்தை யாரும், எந்தத் தரப்பிலே உள்ளவர் களும் கிஞ்சிற்றும் தங்களுடைய உள்ளத்திலே கொள்ளக்கூடாது என்ற வேண்டுகோளை மறுபடியும் நான் இந்த அவையிலே எடுத்துச்சொல்ல வேண்டியவனாக இருக்கின்றேன்.

இவர்கள் மீது எல்லாம் தக்கவாறு விசாரணை நடத்தப் பட்டு, வழக்கு நடைபெற்று, அவர்களுக்குரிய தண்டனைகளை நீதிமன்றங்கள் வழங்க இருக்கின்றன என்பதையும் தெரிவித்து, குறிப்பாக ஒரு பெரிய விபத்திலே இருந்து சென்னை மாநகரத்தி லேயோ அல்லது தமிழகத்திலே வேறு பல இடங்களிலேயோ நிகழ இருந்த பெரும் ஆபத்தைத் தவிர்க்கக்கூடிய அளவிற்கு-தற்காலிகமாகத்தான் என்று சொல்கிறேன், நிரந்தரமாகச் செய்ய வேண்டும் என்ற ஆசையோடு சொல்கிறேன் - ஈடுபட்டு இவ்வளவு பெரிய பயங்கரமான நிலையில் உள்ளவர்களைக் கண்டுபிடித்து, ஆயுதங்களைக் கைப்பற்றிய காவல்துறைக்கு இந்த அவையின் சார்பாக என்னுடைய நன்றியை, பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மதுவிலக்குப் பிரச்சினை

உரை : 55 நாள்:12.3.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள். திரு.ரங்கநாதன் அவர்கள், திரு.பழனிசாமி அவர்கள், திரு.தாமரைக்கனி அவர்கள், திரு.தீரன் அவர்கள், டாக்டர். கிருஷ்ணசாமி அவர்கள், தங்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அவர்களுடைய பொதுவான கருத்தில் எனக்கும் முழுமையான உடன்பாடு உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட ஆண்டி சிறுவள்ளூர் கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவராக உள்ள திரு.ஆறுமுகம் என்பவருக்கும்- அவர் எந்தக் கட்சி என்ற சர்ச்சையை நான் இப்போது எழுப்ப விரும்பவில்லை. அவர்கள் குறிப்பிட்டதைப்போல, நடுநிலை ஏடுகள் சிலவற்றில் அவர் முன்பிருந்த ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று குறிப்பிட்டிருக் கிறது. அதுப்பற்றி நான், கறாராக, ஆமாம் என்று சொல்லவோ, இல்லை என்று சொல்லவோ விரும்பவில்லை. அவர் சமூக விரோதிகளின் கட்சி என்று சொன்னால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஊரிலுள்ள மாதர் சங்கத்தின் தலைவியாகவும், பஞ்சாயத்து வார்டு உறுப்பினராகவும் உள்ள திருமதி ராணி என்பவருக்கும் அவருக்கும் கருத்து வேறுபாடு நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. ஆறுமுகத்தின் மாமியார் செல்வராணியும் அவரது குடும்பத்தினரும் சாராயம் விற்பதாக மொத்தம் 6 சாராய வழக்குகள் 26-2-1996 முதல் 10-2-1997 வரை பதிவு செய்யப்பட்டு செல்வராணி கைது செய்யப்பட்டு சிறைக்கும்

அனுப்பப்பட்டிருக்கிறார். சாராயம் விற்பதாக மாதர் சங்கத்தின் சார்பில் புகார் செய்ததால், பஞ்சாயத்துத் தலைவர் ஆறுமுகத் திற்கும், மாதர் சங்கத் தலைவி ராணிக்கும் விரோதம் மேலும் மேலும் மூண்டு எழுந்தது. 15-2-1997 அன்று திருமதி ராணியி னுடைய குழுவைச் சேர்ந்த ஏகாம்பரம் என்பவருடைய மனைவி சூர்யா, வீடு கட்டுவதற்காக வைத்திருந்த 500 பனை ஓலைகளை பஞ்சாயத்துத் தலைவர் ஆறுமுகத்தின் ஆட்கள் எரித்து விட்டதாகப் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் நேரடியாகச் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை செய்தார். இது குறித்து காஞ்சிபுரம் தாலுக்கா காவல் நிலையத்தில் குற்ற எண் 315/1997-இல் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 135-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. 19-2-1997 அன்று இரு தரப்பினரும் காவல் நிலையத்திற்கு வந்து சமாதானமாகப் போவதாக எழுதிக்கொடுத்துவிட்டுச் சென்றார்கள்.

பின்னர் உலகப் பெண்கள் தினம் கொண்டாடப்படுகிற நாளான 8-3-1997 அன்று ஆறுமுகத்தின் ஆதரவாளரான இராதா கிருஷ்ணன் என்பவர் ராணி வீட்டின் முன்பாக- மாதர் சங்கத் தலைவி- அந்த அம்மையார் வீட்டு முன்பாக வந்து தரக்குறைவாகப் பேசியதால் வாய்த்தகராறு ஏற்பட்டு, ராணி, பூபதி, ஆதி, வெங்கடாசலம் மற்றும் குப்பன் ஆகியோரை இராதாகிருஷ்ணனும் அவருடைய ஆட்களும் கம்புகளாலும், கைகளாலும் அடித்து காயம் ஏற்படுத்தி உள்ளார்கள். ஏடுகளில் அவர்கள் மானபங்கப்படுத்தப்பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால், அதிகாரிகள் தந்த குறிப்பில் அந்தச் சம்பவம் இடம் பெறவில்லை. இதுபற்றியெல்லாம் தீர விசாரிக்க நான் எண்ணியிருக்கின்றேன். இச்சம்பவம் குறித்து குற்ற எண் 412/97. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 147, 323-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை செய்து, இராதாகிருஷ்ணன், ஏழுமலை, ரவி, ஆகியோரை 10-3-1997 அன்று கைது செய்துள்ளார்கள். காவல்துறை நட வடிக்கை எடுக்கவில்லை என்று இங்கே குறிப்பிட்டது சரியல்ல. அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். பஞ்சாயத்துத் தலைவர்

ஆறுமுகம், அவரது மனைவி சாவித்திரி ஆகிய இருவரும் 10-3-1997 அன்று காஞ்சிபுரம் நீதிமன்றத்திலே சரணடைந்து விட்டார்கள். பின்னர் அவர்கள் ஜாமீனிலும் விடப்பட்டிருக் கிறார்கள். காயமடைந்த ராணி மற்றும் அவரது ஆட்களான வெங்கடாசலம், அன்னப்பன், ஆறுமுகத்தின் ஆட்கள் முளவு, அசோகன் ஆகியோர் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார்கள். காவல் துறையினர் மேலும் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார்கள். அங்கே எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் இருக்க தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கள்ளச் சாராயம் தமிழ்நாட்டில் பெருமளவிற்குப் பெருகி யிருந்த நிலை மாறி, இன்றைக்கு ஓரளவு அது குறைந்துகொண்டு வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. மாதந்தோறும் பல கள்ளச்சாராய வியாபாரிகள் கைது செய்யப்படுவதும், கள்ளச் சாராயப் பானைகள் கைப்பற்றப்படுவதும், அதுவும் லட்சக் கணக்கான லிட்டர் சாராயம், ஊறல் இவைகள் எல்லாம் போலீசாரால் கைப்பற்றப்படுவதும் நீங்கள் பத்திரிகைகளிலே பார்த்துக்கொண்டு வருகிற செய்திகளாகும். இருந்தாலும்கூட, எல்லாத் துறைகளிலும் சிலர் தவறுடையவர்களாக இருப்பார்கள், மக்கள் நல விரோதிகளாக இருப்பார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டாக காவல் துறையிலும்கூட சிலர் இருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் காவல் துறைக்கும் அமைச்சர் என்பதற்காக நீங்கள் சொல்லுகின்ற குற்றச்சாட்டுகளை மறுத்துத்தான் தீர வேண்டுமென்று, மறுக்கின்ற மனப்பான்மை உள்ளவன் அல்ல. எனவே, அப்படிப்பட்ட ஒரு சிலரும் திருந்த வேண்டும் என்பதிலே உங்களைப்போலவே நானும் அக்கறை உடையவன். அதனால்தான் இப்போதுகூட, சிலர் 'பார்' நடத்து கிறார்கள். ஐ.எம்.எஃப்.எல். வியாபாரத்தை நடத்த உரிமம் பெற்றவர்கள் அந்த இடத்திலே 'பார் நடத்தி, அங்கே உட்கார்ந்து குடித்துவிட்டுப் போவதற்கான வசதிகளையெல்லாம்கூடச் செய்து கொடுக்கிறார்கள். இதுபற்றிக்கூட என்னிடத்திலே யோசனை தெரிவிக்கப்பட்டது. இப்படி 'பார்' நடத்துவதால் அங்கேயிருக்கின்ற போலீஸ் ஸ்டேஷன்களுக்கு ஐந்தாயிரம்,

ஆறாயிரம், ஏழாயிரம் என்று கொடுக்கப்படுகிறது. இந்தப் பணம் போலீஸ் ஸ்டேஷன்களுக்குப் போவதற்குப் பதிலாக கோட்டைக்கே, நேரிடையாக கருவூலத்திற்கு வர, 'பார்' நடத்தவே நீங்கள் உரிமை கொடுத்துவிட்டால் என்ன என்றுகூட என்னிடத்திலே சிலர் சொன்னார்கள். நான் சொன்னேன். அது மதுவிலக்கை எப்படியாவது, ஒரு கட்டத்திலாவது வெற்றி கரமாக நடத்த வேண்டும் என்பதற்குப் பாதகமாக அமைந்து விடும் என்பதால், அதை ஏற்கவில்லை. அதற்குப் பதிலாகத் தான், சமீபத்திலே பத்திரிகைகளிலே வந்த விளம்பரங்களை. டி.ஜி.பி. அவர்கள் முகவரியிட்டு வந்த விளம்பரங்களைப் பார்த் திருப்பீர்கள். எங்கும் ஐ.எம்.எஃப்.எல். விற்பனை செய்கிற வர்கள் 'ஒயின்' ஷாப்புகளுக்குப் பக்கத்தில் 'பார்' வைக்கக் கூடாது என்றும்.அப்படி 'பார்' வைத்தால் அவர்களுடைய உரிமம் ரத்து செய்யப்படும் என்றும், அதுமாத்திரமல்ல, சட்டத்தை மீறி, விதியை மீறி, 'பார்' நடத்தப்பட்டால், அந்த 'பார்' நடத்தப்பட்ட இடத்திற்கு அருகே, சரகத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் உள்ள அதிகாரிகளும் நடவடிக்கைக்கு உள்ளாவர் என்றும் (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படித்தான் நடவடிக்கை எடுக்க முடிகிறது.

நான் சாராயப் பானைகளை நோக்கித் துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொன்னேனே தவிர, சாராய வியாபாரிகளை நோக்கி துப்பாக்கிக் குண்டுகள் பாயும் என்று சொல்லவில்லை. ஏனென்றால். இங்கே நாம் மதுவிலக்குத் திட்டத்திலே ஆர்வமாக இருக்கிறோம். வேறு சில மாநிலங் களிலே அதைப்பற்றிக் கவலைப்படாமல், மது அங்கெல்லாம் தாராளமாக விநியோகிக்கப்படுகிறது. எனவே, இந்தியாவிலே- 'ஏக இந்தியா' என்று சொல்லப்படுகிற இந்தியாவிலே- ஒரு மாநிலத்திலே மது தாராளமாக இருக்கிற அதே சூழ்நிலையில், இங்கே நாம் கள்ளச் சாராயம் விற்றார்கள் என்பதற்காக அவர்களைச் சுட்டுக் கொன்றுவிட முடியாது. பானைகளைத்தான் சுட முடியும். அவர்களைச் சுட முடியாது. ஆனால், அவர்களை எந்த முறையில் அளவோடு தண்டிக்க வேண்டுமோ அந்த

வகையிலே தண்டிக்க இந்த அரசு தயாராக இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைத்தால் கள்ளச் சாராயத்தைத் தமிழ்நாட்டிலிருந்து நிச்சயமாக ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எல்லோரும் என்றால், இங்கே இருக்கின்ற எல்லோரும் மாத்திரம் அல்ல, காவல் துறை உட்பட எல்லோரும் ஒத்துழைத்தால் கள்ளச் சாராயத்தை ஒழித்துவிட முடியும். கள்ளச் சாராயத்தினுடைய அடிப் படையிலேதான் காஞ்சிபுரத்திலே இந்தத் தகராறு நடைபெற்று இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் பயன்பட்டது என்ற அளவில் இத்துடன் இதை விட்டுவிடலாம் என்று தலைவர் அவர்களே, தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனவர்கள் பிரச்சினை

உரை : 56 நாள்:15.3.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சினை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பில் திரு. பழனிசாமி அவர்களும், அ.தி.மு.க. சார்பில் திரு.தாமரைக்கனி அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் மணி அவர்களும் இங்கே சில கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கின்றார்கள். இவை தொடர்ந்து நடைபெற்று வருகின்ற, நம்முடைய உள்ளத் திற்கு துன்பம் தருகின்ற நிகழ்ச்சிகளாகவே இருந்து வருகின்றன என்பதில் இருவேறு கருத்துக்கு இடம் இல்லை. இதுபற்றி மத்திய அரசோடு, குறிப்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.குஜ்ரால் அவர்களோடு நான் 4,5 முறை பேசி இருக்கின்றேன். நான் பேசி வலியுறுத்தியதன் காரணமாக, அவர்கள் இலங்கை அரசோடு தொடர்பு கொண்டார்கள். அதற்குப் பிறகு இலங்கைக்கே சென்று அங்கு உள்ள அதிகாரிகளை, செயலாளர், தலைமைச் செயலாளர் மற்றவர்களை எல்லாம் இங்கே அனுப்பி வைத்து, அரசு அதிகாரிகளோடும் என்னோடும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்ற வாய்ப்பை யும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அப்போது இந்த எல்லை குறித்த வரைபடங்களை எல்லாம் எடுத்துவைத்துக்கொண்டு விவாதம் நடத்தி, இதற்கு ஒரு சுமுகமான முடிவு காண வேண்டும் என்று கூறப்பட்டது. அதைத் தொடர்ந்து முதல் கட்டமாக, சிறைப்பிடிக்கப்பட்டு இருக்கின்ற மீனவர்களை விடுகின்றோம்; ஒவ்வொரு கட்டமாகத்தான் விடுவிக்க முடியும்; ஏனென்றால் அவர்கள் மீது பல வழக்குகள் விசாரணையிலே இருக்கின்றன; ஒவ்வொரு கட்டமாக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 15 பேர்-

பிச்சை ஆம்ஸ்ட்ராங், பதிநாதன், சகாய அந்தோணி, அந்தோணிசாமி, தர்மராஜ், அடைக்கலம், சேஷப்பூபால நாயர் டெரிகோஸ், ஆறுமுகம் நாகராஜ், தன்னிவாஸ், முனியாண்டி ரவி, பாண்டி பெரியையா, கே.முத்துராமலிங்கம், பாண்டி சீனி, சுப்பையா சுரேஷ், கே.பி. பாலசுப்பிரமணியம் என்ற 15 பேரும் விடுவிக்கப்பட்டார்கள்; கச்சத் தீவுக்கு அருகிலே உள்ள நடுக் கடலில் இலங்கை அரசால் அவர்கள் விடுவிக்கப்பட்டு, தமிழ் நாடு அரசின் சார்பில் அவர்கள் கரைக்கு அழைத்துவரப் பட்டார்கள்.

இரண்டாம் கட்டமாக, 5-3-1997 அன்று முத்து, செந்தூரன் ஆகிய இரண்டு பேர் விடுவிக்கப்பட்டார்கள். மூன்றாம் கட்டமாக, 11-3-1997 அன்று சின்னையன், ரவி வீரபத்திரன், அருள், சந்தான ராஜா என நான்கு பேர் விடுவிக்கப் பட்டார்கள். விடுவிக்கப்பட்ட அனைத்து மீனவர்களையும், இராமேஸ்வரம் மண்டல மீன்துறை இயக்குநரும், இந்தியக் கடலோரக் காவல் படை அலுவலர்களும் பாதுகாப்பாக மண்டபம் கரைக்கு அழைத்து வந்தார்கள். எஞ்சியுள்ள 24 மீனவர்களையும் அங்கே பிடித்து வைக்கப்பட்டுள்ள எட்டுப் படகுகளையும் இந்தியாவிற்குத் திருப்பிக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக, இந்திய தூதரகம் மூலம் இடைவிடாமல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

அவர்களைக் கேட்டால், அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட எல்லையைத் தாண்டி வருவதாகச் சொல்கின்றார்கள். சில நேரங் களில் மீன் பிடிக்கின்ற தொழிலுக்காக மாத்திரம் வரவில்லை. வேறு சில காரியங்களும் நடைபெறுகின்றன என்று சொல்கின்றார்கள். அதில் எது உண்மை என்று நம்மால் யூகிக்க முடியவில்லை. இருந்தாலும், அப்படி சொல்கின்றவர்களைப் பற்றி உடனடியாக இந்திய அரசுக்கு அறிவித்து, அவர்கள் மீதுள்ள குற்றம் என்ன என்பதையெல்லாம் விளக்கிச் சொன்னால் நமக்கும் காரணங்கள் தெரிவதற்கு ஏதுவாகும். அப்படியும் செய்யாமல் இதுபோன்ற தொல்லைதரும் நிகழ்ச்சியை, துயரம் தரக் கூடிய நிகழ்ச்சியை அடிக்கடி இலங்கையிலே உள்ள சிங்களப் படையினர் செய்து வருவது வருந்தத்தக்கது, வேதனைக்குரியது. இதைப் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்

கின்றோம். இந்த அவையிலும் நாம் பலமுறை பேசியிருக் கின்றோம். இருந்தாலும் இது தொடர்ந்து நடக்காது என்பதற்கு அறிகுறியாகத்தான், முதல் கட்டம், இரண்டாவது கட்டம், மூன்றாவது கட்டம் என்று பலர் அங்கே கடத்தப்பட்ட அல்லது சிறை வைக்கப்பட்ட பலர் இதுவரையிலும் விடுவிக்கப்பட்டு வருகிறார்கள். மற்ற 24 பேரையும் விடுவிக்க வேண்டுமென்று நாம் இந்தியத் தூதரகத்தோடு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

கச்சத்தீவை மீட்பதற்காக தீர்மானம் இங்கே நிறை வேற்றப்பட வேண்டும் என்று திரு.தாமரைக்கனி சொன்னார். 1991ஆம் ஆண்டு ஒரு குரல் கேட்டது, கோட்டை முகப்பிலே யிருந்து. கச்சத்தீவை மீட்டே தீருவேன் என்று ஒரு குரல் கேட்டது. அதற்குப் பிறகு ஆறு வருடங்கள் ஆகிவிட்டன, கச்சத்தீவு மீட்கப்படவில்லை. கச்சத்தீவை மீட்பது என்பது, ஒரு மாநில அரசினுடைய காரியம் அல்ல.

ஏற்கெனவே 1974ஆம் ஆண்டு வாக்கில், கச்சத்தீவை இலங்கைக்குத் தருவது என்ற முடிவை மத்திய அரசு எடுத்த போது, அன்றைக்கு இருந்த மாநில அரசான திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்குப் பெரும் எதிர்ப்பைத் தெரிவித்தது. தமிழ்நாட்டிலே உள்ள எல்லா கட்சிகளுமே எதிர்ப்பைத் தெரிவித்தன என்பது வரலாற்று உண்மையாகும். இருந்தபோதிலும், சில காரணங்களைச் சொல்லி கச்சத் தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டுவிட்டது. அப்படி வழங்கப்பட்ட நேரத்திலேகூட, கச்சத்தீவிலே மீன் பிடிக்கும் உரிமை, யாத்திரை செல்கின்ற உரிமை இவை எல்லாம் அதிலே இருக்க வேண்டு மென்று தமிழக அரசு கடைசியாக இதையாவது ஏற்றுக்கொள் ளுங்கள் என்று கண்டிப்பாக வலியுறுத்தித் தெரிவித்தபிறகு, அந்த ஷரத்துக்கள் அதிலே சேர்க்கப்பட்டன. பின், கழக ஆட்சி 1976-ல் கலைக்கப்பட்டபிறகு இடையில் வந்த கவர்னர் ஆட்சியில் ஏதோ ஒரு கடிதப் பரிவர்த்தனை மூலமாக அந்த ஷரத்து அதிலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது என்று சொல்லப்

பட்டு, அந்த உரிமை பறிபோய் விட்டது என்பதை நாட்டுமக்கள் நன்றாக அறிவார்கள்.

இப்போது கச்சத்தீவைத் திரும்பப் பெறாவிட்டாலும் கூட, அந்த உரிமைகளை ஷரத்தாக அந்த ஒப்பந்தத்தில் சேர்ப்பதற் கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்று மாநில அரசின் சார்பாக நான் பலமுறை நேரிலே எடுத்துச்சொல்லியிருக்கிறேன். கடிதம் மூலமும் இந்த நிலைகள் தொடரக்கூடாது என்பதை வலியுறுத்தி, மத்திய அரசுக்குச் சொல்லி வருகின்றோம்.

இன்று எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் மூலமாக மீண்டும் மத்திய அரசை இந்தத் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இதுகுறித்து வலியுறுத்துகிறோம் என்பதையும், எடுத்துக் கூறி, இது சிங்கள அரசின் கவனத்திற்கும் கொண்டுவரப்படுகிறது என்பதையும் எடுத்துக்கூறி இனியும் இது தொடராமல் பார்த்துக் கொள்ள வேண்டும், நம்முடைய மீனவர்களும் மீன் பிடிப்பதற்காக மாத்திரமே செல்ல வேண்டும் என்றும் எடுத்துக்கூறி இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறுத்துகின்றேன்.

சந்தனக் கிடங்கில் தீ விபத்து

உரை : 57 நாள்:17.3.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், திருப்பத்தூரிலுள்ள சந்தனமரக் கூடுதல் கிடங்கில், 16-3-1997, ஞாயிற்றுக்கிழமை, மாலை நாலே முக்கால் மணிக்கு ஒரு பெரிய தீ விபத்து திடீரென்று ஏற்பட்டது. இந்தக் கிடங்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை சாலையோரத்தில், திருப்பத்தூர் நகரத்தில், 8 ஏக்கர் பரப்பளவிலேயுள்ள ஒரு இடத்தில் அமைந் துள்ளது. தற்போதைய கணக்கீட்டின்படி, இந்தத் தீ விபத்தால் ஏற்பட்ட இழப்பு, சுமார் 68 கோடி ரூபாய் என்று கணக்கிடப் பட்டுள்ளது. இது சற்று உயரவும் செய்யலாம்; அல்லது குறையவும் கணக்கிடப்படலாம். தற்போது, 19 தீயணைப்பு வாகனங்கள், தீயணைப்புப் பணியிலே தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றன என்று நேற்று இரவு செய்தி வந்த போதிலும், இன்று காலையிலே வந்துள்ள செய்தியின்படி, அந்தத் தீ ஓரளவுக்குக் கட்டுப்பாட்டிற்கு வந்திருக்கிறது; இனி பரவ வழியில்லை என்ற அளவில் வந்துள்ளது. வனத் துறை அமைச்சர், வனத் துறைத் தலைவர், வனப் பாதுகாவலர், மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் மற்றும் காவல் துறை சரக துணைத் தலைவர் டி.ஐ.ஜி. காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் இந்தக் கிடங்கில் தற்போது தீயணைப்பு வேலை களைக் கண்காணித்து, மேற்பார்வையிட்டு வருகிறார்கள்.

மாலை சுமார் நாலே முக்கால் மணியளவிலே ஏற்பட்ட தீ விபத்து, திடீரென்று கிடங்கின் பல பகுதிகளில் ஏற்பட்டதால், தீ கிடங்கு முழுவதும் வேகமாகப் பரவியது. வனச் சரக அலுவலர், இத் தீ விபத்து பற்றி அறிந்தவுடன், அருகிலேயுள்ள

தீயணைப்பு நிலையத்திற்குத் தகவல் தெரிவித்து தீயை அணைக்க ஏற்பாடு செய்தார். மாவட்ட வன அலுவலர், திருப்பத்தூர் கோட்டம் மற்றும் வனப் பாதுகாவலர், வேலூர் வட்டம் ஆகியோர் தருமபுரியிலே முக்கியமான ஒரு குழுக் கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கையில், இத்தகவலைத் தெரிந்து, சுமார் 8 மணியளவுக்கு, அந்த இடத்திற்கு வந்து சேர்ந் தார்கள். மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர், வடாஆற்காடு அம்பேத்கர் மாவட்டம் அவர்களும் இரவு 10 மணியளவிலே அங்கு வந்து சேர்த்தார். வனத் துறை தலைவர். இவ்விரவம் கிடைக்கப் பெற்றவுடன், சென்னையிலிருந்தவர். அந்த இடத் திற்கு இரவே விரைந்தார். வனத் துறை அமைச்சர் அவர்கள் உடனே அநத் இடத்திற்கு விரைந்து, தீ அணைக்கும் பணியை மேற்பார்வையிட்டார்; அவர், கோவையிலிருந்து அந்த இடத்திற்கச் சென்றார். இந்தச் சந்தன மரக் கிடங்கில், சுமார் 65 ஆயிரம் சந்தன மரங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. இத் தீ விபத்தில் சுமார் 1375 டன் எடையுள்ள சந்தனக் கட்டைகள் எரிந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பு, சுமார் 62 கோடி ரூபாய் ஆகும். குற்ற வழக்குகளில் கைப்பற்றப் பட்ட சுமார் 350 டன் சந்தன மரங்களும் இவற்றுள் அடங்கும். இந்தக் கிடக்கில் சேமித்து வைக்கப்பட்டுள்ள சுமார் 3300 டன் கொண்ட வெள்ளடை சந்தன மரங்கள்- சிராய்கள்- அவைகளும் எரிந்து சாம்பலாயின. இதன் மதிப்பு சுமார் 6 கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆக மொத்தம், இந்த விபத்திலே ஏற்பட்ட இழப்பு 1375 டன் சந்தன மரங்கள், 62 கோடி ரூபாய்; வெள்ளடை சந்தன மரம் 3300 டன்; மதிப்பு 6 கோடி ரூபாய். இந்தக் கோர விபத்திலிருந்து வெகுசில சந்தன மரங்களை மாத்திரமே மீட்டெடுக்க முடிந்திருக்கிறது. மீட்கப்பட்ட மரங்களை மதிப்பிடும் வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திருப்பத்தூர் பிரதான சந்தனமரக் கிடங்கில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 106 கோடி ரூபாய் மதிப்புள்ள 2101 டன் சந்தன மரங்கள் பாதுகாப்பாகவே இருக்கின்றன. இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. நேற்று மாலை இந்தச் செய்தி எனக்குக் கிடைத்தவுடன் பொதுப் பணித் துறை அமைச்சரையும் திருப்பத்தூருக்கு நேரில் சென்று பார்த்து வர அனுப்பி வைத்திருக்கிறேன். இன்று காலையில் வந்த செய்தி வரை. இன்னும் தீ எரிந்துகொண்டிருப்பதாகவும்,

ஆனால் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது. விபத்துக்கான காரணங்களைப் பற்றி பத்திரிகைகளிலும் அதை அடிப்படையாகக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களும் தகவல்களை இங்கே கூறியிருக்கிறார்கள். நான் எந்தக் காரணத்தையும் தள்ளிவிட விரும்பவில்லை. எல்லா காரணங்களையும் சிந்தித்துப் பார்த்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீதி விசாரணை வைக்கக்கூடிய அளவுக்கு நிலைமையிருந்தால் அதையும் நாங்கள் அலட்சியப்படுத்தமாட்டோம் என்பதையும் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு.ஞானசேகரன் அவர்கள் உடனடியாக தீயணைக்கும் வாகனங்கள் அங்கே செல்லவில்லை என்று ஒரு குற்றச் சாட்டைக் கூறியிருக்கிறார்கள். அதுவும் உண்மையா என்பதை அறியவேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.சிவபுண்ணியம் அவர்கள் இப்படி நடைபெற்று விட்ட காரணத்தால் 25 இலட்ச ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை வருமா, வராதா என்ற சந்தேகத் தைக் கிளப்பினார். சந்தேகப்பட அவசியமே இல்லையென்று நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ.இ.அ.தி.மு.க.- வைச் சேர்ந்த திரு.சுந்தரம் அவர்கள் பேசும்போது அது இன்சூரன்ஸ் செய்யப்பட்டிருக்கிறதா என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். இன்சூரன்ஸ் என்பது ready for sale- விற்பனைக்குத் தயாராக ஆக்கப்பட்ட அளவுக்குப் பயன்படுத்தப்பட்ட அந்த மரங்களுக்குத்தான் இன்சூரன்ஸ் செய்வது வழக்கம். இவையெல்லாம் அந்த அளவுக்கு பயன்படுத்தப்படாத மரங்கள், காட்டிலேயிருந்து வெட்டப்பட்டு வந்த மரங்கள், அல்லது வெட்டிக் கொண்டுபோகும்போது கண்டுபிடிக்கப்பட்ட மரங்கள் என்ற அளவிலே விற்பனைக்குத் தயாராகாத நிலையிலே உள்ள மரங்கள்தான் இவை. எனவே இவை இன்ஸ்சூரன்ஸ் செய்யப்படவில்லை என்றும் For sale என்ற அளவிலே அதற்குத் தயாராக இருக்கும் மரங்கள்தான் இன்சூரன்ஸ் செய்யப்படும் என்றும் நான் அறிய வருகின்றேன்.

திட்டங்கள் எதுவும் இதனால் பாதிக்கப்பட்டுவிடுமோ என்று திரு.கணேசன் அவர்கள் இங்கே கவலை தெரிவித்தார்கள். திட்டங்கள் பாதிக்கப்படாது. எப்போதும் நல்ல காரியங்கள் செய்யும்போது இப்படிப்பட்ட இடையூறுகள் வரும் என்பதை யும் எண்ணிப் பார்த்துத்தான் நல்ல காரியங்களுக்கு நாம் திட்டமிடுகின்றோம். ஆகவே அந்தக் குறிக்கோளிலிருந்து பின் வாங்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய சி.பி.எம்.கட்சியைச் சார்ந்த திரு.மணி அவர்கள் எல்லாவற்றையும் முன்பே ஜாக்கிரதையாக பத்திரப் படுத்தி இருக்கலாம் அல்லது வழக்கிலே உள்ளவைகளை எல்லாம் ஒரு விலையைப் போட்டு அதையெல்லாம் பட்டுவாடா செய்திருக்கலாம் என்று சொன்னார்கள். அது இயலாத காரியம். ஏனென்றால் நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருந்தால் அந்த வழக்குக்கு உட்பட்ட பொருள்களை நாம் உடனடியாகப் பைசல் செய்துவிட முடியாது. இருந்தபோதிலும் அந்தக் கிடங்கு அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஆசியாவிலேயே மிகப் பெரிய கிடங்குகளிலே ஒன்று. அந்தக் கிடங்கிலே அது ஒரு கிளைதான். மற்ற பெரிய கிடங்குகள் எல்லாம் தப்பித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தீ விபத்து ஏதோ ஒரு சிறு பொறி வந்து ஏற்பட்டிருக்குமோ என்று என்னாலே எண்ணவே முடியவில்லை. ஏனென்றால் சந்தன மரங்கள் இலேசில் ஒரு சிறு பொறி பட்டதும் பிடித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு இல்லை. சந்தனக் கட்டைகளை வைத்து சடங்களைக் கொளுத்தும் போதுகூட முதலில் நெய்யோ, மண்ணெண்ணெயோ அல்லது பெட்ரோலோ ஊற்றித்தான் கொளுத்த வேண்டியிருக்கிறது. ஆனால் பிடித்துக்கொண்டால் இலேசில் அணையாது சந்தனக் கட்டை. இது இலேசில் தீப்பற்றவில்லை. அதனால் சதியின் காரணமாக தீப் பற்றியிருக்குமா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. ஆகவே அந்தக் கருத்தை நாங்கள் புறக்கணித்துவிட வில்லை. அதையும் இணைத்துத்தான் விசாரணை நடைபெற்று வருகிறது என்பதை எடுத்துக் கூறி அமைகின்றேன்.

கூட்டுறவு வங்கி ஒன்றில் கொள்ளை

உரை : 58 **நாள் : 20.3.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மல்லூரில் உள்ள ஆரம்ப விவசாயக் கூட்டுறவு வங்கியில் 1-3-1997 அன்று இரவு வங்கியின் இரும்புப் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைக்கப்பட்டிருந்த 12,000 கிராம் எடையுள்ள தங்க நகைகளும், ரூபாய் 20,895/- ரொக்கமும் களவுபோய் விட்டதாக வங்கியின் தலைவர் துரைசாமி காவல் நிலையத்தில் 2-3-1997 அன்று புகார் செய்தார். அதன் பேரில், மல்லூர் காவல் நிலையக்குற்றப்பதிவு எண் 171/97-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 457 மற்றும் 380 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வேலூர் சரக காவல்துறை துணைத் தலைவர் மற்றும் காவல்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை மேற்கொண்டார்கள். விரல்ரேகை நிபுணர்கள், தடய அறிவியல் நிபுணர்கள் மற்றும் மோப்பநாய்கள் உதவியோடு சம்பவ இடத்தை ஆய்வு செய்ததில் இக்குற்றத்தில் மூன்றுக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கக் கூடும் என்று சந்தேகிக்கப் படுகிறது. குற்றவாளிகள் அலுவலக அறைக்குச் செல்லும் பக்க வாட்டுக் கதவின் பூட்டை உடைத்து உள்ளே நுழைந்து, பின்னர் பெட்டக அறைக்குச் சென்று, அங்கேயிருந்த கோத்ரெஜ் பாது காப்புப் பெட்டகத்தின் வலதுமேல் பகுதியில் கேஸ் டார்ச்சைப் பயன்படுத்தி துளைப் போட்டிருக்கிறார்கள். களவு போன அனைத்து நகைகளும், ரொக்கப் பணமும் இந்தத் துளையின் மூலம்தான் களவாடப்பட்டுள்ளன. சம்பவம் நடைபெற்ற இடத் திற்கு அருகில் இருந்த கிணற்றிலேயிருந்து இக்குற்றத்தைப்

புரிய பயன்படுத்தப்பட்ட ஆக்ஸிஜன் மற்றும் எல்.பி.ஜி. சிலிண்டர் ஆகியவை கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. விசாரணையின்போது, வங்கியில் களவுபோன மொத்த நகைகளின் அளவு சரிபார்க்கப்பட்டு, 807 சவரன் நகைகளும், அதனுடைய மதிப்பு ரூ.24,55,560 மற்றும் ரொக்கம் ரூ.20,895- ஆக மொத்த மதிப்பு 24,76,455 ரூபாய் களவு போய் உள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் 4.2 லட்சம் என்று சொன்னார்கள். சேலம் ஊரக காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஐந்து சிறப்புக் காவல் குழுக்கள் அமைக்கப்பட்டு. இவ்வழக்கில் புலன் விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி தனிக்குழுக்கள் தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று, செய்முறைக் குற்றவாளிகளின் செயல்களைத் தணிக்கை செய்து, சந்தேக நபர்களை விசாரித்து வருகின்றார்கள். சம்பவ இடத்தில் கிடைக்கப்பெற்ற ஆக்ஸிஜன் மற்றும் எல்.பி.ஜி. சிலிண்டர்கள் தர்மபுரி மாவட்டம், மொரப்பூர் அருகே களவாடப்பட்டவை என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தர்மபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையக் குற்ற எண் 783/94 வழக்கில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் சிவலிங்கம், மாது, சீனிவாசன் மற்றும் புருஷோத்தமன் ஆகியோர் இவ்வழக்கில் சம்பந்தப் பட்டு உள்ளார்களா என விசாரிக்கப்பட்டது. சென்னை, செங்கல் பட்டு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை, தேனி, மதுரை, தர்மபுரி, கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கும் தனிக் குழுக்கள் விரைந்து சென்று இம்மாதிரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி வழக்குகளில் ஏற்கனவே சம்பந்தப்பட்டவர்கள் மற்றும் சந்தேகிக்கப்பட்டவர்களான 54 குற்றவாளிகளுக்கு இவ்வழக்குகளில் சம்பந்தம் உள்ளதா என்பது பற்றி தீவிரமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உள்ளூர் குற்றவாளி களும் சந்தேக நபர்களும் தீர விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

சேலம், இராஜாஜி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள வெல்டிங் பட்டறைகள் மற்றும் வெல்டிங் சம்பந்தப்பட்ட அனைத்து தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் பற்றிய

விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களுக்கு இவ்வழக்கில் தொடர்பு இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகளும் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்திலும் மற்றும் இதர மாவட்டங்களிலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் நடந்த வழக்குகளின் குற்றவாளிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு இதர மாவட்டத்தில் செயல்படும் சிறப்புப் புலன் ஆய்வுக் குழுக்களுடன் தொடர்புகொண்டு விவரங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து பல்வேறு இடங்களுக்கும் குழுக்கள் அனுப்பப்பட்டு, இவ்வழக்கில் சம்பந்தப்பட்டு இருக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் பற்றிய, நபர்கள் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு அவர்களைக் கண்டுபிடித்து அவர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, தீவிரமாக இதிலே விசாரணை நடைபெற்று வருகின்ற காரணத்தால் விரைவில் இந்தக் கொள்ளையர்கள் பிடிபடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

திருப்பூர் சாயப்பட்டறை பிரச்சினை

உரை : 59 **நாள்:21.3.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் முன்மொழிந்து, விரிவாகப் பேசியதை நம்முடைய ஞானசேகரன் அவர்கள் ஒரே வரியில் வழிமொழிந்து இருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் அவருக்கு அவ்வளவுதான் தெரியும் என்று கருதுகிறேன். (சிரிப்பு) நானாவது திருப்பூர் பனியன் போட்டிருக்கிறேன். அவர் திருப்பூரைப் பற்றிப் பேசுவற்கு என்ன உரிமை இருக்கிறது? (சிரிப்பு)

சுமார் 3 இலட்சம் மக்கள் தொகை கொண்ட திருப்பூர் நகரத்தில் தற்போது 2,500 பனியன் தொழிற்சாலைகளும், 750 சாயத் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன. இயற்கை யாகவே நிலத்தடி நீர் வசதி குறைவாக உள்ள திருப்பூர் நகரம், ஒரு பெரிய வணிக மையமாகக் கடந்த சில ஆண்டுகளில் வளர்ச்சி அடைந்ததைத் தொடர்ந்தும், புதிய தொழிற்சாலைகள் பல உருவாகிவிட்டதைத் தொடர்ந்தும், அங்குத் தண்ணீர் தட்டுப் பாடு அதிகமாக உள்ளது. அதிலும் குறிப்பாக, சுமார் 2,000 கோடி ரூபாய்க்கு மேல் அன்னியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற பனியன் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீர் கிடைப்பது மிகச் சிரமமாக உள்ளது. தற்போது இயங்கி வரும் 750 சாயத் தொழிற்சாலைகளுக்குச் சுமார் 75 மில்லியன் லிட்டர் தண்ணீர் ஒவ்வொரு நாளைக்கும் தேவைப்படுகிறது. இந்தத் தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்ய, தற்போது திருப்பூரிலிருந்து 25 கிலோ மீட்டர் சுற்றுவட்டாரத்தி லுள்ள கிணறுகளிலிருந்து, தினந்தோறும் 400 முதல் 500 லாரிகளில் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது.

வளர்ந்துவரும் இந்தப் பனியன் தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையைக் கருத்தில் கொண்டும், இதேபோல் பெருமளவுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் உள்ள இந்த நகரத்தின், மற்ற அடிப்படைத் தேவைகளைக் கருத்தில் கொண்டும், 1989-90-இல் கழக ஆட்சி, பொறுப்பிலே இருந்தபோது, 'திருப்பூர் பகுதி ஒட்டுமொத்த வளர்ச்சித் திட்டம்'- 'மாஸ்டர் பிளான்'- ஒன்று தயாரிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, பனியன் உற்பத்தி, ஏற்றுமதி வளர்ச்சி, வணிக வளர்ச்சி முதலிய துறைகளைச் சேர்ந்த, மத்திய அரசு உயர் அதிகாரிகளையெல்லாம் திருப்பூருக்கு அழைத்து, விரிவான திட்டங்களுக்கான கருத்துக்களும் அப்போது உருவாக்கப்பட்டன. கழக ஆட்சி பொறுப்பிலே இருந்தபோதே, இந்நகரின் எதிர்காலத் தேவையைக் கணக்கிட்டு, பவானி ஆற்றிலேயிருந்து தண்ணீர் எடுத்து, குழாய்கள் மூலம், திருப்பூர் நகருக்குக் கொண்டுவரலாம் என்றும், அதற்காக பனியன் ஏற்றுமதியாளர்கள் முதலீட்டுடன். இதற்கென்று தனியாக ஒரு நிறுவனம் உருவாக்கப்படலாம் என்றும் அப்பொழுதே கருத்துக்கள் உருவாக்கப்பட்டன. கழக ஆட்சி, தொடர்ந்து பொறுப்பிலே இருந்திருக்குமேயானால், இந்நேரம் இத்திட்டம் முடிக்கப்பட்டு, இதன்மூலம் 185 மில்லியன் லிட்டர் தண்ணீர், திருப்பூர் நகருக்கு அன்றாடம் கிடைத்திருக்கும். ஆனால், இடையிலே வந்த ஆட்சி, தொடர்ந்து நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதால், இன்னும் இத்திட்டம் நிறைவுபெறாமல், தற்போதுள்ள நிலவரப்படி, நாம் இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்கினாலும் கி.பி.2000 ஆண்டிலேதான் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அதாவது இன்னும் மூன்று ஆண்டுகளில். இருப்பினும், அந்த நிரந்தரத் திட்டம் முடிவுறும்வரை, தற்காலிக ஏற்பாடுகள் மூலம், திருப்பூர் , சாயத் தொழிற்சாலைகளின் தண்ணீர்த் தேவை, ஓரளவுக்காவது நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற வகையில், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பல ஆண்டுகளாக இருந்துவரும் முறைப்படி, திருப்பூர் நகரைச் சுற்றியுள்ள கிராமங்களில் அமைந்துள்ள கிணறுகளிலிருந்து, லாரிகள் மூலம் தண்ணீர் எடுத்து, திருப்பூர் நகரிலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கொண்டு

வரப்படுகிறது. ஆனால், தொழிற்சாலைகளின் உபயோகத் திற்காக அதிக அளவுக்கு நிலத்தடி நீர் உறிஞ்சி எடுக்கப்படுவ தால், விவசாயம் பெருமளவுக்குப் பாதிக்கப்படுகிறது என்று சுட்டிக்காட்டி, தொகுட்டிபாளையம், வடக்கு அவினாசிப் பாளையம், பெருந்தொழுவு மற்றும் கண்டியம்கோயில் ஆகிய பகுதிகளிலேயுள்ள விவசாயிகள், திருப்பூர் நகருக்குத் தண்ணீர் எடுத்துச் செல்லும் லாரிகளை நிறுத்த அறிவிப்புச் செய்தார்கள். அதைத் தொடர்ந்து, 11-2-1997 ஆம் நாள் கோவை, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், சம்பந்தப்பட்டவர்களைக் கொண்டு, கூட்டம் ஒன்றை நடத்தி, அந்தக் கூட்டத்திலே, விரிவாக அதுபற்றி விவாதிக்கப்பட்டது. மேலும், இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பி வைக்க 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு, அக்குழுவும் பல்வேறு நாட்களில் கூடி விவாதித்து, நீர்நிலை ஆதாரங்களைப் பார்வையிட்டு, பின்வரும் கருத்துக்களைக் கூறியது:-

முதல் கருத்து: திருப்பூர் வட்டம், கோயில்வழி கிராமத்திலேயுள்ள குட்டைக்கு, பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட வாய்க்கால் தண்ணீரை, திருப்பூர் கிளைக் கால்வாய் மூலம் எடுத்து வந்து, அக்குட்டையை நிரப்பி, அருகிலுள்ள திருப்பூர் நாகரிகம், கோயில்வழி நீரேற்று நிலையத்தைப் பயன்படுத்தி, தொழிற்சாலைகளுக்குத் தேவையான தண்ணீரை, அரசு நிர்ணயிக்கும் தீர்வை அடிப்படையில் வழங்கவும், திருப்பூர் நகராட்சிக்குப் பாதிக்கப்பட்ட பகுதிகளில், பல ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்கவும், குட்டையை ஆழப்படுத்தவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இத்திட்டத்தை அமல்படுத்த 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், முன்மொழிவும் அனுப்பப் பட்டதாக, மாவட்ட ஆட்சித் தலைவர், அரசுக்குத் தெரிவித் திருக்கிறார். அதனைப் பரிசீலனை செய்து, விரைவில் அதற்கான ஒப்புதல் வழங்கப்படும் என்பதையும் இந்த அவையில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருப்பூர் வட்டம்- நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்கள் இங்கே சுட்டிக்

காட்டியதைப்போல, -துரவலூரில் அமைந்துள்ள பெரிய குளத்தில், பவானி ஆற்று நீரை, கருமந்தூர், நம்பியூர், சேவூர், சாவக்காட்டுப்பாளையம் வழியாக, வாய்க்கால் அல்லது பெரிய குழாய் மூலம் கொண்டுவந்து நிரப்பி, அரசுத் தீர்வை அதற்கு வசூல் செய்து, தொழிற்சாலைகளுக்குத் தண்ணீர் வழங்க இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இதனால், இந்தக் குளத்திற்கு அருகிலுள்ள பெருமாநல்லூர், துரவலூர், பட்டம்பாளையம், குன்னத்தூர் ஆகிய ஊராட்சிகளில் உள்ளடங்கிய கிராமக் கிணறுகளின் நீராதாரங்கள், குடிநீர் ஆதாரங்கள் அனைத்தும் பயனடைய வாய்ப்பும் உள்ளது. இதையும் இந்த அரசு பரிசீலித்து, மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தக்க அறிவுரை களை வழங்கும்.

இதற்கிடையிலே, இந்தப்பிரச்சினைக்குத் தற்காலிகமாக தீர்வு காணும் வகையிலே, பின்வரும் யோசனையையும், மேற்கண்ட குழு பரிந்துரைத்துள்ளது.

பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டப் பகுதிகளில், நான்கு மண்டலங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடும்போது, தொகுட்டிப்பாளையம், பெருந்தொழுவு, கண்டியம்கோயில் மற்றும் வடக்கு அவினாசிப்பாளையம் ஆகிய கிராம ஆயக்கட்டுப் பகுதிகளுக்குத் தண்ணீர் வழங்க, அரசு ஆணை பிறப்பிக்கலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. இந்தப் பரிந்துரை சம்பந்தமாக பொதுப்பணித்துறை பொறியாளர்களிடமிருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெற்று, அதனை அரசு பரிசீலித்து தக்க முடிவு எடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நிரந்தரம் மற்றும் தற்காலிக ஏற்பாடுகள் ஆகியவற்றை அரசு செயல் படுத்துகிற வரையில் நிலைமையின் அவசியத்தைக் கருதி பின்வரும் உடன்பாடுகளை விவசாயப் பிரதிநிதிகளும், தொழிற்சாலைப் பிரதிநிதிகளும் உள்ளிட்ட குழு ஒருமனதாக செயல்படுத்த தீர்மானித்துள்ளது. 1997 மார்ச் 3 ஆம் தேதி காலை 9.00 மணி வரையில் இப்போதுள்ள நடைமுறையிலே உள்ளது போல டாங்கர் லாரிகளிலே தண்ணீர் எடுத்துக்கொள்வது என்றும் 3ஆம் தேதி கடந்துவிட்டது என்றாலும்கூட அது தொடர்ந்து

வருகிறது- 1997 மார்ச் 3 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு மேல் தாராபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள நீர் ஆதாரங்கள் தவிர வேறு பகுதியிலே வியாபார நோக்கில் புதிய கிணறுகளோ அல்லது ஆழ்குழாய்க் கிணறுகளோ ஏற்படுவதை அனுமதிப்பதில்லை என்றும், அந்தக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போது சாயத்தொழிற்சாலைக்குத் தேவையான தண்ணீர், திருப்பூரை ஒட்டியுள்ள பகுதிகளிலிருந்து லாரிகள் மூலம் கொண்டு வரப்படுகிறது. அது தற்காலிகமான ஏற்பாடுதான். தற்காலிகமாக பிரச்சினை ஏதுமில்லையென்றாலும் இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற உறுதியை இந்த அவையிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 60 **நாள் : 24.3.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிக முக்கியமான சிறப்புக் கவன ஈர்ப்பை இங்கே முன்வைத்து, தி.மு.க. உறுப்பினர் திரு.பன்னீர்செல்வம், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு.ஞானசேகரன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு.சிவபுண்ணியம், அ.தி.மு.க. உறுப்பினர் திரு.சுந்தரம், பா.ம.க. உறுப்பினர் பேராசிரியர் தீரன் ஆகியோர் ஆழ்ந்த வேதனையைத் தெரிவித்ததோடு, இத்தகைய அநீதிகள் தொடராவண்ணம் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களை நானும் வழிமொழிகின்ற நிலையில்தான் இந்த மாமன்றத்தில் சில செய்திகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாகை- காயிதே மில்லத் மாவட்டத்தில் சீர்காழி காவல் எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாசல் என்ற கடற்கரை கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற குழந்தைகள், 10 வயது, 11 வயது என்கிற அளவிலே சிறுமிகள் இத்தகைய கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக 4-ஆம் வகுப்பு படிக்கின்ற 10- வயதுள்ள சுந்தரி என்ற மாணவி, தனது வகுப்பு ஆசிரியர் ஆறுமுகம், பள்ளிக்கூட நேரத்திலே தன்னைப் பலாத்காரம் செய்து கற்பழித்து விட்டதாகவும், அதைப்போலவே சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் என்பவர் தன்னை ஏமாற்றிக் கெடுக்க முயன்றதாகவும், தன்னுடைய தாயாரிடம் 18-3-1997 அன்று தெரிவித்திருக்கிறாள். இந்தச் சம்பவம் குறித்து சுந்தரியினுடைய பெற்றோர் கிராமத்தில் தகவல் தந்தார்கள். மேலும், அதே

வகுப்பிலே படிக்கும் மாணவிகள், சரளா- 10வயது. கோமதி-9 வயது, முருகேஸ்வரி-11 வயது மற்றும் இன்னொரு முருகேசுவரி என்ற பெண்-11 வயது ஆகியோரும் தங்களையும் மேற்படி ஆசிரியர் ஆறுமுகம், சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமனும் கற்பழிக்க முயன்றதாக தங்கள் பெற்றோர் களிடமும், ஊராரிடமும் கூறியிருக்கிறார்கள். திரு.ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள், வேலியே பயிரை மேய்வதா என்று. மேய்கிற நாசகார காரியம் அங்கே நடைபெற்றிருக்கிறது. இந்தச் செய்தி கிடைத்தவுடன் கிராமத்தைச் சேர்ந்த 50 மீனவர்கள் 18-3-1997 அன்று மதியம் சீர்காழி காவல் நிலையத்தில் இந்தச் சம்பவம் குறித்து உடனடியாகப் புகார் செய்தார்கள். குழந்தை களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் மேற்படி ஆசிரியர் ஆறுமுகம், 50 வயது உடையவர், மற்றும் வெங்கட்ராமன் ஆகியோர் மீது சீர்காழி காவல் நிலையக் குற்ற எண்கள் 174, 175, 176,177 மற்றும் 178/97-ல் இந்திய தண்டனைச் சட்டம் 354, 396, 511 மற்றும் 506 பிரிவுகளின்கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்கில் எதிரிகளான ஆறுமுகம் என்பவரும், சத்துணவு அமைப்பாளர் வெங்கட்ராமன் என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்ற கருத்தை மாண்புமிகு உறுப் பினர்கள் இங்கே தெரிவித்தார்கள். அவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டது மாத்திரம் அல்ல. இடைக்காலப் பணி நீக்கமும் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த பச்சிளம் குழந்தைகள் 5 பேரும் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். வழக்கில் புலன் விசாரணை தீவிரப்படுத்தப்படுகிறது. என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய திரு.தீரன் அவர்கள் இதில் ஒரு ஆர்.டி.ஓ. அளவிலே விசாரணை நடைபெற்றால்தான் இன்னும் பல உண்மைகள் வெளிவரும் என்று கூறினார்கள். உரிய விசாரணை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்து, இந்தக் கொடுமையைக் குறித்து விரிவாகப் பேசுவதே கொடுமை யானது என்ற காரணத்தால் இந்த அளவோடு அமர்கிறேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ப. ரங்கநாதன் அவர்கள்

கொண்டுவந்துள்ள இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு தொடர்பாக அதிகாரிகள் மூலமாக எனக்குக் கிடைத்தத் தகவல் குறிப்பை இங்கே முதலில் தர விரும்புகிறேன்.

23.3.1997 அன்று இரவு 7 மணி அளவில், கோடம் பாக்கம் உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் காவலர்கள், 3253 எண்ணுள்ள திரு. வீரமணி, 6169 எண்ணுள்ள திரு. இராம மூர்த்தி, 7172 எண்ணுள்ள திரு. பன்னீர் செல்வம், 1564 எண்ணுள்ள திரு. கே. சுப்புராம் ஆகியோர், கோடம்பாக்கம் குற்ற எண் 515/97 பிரிவு 303, 307 இந்திய தண்டனைச் சட்டத்தில் சம்பந்தப்பட்ட தலைமறைவு எதிரி மோகன்தாஸ் என்பவரைத் தேடி, அமைந்தகரை, அய்யாவு நாயுடு காலனியிலுள்ள பார்த்த சாரதி என்பவரை விசாரித்துக் கொண்டிருக்கும்போது, சந்திரன், முரளி, இராஜன், செல்வின், சேகர், தன்சுராஜ் மற்றும் பலர், அவர்கள் அலுவல் செய்யவிடாமல் தடுத்து, கைகளாலும், கற்களாலும் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்றும், இத் தாக்குதலில், கோடம்பாக்கம் சட்டம் ஒழுங்கு உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் நான்கு காவலர்களுக்குக் காயம் ஏற்பட்டது என்றும், அறிக்கையிலே தரப்பட்டுள்ளது. இருப்பினும், திவாகர், செல்வின், சேகர், இராஜன், சந்திரன், முரளி ஆகிய ஐவரை மேற்படி உதவியாளர் குறைந்த அளவு பலத்தைப் பயன்படுத்திக் கைது செய்து, கோடம்பாக்கம் காவல் நிலையம் கொண்டு வந்து, விசாரணை செய்து, பின்னர் அமைந்தகரை காவல் நிலையம் கொண்டுவந்து, ஆஜர் செய்ய, உதவி ஆய்வாளர் செந்தில் கொடுத்த புகாரின் பேரில் அமைந்தகரை காவல் நிலையக் குற்ற எண் 402/97, பிரிவு 147, 341, 323, 353, 332, 307 இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி வழக்கும் ஒன்றும் பதிவு செய்யப் பட்டுள்ளது. மேற்படி குற்ற எண் 402/97-இல் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் ஐவரையும் மற்றும் காயமுற்ற காவல் துறையினரையும் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பியுள்ளனர். அங்கே, செல்வின், அமைந்தகரை உதவி ஆய்வாளரிடம் கொடுத்த புகாரில், கோடம்பாக்கம் காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் மற்றும் 5 காவலர்கள், தங்களைக் கோடம்பாக்கம் காவல்

நிலையம் கொண்டுபோய், அங்கே மேலும் சில காவலர்கள் சேர்ந்து தங்களைத் தாக்கியதாகப் புகார் கொடுத்ததன் பேரில் அமைந்தகரை காவல் நிலையத்தின் குற்ற எண் 403/97, பிரிவு 147, 341, 323 மற்றும் 307, இந்திய தண்டனைச் சட்டத்தின்படி காவலர்கள் மீதும் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உதவி ஆய்வாளர் செந்தில் மற்றும் நான்கு காவலர்களும் அரசு பொது மருத்துவமனையிலே உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெறுகின்றார்கள்.

இச்சம்பவம் காரணமாக, 23.3.1997 அன்று இரவு 7.30 மணி முதல் 7.40 மணி வரையில் அமைந்தகரை, அய்யாவு நாயுடு காலனியைச் சேர்ந்த அய்யாத்துரை நாடார், ரவி மற்றும் பட்டாபி ஆகியோர் தலைமையில் பெரியார் சாலை மற்றும் கோவிந்தன் தெரு சந்திப்பில் அய்யாவு காலனியைச் சேர்ந்த வர்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். காவல் துறையினர் சம்பவ இடத்திற்குச் சென்று அவர்களோடு பேசிய பிறகு, அவர்கள் கலைந்து சென்றிருக்கிறார்கள். சம்பவ இடமான அய்யாவு காலனிக்கு, தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் அ. செல்வக்குமார் வந்து, காவல் துறையினர் குடிபோதையில்தான் இத்தாக்குதலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று புகார் சொல்லியதன் பேரில், இச்சம்பவத்தில் ஈடுபட்ட காவல் துறையினர் மது அருந்தியிருந்தார்களா என்று அறிய மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. அச்சோதனையில், சம்பந்தப்பட்ட காவல் துறையினர் யாரும் மது அருந்தவில்லை என்று மருத்துவ அதிகாரி சான்று பகர்ந்துள்ளார்.

காவல் துறையினர் அடித்ததாகப் புகார் கூறப்பட்டதால், இந்த வழக்கின் ஆவணங்கள் மற்றும் தனி அறிக்கையுடன், பி.எஸ்.ஓ. 145 பிரிவின்படி, உரிய விசாரணைக்காக அனுப்பப் பட்டுள்ளது. அவர்கள் எந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பது பற்றி எனக்குத் தெரியாது. அவர்களை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கநாதன் அவர்கள், தமிழ் மாநிலக் காங்கிரஸைச் சேர்ந்தவர்கள் என்று கூறுகிறார்கள். இதனைக் கட்சி சார்பற்ற முறையிலேதான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

காவல் துறையினர், ஒரு குற்றவாளியைத் தேடிச் சென்ற போது ஏற்பட்ட வாக்குவாதம், உரையாடல் இவற்றின் காரணமாக, காவல் துறையினர் 3 பேர் அல்லது 4 பேர் அங்கே தாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்துதான் அடித்த வர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. உரிய விசாரணையின் போதுதான் உண்மை தெரியும். இருந்தாலும், அவர்கள் காங்கிரஸைச் சேர்ந்தவர்களா, அல்லவா, தமிழ் மாநிலக் காங்கிரஸா, அல்லவா என்பதைப் பற்றியெல்லாம், அந்த விசாரணையிலே முடிவாகும் என்ற நிலை யில், நிச்சயமாக உரிய விசாரணை நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

லாரிகள் வேலை நிறுத்தம்

உரை : 61 **நாள் : 04.04.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லாரி வேலை நிறுத்தத்தைப் பற்றிச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தந்து, இந்திய தேசிய லீக் சார்பாக திரு. அப்துல் லத்தீப் அவர்களும் தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. ரங்கநாதன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு. பழனிசாமி அவர்களும், அ.தி.மு.க. சார்பாக திரு. திருநாவுக்கரசு அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சி சார்பாக திரு. மணி அவர்களும், ஜனதா கட்சி சார்பாக திரு. வெங்கடசாமி அவர்களும், தேவேந்திரர் சங்கம் சார்பாக டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாகவும், லாரி உரிமையாளர்களின் சார்பாகவும் திரு. ஐ. கணேசன் அவர்களும் இங்கே தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

பொருள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகன உரிமையாளர்கள், 'சர்வீஸ் வரியாக' 5 சதவீதத்தை சுங்க இலாக்கா மூலமாக மைய அரசுக்குச் செலுத்தவேண்டுமென்று மத்திய நிதிநிலை அறிக்கையிலே வெளியிட்டதை ரத்து செய்யக் கோரியும், லாரிகளுக்கான இன்ஸ்யூரன்ஸ் பிரிமியத் தொகை அதிகரிக்கப்பட்டதை ரத்துசெய்யக் கோரியும், இந்தியா முழுவதும் 31-3-1997 நள்ளிரவிலிருந்து லாரி உரிமையாளர்கள் வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்து, 4 நாட்களாக லாரிகள் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு லாரிகள் வேலைநிறுத்தம் குறித்த செய்தி வந்தவுடன், தமிழக அரசின் சார்பில் நான் விடுத்த வேண்டுகோளில், 'இந்த சர்வீஸ் வரி என்பது யோசனை என்ற அளவிலேதான் மத்திய அரசு நிதி

அமைச்சகத்தில் இருப்பதாக வந்த செய்திகளை எடுத்துக்காட்டி இதனால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய சிரமங்களை விளக்கி, லாரி உரிமையாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு, மத்திய அரசுடன் கலந்து பேசி, பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக பொதுவிநியோகம் தடைப்பட்டாலும், அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் தேவையான பொருள் இருப்பு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென்று அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப் பட்டிருக்கிறார்கள்.

மேலும் மாவட்ட ஆட்சியர்கள், தமது மாவட்டங் களிலுள்ள காவல்துறைக் கண்காணிப்பாளர்கள், வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் ஆகியோரின் கூட்டங்களைக் கடந்த இரண்டு, மூன்று நாட்களாக நடத்தி, அத்தியாவசியப் பொருட்களை அரசு மற்றும் தனியார் பேருந்துகளில் எடுத்துச் செல்ல அறிவுரை வழங்கியுள்ளார்கள். அதன்படி, வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள், பேருந்து நிறுவனங்களையும், உரிமையாளர்களையும் இதனைச் செயல் படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள். பால் மற்றும் தண்ணீர் ஏற்றிச் செல்லும் லாரிகளுக்கு இந்த வேலை நிறுத்தத்திலேயிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், வாகனங்களுக்கு டீசல் கிடைக்காததால், அதிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. காய்கறிகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் சுட்டிக்காட்டியதைப் போல், இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக, மிக அதிகமாக விலைகள் உயர்ந்துள்ளன. 2 கோடி கோழிகளுக்குத் தீவனமே இல்லை என்ற அபயக் குரல் அந்த வட்டாரத்திலேயிருந்து தந்திகள் மூலமாக நேற்றும், இன்றும் அரசுக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. அதேபோல, முட்டைகளையும் விற்பனைக்கு எடுத்துச்செல்ல முடியாமல், வீணாகிப் போகும் நிலைமைக்கு உள்ளாகி இருக்கின்றன என்றும் எனக்குத் தந்திகளும், செய்திகளும் வந்த வண்ணம் இருக்கின்றன.

லாரிகள் வேலை நிறுத்தம் தொடர்வதால், அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை அமல்படுத்தும்படி, எல்லா மாநில

மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கும் மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. உணவு தானியங்கள், பெட்ரோலியப் பொருட்கள் உட்பட, அத்தியாவசியப் பொருள்களின் சப்ளையைத் தொடர்ந்து சீராகப் பராமரிப்பதற்கு வசதியாக, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம் ஆகியவற்றின் விதிகளை அமல்படுத்துமாறு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. சமரசம் செய்கின்ற வேலையைச் சட்டம் செய்யாது என்பதை நாம் மிக நன்றாக அறிவோம். சட்டம் இன்றைக்கு, இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு ஒரு யோசனையாக, ஒரு முயற்சியாக இருக்கலாமே தவிர, சமரசப் பேச்சுவார்த்தை மூலமாகத்தான் இதை நாம் அடைய முடியும்; இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடுவதற்கு அவர்களும் முன்வர முடியும் என்பதை உணர்ந்த காரணத்தினாலேதான், மத்திய அரசு இந்தப் பேச்சுவார்த்தையிலே ஈடுபட்டிருந்தாலும்கூட, தமிழக அரசைப் பொறுத்தவரை, நாமும் மத்திய அரசுக்கு உதவியாகவும், அதே நேரத்திலே லாரி உரிமையாளர்களுக்குத் துணையாகவும், அவர்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கின்ற வகையிலே நாமும் பங்கு கொள்வோம் என்று எடுத்துரைக்கின்ற வகையிலும், இதைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்ள, அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த, இன்றைக்கு அவர்களெல்லாம் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் டில்லியிலிருந்து வரவேண்டிய சூழ்நிலையில், பிற்பகல் அல்லது மாலையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று நான் நம்புகிறேன். இதற்கிடையில் மத்திய நிதியமைச்சர் அவர்களும், இதிலேயுள்ள சங்கடங்களை எனக்கு எடுத்துத் தெரிவித்திருக்கின்றார்கள். தமிழக அரசும் லாரி உரிமையாளர்களுடைய கோரிக்கைகளுக்கான பரிந்துரைகளை மத்திய அரசுக்குச் செய்யும் என்ற உறுதியை இந்தப் பேச்சுவார்த்தையின் போது, லாரி உரிமையாளர்களிடத்தில் நான் தெரிவிக்க இருக்கின்றேன்.

அது மாத்திரமல்ல, இந்த 5 சதவிகித வரியை இரத்து செய்யவேண்டும் என்பதையும், இன்சூரன்ஸ் பிரீமியம் தொகை மிக அதிகம் என்பதையும் எடுத்துக்காட்டுகின்ற வகையில், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக்

கழக உறுப்பினர்களானாலும், தமிழ்மாநிலக் காங்கிரஸ் உறுப்பினர் களானாலும் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி போன்ற தோழமைக் கட்சிகளுடைய உறுப்பினர்களானாலும் தமிழகத்தின் சார்பிலே அங்கே அங்கம் வகிக்கின்ற அத்தனைபேரும் குரல் கொடுப்பார்கள் என்ற உறுதியையும் நான் லாரி உரிமையாளர் களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகளையெல்லாம் இந்தப் பேச்சுவார்த்தையின்போது தெரிவிப்பேன் என்பதையும் கூறி, இதற்குப் பிறகாவது இந்த வேலை நிறுத்தத்தைக் கைவிடவேண்டுமென்று நான் அவர்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இது நாடுதழுவிய போராட்டமாக இருக்கின்றது. அவர்களுடைய சக்தி என்ன என்பதை நான்கு நாட்களாகக் காட்டிவிட்டார்கள். மேலும் சக்தியைக் காட்ட எண்ணி, நாட்டின் சக்தியை வீணாக ஆக்கிவிடக் கூடாது என்ற கோரிக்கையையும் இந்த அவையின் மூலமாக நான் அவர்களுக்கு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-ஆம் ஆண்டு, மே மாதம், 21-ஆம் நாள் முன்னாள் இந்தியப் பிரதமர், நாட்டின் இளந்தலைவர் இராஜீவ்காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தமிழகத்தின் பல பகுதிகளிலே கலவரங்கள் ஏற்பட்டு, பொதுமக்கள் பலருடைய கோடிக்கணக்கான ரூபாய் சொத்துக்கள் நாசம் செய்யப்பட்டன.


அந்தக் கோடிக்கணக்கான ரூபாய் இழப்பைச் சரி கட்ட, பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம், அரசின் சார்பில் இழப்பீடு கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழகமெங்கும் எழுந்தபோதிலும் அந்தக் கொலைக்குப் பிறகு, தமிழகத்தில் நடைபெற்ற கடந்தகால ஆட்சியில், அந்தக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அலட்சியப்படுத்தப்பட்டன. எனவே, அந்தக் கலவரங்களிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசு இழப்பீடு வழங்க ஆணைபிறப்பிக்க வேண்டுமென்று கோரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் என்ற முறையில், பேராசிரியர் அவர்கள், சென்னை,

உயர்நீதிமன்றத்தில், 1991-ஆம் ஆண்டு, 'ரிட் மனு' ஒன்றினை, 'பெட்டிஷன்' எண் 7940/91 தாக்கல் செய்தார். அந்த 'ரிட் பெட்டிஷ'னில், விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு, நிவாரணத் தொகை ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால், அன்றிருந்த அரசு, நீதிமன்றத்திலே தாக்கல் செய்த பதிலில், அந்தக் கோரிக்கையை ஏற்க முன்வராத போதிலும், சென்னை, உயர்நீதிமன்றம் தி.மு.கழகத்தின் சார்பில் போடப்பட்ட வழக்கை ஏற்று, முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்களைச் சிறப்பு ஆணையாளராக நியமித்து, பாதிக்கப் பட்டவர்களின் கோரிக்கைகளையெல்லாம் பரிசீலித்து, நிவாரணத்தொகை குறித்து பரிந்துரை செய்ய வேண்டுமென்று ஆணையிட்டது.

தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், சிறப்பு ஆணையாளர் திரு. கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த முறையீடுகளை விசாரித்து, பரிந்துரை செய்த இழப்பீடு, அவர்களுக்கு ஏற்பட்ட நாசத்தின் அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகமிகக் குறைவாக இருந்த காரணத்தினால், பாதிக்கப்பட்ட பலர், அந்த இழப்பீட்டுத் தொகையை ஏற்றுக்கொள்ள மறுத்து, நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். மேலும், திரு.கே.ஜே.எம். ஷெட்டி அவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் பலருக்கு எவ்வித இழப்பீட்டுத் தொகையையும் பரிந்துரைக்காமல் விட்டுவிட்டார். அவர்களும் நீதிமன்றத்திலே முறையிட்டுக் கொண்டார்கள். இந்த மனுக்கள் எல்லாம் நீதிமன்றத்திலே ஏற்கப்பட்டு, அரசின் பதிலை, நீதிமன்றம் அந்த மனுக்களின் மீது கோரியது கடந்தகால அரசாங்கம், அதற்கு அப்போது கொடுத்த பதிலில், அந்தக் கோரிக்கை மனுக்களை நிராகரிக்குமாறு தெரிவித்து, நீதிமன்றத்திலே, அந்த வழக்கு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே, தமிழகத்திலே ஆட்சிமாற்றம் ஏற்பட்டுதான், இந்தப் பிரச்சினையில் பாதிக்கப்பட்டவர்களுடைய முறையீடுகளை மனதிலே கொண்டு, அமைச்சரவையில் 11-2-1997 அன்று விவாதித்து, ஏற்கெனவே நீதிமன்றத்திலே நிலுவையிலே உள்ள வழக்குகளில், முந்தைய

அரசால் தாக்கல் செய்யப்பட்டிருந்த எதிர் மனுக்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, புதிதாகப் பதில் மனு, இந்த அரசின் சார்பில் தாக்கல் செய்வது என்று முடிவு எடுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த முடிவை, அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தின்முன் தெரிவித்ததன் அடிப்படையில் சென்னை உயர்நீதிமன்றம், தனது 27-3-97 நாளிட்ட ஆணையில், அரசின் கருத்துரையை ஏற்றுள்ளது. அதற்கேற்ப, வழங்கிய நிவாரணத் தொகை போதாது என்று எதிர்த்து 'ரிட் பெட்டிஷன்' தொடர்ந்தது உட்பட, பாதிக்கப்பட்ட வர்கள் நிவாரணத் தொகை பெறும்போது, எதிர்ப்புத் தெரிவித்து நிவாரணத் தொகையைப் பெற்றுக்கொண்டவர்களின் கோரிக்கைகளையும் பரிசீலித்து, நிவாரணம் வழங்கிட, உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. எஸ். மோகன் அவர்களை, ஒரு நபர் கமிஷனாக நியமித்து, அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).



சிதம்பரம் நடராஜர் கோவில் பிரச்சினை

உரை : 62 நாள்:5.4.1997

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகிரியா சிதம்பரம் நடராஜப் பெருமான் கோவிலுக்காக வாதாடுவது என்று யாராவது நினைத்துவிடப் போகிறார்களே என்று இராமலிங்கரை, பெரியாரை, என்னை எல்லாம் இழுத்துப் பகுத்தறிவு வாதத்தை முன்னிலைப்படுத்தி ஒரு சிறந்த உரையை-- ஆனால் நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய உரையா அல்லவா என்பது வேறு விஷயம்- இங்கே ஆற்றியிருக்கிறார். நான் இந்தநிலை வந்துள்ள வரலாற்றைச் சுருக்கமாக, தங்களுடைய அனுமதி யோடு இந்த அவைக்கு எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

சிதம்பரம் நடராஜர் திருக்கோயிலுக்குப் பூஜை போன்ற கைங்கர்யங்களுக்காக பல கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. திருக்கோயிலுக்கு சுமார் 465.10 ஏக்கர் நஞ்சை நிலமும், சுமார் 453.19 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. கட்டளைகளுக்கு அந்தக் கோவிலிலே உள்ள பல கட்டளைகளில் சுமார் 2288.93 ஏக்கர் நஞ்சை நிலமும், 462.29 ஏக்கர் புஞ்சை நிலமும் உள்ளது. இவ்வளவு சொத்துக்கள் இருந்தும் நிர்வாகம் நல்லமுறையில் நடத்தப்படவில்லை என்றும், வருமானங்கள் இந்த ஆலயத்தின் பொருட்டு பயன்படுத்தப்படவில்லை என்றும் வரவு, செலவு களுக்கு முறையான கணக்குகள் இல்லை என்றும் கூறப்பட்டது.

பொதுமக்களும், பக்தர்களும் மேற்படி திருக்கோவில் நிர்வாகம் உசிதர்களால் நன்றாகப் பராமரிக்கப்படவில்லை என்று தெரிவித்ததின்பேரில் தொடர்ச்சியாக துறை அலுவலர்கள் ஆய்வு செய்து குறைகளைச் சுட்டிக்காட்டியும் நிர்வாகத்தில் இருந்து வந்த தீட்சிதர்கள் குறைகளைக் களையாமல் இருந்தனர்

என்றும், கடந்த காலத்தில் கூறப்பட்டதன் பேரில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை தனது கடிதம் 52754/82, 20-7-82-ல் பொது தீட்சிதர்களின் செயலாளர் திரு.வி.எஸ்.நடனசபாபதி தீட்சிதர் அவர்களுக்கு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை- 'Notwithstanding anything contained in this (HR&CE) Act, the commissioner may appoint, subject to such conditions, as may be prescribed, an Executive officer for any religious institutions other than a math or a specific endowment attached to a math'- என்று குறிப்பிடப்பட்டுள்ள அந்த இந்து சமய அறநிலையை சட்ட விதிகளின் சட்டப்பிரிவு 45(1) -ன் கீழ்- ஏன் செயல் அலுவலர் நியமனம் செய்யக்கூடாது என காரணம் கோரும் அறிவிப்பு விதிகளின்படி அனுப்பி வைக்கப் பட்டது. 24-7-82 அன்று காரணம்கோரும் அறிவிப்பினை திரு.வி.எஸ்.நடனசபாபதி தீட்சிதர் பெற்றுக்கொண்டு அதை ஆட்சேபித்து ரிட் மனு எண் 5638/82-ஐ சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்து தடைஉத்தரவும் பெற்றார்.

மேற்படி உயர்நீதிமன்ற வழக்கின் இறுதித் தீர்ப்பில் சட்டப்பிரிவு 45(1)-ன்கீழ் ஏன் செயல் அலுவலர் நியமனம் செய்யக்கூடாது என காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப் பட்டுள்ளதால், இதனையே ஒரு இறுதி முடிவாகக் கருத முடியாது எனவும், மனுதாரர் தன் மறுப்புகளை முறைப்படி தெரி விக்கலாம் எனவும், அதனைப் பரிசீலித்து சட்ட விதிகளின் படியும், தகுதியின் அடிப்படையிலும் விசாரித்து உத்தரவிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து 19-5-85, 12-7-85, 16-10-85, 15-11-85, 19-9-86, 10-12-86, 23-12-86, மற்றும் பல தேதிகளில் விசாரணை குறிப்பிடப்பட்டு, இறுதியாக 22-7-87ல் விசாரணை முடிக்கப்பட்டு, 31-7-87ல் செயல் அலுவலர் நியமனம் செய்து உத்தரவிடப்பட்டது. மேற்படி உத்தரவினைத் தொடர்ந்து 10-8-1987ல் நிர்வாக அதிகாரியால் தன்னிச்சையாக பொறுப்பு ஏற்கப்பட்டது. மீண்டும் இதனை எதிர்த்து பொது தீட்சிதர்களின் ரிட் மனு எண் 7843/87-ஐ தாக்கல் செய்தும், ரிட்

பல்வகை மனு 114/87-ன்படி 11-8-87ல் நிர்வாக அதிகாரி நியமனம் செய்த உத்தரவின் மீது தடை உத்தரவும் பெற்றனர்.

17-2-1997ல் மேற்படி ரிட் மனுவினை முடிவுக்குக் கொண்டுவந்து, உயர்நீதிமன்றம், ஆணையர், நிர்வாக அதிகாரி நியமனம் செய்து பிறப்பித்த உத்தரவினால் பாதிக்கப்பட்ட நபர் சட்டப்பிரிவு 114-ன்கீழ் அரசிடம் மேல்முறையீடு செய்து பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்றும், ஆனால் அதற்கு மாறாக அவசரக்கோலத்துடன் அரசியல் அமைப்புச் சட்டப்பிரிவு 226-ன்கீழ் நேரடியாக சென்னை உயர்நீதிமன்றத்தினை நாடி இடைக்கால உத்தரவு பெற்றனர் என்றும் அரசின் நடவடிக்கை களை முடக்க முயற்சித்து எவ்வளவு தூரம் காலம் கடத்த இயலுமோ அதற்கு வழிவகுத்தாற்போல் செயல்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்து, காரணம் கோரும் அறிவிப்பில் தெரிவித்த குறைபாடுகள் அனைத்தும் சரியானவையே என்றும், அவை இந்திய தண்டனைச் சட்டத்தில் நடவடிக்கை எடுக்கக்கூடிய தன்மை வாய்ந்த கடும் குறைபாடுகள் என கருத்துத் தெரிவித்தும், மொத்தத்தில் மனுதாரர்களான பொது தீட்சிதர்களின் கோரிக்கை நியாயமானதல்ல என்றும் கூறி அவர்களது நீதிப் பேராணை மனுவைத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

இதனை எதிர்த்து பொது தீட்சிதர்களால் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மேல்முறையீடு மனு எண் 145/97 தாக்கல் செய்யப்பட்டது. இதனை இரு நீதிபதிகள் கொண்ட டிவிஷன் பெஞ்ச் 13-3-97ல் விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

டிவிஷன் பெஞ்ச் தனது இடைக்காலத் தீர்ப்பில் 31-7-87ல் செயல் அலுவலர் நியமனம் செய்து பிறப்பித்த ஆணையரின் உத்தரவில், செயல் அலுவலருக்குரிய அதிகாரங் களை வகைப்படுத்தும் பிரிவுகளில் விதி 3- "The executive Officer shall be the person entitled to receive all the income in cash and kind and all offerings. All such income and offerings shall be in his custody - என்ற பிரிவிற்கு மாத்திரம் தடை விதித்து, உறுப்பினர் சொன்னதுபோல தடை விதித்து,

செயல் அலுவலர் இந்தத் திருக்கோயிலின் அனைத்து வருமானங்களையும் பெறுவதற்கு அதிகாரம் பெற்றவரல்ல என்று தெரிவித்தது. ஆனால் 45 நாட்களுக்கு ஒரு முறை, நியமனம் செய்யப்பட்ட நிர்வாக அதிகாரியிடம், பொது தீட்சிதர்கள் திருக்கோயிலுக்காக தங்களால் பெறப்பட்ட வரவினங்கள் அனைத்திற்கும் கணக்குக் கொடுக்க வேண்டும் என்றும் இதனைக் கொண்டு நிர்வாக அதிகாரி கணக்குகள் பேணி வரவேண்டும் என்றும் கூறியுள்ளது. இங்கேதான் 'அங்கே கணக்கு இல்லை, அதற்கு வருமானம் இல்லை' என்று மாண்புமிகு உறுப்பினர் அழகிரி சொன்னார்கள். இது மிகச் சுலபம், வருமானமே இல்லை என்றால், அதை எழுதிக் கொடுத்து, வருமானமே இல்லை. ஆகவே கணக்குத் தேவை இல்லை என்ற அந்தக் கணக்கைக் காட்டிவிடலாம்; அது சுலபமான காரியம் என்று நான் கருதுகிறேன்.

இந்த இடைக்காலத் தீர்ப்பின் சாராம்சத்தை, சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் தனது 12-3-97ஆம் நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து, உயர்நீதிமன்ற இடைக்கால உத்தரவின்படி செயல் அலுவலர் பொறுப்புகளைத் தாமாகவே ஏற்று (Assumed Charge) மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் செயல்பட்டு வரலாம் எனத் தெரிவித்ததால், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ந.க.எண். 75860/87 எண்2, நாள் 14-3-97 உத்தரவின்படி, தென்னாற்காடு மாவட்டம், மணவாளநல்லூர் அருள்மிகு கௌஞ்சியப்பர் திருக்கோயிலில் முதல் நிலை செயல் அலுவலராகப் பணியாற்றும் ஞானகுரு அவர்கள் சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்திலே 20-3-97 அன்று செயல் அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார்.

மேலும் 250 பொது தீட்சிதர்களின் குடும்பங்களின் தனிப்பட்ட நலனைவிட பொது நலனைக் காப்பது முக்கியமான தென்று சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை எண்: 7843/87, நாள்: 17-2-97 தீர்ப்பில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தப் பிரச்சினையில் எந்தத் தலையீடும் செய்யவில்லை என்பதையும், நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் காரியங்கள் நடைபெற்றுள்ளன என்பதையும், இதிலே யாருக்காவது பிரச்சினை இருக்குமாயின் அவர்கள் நீதிமன்றத்தின் மூலம்தான் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள இயலும் என்பதையும், உடனடியாக இதிலே அரசு எதுவும் செய்வதற்கில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் அழகிரி போன்றவர்கள் அவர்களுக்கு யோசனை கூறி, நீதிமன்றத்தின் மூலமாக இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண முன்வருவதற்கு அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் இதனை நான் நிறைவு செய்கிறேன்.

காவல் துறை பிரச்சினை

உரை : 63 **நாள்: 15.4.1997**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாப்பூரில் நடைபெற்ற இந்த விரும்பத்தகாத சம்பவம் குறித்து அந்தத் தொகுதி யினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு.இராமஜெயம் அவர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு.ஞானசேகரன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு.பெரியசாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு மணி அவர்களும், அ.இ.அ.தி.மு.க.வின் சார்பில் திரு. திருநாவுக்கரசு அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

காவலர்களால் அல்லது காவல் நிலையத்தில் இது போன்ற சாவுகள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும், தொடராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் மிகுந்த எச்சரிக்கையோடு இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பது மாத்திரமல்லாமல் குற்றம் நிகழ்ந்த இடத்திலுள்ள காவலர்கள் கடுமையான தண்டனைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள் என்பதையும் இந்த அவை மிக நன்றாக அறியும். திரு.பெரியசாமி அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், காவல் நிலையங்களில் நடைபெறுகின்ற இதுபோன்ற செயல்களை இந்த அரசு உடனுக்குடன் கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். கடந்த காலத்தில் இந்த ஆட்சியில் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் தயவு தாட்சண்யம் பாராமல் அதற்குக் காரணமான காவலர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு, நடைபெற்று வருகின்றன என்பதையும் நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த விவரங்களுக்குள்ளே

போக நான் விரும்பவில்லை, நேரமில்லாத காரணத்தால் உறுப் பினர்களுக்கே மிக மிக நன்றாகத் தெரியும். இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அரசு அறிவித்து அந்த அறிவிப்பின் அடிப்படையிலே இன்றைக்கு இந்த அவையிலே பேரவை விதி 110-ன் கீழே ஒரு அறிக்கையை நான் வைக்க இருந்தேன் என்பதையும் பேரவைத் தலைவராகிய தாங்கள் இங்கே அறிவித்திருக்கிறீர்கள்.

இதற்கிடையில் இந்தச் சம்பவம் குறித்து போலீசார் என்ன அறிக்கை தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல் துறை மூல மாகக் கொடுக்கப்பட்ட அறிக்கையை கடந்த கால அரசைப்போல அப்படியே நம்பிவிடாமல் அதற்காக வக்காலத்து வாங்காமல் உண்மை எது என்று தெரிந்துகொள்ள நீங்கள் எல்லாம் விரும்பு வதைப் போலவே நானும் விரும்புகிறேன் என்பதை முதலி லேயே கூறிவிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினுடைய அறிக்கையில் 12-4-1997 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் மயிலாப்பூர் சரகப் போக்கு வரத்துப் பிரிவைச் சேர்ந்த முதல்நிலைக் காவலர் எண் 6691-திரு.ஐசக் தேவராஜ் என்பவர் மயிலை லஸ் முனையில் அலுவலில் இருந்தார். அப்போது எதிர்ப்புறம் இருந்த மற்றொரு போக்குவரத்துப் பிரிவு முதல்நிலைக் காவலர் எண் 7024 திரு.வேலாயுதம் என்பவரைப் பெயர் சொல்லி, 'இங்கு வாடா' என்று அழைத்தார். அப்போது அவ்வழியாகச் சென்ற ரமேஷ் என்பவர் தன்னைத்தான் அக்காவலர் 'வாடா' என்று அழைப்ப தாக நினைத்துக்கொண்டு அதுகுறித்து வினவ, அவருக்கும் காவலர் திரு.ஐசக் தேவராஜ் என்பவருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது. திரு.கருடபதி தனது ஜீப் எண் டி.எஸ்.பி. 8453-ல் ரமேஷை ஏற்றி அவருடன் முதல்நிலைக் காவலர் எண் 7024 வேலாயுதத்தையும் மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அனுப்பி வைத்தார்.

ஜீப் மயிலாப்பூர் காவல் நிலையம் அருகில் உள்ளே நுழைவதற்காகத் திரும்பியபோது ரமேஷ் ஜீப்பிலிருந்து இறங்கி

ஓட ஆரம்பித்தார். முதல்நிலைக் காவலர் திரு.வேலாயுதம் ரமேஷைப் பின்தொடர்ந்தபோது ரமேஷ் கச்சேரி சாலையில் ராஜா திருமண மண்டபத்திற்கு எதிரே உள்ள கல்விவாரு தெருவிற்குள் நுழைந்து ஓடி இருட்டில் தப்பிவிட்டார். ஆகவே முதல்நிலைக் காவலர் திரு. வேலாயுதம் ரமேஷைப் பின் தொடராமல் திரும்ப காவல் நிலையத்திற்கே வந்துவிட்டார்.

சிறிது நேரம் கழித்து, ராஜா திருமண மண்டபத்திற்கு எதிரே உள்ள சென்னை துரித பறக்கும் இரயில் திட்ட அலுவல கத்தைச் சேர்ந்த காவலாளி மூர்த்தி என்பவர் காவல் நிலையத் திற்கு வந்து, அடையாளம் தெரியாத நபர் ஒருவர் பக்கிங்காம் கால்வாயில் மூழ்கிவிட்டதாகக் கொடுத்தப் புகாரின் பேரில் இ-1 மயிலாப்பூர் காவல் நிலையக் குற்ற எண்.918/97 பிரிவு 174, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பின்னர் தீயணைப்புத் துறை உதவியுடன் இறந்துபோன நபரின் சடலம் எடுக்கப்பட்டு, இராயப்பேட்டை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டு அங்கு சவக்கிடங்கில் வைக்கப் பட்டது. இறந்துபோனவரது உடல் அடையாளம் தெரியாமல் இருந்ததால் அவரது புகைப்படம் 'தினகரன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.

13-4-1997 அன்று காலை 'தினகரன்' பத்திரிகையில் இறந்துபோன நபரின் புகைப்படத்தைக் கண்ட மயிலாப்பூரில் வாழும் சிலர் இறந்துபோனவர் ரமேஷ்தான் என அடையாளம் கண்டு கொண்டு மயிலாப்பூர் காவல் நிலையம் அருகில் வந்து, ரமேஷ் காவல் துறையினரால் அடிக்கப்பட்டு மரணம் எய்திய தாகக் குற்றஞ்சாட்டி, ஆர்ப்பாட்டம் செய்தனர்.

காவல் துறை அதிகாரிகள் விரைந்துவந்து மேற்படிச் சம்பவம் குறித்து விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரைக் கலைந்து போகும்படி கேட்டுக் கொண்டார்கள்.

அக்கூட்டத்தின் ஒரு பகுதியினர் 'தினகரன்' நாளிதழின் அலுவலகத்திற்குள் நுழைந்து, ரமேஷ் தவறி விழுந்து இறந்து விட்டதாகப் பொய்யான செய்தியைப் பிரசுரித்ததாகக் கூறி சில கண்ணாடிக் கதவுகளை உடைத்துச் சேதப்படுத்தினார்கள். மேலும் ஒரு ஆட்டோ, ஒரு வேன், மற்றும் ஒரு கார் ஆகியவற்றையும் சேதப்படுத்தினார்கள். 'தினகரன்' அலுவலகத்திலே பணிபுரியும் 7 நபர்களைக் காயப்படுத்தினார்கள்.

இச்சம்பவத்தைக் காரணமாகக் கொண்டு சில விஷமிகள் லஸ் முனை பகுதியில் உள்ள கடைகளின் கண்ணாடிப் பெயர் பலகைகள் மற்றும் 3 பல்லவன் போக்குவரத்துக் கழகப் பேருந்து களின் கண்ணாடிப் பகுதிகள் ஆகியவற்றைச் சேதப்படுத் தினார்கள். காவல் துறை உயர் அதிகாரிகள் கூடுதல் காவலர் களோடு விரைந்து சென்று மயிலாப்பூர் பகுதி பிரதிநிதிகளோடு, 'ரமேஷ் மரணம்' குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, இச்சம்பவம் குறித்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் விசாரணைக்கு காவல் துறை நிலை ஆணை எண். 145-ன்படி அனுப்பப்பட்டதாகத் தெரிவித்தார்கள்.

அச்சமயம் திடீரென்று 500 பேர் அடங்கிய கும்பல் ஒன்று காவல்துறை இணை ஆணையாளர் அவர்களின் கார் மீதும், காவல்துறை லாரி மீதும், மற்றும் அங்கிருந்த காவல்துறை அதிகாரிகள், காவலர்கள் மீதும் கல்லெறிந்து வன்முறையில் ஈடுபட்டது. எனவே, நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர, தகுந்த முறையில் எச்சரிக்கை செய்த பின்னர், 4 கண்ணீர்ப் புகை குண்டுகள் வீசப்பட்டன. அதற்குப் பிறகும் வன்முறைக் கும்பல் கலைந்து செல்லாததால் அவர்கள் விரட்டப்பட்டனர். இச்சம்பவத்தில் சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர், டி-5, மெரினா காவல் நிலைய ஆய்வாளர், இ-3, தேனாம் பேட்டைக் காவல் நிலைய உதவி ஆய்வாளர் மற்றும் தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்கள் 14 பேர் காயமுற்றனர்.

இறந்துபோன ரமேஷின் தந்தை திரு.கபாலீஸ்வரன், போலீஸ் ஜீப்பில் ஏற்றிச்செல்லப்பட்ட ரமேஷை போலீசார் தாக்கி கால்வாயில் எறிந்துவிட்டு, ரமேஷ் தப்பி ஓடிவிட்டான்

என்று பொய் சொல்வதாகக் கூறி இது சம்பந்தமாகக் காவல் துறை நிலை ஆணை எண். 145/-ன் படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின் விசாரணை கோரி மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.இராமஜெயம் மூலம் ஒரு மனுவைக் கொடுத்துள்ளார். ஏற்கெனவே இவ்வழக்கு மேல் விசாரணைக்காக மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று காவல் துறை அறிக்கை இவ்வாறு தெரிவிக்கிறது.

இந்த அறிக்கையில் சொல்லப்பட்ட விஷயங்களில் நம்பிக்கை பலருக்கு வராத காரணத்தாலும், அரசுக்கும் முழுமையாக இதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தாலும், இன்றைக்கு நீதிவிசாரணைக்காக ஆணையிடப் பட்டு அதன் தொடர்பான அறிக்கையை உங்கள் முன் வைக்க விரும்புகிறேன்.

12-4-1997 அன்று இரவு 8½ மணி அளவில் சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த கபாலீஸ்வரன் அவர்களுடைய மகன் ரமேஷ் என்பவரைக் காவலர்கள் கைது செய்து மயிலாப்பூர் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றபோது தப்பிவிட்ட தாகக் கூறப்படும் சம்பவம் குறித்தும், பிறகு அவரது உடல் பக்கிங்ஹாம் கால்வாயில் மிதந்தது குறித்தும் அதன் தொடர்ச்சி யாக 13-4-1997 அன்று ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்கள் குறித்தும், இச்சம்பவங்களில் தனியார் மற்றும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது குறித்தும், உண்மை நிலையைக் கண்டறிய ஓய்வுபெற்ற சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. எம். மருதமுத்து அவர்களைக் கொண்டு ஒரு நபர் நீதி விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து அதற்கான அரசாணை இன்று வெளியிடப்பட இருக்கிறது என்பதை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் குடும்பத்திற்கு நிதி உதவி தரவேண்டுமென்று அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. இராமஜெயம் அவர்களும், தொடர்ந்து பேசிய உறுப்பினர்களும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இறந்துபோன

ரமேஷ் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் அரசின் சார்பில் நிதி உதவியாக அளிக்கப்படும் என்பதையும், ஏற்கெனவே கடம்பூரில் பெரிய தங்கவேலுவைத் தொடர்ந்து இன்னொரு வரும் இறந்துவிட்டிருக்கிறார். அந்தக் குடும்பத்திற்கும் 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மயிலாப்பூர் என்றதும் எனக்குப் பழைய நினைவு ஒன்று வந்தது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில், 1994-ஆம் ஆண்டு ஜூன் திங்களில், இதே மயிலாப்பூர் காவல் நிலையத்தில் சதீஷ் குமார் என்ற 13 வயது சிறுவன் வழக்கு குறித்து காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்துச் சென்றபோது அடித்துக் கொலை செய்யப்பட்டார் என்று கூறப்பட்டது. அதே வழக்கில் வெறும் ஆர்.டி.ஓ. விசாரணைதான் நடத்தப்பட்டது.

அப்போது அந்தப் பையன் சதீஷின் தந்தை, தானே நீதி மன்றத்திலே முறையீடு செய்து கொண்டதன் பேரில் சி.பி.சி.ஐ.டி. விசாரணை மாத்திரம் நடைபெற்றதே தவிர நீதிவிசாரணை அப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் இப்போது எதிர்க்கட்சிகளுக்கு அவர்களுடைய கருத்துக்கு அரசு மதிப்பளிக்கின்ற வகையிலும், அரசே உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். தன்னடித்த மூப்பிலே எந்த முடிவையும் எடுக்கக்கூடாது என்பதற்காகவும், இந்த நீதிவிசாரணை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை லீலாவதி கொலை வழக்கு

உரை : 64 **நாள் : 24.04.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து யார் யார் பேசுவதற்குப் பெயர் அளித்திருக்கிறார்கள் என்ற பட்டியலைத் தாங்கள் இங்கே வெளியிட்டு இருக்கின்றீர்கள். இருந்தாலும் நானும் ஒருமுறை அவர்களுடைய பெயர்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. வ. வேலுசாமி, திரு. அ. தெய்வநாயகம், திரு. நா. பெரியசாமி, திரு. கே. தங்கமணி, டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. ஜி. பழனிசாமி, திரு. டி. மணி. டாக்டர் இ. எஸ். எஸ். இராமன், திரு. எல். சந்தானம், திரு. சி. வேலாயுதன், திரு. சி. ஞானசேகரன், திரு. ம. அப்துல் லத்தீப், திரு. ப. ரங்கநாதன், திரு. பி. வெங்கடசாமி, திரு. இ. கணேசன், ஆகிய இந்த 16 பேரும், இந்த நிலை குறித்து விளக்கம்கேட்க விரும்பி இருக்கிறார்கள் என்றால், மதுரையில் நடைபெற்ற இந்த பயங்கரமான படுகொலையை, கட்சிகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டு மனிதநேய உணர்வோடு எல்லா அரசியல் கட்சிகளும் கண்டிக்கின்றன என்பதற்கு அடையாளமாகத்தான் 16 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பி இருக்கின்றார்கள்.

மதுரையிலே கொலை செய்யப்பட்ட திருமதி லீலாவதி அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஒரு கடுமையான உழைப்பாளி, பொதுநலத் தொண்டர், அவர் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். நேற்று இந்தச் செய்தி மாலைப் பத்திரிகையிலே வருவதற்கு முன்பே, எனக்கு அறிவிக்கப்பட்டது. மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையிலே அங்கம்

வகிக்கின்ற திரு. மணி அவர்களும் இந்தச் செய்தியை எனக்கு நேற்றைக்கே எடுத்துச் சொன்னார்கள்.

பத்திரிகைகளுக்கு ஒரு வேண்டுகோளை மாத்திரம் விடுக்க விரும்புகின்றேன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரண்டு கட்சிகளின் சார்பில், இந்த இரண்டு கட்சிகளும் ஒரு காலத்திலே பிரிய நேரிட்டபோது, இடது கம்யூனிஸ்ட் கட்சி என்றும் வலது கம்யூனிஸ்ட் கட்சி என்றும் எப்படியோ அழைக்கப்பட்டு அவர்கள் இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) என்று தங்களுடைய பெயரை அமைத்துக்கொண்டாலும்கூட, ஏடுகளில் இப்போதும் இ. கம்யூனிஸ்ட், வ. கம்யூனிஸ்ட் என்றே செய்திகளை வெளியிடுகிறார்கள். இ.கம்யூனிஸ்ட் என்கிற நேரத்திலே எனக்கேகூட ஏற்படுகின்ற குழப்பம். இது இந்திய கம்யூனிஸ்ட் என்ற பொருளில் போட்டிருக்கிறார்களா அல்லது இடது கம்யூனிஸ்ட் என்ற பொருளில் போட்டிருக்கிறார்களா என்ற குழப்பம் எனக்கேகூட ஏற்படுகிறது. எனவே, நான் இன்றைக்கு இந்த இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பில் முதல் வேண்டுகோளாக அந்த ஏடுகளைக் கேட்டுக்கொள்வது, இந்தப் பெயர்களை வெளியிடும்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி என்றும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும் - அவ்வளவு நீளமாகப் பெயரை வெளியிட முடியாவிட்டால், இ. கம்யூனிஸ்ட் என்றால், இந்திய கம்யூனிஸ்டைக் குறிக்கும் என்றும், மா. கம்யூனிஸ்ட் என்றால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைக் குறிக்கும் என்றும் - அந்த அளவிலாவது பெயர்களைப் போட்டால் இந்தக் குழப்பங்களுக்கு ஒரு முடிவு ஏற்படும் என்ற வேண்டுகோளை பத்திரிகைகளுக்கு முதலிலே நான் விடுக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

23-4-1997 காலை சுமார் 8.15 மணியளவில் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) மதுரை மாவட்டக் குழு உறுப்பினரும், மதுரை மாநகர 59-வது வார்டின் மாமன்ற உறுப்பினருமான, திருமதி லீலாவதி, குப்புசாமி அவர்களின் துணைவியார், நாடார் காம்பவுண்டைச் சேர்ந்தவர் வில்லாபுரம், மதுரை என்ற முகவரியிலே உள்ளவர், கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தைக் கண்ட திருமதி லீலாவதியின் கணவரான திரு. குப்புசாமி மதுரை கீரைத்துறை காவல்

நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார். அப்புகாரில் தன் மனைவி திருமதி லீலாவதி மதுரை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் 59-வது வார்டில் போட்டியிட்டு மாமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், அதே வார்டில் அவருக்கு எதிராக திருமதி வள்ளி கருமலையான் என்கின்ற அண்ணாதுரையினுடைய துணைவியார் தோல்வியடைந்து விட்டார் என்றும் அதன்பிறகு கருமலையான் என்கின்ற அண்ணாதுரையும் அவரது சகோதரர் முத்துராமலிங்கமும் - முத்துராமலிங்கம், 59-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் - இருவரும் திருமதி லீலாவதியின் வீட்டிற்கு வந்து தகராறு செய்து அவரை பயமுறுத்திச் சென்றார்கள் என்றும், லீலாவதி, வில்லாபுரம் பகுதிகளுக்குக் குடிநீர் விநியோகத்திற் காகத் தீவிர முயற்சி மேற்கொண்டபோது கருமலையான், முத்துராமலிங்கம், இருவரும் அவருக்கு எதிராகச் செயல்பட்டதன் காரணமாக முன்விரோதம் கொண்டு 23-4-1997 காலை திருமதி லீலாவதி கடைக்குச் சென்றபோது அவரை மேற்கண்ட இரு நபர்களும் மற்றும் நான்கு பேரும் சேர்ந்து அரிவாள் மற்றும் பயங்கர ஆயுதங்களால் தாக்கியதால் திருமதி லீலாவதி அதே இடத்தில் இறந்து விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். லீலாவதியின் கணவர் குப்புசாமி கொடுத்த புகாரின் பேரில் கீரைத்துரை காவல் நிலையக் குற்ற எண் 334/97 பிரிவுகள் 147, 148, 341, 324 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படி வழக்குபதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தைக் கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் 23-4-1997 அன்று காலை முதல் மதியம் வரை, மதுரை நகரம், வில்லாபுரம், சிம்மக்கல், தேவர்சிலை, அரசு இராஜாஜி மருத்துவமனை, பெரியார் பேருந்து நிலையம் மற்றும் சில இடங்களில் சாலை மறியலில் ஈடுபட்டும், கடைகளை மூடும்படி வற்புறுத்தியும் உள்ளார்கள். ஒருசில இடங்களில் நடந்த கல்வீச்சுச் சம்பவங்களால் அரசு போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளும், தனியார் தண்ணீர் லாரியும் சேதப்படுத்தப்பட்டுள்ளன. சில சமூகவிரோதிகள் கடைகளிலும், ஹோட்டல்களிலும் கற்களை எறிந்து சேதம் விளைவித்துள்ளார்கள். இந்த வழக்கில் கருமலையான் என்கின்ற அண்ணாதுரை கைது செய்யப்பட்டுள்ளார். மற்ற எதிரிகளையும் கைது செய்ய காவல் குழுக்கள்

அமைக்கப்பட்டு தீவிர புலன் விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது அப்பகுதியிலே நிலைமை கட்டுக்குள் உள்ளது. நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்வது, இந்தக் கொலையிலே சம்பந்தப்பட்டவர்கள் ஆளும்கட்சியைச் சேர்ந்த தி. மு. க. வினர் என்றாலும்கூட, எந்தவிதமான தாட்சண்யமும் காட்டாமல், பாரபட்சமின்றி அரசு காவல்துறை நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது என்பதை நான் இங்கே உங்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

மறைந்தவர் அல்லது கொல்லப்பட்டவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். அதே நேரத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு உங்களுடைய நினைவைத் திருப்புவீர்களேயானால் குடவாசலில் தங்கய்யா என்ற ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் கொல்லப்பட்டார். ஆனால் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அந்த ஆட்சியிலே அமைச்சர்களுடைய காரிலேயே பாதுகாக்கப்பட்டார்கள் என்பதை அனைவரும் அறிவீர்கள். இந்த ஆட்சி வந்த பிறகு தான் அந்த வழக்கை எடுத்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதையும் அறிவீர்கள். எனவே ஆளும் கட்சியாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், குற்றம் செய்தவர்கள் கண்டிப்பாகத் தண்டிக்கப்படுவார்கள். நடவடிக்கைக்கு ஆளாக்கப்படுவார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு மேலும் ஒரு சான்றாக மதுரை மாநகரத்திலே நடைபெற்ற இந்த மகாபயங்கரமான, சொல்வதற்கே வெட்கப்படத்தக்க, அநாகரீகமான படுகொலையை இந்த அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என்பதையும், இங்கே இதுபற்றிப் பேச விரும்பிய 16 நண்பர்களுடைய உணர்வோடு நானும் என்னுடைய உணர்வை ஒன்றிக் கலக்கிறேன் என்பதையும் எடுத்துக் கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.



தேவர் சிலைக்கு சேதம்

உரை : 65 **நாள் : 29.04.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டத்தில், கண்டமனூரில் தேவர் சிலை சேதம் அடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ரங்கநாதன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. இ. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. மணி அவர்களும் பாரதீய ஜனதா கட்சியின் சார்பில் திரு. வேலாயுதன் அவர்களும், தேவேந்திரர் சங்கத்தின் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும் இங்கே உரை நிகழ்த்தியிருக்கிறார்கள். இதுபற்றிய விவரக் குறிப்பை இந்த அவையின் முன் வைப்பது சிறப்புடையது என்று நான் கருதுகின்றேன்.

வைகை-வீரன் அழகுமுத்து மாவட்டம், கண்டமனூரில் தேவர் பேரவை சமுதாயக் கூடத்தின் எதிரில் தேவர் சிலை ஒன்று சில மாதங்களுக்கு முன் நிறுவப்பட்டு, அது இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. பட்டா நிலத்தில் அந்தச் சிலை வைக்கப்பட்டிருந்தபோதிலும்கூட, அந்தச் சிலையை நிறுவுவதற்கு உள்ளூரில் ஒரு பிரிவினர் எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக் கின்றார்கள். இந்நிலையில், 23-4-1997 அன்று காலை இந்தச் சிலையின் இரண்டு கைகளும் சேதமடைந்திருந்தன. இதையடுத்து, கண்டமனூரில் இரு பிரிவினருக்கும் இடையே பதட்ட நிலை ஏற்பட்டது. பேச்சுவார்த்தை நடத்தப்பட்டபின், சேதமடைந்த சிலைக்குப் பதிலாக புதிய சிலை ஒன்று அதே இடத்தில் 24-4-1997

அன்று காலை வைக்கப்பட்டது. காலை 11.00 மணிக்கு தேவர் பேரவையைச் சேர்ந்த சிலர், சிலைக்குப் பக்கத்திலுள்ள 150 அடிஉயரமான 'மைக்ரோ வேவ்' கம்பத்தில் தேவர் பேரவையின் கொடியை ஏற்றினார்கள். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கூடிய சுமார் 500 பேர்களும், அவர்களுக்கு எதிராகக் கூடிய சுமார் 800 பேர்களும் வன்முறையில் ஈடுபட்டார்கள். சுமார் 100 பேர் மேலத் தெருவில் நாட்டு வெடிகுண்டுகளை வீசியதோடு, இரண்டு வீடுகளுக்குத் தீயும் வைத்தனர். சேதத்தின் மதிப்பு இரண்டு இலட்சம் ரூபாய் ஆகும். மற்றொரு கும்பல், தெற்குத் தெருவில் வீடு ஒன்றுக்கும், வைக்கோல் போர் ஒன்றுக்கும் தீ வைத்ததில் 50,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்கள் சேதமடைந்தன. ஆண்டிப்பட்டி தாசில்தாரின் ஆணையின் பேரில் கும்பலைச் சட்டவிரோதமான கும்பல் என அறிவித்து, கலைந்து செல்ல, கண்டமனூர் காவல்துறை ஆய்வாளர் உத்தரவிட்டும், கலையாமல் வன்முறையில் ஈடுபட்டதால், ஒரு ஆய்வாளருக்கும், 8 காவலர்களுக்கும் காயம் ஏற்பட்டது, வன்முறையில் தொடர்ந்து ஈடுபட்டவர்களைக் கலைக்க காவல் துறையினர் கண்ணீர் புகைக் குண்டுகளை உபயோகித்தும், தடியடி நடத்தியும் பலன் இல்லாததால், துப்பாக்கிச் சூடு நடத்தியதில், கண்டமனூரைச் சேர்ந்த 25 வயதுடைய முருகன் மற்றும் டி.மீனாட்சிபுரத்தைச் சேர்ந்த வேலுச்சாமி என்ற சின்ன வேலுச்சாமி ஆகிய இருவரும் காயமடைந்தார்கள். காயமடைந்த முருகன், மதுரை அரசு மருத்துவமனையிலும், வேலுச்சாமி என்ற சின்ன வேலுச்சாமி ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனையிலும் சிசிச்சை பெற்று வருகின்றார்கள். வன்முறைச் சம்பவங்கள் குறித்து இரு வழக்குகளும், துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து ஒரு வழக்கும் கண்டமனூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. வழக்குகள் புலன் விசாரணையில் உள்ளன. சம்பவ இடத்தில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தச் சிலை வைப்பதில் ஏற்பட்ட கலவரத்தைப் பொறுத்தவரையில் முதல் நாள் இந்தச் சிலையின் கைகள் உடைக்கப்பட்டு, மறுநாளே, அங்கு வேறு சிலை வைக்கப்பட்டது என்பதைப் பார்க்கும்போதே, அது வெண்கலச் சிலையாகவோ அல்லது கருங்கல் சிலையாகவோ அமைக்கப்படவில்லை

என்பதை நாம் யூகிக்க வேண்டியிருக்கிறது. தெளிவாக அது எனக்குத் தெரியாது; அப்படி யூகிக்க வேண்டியிருக்கிறது. இங்கே உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, நம்முடைய ரங்கநாதன் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, பெரிய தலைவர்களுக்குச் சிலை வைக்கத் துவங்கும்போது, அது என்றும் நிலைத்து நிற்கக்கூடிய சிலையாக, ஒன்று கருங்கல் - கருங்கல்கூட, கல் பட்டால் அல்லது உளி பட்டால், இரும்புத் துண்டுகள் பட்டால் அதனுடைய உடலிலே உள்ள அவயவங்கள் ஊனமுறக்கூடும் - ஆகவே வெண்கலச் சிலைகள் நிறுவுவதுதான் ஏற்புடையது; சாலப் பொருத்தமுடையது. என்னைக்கூடப் பல பேர் அழைப்பார்கள்; அப்படி அழைக்கின்ற நேரத்திலே, என்ன சிலை என்று கேட்பேன். அது பொம்மைச் சிலையாக இருந்தாலோ அல்லது 'ப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸ்' என்று சொல்வார்களே, அதிலே செய்யப்பட்ட சிலையாக இருந்தாலோ நான் அதற்கு ஒப்புதல் தருவதில்லை. வெண்கலச் சிலையாக இருந்தால் மாத்திரம்தான், அல்லது ஒருவேளை கருங்கல் சிலையாக இருந்தால் மாத்திரம்தான் ஒப்புதல் தருவது வழக்கம். இல்லாவிட்டால், அந்தச் சிலைகள் எந்த கதிக்கும் ஆளாகலாம் என்ற நிலையில் அவைகளுக்கெல்லாம் நான் ஒப்புதல் தருவதில்லை. இப்பொழுது, சிலைகள் வைப்பது என்பது நண்பர் வேலாயுதன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தமிழ்நாட்டில் ஏராளமாகப் பெருகிக்கொண்டிருக்கிறது என்பதை மறுக்கவில்லை. பெரிய தலைவர்களுக்கு, நம்முடைய மனம் நிறைந்த தலைவர்களுக்கு, நாம் என்றைக்கும் போற்றுகிற தலைவர்களுக்கு, நமக்கு வழிகாட்டிகளாக வருகிற தலைவர் களுக்கு, சிலை வைப்பதிலே தவறில்லை. ஆனால், 'அளவிற்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும்' என்கிற அந்தப் பழமொழியையும் நாம் மறந்துவிடக்கூடாது . அப்படி அளவுக்கு மீறுகிற காரணத்தினால்தான், இப்படி இப்போது, அமிர்தம் எல்லாம் கூட நஞ்சாகிக் கொண்டு வருகிறது, சிலை வைக்கிற விவகாரத்திலே.

சிலை வைப்பது, ஒரு சாரார். அதை உடைப்பது, இன்னொரு சாரார், உடனே போர்க்கொடி பிடிப்பது,

இருசாராருக்கும் இடையிலே ஒரு களம் அமைவது. அந்தக் களத்திலே இரத்தம் சிந்துவது, இப்படிப்பட்ட வன்முறைச் சம்பவங்கள், இன்றைக்குத் தமிழகத்திலே பல இடங்களிலே நடைபெறுவதைக் காணும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. எனவே, அரசினுடைய அனுமதி இல்லாமல், அரசுத் துறையிலே உள்ளவர்களுடைய அனுமதி இல்லாமல், எங்கேயும் சிலை வைக்கக்கூடாது; நாம் அத்தகைய அனுமதியைப் பெற்றுத்தான், சிலைவைக்கவேண்டுமென்ற ஒரு ஏற்பாட்டை, சிலை வைக்கிறவர்கள், தங்களுக்குள்ளாகவே வகுத்துக் கொள்வார்களேயானால், இத்தகைய அசம்பாவிதங்களுக்கு, விரும்பத்தகாத சம்பவங்களுக்கு இடமே ஏற்படாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுச் சொத்துக்களுக்கு ஊனம் விளைவிப்பது, சேதம் விளைவிப்பது என்பது, இன்றைக்குச் சர்வசாதாரணமாகிவிட்டது. எந்த ஒரு சம்பவமாக இருந்தாலும், ஒருவர் கொலை செய்யப்பட்டார் என்ற வதந்தியைக் கிளப்பி விட்டால்கூட அது உண்மையா, அல்லவா என்று தெரிந்து கொள்ளாமலேயே, நெல்லை மாவட்டத்தில், சில பஸ்கள் உடைக்கப்பட்டு, நொறுக்கப் பட்டு, தீயிடப்பட்ட செய்தியெல்லாம் அண்மையிலே வெளி வந்தது. சாலை மறியல் என்பது - எதற்கெடுத்தாலும் இப்போது சாலை மறியல். ஒரு ஃபேஷன்' - ஆகவே ஆகிவிட்டது. நியாயத்திற்காகச் சாலை மறியல் நடந்தால், அதிகாரிகள் சென்று, அவர்களைச் சமாதானப்படுத்தி, அந்தச் சாலை மறியலுக்கான காரணங்களை உணர்ந்து, அந்தக் கோரிக்கைகள் நிறைவேற்றப் படும். ஏதோ எடுத்ததற்கெல்லாம் சாலை மறியல் என்று இன்றைக்குச் செய்கிறார்கள். இந்தச் சாலை மறியலில் ஈடுபடுகிறவர்கள் பெரும்பாலும் பொதுமக்கள் அல்லர்; சில கட்சிக்காரர்கள்; இந்த அரசுக்கு விரோதமான கட்சிக்காரர்கள் தான் இந்தக் காரியங்களிலே ஈடுபடுகிறார்கள். அதுபோலவே, சிலை வைக்கிற இந்த நிகழ்ச்சியிலும்கூட, ஏதாவது ஒரு கலவரம் வரவேண்டுமென்று - நண்பர் திரு. ரங்கநாதன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல - இத்தகைய சதிவேலைகளிலே சிலபேர் ஈடுபடுகிறார்கள். இதற்கெல்லாம், ஒரு ஒழுங்குமுறையை ஒரு வரையறையை உருவாக்க வேண்டுமென்று அரசு ஆலோசித்துக்

கொண்டிருக்கிறது. அது சாலை மறியலானாலும் அல்லது சிலை வைப்பது போன்றவைகளில் ஏற்படுகின்ற குழப்பங்களானாலும், இதற்கெல்லாம் ஒரு ஒழுங்குமுறை வேண்டும். சட்டத்தால் மாத்திரம் ஒழுங்குமுறையைக் கொண்டுவரமுடியாது. சமுதாயத்தை மேம்படுத்த வேண்டும், சீர்திருத்த வேண்டும், ஒழுங்குபடுத்த வேண்டுமென்று எண்ணுகின்ற, அந்தந்தப் பகுதியிலேயுள்ள பெரிய தலைவர்கள், அந்தத் தலைவர்களுக்குக் கீழ் இன்றைக்குப் பணியாற்றுகின்ற தலைவர்கள், முன்னோடிகளாக இருப்பவர்கள் முன்வந்து, ஒரு அமைதியான சூழ்நிலையைத் தமிழகத்திலே தொடர்ந்து காப்பாற்றிட முன்வர வேண்டுமென்று, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாக நினைவுபடுத்தி அமைகின்றேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையில் நடைபெற்றுள்ள அசம்பாவித நிகழ்ச்சி குறித்து, வன்முறை நிகழ்ச்சி குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. வேலுசாமி அவர்களும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. பி. என். வல்லரசு அவர்களும், இந்த இரண்டு பேர் மட்டுமே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பினை இங்கே தந்து அதன்மீது சில விளக்கங்களைக் கூறியிருக் கிறார்கள்.

நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் அவர்களே கோர்வையாக இங்கே சொல்லிவிட்ட காரணத்தால் அவற்றை விரிவாக நான் சொல்லவேண்டும் என்கின்ற தேவை எனக்கு இல்லை.

23-4-1997 அன்று மதுரை மாநகராட்சி மன்ற உறுப்பினர் லீலாவதி அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்து இந்த அவையிலே 16 சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருந்த கவன ஈர்ப்பின்போது நான் பேசியபோது கொலைக்குக் காரணமான வர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, நானே அன்றைக்கு வெளிப்படையாகவே இந்தக் கொலையைச் செய்தவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இந்த மாமன்றத்திலே எடுத்துக்கூறி, 24 மணி

நேரத்திற்குள்ளாக அவர்கள் ஒவ்வொருவராகக் கைது செய்யப்பட்டு, 6-வது நபரும் கைது செய்யப்பட்டு விட்டார் என்ற செய்தி இன்று காலையிலே ஏடுகளிலே வந்திருக்கிறது. இதைவிட ஒரு அரசு எப்படி பாரபட்சம் அற்ற முறையிலே நடந்துகொள்ள முடியும் என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர்கள்தான் எனக்குச் சொல்ல வேண்டும், நடுநிலையிலே உள்ள மற்ற அரசியல் கட்சியினுடைய தலைவர்களும், நண்பர்களும்தான் எனக்குச் சொல்ல வேண்டும்.

ஒரு கொலை நடந்தது, அந்தக் கொலைக்கான காரணங்கள் எவை, எவை என்பதை எல்லாம், எப்படி நடந்தது, ஏன் நடந்தது என்ற செய்திகள் எல்லாம் விசாரணை மன்றத்திலே வர இருக்கின்றன. அதற்கிடையிலே குற்றாவளிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலுசாமிகூடச் சொன்னார். "கொலை செய்தவர் ஒருவர்தான், இருந்தாலும் 6 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்'' என்று சொன்னார். சட்டப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையை, தயவுதாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு எடுத்திருக்கிறது. போலீசாருடைய கைகள் கட்டிப் போடப்படாமல், மேலே இருக்கிறவர்கள் சொல்லுகிற ஆணையின்படிதான் நடக்க வேண்டும் என்ற பழையகால நிலை இல்லாமல் போலீசார் சுதந்திரமாகச் செயல்பட்டு, ஆளும்கட்சியைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் ஒரு ஊர்வலம் என்கிற பெயரால் மதுரை நகர் மாவட்ட ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாக, அந்தப் பகுதியிலே அவர்கள் போலீசாருடைய அனுமதியைப் பெற்றோ, பெறாமலோ சென்று - ஊர்வலம் சென்றதன் நோக்கம், மறைந்துவிட்ட அம்மையாருக்கு மௌன அஞ்சலி செலுத்துவது என்பது அல்லாமல், குற்றம் சாட்டப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்களுடைய வீடுகளை எல்லாம் சூறையாடுவது என்கின்ற முறையிலே சூறையாடப்பட்டிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட முத்துராமலிங்கம் என்கின்ற அவருடைய வீட்டிலே புகுந்து அங்கே இருந்த பொருட்களை எல்லாம் சூறையாடி, கடப்பாறை, கம்பு, அரிவாள் கொண்டு தாக்கி வீட்டுக்குள்ளே இருந்த ரூ. 10 ஆயிரத்திற்கும்

மேற்பட்ட மதிப்புள்ள எவர்சில்வர் பாத்திரங்கள், தொலைக் காட்சிப் பெட்டி, கிரைண்டர், பீரோ ஆகியவற்றை எல்லாம் சேதப்படுத்தி இருக்கிறார்கள். முத்துராமலிங்கத்தினுடைய சகோதரி காளியம்மாள் இல்லத்திலே நுழைந்து கம்பி மற்றும் கட்டைகளால் எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் மின் விசிறி ஆகியவற்றை அடித்து சேதப்படுத்தியிருக்கிறார்கள். செல்லுகின்ற வழியிலே எல்லாம் இருந்த படங்கள் சேதப்படுத்தப்பட்டிருக் கின்றன. குறிப்பாக என்னுடைய படத்தின் மீதும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தின் மீதும், பேராசிரியர் அவர்களுடைய படத்தின் மீதும் தார் ஊற்றி அசிங்கப்படுத்தி யிருக்கிறார்கள். ஊர்வலத்தைத் தொடர்ந்து, கொலை செய்யப்பட்ட லீலாவதியின் வீட்டுக்கு அருகே பொதுக்கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கொலை வழக்கிலே சம்பந்தப்பட்ட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய இல்லங்கள், அவர்களுடைய உற்றார், உறவினர்களுடைய இல்லங்கள் எல்லாம் சூறையாடப் பட்டிருக்கின்றன. நான் கேட்க விரும்புவது, இத்தகைய செயல் புரிந்தவர்களைக் கேட்க விரும்புவது, குற்றவாளிகள் அடையாளம் காட்டப்பட்டு, அவர்கள் ஆளும்கட்சி என்றாலும்கூட அதைப்பற்றிக் கவலைப்படாமல், உரிய நடவடிக்கையை, கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுத்த பிறகும் இந்த அரசை எதிர்த்து கோஷங்களும், கண்டனங்களும் எழுப்புவது முறைதானா, நியாயம்தானா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பார்கள். இதேபோல ஒரு கொலை கடந்த கால ஆட்சியில் குடவாசலில் நடைபெற்றது. தங்கையன் என்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, அந்த வட்டாரத்திலே ஒரு பெரும் சக்தியாக விளங்கிய தோழர் கொல்லப்பட்டார். அப்போது நாமும் சேர்ந்து அதற்கு அனுதாபம் தெரிவித்திருக் கிறோம், கண்டித்திருக்கிறோம். ஆனால் முக்கியக் குற்றவாளிகள் யாரையும் அன்றைக்கு இந்த அரசு தொடக்கூட இல்லை. அது மாத்திரம் அல்ல. அவர்களைப் பாதுகாப்பதற்கும் அரசு அன்றைக்கு முற்பட்டது. அதுவும் எல்லோருக்கும் தெரியும்.

ஆனால், அப்பொழுதெல்லாம் வராத ஆத்திரம், குமுறல், அன்றைக்கு வெடிக்காத பூகம்பம் இன்றைக்கு வெடிக்க முன்வருகிறது என்றால், நான் சொன்னேன், 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்று, அதைப் போலத்தான் எண்ணிக்கொண்டு, இந்த அரசை எந்த வகையிலும் சீர்குலைக்கலாம் என்ற எண்ணத்தோடு சிலர் செயல்பட்டு வருகின்றார்கள். ஆண்டி ரொம்ப நாள் சாதுவாக இருக்கமாட்டான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் 'சாது மிரண்டால் காடு கொள்ளாது' (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பழமொழியையும் வன்முறையாளர்களுக்கு ஞாபகப்படுத்த நான் கடமைப்பட்டிருக் கின்றேன் என்பதைத் தெரிவித்து, சட்டப்படி எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும், சட்டத்தை மீறி அல்லது சட்டத்தைத் தவிர்த்து எந்த நடவடிக்கையும் இருக்காது என்பதையும் குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்தக்கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் முறைப்படி நடவடிக்கை எடுக்கின்ற இந்த அரசு, இந்த விஷயத்திலும் பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கும் என்பதைக் கூறி அமைகிறேன்.



சந்தன மரக் கடத்தல் வீரப்பன்

உரை : 66 **நாள் : 14.10.1997**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனமரக் கடத்தல் வீரப்பன் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ரங்கநாதன், பெரியசாமி, அப்துல் லத்தீப், தீரன், தாமரைக்கனி, சந்தானம், கிருஷ்ணசாமி ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை இந்த அவையிலே எடுத்து வைத்திருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசும், கர்நாடக அரசும் எந்த அளவிற்கு இணைந்து நின்று செயலாற்றி வருகிறது என்பதைக் கடந்த காலத்தில், சில மாதங்களுக்கு முன்பு ஒன்பது பேர் வீரப்பனால் கைது செய்யப்பட்டு அல்லது பிடிக்கப்பட்டு, ஒருவர் உடனடியாக விடுவிக்கப்பட்டு, எஞ்சியிருந்த எட்டு பேரை நக்கீரன் ஆசிரியர் கோபால் அவர்கள் சென்று விடுவித்து வந்த அந்த நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது புரிந்துகொள்ள முடியும். இடையில் சில வாரங்கள் அல்லது பல வாரங்கள் அமைதியாக இருந்த ஒரு சூழ்நிலை மாறி, மீண்டும் வீரப்பன் ஆறு முக்கியமானவர்களை, ஒரு விஞ்ஞானி உட்பட, பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கின்ற அதிர்ச்சி தருகின்ற செய்தி வெளிவந்துள்ளது. வீரப்பன் சரண் அடைய வேண்டும் என்பதுதான் தமிழக அரசு, கர்நாடக அரசு, இரண்டு அரசுகளின் திட்டவட்டமான கொள்கையாகும்.

வீரப்பனைப் பற்றிப் பேசும்போது அவர், இவர் என்றெல்லாம் நான் பேசுகிறேன். அவ்வளவு மரியாதை கொடுத்துப் பேசுகிறார். ஆகவே, முதலமைச்சருக்கும், வீரப்பனுக்கும் தொடர்பு இருக்கிறது என்று அ.தி.மு.க.-வினுடைய சட்டசபை கட்சித் தலைவர் நண்பர் தாமரைக்கனி அவர்கள்

இங்கே பேசினார்கள். நான், எப்போதும், யாருக்கும் மரியாதை கொடுத்துப் பழக்கப்பட்டவன். யாராய் இருந்தாலும், அவள், இவள் என்றோ அவன் இவன் என்றோ நான் யாரையும் அழைப்பதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு எவ்வளவோ ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆட்பட்டு இருக்கின்ற அம்மையார் ஜெயலலிதாவைக்கூட நான் அவர், இவர் என்றுதான் அழைக்கிறேனே அல்லாமல் மரியாதைக் குறைவாக என்றைக்கும் அழைத்தது இல்லை, அழைக்கப் போவதும் இல்லை. அது நான் கற்ற பாடம்.

கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு பட்டேல் அவர்களும், நானும், சென்னையிலே சந்தித்து இருமுறை உரையாற்றியபோது திட்டவட்டமாக அப்போது அறிவித்திருக் கிறோம். பத்திரிகையிலேயும் செய்தி வந்திருக்கிறது. அந்தச் செய்திகளை நான் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், இந்தப் பிரச்சினையை சற்று விரிவாக விளக்க வேண்டிய கடமை எனக்கு இருக்கின்ற காரணத்தால், "எந்தக் காரணத்தை முன்னிட்டும் பிணைத் தொகை கொடுப்பதில்லையென இரண்டு அரசுகளும் முடிவு எடுத்துள்ளன." 5 கோடி ரூபாய் வீரப்பன் கேட்டார். அரசு தர முடியாது என்று முடிவு எடுத்ததை இவ்வாறு குறிப்பிட்டோம். "வீரப்பன் சரண் அடைவாரேயானால், அவருடைய உயிருக்குப் பாதுகாப்பு தரப்படும்" என்று ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்திலே தனி சிறப்பு முகாமில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சட்டப்படி வீரப்பன் வைக்கப்பட நேரிடும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது''. எனவே, பெருந்தன்மையோடு தெரிவிக்கப்பட்டுள்ள இந்த முறைகளை ஏற்று பிணைக் கைதிகளை விடுவித்து, வீரப்பன் சரண் அடைய வேண்டும்.

இந்தப் பெருந்தன்மையான அறிவிப்புகளை வீரப்பன் ஏற்க மறுத்தால், இரண்டு அரசாங்கங்களும் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து வேறு விழியில்லை. பிணைக் கைதிகளின் உயிர்களுக்கு ஏதாவது ஆபத்து நேருமானால் அதற்கு வீரப்பன் மட்டுமே காரணம் என்பதோடு அதற்கான விலையினை அவர்தான் தரவேண்டியிருக்கும் என்றும் தெளிவாக, திட்டவட்டமாக, கண்டிப்பாக அப்போதே தெரிவிக்கப்பட்டு

அதற்குப் பிறகுதான் நக்கீரன் கோபால் அவர்கள் காட்டிற்குச் சென்று வீரப்பனை சந்தித்து இரண்டு முறை உரையாடி அதற்குப் பிறகு 8 பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள் என்பதெல்லாம் அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

அதற்குப் பிறகு 19-8-1997-ல் இந்த 8 கைதிகளும் விடுவிக்கப்படுவதற்கு முன்பு நானும், கர்நாடக முதல்வர் அவர்களும் சந்தித்துப் பேசி கர்நாடக அதிகாரிகள், தமிழக அதிகாரிகள் கூட இருந்து விவாதித்து அறிவிக்கப்பட்ட முடிவுகளில் பொதுமன்னிப்பு தர இயலாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறோம். இப்போது அறிக்கை விடுகின்றவர்கள் அல்லது பேசுகின்றவர்கள், இங்கே பேசிய தாமரைக்கனி உட்பட ஏதோ பொதுமன்னிப்பு வழங்க தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருப்பதாகவும், அதை அறிவித்திருப்பதாகவும் ஒரு உண்மைக்குப் புறம்பான செய்தியைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வருகின்றார்கள். 10 முறை சொன்னால் பொய்யும் உண்மையாகிவிடும் என்ற அந்த நம்பிக்கையிலே சொல்கிறார்கள். இதை சில பத்திரிகைகளும் கூட - விஷயம் தெரிந்த பத்திரிகைகள் எல்லாம் கூட - பொது மன்னிப்பு கொடுக்க தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருக்கிறது என்று சொன்னதாக எழுதிக்கொண்டிருக்கிறார்கள்.

பொதுமன்னிப்பு வேண்டும் என்று கேட்பது காட்டிலே இருக்கிற வீரப்பன். அதை நாங்கள் ஏற்கவில்லை. அவர் கேட்ட காரணத்தாலேயே, கோரிக்கை வைத்த காரணத்தாலேயே, அதை இந்த இரு அரசுகளும் ஏற்றுக்கொண்டது என்று கற்பனை செய்வது சபைக்குதவாத வாதம் ஆகும். நானும் பட்டேல் அவர்களும் பேசிய பிறகு, இரண்டு அரசுகளின் உள்துறை செயலாளர்களும் கையெழுத்திட்டு வெளியிடப்பட்ட அறிக்கையிலே தரப்பட்ட உத்தரவாதங்களை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். ஏனென்றால் ஒரு காலத்திற்கு இது தேவைப்படும் என்பதற்காக இது சட்டமன்றக் குறிப்பேட்டில் பதிய வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடு.

(1) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் சரண் அடைவதை இரு மாநில அரசுகளும் ஏற்றுக்கொள்கின்றன. அவர்களது உயிர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும் உறுதி அளிக்கின்றன.

(2) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் தமிழ் நாட்டிலே உள்ள ஒரு சிறப்பு முகாமில் வைக்கப்படுவார்கள். காவல் துறையினரும், சிறைத் துறையினரும் காவல் இருப்பார்கள். முகாமில் வைத்து உபச்சாரம் பண்ணுவது அல்ல. காவல் துறையினரும் சிறைத் துறையினரும் பாதுகாப்பாக காவல் இருப்பார்கள்.

(3) வீரப்பனும் அவரது கூட்டாளிகளும் சிறப்பு முகாமில் இருக்கவேண்டிய காலம் சட்டப்படி குறைவானதாக இருக்கக்கூடும்.

(4) வீரப்பன் வழக்குகள் விசாரணை தொடர்பாக கைது செய்யப்பட்ட அனைவரும் அவர்கள் மீது குறிப்பிட்ட கிரிமினல் குற்றச்சாட்டு ஏதும் இல்லையென்றால் சட்டத்திற்குட்பட்டு அவர்கள் அனைவரும் ஜாமீனில் விடுதலை செய்யப் படுவார்கள். குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருந்தால் உடனடியாக அவை பரிசீலிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படும்.

இதைத்தான் இங்கே நண்பர் தீரன் அவர்களும், சந்தானம் அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும் சுட்டிக்காட்டினார்களே - அதாவது தமிழர்கள் அங்கே சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வீரப்பன் தொடர்பாக இந்த விவகாரம் தொடர்பாக கர்நாடக மாநிலத்திலும், தமிழகத்திலும் சில பேர், அவர்கள் அப்பாவி மக்களாகக்கூட இருக்கலாம்; கைது செய்யப்பட்டு 3, 4 ஆண்டுகளாகச் சிறையிலே இருந்தார்கள். இந்தப் பேச்சுவார்த்தையின்பொழுது நாங்கள் தமிழக அரசின் சார்பாக எடுத்துச் சொன்னது அப்படி கைது செய்யப்பட்டவர்கள் எல்லாம் தடா சட்டத்திலிருந்து தமிழ் நாட்டைப் பொறுத்தவரையிலே விடுவிக்கப்பட்டு விட்டார்கள். எனவே நீங்களும் கர்நாடகத்திலே சிறையிலே இருப்பவர்களை தடா சட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும்; ஜாமீனில் விடுவிக்க

வேண்டும் என்றெல்லாம் கேட்டபோது அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். இந்தப் பேச்சுவார்த்தையின்பொழுது. ஆனால் 100 பேர், 200 பேர் அல்ல. அதிலே பல பேர் ஜாமீனிலே இன்றைக்கு வெளியே வந்திருக்கிறார்கள். இன்னும் 50, 60 பேர் சிறையில் இருக்கிறார்கள். அதைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறோம். இடைக்காலத்திலே கர்நாடக முதலமைச்சருக்கு நான் கடிதம் எழுதி இருக்கிறேன். அன்றைக்கு அவர் தொலைபேசியிலே என்னோடு தொடர்புகொண்டு பேசியபோது அதைக் குறிப்பிட்டுக்காட்டியிருக்கிறேன். நேற்றைக்கு வந்த கர்நாடக அரசு அதிகாரிகளிடத்திலும் நம்முடைய அதிகாரிகள் அதை வலியுறுத்தியிருக்கின்றார்கள். எனவே தொடர்ந்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.

அது மாத்திரம் அல்ல. ஜாமீனிலே விடுவிக்கப்பட்டவர்கள் கர்நாடக மாநிலத்திலே உள்ள போலீஸ் ஸ்டேஷனிலே கையெழுத்துப் போட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையிலே ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். கர்நாடக மாநிலத்திலே இருந்து கொண்டு அந்தப் பணியினை நிறைவேற்ற வேண்டும்; ஆகவே அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதாக கர்நாடக அரசு உறுதியும் அளித்திருக்கிறது.

(5) வீரப்பனின் உறவினர்களின் நல்வாழ்வுக்கான திட்டங்கள் குறித்து கருணையோடு பரிசீலிக்கப்பட்டு, அவர்களுடைய உறவினர்கள் இந்த 10 ஆண்டு, 15 ஆண்டு காலத்தில் மிகவும் பாழ்பட்டுப்போன குடும்பம், குடும்பமாக இன்றைக்கு அவதிப்படுகிறார்கள். அவர்களின் நல்வாழ்வைப் பற்றி கவனிக்கவேண்டும் என்று வீரப்பன் விடுத்த அந்த வேண்டுகோள் ஏற்கப்பட்டு அது கருணையுடன் பரிசீலிக்கப்படும் என்று ஐந்தாவது உத்தரவாதமாக அளிக்கப்பட்டது.

(6) கர்நாடகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா வழக்குகளும் சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திடமிருந்து சட்டப் பூர்வமாக அனுமதி பெற்ற பிறகு தமிழ்நாட்டிலுள்ள நீதிமன்றங் களுக்கு மாற்றப்படும்.

(7) எந்தக் காரணத்திற்காகவும் கர்நாடகத்திற்கு வீரப்பன் நேரில் வரவேண்டும் என்று கர்நாடக அரசு வலியுறுத்தாது,.

(8) நல்லெண்ணமும், இணக்கமுமான சூழ்நிலை உருவாக பிணைக்கைதிகளுக்கு எந்தவித இடையூறும் தராமல் உடனே அவர்களை வீரப்பன் விடுதலை செய்யவேண்டுமென்று இரு மாநில அரசுகளும் கேட்கின்றன.

இவைதான் 8 உத்தரவாதங்கள். நம்முடைய திட்டவட்டமான கருத்து. அதிலே பொது மன்னிப்பு என்பதற்கு எந்த இடத்திலேயும் எந்த வாசகமும் இல்லை. அதற்கான இடமும் தரப்படவில்லை. அந்த நிபந்தனை ஏற்கப்படவும் இல்லை. இதற்குப் பிறகு வீரப்பன் சரணடைவான் என்று எதிர் பார்க்கப்பட்டது. அந்த எதிர்பார்ப்போடுதான் நண்பர் நக்கீரன் கோபால் அங்கே சென்றார். ஆனால் அதற்கிடையில் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் வீரப்பன் வந்தால் என்ன செய்வோம் தெரியுமா, என்றெல்லாம் விடப்பட்ட பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் இவைகளின் காரணமாக வீரப்பன் பயந்து போய் அப்படியானால் இதற்கு ஜனாதிபதிதான் உத்தரவாதம் தரவேண்டும். இரண்டு முதலமைச்சர்கள் உத்தரவாதம் தந்தால் போதாது. ஜனாதிபதியே உத்தரவாதம் தரவேண்டும்.பொது மன்னிப்பு வேண்டும் என்றெல்லாம் சொன்னார். இந்தப் பொது மன்னிப்பு என்பதை வீரப்பன் புரிந்து கொள்ளாமல் பேசுவதாகத் தான் நான் உணருகிறேன். பொது மன்னிப்பு என்றால் என்ன? திடீரென்று நானும் மாண்புமிகு திரு. பட்டேல் அவர்களும் கையெழுத்திட்டு அல்லது அறிவித்து வீரப்பனுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுவிட்டது என்று சொன்னால் வீரப்பன் காட்டிலிருந்து ஆயுதங்களை எல்லாம் போட்டுவிட்டு தமிழ்நாட்டுக்கோ அல்லது கர்நாடகத்திற்கோ வந்து தாராளமாக நம்மைப்போல் உலாவிக்கொண்டு இருக்கலாம் என்று அவர் கருதுகிறார். ஆனால் உலாவ முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஏன் என்றால் 10 ஆண்டுகாலம் பல பேர்களைக் கொன்று, பல கொள்ளைகளை அடித்து காட்டிலிருந்து விடுதலையாகி வருகிறவரை பழிவாங்குவதற்காகச் சில பேர் காத்துக்கொண்டு இருக்கக்கூடும். எனவே, அவர்களுடைய பாதுகாப்பை முன்னிட்டுதான் சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும்

முன்னிறுத்தி அந்த அடிப்படையில் அவர் தனி முகாமிலே சிறை வைக்கப்படுவார் என்று சொல்லப்பட்டது. அதற்கான முகாம்கள் எல்லாம்கூட தயாரிக்கப்பட்டது. முகாம்கள் தயாராகி அவர் வருகிற தேதிகூட ஓரளவுக்கு இரண்டு அரசுகளுக்கும் அறிவிக்கப்பட்டு அந்த சரணடைகிற நாளும் குறிக்கப்பட்டு, எந்த இடம் என்பதுகூட இந்த இரு அரசுகளிடையே பேசப்பட்டது. கடைசியில் எங்கே இந்த இரண்டு அரசுகளுக்கும் நல்ல பெயர் வந்து விடுமோ என்று எண்ணிய நல்ல மனம் கொண்டோர் சிலர் விடுத்த அறிக்கைகள், விடுத்த பயமுறுத்தல்கள், அச்சுறுத்தல்கள் காரணமாக வீரப்பன் தன்னுடைய போக்கை மாற்றிக்கொண்டு சொன்ன வாக்குறுதியின்படி 8 பேரை மட்டும் விடுவித்து விட்டு, தான் சரணடையத் தயாராக இல்லை என்று கூறிவிட்டார்.

அதற்குப் பிறகு இப்போது நடைபெற்று இருக்கின்ற இந்தச் சம்பவம் உள்ளபடியே நம்முடைய மன வேதனையை அதிகமாக்கக்கூடியது. இந்த அரசு எடுத்துக்கொண்ட அணுகுமுறை பற்றி நம்முடைய திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மற்றும் பேசிய நண்பர்கள் எல்லாம் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இந்த அணுகுமுறை சிறந்த அணுகுமுறை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் ‘‘இரண்டு மாநில அரசுகளும் மத்திய அரசோடு சேர்ந்து கூட்டு நடவடிக்கை எடுக்க முடியுமா’’ என்று ஒரு நிருபர் கேட்ட கேள்விக்கு ‘‘கருணாநிதி இந்தக் காரியத்தை மாநில அரசுகள்தான் செய்யவேண்டும், மத்திய அரசு உதவி தேவை என்று நானும் திரு. பட்டேல் அவர்களும் சேர்ந்து கோரினால் அவர்கள் உதவி அளிக்கத் தயாராக இருப்பார்கள். அதற்கிடையில் வீரப்பன் சரணடைவதுதான் நல்லது’’ என்று கருணாநிதி கூறியுள்ளார் என்று அம்மையார் ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை நீங்கள் கொஞ்சம் ஆழ்ந்து எண்ணிப்பார்க்க வேண்டும். இதிலே மத்திய அரசு தலையிட்டு ராணுவ நடவடிக்கை எடுப்பது இறுதி கட்டம். இதை நான் தடுக்கவில்லை. அதுதான் வழி, வேறு வழியே இல்லை என்றால் அதிலே யாரும் தலையிட விரும்பவில்லை. நானும் திரு. பட்டேல்

அவர்களும் சேர்ந்தே அந்த உதவியை மத்திய அரசிடத்திலே கேட்கத் தயாராக இருக்கிறோம் என்றுதான் என்னுடைய பதிலிலே நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் கர்நாடக முதலமைச்சர் திரு. பட்டேல் அவர்களேகூட 13-ஆம் தேதி அன்று நிருபர்களைச் சந்தித்துப் பேசியபோது என்ன சொல்லியிருக்கிறார் என்றால்; 13-10-1997, பெங்களூரில் அளித்த பேட்டியில் அவர் சொல்கிறார்; "வீரப்பன் பிடியிலே சிக்கியுள்ள 6 பேரை மீட்க இராணுவத்தின் உதவியை மாநில அரசு கோரும். இருந்தபோதும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் தமிழக, கர்நாடக அரசுகள் ஒன்றாக இணைந்து இப்பணியில் ஈடுபட்டால் தான் வெற்றிகரமாக நடத்த முடியும்" என்று பொறுப்புள்ள முதலமைச்சர், அந்தப் பொறுப்பு இருக்கிற காரணத்தால், அவர் சொல்லியிருக்கிறார். பட்டேல் அவர்கள், "இராணுவம் வர வேண்டிய நிலை ஏற்பட்டால் மத்திய அரசு உதவியை நாடுவோம். இருந்தபோதும் எந்த நடவடிக்கையாக இருந்தாலும் தமிழக, கர்நாடக அரசுகள் ஒன்றாக இணைந்து இப்பணியில் ஈடுபட்டால்தான் வெற்றிகரமாக நடத்த முடியும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்: "எங்கள் அரசின் முக்கிய நோக்கம் பணயக் கைதிகள் அனைவரையும் பாதுகாப்பாக மீட்கவேண்டுமென்பதுதான். அதிரடியாகச் செயல்பட்டுத் துப்பாக்கிச் சூட்டில் பணயக்கைதிகளின் உயிருக்கு ஆபத்து வந்துவிடக்கூடாது". இது பொறுப்புள்ள நிலையிலே கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் பட்டேல் அவர்கள் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இருக்கின்ற வாசகங்கள். இது தமிழ்ப்பத்திரிகை மற்றும் ஆங்கிலப் பத்திரிகைகளிலே யெல்லாம்கூட இது வெளிவந்திருக்கின்றது.

எனவே. இராணுவத்தை அனுப்புவது என்பது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. அனுப்பி விடலாம். இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப் போல, வீரப்பன் மாத்திரம் அந்தக் காட்டிலே இல்லை. காடு என்றால் ஏதோ மரங்கள் மாத்திரமே இருக்கின்ற இடம் என்று யாரும் கருதிக் கொள்ளக்கூடாது. நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே ஏழை எளிய மக்கள், பாட்டாளி மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்;

வசித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒரு இராணுவ நடவடிக்கை எடுக்கும்பொழுது, எந்த மாநில அரசும் இந்த இராணுவ நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் எந்த அளவிற்குத் தலையிட முடியும் என்பதை உணர்ந்தவர்கள்தான் உணர்ந்து பார்க்க முடியும். அந்த மக்கள் இராணுவ நடவடிக்கையின்பொழுது எந்தக் கதிக்கெல்லாம் ஆளாக நேரிடும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். எனவேதான் இதிலே ஆத்திரப்பட்டோ, அவசரப்பட்டோ ஒரு முடிவு எடுத்து உடனடியாக இராணுவத்தை அனுப்புங்கள் என்று கூறுவதற்குப் பதிலாக மேலும் பேசிப் பார்த்து ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டும் என்று இந்த அரசும் எண்ணிக்கொண்டிருக்கிறது; அதே கருத்தைத்தான் கர்நாடக அரசுக்கும் இந்த அரசின் சார்பில் நான் கூறியிருக்கின்றேன்.

இங்கே நம்முடைய அ.தி.மு.க. சார்பில் பேசிய தாமரைக் கனி குறிப்பிட்டார்கள் கடந்த ஆட்சியிலே எப்படியெல்லாம் நடவடிக்கை எடுத்தோம் என்று குறிப்பிட்டார்கள். கடந்த ஆட்சியிலும் வீரப்பன் இப்படிப் பலபேரைக் கடத்திச் சென்றிருக்கின்றார்.

3-12-1994 அன்று சந்தனக்கடத்தல் வீரப்பன், கோவை சிறுமுகை அருகே துப்பாக்கி முனையில், கோவை, பெரியார், நீலகிரி மாவட்ட இலஞ்ச ஒழிப்புப் போலீஸ் துணைக் கண்காணிப் பாளர் சிதம்பரநாதன் உள்பட 3 பேரைக் கடத்திச் சென்றார். அவர்களை விடுவிக்க வீரப்பன் அப்போது விதித்த நிபந்தனை என்ன தெரியுமா?

"அதிரடிப்படை போலீசை வாபஸ் பெற வேண்டும்; தன்னைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்; தனது அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும்; தான் சரண் அடைந்தால் தன் மீது வழக்குப் போடவே கூடாது." - வழக்கு போடவே கூடாது என்றார். இப்பவாவது வழக்குப் போடுவதை ஒத்துக்கிட்டு சரண் அடைகிறேன் என்று சொன்னார். "நான் சரண் அடைந்தால் என் மீது வழக்குப் போடக்கூடாது; எனது கோரிக்கையை ரேடியோவில் அறிவிக்க வேண்டும்". இப்படிக் கோரிக்கை வைத்தார்.

உடனே அப்பொழுது இருந்த முதலமைச்சரோ அல்லது அப்பொழுது இருந்த அதிகாரிகளோ, "ஆகா, எங்களுக்கா கோரிக்கை வைக்கிறாய்? விட்டேனா பார்" என்றா பதில் சொன்னார்கள். அவர்கள் சொன்ன பதில் இங்கே இருக்கிறது.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சி. வி. சங்கர், 4-12-1994 அன்று விடுத்த அறிக்கை வருமாறு : "வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கிறவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே, வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டு விட்டது."

என்ன கிழிச்சீங்க அப்ப? (சிரிப்பு) நாங்க இப்ப கிழிக்கிறதைத்தான் அப்ப நீங்களும் கிழிச்சீங்க. "வீரப்பனால் கடத்தப்பட்டவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவதுதான் முக்கியம். எனவே, வீரப்பனைத் தேடும் பணி நிறுத்தப்பட்டு விட்டது" என்று கூறியிருக்கிறார் அரசு சார்பில் கலெக்டர்.

அப்போது வீரப்பன் எழுதிய கடிதத்திலே, "சரண் அடைய விரும்புகிறேன். சரண் அடைந்தால் வழக்குப் போடக்கூடாது. சரண் அடைவது சம்பந்தமாகக் கலெக்டர் என்னோடு பேச வேண்டும்" என்று இருக்கிறது.

நாங்களாவது நக்கீரன் கோபாலை அனுப்பினோம். அப்போது கலெக்டரே பேசினார். "கலெக்டர் என்னோடு பேச வேண்டும்; பேச்சுவார்த்தை சம்பந்தமாக அகில இந்திய வானொலியில் அதிகாரப்பூர்வமாக அறிவிக்க வேண்டும்". அதற்குக் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கர், 6-12-1994-லே கூறுகிறார்: "வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியில் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம்" என்றும், "அவருக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாது" என்றும் அப்போது கலெக்டர், "அவர், அவர்" என்றுதான் சொல்லியிருக்கிறார். - "அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்றும் உறுதி அளிக்கப்படுகிறது. மேலும் பணயமாகப் பிடித்து வைக்கப்பட்டு இருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டுசெல்லத் தடை எதுவும் இருக்காது". இந்தப்

பணயமாக இருக்கிறார்களே, அவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்லத் தடை எதுவும் இருக்காது. "அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வீரப்பன் ஆட்கள் மலைக்கிராமங்களுக்கு நேரிலே வந்து எந்தவித தடையும் இல்லாமல் உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லலாம். அதற்குத் தடை கிடையாது".

இது 6-12-1994-ல் அந்தக் கலெக்டர் கூறியதாகும். அதே கலெக்டர் 8-12-1994-ல் பேட்டி அளிக்கிறார். அதில் கேள்வி கேட்கிறார்கள். கேள்வி கேட்கிறவர்கள் அவன், இவன் என்றுதான் கேட்கிறார்கள். கேள்வி: வீரப்பன் தூதுவன் வர அரசு தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையில் தூதுவன் துப்பாக்கியோடு வந்து பேசுகிறான் . இது சரியா?

இதற்கு கலெக்டர் சொல்கிறார். "அவர் சொந்தப் பாதுகாப்புக்கு துப்பாக்கி ஏந்தி வருகிறார். காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார், எனவே, துப்பாக்கி ஏந்தி வருகிறார்".

நீங்கள் ஏதும் நிபந்தனை விதித்தீர்களா என்று கேள்வி கேட்டதற்கு, 'இல்லை நான் அரசாங்கத்தின் தூதுவராகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன்" என்று கலெக்டர் சொல்கிறார். அப்போதெல்லாம் முதலமைச்சர் பேசமாட்டார். இந்த முதலமைச்சரிடம் பேசலாம். அப்போது முதலமைச்சரை பார்ப்பதே கஷ்டம், நிருபர்கள் தவம் கிடக்க வேண்டும் பார்ப்பதற்கு. அதனால் கலெக்டர்தான் பேச வேண்டும். கலெக்டர் சொல்கிறார், நான் அரசாங்கத்தின் தூதுவராகப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறேன். பேச்சு நடத்தத் தேவையான தடையில்லாத வசதி செய்துள்ளோம். கலெக்டர் மாத்திரமல்ல, சென்னையிலே 9-12-1994-ல் தலைமைச் செயலாளர் ஹரிபாஸ்கர் - பலருக்குத் தெரியும் ஹரிபாஸ்கர் பற்றி - அவர் சொல்கிறார் பிரஸ்சிலே, "வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டுவரும்போது எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது, மற்றொன்று, சிறையிலுள்ள வீரப்பன் கோஷ்டியை

தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால் மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும் என்று பேபி கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப்படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும் மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும். பேச்சுவார்த்தை முடிந்து பேபி மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்". இவைகளுக்குப் பிறகுகூட, வீரப்பனுடைய தம்பி அர்ச்சுனன் செய்தியாளர்களிடம் "நாங்கள் சரணடைய மாட்டோம், தண்டனை அனுபவிக்க மாட்டோம், எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து ஜனாதிபதி எழுத்துமூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்" என்று சொல்கிறார். அப்போது மறுபடியும் ஹரிபாஸ்கர் சொல்கிறார். "ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம். பூலான் தேவியைப் போல, மான்சிங்கைப் போல நடத்தப்படவேண்டுமென்று வீரப்பன் கேட்டால், பூலான் தேவியும், மான்சிங்கும் ஜெயில் தண்டனை அனுபவித்தார்கள். சட்டத்திலிருந்து யாரும் விலகிச் செல்ல முடியாது. போலீஸ் துணை சூப்பிரண்டெண்டென்ட் மற்றும் இருநபர்களை நாம் மீட்க வேண்டும்". வீரப்பன் இருக்கும் இடம் அரசுக்குத் தெரியுமா? இது கேள்வி. ஹரிபாஸ்கர் தலைமைச் செயலாளர் சொல்கிறார். "வீரப்பன் இருக்கும் இடம் அரசுக்குத் தெரியும். ஆனால் மூன்று பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது." யாருக்கும் யாருக்கும் உறவு! வீரப்பன் இருக்கின்ற இடம் தெரிந்த அரசு அது, தெரியாத அரசு இது. (மேசையைத் தட்டும் ஒலி) யாருக்கும் யாருக்கும் உறவு என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆகவே, இங்கே உறுப்பினர்கள் எடுத்துக்காட்டியதைப்போல ஒரு அதிரடி, அல்லது ஆத்திரம், அவசரம் என்ற இந்த அணுகுமுறைகளை விடுத்து, அதற்குத் தேவைப்படும்போது அதைத் தவிர்க்காமல்,

இடையிலே மீட்கப்படவேண்டிய உயிர்களைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டும். நேற்று முன்தினம்கூட அந்த விஞ்ஞானியின் துணைவியார் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு பேசினார். பேசும்போது ஒரு முதலமைச்சரிடம் பேசுவதற்கு எனக்கு அனுமதி கிடைத்ததே நான் செய்த பாக்கியம். நன்றி கூறிக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டு அழுதார். பேச்சிலே பெரும் பகுதி அழுகையாகவே இருந்தது. கதறிக் கதறி அழுது தன்னுடைய கணவரை எப்படியாவது விடுவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மறுபடியும் ஃபேக்ஸ் செய்தியாக, கடிதம்கூட எழுதினார். பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. பத்திரிகையிலே அந்தக் கடிதத்தை வெளியிட்டதன் காரணம்கூட, வீரப்பன் அந்தப் பத்திரிகையைப் பார்க்க நேரிடும்; நேரிட்டால் அந்தப் பெண்மணியினுடைய கூக்குரலைக் கேட்டாவது மனம் இளகக்கூடும் என்ற அந்த நம்பிக்கையின் காரணமாகத்தான் அந்தச் செய்தியைக்கூட பத்திரிகையிலே வெளியிட்டிருக்கிறோம்.

நேற்றையதினம் நக்கீரன் ஆசிரியர் கோபாலை சந்தித்தோம். இதைப் பற்றி பேசியிருக்கிறோம். அவர் என்ன சொல்கிறார் என்றால், "நான் நல்ல எண்ணத்தோடு தமிழக அரசின் சார்பாக தூது சென்றதற்கு என்னைப் பற்றி மிகக்கொடுமையான வார்த்தைகளைக்கொண்டு ஜெயலலிதா போன்றவர்கள் அர்ச்சனை செய்கிறார்கள். சில பத்திரிகைகள் பொறாமை எண்ணத்தோடு என்னைப்பற்றி எழுதுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் நான் எதற்காக மறுபடியும் போக வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார்.

அது மாத்திரமல்ல, வீரப்பன் மிகவும் ஆத்திரத்தோடு இருப்பதாகவும், நான் சென்றால் முயற்சி இப்போது பலிக்குமா பலிக்காதா என்ற சந்தேகத்தில் தான் இருப்பதாகவும் நேற்றைய தினம் என்னிடத்திலே சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார். இருந்தாலும் யோசிப்பதாகக் கூறியிருக்கிறார். நானும் ஒரு risk எடுத்துக்கொண்டு, சென்றுதான் தீரவேண்டும் என்று பிடிவாதமாக அவரை அனுப்புவதற்கு விரும்பவில்லை. இதுதான் இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலை. மாண்புமிகு பட்டேல் அவர்கள், கர்நாடக

முதல்வர் அவர்கள், டெல்லியிலிருந்து திரும்பிய பிறகு ஒரு வேளை நானும் அவரும் சந்திக்கக்கூடும். சந்தித்துப் பேசிய பிறகுதான் அடுத்த கட்ட நிலை பற்றி யோசிக்க முடியும் என்பதைத் தெரிவித்து, இந்தப் பிரச்சினை குறித்து இந்த அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறுத்தி அமைகின்றேன். வணக்கம்.



வேலை வாய்ப்பு உறுதி அளிப்பு திட்டம்

உரை : 67 நாள் : 18.10.1997

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினையை நெல்லை மாவட்டத்திற்கு மட்டுமல்ல தமிழ்நாடு முழுமைக்கும் விளக்கிக் கூறவேண்டிய ஒரு சூழ்நிலை எனக்கு உருவாகியிருக்கிறது. இந்தச் சூழ்நிலை ஏன் எப்படி எழுந்தது என்பதெல்லாம் எனக்கு மிக நன்றாத் தெரியும். இங்கே நான் தருகிற விளக்கம் 1995-96-ஆம் ஆண்டில் இதுபோன்ற திட்டங்கள் வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டங்களின் கீழ் நடக்கின்ற பணி ஒரே ஒரு குருவிக்குளம் ஒன்றியத்தில் மாத்திரம் தான் 1995-96-ல் கடந்த கால ஆட்சியிலே மேற்கொள்ளப்பட்டது. ஒன்றியங்கள் மூலம் செலவு செய்ய 60 இலட்சம் ரூபாயும் வேளாண் பொறியியல் துறை மூலம் செலவு செய்ய 52.50 இலட்சம் ரூபாயும் நிதி ஒதுக்கப்பட்டது. இதில் ஒன்றியங்கள் மூலம் 100 பணிகள் 58.85 இலட்ச ரூபாயும், வேளாண் பொறியியல் துறை மூலம் 51.70 இலட்ச ரூபாயும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. வேளாண் பொறியியல் துறை மூலமாக நிறைய பணிகள் மேற்கொள்வது தவறு என்று இந்த மன்றத்திலே பேசியதாக நான் அறிந்தேன். அன்றையதினம் நான் இந்த மன்றத்திலே இல்லை. ஆனால் மத்திய அரசினுடைய வழிகாட்டுதலின்படி 1993-ஆம் ஆண்டிலேயே வெளியிடப்பட்ட இந்த வழிகாட்டுதல் குறிப்பின்படி "The implementing agencies will be Blocks, Panchayats, Agricultural Engineering and Public Works Departments" என்றிருக்கிறது.

"The Scheme has been implemented from 1-10-1993 in Tamil Nadu" என்று, வேளாண் துறை மூலமாக பொறியியல் துறை மூலமாக செய்வதில் எந்தவிதமான புதிய திருப்பத்தையும் இந்த அரசு உருவாக்கிவிடவில்லை என்பதை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன். 1995-96-ல் குருவிக்குளம் ஒன்றியத்தில் மாத்திரம் நடைபெற்ற இந்த வேலை, 1996-97-ஆம் ஆண்டில் 9 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 219.66 இலட்ச ரூபாயும் வேளாண் பொறியியல் துறை மூலமாக செலவு செய்ய 163.85 இலட்ச ரூபாயும் நிதி பெறப்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்தில், இதில் ஒன்றியங்கள் மூலமாக 219.66 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டுவிட்டது. ஒதுக்கப்பட்டத் தொகை ஒன்றியங்கள் மூலமாக செலவழிக்கப்பட்டுவிட்டது. வேளாண் பொறியியல் துறை மூலமாக ஒதுக்கப்பட்ட 163.85 இலட்சத்தில் 151.40 இலட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றியங்கள் 72 பணிகளை முடித்துள்ளன. மீதமுள்ள 154 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண் பொறியியல் துறை 215 பணிகளை முடித்துள்ளது. மீதமுள்ள 21 பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்பிறகு 1997-98 என்று எடுத்துக்கொண்டால் இந்தத் திட்டத்தின் கீழ் 19 ஊராட்சி ஒன்றியங்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட 135 இலட்ச ரூபாயும், வேளாண் பொறியியல் துறை செலவிட 307 இலட்ச ரூபாயும் நிதி வழங்கப்பட்டது.

இதில் வேளாண்மைப் பொறியியல் துறை 236.85 இலட்ச ரூபாயை இதுவரையில் செலவிட்டுள்ளது. 169 பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் தார் மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்கள் 133 லட்ச ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளது. பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த திட்டத்தின் இந்தக் குறிப்புகளை, இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவைக்கு வந்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நான் பெற்ற அறிக்கையை நான் இங்கே கூறவிரும்புகிறேன். இந்த மாவட்டத்தில் அனைத்துப் பிரிவுப் பணிகளும் அரசின் வழிகாட்டுதல் விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் செயல்படுத்தப் பட்டு வருகின்றன. வேலைவாய்ப்பு உறுதி அளிப்புத் திட்டப் பணிகளுக்கான வழிகாட்டுதல் விதிமுறைகளைப் பார்க்கும்போது

Water and Soil Conservation Works - 40%, Minor Irrigation Works - 20%, Link Roads - 20%, Primary Schools and Anganvadi Buildings - 20%. அதிலே, இரண்டாவது, மூன்றாவது, நான்காவது பணிகள் அனைத்தும் ஒன்றியங்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. Minor Irrigation Works, Link Roads, Primary School and Anganvadi Buildings இவைகள் எல்லாம் ஒன்றியங்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. அதாவது 60 சதவிகிதப் பணிகள் ஒன்றியங்கள் மூலமாக நடைபெற்றுள்ளன. 40 சதவிகிதப் பணிகளான Water and Soil Conservation Works-ஐப் பொறுத்தவரையில் அரசுத் துறைகள் மூலமாகத்தான் செய்யவேண்டும். அந்த அடிப்படையில்தான் இந்தப் பணிகள் வேளாண் பொறியியல் துறை மூலமாகச் செய்யப்பட்டுள்ளன. வேளாண் பொறியியல் துறை மூலமாகச் செய்யப்பட்டுவரும் நீர்ப்பாசன திட்டப் பணிகள் நெல்லை மாவட்டத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியின் காரணமாக நிலத்தின் மேற்பரப்பு மிகவும் இறுகி, மேடு தட்டி, பாறை போன்று உரு மாறியிருக்கின்ற காரணத்தால் மனித ஆற்றலை மாத்திரம் கொண்டு இதைச் சீர் செய்ய முடியாது என்பதற்காக, மண்ணை தோண்ட இயலாத அசாதாரணமான நிலையில் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்று மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார். இயந்திரங்களுக்கு இந்த வகையிலே செலவிடப்பட்ட தொகை 10 சதவிகிதம்தான். அதாவது நான் குறிப்பிட்ட பிரிவு-1 என்ற பணிகள், வேளாண் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்ற பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை, இயந்திரங்களுக்காக 10 சதவிகிதத்திற்கும் குறைவானதுதான். 'புரொக்லின்' போன்ற இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. வேலை உறுதி அளிப்புத்திட்டத்தின் விதிமுறைகளின்படி மொத்தத் தொகையில் 60 சதவிகிதம் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியமாகவும், 40 சதவிகிதம் கட்டுமானப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் செலவாகவும் இருத்தல் வேண்டும்.

1996-97-ஆம் ஆண்டு இயந்திரங்கள் பயன்படுத்திய வகையில் 7.20 லட்ச ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. எனவே நெல்லை மாவட்டத்தில் இந்தத் திட்டச் செயல்பாட்டில்

எந்தவிதமான முறைகேடுகளும் நடைபெறவில்லை என்றும் அரசு விதிமுறைகளின்படிதான் செலவுகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

1997-98-ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் இதுவரையில் 226 பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. அவற்றுள் 169 பணிகள் செவ்வனே முடிக்கப்பட்டுள்ளன. இதுவரை செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகையான 236.85 இலட்ச ரூபாயில் 161.65 இலட்ச ரூபாய் விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்பட்டுள்ளது. மக்களுக்கே போய் சேரவில்லை என்ற அவரது கூற்று தவறானது என்பதற்கு இந்தப் புள்ளிவிவரம் சரியான சான்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

52.60 இலட்ச ரூபாய் கட்டுமானப் பொருட்களுக்கும், 22.80 இலட்ச ரூபாய் இயந்திரங்களுக்கும் செலவிடப்பட்டுள்ளது. இவைகளின் சதவிகிதம் முறையே 22 சதவிகிதம் மற்றும் 10 சதவிகிதம் ஆகும். விவசாயத் தொழிலாளர்களுக்குப் போய் சேர்ந்திருக்கின்ற தொகை 68 சதவிகிதம் ஆகும்.

1995-96-ல் ஒதுக்கீடு 60 இலட்ச ரூபாய் செலவு 58.85 இலட்சம். 1996-97-ல் ஒதுக்கீடு 219 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய். செலவு 219 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய். 1997-98-ல் ஒன்றியங்களுக்கு 135 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு. செலவு 133 இலட்ச ரூபாய் மொத்த ஒதுக்கீடு, 1995-96, 1996-97, 1997-98-ன் ஒதுக்கீடு 414 இலட்சத்தில் செலவு 411 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய். வேளாண் பொறியியல் துறையின் மூலமாக இந்த ஒதுக்கீடு, 1995-96, 1996-97, 1997-98-ல் 523 இலட்சம் ரூபாய். அதிலே செலவு 439 இலட்சம் ரூபாய். இரண்டும் சேர்த்து 938 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு, செலவாகி இருப்பது 851 இலட்சம் ரூபாய்.

இஃதன்னியில், அங்கே ஒரு முறைகேடு நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று, அதை அதிகாரிகள் நல்ல முறையில் தடுத்துவிட்டார்கள் என்பதற்கான ஒரு செய்தியை இங்கே நான் கூற விரும்புகிறேன். ஊரக வளர்ச்சித் துறையின்

துணைச் செயலாளர் தன்னுடைய 30-12-1996 தேதியிட்ட கடிதத்தில் திருநெல்வேலியிலுள்ள கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் ஊரக வளர்ச்சிச் சங்கத்தின் கோரிக்கையான திருநெல்வேலி மாவட்ட,த்தில் 'ஜவகர் ரோஜ்கர் யோஜனா' திட்டத்தின்கீழ் சிறிய நீர்ப்பாசனப் பணிகளையும் இராதாபுரம் வட்டத்திலே மீன் குட்டைகளை நிறுவும் பணிகளையும் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள மனுவின் மீது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தன்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று இங்கேயிருந்த ஊரக வளர்ச்சித் துறை துணைச் செயலாளர் கேட்டிருந்தார். அங்கே கஸ்தூரிபாய் பெண்கள் சங்கத்தின் சார்பாக இந்தப் பணிகளையெல்லாம் எடுத்து செய்கிறோம் என்று கூறியிருந்தார்கள். அது தமிழ்நாட்டிலே எங்கிருக்கிறதோ எனக்குத் தெரியவில்லை. வளர்ச்சிப் பணிகளை கவனிக்கும் கூடுதல் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கஸ்தூரிபாய் பெண்கள் மற்றும் ஊரக வளர்ச்சிச் சங்கம் தெரிவித்த இடத்திற்கு 1-7-1996 அன்று சென்று பார்த்தபோது, அந்த முகவரியிலே நிரந்தரமான அலுவலகமோ, கருவிகளோ எதுவுமேயில்லை என்பதோடு ஒரு போர்டு மாத்திரம்தான் இருந்தது என்ற அளவில் அப்படிப்பட்ட பணிகளை எடுத்து செய்யக்கூடிய கடந்த கால அனுபவமோ, தகுதியோ சங்கத்திற்கு இல்லை என்றும் தெரிவித்திருக்கிறார். எனவே, இப்படி முறைகேடு நடப்பதை, செய்யப்பட்ட முயற்சியை முறையிடுகின்ற வகையிலேதான் அதிகாரிகள் அங்கே பணியாற்றியிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்து எந்த முறைகேடும் நடைபெறவில்லையென்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியாளர்கள் பிரச்சினை

உரை : 68 **நாள் : 31.3.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. அழகிரி அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. அருண்குமார் அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. தாமரைக்கனி அவர்களும் கலந்துகொண்டு, தங்களுடைய கருத்துக்களையும், அரசு உடனடியாகச் செய்யவேண்டிய நிலை பற்றிய கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்.

கைத்தறியாளர்களுடைய துன்ப துயரங்களைப் பற்றி, ஆளுநர் உரையின்மீது நடைபெற்ற பொது விவாதத்தில், இந்த மாமன்றத்திலே, உறுப்பினர்கள் பலரும் எடுத்துக்கூறி இருக்கிறார்கள்.

18-3-1998 அன்று ஆளுநர் அவர்கள், இந்த அரசின் சார்பில் ஆற்றிய உரையிலேயே கைத்தறியாளர்களுடைய கஷ்டங்களைத் தீர்ப்பதற்காக ஒரு குழு அமைக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டு, அந்தக் குழுவினருடைய பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. கைத்தறியாளர்களுடைய நிலையை அறிந்து அவர்களுக்குத் துணை புரியவேண்டும், உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு 18-ஆம் தேதி இப்படிப் பட்ட ஒரு குழு அமைக்கப்பட்ட பிறகும்கூட, அதை மேலும் வலியுறுத்துகின்ற நல்ல எண்ணத்தோடோ அல்லது வேறு காரணத்தாலோ, எனக்கு தெரியாது. திருப்பூரிலே கோவை மாவட்டத்தின் பல பகுதிகளிலே இருக்கும் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நெசவாளர்கள் கலந்துகொண்ட ஊர்வலம்

ஒன்று நகரின் புதிய பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு, தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்திய அத்தகைய முழக்கங்களோடு சென்றது.

பாதிக்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்தாயிரம் ரூபாய் வீதம் தமிழக அரசு உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டுமென்ற கோரிக்கை உள்ளிட்ட 9 அம்சக் கோரிக்கைகளை அவர்கள் வெளியிட்டு, அந்த அடிப்படையிலே ரூபாய் வழங்கக்கூடிய அரசின் நிதி ஆதாரம் இடம் தருகிறதா என்பது வேறு விஷயம். இருந்தாலும்கூட ஊர்வலத்தினர் அந்த கோஷத்தை முன்வந்து நடத்தினார்கள். அதிலே பங்குகொண்டவர்களில் நான்கில் மூன்று பகுதியினர் இரவு 7½ மணிக்குக் கூட்டம் நடைபெறும் இடத்தை அடைந்தார்கள். ஊர்வலத்தினுடைய பிற்பகுதியில் கலந்து கொண்டவர்களில் சிலர் அரசுக்கு எதிர்ப்பான முழக்கங்களை எழுப்பியதோடு, மோட்டார் துறையினர் மீதும் கல் வீசித் தாக்கியிருக்கிறார்கள்.

நம்முடைய திரு. அழகிரி அவர்கள் பேசும்போது குறைந் தளவு வன்முறை நடைபெற்றது என்பதை ஒத்துக்கொண்டிருக் கின்றார்கள். நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் பேசும் போது அங்கே காலித்தனம் நடைபெற்றது என்று அந்தச் சொல் லையே பயன்படுத்தி அந்த நிகழ்ச்சியை வருணித்திருக் கின்றார்கள். அசம்பாவிதம் நடைபெற்றது உண்மை என்பதை திரு. சுப்பராயன் அவர்களும் மற்றும் இங்கே பேசிய உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். எனவேதான், அந்தச் சம்பவத்தில் காவல் துறையினர் தலையிட்டு அமைதிப் படுத்த முற்பட்டபோது 5 காவலர்கள் காயம் அடைந்திருக் கின்றார்கள். அவர்கள் ஏதோ தங்கள் உடலிலே ஒரு காயத்தை ஏற்படுத்திக்கொண்டு சிகிச்சை பெற்றார்கள் என்று திரு. தாமரைக்கனி இங்கே குறிப்பிட்டார். அப்படிப்பட்ட நாடகங்கள் அரசியிலிலே நடைபெறுவது உண்டு. நான் மறுக்கவில்லை. காயம்படாதவர்கள் காயம்பட்டதைப்போலக் காட்டிக்கொள்கின்ற காரியங்கள் எல்லாம் அரசியிலிலே நடைபெறுவது உண்டு. நாம் ஒரு காவலர்கள் காயம் அடைந்ததைக் கேலிக்குரிய ஒன்றாக ஆக்கிவிடக் கூடாது. ஏனென்றால் காவலர்களையே தொடர்ந்து

நாம் தூற்றிக் கொண்டிருப்பது, கேலி செய்து கொண்டிருப்பது என்று வந்துவிடுமேயானால் அவர்களும் மனிதர்கள்தான் என்பதை அவர்கள் உணரவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்படும். காவலர்கள் என்பது தனி ஜாதி அல்ல. அவர்களும் இந்த அரசில் பணியாற்றுகின்ற அரசுப் பணியாளர்களைப் போன்று அரசு ஊழியர்கள்தான். அரசு ஊழியர்கள் என்றால் மக்களுடைய ஊழியர்கள்தான். அவர்கள் கேலி செய்வது நம்மையே நாம் கேலி செய்து கொள்வதுபோல என்பதையும் மறந்துவிடக் கூடாது. எல்லாக் காவலர்களும் அல்ல. ஒரு சில காவலர்கள் தவறு செய்யக்கூடியவர்களாக இருப்பார்கள். நான் இல்லை என்று மறுக்கவில்லை. இந்த அவையிலேயே நான் அதைப் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன்.

எனவே, 7.30 மணிக்கு தொடங்கி 9.00 மணிக்கு அந்தப் பொதுக்கூட்டம் முடிவுற்று இருக்கின்றது. இதற்கிடையிலேதான் ஊர்வலத்திலே வந்தவர்கள் கலவரத்திலே ஈடுபட்டு அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கூட்டத்தில் நெசவாளர் சங்கத்தினுடைய மாநிலத் தலைவர் திரு. சுந்தரமூர்த்தி, திரு. சிவசாமி, திரு. பழனிச்சாமி, திரு. நடராஜன், திரு. கோவிந்தசாமி ஆகியோர் உரையாற்றுகின்றபோது அந்த ஊர்வலத்திலே வந்த ஒரு பகுதியினர் ஏற்படுத்திய கலவரத்திற்கும் குழப்பத்திற்கும் வருத்தம் தெரிவித்தே பேசியிருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போது அவர்களே அந்தச் சம்பவத்தை ஏற்றுக்கொள்ள வில்லை; அவர்களையும் மீறிய ஒரு சம்பவமாக நடைபெற்றிருக் கின்றது என்பது மிக மிகத் தெளிவாக நம்மால் உணரக்கூடிய ஒன்றாகும்.

இந்தச் சம்பவத்திலே 51 பேர் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். திருப்பூர் தெற்கு காவல் நிலையத்தில் குற்ற எண் 281/98, இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவு 147, 332, 353, 437 ஆகியவற்றின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட 51 நபர்களில் 48 பேர் தள்ளாடிய நிலையிலே இருந்ததாக எனக்குத் தரப்பட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது. நான் அதை அப்பட்டமாகச் சொல்ல விரும்பவில்லை.

இந்தப் பிரச்சினைக் குறித்துக் செய்திகள் வெளிவந்த வுடன் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்புகொண்டு நிலைமைகளை அறிந்து கொண்டோம். அப்போது இது குறித்து வழக்கு நேற்றையதினம் வந்தபோது ஜாமீன் மறுக்கப்பட்டு விட்டதாகவும், எனினும் இன்றைய தினம் மீண்டும் வழக்கு நீதிமன்றத்திலே வர இருப்பதாகவும் தெரிவித்தார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே அவர்களுக்கு ஜாமீன் வழங்கப்படக் கூடாது என்று அரசின் சார்பில் தெரிவிக்காமல் அவர்கள் விடுதலைப்பெற ஏற்பாடு செய்வதாகவும் மாவட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். ஒருவேளை அப்படி அவர்கள் விடுதலை செய்யப்படா விட்டால்-மாண்புமிகு உறுப்பினர்கள், இங்கே நம்முடைய திரு. சுப்பராயன் அவர்கள் 'மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்' என்று குறிப்பிட்டார், அப்படிப்பட்ட வார்த்தைகள் எல்லாம் என்னைப் பொறுத்த வரையிலே தேவையில்லை என்பது அவருக்கு நன்றாகத் தெரியும், ஒருவேளை இந்த மன்றத்திலே சொல்கிற காரணத்தால் அவர் மன்றாடிச் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரிய வில்லை, இருந்தாலும் - அனுதாபத்தோடு இந்தப் பிரச்சினை கவனிக்கப்படும் என்பதையும், கைத்தறியாளர்களுடைய கண்ணீரைத் துடைப்பதற்கு உங்கள் அத்தனை பேருடைய ஒத்துழைப்போடு எல்லா வகையான நடவடிக்கைகளையும் இந்த அரசு குழுவினுடைய கருத்தைப் பெற்ற பிறகு எடுக்கும் என்பதையும் தெரிவித்து அமைகின்றேன்.

மதுரை பேராசிரியர் பரமசிவம் கொலை

உரை : 69 நாள் : 31.3.1998

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானம் மற்றும் கவன ஈர்ப்பு குறித்து தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு.தெய்வநாயகம் அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி அவர்களும், பா.ம.க. - சார்பில் திரு.கணேசன் அவர்களும், அகில் இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்களும், எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க. சார்பில் திரு.திருநாவுக்கரசு அவர்களும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். மதுரையிலே கொலையுண்ட பேராசிரியர் கே.ஆர். பரமசிவம் அவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதைப் போலவும், நான் கேள்விப்பட்டதற்கிணங்கவும் மிக மிக நற்பண்புகள் வாய்ந்தவர்; யாருடைய வம்புக்கும் போகாத அரும் குணவானாகத் திகழ்ந்தவர். அவர் தனிப்பட்ட பகை காரணமாகவோ அல்லது மதமாச்சரிய வெறியின் காரணமாகவோ, இன்னும் தெளிவான காரணம் கண்டுபிடிக்கப் படமுடியாத சூழ்நிலையில், கொலையுண்டு இருக்கிறார் என்பது வருந்தத்தக்க செய்தி மாத்திரமல்ல மிக மிகக் கண்டிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியுமாகும். அந்தக் கொலை நடைபெற்று இரண்டு நாட்களாகிவிட்டன. இன்னும் குற்றவாளிகள் அல்லது கொலையாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை என்ற மனக்குறையையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வெளியிட்டிருக்கின்றார்கள்.

ஏறத்தாழ நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் விசாரணைக் காக அழைக்கப்பட்டு, காவல்துறையினர் மிகக்கடுமையான முயற்சிகளில் ஈடுபட்டு, இந்தக் காரியத்திலே துணிந்து

இறங்கியவர்கள் யார் என்பதை அறிந்து, கைது செய்வதற்காக முயற்சிக்கின்ற நேரத்தில், அப்படிக் கைதுசெய்து விசாரிப்பதைக்கூடத் தவறு என்று ஒரு கூட்டத்தார் வம்பு செய்ததைக் குறிப்பிட்டு, அது மிக மிகக் கண்டிக்கத்தக்கது, அதற்கெல்லாம் இடம் தரக்கூடாது என்று இங்கே நம்முடைய திரு.தாமரைக்கனி அவர்கள் எடுத்துரைத்தார்கள். பொதுவாக நல்ல காரியங்களுக்காகவும் மக்கள் திரண்டு எழுகின்றார்கள்.சில நேரங்களில் தவறான செயல்களுக்காகவும் திரண்டு எழுகின்றார்கள்.

அண்மையிலேகூட கல் குவாரி ஒன்றில் கற்களைத் திருட்டுத்தனமாக ஏற்றிச்சென்ற லாரியை மடக்கிப் பிடித்தார் என்பதற்காக ஒரு பெண் அதிகாரி கேரோ செய்யப்பட்டு, சாலை மறியல் செய்யப்பட்டு பிறகு காவல் துறை அதிகாரிகள் சென்று அந்தப் பெண் அதிகாரியை மீட்டார்கள் என்ற சம்பவம் சென்னைக்கு அருகிலேயே நடைபெற்றதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள். எனவே திரு.தாமரைக்கனி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இதுபோல எடுத்ததற்கெல்லாம் சாலைமறியல், பஸ்களைக் கொளுத்துதல், பஸ்களைச் சேதப்படுத்துதல் போன்ற இந்தக் காரியங்களைத் தொடர்ந்து இனியும் யாரும் செய்வார்களேயானால், அவர்கள்மீது மிகக் கடுமையான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

ஏற்கெனவே, பேருந்துகளைக் கொளுத்துகின்ற செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு, அவர்கள் எல்லாம் தண்டிக்கப்படுகின்றார்கள். அது மேலும் தொடரக்கூடிய சூழ்நிலை உருவாகும் என நான் எச்சரிக்க வேண்டியவனாக இருக்கிறேன்.

இந்தக் கொலையைப் பொறுத்தவரையில், இது மத விரோதம் காரணமாக நடைபெற்றிருக்கக்கூடிய ஒன்றாக இருக்கலாம் என்று காவல்துறையினர் யூகிக்கின்றார்கள். தனிப்பட்ட முறையில் நடைபெற்ற ஒன்றாக இருக்கக்கூடும் என்றும் சில கருத்துகள் நிலவுகின்றன. எந்தக் காரணமாக இருந்தாலும், கொலை அதற்குப் பரிகாரமானது, கண்டிக்கத்தக்க ஒரு

முறையாகும். அதை நாம் யாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையிலே இல்லை.

நம்முடைய திரு.தாமரைக்கனி குறிப்பிட்டார், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்து முன்னணியினர் இப்படிக் கொலை செய்யப்படுவது சகஜமாகிவிட்டது என்று சொன்னார். நம்முடைய திரு.சந்தானம் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள்: அதே மதுரை மாநகரத்தில் கடந்த ஆட்சிக் காலத்தில்தான் இவரைப்போன்ற ஒரு நல்லவர் ராஜகோபாலன் என்கின்ற இந்து முன்னணியைச் சேர்ந்தவர் கொலை செய்யப் பட்டு, அந்தக் கொலையிலே ஈடுபட்டவர்கள் யார் என்பது கண்டுபிடிக்க முடியாமல் இருந்து, மிக மிகத் தாமதமாக அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அந்த வழக்கு இப்போது இந்த ஆட்சியிலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை இங்கே நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்த ஆட்சியிலே இந்து முன்னணியைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்ல, இந்து முன்னணியினரின் கட்டடங்கள்கூட வெடி வைத்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை மாநகரத்திலே உள்ள ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் குண்டு வைத்து நொறுக்கப் பட்டதும், 11 பேர் இந்து முன்னணி அல்லது ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவர்கள் அந்த இடத்திலேயே மாண்டு மடிந்ததும், கடந்த ஆட்சியிலே நடைபெற்றுருக்கின்றன. எனவே, அந்த ஆட்சி, இந்த ஆட்சி என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல், பொதுவாக இத்தகைய வன்முறைகள் எந்த ஆட்சியில் நடைபெற்றாலும், அதைக் கண்டிக்கக்கூடிய சுபாவத்தை, அந்தப் பண்பாட்டை நாம் கற்றாக வேண்டும். அனைவரும் சேர்ந்து இத்தகைய கொடுமைகளைக் கண்டித்தால், இதுபோன்ற நிலைமைகள் தொடர்ந்து நடைபெறாமல் தடுத்திட இயலும். ஓர் அமைதியை உருவாக்கிட முடியும்.

இந்தக் கொலையைப் பொறுத்தவரையில் போலீசார் மிகத் தீவிரமாகக் கொலையாளிகளைத் தேடுகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். கொல்லப்பட்டவருடைய சகோதரர் பாலசுப்பிரமணியன் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில்

மதுரை, மதிச்சியம் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று, குற்ற எண் 246/98,-ல் இந்தியத் தண்டனைச் சட்டம் 302-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெறுகிறது. இன்றல்ல: நாளை அல்ல: அல்லது நாளை மறுநாள் அல்ல, எப்படியும் குற்றவாளிகளைப் பிடித்தே தீருவோம் என்கின்ற உறுதியை மதுரை மாநகரத்துக் காவல்துறையினர் வழங்கியிருக் கின்றார்கள்.

கொலையுண்டு மரணமடைந்த பரமசிவம் அவர்க ளுடைய குடும்பத்திற்கு இழப்பீட்டுத் தொகை தரவேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருக் கின்றார்கள். அதற்கேற்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் இங்கே தெரிவித்துக்கொண்டு, இந்தக் கொலையிலே நிச்சயமாக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் படுவார்கள் என்ற உறுதியை வழங்கி, இந்த அளவில் இந்தத் தீர்மானத்திலே உரையாற்றியவர்களுக்கு என்னுடைய கருத்து விளக்கத்தைத் தந்து அமைகின்றேன். வணக்கம்.

குண்டுப்பட்டி பிரச்சினை

உரை : 70 **நாள் : 2.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டு காலமாக நடைபெறுகின்ற இந்த ஆட்சியில் சில கோரிக்கைகள் நிறைவேற வேண்டுமென்பதற்காகவும், அது நிறைவேறப் போகிறது என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டுள்ள காரணத்தினாலோ, என்னவோ, அந்தக் கோரிக்கைகளுக்காக மறியல், சாலை மறியல், ஆர்ப்பாட்டம், போராட்டம் போன்ற கிளர்ச்சிகள் நடப்பது வாடிக்கையாகிவிட்டிருக்கிறது. கறக்கிற மாட்டைத்தான் மேலும், மேலும் தொந்தரவு செய்வார்கள் என்பதைப் போல, கேட்டதைக் கொடுக்கின்ற அரசாக இந்த அரசு இருக்கின்ற காரணத்தால், தங்களுடைய கோரிக்கைகள், உடனடியாக சொன்னவுடனே நிறைவேற வேண்டும் என்ற ஆதங்கத்தோடு, எதிர்பார்ப்போடு கோரிக்கைகளை வைத்து, அதற்கான போராட்டங்களிலே ஒரு சில பகுதிகளிலே உள்ளவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களிலே மக்கள் பிரதிநிதிகளும் இதற்கு விலக்கல்ல. அவர்களும்கூட, கோரிக்கைகள் நாளைக்கு நிறைவேறப் போகின்றன என்றால், முதல்நாளே ஒரு போராட்டத்தை நடத்தி தங்களுடைய முயற்சியினால்தான் இந்தக் கோரிக்கை நிறைவேறுகிறது என்று எடுத்துக்காட்டுகின்ற திறமையைப் பெற்றிருக்கிறார்கள். இந்தத் திறமையை நான் பாராட்டுகிறேன். அதே நேரத்தில், அரசுக்கு எதிராக, வேண்டுமென்றே அரசின்மீது பழி சுமத்துகின்ற அளவிற்கு, அந்தத் திறமை பண்பட்டுவிடக் கூடாது என்பதை மிகுந்த பணிவன்போடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று இந்தக் குண்டுப்பட்டி பிரச்சினையில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு.ஜி.கே. மணி அவர்களும்,

திரு.நா.பெரியசாமி அவர்களும். திரு. சந்தானம் அவர்களும் எடுத்துக்கூறிய இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் ஒருசில விளக்கங்களை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு.சந்தானம் அவர்கள் பேசும்போது, அங்கே ஆரம்பத்திலே என்ன நடைபெற்றது என்ற செய்திகளை, பத்திரிகைகளிலே வெளிவந்ததை அப்படியே எடுத்துக்கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம். கொடைக்கானல் வட்டத்தில் சில கிராமங்களுக்கு அத்தியாவசிய அல்லது அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டுமென்றும், குறிப்பாகவும், சிறப்பாகவும் சாலை வசதி உடனடியாகச் செய்துதரப்படவேண்டுமென்றும் எண்ணி, அந்தக் கோரிக்கைகளை முன்வைத்து, அங்கே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்- பெரும்பாலும் இலங்கை அகதிகளாக வந்து வசித்துக் கொண்டிருக்கிறவர்கள்- ஒரு குரலை எழுப்பினார்கள். அதுதான் அரசுக்கோ அல்லது தேர்தலுக்கோ எதிர்ப்பான குரல் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய குரல் ஆகும். அவர்கள் இவ்வாறு மனம் புண்பட்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, அந்தப் பகுதியிலேயுள்ள ஒன்றியத் தலைவர் திரு. வடிவேலு அவர்கள், அவர்களைச் சமாதானப்படுத்தி, இந்தக் கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் எடுத்துச் சொல்லவும், 'நபார்டு' மூலம் இந்தச் சாலை வசதிகளைச் செய்து, சீர்திருத்துவதற்கான பணம் கோரப்பட்டு அதற்கான பணமும் கிடைத்திருக்கிறது என்ற செய்தியை சொல்வதற்காகவும் சென்றிருக்கிறார். இன்னும் சொல்லப் போனால் 2.63 இலட்சம் ரூபாய்க்கு டெண்டரும் விடப்பட்டிருக்கிறது. இவ்வளவுக்கும் பிறகு, இந்தச் செய்திகள் எல்லாம்- டெண்டர் நிலையிலே இருக்கிறது. விரைவிலே சாலைகள் அமைக்கப்படும் என்ற நிலை இருந்தும்கூட, இவை- எல்லாம் இல்லை என்பது போன்ற ஒரு கற்பனை உலகத்திலே, தெரிந்தோ, தெரியாமலோ அல்லது அவர்களுக்கு முறையாக அறிவிக்கப்படாத காரணத்தினாலோ, சஞ்சரித்துக்கொண்டிருந்த அந்த மக்கள் தேர்தலைப் புறக்கணிப்போம் என்று கூறியவுடன், ஒன்றியத்தினுடைய தலைவர் என்கின்ற முறையிலே, கழகத்தி

னுடைய ஒன்றியச் செயலாளர் என்ற முறையிலே, அவர்களிடத் திலே சென்று நிலைமையை எடுத்துக்கூறி, விளக்கி, அவர்கள் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளச் சென்றிருக் கிறார்.

தேர்தல் நேரத்திலே வாக்குக் கேட்கச் செல்ல எல்லாக் கட்சியிலே உள்ளவர்களுக்கும் உரிமை இருக்கிறது. அந்த உரிமையின் அடிப்படையில் சென்றிருக்கிறார். சென்றவருடைய விளக்கங்களை அவர்கள் யாரும் ஏற்றுக்கொள்ளாமல், அவரை அங்கே பிடித்து வைத்துவிட்டார்கள் என்றும், அந்தச் செய்தி காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டு- அவர்கள் கழக ஒன்றியச் செயலாளர் என்பது மாத்திரமல்ல; ஒன்றியத்தினுடைய தலை வரும்கூட- அவரை மீட்பதற்காக அங்கே சென்றபோது, மீட்கச் சென்ற காவலர்களும் அங்கே பிடித்து வைத்துக்கொள்ளப் பட்டார்கள் என்றும் செய்திகள் வந்தன. அதைத் தொடர்ந்து காவலர்கள் அங்கே சென்று, அங்குள்ள வீடுகளில் புகுந்து, சற்று வன்முறை மிகுந்திருக்கக்கூடிய அளவிற்குச் செயல்பட்டிருக் கிறார்கள். அதன் காரணமாக வீடுகளிலேயுள்ள பண்டம், பாத்திரங்களெல்லாம் சேதமுற்றன; சில பேர் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்கள் என்ற செய்திகளெல்லாம் வெளிவந்தன. இந்தச் செய்தி வந்தவுடன், உடனடியாக நான் உயர் அதிகாரி களைக் கொண்ட குழு ஒன்றை அந்தப் பகுதிக்கு அனுப்பி, விசாரணை செய்து, உடனடியாகத் தகவலை எனக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டேன். அதிகாரிகள் குழு அங்கே சென்று, அவர்களையெல்லாம் பார்த்து, அவர்கள் சென்று நடத்திய அந்த விசாரணையினுடைய குறிப்புகளையெல்லாம் எனக்குத் தந்தார்கள். அங்கே, மாவட்டத்திலுள்ள அதிகாரி களிடையேகூட இருவேறு கருத்துக்கள் அந்த நிகழ்ச்சியைப் பற்றி இருந்த காரணத்தால், நீதி விசாரணைக்கு உடனடியாக, நம்முடைய நண்பர் பெரியசாமி அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போல ஏற்பாடு செய்து, நீதி விசாரணையும் தொடங்கப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு இந்த நிகழ்ச்சி விடப்பட்டு, உண்மை உடனடியாகக் கண்டுபிடிக்கப்பட வேண்டுமென்றும் கோரப்

பட்டிருக்கின்றது. இதிலே இலட்சக்கணக்கான ரூபாய், பல இலட்சக்கணக்கான ரூபாயெல்லாம் பறிக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் சொன்னார்கள். சிலபேர் இருபதாயிரம், ஐம்பதாயிரம் ரூபாய் களவு போய்விட்டது என்று தெரிவித்திருகிறார்கள் ஒரு சிலர் 150 ரூபாய், 180 ரூபாய் களவு போயிருக்கிற தகவலைத் தந்திருக்கிறார்கள். நான் இதிலேயுள்ள ஏற்றத்தாழ்வுகளையோ, மாறுபாடான கருத்துக்களையோ பெரிதுபடுத்த விரும்பவில்லை. அவர்கள் செய்ததும் தவறு. ஆனால், தவறைக் கண்டிப்பதற்காகச் சென்ற காவல் துறையினர் அப்படி நடந்து கொண்டிருந்தால், அதுவும் அதைவிடப் பெரிய தவறு. ஏனென்றால், சட்டவிரோதமாக ஒருவர் நடந்துகொள்ளும்போது சட்டப்படி தான் நாம் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமே யல்லாமல், சட்டத்திற்கு விரோதமான நடவடிக்கைகளை யார் எடுத்தாலும், அவர்கள் காவல் துறையில் உள்ளவர்களாக இருந் தாலும், அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, நீதிபதி விசாரணை முடிவுற்று, உண்மையி லேயே எவ்வளவு இழப்பீடு ஒவ்வொரு குடும்பத்திற்கும் தர வேண்டுமென்று சொல்லும்போது, அந்த நீதி Compensation அவர்களுக்கு வழங்கப்படும் என்றாலும்கூட. இப்பொழுது இடைக்கால நிவாரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்த வீடுகளுக்குத் தருவதற்கு, ஐந்து இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் நிதியொதுக்கீடு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பிரச்சினையை மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய கிருஷ்ணசாமி அவர்கள், ஜி.கே.மணி அவர்கள், பெரியசாமி அவர்கள், சந்தானம் அவர்கள் ஆகியோர் குறிப்பிட்டதைப்போல் அனுதாப உணர்வோடு இந்த அரசு அணுகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு களைத் திரும்பப் பெறவேண்டும் என்று சொன்னார்கள். திரும்பப் பெற்ற பிறகு அவர்கள் நன்றி பாராட்டுகிறார்களோ, இல்லையோ எனக்குத் தெரியாது. எத்தனையோ பேர்களுடைய வழக்குகளை நாலாயிரம், ஐந்தாயிரம் பேர்களுடைய

வழக்குகளையெல்லாம் திரும்பப்பெற்ற ஆட்சிதான் இது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் கிடைத்த பரிசையும் பெற்றுக்கொண்ட ஆட்சிதான் இது. ஆகவே ''நன்றி எதிர் பாராமல் கடமையாற்றுவோம்'' என்று சொன்ன பெரியாருடைய வழியிலே நின்று, இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்து, இந்த அளவிலே அமைக்கின்றேன், வணக்கம்.

சட்டம் ஒழுங்கு

உரை : 71 **நாள் : 2.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே உள்ள குறிப்பை, இங்கே நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக திரு.மணி அவர்களும் கொண்டு வந்துள்ள இந்தப் பிரேரணையின்மீது, வழங்க விரும்புகிறேன். தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் கிராமத்தில் நடந்துவரும் டி.எம்.பி. மெக்கவாய் உயர்நிலைப் பள்ளி, தனியார் நிர்வாகப் பள்ளி. இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்துவரும் பள்ளி நிர்வாகி திரு.கோவில்பிள்ளை என்பவருடைய மகன் பீட்டர் என்பவர், பள்ளி விடுதி மாணவிகளைக் கற்பழித்துவிட்டதாக, வார இதழ் ஒன்றில் ஒரு செய்தி வந்துள்ளது. இந்தச் செய்தியைத் தொடர்ந்து, 'புதிய தமிழகம்' கட்சியைச் சார்ந்த சுமார் 100 பேர், பீட்டர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, 22-3-1998ஆம் நாள், ஒட்டப்பிடாரம், தேரடித் தெருவில் ஆர்ப்பாட்டம் நடத்தியதன் பேரில், கோவில்பட்டி வருவாய்க் கோட்ட ஆட்சியர், அந்தக் கிராமத்திற்குச் சென்று, இரகசியமாக விசாரணை செய்து அளித்துள்ள அறிக்கையில், பத்திரிகைச் செய்தியிலே குறிப்பிடப் பட்டுள்ள கற்பழிப்புச் சம்பவங்கள் நடந்ததற்கான ஆதாரம், சாட்சியம், சம்பவ இடம், நாள், நேரம், இன்னலுக்குட்பட்ட மாணவியின் பெயர், முகவரி எதுவுமில்லாத நிலையில் அப்படிப்பட்ட சம்பவம் நடந்துள்ளதா என்பது குறித்து அறுதியிட்டுத் தன்னால் தீர்மானிக்க இயலவில்லை என்றும், பாதிக்கப்பட்டவர்கள் யாரும் காவல் துறைக்கோ, முதன்மைக் கல்வி அலுவலருக்கோ புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும்,

மேற்காணும் சம்பவம் குறித்த உண்மை நிலையைக் காவல் துறை இரகசிய விசாரணையின் மூலம்தான் அறிந்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து அதற்குப் பிறகு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அதை விசாரிக்குமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டது. அந்தப் பள்ளிக்கு 26-3-1998 அன்று மாவட்ட வருவாய் அலுவலர், முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர், ஆகியோரோடு நேரில் சென்று மாணவ, மாணவிகளைச் சந்தித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியிருக்கிறார். அப்போது விடுதியிலிருந்த எந்த மாணவியும், எந்தப் புகாரும் கொடுக்க முன்வரவில்லை. புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த சிலர் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரினர். மாணவிகள் எவரேனும் பாதிக்கப்பட்டிருப்பின் காவல் துறையில் புகார் கொடுக்கலாம் என்றும், எவரேனும் பாதிக்கப்பட்டதாகத் தெரியவந்தால் குற்றவாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். இந்தப் பள்ளியின் விடுதியில் சிறிது காலமாகக் காப்பாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி ஆர்.மாரியம்மாள் என்பவர் மாத்திரம், அந்தப் பள்ளி நிர்வாகியினுடைய மகன் தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்ய எத்தனித்ததாகவும், ஆனால் அவனுடைய முயற்சி நிறை வேறவில்லை என்றும் தனது புகார் மனுவில் தெரிவித்திருக் கிறார். அந்த மனுவைக் காவல் துறைக் கண்காணிப்பாளருக்கு நடவடிக்கை எடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பி வைத்துள்ளார். அந்தப் பள்ளியின் நிர்வாகி சில புறம்போக்கு நிலங்களையும் ஆக்கிரமித்துள்ளதாக வந்துள்ள புகாரின்மீது, வருவாய்க் கோட்டாட்சியரை உடனடியாக விதிமுறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியிருக்கிறார்.

திருமதி மாரியம்மாளின் புகார் மனுத் தொடர்பாக ஒட்டப்பிடாரம் காவல் நிலையக் குற்ற எண் 60/98 இந்தியத்

தண்டனைச் சட்டம் பிரிவு 345 மற்றும் 506(2)-ன்படி குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டு, வழக்கு காவல் துறையின் புலன் விசாரணையில் உள்ளது. மேற்கொண்டு, டாக்டர் க.கிருஷ்ணசாமி அவர்களும், மற்றவர்களும் கூறியுள்ள இந்தப் புகார் பற்றி தொடர்ந்து மேலும் விசாரிக்கப்படும். நம்முடைய திரு.டி.மணி அவர்களும் நிர்வாகத்தை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவை எல்லாம் உடனடியாகச் செய்யக்கூடிய காரியங்கள் என்பதையும் எண்ணிப் பார்த்து, இந்தப் புகார் பற்றியும் தீவிர விசாரணை நடைபெறும் என்ற உறுதியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

குண்டுப்பட்டி காவலர்கள் பிரச்சினை

உரை : 72 **நாள் : 2.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு இரண்டு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. ஒன்று, குண்டுப்பட்டியில் அத்துமீறி நடந்து கொண்ட காவலர்களைப் பற்றியது. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக, கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்ட தீர்மானம் அதுவும் விவாதிக்கப் பட்டது.

அடுத்தது, விருதுநகரிலே சாலை மறியலிலே ஈடுபடுத்தத் தங்களுடைய துணைவியர்களை அனுப்பி வைத்த காவலர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமென்ற மற்றொரு தீர்மானம். இதுதான் ஜனநாயகம். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டையும் விவாதிக்கிறோம் அல்லவா? இதற்குப் பெயர்தான் ஜனநாயகம்.

நம்முடைய தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசும் போது மென்மையாகத்தான் இருக்கும். 'பதட்ட நிலை காவலர்களே போராட ஆரம்பித்து விட்டார்கள்'' என்ற இந்த வார்த்தைகள் எல்லாம் பத்திரிகைகளிலே வரும்போது, 'தமிழ்நாட்டிலே காவலர்கள் பதட்டம்' என்று வரும், சில பத்திரிகைகள் இருக்கின்றன; காவலர்கள் வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுகின்ற அளவுக்குக்கூட சில பத்திரிகைகள் இருக்கின்றன.

சமீபகாலமாக நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சில மத்திய அமைச்சர்கள் பேசுகிறார்கள். ''இந்த அரசை வீழ்த்த, வீட்டுக்கு அனுப்ப '356' தேவையில்லை, அதை நாங்கள் பிர யோகிக்கப் போவதில்லை. வேறு சில முறைகள் இருக்கின்றன இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு'' என்று சொல்கிறார்கள்.

அந்த முறைகளிலே இது ஒன்று போலும். அப்படித்தான் நான் யூகிக்கின்றேன். காவலர்களை விருதுநகரிலே தூண்டிவிட்டார்கள் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்கள். அந்த அரசியல் கட்சி இந்த மாமன்றத்தில் இடம் பெறவில்லை. அது எது என்பது திரு. தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். தெரிந்திருக்காவிட்டால், தனியாகக் கேட்டால், அவர்களிடத்தில் சொல்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஓர் அரசியல் கட்சி, காவலர்களுடைய இத்தகைய போராட்டத்தை விருதுநகரிலே மறைமுகமாக இருந்து தூண்டிவிட்டு, அவர்களுடைய அந்தப் போராட்டம் மாநிலத்தின் பல பகுதிகளிலேயும் பெருகி, அதன் காரணமாக அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று யாராவது கருதுவார்களேயானால், போலீசார் என்ற அளவிலே இருந்த போராட்டம் என்று இருக்காமல், கடைசியிலே 'யானையே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதுபோல' போலீஸ் துறையிலே இருந்து ஆரம்பிக்கின்ற போராட்டம் கடைசியிலே இராணுவம் வரை போனால் என்ன ஆகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இராணுவமானாலும், போலீஸ் துறையானாலும், அவர்களுக்கு என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது, அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற தலைவர் பேசும்போது, சாலை மறியல் செய்தார்கள் காவலர்களுடைய மனைவிமார்கள்; கற்களைப் போட்டு சாலையைத் தடுத்தார்கள்; பேருந்துகளுடைய கண்ணாடிகளை எல்லாம் உடைத்தார்கள் என்றெல்லாம் சொன்னார். யார்? காவலர்கள் வீட்டுப் பெண்மணிகள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். சாலையிலே கற்களைப் போட்டுத் தடுத்தால், பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்தால், அப்படிச் செய்கின்ற சமூக விரோதிகளைப்பிடித்துக் கைது செய்து வழக்குப் போடவேண்டிய காவலர்களுடைய குடும்பத்தினரே பஸ்கள் மீது கற்களை வீசினார்கள்; சாலையின் குறுக்கே கற்களைப் போட்டுத் தடுத்தார்கள் என்ற நிலைமை வருமானால், இதையும் ஓர் அரசு பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டுமென்று சொன்னால், அவ்வளவு கோழைத்தனமாக இந்த அரசை நடத்த நான் விரும்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

எத்தனை நாளைக்கு நான் ஆளுகிறேன் என்பதல்ல, எப்படி ஆட்சி நடத்தினேன் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முக்கியம் என்பதை ஒரு சுயமரியாதைக்காரன் என்ற முறையிலே, இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தாமரைக்கனி, திரு. நிஜாமுதீன், திரு. கணேசன், திரு. பெரியசாமி, திரு. சந்தானம் ஆகியோர் எடுத்துரைத்த இந்தக் கருத்துக்கள் மிக ஆழமானவை; சிந்திக்கத்தக்கவை. பத்து கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற அதே ஊதியத்தை மாநில அரசினுடைய ஊழியர்களுக்கும் தருவேன் என்று ஏற்கெனவே நான் அறிவித்து, அதற்கென்று பல அரசு அலுவலர்களுடைய அமைப்புகளோடு இரண்டு, மூன்று நாட்கள், பல மணி நேரம் கலந்து பேசி, அவர்களும் திருப்தி அடைகின்ற அளவுக்கு, மறுப்புச் சொல்லாத அளவுக்கு, ஏற்றுக்கொள்ளுகின்ற அளவுக்கு, அவர்கள் கேட்ட தேதியின்படி அவர்கள் கேட்ட சலுகைகளை எல்லாம் அறிவித்து, முரண்பாடுகள் இருந்தால் அவற்றை மூன்று மாத காலத்திற்குள்ளாகத் தீர்த்து வைக்க, ஒரு நபர் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்படும் என்று இதே அவையில் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபிறகும், அதிலே ஒரு போராட்டம் நடத்துகிற அளவுக்கு என்ன பிரச்சினை வந்தது; தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

தற்போதுள்ள 25 ஊதிய விகிதங்களுக்கு இணையாக மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்கப்படும் என்றும், மத்திய அரசால் வழங்கப்பட்ட 40 விழுக்காடு ஊதிய நிர்ணயப் பயன் மாநில அரசின் முழுநேர அலுவலர்கள், பகுதிநேர அலுவலர்கள்-சத்துணவுத் திட்டம் போன்றவற்றில் பணியாற்றுகிற-பகுதிநேர அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் பொதுவாகத்தான் நான் அறிவித்திருக்கிறேனே அல்லாமல், ஒவ்வொருவருக்கும் இன்னின்ன ஊதிய உயர்வு என்று குறிப்பிட்டு அறிவிக்கப்படவில்லை. இதிலே காவலர்கள் யாரும் விடுபட்டுப் போய்விடவில்லை. அவர்களும் அரசு ஊழியர்கள் என்ற பட்டியலில்தான் சேர்க்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல, அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்ற ஒன்று உண்டு. அவர்கள் பணியாற்றுகின்ற நேரத்தில் வருகின்ற இடையூறுகளையும் கடந்து, அதைப்பற்றிக் கவலைப்படாமல்

பணியாற்றுவதற்காகத் தரப்படுகின்ற இந்த ரிஸ்க் அலவன்ஸ் என்பதைக்கூட காவல் துறை மானியம் வரும்போது விவாதித்து, காவல் துறை உயர் அதிகாரிகளோடும், காவல் துறையினுடைய ஹோம் செக்ரடரி உள்-துறைச் செயலாளரோடும், தலைமைச் செயலாளரோடும் கலந்து பேசி, உயர்த்தித் தரவேண்டும் என்கின்ற ஓர் எண்ணத்தோடு இந்த அரசு இருக்கின்ற இந்த நேரத்தில், சில கோரிக்கைகளை வைத்து, உடனடியாக நிறை வேற்றிக் கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சாலை மறியல் என்று சொன்னால், இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

சாலை மறியல் நல்ல காரியங்களுக்காக நடைபெறும் போது அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சாலை மறியலே, தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒரு நடவடிக்கை என்று ஆகிவிடுமேயானால் அதை அரசு பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. சாலை மறியல் யார் நடத்தினாலும் இனிமேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து, நம்முடைய எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கின்ற தலைவர்கள், அவர்கள் இந்த ஆட்சிக்குத் தோழமையாக உள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஜனநாயக முறையில் எதிர்க்கட்சியாகச் செயல் பட்டாலும் சரி, அனைவருமே சிந்தித்து இதுபோன்ற சாலை மறியல்களால் நடக்கப்போவது என்ன, உட்கார்ந்து, கலந்து பேசி ஏன் பல பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடாது என்ற அறிவுரையை அவர்களுக்கெல்லாம் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே காவலர் களுடைய துறைக்காக நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது, அவர்களுக்கு எந்த, எந்த வகையிலே இந்த ஊதிய விகிதாச்சாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது, அவர்கள் அலட்சியப்படுத்தப்படவில்லை என்ற அந்த உண்மை நிலவரத்தை எல்லாம் இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்று கூறி, இந்த அளவிலே அமைகின்றேன்.

பால் விலையேற்றம்

உரை : 73 **நாள் : 15.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு.சுதர்சனம் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு.சந்தானம் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு.பழனிசாமி அவர்களும் இங்கே ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு வாயிலாக பால் விலையேற்றம் பற்றிய தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறியிருக்கின்றார்கள்.

முத்தாய்ப்பாக விலையைக் குறைக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். ஒருவேளை திரு.சுதர்சனம் அவர்களும், பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு.சந்தானம் அவர்களும் இந்தக் கவன ஈர்ப்பை அளித்த காரணத்தால், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சார்பிலே நம்முடைய திரு. பழனிசாமி அவர்களும் ஏற்கெனவே இந்த விலை உயர்வைத் தவிர்க்க முடியாது என்ற கருத்தைக் கட்சியின் சார்பிலே சொல்லியிருந்தாலும்கூட, அதற்குப் பிறகு ஏற்பட்டுள்ள விளைவுகளை எண்ணிப்பார்த்து, விமர்சனங்களை எண்ணிப் பார்த்து அவர்களும் இன்றைக்கு, அவர்களோடு இணைந்து, தன்னுடைய குரலை இங்கே உயர்த்தியிருக்கின்றார்கள்.

முதலில் சில விளக்கங்களை நான் இங்கே தர விரும்பு கின்றேன். கொள்முதல் விலையை உயர்த்த வேண்டுமென்று, சற்றொப்ப 20 இலட்சத்திற்கு மேற்பட்ட பால் உற்பத்தி யாளர்கள், கிராமப்புற விவசாயிகள், அவர்களின் சார்பாக, அந்தப் பிரதிநிதிகள் எங்களிடத்திலே வலுவாக வாதிட்டு, கொள்முதல் விலை 1 ரூபாய் 50 காசு உயர்த்தப்பட்டதோ, அதே அளவுக்குத்தான் நுகர்வோருக்கு விற்பனை விலையும்

நிர்ணயிக்கப்பட்டது. இதிலே ஆவின் நிறுவனத்திற்கு ஏற்படக் கூடிய இழப்பு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய். இந்தப் பத்து கோடி ரூபாயை நம்முடைய திரு.சுதர்சனம் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல ஐஸ்கிரீம், வெண்ணெய், நெய் போன்ற பொருள்களை, உபபொருள்களாக உருவாக்கி அதன் மூலமாக அவற்றை விற்று வருகின்ற வரவு 8 கோடி ரூபாய் என்ற அளவில் நிகர நட்டம் ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய். ரூபாய் 1.50-ஐ கொள்முதல் விலையில் உயர்த்தி, அதே ரூபாய் 1.50க்கு உயர்த்தி விற்பனை விலை நிர்ணயித்த நிலையில் 10 கோடி ரூபாய். ரூபாய் 1.50-ஐ கொள்முதல் விலையில் உயர்த்தி, அதே ரூபாய் 1.50க்கு உயர்த்தி விற்பனை விலை நிர்ணயித்த நிலையில் 10 கோடி ரூபாய் நட்டம். அதிலே ஐஸ்கிரீம், நிகர நட்டம் 2 கோடி ரூபாய். அஃதன்னியில், இங்கே நம்முடைய, குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அடிக்கடி எடுத்துக்காட்டியதன் மூலம், அந்தக் காலத்தில், நீக்கம் செய்யப்பட்டவர்களை, அவ்வப்போது மீண்டும் மீண்டும் வேலையிலே சேர்த்துக்கொண்டுள்ளோம். இப்போதுகூட 314 பணியாளர்களை வேலையில் சேர்த்ததன் மூலமாக 1 கோடியே 8 இலட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு மேலும் இழப்பு. எனவே, 3 நிலையிலேயே. அதாவது ரூ.1.50 கொள்முதல் விலையிலும் உயர்த்தி, ரூ.1.50 விற்பனை விலையிலும் நிர்ணயித்த இந்த நிலையில்கூட மொத்தம் 3 கோடியே 8 இலட்சம் ரூபாய் நட்டம் ஆகிறது.

இப்போது ஒன்றைச் சொன்னால், இதையெல்லாம் ஒப்பிட்டுக் காட்டக் கூடாது என்று கூறுவீர்கள். இருந்தாலும் உங்கள் நினைவுக்காக ஒப்பிட்டுக் காட்டுகிறேன். ஆந்திராவில் ஒரு லிட்டர் 11 ரூபாய்தான். அதிலும் குறிப்பாக ஹைதராபாத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். பெங்களூரில் 10 ரூபாய் 50 காசுகள். ஆனால் பெங்களூர் தவிர்த்து கர்நாடகப் பகுதியில் எல்லா இடங்களிலும் 11 ரூபாய்.

திருவனந்தபுரத்தில் ஒரு லிட்டர் பாலின் விலை 12 ரூபாய். டில்லியின் 11 ரூபாய். இங்கே இந்த விலையைக் குறைக்க வேண்டும் என்று சொல்லப்படுகிற நேரத்தில்,

உதாரணத்திற்கு ஒரு 50 பைசா குறைப்பதாக இருந்தால்கூட-- சென்னை நகரத்திலே ஒரு நாளைக்கு விற்பனையாகின்ற பால் 8 இலட்சத்து 20 ஆயிரம் லிட்டர்கள். சென்னை தவிர்த்து வெளியூர்களில் விற்பனையாகின்ற பாலின் அளவு 6 இலட்சத்து 60 ஆயிரம் லிட்டர். மொத்தம் 14 இலட்சத்து 80 ஆயிரம் லிட்டர். 50 காசுகள் இதிலே குறைந்தால்கூட ஒரு நாளைக்கு நட்டம் 7 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய்-365 நாளைக்கும் ஏறத்தாழ 27 கோடி ரூபாய் நட்டம். ஏற்கனவே இருக்கின்ற நட்டம் 3 கோடி ரூபாய். மொத்தம் 30 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. இதைத் தாங்கக்கூடிய அளவில் ஆவின் நிறுவனம் இன்றைக்கு இல்லை என்பதை நீங்களெல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். ஆனாலும், தேநீர் கடைக்காரர்கள் தேநீரின் விலையை உயர்த்திவிட்டார்கள் என்று நம்முடைய திரு.டி.சுதர்சனம் அவர்களும், நம்முடைய திரு.ஜி.பழனிசாமி அவர்களும், திரு.லா. சந்தானம் அவர்களும் சொன்னார்கள். இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. தேநீர் கடைக்காரர்கள் எல்லாம் ஆவின் பால் வாங்கிதான் டீ போட் டார்கள் என்கிற உண்மை இப்போதுதான் எனக்குப் புரிகிறது. ஆனால் இன்று இந்த விலை உயர்வை வைத்துக்கொண்டு அவர்கள் உயர்த்தி இருக்கிறார்கள் என்பது உண்மைதான்.

வரியை நீக்கினால் விலை குறையும், தேங்காய் எண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், நல்லெண்ணெய்க்கு வரியை நீக்குங்கள், அவற்றின் விலைகள் குறையும் என்று சொல்லப் பட்டது. ஆனால் இந்த அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு விலை குறையவில்லை என்று நான் நம்புகிறேன். இருந்தபோதிலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக இன்றைக்கு உரையாற்றி யவர்கள் தெரிவித்த கருத்துக்கள், பத்திரிகைகளிலே வந்துள்ள கட்டுரைகள் இவற்றையெல்லாம் பார்க்கும்போது, 50 காசுகள் குறைத்து அதாவது -11 ரூபாயிலிருந்து 10.50 காசுகள் என்ற அளவில் இனிமேல் பாலின் விலை நிர்ணயிக்கப்படும் என்தை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது இப்போது 11 ரூபாய் என்றிருப்பது 10 ரூபாய் 50 காசுகள் என்று ஆக்கப்படுகிறது. இப்படி ஆக்கினாலே 30 கோடி

ரூபாய் இந்த ஆண்டுக்கு இழப்பு ஏற்படுகிறது. இந்த 30 கோடி ரூபாய் இழப்பை நிறுவனம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள். இதுவரையிலும் கேள்வி நேரத்தின்போது அதிகாரிகள் குறிப்பிட்டதைத்தான் நான் பேசிக்கொண்டிருந்தேன். எனவே, அரசு இதற்கு மானியம் தரும். எவ்வளவோ மானியம் தருகிறோம். அதோடு இந்த மானியத்தையும் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசு மானியம் 30 கோடி ரூபாய் ஆவின் நிறுவனத்திற்கு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறி, பாலின் விலை 10.50 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விலை நிர்ணயம் நாளை முதல் அமலுக்கு வரும் ஏற்கெனவே பணம் கட்டி அட்டைகள் வாங்கியிருந்தால், அடுத்த கார்டுகள் வாங்கும்போது இந்தப் பணம் சரி செய்து கொள்ளப்படும் என்பதையும் சொல்லி அதற்காக ஒரு விமர்சன மும் வேண்டாம் என்று உங்களை யெல்லாம் கேட்டுக்கொண்டு இந்த அளவில் என்னுடைய கருத்தைத் தெரிவித்து அமைகிறேன்.

காவிரிப் பிரச்சினை

உரை : 74 **நாள் : 15.4.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு.பழனிச்சாமி அவர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், இதுபற்றி இந்த மாமன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கை தொடர்பாகப் பொது விவாதம் நடைபெற்று, அப்போது நான் உரை நிகழ்த்தியபோதும், ஆளுநர் உரை தொடர்பாக நான் உரை நிகழ்த்தியபோதும், இந்தப் பிரச்சினை பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

இந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப் படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும். காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை; இதை மிகத்தெளிவாகப் பலமுறை, நாம் விளக்கியிருக்கின்றோம். உச்ச நீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது. இடையிலே உச்சநீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக முதலமைச்சரோடு நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4, 5 தடவை பேசிப் பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தால், அதைப் பற்றி உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டு விட்டோம். பிறகு உச்சநீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்த கருத்து மாநில

அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா அல்லவா என்பதை உடனடியாகத் தெரிவிக்கவேண்டுமென்று எல்லா மாநிலங்களையும், குறிப்பாக, தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின்மீது தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பி இருக்கிறது. அதைப்போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியுள்ளது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பி வைத்து இருக்கின்றது. கர்நாடகம், மாத்திரம் மத்திய அரசு- ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு- எடுத்த நிலைக்கு மாறாக வேறொரு நிலையை எடுத்திருக் கிறது. Authority என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த Authorityயினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றத் தீர்ப்பை, இடைக் காலத்திற்கு, தமிழகத்திற்கு தரப்படவேண்டிய அளவு தண்ணீர் எவ்வளவு என்பதை அறிந்து, அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் தருவதைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அந்த Authorityயினுடைய பணியாக இருக்கவேண்டும் என்பது மத்திய அரசு தந்துள்ள திட்டமாகும். அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளாத கர்நாடக அரசு Authority என்று இருக்கக்கூடாது, Committee என்று இருந்தால் போதுமானது என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்துக்கள் இருக்கின்றன. இதைத்தான் வலியுறுத்திக்கொண்டே இருக்கின்றோம்.

இப்போது நான் பிரதமரை டெல்லியிலே சந்தித்தபோது கூட அவர்களிடத்திலே கொடுக்கப்பட்ட, தமிழகத்தினுடைய நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கிய கோரிக்கையாகக் காவிரி பங்கீடு பற்றிய கோரிக்கை யையும் தந்து, அவரிடத்திலே விவாதித்து இருக்கிறேன். இதிலே ஐக்கிய முன்னணி அரசு- மத்திய அரசு- எடுத்த அதே நிலையைத்தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயி களுக்குப் பேராபத்தாக முடியும் என்பதை அவரிடத்திலே வலியுறுத்தி எழுதியும் கொடுத்திருக்கிறேன்; நேரிலும் அவரிடத்திலே பேசிவிட்டு வந்திருக்கின்றேன்.

அடுத்து, கர்நாடக முதல்வர் தந்துள்ள அறிக்கையைப் பற்றி எல்லாம் இப்போது நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஏன் என்றால் அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இனியும் பேச்சு வார்த்தை என்பதற்கு இடம் இல்லை. ஆனால், இன்றைய பிரதமர் அவர்கள், மீண்டும் பேச்சுவார்த்தை என்று வலியுறுத்துவார்களேயானால் அவரிடத்திலே, எத்தனை முறை பேச்சுவார்த்தை நடைபெற்று இருக்கிறது.

எவ்வளவு தோல்விகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றபிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய முடிவைத்தான், ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதைத்தான், தமிழக அரசின் சார்பாக, தமிழ் மக்களின் சார்பாக, எல்லாக் கட்சிகளின் சார்பாக நான் எடுத்து வைக்க இருக்கின்றேன் என்பதை எடுத்துக்கூறி, இதற்கு இடையிலே நாம் இதுபோன்ற விவாதகங்களை அடிக்கடி இங்கே எடுத்துக்காட்டியிருப்பதைப்போல, கூடானதாக, உணர்ச்சிவயப்பட்டதாக ஆக்குவதன் மூலம், இரு மாநில மக்களிடையே வேறுபாடான கருத்துக்களையோ இரு மாநில மக்களுடைய நல்லெண்ணங்களுக்கு ஊறு தேடுகிற நிலை களையோ உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான், சட்டப்படி காரியங்கள் நடைபெறவேண்டும் என்ற அந்த நோக்கத்திலே இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. அதிலே இம்மியும் பிறழாமல் இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, காவிரிப் பிரச்சினைக்கு நல்ல முடிவைக் காண்பதற்கு இன்றுள்ள மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே நான் மத்திய அரசுக்கு வைத்து, இந்த அளவில் அமைகின்றேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 75 நாள் : 16.4.1998

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருந்து உயர்மட்டக் குழு ஒன்று தமிழகத்திற்கு வந்திருப்பதைப் பற்றி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, சட்டமன்றத் தலைவர் திரு.ஜி.பழனிசாமி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு.டி.மணி அவர் களும் இரண்டு சிறப்புக் கவன ஈர்ப்புகளுக்கான அறிவிப்புகளை இங்கே தந்திருக்கிறார்கள். முதலில் இந்த உயர்மட்டக் குழு வந்துள்ள இந்த நேரத்தில் அரசின் சார்பில் சில கருத்துக்களை, அவர்களுடைய ஐயப்பாட்டைப் போக்குகின்ற வகையில், நான் எடுத்துவைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசின் உள்துறையிலிருந்து கூடுதல் செயலாளர் தலைமையில் இருவர் குழு ஒன்று இன்று சென்னைக்கு வந்து, தமிழக அரசின் உயர் அதிகாரிகளோடு, தமிழகத்தின் சட்டம்- ஒழுங்கு நிலையைப்பற்றி விவாதிக்க இருப்பதாக, மத்திய அரசின் உள்துறையிலிருந்து 'Fax' மூலம் செய்தி வந்தது. மத்திய அரசின் உள் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் தமிழகத் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளோடு இன்று இப்பொழுது பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு சிறப்பான முறையில் பேணிக் காக்கப்பட்டு வருகின்றது. தீவிர மதவாத சக்திகளுக்கோ, வகுப்புவாத, சக்திகளுக்கோ தமிழகத்தில் எவ்வித இடமும் இல்லை என நான் ஏற்கனவே பலமுறை திட்டவட்டமாக கூறியிருக்கின்றேன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும்படி தமிழகக் காவல்

துறைக்கு நான் ஆணையிட்டுள்ளேன். காவல் துறையும் சிறப்பாகப் பணிபுரிந்து சட்டம்- ஒழுங்கை நல்ல முறையில் பாதுகாத்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு இதுபோன்ற ஒரு குழுவை அனுப்பியதற்கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும், தமிழக அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒளிவுமறைவு அற்றவை. ஆதலால், வந்திருக்கின்ற மத்திய அரசின் குழுவிற்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களையும் அளிக்கும்படி நான் தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

நான் 7-4-1998 அன்று டெல்லிக்குச் சென்றிருந்தபோது மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்களிடம் தமிழகத்தின் சட்டம்- ஒழுங்கு பராமரிப்பை மேம்படுத்துவ தற்காகச் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறேன்.

அதாவது Rapid Action Force-அதி விரைவுப் படை, ஒரு Battalion கோவையில் நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒரு கோரிக்கை.மற்றொன்று Indian Reserve Battalion-இரண்டு Battalions- தமிழகத்திற்குத் தேவை என்று கேட்டிருந்தேன். அதிலே பாதிச் செலவை மாநிலமும், பாதிச் செலவை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் கேட்டிருக்கின்றேன். போலீஸ் துறையை நவீனப்படுத்த ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் வேண்டுமென்றும் கேட்டிருந்தேன். இவைகளையெல்லாம் கவனிப்பதாக உள்துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்கள் என்னிடத்தில் உறுதியளித்தார்கள். ஒருவேளை அந்தக் கோரிக்கைகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இந்தக் குழு மத்திய அரசால் அனுப்பப்பட்டு இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிசாமி அவர்களும், மணி அவர்களும், எடுத்துக்காட்டியபோது, மத்திய அமைச்சர்கள், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி யைக் கலைக்க வேண்டும். 356-ஐப் பயன்படுத்த வேண்டு மென்று நாள்தோறும் அவர்கள் தமிழகத்திற்கு வரும்போ தெல்லாம் பேசிக்கொண்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையிலே இந்தக் குழு வந்திருக்கக்கூடுமோ என்ற

ஐயத்தை எழுப்பியிருக்கிறார்கள். நான் அ.தி.மு.க. மத்திய அமைச்சர்கள் பேசுவதைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவ தில்லை. அவர்கள் செயற்குழுவிலே தீர்மானம்கூட நிறைவேற்றி யிருக்கிறார்கள். அதற்கு முன்பே அந்தக் கட்சியினுடைய தலைவர்கள், அமைச்சர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க, 356-ஐப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும்கூட ஜெயலலிதா அவர்கள், கருணாநிதி ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன'' என்று கூட மிக ஆவேசமாகச் சொல்லியிருக்கிறார். நான் என்னுடைய ஆயுளின் நாட்கள் எண்ணப்படுவதைப்பற்றியே கவலைப்படுவ தில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுவதைப்பற்றி நான் கவலைப்படுபவன் அல்ல. அதிகாரத்தில் இருந்தால்தான் ஒருவனுக்குப் பெருமை, அந்தஸ்து என்று இல்லை. அதிகாரத்தில் இல்லாமல் இருந்துகூட, மக்களுக்குப் பணியாற்றிய பல பேர் உலகத்திலே புகழை நாட்டிச் சென்றிருக்கிறார்கள். எனவே, நான் அதைப் பற்றிக் கவைப்படவில்லை.

இருந்தாலும், ஓர் அரசு ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு, மிகப் பெரும்பான்மையை அவையிலே கொண்டு, அந்தப் பெரும்பான்மையினுடைய ஆதரவோடு, எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி இவைகளுடைய அரவணைப் போடு, நல்ல பல திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தீட்டவேண்டுமென்று எண்ணி, அவ்வாறு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையாக, அமைதியாகச் செயல்படுத்த வேண்டுமென்று எண்ணும்போது, இதுபோன்ற ஐயப்பாடு களையும், மிரட்டல்களையும், அச்சுறுத்தல்களையும் எடுத்துக் கையாளுகின்ற காரணத்தினால்,எனக்கு உள்ள கவலை,இந்தத் திட்டங்களெல்லாம் மக்களைப்போய்ச் சேரமுடியாமல் தடுக்கிறார்கள். நம்முடைய ஆட்சியின் நிம்மதியைக் குலைக் கிறார்களே என்பதே தவிர, ஆட்சியிலே நம்மை இல்லாமல் ஆக்கிவிடுகிறார்களோ என்ற கவலை எனக்கு என்றைக்கும் இருந்ததில்லை; இருக்கப் போவதும் இல்லை என்பதை இந்த அவையிலே நான் திறந்த மனதோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வந்துபோகின்ற அமைச்சர்களில், நான் முதலில் குறிப்பிட்டதைப் போல, அ.தி.மு.க. அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்றால், அவர்களுக்குள்ள, அந்தக் கட்சியினுடைய, தலைமை யின் ஆணையின்படி அவர்கள் பேச வேண்டியவைகளைப் பேசுகிறார்கள். நண்பர், மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம்கூட, இந்த அரசைப்பற்றி விமர்சிக்கின்ற நேரத்தில், யாரோ சொன்ன சில தவறான கருத்துக்களை வைத்துக்கொண்டு பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுப்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சிகளை- கோவை யில் இரண்டு நிகழ்ச்சிகள்-இரண்டாகப் பகுத்துப் பார்க்க வேண்டும் - நாம் பார்க்க வேண்டும் என்றில்லை. இரண்டாகவே நடைபெற்றிருக்கின்றன. கடந்த நவம்பர் திங்கள் 29-11-1997ல் தொடங்கி, 4-12-1997 முடிய ஒரு நான்கு, ஐந்து நாட்கள், ஒரு வார காலத்திற்குள் நடைபெற்ற சம்பவங்கள், அந்த சம்பவத் திலே இறந்தவர்களில் - 8 பேர் இந்துக்கள், 18 பேர் முஸ்லீம்கள், மற்ற வகுப்பைச் சார்ந்தவர் ஒருவர். குறிப்பிட்ட சட்டப் பிரிவின்படி கைது செய்யப்பட்டவர்களில், இந்துக்கள் 230 பேர்; முஸ்லீம்கள் 56 பேர் கைது செய்யப்பட்டார்கள். முன்கூட்டியே தடுப்புக் காவல் சட்டப்படி- தடுப்புக் காவல் சட்டப்படி கைதானால் அவர்கள் ஜாமீனிலும் அல்லது சில நிகழ்ச்சிகள் முடிந்த பிறகும் விடுவிக்கப்படுவார்கள் அந்த வகையிலே -- கைது செய்யப்பட்டவர்களில் இந்துக்கள் 388 பேர்; முஸ்லீம்கள் 41 பேர். அந்த முதல் நிகழ்ச்சியையொட்டி, நவம்பர் இறுதி வாரத்தில் தொடங்கி டிசம்பர் முதல் வாரத்தில் முடிந்த அந்தக் கலவரத்தையொட்டி, தேசிய பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டோர், இந்துக்கள் 17 பேர், முஸ்லீம்கள் 15 பேர் இதில் ஏதோ பி.ஜே.பி.ஐச் சார்ந்தவர் களைத்தான் அதிகமாகத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே போட்டிருப்பதாக திரு.ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நான் இந்தக் கணக்கைச் சொல்கிறேன்.

அந்த முதல் நிகழ்ச்சியை, கோவையிலே நடைபெற்ற முதல் கலவர நிகழ்ச்சியையொட்டி, தேசியப் பாதுகாப்புச்

சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டோர், இந்துக்கள் 17 பேர் முஸ்லீம்கள் 15 பேர். அதன் பிறகு, பிப்ரவரி 14ஆம் தேதி வெடிகுண்டுச் சம்பவம் நடந்த பிறகு, அதிலே இறந்தவர்களில் இந்துக்களில் 48 பேர், முஸ்லீம்கள் 16 பேர். இதிலே, குறிப் பிட்ட குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டோர் முஸ்லீம்கள் 53 பேர். இந்துக்கள் யாரும் இல்லை. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்த இரண்டாவது நிகழ்ச்சியின் பிறகு கைது செய்யப்பட்டோர் மொத்தம் 13 பேர். அந்தப் 13 பேரும் முஸ்லீம்கள். மாவட்டம் முழுவதும் தற்போது முன்கூட்டி கைது செய்யப்பட்டோரில், இந்துக்கள் 374 பேர், முஸ்லீம்கள் 202 பேர். திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் கூறியதைப்போல 700 பேர் அல்ல என்பதற்காகத்தான் இந்த விளக்கங்களை நான் தெரிவிக்க வேண்டியவனானேன். இந்த விவரங்கள் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன. எழுந்து மூலமாக இந்த விவரங்கள் உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களிடத்திலும் தரப்பட்டிருக்கின்றது எழுத்துப்பூர்வமாகத் தரப்பட்டிருக்கின்றன. அதுமாதிரி, இங்கு ஏதோ அமைதி கெட்டு விட்டது என்றெல்லாம் பேசுகின்றார்கள்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எவ்வளவு அமைதியாகத் தமிழகத்தை வைத்திருந்தார்கள் என்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும். அவர்களுக்கேகூடத் தெரியும். அவரவர்களுடைய மனசாட்சிக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்கள் அமைதியாக ஆட்சி நடத்திய காலத்திலேதான் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்து. ஒரே நேரத்தில் 11 பேர் இறந்தார்கள். அவர்கள் அமைதியாக ஆட்சி நடத்திய அந்தக் காலகட்டத்திலேதான் இந்து முன்னணி அலுவலகத்திலே குண்டு வெடித்து ஒருவர் உடனடியாக அங்கே இறந்த சம்பவமெல்லாம் நடைபெற்றது. அதுமாத்திரமல்ல. அவர்களு டைய அமைதியான ஆட்சிக் காலத்திலேதான் நூற்றுக்கணக்கான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்று, ஏறத்தாழ 135-க்கும் மேற் பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அந்த நிக்ழ்ச்சிகளிலே என்பதையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

அது மாத்திரம் அல்ல. இந்த மாதம் 5-4-1998ல் 'இந்து' பத்திரிகையில் By our Special correspondent "New Delhi" April 4th என்று ஒரு சிறிய கட்டுரையின் முதல் பகுதியை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன். ''New Delhi, April 4: Bharathiya Janata Party Parliamentary delegation to Tamil nadu in 1995 had the following to say.''

1995ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு தமிழகத்திற்கு வந்தது. அதைக் குறிப்பிடுகிறது 'இந்து'.

"The Al - Umma gang of coimbatore has been operating, attacking the members of Hindu organisations without let or hindrance. Their activities are known to the Government and the police." -Their activities are known to the government and the police. எந்த Government என்று உங்களுக்குத் தெரியும். - AIADMK Government. Thay enjoyed the support of various political parties incl,uding some ruling AIADMK leaders."

இது பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் வந்து, அந்தக் குழுவின் சார்பாகச் சொல்லப்பட்ட கருத்து. இது 1995ஆம் ஆண்டு, அப்போது நடைபெற்ற ஆட்சி, எந்த ஆட்சி என்று எல்லோருக்கும் தெரியும். அதைப்பற்றிய கருத்து இன்றைக்கு வந்திருக்கிற எல்லோருக்கும் தெரியும். அதைப் பற்றிய கருத்து இன்றைக்கு வந்திருக்கிற உள்துறைக் கூடுதல் செயலாளர் அவர்களால்கூட நேற்றையதினம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மணி அவர்களும், பழனிச்சாமி அவர்களும் சந்தேகப்பட்டதைப் போல, எதையும் சொல்லவில்லை என்பதையும் நாம் நினைவுகூர்ந்திட வேண்டும். உள் துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்கள் சட்டம்- ஒழுங்கு பற்றி திருப்தியில்லை என்று சொன்னதாக ஒரே ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதே அல்லாமல் Press Conference போன்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் அதைச் சொன்னதாக எதுவும்

வரவில்லை. இந்தியப் பிரதமர் திரு.வாஜ்பாய் அவர்கள் மாநிலங்களவையில் உறுதிபடவே கூறியிருக்கிறார். 356-ஐப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க மாட்டோம் என்று உறுதிபடக் கூறியிருக்கிறார். அதற்குப் பிறகு, சுற்றுப்பயணம் சென்ற உள்துறை அமைச்சர் திரு.அத்வானி அவர்கள்கூட இதே கருத்தை- 356-ஐப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டாம் என்று குறிப்பிட்டிருக்கிறார். கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சில பேர், இங்கே சொல்லிச் சொல்லிக் களைத்தே போய்விட்டார்கள். அந்த அளவுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இங்கே வந்திருக்கிற உள் துறைக்கூடுதல் செயலாளர் இன்றைக்கு காலையில்- நேற்று இரவு சொன்னதல்ல, இன்று காலையில்- இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு முன்புத் தலைமைச் செயலகத்திலே நடைபெறுகிற தலைமைச் செயலாளர்கள் உள்ளிட்ட மற்ற போலீஸ் அதிகாரிகள் கொண்ட கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு செய்தியாளர்களைப் பார்த்திருக்கிறார். அப்போது சொல்கிறார்: 'மாநிலம் அமைதியாக இருக்கிறது. இன்று காலையில் மெரினக் கடற்கரையில் 'வாக்கிங்' சென்று பார்த்தேன். மக்கள் அச்சமில்லாமல் செல்வதைப் பார்த்தேன். நான் கோவைக்குப் போகவில்லை. கோவைபற்றி முன்பே டெல்லியிலே பேசி விட்டோம்.'' என்று கூறியிருக்கிறார். மெரினாக் கடற்கரையில் அவர் வரும்போது மக்கள் அச்சமில்லாமல் சென்றதாக சொல்லி இருக்கிறார். இதைப் பார்த்துவிட்டு, நாளைக்கு வேண்டுமானால் யாராவது மக்களைப் பயமுறுத்திச் சட்டம்- ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்லி ஒரு இலட்சம் தந்திகளை திரு.வாஜ்பாய்க்குத் தரலாம். திரு. வாஜ்பாயோ அல்லது திரு.அத்வானியோ, மற்றவர்களோ இந்தத் தந்திகளை எல்லாம் பார்த்த ஏமாந்து போகக்கூடியவர்கள் அல்ல. தந்திகள் கொடுப்பது என்றால், நாம்கூட இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று 1 இலட்சம் என்ன. 1 கோடி, தந்திகளைத் தமிழக மக்களின் சார்பாகவும் கொடுக்க முடியும் (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியாக இருக்கிற ஒரு நாட்டில், ஒரு மாநிலத்தில் அமைதியாக நடைபெறுகின்ற ஒரு ஆட்சியைச் சீர்குலைக்க

வேண்டும் என்று ஒரு ஆவல், ஆதங்கம். ஆவல், ஆதங்கம் என்ற வார்த்தைகளைத்தான் பயன்படுத்துகிறேன். அதற்குமேல் வார்த்தைகளை நான் பயன்படுத்த விரும்பவில்லை. எப்படியாவது இங்கே வந்து உட்கார்ந்துவிடவேண்டும் என்பதற்காக அவர்கள் இப்படிச் செய்ய முனைகிறார்கள். அப்படியே ஒருவேளை செய்து வெற்றி பெற்றாலும் மறுபடியும் இங்கே வந்து உட்காரப் போவது நாம்தான் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தி, இந்த அளவோடு இந்த விளக்கத்தை நிறுத்திக் கொள்கிறேன். வணக்கம்.



கோவை வெடிகுண்டு சம்பவம்

உரை : 76 நாள் : 21.04.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. நிஜாமுதீன் அவர்களும், திரு. தீரன் அவர்களும், இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில், மத்தியிலே உள்ள அரசு மாநில அரசைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருக்கிறது என்ற உள்ளடக்கத்தை வைத்து, சில செய்திகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஆனால் அவற்றைப்பற்றி மிக விரிவாக இங்கே உரையாற்ற விரும்பவில்லை; பதில் அளிக்கவும் விரும்பவில்லை. நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களைக் குறைவாகக் குறிப்பிட்டதாக நண்பர் திரு. மணி அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி, திரு. வாஜ்பாய் அவர்கள் நேர்மையானவர், ஒழுக்க சீலர், லஞ்சலாவண்யங் களுக்கு ஆட்படாதவர் என்றெல்லாம் சொன்னார்கள். அது திரு. வாஜ்பாயைப் பாராட்டுவதாக நான் எண்ணிக்கொள்ள வில்லை. திரு. வாஜ்பாயைப் பாராட்டுகிற நேரத்தில் லஞ்ச லாவண்யத்திற்கு ஆட்பட்டவர்கள் நாட்டிலே சிலபேர் இருக்கிறார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி). திரு. மணி அவர்கள் இந்தச் சொற்றொடரின் மூலம் எடுத்துக்காட்டியதற்கு நான் மிகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த 16ஆம் தேதியன்று, டெல்லியிலேயிருந்து உள்துறை சார்பாக இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று தமிழகத்திற்கு வந்து, தலைமைச் செயலகத்திலே முக்கியமான அதிகாரிகளையெல்லாம் அழைத்துப் பேசி, ஒருநாள் முழுவதும்

அவர்களோடு விவாதித்து, விடைபெற்றுச் செல்கின்ற நேரத்திலே ஒரு மரியாதை சந்திப்பு என்கிற வகையிலே முதலமைச்சராக இருக்கின்ற என்னையும் சந்தித்து விடைபெற்றுச் சென்றார்கள். அவர்கள் இங்கே எதற்காக அனுப்பப்பட்டார்கள் என்ற செய்திகள் எல்லாம் பத்திரிகைகளில் மிகப் பரபரப்பாக வெளியிடப்பட்டன. இதுபோன்ற நேரங்களில் பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்க்க முடியாது. ஒரு பத்திரிகைக்கு, இன்னொரு பத்திரிகை போட்டி போட்டுக் கொண்டு செய்திகளை வெளியிட்டால்தான் விற்பனையாகும். கருத்துக்களுக்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, ஜனநாயகத்துக்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, ஒரு நாடு நலமாக இருக்க வேண்டும், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு அளிக்கப்படுகின்ற மதிப்பைவிட, இன்றைக்கு நாட்டில் பரபரப்புக்கு அதிக மதிப்பு தரப்படுகின்ற காரணத்தால், இந்த நிலை தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிறது.

இரண்டு பேர் கொண்ட குழு ஒன்று தமிழகத்திற்கு வருகிறது என்றவுடனேயே ஒவ்வொரு பத்திரிகையிலும் கொட்டை எழுத்துக்களில், தமிழக அரசைக் கலைப்பதற்காக யோசனை சொல்ல வருகிறது என்ற ரீதியிலும், சட்டம் - ஒழுங்கு எந்த அளவிற்குக் கெட்டிருக்கிறது என்பதை ஆராய வருகிறது என்ற வகையிலும், இத்துடன் கருணாநிதி ஆட்சி முடிந்தது என்று ஜாதகம் கணிக்கின்ற வகையிலும் பல்வேறு செய்திகள் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டன. ஆனால் இங்கே வந்த அந்தக் குழுவினர் பல நுணுக்கமான விஷயங்களை எல்லாம் ஆராய்ந்து, கோவையில் நடைபெற்ற கலவரம், அதன் தொடர்பாக உருவான குண்டு வெடிப்புச் சம்பவங்கள், அரசு எடுத்த நடவடிக்கைகள், காவல்துறை திறம்பட அமைதியைக் காப்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு, மக்களுடைய பாராட்டுதலைப் பெற்ற நிலை, குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பாரதிய ஜனதா கட்சியினுடைய தலைவர்கள்கூட பாராட்டக்கூடிய அளவிற்கு, தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் பாராட்டக்கூடிய அளவிற்கு, காவல் துறையினர் பாடுபட்ட அந்த நிலை - இவற்றை எல்லாம் பார்த்துவிட்டு, அவர்கள் டெல்லிக்குத் திரும்பினார்கள். ஆட்சி கலைக்கப்பட்டு

விடும், அதற்காக வந்திருக்கிறார்கள், அப்படிப்பட்ட ஒரு செய்தியைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்ததற்கு மாறாக, செய்திகள் வெளியிடப்பட்டதற்கு மாறாக, பத்திரிகைகளிலே வேறுவிதமாகச் செய்திகள் வெளிவந்தன.

கல்கத்தாவிலிருந்து வெளிவருகிற 'தி டெலிகிராப்' என்ற ஏடு 'Team gives Law and Order certificate. Centre's clean chit to Karunanidhi' என்று பெரும் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டது. ஹைதராபாத்திலிருந்து வெளிவருகின்ற 'நியூஸ் டைம்' என்கிற பிரபலமான பத்திரிகை 'Set back for Jayalalitha's campaign. Central Team's clean chit to Tamil Nadu' என்ற தலைப்பிலே அது ஒரு நீண்ட செய்தியை வெளியிட்டது. டெல்லியிலேயிருந்து வெளிவருகின்ற புகழ்பெற்ற, 'டைம்ஸ் ஆஃப் இந்தியா' என்ற அந்தப் பத்திரிகை 'Central Team gives clean chit to D.M.K. Government' என்ற தலைப்பிட்டு ஒரு செய்தியை வெளியிட்டு இருக்கின்றது. 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை 'Central Team gives clean chit on law and order' என்ற தலைப்பில் ஒரு நீண்ட செய்தியை வெளியிட்டது மாத்திரமல்ல, தலையங்கமும் தீட்டியிருக்கின்றது.

அதுமாத்திரமல்ல, 'தினமணி' ஏட்டில், 'சட்டம் - ஒழுங்கில் திருப்தி, பயங்கரவாத மாநிலம் என்பது நியாயமற்றது' என்று அந்தக் குழுவினர் வெளியிட்ட கருத்தைத் தலைப்பிட்டு, செய்தியாக வெளியிட்டது மாத்திரம் அல்ல, தினமணி எழுதிய தலையங்கத்திலேகூட, 'தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு நிலை மிகவும் மேம்பட்டிருக்கிறது, கோவை குண்டு வெடிப்பு குறித்து, சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை, அரசியல் சாசன 356வது பிரிவைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இவை எல்லாம், தமிழக சட்டம் - ஒழுங்கு நிலை குறித்து ஆராய்ந்த இரண்டு உறுப்பினர் கொண்ட மத்திய அதிகாரிகள் குழு, சென்னையில் தெரிவித்த கருத்துக்கள்' என்று தொடங்கி, இடையிலே முத்தாய்ப்பாக, 'வெடிகுண்டுகளைக் கைப்பற்றுவதிலும், தீவிரவாதிகளைக் கைது செய்வதிலும், முனைப்போடு செயல்படும் தமிழகக் காவல்துறையினருக்கு, உதவவேண்டிய கடமை மத்திய அரசுக்கு உள்ளது' என்று தலையங்கத்திலே குறிப்பிட்டு இருக்கிறது.

நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்களும், நண்பர் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். தீவிரவாதத்தை அல்லது சில வன்முறைச் செயல்களை மாத்திரம் வைத்துக் கொண்டு, ஒரேயடியாக இந்த மாநிலத்திலே சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்ற காரணத்தைக் கூறி, ஆட்சியைக் கலைப்பதற்கு முன்வருவதிலே என்ன நியாயம் இருக்க முடியும் என்றெல்லாம் கேட்டார்கள்.

இந்தியாவிலே வேறு பகுதிகளிலே இந்த நிலைமை இல்லையா என்றுகூட அவர்கள் இங்கே கேட்டார்கள். இரண்டு நாட்களாக வந்துகொண்டிருக்கின்ற செய்திகளைப் பார்த்தால் 'இந்து' பத்திரிகையிலேயே 21-4-1998-ல் 'Udhampur massacre toll rises to 26'. 26 பேர் ஜம்மு - காஷ்மீரில் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 26 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். ஏதோ அங்கே போய் அடைக்கலம் தேடி அல்லது தங்குவதற்காக வந்திருக்கிறோம் என்று சொல்லி, உள்ளே நுழைந்த தீவிரவாதிகள் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த 26 பேரை, கொன்று குவித்து இருக்கின்றார்கள். இதற்கு 'உதம்பூர் படுகொலை' என்றே தலைப்பிட்டு 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டு இருக்கின்றது.

அதைப்போலவே 'எக்ஸ்பிரஸிலும்', மற்ற பத்திரிகைகளிலும் இந்தச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. இன்று காலையிலேகூட டெல்லியிலே வெளிவந்த ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது. 20-4-1998 அன்று நாகாலாந்திலே உள்ள Mokokchung மாவட்டத்தில் தலைமறைவு தீவிரவாதிகள் கண்ணிவெடிகள் மூலம் தாக்கியதில் இராணுவ மேஜர் ஒருவரும் இரண்டு சிப்பாய்களும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் 6 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். இவையெல்லாம் இந்தியாவில்தான் நடக்கின்றன. மேகாலயாவோ, நாகாலாந்தோ இவை இந்தியாவில்தான் இருக்கின்றன. காஷ்மீர் இந்தியாவிற்குச் சொந்தம் என்று நாம் உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அங்கேயும் நடைபெற்றிருக்கின்றது. இதற்கு முன்பும் இப்படிப் பல காரியங்கள் நடைபெற்று இருக்கின்றன. இவைகளையெல்லாம்

வைத்து, சட்டம் - ஒழுங்கு சரியில்லை என்று ஓர் ஆட்சியைக் கலைப்பதாக இருந்தால், அது மிகச் சுலபம்.

ஒரு தேர்தலிலே ஒரு கட்சியோ, அல்லது ஓர் அணியோ வெற்றி பெற்று ஓர் ஆட்சி பொறுப்புக்கு வந்தவுடன், வெற்றி பெறமுடியாத அணி, சட்டம் - ஒழுங்கு இவைகளுக்கு மாறாகச் சில காரியங்களைச் செய்து, அதன் மூலமாக சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்று காட்டி, ஆட்சியைக் கலைத்துவிட முன்வர முடியும். எனவே சட்டம் - ஒழுங்கு நிலைமையை மாத்திரம் காட்டி ஆட்சியைக் கலைத்துவிட முடியாது. அது மாத்திரமல்ல, இன்றைக்கு இங்கே நம்முடைய நண்பர்கள் எடுத்துக்காட்டியதைப் போல, கிராமப்புறத்திலே இருக்கின்ற சிறு குழந்தைகளுடைய வாயிலேகூட புழங்கக்கூடிய சொல்லாக '356' என்ற சொல் மாறியிருக்கிறது. அதுவரையிலே எனக்கு மகிழ்ச்சிதான். ஏனென்றால் '356' அரசியல் சட்டத்திலே இருக்கக்கூடாது என்று ஆரம்பக் காலத்திலேயிருந்து வாதாடி வருகின்ற இயக்கங்களிலே ஒன்று திராவிட முன்னேற்றக் கழகம். அந்த 356-ஐப் பற்றி இன்றைக்கு நாடு முழுவதும் பேசப்படுகின்ற ஒரு சூழ்நிலை வருகின்றபோது விமர்சிக்கின்ற மற்ற இடதுசாரி கட்சிகளைப்போல திராவிட முன்னேற்றக் கழகமும் மகிழ்ச்சி யடைகிறது. பெருமையடைகிறது, இந்த 356-ஐ ஏன் பயன்படுத்துகிறோம்? மாநில அரசு சரியாக இல்லாவிட்டால் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு காலத்திலே சொல்லப்பட்டது. ஆனால், இந்த '356' கேள்விக்குறியாக ஆன பல நிகழ்வுகளைப் பற்றி நண்பர் திரு. தீரன் எடுத்துக்காட்டியதைப்போல நாம் மிக நன்றாக அறிவோம். '356' உச்சநீதிமன்றம் வரையில் எடுத்துச் செல்லப்பட்டு, அதனுடைய முடிவு என்னவாயிற்று என்பதை அவையிலே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். நாட்டு மக்களும் மிக நன்றாக அறிவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எப்படியாவது கலைத்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு, அதற்காக இன்றைக்குப் பல்வேறு பிரயத்தனங்களிலே ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள், டெல்லியிலே இருப்பவர்களை அச்சுறுத்தி, நிர்ப்பந்தப்படுத்தி, பல்வேறு வகையான காரணங்களைச் சொல்லி

அவர்களுடைய முயற்சிக்கு வெற்றி கிட்ட வேண்டுமென்று இன்றைக்கு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான் அன்றைக்கே இந்த அவையிலே சொல்லியிருக்கின்றேன்.

ஓர் ஆட்சி இருப்பது அல்லது இல்லாமல் போவது, இந்த ஆட்சியிலே இருப்பவர்களுக்கு அதனால் எந்தவிதமான பெரிய விளைவுகளும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. என்னைப் பொறுத்தவரையில் இந்த முறை ஆட்சி கலைக்கப்பட்டால் அது ஒரு 'ரெக்கார்டு', மூன்றாவது முறையாக கருணாநிதி ஆட்சி கலைக்கப்பட்டது என்று. ஏற்கெனவே இரண்டு முறை கலைக்கப் பட்டிருக்கிறது. ஓர் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களோடு சேர்ந்து ஜனநாயகத்தைக் காப்பாற்ற கொடி தூக்கினோம் என்பதற்காக ஒரு முறை கலைக்கப்பட்டது. இலங்கையிலே இருக்கின்ற தமிழர்களுக்காக அனுதாபம் காட்டியதற்கு மாறாக விடுதலைப் புலிகளை ஆதரித்தார்கள் என்கின்ற வகையில், அவர்களுடைய வன்முறைகளை எல்லாம் ஆதரித்தோம் என்பது போன்ற சில குற்றச்சாட்டுக்களைச் சொல்லி இரண்டாவது முறையாகக் கலைக்கப்பட்டது.

இப்போது மூன்றாவது முறையாக பதவியிலே எப்படியும் இருந்துதான் தீரவேண்டும் என்பதற்காக யாரோ சிலரைத் திருப்திப்படுத்துவதற்காக இந்த ஆட்சி கலைக்கப் படுகிறது என்றால் நான் உள்ளபடியே பெருமைப்படுகின்றேன். எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டாவது திரு. வாஜ்பாயினுடைய ஆட்சி காப்பாற்றப்பட்டதே என்பதற்காக நான் மகிழ்ச்சி யடைவேன். அதற்கு நான்தான் பலியாகவேண்டுமென்றால், என்னுடைய ஆட்சிதான் பலியாகவேண்டுமென்றால் நான் அதிலே மகிழ்ச்சியடைவேன். ஆனால் திரு. வாஜ்பாய் அவர்கள் ராஜ்யசபாவிலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கமாட்டோம் என்று. அதைச் சிலர் இங்கே எடுத்து வைத்துக்கொண்டு வார்த்தை விளையாட்டு விளையாடு கிறார்கள். அவர் 356-ஐப் பயன்படுத்திக் கலைக்கமாட்டோம் என்றுதான் சொன்னார். நாங்கள் வேறு முறைகளிலே இந்த ஆட்சியைக் கலைப்போம் என்றெல்லாம் இன்றைக்கு மேடைகளிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். திரு. ஞானசேகரன்

குறிப்பிட்டதைப்போல சிலபேர் திடீரென நள்ளிரவிலே இந்த ஆட்சி கலைக்கப்படும் என்றெல்லாம்கூடச் சொல்கிறார்கள். கலைக்கப்படுவது, எப்போது கலைக்கப்பட்டால் என்ன-நடுப்பகலிலே கலைக்கப்பட்டால் என்ன? நள்ளிரவிலே கலைக்கப்பட்டால் என்ன? அது இருளிலே கலைக்கப்பட்டாலும் வெளிச்சத்திலே கலைக்கப்பட்டாலும், கலைப்பு கலைப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால், அந்தக் கலைப்பைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. கவலைப்படுகிற அரசும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி).

எனக்கு இன்றைக்குள்ள மகிழ்ச்சி எல்லாம், நம்முடைய கட்சிகள் நேற்றையதினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இவர்கள் எல்லாம் மத்தியிலிருந்து வருகிற அ.தி.மு.க. அமைச்சர்கள் - நான் எல்லா அமைச்சர் களையும் சொல்லமாட்டேன் - அ.தி.மு.க. அமைச்சர்கள் இந்த ஆட்சியைப்பற்றிப் பேசுகின்ற பேச்சுக்களுக்கு எல்லாம் கண்டனம் தெரிவித்து, இப்படிக் குழுக்களை அனுப்புவது சரியல்ல என்பதையும் வற்புறுத்தி தர்ணா போராட்டம் நடத்தி யிருக்கின்றார்கள்.

இன்றைக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் 'இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நம்முடைய சுப்பராயன் அவர்கள், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பிலே திரு. நிஜாமுதீன் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சி 2-ன் சார்பில் நம்முடைய தீரன் அவர்கள், இவர்கள் எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு ஆதரவாகத் தந்துள்ள இந்த வார்த்தைகள் எனக்குத் தேனாக இனிக்கின்றன. எனக்குத் தெம்பூட்டுகின்றன. ஆட்சி கலைக்கப் படுவதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன். இவ்வளவுபேர் திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குச் சாதகமாக இருக்கின்றார்கள் என்கின்ற இந்த ஒரு நிலையே எனக்குப் போதுமானது. இது தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்தைப் பிரதிபலிக்கின்ற ஒன்று என்பதை நான் மிக மிக நன்றாக அறிவேன். தெளிவாகவே அறிவேன்.

திரு. வாஜ்பாயைப் பொறுத்தவரையில் அவர் சொன்ன சொல்லிலிருந்து மாறுவாரா, மாட்டாரா என்பது அவரைப்

பொறுத்த விஷயம். அவரிடத்திலே எனக்கு மதிப்புண்டு. ஏதோ, இன்றைக்கு இந்த ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கின்ற வார்த்தை அல்ல இது. அவரைத் தீவிரமாக நான் எதிர்த்த அந்தக் காலகட்டத்திலேயே, அவருடைய கொள்கைகளுக்கு முரண்பாடாகப் பல சம்பவங்கள் நடைபெற்ற போது அதைக் கண்டித்த அந்தக் காலகட்டத்திலேயே, பாபர் மசூதிப் பிரச்சினை எல்லாம் உருவான அந்தக் காலத்திலேயே திரு. வாஜ்பாயைக் கண்டித்தபோதெல்லாம்கூட நான் தெளிவாகச் சொல்லியிருக்கின்றேன். ஒரு நல்ல மனிதர், 'Honest man' ஆனால் Wrong Party-யிலே இருக்கிறார், என்று நான் அன்றைக்கே சொல்லியிருக்கின்றேன். அதைத்தான் இன்றைக்கும் சொல்கின்றேன். அவர் ஒரு நிதானமான, நேர்மையான மனிதர் என்பதிலே இன்றைக்கும் எனக்குச் சந்தேகம் இல்லை. நாளைக்கு இந்த ஆட்சியைக் கலைத்து விட்டால்கூட நான் அந்தக் கருத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை. நேர்மையான மனிதர்தான், என்ன செய்வது? ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத் திற்காகப் பணிந்துவிட்டார் என்றுதான் சொல்வேனேதவிர, அவர் நேர்மையற்றவர் என்று நான் நிச்சயமாகச் சொல்ல மாட்டேன். அவருக்கு ஒரு சங்கடத்தை இன்றைக்கு உண்டாக்குகின்றனர்.

நான் கடைசியாக, நீங்கள் எல்லாம் எடுத்துவைத்த இந்த விவாதங்களின் அடிப்படையிலே ஒன்றை மாத்திரம் சொல்கின்றேன். திரு. வாஜ்பாய் அவர்கள் நல்ல கவிஞருமும்கூட. பாரதியாருடைய பாடல்களைக்கூட ஒருமுறை நாடாளுமன்றத் திலே அவர் பாடிக்காட்டினார். நான் கேட்டிருக்கின்றேன். அதற்கு நான் சொல்கின்றேன். 'கண்களை விற்றுச் சித்திரம் வாங்குவாரோ' என்று பாரதி பாடியிருக்கின்றார். (மேசையைத் தட்டும் ஒலி). அதைப்போல திரு. வாஜ்பாய் அவர்களே, ஜனநாயகத்தைப் பலிகொடுத்து ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்வீர்களா என்று கேட்டால் நிச்சயமாக நீங்கள் கண்களை விற்றுச் சித்திரம் வாங்க மாட்டீர்கள் என்று எனக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் ஒன்று, மத்திய அரசுக்கு நான் சொல்லிக் கொள்வேன், மாநில அரசுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். 'தினமணியிலே' எழுதப்

பட்ட தலையங்கத்தைப்போல மாநில அரசுக்கு ஒத்துழைப்புத் தாருங்கள். நான் உள்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அத்வானி அவர்களைச் சந்தித்தபோது, அந்த ஒத்துழைப்பைத்தான் அவரிடத்திலே கேட்டிருக்கிறேன்.

தீவிரவாதம் எந்த வடிவத்திலே வந்தாலும், எந்த மதத்தினுடைய உருக்கொண்டு வந்தாலும், அந்தத் தீவிர வாதத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு இங்கிருக்கின்ற அத்தனை பேருடைய துணையோடு வீழ்த்துவதிலே பின்வாங்காது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதற்கு ஒத்துழைப்பாக நான் கேட்டுள்ள போலீஸ் படையை நவீனப்படுத்த, மேலும் தீவிரப்படுத்த ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் கேட்டிருக்கிறேன். அதைத் தரவேண்டும். கோயம்புத்தூரிலே ஒரு பட்டாலியன் நிறுவுவதற்கு நான் அனுமதி கேட்டிருக்கிறேன். அதைத் தரவேண்டும். இப்படிக் காவல் துறையைப் பலப்படுத்துவதற்கு, தீவிரப்படுத்துவதற்கு, தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு மாநில அரசுக்கு என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அத்தனை உதவிகளையும் மத்திய அரசு செய்யவேண்டுமென்று இங்கே எடுத்து வைக்கப்பட்ட சிறப்பு கவன ஈர்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மத்திய அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். மாநில அரசு இன்னும் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்கிறது என்றால், கோரிக்கை வைக்கிறது என்றால் மத்திய அரசும் இருக்க வேண்டும், மாநில அரசும் இருக்க வேண்டும் என்ற அந்த எண்ணத்தோடுதான் இதை சொல்கின்றேன் என்பதைக் குறிப்பிட்டு அமைகின்றேன், நன்றி,வணக்கம்.

சந்தனக் கடத்தல் வீரப்பன்

உரை : 77 **நாள் : 23.04.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தனக் கடத்தல் வீரப்பனைப் பற்றி, ஏறத்தாழ ஒரு பட்டிமன்றமே இங்கே நடைபெற்றிருக் கின்றது. பட்டிமன்றம் என்றால், எப்போதுமே ஒவ்வொரு அணியிலும் இங்கே 3 பேர் இருந்தால், இன்னாரு பக்கத்திலே 3 பேர் இருப்பார்கள். ஆனால் இந்தப் பட்டிமன்றத்தில் விசித்திரம் என்னவென்றால், எல்லோரும் ஒரு பக்கம், நம்முடைய நண்பர் கணேசன் இன்னொரு பக்கம். அவருடைய பெயரே கணேசன் என்று இருப்பதால் அந்த வெயிட்டே போதும் என்ற அளவில், அவர்கள் வீரப்பனுக்காக இங்கே வாதாடி இருக்கின்றார்கள்.

இந்தப் பிரச்சினை குறித்து தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்களும், இந்திய தேசிய லீக் உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களும், அ.இ.அ.தி.மு.க.-வினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் தாமரைக்கனி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி - 1-ன் சட்டமன்றக் கட்சித் தலைவர் கணேசன் அவர்களும் பல கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

பல ஆண்டுக்காலமாக கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு ஆகிய இரண்டு மாநிலங்களுடைய எல்லைக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கொலை வழக்குகளிலும், யானைகளைக் கொன்று தந்தங்கள் திருடிய வழக்குகளிலும், சந்தனக் கட்டைகளைக் கடத்திய வழக்குகளிலும், காவல் துறையினர், வன இலாகாவினர் மற்றும் பொதுமக்களைப் பிணைக் கைதிகளாகக் கடத்திச்சென்ற வழக்குகளிலும் சம்பந்தப் பட்ட வீரப்பனோடு பேசி, கடந்த பல ஆண்டுக்காலமாக

தமிழகத்திலே அமைந்த அரசுகளானாலும் அல்லது கர்நாடகத் திலே அமைந்த அரசுகளானாலும் வீரப்பனைப் பிடிக்க இயலவில்லை என்ற ஒரு நிலை ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில் கர்நாடக மாநிலத்து அதிகாரிகள் பலரை வீரப்பன் கடந்த ஆண்டில் கடத்திச் சென்று அவர்களுடைய உயிருக்கு ஆபத்து விளையும் என்கின்ற ஓர் அச்சம் தோன்றிய அந்தச் சூழ்நிலையில், கர்நாடக மாநில முதலமைச்சர் அவர்கள் என்னோடு தொடர்புகொண்டு, இரு அரசுகளும் சேர்ந்து எடுத்து வருகின்ற தொடர் முயற்சியை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்று இருவரும் எடுத்த முடிவுகளுக்கேற்ப, அதற்கு உதவியாக நக்கீரன் பத்திரிகையினுடைய ஆசிரியர் கோபால் அவர்கள் காட்டுப் பகுதிக்குச் சென்று, வீரப்பனைச் சந்திக்கின்ற வாய்ப்பைப் பெற்று, வீரப்பன் சரணடைவதற்குத் தயாராக இருப்பதாகவும், பொதுமன்னிப்பு வேண்டும் என்று கோரியதை யும் எடுத்துச் சொன்னார்.

அதன் பிறகும்கூட, நானும், கர்நாடக முதல்வரும் கலந்து பேசி, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு, வீரப்பன் சரணடைந்தால் அப்போதும் உடனடியாக பொது மன்னிப்பு என்று தர இயலாது; சட்டப்படி நடைபெறவேண்டிய காரியங்கள் எல்லாம் நடைபெற்று, அவர் கோருவதுபோல் அவருடைய உற்றார், உறவினர், சுற்றத்தாருக்கு எல்லாம் எந்தவிதமான பழிவாங்குகிற நிலையிலேயும் பாதிப்பு ஏற்படா வண்ணம் இரு அரசுகளும் பார்த்துக்கொள்ளும் என்றும், இந்த வழக்குகளை எல்லாம் கர்நாடக மாநிலத்திலே விசாரிக்காமல், தமிழ்நாட்டிலே உள்ள நீதிமன்றங்களிலே விசாரிப்பதற்கு ஏற்றுக்கொண்டும், இவைகளுக்கு எல்லாம் கட்டுப்பட்டு வீரப்பன் சரணடைய வேண்டும், ஒரு பொது இடத்திலே என் முன்னிலையிலும், கர்நாடக முதல்வர் முன்னிலையிலும் என்றெல்லாம் சொல்லி அனுப்பப்பட்டு, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதைப்போல 2,3 முறை அதற்கு ஒப்புதல் அளித்த வீரப்பன், இறுதியாக வேறுசில புதிய நிபந்தனைகளைப் போட்டு, சரணடைய மறுத்துவிட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் இந்த அவைக்கு மிக நன்றாகத் தெரியும். எனினும், கடந்த ஆண்டு

ஆகஸ்ட் மாதம் முதல் வீரப்பனும், அவனுடைய கூட்டாளிகளும் எந்த வன்முறைகளிலும் ஈடுபடவில்லை என்பதை எல்லோரும் அறிவீர்கள். காரணம், இடையில் நக்கீரன் கோபால் மூலமாக நடைபெற்ற அந்தப் பேச்சுவார்த்தை. அது முறிந்த பிறகு, கர்நாடகம் மற்றும் தமிழ்நாடு கூட்டுச் சிறப்பு அதிரடிப் படையினர் மேற்குத் தொடர்ச்சி மலையின் உள்ளே பல பகுதிகளில் கிராமப் பாதுகாப்புக் குழுக்களை அமைத்து மக்களின் ஒத்துழைப்போடு வீரப்பன் மற்றும் கூட்டாளிகளைத் தேடும் பணியிலே ஈடுபட்டனர் என்றால் அது மிகையாகாது. அடர்ந்த காட்டுப் பகுதியிலே உள்ள பல்வேறு கிராமங்களுக்கு இரு மாநில சிறப்பு அதிரடிப் படையினுடைய தலைவராக நியமனம் செய்யப்பெற்ற திரு. காளிமுத்து, ஐ.பி.எஸ்., 75 நாட்களுக்கு மேல் காட்டிலேயே தங்கி அங்குள்ள மக்களை யெல்லாம் சந்தித்து, அவர்களிடத்திலே கலந்துபேசி ஒரு பெரிய மனமாற்றத்தை அந்த மக்களிடத்திலே உருவாக்கியிருக்கிறார். அந்தப் பகுதி மக்களின் ஒத்துழைப்போடு சந்தனக் கடத்தல் வீரப்பனையும், அந்தக் கும்பலையும் கைது செய்ய வேண்டும் அல்லது சரணடையச் செய்யவேண்டும் என்று அதிரடிப் படையினர் மும்முரமாக உழைத்து வருகின்றார்கள். இதற்கிடை யிலேதான் நெற்றிக்கண் மணி என்கின்ற இன்னொரு பத்திரிகை ஆசிரியர் மூலமாக வீரப்பனுடைய கூட்டாளிகள் அன்புராஜ், அப்புசாமி, தங்கபையன் என்ற மூவரும் சரணடைந்தார்கள். அவர்கள் சென்னையிலே வந்து, காவல்துறை ஆணையர் முன்னிலையிலே சரணடைந்தார்கள். அவர்கள் மூலமாக ஒரு ஒலி நாடா, ஒளி நாடா கொடுத்து அனுப்பப்பட்டிருந்தன. அந்த ஒலி நாடா, ஒளி நாடா இரண்டும் முழுமையானவைகளாக இல்லை. எப்படி முழுமையானவைகளாக இல்லாமல் போய் விட்டது என்பது எனக்கும் தெரியவில்லை. ஆனால் அதிலே இருந்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப்போலத்தான், 'சரணடையத் தயாராக இருக்கிறேன்' என்கின்ற வாசகம் அமைந்ததாக இல்லை.

அதிலே இருந்தது எல்லாம், 'இந்த மூவரையும் அனுப்பி யிருக்கின்றேன்; இந்த மூவரையும் எப்படித் தமிழக அரசு நடத்தப்போகிறது என்பதை பார்த்துக்கொண்டிருக்கின்றேன்.

அவர்களைச் சரியாக நடத்தாவிட்டால் பழி வாங்குவேன்' என்பது போன்ற இந்த வாசகங்கள்தான் அதிலே அமைந்திருந்தன. வேறு விவரங்கள் அதிலே இல்லை. இருந்தபோதிலும் அவர்கள் மூவரும் தானாகவந்து சரண் அடைந்ததை உடனடியாக கர்நாடக மாநில அரசுக்குத் தெரிவித்து, அந்த மாநில அரசினுடைய காவல்துறையினரும் உடனடியாக சென்னைக்கு வந்து, இங்குள்ள காவல்துறை உயர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். அதற்குப்பிறகு, இப்போது வீரப்பனுடைய கூட்டாளிகளாக இருந்த துப்பாக்கிச் சித்தன், அவரது மனைவி கும்பி மற்றும் கூட்டாளிகளான துப்பாக்கிச் சித்தனுடைய தம்பி மகாதேவன், ஜாக்கையன், சுரேஷ் மற்றும் ஜெயராமன் ஆகியோர் கடந்த சில நாட்களில் சத்தியமங்கலம், ஆசலூர், தாளவாடிப் பகுதிகளிலே, கடைமடைப் பகுதிகளிலே தற்காலிகமாக தனியாகப் பிரிந்து சென்று தலைமறைவாக இருந்து வந்தார்கள். அவர்கள் அப்பகுதியிலே சுற்றித் திரிவதை அறிந்த அதிரடிப் படையினர் 19-4-1998 அன்று காட்டிற்குள்ளே சென்று மேற்கண்டவர்களை சுற்றி வளைத்தபோது, அவர்கள் சிறப்பு அதிரடிப் படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டார்கள். அதிரடிப்படையினரும் தற்காப்புக்காகத் திருப்பிச் சுட்டார்கள். அதனால் யாருக்கும் காயம் இல்லை. அதிரடிப் படையினர் சாமர்த்தியமாக எதிர்கொண்டு அவர்களைச் சரண் அடையுமாறு எச்சரித்து, அவர்களைச் சுற்றி வளைத்தபோது, துப்பாக்கிச் சித்தன் தப்பி ஓடிவிட்டான். அவனது சகாக்களான மகாதேவன், கும்பி என்ற சிக்குமடை என்ற பெண்மணி, ஜாக்கையன், சுரேஷ், ஜெயராமன் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். அவர்களிடமிருந்து இரண்டு நாட்டுத் துப்பாக்கிகள் உள்ளிட்ட வெடிமருந்துப் பொருட்கள் மற்றும் சாதனங்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள வீரப்பனும், அவனது கூட்டாளிகளும், கூட்டு அதிரடிப் படையினரிடமிருந்து தப்பி ஓடிவிட்டார்கள். இதுதான் இதுவரை நடைபெற்றுள்ள நிகழ்ச்சியாகும்.

இதிலே, அவர்கள் நாடகமாடுகிறார்களா, இல்லையா என்பதெல்லாம் நாடறிந்த விஷயம். நான்கு அல்லது ஐந்து முறை சரண் அடைவதாகத் தூது அனுப்பியும்கூட, அதற்கான

நிபந்தனைகளையெல்லாம் விதித்தபிறகு, கடைசியாக மறுத்து விடுவது வீரப்பனுக்கு வாடிக்கையாக இருந்து வருகிறது. பொது மன்னிப்பு என்பது இயலாத ஒன்று. ஜெயப்பிரகாஷ் நாராயண் முன்னிலையில் சம்பல் பள்ளத்தாக்கிலே உள்ள அந்த முரட்டுத் தலைவர்கள், தீவிரவாதிகள், கொள்ளைக்காரர்கள், அவர்கள் எல்லாம் எப்படிச் சரண் அடைந்தார்கள், பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது என்று நம்முடைய கணேசன் குறிப்பிட்டார். யாருக்கும் பொது மன்னிப்பு அளிக்கப்படவில்லை.

பூலான்தேவிக்குக்கூட பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு மறுநாளே அவர் நாட்டிலே உலாவத் தொடங்கவில்லை. அவர்கள்கூட, கொஞ்ச காலம் சிறையிலே இருந்துதான், அதற்கு விசாரணை எல்லாம் நடைபெற்றுத்தான் ஒரு 3, 4 ஆண்டுக் காலம், 5, 6 ஆண்டுக்காலம்கூட சிறையிலே இருந்துதான் அவர்கள் பின்னாலே வந்திருக்கின்றார்கள். எனவே, பொது மன்னிப்பு, உடனடியாக விட்டுவிடுவது என்றால், கர்நாடக மாநிலத்திலே தொடரப்பட்ட வழக்குகள், தமிழ் மாநிலத்திலே தொடரப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் திரும்பப் பெற்றாக வேண்டும். அப்படித் திரும்பப் பெறுவதற்கு எந்தவிதமான சட்ட ரீதியான, நியாயமான காரணங்களும் இல்லை என்பதை அனைவரும் அறிவோம். இருந்தாலும், வீரப்பன் சரண் அடைந்தால், அவரை, அவருடைய கூட்டாளிகளை அவருடைய உற்றார், உறவினரை, பழிக்குப்பழி வாங்குவோம் என்று இல்லாமல் சட்டப்படி நடத்துவோம் என்று வீரப்பனுக்கு ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறோம். அதை ஏற்றுக்கொண்டு இப்போதும் காலம் வீணாகிவிடவில்லை, வீரப்பன் சரண் அடைவதற்குத் தயாராக இருந்தால் இந்த நிபந்தனைகளை எல்லாம் ஏற்றுக்கொண்டு, சரண் அடைவதற்குத் தயாராக இருந்தால், நம்முடைய கணேசனேகூட அந்த முயற்சியில் ஈடுபட்டு, அந்தக் காரியத்தை வெற்றிகரமாகச் செய்யலாம்.

ஏதோ குண்டு வெடிப்புகளையெல்லாம் மறைப்பதற்காக, இப்போது வீரப்பன் விவகாரம் கட்டவிழ்த்து விடப்பட்டிருப் பதாக நம்முடைய தாமரைக்கனி சொன்னார். ஜெயலலிதா

ஆட்சியிலேகூட பலமுறை வீரப்பன் விவகாரம் பேசப்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் எந்த வெடிப்புகளை மறைப்பதற்காக இந்த வீரப்பன் விவகாரம் வெளியிலே வந்தது என்பது எனக்குத் தெரியவில்லை. ஏதோ மனம்போன போக்கிலே பேசலாம், இந்த ஆட்சியைப்பற்றி ஏதோ குறை சொல்லலாம் என்பதற்காகச் சொல்லிக்கொண்டிருப்பது நியாயம் அல்ல. அவர்கள் எல்லாம் உண்மையிலேயே வீரப்பனுடைய கூட்டாளிகள்தானா என்ற சந்தேகத்தை தாமரைக்கனி எழுப்பினார். நான் என்ன செய்ய முடியும்? அவரை அழைத்துக்கொண்டு போய்த்தான் பார்த்துச் சொல்லுங்கள் என்று நான் கேட்க முடியுமே தவிர வேறு வழி எனக்கு இல்லை. சொல்வதைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. போலீஸ்காரர்கள் சொல்வதைத்தான் நம்பி ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இதுவரையிலே அவருடைய கூட்டாளிகள்தான் என்று ஊர்ஜிதப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து மேலும் முயற்சிகள் காவல்துறையால் நடத்தப்படும் அல்லது பொதுநலன் விரும்புகின்ற அல்லது அமைதியை விரும்புகின்ற, இதுபோன்ற சீரழிவுகள் நடக்கக்கூடாது என்று எண்ணுகின்ற நல்லவர்களாக இருக்கின்றவர்களால் இதுபோன்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு, இரண்டு அரசுகளினுடைய நிபந்தனைகளுக்கு - கர்நாடக மாநில அரசு, தமிழக அரசு, இந்த இரண்டு மாநில அரசுகளுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு சரண் அடைவதற்கு வீரப்பன் தயாராக இருப்பாரேயானால், ஏற்கெனவே நாம் விதித்திருக்கின்ற அந்த நிபந்தனைகளின் அடிப்படையிலே அதை அணுக தமிழக அரசும், கர்நாடக அரசும் தயாராக இருக்கின்றன என்பதை மீண்டும் தெரிவித்து, இந்த அளவில் அமைகின்றேன்.

காவல் துறை பிரச்சினை

உரை : 78 நாள் : 28.04.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வதந்தியின் காரணமாக ஏற்பட்ட ஒரு கொடுமை, ஒரு வேதனை நிகழ்ச்சி, இது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.டி.சுதர்சனம் அவர்களும், திரு.நா.பெரியசாமி அவர்களும், திரு.இரா.தாமரைக்கனி அவர்களும், திரு.ஐ.கணேசன் அவர்களும், திரு.லா.சந்தானம் அவர்களும், திரு.டி.மணி அவர்களும், திரு.பி. வெங்கடசாமி அவர்களும், டாக்டர் க.கிருஷ்ணசாமி அவர்களும் நம்முடைய கவனத்தை குறிப்பாக அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையிலே பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

பொதுவாக, தமிழ்நாட்டு மக்களுக்கு என்ன காரணத் தாலோ இந்த வதந்திகளை நம்புகின்ற ஒரு பழக்கம் நீண்டகால மாகவே இருந்து வருகிறது. திடீரென்று பிள்ளை பிடிக்கிறவன் வருகிறான்; அந்தத் தெருவிலே பிள்ளை பிடித்துக்கொண்டு போனான்; இந்தத் தெருவிலே பிள்ளை பிடித்துக்கொண்டு போனான் என்ற ஒரு செய்தி பரவும். சாதாரணமாக ஒருவர் ஏதோ பேப்பர் பொறுக்குவதற்காக சாக்குப் பையைத் தோளில் போட்டுக்கொண்டு போனாலும் பிள்ளை பிடிக்கிறவன் என்று அஞ்சி ஓடுகின்ற நிலையையும் அல்லது அவனை அச்சுறுத்தி விரட்டுகின்ற நிலையையும் தமிழ்நாட்டிலே பல இடங்களில் நாம் பார்த்திருக்கின்றோம். இவை எல்லாம் ஒரு காலகட்டம் வரையிலே வந்து, பிறகு மறைந்துவிடும். அதைப் போல, பிள்ளையார் பால் குடிக்கிறார் என்ற கதை கட்டப்படும். அந்த வதந்தியை எல்லோரும் நம்பி, அந்தப் பிள்ளையாரைப் பார்ப்ப தற்காகப் போய்ப் பார்த்து, கடைசியிலே ஏமாறுவது; சிலுவைக் குழந்தை பிறந்திருக்கிறது என்று சொல்லி, சென்னையிலே,

தலைநகரான சென்னையிலேகூட, கோடம்பாக்கத்தில் சிலுவைக் குழந்தை பிறந்திருப்பதாகச் சொல்லி, அந்தக் குழந்தையைப் பார்ப்பதற்கு ஏராளமாகச் செலவு செய்து, அந்த வதந்தியின் காரணமாக அறிவைப் பலி கொடுக்கின்ற மக்கள் என்ன காரணத்தாலோ தமிழ்நாட்டிலே குறையவில்லை. மாறாகச் சில நேரங்களில் பெருகிக்கொண்டிருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட வதந்தியினுடைய அடிப்படையிலேதான் இந்த நிகழ்ச்சியும் நடைபெற்றிருக்கிறது என்பதையும் மாண்பு மிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியிருக் கிறார்கள். சென்னீர்க்குப்பம் பகுதியிலே மீண்டும் கொடுமை நடைபெற்றிருக்கிறது. சில நாட்களாக திருவள்ளூர் மாவட்டத்தில் ஒரு கும்பல் ஊசி மூலம் 'எய்ட்ஸ்'-ஐப் பரப்புவதாகவும், பெண் களைப் பலாத்காரமான முறையில் கெடுப்பதாகவும் வதந்தி இருந்து வந்தது. இந்த வதந்தியை ஏன் போலீசார் கவனிக்க வில்லை, அங்கேயுள்ள காவல் துறை, சிறிய அதிகாரிகளிலே யிருந்து பெரிய அதிகாரி வரையிலே என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்ற கேள்வி உறுப்பினர்களால் இங்கே எழுப்பப்பட்டது. அந்தக் கேள்விக்கு இந்த அரசு நிச்சயமாக விடை கண்டு விளக்கம் பெறும் என்பதையும், சரியாக விளக்கம் தரப்படாவிட்டால் காவல்துறையினர் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்று, இந்த வதந்தியைப் பற்றிக் காவல் துறையிடத் திலே போய் யாரும், எதுவும் புகார் சொன்னதாக எந்தச் செய்தி யும் கிடையாது. காவல் துறையிடத்திலே கேட்கும்பொழுது அவர்கள் இதைத்தான் நமக்கு விளக்கமாக இதுவரையிலே அளித்திருக்கின்றார்கள். அதிலே குறிப்பாக, ஊசி மூலம் எய்ட்சைப் பரப்புவது என்கிற வதந்தியை எப்படித்தான் மக்கள் நம்புகிறார்களோ என்று எனக்கும் தெரியவில்லை. எய்ட்சைத் தடுப்பதற்கு மாத்திரமல்ல; எய்ட்ஸ் வந்தால், அந்த நோயாளி யைக் காப்பாற்றுவதற்குக்கூட இன்னும் ஊசி கண்டுபிடிக்கப்பட வில்லை என்று தெரிகிறது. இந்தச் சூழ்நிலையிலே ஊசி மூலமாக எய்ட்சைப் பரப்புகிறார்கள் என்ற வதந்தியைக் கேட்டு, அதைப் பரப்பி இந்த நிகழ்ச்சிக்கு ஓர் அஸ்திவாரம் போடப் பட்டிருக்கிறது.

அதுபோலவே சில கும்பலிலே உள்ள வாலிபர்கள் அந்தப் பகுதியிலே உள்ள பெண்களைக் கற்பழிக்க முயற்சிக் கிறார்கள்; கெடுத்து விட்டார்கள் என்றுகூடச் செய்திகள் பரப்பப் பட்டிருக்கின்றன. ஆனால் இவை எல்லாம் செய்திகளாக, வதந்திகளாக வந்தவைகளே மட்டுமல்லாமல், நடந்த நிகழ்ச்சிகள் என்று எந்தக் காவல் அலுவலகத்திலும் சென்று புகார்கள் கொடுக்கப்படவில்லை. இதற்கிடையிலேதான் 26-4-1998 அன்று மதியம் சுமார் 3½ மணியளவில் பூவிருந்தவல்லி காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட வென்னீர்குப்பம் சோதனைச்சாவடி அருகில் சுமார் 30 வயதுடைய அடையாளம் தெரியாத ஒரு நபர் சந்தேகத்திற்குரிய முறையிலே சுற்றிக்கொண்டிருந்தபோது அந்தப் பகுதியைச் சார்ந்த மக்கள் அவரைப் பிடித்து விசாரிக்க, அவரால் தமிழிலே சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. அவர் ஊசி மூலம் எய்ட்ஸைப் பரப்பி வரும் கும்பலைச் சார்ந்தவர் எனக் கருதிய அந்தப் பகுதி மக்கள் அவரைக் கம்பத்திலே கட்டிவைத்து அடித்ததில் அவர் நினைவிழந்தார்.

இந்தத் தகவல் பூவிருந்தவல்லி காவல் நிலையத்திற்குக் கிடைத்ததும், அந்தக் காவல் நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு தலைமைக் காவலர், இரண்டு காவலர் களோடு சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றுள்ளார்கள். அங்கே சென்னீர்குப்பம், வி.கே. தெரு, விநாயகர் கோயில் எதிரேயுள்ள தொலைபேசிக் கம்பத்திலே கட்டிவைத்து ஊர்மக்கள் அந்த வாலிபரை அடித்துக் கொண்டிருந்தார்கள். அவர் தலையில் இரத்தக்காயம் ஏற்பட்டு இருந்தது. காவல்துறை உதவி ஆய்வாளர் காயம்பட்டிருந்த அந்த நபரை மருத்துவமனைக்கு உடனடியாகக் கொண்டுபோக முயற்சித்தபோது, கூட இருந்த கூட்டத்தினர் முதலில் அதற்கு அனுமதித்தார்கள். ஆனால், பின்னர் என்ன காரணத்தினாலோ தங்கள் மனதை மாற்றிக் கொண்டு உதவி ஆய்வாளரை அடிபட்ட நபரை அழைத்துப் போகாமல் தடுத்துவிட்டார்கள். கூட்டத்திலேயிருந்த சிலர் அடி பட்ட நபரை இழுத்துக்கொண்டு பூவிருந்தவல்லி பைபாஸ் ரோடு அருகே சென்றார்கள். காவலரையும் அருகே நெருங்க விடாமல் தடுத்துவிடார்கள்.

அந்த நேரத்திலே உதவி ஆய்வாளர் தன் வாகனத்திலே யிருந்த 'வொயர்லெஸ்' வான்செய்தி மூலமாகத் தொடர்பு கொண்டு கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் கொடுத்து அவரைக் காப்பாற்ற முயற்சி மேற்கொண்டிருக்கிறார். இருந்தாலும் கூட்டத் தினர் சிலர் அந்த நபர் மீது டீசலை ஊற்றித் தீ வைத்துவிட்டு ஓடிவிட்டார்கள். கட்டுப்பாட்டு அறையிலே இருந்து கொடுத்த தகவலின்படி ஒரு தீயணைப்புப் படையினர் அங்கே விரைந்து காவல் துறையினரின் உதவியுடன் தீயை அணைத்தும் இறந்த வரின் உடலை மாத்திரம்தான் அவர்களால் கைப்பற்ற முடிந்தது. உடலைக் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத் தார்கள். அதற்குள் பூவிருந்தவல்லி காவல் துறை ஆய்வாளரும், பரங்கிமலை தலைமையிடத்திலே இருந்து காவல் துறையினரும் சம்பவம்நடந்த இடத்திற்கு வந்து கூட்டத்தினரைக் கலைத்து போக்குவரத்தை ஒழுங்கு செய்ததோடு, காவலர்களைப் பணி செய்ய விடாமல் தடுத்த டிக்காராம், செல்வம், ரங்கநாதன் மற்றும் ராகா ஆகியோரைக் கைது செய்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் குறித்து பூவிருந்தவல்லி காவல் நிலைய குற்ற எண் 305/98, இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 333, 341, 342 மற்றும் 302-வது பிரிவில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, மேலே கைது செய்யப்பட்ட 4 பேர்களைத் தவிர மேலும் 29 பேரைக் கைது செய்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட வதந்திகள் காரணமாகப் பொதுமக்கள் மத்தியிலே எந்தவிதமான அசம்பாவிதமும் ஏற்படாமல் இருக்க காவல் துறையினர் ஒலிபெருக்கி மூலம் அந்தப் பகுதியிலே கூறிவருவதோடு, சந்தேகத்திற்குரிய நபர்கள் பிடிபட்டால் அவர்களைஅடிக்காமல் காவல் துறையிடம் ஒப்படைக்க வேண்டுமென்று அறிவுறுத்தி வருகின்றார்கள்.

இந்தப் பணியிலே காவல் துறையின் மூன்று குழுக்கள் தனித் தனியாக அந்தப் பகுதியிலே செயல்பட்டு வருகின்றன. மேலும், அசம்பாவிதம் நடக்காவண்ணம் சபை இடத்திலேயும், அதைச் சுற்றியுள்ள பகுதியிலேயும் பலத்த பாதுகாப்பு ஏற் பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுபோன்ற கூட்டங்கள் கூடு கின்ற நேரத்திலேதான் தானாக பலருக்கு வீரம் வந்துவிடுகிறது. ஏதோ பொது நலனுக்காகச் செய்கின்ற காரியம் என்கின்ற பெயரில் ரௌடிகள் சிலபேர் இது போன்ற விஷமச்

செயல்களிலே ஈடுபட்டு வருவது தெரிந்த விஷயம்தான். அந்த வகையிலேதான் ஒரு அநாதையோ அல்லது ஆதரவு உள்ளவனோ தெரியாது. ஒரு வாலிபன், அவனை இவர்களாகவே தண்டித்து இருப்பது பெரும் குற்றமாகும். அதுவும் மிகக் கொடுமையாகத் தண்டிக்கிறார்கள், உயிரோடு வைத்தே கொளுத்தி இருக்கிறார்கள் என்பது சகிக்க முடியாத ஒரு செய்தியாகும். எனவே, இதிலே காவல் துறை, மாண்புமிகு உறுப்பினர் திரு.சுதர்சனம் சொன்னதைப்போல, எல்லோரையும் பிடித்திருக்கிறார்கள், விசாரணைக்காகப் பலரைப் பிடித்திருப்பார்கள், விசாரணை செய்த பிறகே உண்மையான குற்றவாளியார் என்று அறிந்து, அவர்கள் நிச்சயமாக தண்டிக்கத் தகுந்தவர்களாக இருந்தால் அவர்கள் மேல் வழக்கு போடப்படும். அதற்குரிய செக்ஷன்களை எல்லாம் நான் இங்கே படித்துக் காட்டியிருக்கிறேன். இந்தச் சட்டப் பிரிவுகளிலேதான் இந்த வழக்குகள் தொடரப்படும் என்பதையும், இதுபோன்ற அநியாயங்கள் நடக்காமல் இருப்பதற்கு இத்தகைய வதந்திகள் பரவாமல் தடுக்கின்ற அந்தப் பணியில் காவல் துறைக்குத்தான் கடமை இருக்கிறது என்று எண்ணக்கூடாது. உங்களுக்குத் தெரியும், காவல் துறையினுடைய எண்ணிக்கை, தமிழ் நாட்டிலே 6 கோடி மக்கள் இருக்கின்ற இந்த மாநிலத்தில் 86,000 பேர்தான். இந்த 86,000 பேர் 6 கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில் எங்கேயாவது ஓரிடத்தில் இப்படிப்பட்ட வதந்திகள் பரப்புகிற நேரத்திலே எல்லாம் அங்கே வந்து அந்த வதந்தியைத் தடுக்க முடியும் என்பது இயலாத காரியம். எனவே, நாமும் அதற்கு ஒத்துழைப்பாக இருக்க வேண்டும் என்ற அந்த எண்ண உணர்வை மாண்புமிகு அவை உறுப்பினர்களும், பொது மக்களும் உணர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

தீ விபத்து நிகழ்ச்சி

உரை : 79 **நாள்: 05.05.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், தி.மு.க. சார்பில் திரு. வைத்தியலிங்கம், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. ஞானசேகரன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி, அ.தி.மு.க. சார்பில் திரு. தாமரைக்கனி, பாட்டாளி மக்கள் கட்சி-1 சார்பில் திரு. ஐ. கணேசன், அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சி சார்பில் திரு. லா. சந்தானம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. டி. மணி ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள், செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், நீலாங்கரை காவல் நிலைய சரகத்திலே உள்ள மீனவர் குடியிருப்புக் கிராமமான பனையூர்குப்பத்தில் நடைபெற்ற ஒரு வருந்தத்தக்க, சோகமான நிகழ்ச்சி குறித்து குறிப்பிட்டுச் சில கருத்துக்களை எடுத்து வைத்து இருக்கின்றார்கள். அந்தப் பனையூர்க்குப்பத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைப்பற்றி எனக்கு வந்துள்ள அதிகாரப்பூர்வமான அறிக்கையை முதலில் இந்த அவையில் வைக்க விரும்புகின்றேன்.

அங்கே பழண்டியம்மன் கோயில் ஒன்று உள்ளது. இதில் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருவிழா நடைபெறும். இத்திருவிழா 4 நாட்களுக்குக் கொண்டாடப்படும். இந்த ஆண்டு 3.5.1998 முதல் இத்திருவிழா கொண்டாடப்பட இருந்தது. வாண வேடிக்கை என்பது இத்திருவிழாவின் சிறப்பு அம்சம் ஆகும்.

3.5.1998 முதல் நடைபெற இருந்த இந்தத் திருவிழாவில் வாண வேடிக்கையை நடத்துவதற்காக பட்டாசு தயாரிக்கும்

உரிமம் லத்தீப் பயர் ஒர்க்ஸ் (சிரிப்பு) - அவரே ஃபயர் ஒர்க்ஸ்தான், எங்களுக்குத் தெரியும். லத்தீபே ஃபயர் ஒர்க்ஸ்தான், தெரியும் எங்களுக்கு. - பட்டாசு தயாரிக்கும் உரிமை...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் தலைவர் முழுமையாக ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு).

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: லத்தீப் ஃபயர் ஒர்க்ஸ் என்ற கம்பெனியின் பங்குதாரர்- அதனுடைய பங்குதாரர் பி.ஆர். தாவுத் பாட்சா என்பவரிடம் சுமார் 1 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பட்டாசு தயாரிக்கும் ஆர்டரை விழாக் குழுவினர் ஒப்படைத்தார்கள். இதற்காக 30 ஆயிரம் ரூபாய் முன்பணம் வழங்கப்பட்டு உள்ளது. பி.ஆர். தாவூத் பாட்சா, பிளாட் எண்: 24, காமாட்சி நகர், மாங்காட்டைச் சேர்ந்தவர்.

இவர் 1 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பட்டாசுகளைத் தயாரித்து, தன் மனைவி கவுசியா மற்றும் உறவினர்கள், வேலையாட்கள் உட்பட மொத்தம் 16 நபர்களை அழைத்து வந்து பனையூர்க்குப்பத்தில் ராஜ்குமார் என்பவருக்குச் சொந்தமான கட்டடத்தில் தங்கியிருக்கிறார்.

30.4.1998 அன்று மாலையில் அங்கே வந்த அவர்கள், பட்டாசுகளை அந்தக் கட்டடத்திலே அடுக்கி வைத்து, அந்தப் பட்டாசுகளுக்கு மேலே சில லேபிள்களை ஒட்டி, அலங்காரம் செய்யும் வேலையிலே ஈடுபட்டிருந்தார்கள். அந்தக் கட்டடத் திலே மின்சார ஒயர்கள் ஏற்கனவே பழுதுபட்டு இருந்தன. அதனால் அங்கே மின்சார விளக்குகள் இல்லாத காரணத்தால், மின்சார கான்ட்ராக்டரின் மகன் வடிவேலு என்பவரின் துணை யோடு ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் எடுக்க முயன்றபோது, இரவு சுமார் 7½ மணி அளவில், அடுக்கி வைத்திருந்த பட்டாசுகள் பயங்கரமாக வெடித்துச் சிதறியதில் அந்தக் கட்டடம் இடிந்து விழுந்தது.

இந்த இடிபாடுகளில் சிக்கியும், பட்டாசு வெடித்ததன் காரணமாகவும் 10 பேர் இறந்து இருக்கிறார்கள். இன்று காலையிலே ஒருவர். மொத்தம் 11 பேர் இறந்திருக்கிறார்கள்.

இதில் 5 நபர்கள் தாவுத் பாட்சாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தாவூத் பாட்சாவிடம் பணியாற்றிய மேலும் 7 பேர் சென்னை அரசு பொது மருத்துவமனையிலும், இராயப் பேட்டை மருத்துவமனையிலும் சிகிட்சை பெற்று வருகின்றார்கள்.

இது சம்பந்தமாக நீலாங்கரை காவல் நிலையத்தில் குற்ற எண் 500/98 பிரிவு 286, 304 (அ), இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் பிரிவு 3, 4 வெடி பொருட்கள் சட்டத்தின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு உள்ளது.

இந்தச் சம்பவம் பற்றிச் செய்தி கிடைத்தவுடன், அற நிலையத் துறை அமைச்சரவர்களை அந்த இடத்திற்குச் சென்று பார்வையிடுமாறு கேட்டுக் கொண்டேன். அவரும் சம்பவம் நடைபற்ற இடத்திற்கும், பின்னர் மருத்துவமனைக்கும் சென்று பார்வையிட்டுள்ளார். மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அவர்களும் சம்பவ இடத்திற்குச் சென்று உரிய நடவடிக்கை களை மேற்கொண்டார். மேலும், இச்சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது.

இறந்தவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட ஆணை யிடப்பட்டு, இன்று காலையிலே 9½ மணி அளவில், ஏறத்தாழ 5 இலட்சம் ரூபாய் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்டு இருக்கின்றது.

இந்தப் பனையூர்குப்பம் பட்டாசு வெடி விபத்து சம்ப வம் பற்றிப் பேசிய உறுப்பினர்களுக்கு, அதிலும் குறிப்பாக நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்களுக்கு ஒரு சில விவரங்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இது பட்டாசு கம்பெனிதான். லத்தீப் ஃபயர் ஒர்க்ஸ் என்பது பட்டாசு கம்பெனிதான் என்பதற்கு என் கையிலே இருக்கின்ற மத்திய அரசு கொடுத்த லைசென்ஸ், 1997ஆம் ஆண்டு Government of India, Department of Explosives, Shastri Bhavan, Madras-6. இங்கேயிருந்து இந்த உரிமம், இந்த லைசென்ஸ், லத்தீப் அண்டு சன்ஸ் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் என்ற இந்த உரிமையாளர்களுக்கு

உரிமம், பட்டாசுத் தொழில் செய்கின்ற உரிமம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. குண்டு தயாரிப்பதற்காக வழங்கப் பட்ட உரிமம் அல்ல; பட்டாசு தயாரிப்பதற்காக வழங்கப்பட்ட உரிமம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதுமாத்திரமல்லாமல், இதிலே, இந்த விழாக் குழுவிலே 13 பேர் இடம்பெற்றிருக்கிறார்கள். அதிலே 10 பேர் அ.தி.மு.க. வினர், 3 பேர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். ஒரு கிராமத்து விழா என்ற முறையிலே அ.தி.மு.க., தி.மு.க. இரண்டு பேரும் சேர்ந் திருக்கின்றார்கள். அதிலே, 13 பேரிலே 10 பேர் அ.தி.மு.க., 3 பேர் தி.மு.க. இதிலே முக்கியமாக, பனையூர்க்குப்பத்தைச் சேர்ந்த - நம்முடைய திரு. ஞானசேகரன் குறிப்பிட்டதைப் போல, பனையூர்க்குப்பத்தைச் சேர்ந்த கருணாகரன், 41 வயதுடையவர், இவர் சோழிங்கநல்லூர், பேரூர் புரட்சித் தலைவி பேரவையின் காப்பாளர். இந்தப் பேரவைக்குப் பெயர் புரட்சித் தலைவி பேரவை, அதனுடைய காப்பாளர். மதிவாணன், வயது 28, இவர் சோழிங்கநல்லூர், பேரூர் புரட்சித் தலைவி பேரவையின் பொருளாளர். டி. ராஜேந்திரன், வயது 30, இவர் சோழிங்கநல்லூர் பேரூர் புரட்சித் தலைவி பேரவையின் செயலாளர். கோவில் திருவிழாவையொட்டி பட்டாசு தயாரிக்கும்போது இயல்பாக நிகழ்ந்த அந்த விபத்தைப் பற்றி உண்மை நிலையை அக்கோவி லில் இடம்பெற்றுள்ள முக்கிய அரசியல் கட்சிகளைச் சேர்ந்த அந்த ஊர்ப் பிரமுகர்கள் காவல் துறை விசாரணையின்போது விளக்கமாகக் கூறியிருக்கின்றார்கள்.

அதுமாத்திரமல்ல, இந்த விபத்து குறித்து சென்னைத் தலைமையிட விஞ்ஞான அறிவியல் நிபுணர் திரு. பரதன் மற்றும் செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட விஞ்ஞான அறிவியல் நிபுணர் திரு. மோகன் ஆகிய இருவரும் பனையூர்க்குப்பம் சென்று, சம்பவ இடத்தைப் பார்வையிட்டு ஆராய்ச்சி நடத்தினர். சம்பவ இடத்திலிருந்து பட்டாசு செய்வதற்குப் பயன்படுத்திய காலி மூங்கில் துண்டுகள், இடிபாடுகளிலே இருந்த எரிந்த பட்டாசு மருந்துப் பொருட்கள் ஆகியவற்றைக் கைப்பற்றி ஆய்வு செய்துள்ளார்கள். அந்தக் கட்டடத்திலேயுள்ள மின்சார ஒயர்களை ஆய்வு செய்ததில் மின்சாரக் கசிவு ஏற்பட்டு மின்சார

ஓயர்களை மூடியிருக்கும் பிளாஸ்டிக் பகுதி எரிந்து, கருகி யிருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விஞ்ஞான ரீதியான விசாரணை செய்ததிலும், நிபுணர்கள் மின்சாரக்கசிவு ஏற்பட்டதன் விளைவாக பட்டாசு வெடித்ததில் ஏற்பட்ட விபத்துதான் என்ற கருத்தைத் தெரிவிக்கின்றார்கள்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் இமானு வேல், ரகமத்துல்லா, அன்சர், நாகலிங்கம், வெங்கடேசன், ரவி ஆகியவர்களை விசாரணை செய்ததில் இவர்கள் பட்டாசு தயாரிக்கும் தொழில் தெரிந்தவர்கள் என்றும் மாங்காட்டில் வைத்து பட்டாசு தயார் செய்து பனையூர்குப்பம் கொண்டு வந்ததாகவும், ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் எடுக்க முயன்றபோது மின்கசிவு ஏற்பட்டு, பட்டாசு வெடித்துச் சிதறியதாகவும் அதில்தான் தாங்கள் காயமடைந்ததாகவும் தெரிவித்திருக்கின்றார்கள்.

இவ்வளவுக்கும் பிறகு, முன்னாள் முதலமைச்சர் ஜெய லலிதா அவர்களும், இங்கே அவருடைய கருத்தை எதிரொலிப்பதற்காக அமர்ந்திருக்கின்ற திரு. தாமரைக்கனி அவர்களும், இது குண்டு கலாச்சாரம் என்று குறிப்பிட்டிருக் கின்றார்கள். குண்டு கலாச்சாரம் தமிழகத்தைப் பாழ்படுத்தி விட்டது. ஆமாம் 'குண்டு' கலாச்சாரம்தான் (சிரிப்பு) 'குண்டு' கலாச்சாரத்தால்தான் தமிழ்நாடே இன்றைக்குப் பாழ்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதை சிறுபிள்ளைகூட அறியும். மத்திய அரசு பட்டாசு தயாரிக்க அனுமதி கொடுத்திருக்கிறது. இந்த லத்தீப் அண்டு சன்ஸ் என்பவர்களுக்கு. ஆனால், இவர்கள் ஏதோ குண்டு தயாரித்ததாகவும், அதற்கு சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டும் என்றும் ஜெயலலிதா சொல்கிறார். வெடி வெடித்ததற்காக மாத்திரமல்ல, இனிமேல் இடி இடித்தால்கூட அதற்கும் சி.பி.ஐ. விசாரணை வைக்க வேண்டும். இந்த இடிகளையெல்லாம் கருணாநிதிதான் தயார் பண்ணிக்கொண்டிருக்கிறார் என்றுகூடச் சொன்னாலும் சொல்லலாம். அக்னி நட்சத்திரம், என்ன செய்வது? (பலத்த சிரிப்பு).

எதற்கும் ஒரு முறை இருக்க வேண்டும். எதிர்க்கட்சி என்றால் அதற்கு ஒரு நாகரீகம் இருக்க வேண்டும், பண்பாடு இருக்க வேண்டும். இதுபோன்ற விஷயங்களில் எல்லோரும் சேர்ந்து இம்மாதிரியான காரியங்கள் நடைபெறாமல் தடுப்ப தற்கும், நடந்துவிட்டால் நிவாரணப் பணியை மேற்கொள்ளவும் ஒன்று சேருகின்ற ஒரு பரந்த மனப்பான்மை எல்லோரிடத்திலும் இருக்க வேண்டும். ஏதோ ஒன்று நடந்துவிட்டால், எதையாவது தூக்கி ஆளும் கட்சிமீது பழி போட வேண்டுமென்று எண்ணக் கூடாது. ஒன்று சொன்னீர்கள், காயம் பட்டவர்களையும் கவனிக்க வேண்டுமென்று. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன அந்தக் கருத்தை ஏற்று, காயம் பட்டவர்களுக்கும் ஏற்ற, உரிய உதவி நிதியை நிச்சயமாக இந்த அரசு வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இதற்கு முழுப்பொறுப்பு ஏற்கவேண்டியவர்கள், அந்த வெடி மருந்தைத் தயாரித்திருந்த அந்தத் தொழிலுக்கு உரியவர்கள்தான் என்பதை மறந்துவிடக்கூடாது. அவர்களுடைய அஜாக்கிரதை யால்தான், அவர்கள் எச்சரிக்கையாக இல்லாமல் நடந்து கொண்ட காரணத்தால்தான் இத்தனை உயிர்கள் பலியாகியிருக்கின்றன. அவர்கள் தங்களுடைய வியாபாரத்திற்காக, தங்களுடைய வருவாய்க்காக நடத்துகின்ற ஒரு தொழிலில் இத்தனை பேர் இறந்திருக்கிறார்கள். சிலபேர்கூட கேட்டார்கள், வெடி மருந்திலே, வாண வெடி விபத்திலே சாகின்றவர்களுக்குக் கொடுக்க வேண்டுமா என்று கேட்டார்கள் அதிலே என்ன பரிதாபம் என்றால், அந்தத் தொழிலில் ஈடுபாட்டு அந்த வாணவெடி மருந்துகளைத் தயாரித்த அந்தக் குடும்பமே அழிந்து போயிருக்கிறது. ஒருசிலர்தான் வாரிசுதாரர்களாக இருக் கிறார்கள்.

நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று இந்த அவைக்கு இந்தப் படங்களைக் காட்ட விரும்புகிறேன். அங்கிருந்து எடுக்கப்பட்டவை. (சில படங்களைக் காண்பித்தார்) ஒரு மூங்கில் துண்டு மூங்கில் வாணம், இது ஒரு தேங்காய், தேங்காய்க்குள்ளே மருந்தை வைத்து அதை வெடிப்பது. இப்படிப்பட்ட தேங்காய் வெடி,

மூங்கில் வெடி என்ற அந்த வெடிகள்தான் அங்கே இருந்ததே தவிர, வெடிகுண்டுகள் அல்ல என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே வலியுறுத்தி வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். வேண்டு மென்றே எதற்கெடுத்தாலும் எப்படியாவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை எதை வைத்தாவது கலைக்க முடியாதா என்று எண்ணிக்கொண்டிருக்கின்றவர்கள் இந்தக் கலைப்பு முயற்சியைக் கொஞ்ச நாள் நிறுத்திவைக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைப்பதற்காகவே இதுபோன்ற உண்மைக்கு மாறான, அவதூறான குற்றச்சாட்டுகளை செல்வி ஜெயலலிதா சாட்டுவதும், அதைப் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் வெளியிடுவதும்- அது அவர்களுடைய உரிமை- அப்படி வெளியிடுவதும்- இத்தகைய அவதூறான பிரச்சாரங்களை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் விஷயம் தெரிந்த திரு. தாமரைக்கனிகூட நம்பிக்கொண்டு இந்த அவையிலே பேசுவதும் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. என்ன செய்வது, அவர் அங்கே இருக்கின்ற காரணத்தால், அவர் பேச வேண்டி யிருக்கிறது. அவருக்கு உண்மை தெரியும். மனசாட்சிக்குத் தெரியும், அது குண்டு அல்ல என்பது. (சிரிப்பு) நாம்தான் குண்டு வெடிக்கிறோம் என்று நன்றாகத் தெரியும். தெரிந்தாலும்கூட தலைமையினுடைய கட்டளையை நிறைவேற்றுவதற்காக இப்படியெல்லாம் அவரும் தவறுசெய்ய வேண்டியிருக்கிறது. எனவே, நான் இங்கே உண்மை நிலையை விளக்கிவிட்டேன். இது மத்திய அரசிடமிருந்து லைசென்ஸ் பெற்று நடத்துகின்ற தொழிற்சாலை. இந்தப் பட்டாசு தொழில் காரணமாக ஏற்பட்ட விபத்து. அஜாக்கிரதையால் ஏற்பட்ட விபத்து, எனவே இது வெடிகுண்டு அல்ல. சி.பி.ஐ. விசாரணை வேண்டியதில்லை. சி.பி.ஐ. பற்றி அம்மையாருடைய கணிப்பு என்ன என்பது இந்த அவையிலே எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. இங்கிருக்கின்ற படங்களுக்கெல்லாம் உயிர் வருமானால் அவைகளெல்லாம் சொல்லும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். படம் இருக்கிறது; பேரறிஞர் அண்ணா அவர்கள் படம் இருக்கிறது; திருவள்ளுவர் படமும் இருக்கிறது; காந்தியடிகள் படம் இருக்கிறது;

பெருந்தலைவர் காமராசர் படமும் இருக்கிறது; ஆகவே அந்தப் படங்களுக்கெல்லாம் உயிர் வந்தால் சொல்லும். இதே அவையிலே இதே இடத்தில் நின்று கொண்டு 'அது என்ன சி.பி.ஐ. என்கிறீர்கள்? சி.பி.ஐ. என்றால் வானத்திலிருந்து குதித்தார்களா' என்றெல்லாம் கேட்டார்கள். இப்பொழுது அவர்கள் வானத்திலிருந்து குதித்து, போயஸ் கார்டனில் இருக்கிறார்கள் போலும் என்பதை மாத்திரம் சொல்லி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

மதுக்கடை ஏலம்

உரை : 80 **நாள்: 06.05.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வழங்கி இருந்தார்கள். இது குறித்துச் சில விவரங்களை நேற்றைக்கே, உடனடியாக, அவசரப்பட்டுச் சொல்ல விரும்பாமல் சில விவரங்களைச் சேகரித்து இந்த அவைக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே ஒன்றை எழுதி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் மதுக்கடை ஏலத்திற்கு முன்பு ஒரு உள் ஏலம் நடைபெற்று வருவது குறித்து' என்று எழுதியிருக்கிறார். அதை இப்படியும் எடுத்துக் கொள்ளலாம். ஏலத்திற்கு முன்பு என்றும் எடுத்துக் கொள்ளலாம். முன்பு ஒரு உள் ஏலம் நடைபெற்று வருவது என்பது குறித்து என்றும் எடுத்துக்கொள்ளலாம். அது முன்புதான் நடைபெற்றது என்பதை முதலில் நான் அவருக்கு விளக்க விரும்புகிறேன். இப்போது நடைபெறவில்லை என்பதையும் விளக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசு 1989ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுபான சில்லரை விற்பனைக் கடைகளுக்கு உரிமம் வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையைக் கடைப்பிடித்து வந்துள்ளது. சிறப்பாகச் செயல்பட்டு வந்துள்ள இந்த முறையில் ஏலம் கேட்பதில் உள்ள போட்டியைத் தடுப்பதற்காக, சிலர் சேர்ந்து குழுக்களாகச் செயல்படுவதன் மூலம் உண்மையாக ஏலம் கேட்பவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதாகவும், அதனால் அரசுக்கு வருவாய்

இழப்பு ஏற்படுவதாகவும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

ஏற்கெனவே, 1989-க்கு முன்பு அப்போது இருந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் இந்த ஏலம் விடுகின்ற முறையே இல்லாமல், ஒவ்வொருவருக்கும் அரசே லைசென்ஸ், உரிமம் கொடுத்து கடைகள் வைக்கப்பட்டன. அப்படியே ஏன் இப்போதும் உரிமம் தரக்கூடாது என்று பலபேருக்கு ஒரு வருத்தம் கூட என் மீது உண்டு, அப்படி உரிமம் கொடுத்தால் எங்களுக்குக் கொடுக்கலாமே என்று. உண்மை என்னவென்றால், எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் அப்படிக் கொடுக்கப்பட்ட அந்த உரிமங்கள் தவறானவை என்று உச்சநீதிமன்றத்திற்குச் சென்று உச்ச நீதிமன்றமும் அப்படித் தனிப்பட்ட முறையிலே உரிமங்கள் கொடுக்கக்கூடாது, ஒப்பந்தப்புள்ளி அல்லது ஏலம் என்ற முறையிலேதான் இருக்க வேண்டுமென்று ஆணையிட்டுவிட்டது. இந்த அரசு, அது சிறந்த முறை, சிலாக்கியமான முறை என்ற காரணத்தால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தடுக்கின்ற வகையில் இந்தக் குறைபாடுகளை எல்லாம் களைவதற்காகக் கடந்த ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட குறுமத்தொகை, கிடைத்த உரிமைத் தொகை ஆகியவைகளை விரிவாக ஆய்வு செய்தும், சம்பந்தப்பட்டவர்களோடு விரிவாக விவாதித்த பின்னரும் நடைமுறையிலிருக்கும் ஏல முறைக் கொள்கையில் அரசு சில மாற்றங்களைச் செய்தது. சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் ஏலதாரர்களுக்கிடையிலே போட்டிச் சூழலை உருவாக்கி ஏலத்தை நடத்துவதன் மூலம் அரசுக்கு அதிக வருவாய் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது.

முந்தைய மூன்றாண்டுத் தொகுதியில் 4,500 மதுபானக் கடைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன. தற்போது 1998-2001 மூன்றாண்டுத் தொகுதியில் மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரை களின் அடிப்படையில் மொத்தம் 4,700 மதுபானக் கடைகளை அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.

கடந்த மூன்றாண்டுகளில் கிடைத்த குறுமத் தொகை களின் சராசரியின் அடிப்படையில் இந்த மூன்றாண்டுத் தொகுதி 1998-2001க்கான குறுமத் தொகை (அப்செட் பிரைஸ்)

நிர்ணயிக்கப்பட்டது. இந்தக் குறுமத் தொகை மதுபான சில்லரை விற்பனைக் கடைகளின் உண்மையான விற்பனை வாய்ப்பினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இப்படி குறுமத் தொகைகள் நிர்ணயிக்கப்படுவதன் மூலம் குழுக்கள் அமைத்துக் குறைந்த ஏலம் கேட்பது பெருமளவுக்குத் தடுக்கப்பட்டுள்ளது.

உண்மையான ஏலதாரர்கள் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்கின்ற வகையில், பிணை வைப்புத்தொகை குறிப்பிடத் தக்க அளவில் தற்போது உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த மூன்றாண்டு தொகுதியில் பிணை வைப்புத் தொகை நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளுக்கு ரூபாய் 10,000 எனவும், மற்றப் பகுதிகளுக்கு ரூபாய் 7,500 எனவும் நிர்ண யிக்கப்பட்டிருந்தது. தற்போது பிணை வைப்புத் தொகை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஊரக ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் ரூ. 1.00 இலட்சம்; நகரப் பேரூராட்சிகள்/இரண்டாம் நிலை/மூன்றாம் நிலை நகராட்சிகள்/நகரியங்கள்- ரூ. 1.50 இலட்சம்; சிறப்பு நிலை/தேர்வு நிலை மற்றும் முதல் நிலை நகராட்சிகள் - ரூ. 2.00 இலட்சம்; மாகராட்சிகள் - ரூ. 3.00 இலட்சம்; சென்னை மாநகரம் - ரூ. 4 இலட்சம்.

எந்த ஒரு மதுபான சில்லறை விற்பனைக் கடையின் உரிமமும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியமன முறையிலே வழங்கப்படமாட்டாது என அரசு ஆணையிட்டுள்ளது. ஏனென்றால், கூட்டுறவுக்கு என்று சொல்லி தனியாரே அப்போது இதிலே பல தவறுகளைச் செய்துகொண்டிருந்தார்கள். எனவே, எந்த ஒரு மதுபான சில்லறைக் கடையின் உரிமமும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நியமன முறையிலே வழங்கப்பட மாட்டாது என ஆணையிடப்பட்டுள்ளது.

விற்கப்படாத மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் மீண்டும் ஏல முறையிலே விற்பனைக்குக் கொண்டுவரப்படும். ஏல விதிகளை உறுதியுடன் கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக காப்புத்

தொகை (Security Deposit) மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளுக்குச் சில்லறை விற்பனைக் கடைகளுக்கு ரூபாய் 7,500 எனவும், மற்ற பகுதியில் அமையும் கடைகளுக்கு ரூபாய் 5,000 எனவும் இருந்து வந்ததை மாற்றி அனைத்துப் பகுதி களுக்கும் ஒரே சீராக ரூபாய் 25,000 என நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

ஏற்கெனவே நடைமுறையிலே இருந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறைகளில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் திருத் தங்கள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், ஏலத்தை நடத்துவ தற்கும் ஏலம் கேட்போர் எந்தவிதமான அச்சமோ, பாதிப்போ இல்லாமல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்திலே கலந்து கொள்ளவும் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன. இதன் பயனாக, இதுவரை முதல் இரு நாட்களில் 4.5.1998 மற்றும் 5.5.1998 ஏலம் விடப்பட்ட 2,809 கடைகளில் - மொத்தக் கடைகள் 4,700 - ஏலம் விடப்பட்ட கடைகள் 2,809. அதிலே அரசுக்குக் கிடைத்த மொத்த வருவாய் 295 கோடி ரூபாயாகும். இந்த 2,809 கடைகளுக்கு குறுமத் தொகை (அப்செட் பிரைஸ்) ரூ. 162 கோடிதான் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. குறுமத் தொகையை விட 82 விழுக்காடு கூடுதலாக வருவாய் கிட்டியுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த 4,700லிருந்து 2,809 கடை போக கிட்டத்தட்ட 1,890 கடைகள் மீதம் இருக்கின்றன. அவை மூலமாக வருகின்றதையும் சேர்த்தால் இந்த ஆண்டு சுமார் 400 கோடி இந்த ஏலத்திலே நமக்கு வருமானம் கிடைக்கும் என்று தெரிகின்றது. கடந்த ஆண்டு 4,348 கடைகளுக்கு மொத்த வருமானம் 220 கோடிதான். இந்த ஆண்டு இதுவரையிலே கிடைத்துள்ளதே 295 கோடி. மொத்தமாக 400 கோடி ரூபாய் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 81 நாள் : 13.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்களும் கொண்டு வந்துள்ள இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பு பற்றிச் சில விவரங்களை வெளியிட விரும்புகிறேன்.

12-5-1998 அன்று இரவு 7½ மணி அளவிற்கு திருவாரூர் நகரம் மேலக்கடைத் தெருவில் சுப்பிரமணியம் என்பவருடைய மகன் குமரன் என்பவர் முன் விரோதம் காரண மாக எதிரிகள். (1) ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி (2) செந்தில், (3) சோபா - இவர் எதிரி 1-ன் தம்பி (4) செட்டி (5) சிங்காரவேலு, (6) முத்துக்கிருஷ்ணன். (7) சரவணன் மற்றும் சிலரால் பயங்கரமான ஆயுதங்களால் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே குமரன் இறந்துவிட்டார். குமரன் கடந்த 1½ மாதங்களாக பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளராக இருந்து வருகிறார். இதற்கு முன் அவர் அ.இ.அ.தி.மு.க.விலே இருந்திருக்கிறார்.

இவரது நெருங்கிய நண்பர். பி. நாகேந்திரன் இன்னமும் அ.இ.அ.தி.மு.க.விலேதான் இருக்கிறார். இருவரின் போட்டித் தரப்பினர் - ஆர்.டி. மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி, ஜெயலலிதா பேரவையின் செயலாளர். எதிரிகள் பட்டியலிலே உள்ளவர்களும் அ.இ.அ.தி.மு.க.வின் உறுப்பினர்கள் மற்றும் அனுதாபிகள். இரு பிரிவினருக்கும் தனிப்பட்ட முறையிலே முன் விரோதம் இருந்து வந்தது. கடந்த 4-5-1998ஆம் நாள் திருவாரூர் தாலுகா அலுவலகத்தில் அயல்நாட்டுத் தயாரிப்பு இந்திய மது வகைகள் விற்பனைக்கான ஏலம் நடத்தப்பட்டதில்

6-ஆம் எண் கடையின் விற்பனை உரிமையை மூர்த்தி என்கிற தட்சிணாமூர்த்தி ரூ. 10 லட்சத்து 75 ஆயிரத்திற்கு ஏலம் எடுத்துள்ளார். அதே கடையை குமரன், நாகேந்திரனுக்காக ஏலம் கேட்டுள்ளார். ஏலம் நடைபெறும்போது 'ஏன் ஏலத் தொகையை ஏற்றிவிட்டுக் கொண்டு இருக்கிறாய்' என்று குமரனுக்கும், மூர்த்திக்கும் வாய்த்தகராறு ஏற்பட்டு, அது அந்த இடத்திலே சமாதானப்படுத்தி வைக்கப்பட்டது. குமரனைக் கொலை செய்தது தொடர்பாக திருவாரூர் நகரக் காவல் நிலையக் குற்ற எண் 313/98 பிரிவுகள் 147, 148, 341, 324 மற்றும் 392 இந்திய தட்டணைச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையிலே உள்ளது. குற்றவாளிகளில் சரவணன், சிங்கார வேலு என்ற இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள் ளார்கள். மற்ற குற்றவாளிகளைத் தேடுகின்ற பணி தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதிலே ஏற்பட்ட தகராறில், ஏலம் கேட்டவர்கள் இருவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள். நாகேந்திரனும், தட்சிணாமூர்த்தியும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள்தான். இதிலே குமரன், நாகேந்திரனுக்காக ஏலத் தொகையை உயர்த்தினார். அதனால் தட்சிணாமூர்த்திக்கு 10½ இலட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுக்கும் நிலைமை ஏற்பட்டது என்ற ஆத்திரத் தில் விளைந்த விளைவு இது என்று கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்டவர் பா.ஜ.க. காரர் என்பதால் இதிலே மதவாதம் எதுவும் இல்லை. கொலை செய்யப்பட்டவரும், கொலை செய்தவரும், இருவருமே ஒரே மதத்தைச் சேர்ந்தவர்கள்தான். எனவே இது மதப் போட்டி அல்ல, மதுப் போட்டிதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அளவில் இந்தப் பிரச்சினையை இதோடு போலீசார் நிறுத்தாமல், மேலும் தீவிரமாகப் புலன் விசாரணை செய்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்ற உறுதியை இந்த அவைக்கு வழங்கி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

எம். ஜி. ஆர். சிலை

உரை : 82 **நாள் : 18.05.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. பி.ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன் ஆகியோர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய சிலை ஒன்று பனமரத்துப்பட்டியில் உடைக்கப்பட்டது குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பை இங்கே தந்திருக்கின்றார்கள். அவர்கள் இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - முதலிலே தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சிலை சிமெண்டினால் செய்யப்பட்ட ஒரு சிலை.வெண்கலத்தினால் செய்யப்பட்ட சிலையையே உடைக்கக்கூடிய ஆற்றலாளர்கள் சென்னையில், அந்தக் காலத்திலே (சிரிப்பு) அண்ணா சாலையிலே இருந்ததை உடைத்த ஆற்றலாளர்கள் தமிழ்நாட்டில் இருப்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் நன்கு தெரியும். அவர்களே இதிலே என்ன பேசினார்கள் என்பதைப் பார்க்கும்போது - இந்தச் சிலையை உடைத்ததற்காக வருத்தப்படுகிறார்களா அல்லது உடைத்ததாகக் கைது செய்யப்பட்டிருக்கின்ற இரண்டு பேருக்காக உறுப்பினர்கள் வருத்தப்படுகின்றார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

இரண்டு பேர், தங்கவேல் என்ற ஒருவரும் சீனி என்ற சீனிவாசனும் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். 2-5-1998 அன்று அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் எந்தக் கட்சியையும் சார்ந்தவர்கள் அல்லர் என்றும், ரௌடிகள், போக்கிரிகள் என்றும் அந்த வட்டாரத்திற்கே நன்றாக தெரியும். அவர்கள் குடிபோதையில் இந்தக் காரியத்தைச் செய்தார்கள்

என்றும் காவல் துறை மூலமாகத் தகவல் அனுப்பப்பட்டிருக் கின்றது. இந்த இரண்டு பேரன்னியில் வேறு யாராவது இதிலே ஈடுபட்டிருந்தால் அவர்களையும் விசாரிக்கச் சொல்லி அவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு ஆணை யிடப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்ட தைப் போல ஒவ்வொரு சிலைக்கும் காவல் போட்டுக் கொண் டிருக்க முடியாது. ஏனென்றால், தமிழ்நாட்டில் சிலை வைப்பது என்பதற்கு இலக்கணம் என்ற ஒன்று இல்லை. சிலைகள் அமைப்பதென்றால், அதற்கு அரசிடம் அனுமதி பெற வேண்டும். அதுவும் அந்த வட்டாரத்தில் உள்ள நிர்வாக அலுவலகங்களிடத்திலே, அதிகாரிகளிடத்திலே அனுமதி பெற வேண்டும். மாநகராட்சி அல்லது நகராட்சி அல்லது ஒன்றியம் அல்லது ஊராட்சி போன்ற இந்த அமைப்புகளிடத்திலே அனுமதி பெற வேண்டுமென்று இல்லாமல் உணர்ச்சிபூர்வமாக எந்த நிலைமையையும் சமாளிக்கலாம் என்ற எண்ணத்தோடு அவரவர்கள் ஆங்காங்கே சிலைகளை வைக்கின்றார்கள். இந்தச் சிலை வைப்பதிலே அந்தத் தலைவர்கள் மீது உண்மையான பற்றும் சிலை வைப்பவர்களுக்கு இருக்கிறது. சில நேரங்களில் சிலை வைப்பது என்ற பெயரால் சிறந்த வசூலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவைகளை எல்லாம் மனதிலே வைத்து இந்தச் சிலைகள் அமைப்பதுபற்றி நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இருந்தாலும்கூட இவற்றையெல்லாம் காப்பாற்ற வேண்டியவர்கள், சிலை வைப்பவர்கள்தான் அல்லது அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் அதற்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறுகின்ற இதுபோன்ற ஒன்றிரண்டு சம்பவங்களில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அமைதியை ஏற்படுத்த தன்னால் இயன்ற எல்லா வகையான முயற்சிகளிலும் ஈடுபடுகின்றது. அந்த வட்டாரத்திலே உள்ள கட்சிகளின் தலைவர்கள், பெரியவர்கள் இவர்களெல்லாம் கூடிக் கலந்தாலோசித்து அங்கே அமைதியை உருவாக்க அரசு முனைப்போடு செயல்பட்டு வருகின்றது.

பொம்மைகள் சிலைகள் என்றும், சிமெண்டினால் செய்யப்பட்டவை சிலைகள் என்றும் வைக்கப்படுகின்ற காரணத்தால்தான் மிகச் சுலபமாக சமூக விரோதிகள் இப்படிப்பட்ட சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு விடுகின்றார்கள். நம் முடைய திரு. கணேசன் அவர்கள் பேசும்போது, எம்.ஜி.ஆரைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்பதைப் போல, 'அவர் எவ்வளவு வள்ளலாக வாழ்ந்தார்; எப்படியெல்லாம் இருந்தார்' என்பதைப்பற்றிச் சொல்லியிருக் கிறார். ஆனால் எம்.ஜி.ஆரைப் பற்றி, அன்றைய பிரதமர் ஒருவருக்கு, இன்றைய இந்தக் கட்சியினுடைய தலைவர் என்ன எழுதினார் என்பதையெல்லாம் தயவுசெய்து நம்முடைய திரு. கணேசன் அவர்கள் படித்துப் பார்த்தால் நன்றாக இருக்கும். ஆங்கிலத்திலே கைப்பட எழுதப்பட்ட கடிதம் அது. தன்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார் என்று சொன்னவர்தான் இந்தக் கட்சியினுடைய தலைவராக இருக்கிறார் என்பதையும் திரு. கணேசன் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லது என்று குறிப்பிட்டு, இந்த அளவில் எனது விளக்கம்போதும் என்று கருதி அமைகிறேன்.

சந்தனக் கடத்தல் வழக்கு

உரை : 83 **நாள் : 18.05.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பை மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி ஆகியோர் இங்கே கொண்டு வந்து அது குறித்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். சந்தனக் கட்டைகள் கடத்தல் குறித்த வழக்கை விசாரிக்க காவல் துறை கண்காணிப்பாளர், திரு. கதிரசேன் மற்றும் ஆய்வாளர் திரு. பிரேம் குமார் ஆகியோர் தலைமையிலான C.B.I. (மத்தியப் புலனாய்வுத் துறை) குழு 7-5-1998 அன்று முதல் வேலூர் மாவட்டம் திருப்பத்தூரிலே முகாமிட்டுள்ளது.

செங்கம் வனச்சரகத்தில் பணியாற்றும் வனக்காவலர் விஜயன், 12-5-1998 அன்று விசாரணைக்காக வரவழைக்கப் பட்டு விசாரணைக்குப் பின்னர் பிற்பகல் சுமார் 1 மணியளவில் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டார். 12-5-1998 அன்று இரவு திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலையிலே உள்ள அச்சுதன் பெட்ரோல் நிலையத்திற்கு எதிரில் விஜயன் விழுந்து கிடந்ததாகவும், திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியில் அவர் இறந்துவிட்டதாகவும் 13-5-1998 அன்று காலை 6 மணிக்குக் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் திருப்பத்தூர் நகரக் காவல் நிலைய குற்ற எண் 190/98 பிரிவு 174 குற்றவியல் நடத்தைச் சட்டத்தின்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, அவரது உடல் பிரேதப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. பிரேதப் பரிசோதனை மேற்கொண்ட மருத்துவ அதிகாரி விஜயன் உடலிலே, வலது தொடையில் உராய்வுக் காயம் மற்றும் வீக்கம், இடது முழங்கால் சதையில்

உராய்வுக் காயம், இடது பின்புறத் தொடையில் கற்கள் குத்திய காயம், மற்றும் தலையில் மண்டை ஓட்டு எலும்புகள் பாதிப்பு இல்லை. ஆக்சிபிடல் பகுதியில் இரத்தக்கட்டு, மூளைத்திசுக்கள் பாதிப்பு இல்லை என்று அறிக்கை கொடுத்துள்ளார்கள். பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர் 13-5-1998 அன்று அவரது உறவினர்களால் அவரது உடல் புதைக்கப்பட்டது. இந்த மரணம் குறித்து இன்றை Indian Express இதழ் ஒரு செய்தியினை வெளியிட்டுள்ளது. அதன் சுருக்கம் ''விஜயனின் நெருங்கிய உறவினர் சுகந்தன் என்பவர் அவர் விபத்தினால்தான் மரணம் நேரிட்டது என்று கூறியிருக்கிறார். ஏற்கெனவே மது அருந்தி யிருந்த விஜயனை மீண்டும் மது அருந்துவதற்காக சுகந்தன் அழைத்துச் சென்றிருக்கிறார். மது அருந்தி முடித்தபின் விஜயனை சைக்கிளில் ஏற்றிச் சென்று விஜயனின் வீட்டின் அருகே இறக்கிவிட்டார். விஜயனின் வீடு பூட்டப்பட்டிருந்ததால் மீண்டும் சுகந்தன் அவரை சைக்கிளில் ஏற்றிக்கொண்டார். அவர்கள் சென்ற சாலை செங்குத்தாக மேடாக இருந்ததால் சைக்கிளை மிதிக்க மிகவும் சிரமப்பட்டார். அதனால் திடீரென்று ஓடிக்கொண்டிருந்த சைக்கிளிலிருந்து விஜயன் கீழே குதித்து இருக்கிறார். குதித்த வேகத்தில் வேகமாக அப்போது வந்து கொண்டிருந்த லாரி ஒன்று மோதி பலத்த காயங்களுக்கு ஆளானார். காவல் துறையினர் விஜயன் மீது மோதிவிட்டு வேகமாகச் சென்றுவிட்ட லாரியைக் கண்டுபிடிக்க முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டு உள்ளனர். காயம்பட்ட விஜயனுக்கு குடிப்பதற்கு உடனடியாகத் தண்ணீர் கொடுத்த இரண்டு மெக்கானிக்குகள் காவல் துறையினரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் விபத்து நடைபெற்றபோது, சுகந்தன் அந்த இடத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்கள். விஜயன் மரணத்திற்காக தன்னைப் பொறுப்பாக்கிவிடுவார்களோ என்ற பயத்தில் சுகந்தன், விஜயன் காயம்பட்டு திருப்பத்தூர் - வாணியம்பாடி சாலையில் கிடந்ததைப் பார்த்ததாக முதலில் பொய் சொன்னதை சுகந்தனே ஒப்புக்கொண்டுள்ளார்'' இவ்வாறு இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழ் இன்று காவல் துறையின் தலைமையகத்தி லிருந்து செய்தி பெற்றதாகக் குறிப்பிட்டுள்ளது.

இந்த மரணம் குறித்து கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. எம்.பி.பாண்டியன், திருப்பத்தூர் காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. கே. முத்துவேல், வேலூர் மாவட்ட

தனிப்பிரிவு ஆய்வாளர். திரு. ஏ. கே. பார்த்தசாரதி, திருப்பத்தூர்தாலுகா ஆய்வாளர் பெரியசாமி, திருப்பத்தூர் நகர உதவி ஆய்வாளர் விஜயராகவன் ஆகியோர் அடங்கிய சிறப்புக் குழு விசாரணைகளை நடத்தியதன்பேரில் தெரிய வந்த விவரங் களையும் தெரிவிக்கின்றேன்.

12-5-1998 அன்று பிற்பகல் 1 மணிக்கு விசாரணைக்குப் பின்னர் மத்திய புலனாய்வுத் துறை குழுவால் விஜயன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். பின்னர் விஜயன் தன் வீட்டிற்குச் சென்று மதிய உணவு அருந்தியுள்ளார். அன்று மாலை 6 மணி அளவில் நாகு என்பவருக்குச் சொந்தமான முடிதிருத்தும் கடையில் விஜயன் முகச்சவரம் செய்து கொண்டிருக்கிறார். பின்னர் தன்னுடைய உறவினர் அந்தோணிராஜ் என்பவர், ஒலிநாடா பதிவாளராக வேலை செய்யும் கடைக்குச் சென்று அவருடன், சரவணா ஒயின்ஸ் என்ற மதுக்கடைக்குச் சென்று, மது வாங்கிக் கொண்டு சுமார் 7.45 மணிக்கு ராஜன் பழரசக் கடைக்குச் சென்று அங்கே மது அருந்தியுள்ளார். மீண்டும் வினோதினி ஒயின்ஸ் என்ற மதுக்கடைக்குச் சென்று மது வாங்கி 8.15 மணிக்கு மது அருந்தியுள்ளார். பின்னர் இருவரும் ஒலிநாடா கடைக்குச் சென்றுள்ளார்கள். அங்கே அவர்களோடு புகார் கொடுத்த சுகந்தன் என்பவரும் இணைந்து கொண்டார். இரவு சுமார் 8.30 மணிக்கு விஜயனும் சுகந்தனும் விஸ்கியை மீண்டும் வாங்கி ஆசைத்தம்பி பழரசக் கடையில் வைத்து மது அருந்தி உள்ளார்கள். இரவு சுமார் 9.20 மணிக்கு அவர்கள் வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்கள். சுகந்தனின் மனைவி வீட்டில் இல்லாததால் தன் சகோதரியினுடைய வீட்டிற்குச் சென்றுள்ளார். அவ்வாறு அவர் போகும் வழியில் விஜயன் அச்சுதன் பெட்ரோல் நிலையத்திற்கு அருகில் குடிபோதையில் தள்ளாடிக்கொண்டு போவதைப் பார்த்திருக்கிறார். தன்னுடைய சைக்கிளில் அவரை ஏற்றிக்கொண்டு செல்ல முயற்சித்து இயலாததால் இறங்கி விட்டார். இந்தச் சமயத்தில் ஜோலார்பேட்டையிலிருந்து திருப்பத்தூருக்குச் சென்ற காலி லேலண்ட் லாரி விஜயனை இடித்துவிட்டு நிற்காமல் சென்று விட்டது. சுகந்தன், லாரியின் பதிவு எண்ணைப் பார்க்க இயலவில்லை. விஜயன் தார்ச்சாலை யில் விழுந்து கிடந்ததால், அவரைச் சாலையின் ஓரத்தில் சுகந்தன் இழுத்துச் சென்றார். அப்போது ஆண்டி என்கிற தமிழ்ச்

செல்வன் மற்றும் மெக்கானிக் கேசவன் ஆகியோர் உதவிக்கு வந்தார்கள். ஒரு ஆட்டோவை அழைத்து வரும்படி, ஆண்டியை சுகந்தன் அனுப்பினார். ஆண்டி என்கிற தமிழ்ச்செல்வன் மற்றும் மெக்கானிக் கேசவன் ஆகியோர் விஜயனை ஆட்டோவில் ஏற்றி, சுகந்தனுக்கு உதவி செய்தார்கள். திருப்பத்தூர் தாலூகா கருப்பனூரைச் சேர்ந்த பெருமாள் என்பவரின் மகன் கோபி என்பவரும் அவர்களுக்கு உதவி செய்துள்ளார். சுகந்தனும், கோபியும் அவரை, அவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கே அவர் நிலைமை மோசம் அடைந்தது. விஜயனுடைய சகோதரர் தென்னரசு மற்றொரு ஆட்டோவை அழைத்து வந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள். விஜயன் வழியிலேயே இறந்தார். மரணம் அடைந்த பின்னர் இரவு 11.40 மணிக்கு எடுத்துவரப்பட்டதாக விபத்துப் பதிவேட்டில் மருத்துவ அதிகாரி பதிவு செய்திருக்கிறார். விஜயன் மீது மோதிவிட்டு வேகமாகச் சென்றுவிட்ட லாரியைக் கண்டுபிடிக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விஜயன் தமிழகக் காவல் துறையின் விசாரணைக்குச் சென்று திரும்பவில்லை. C.B.I. விசாரணைக்குச் சென்றுவிட்டு பிற்பகல் 1 மணி அளவிலே திரும்பிவிட்டார்.

காவல் துறையினுடைய அறிக்கையையும், எக்ஸ்பிரஸ் ஏடு வெளியிட்டுள்ள செய்தியையும் இங்கே தெரிவித்து இருக்கிறேன். மேலும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கிடையில் அவசரப்பட்டு சில உறுப்பினர்கள் இங்கே பேசியதைப் போல நான் எதையும் கூற விரும்பவில்லை. அவருடைய குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய வேண்டும் என்று இங்கே கோரப்பட்டது.

பொதுவாகவே அரசு ஊழியர்கள் இறந்தால், அவர்களுடைய குடும்பத்திற்கு குடும்பப் பாதுகாப்பு நிதி தர வேண்டும் என்ற இந்தத் திட்டத்தையே கொண்டு வந்தது இந்த அரசுதான் என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). அந்த அடிப்படையில் வனத் துறைச் செயலாளர் இந்தக் குடும்பத்திற்கு 1 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு.மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. போக்குவரத்துக் கழகங்களுடைய பணியாளர்கள் மொத்தம் 1 இலட்சத்து 24,000-க்கு மேற்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்த 1 இலட்சத்து 24,000 பேரில் சுமார் ஆயிரம் பேர் முதலிலே வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டு நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றத் தயங்காது என்று அமைச்சர் உறுதி அளித்த பிறகும், வழக்கம் போல் செப்டம்பர் மாதம் நடைபெறுகின்ற ஒப்பந்தத்தில் எந்தக் குறைகள் இருந்தாலும் அவைகளை விவாதித்துத் தீர்த்துக் கொள்ளலாம் என்று பிரதான யூனியன்களாக இருக்கின்ற யூனியன்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களும் அதை வரவேற்ற நிலையில்- ஒரு ஆயிரம் பேர்-முதலிலே வேலை நிறுத்தம் என்ற பெயரால் வேலையிலே ஈடுபட்ட தொழிலாளர் களைப் பாதிக்கின்ற அளவுக்குப் பேருந்துகளைத் தடுத்து நிறுத்தினார்கள். அந்த ஆயிரம் பேரும் முதல்நாள் கைது செய்யப்பட்டார்கள். மாலையிலே விடுதலைசெய்யப் பட்டார்கள். கைது செய்தாலும் விடுதலை செய்வதில்லை என்ற ஒரு முரட்டுத்தனமான போக்கு இந்த அரசுக்கு இல்லை என்பதன் அடையாளமாக அன்றைக்கே அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். ஆனால், மறுநாள்மீண்டும் அதே தொழிலாளிகள் அதே காரியத்திலே ஈடுபட்ட காரணத்தினால். கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படாமல் ரிமாண்டிலே வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இதற்கிடையிலே அவர்களுக்குப் பதிலாக வேறு பணியாளர்கள் நியமிக்கப்படு வார்கள் என்று நான் சொன்ன கருத்தைக்கூட மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று 5 தொழிற்சங்கங்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டு உடனடியாக நான் அதை ஏற்று யாரும் பழிவாங்கப்பட மாட்டார்கள்; ஏனென்றால் இந்த அரசு தொழிலாளர் விரோத அரசு அல்ல, தொழிலாளர் நல அரசுதான். அதற்கு உதாரணம் வேண்டுமானால் 15 ஆண்டுகளுக்கு முன்பு மதுரையிலே ஒரு பால் பண்ணையிலே ஒரு வேலை நிறுத்தம் நடைபெற அதற்கு அனுசரணையாக ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் சென்னையிலே மாதவரத்திலே உள்ள பால்

பண்ணையிலே நடைபெற, அதன் காரணமாக - ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தத்திற்கே-- அன்றைக்கு ஏறத்தாழ ஆயிரம் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். 15 ஆண்டுகளுக்குப் பிறகு மாதவரம் பால் பண்ணைத் தொழிலாளர்களை மீண்டும் வேலையிலே அமர்த்தியது மாத்திரம் அல்ல. நம்முடைய திரு.சுப்பராயன் போன்றவர்கள் தொடர்ந்து குரல் கொடுத்த காரணத்தால் அவர்கள் எந்த எந்தச் சலுகைகள் அவர்களுக்கு வேண்டும் என்று கேட்டார்களோ; எந்த எந்த உரிமைகள் வேண்டும் என்று கேட்டார்களோ; அவை எல்லாம் கூட அளிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இது தொழிலாளர்களைப் பழிவாங்குகின்ற அரசு அல்ல என்பதை விளக்கி நான் நேற்றைய தினம் காலையில் சென்னையிலிருந்து சிவகங்கைக்குப் புறப்படுகின்ற வழியில் இந்த அறிக்கையைத் தந்து விட்டுத்தான் போய் இருக்கிறேன். பத்திரிகையிலே வந்து இருக்கிறது. எனவே, யாரும் பழிவாங்கப்பட மாட்டார்கள்.

இப்போது கைது செய்யப்பட்டிருப்பவர்கள் 1400 பேர்; ஏறத்தாழ 1400 பேர். அவர்களில் அநேகமாக பலபேர் ஜாமீனிலே வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஜாமீனை அரசு தடுக்கவில்லை. மறுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் பணியிலே அமர்த்தப்பட மாட்டார்கள் என்ற அந்தச் சூழ்நிலை நிச்சயமாக இருக்காது என்பதையும் பஸ்களை மறியல் செய்ததற்கான அந்தக் குற்றத் திற்காக சட்டப்படியான நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் அதற்கு அவர்கள் பணிந்துதான் செல்ல வேண்டும் என்பதையும் நான் இந்த அவையில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மதுக்கடை ஏலத் தகராறு

உரை : 84 **நாள்: 19.05.1998**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 13ஆம் தேதியன்று இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு.ஜி.பழனிச்சாமி அவர்களும், திருவாரூர் அசோகன் அவர்களும் திருவாரூரில்12ஆம் தேதியன்று நடைபெற்ற ஒரு கொலை குறித்துச் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அதுவரை காவல் துறையினரிடமிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களை இந்த அவையின் கவனத்திற்கு கொண்டு வந்து, அதுவரை கைது செய்யப்பட்ட இரண்டு நபர்களைப் பற்றியும் குறிப்பிட்டு, மேலும் தீவிரமாகப் புலன் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்திருக்கிறேன்.

அந்தக் கொலை வழக்கு சம்பந்தமாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள் குறித்துத்தான் தற்போது இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. இதற்கான விளக்கத்தை அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம் நான் இந்த அவையிலே தெரிவித்ததற்குப் பிறகு, புலன் விசாரணை மூலம் அறியப்பட்ட தகவல்களை முதலில் விளக்கிட விரும்புகிறேன்.

அண்மையில் திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மதுக்கடை ஏலத்தில் பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த குமரனும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஆர்.டி. மூர்த்தியும் கலந்துகொண்டு ஏலம் கேட்டதில், இருவருக்கும் போட்டி ஏற்பட்டதால், குமரனைத் தீர்த்துக்கட்ட ஆர்.டி. மூர்த்தியும், அவரது ஆட்களும் நேரம் பார்த்திருந்து, 12-5-1998 அன்று மாலை 7-30 மணியளவில், திருவாரூர்

மேலக் கடைத் தெருவில், குமரன், மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தபோது, எதிரிகள் செந்திலும், சோபாவும் ஒரு டி.வி.எஸ். வாகனத்தை குறுக்கே தள்ளி, குமரனின் மோட்டார் சைக்கிளை மறித்துள்ளார்கள். குமரன் மோட்டார் சைக்கிளை நிறுத்தியவுடன், எதிரி சோபா என்கிற முத்துமாணிக்கம் அரிவாளால் குமரனின் கழுத்தில் வெட்டியுள்ளார். அதன் பிறகு, செந்தில், ஆர்.டி.மூர்த்தி, முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தின வேல் என்கிற சின்னசெட்டி, சரவணன், சிங்காரவேல் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த அரிவாள்களால் மாறி, மாறி, குமரனை வெட்டியதில், குமரன் சம்பவ இடத்திலேயே இரத்த வெள்ளத் தில் இறந்துள்ளார். குமரனின் பெரியப்பா மகன் பெருமாள் கொடுத்த புகாரின் பேரில் திருவாரூர் நகரக் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப் பட்டது.

இந்த வழக்கு குறித்து விசாரணை நடத்தப்பட்டபோது, சாட்சிகள் தொழுவனக்குடி கிருஷ்ணமூர்த்தி தேவரின் மகன் பெருமாள், தாமரைக்குளம், கீழக்கரை மருதப்பட்டினத்தைச் சேர்ந்த பரிமளம் என்பவரின் மகன் ராஜமாணிக்கம், குளுந்தான் குளம் தென்கரையைச் சேர்ந்த சுப்பிரமணிய தேவரின் மகன் சுரேஷ் ஆகியோர் கொடுத்த வாக்குமூலங்களில் இருந்து, சமீபத்தில் திருவாரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மதுக்கடை ஏலத்தில், குமரன், ஆர்.டி.ஆகியோர் கலந்துகொண்டு ஏலம் கேட்டதாகவும், தனக்கு ஒரு கடையை விட்டுக் கொடுக்கும் படி மூர்த்தி கேட்டபோது, அனைவரும் ஒத்துக்கொண்ட தாகவும், ஆனால் குமரன் அதற்கு ஒத்துக்கொள்ளாததுடன், அதிகத் தொகைக்கு ஏலம் கேட்டதாகவும், அதனால் குமரனைத் தீர்த்துக்கட்ட ஆர்.டி. மூர்த்தியும், அவரது ஆட்களும் நேரம் பார்த்துக் கொண்டிருந்ததாகவும் 12-5-1998 அன்று மாலை 7-15 மணிக்கு முதலியார் தெருவில் உள்ள மூர்த்தியின் வீட்டருகில் நின்று கொண்டிருந்த வெள்ளை நிற டாட்டா சுமோ காரின் அருகில் குடவாசல் எம். இராஜரத்திரனும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்ததாகவும், மற்ற எதிரிகளான ஆர்.டி.மூர்த்தி, சோபா, செந்தில், முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தினவேல், சரவணன், சிங்காரு ஆகியோர் முதலியார் தெருவில் செந்தில் பெட்டிக்

கடைக்கு அருகில் நின்று கொண்டிருந்ததாகவும், மாலை 7-30 மணிக்கு குமரன், மேலக்கடைத் தெருவுக்கு மேற்கேயிருந்து, கிழக்கு நோக்கி, செந்தில் பெட்டிக்கடைக்கு அருகே வரும் போது, செந்திலும், சோபாவும் ஒரு வாகனத்தைக் குறுக்கே தள்ளி மறித்ததாகவும், குமரன் மோட்டார் சைக்கிளை நிறுத்திய வுடன், குடவாசல் எம். இராஜேந்திரனும், சிலரும் செய்த தூண்டுதலின்படி, உடனே சோபா தன் கையில் வைத்திருந்த அரிவாளால் குமரனின் கழுத்திலும், வலது காதின் கீழும் வெட்டியபோது குமரன் ரோட்டில் விழுந்தவுடன், செந்தில், முத்துகிருஷ்ணன், ஆகியோர் பிச்சுவா கத்தியாலும், முத்து ரெத்தினவேல், சரவணன், சிங்காரு, ஆர்.டி. மூர்த்தி ஆகியோர் தாங்கள் வைத்திருந்த அரிவாளாலும் வெட்டியதில் குமரன் அந்த இடத்தில் இறந்து விட்டதாகவும், குமரனை வெட்டிய அனைவரும் ஓடிப்போய் டாட்டா சுமோ காரில் குடவாசல் எம். இராஜேந்திரன் மற்றும் சிலருடன் ஏறி, வடக்கு நோக்கி முதலியார் தெரு வழியாகப் போய்விட்டதாகவும் விசாரணையிலிருந்து தெரிகிறது.

எதிரிகள் சோபா, செந்தில், சரவணன், சிங்காரு ஆகியோர் கைது செய்யப்பட்டு, கிராம நிர்வாக அலுவலர் எம். வீரையன், மற்றும் கிராம உதவியாளர் எம். பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் விசாரிக்கப்பட்டபோது, எதிரி சோபா தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில், தன் அண்ணன் அ.இ.அ.தி.மு.க.வில் முக்கியப் பொறுப்பில் உள்ளதாகவும், முதலியார் தெருவில் உள்ள தங்கள் வீடு கட்சி அலுவலகமாக உள்ளதால், அ.இ.அ.தி.மு.க. மாவட்டச் செயலாளர் எம்.ஆர். என்கிற எம்.இராஜேந்திரன் திருவாரூருக்கு வரும் போதெல்லாம் தங்கள் வீட்டில் தங்களிச் செல்வார் என்றும், அவ்வப்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு அவர் வழி சொல்வார் என்றும், இறந்துபோன குமரன் தன்னுடன் ஆட்களைச் சேர்த்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் சுற்றிக்கொண்டு, தன்னை ஒரு பெரிய ஆளாகக் காட்டிக்கொண்டு, தங்களுக்கு எதிராக அவரது ஆட்களிடம் பேசி வந்ததாகவும், மதுக்கடை ஏலத்தின்போது ஆர்.டி. மூர்த்தியும், சீலன் என்கிற குணசீலனும்

கேட்டுக்கொண்டும், முரண்பாடாகப் பேசி ஏலத்தை ஏற்றி விட்டதாகவும், அன்று இரவே கூடிப்பேசி குமரனைத் தீர்த்துக் கட்ட முடிவு செய்ததாகவும். குடவாசல் எம்.இராஜேந்திரன் குமரனிடம் 'அனுசரித்துப் போ' என்று சொல்லியும்கூட, அவரிடம் குமரன் திமிராகப் பேசியதால் 'இவனை இப்படியே விடக்கூடாது, இவனுக்குச் சீக்கிரம் முடிவு கட்டுங்கள்' என்று இராஜேந்திரன் சொன்னதாகவும், அதன்படி தாங்கள் குமரனைக் கொலை செய்யத் திட்டமிட்டு, அதன்படிச் செயல்பட்டதாகவும் கூறியதோடு, கொலைக்குப் பின்னர் டாட்டா சுமோ காரில் ஏறி குடவாசல் போய் இராஜேந்திரன் சொன்ன வீட்டில் தங்கிய தாகவும், குமரனைக் கொலை செய்யப் பயன்படுத்திய ஆயுதங்களை, திருவாரூர் பவித்திரமாணிக்கம் ரோட்டில் மின் வாரியத்திற்கு அருகில் உள்ள வாய்க்காலில் மறைத்து வைத்திருப்பதாகவும், தன்னைக் கூட்டிச் சென்றால் ஆயுதங் களை எடுத்துத் தருவதாகவும் கூறினார். அதன்படி 13-5-1998 அன்று காலை 11 மணிக்கு மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் மகஜர் தயார் செய்து, ஆயுதங்கள் காவல் துறையினரால் அங்கிருந்து கைப்பற்றப்பட்டன.

14-5-1998 அன்று 1-30 மணிக்கு குடவாசல் ஓடைப் பாலம் அருகில் எதிரி எம். இராஜேந்திரன் கைது செய்யப்பட்டு 4 மணிக்குக் காவல் நிலையம் கொண்டுவரப்பட்டு, எதிரிகள், நாகப்பட்டினம் நீதித் துறை நடுவர் அவர்களிடம் நீதித் துறைக் காவலுக்கு அனுப்பப்பட்டு, திருச்சி மத்திய சிறையிலே 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கில் தலைமறைவு எதிரிகளான ஆர்.டி. மூர்த்தி, முத்துகிருஷ்ணன், முத்து ரெத்தினவேல், சீலன் என்கிற குணசீலன் ஆகியோரைக் கண்டுபிடிக்க, தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ந்து சாட்சிகள் விசாரிக்கப் பட்டு வருகிறார்கள்.

இந்த வழக்கில் இறந்துபோன குமரன் என்பவர் பாரதிய ஜனதா கட்சியின் திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியின் துணைத் தலைவராக இருந்தார். இவர் பி.காம். பட்டதாரி.

திருமணம் ஆகாதவர். இவர் குடும்பத்துடன் இல்லாமல், தனியாக, திருவாரூர், கமலாலயக் குளம், மேல்கரையிலே அறை எடுத்துத் தங்கிக்கொண்டு அரசியல் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் தன்னை முன்னிலைப்படுத்திக்கொண்டு இருந்திருக்கிறார்.

13ஆம் தேதி நான் இந்த அவையிலே பேசும்போது இது மதப் போட்டி அல்ல, மதுப் போட்டிதான் என்று கூறினேன். ஆனால் அ.இ.அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தனது அறிக்கையிலே, இதற்கு நான் அரசியல் சாயம் பூசியிருப்பதாகக் கூறி கண்டனம் தெரிவிப்பதாகத் தெரிவித்திருந்தார். நான் இங்கே பேசும்போது, அரசியல் கலப்பு இருப்பதாகச் சொல்லவில்லை. மதுக்கடை ஏலத்திலே வந்த தகராறு என்றுதான் சொன்னேன். ஆனால் ஜெயலலிதா அவர்கள், இதற்கு நான் அரசியல் சாயம் பூசுவதாக ஒரு அபாண்டமான அறிக்கையை வெளியிட்டார்.

மேலும் ஜெயலலிதா, அவருடைய கட்சியைச் சேர்ந்த மாவட்டச் செயலாளர் எம்.இராஜேந்திரனைக் கைது செய்து விட்டதாகவும் தெரிவித்திருக்கிறார். அந்தக் கட்சியின் மாவட்டக் கழகச் செயலாளர் இராஜேந்திரன் எப்படிப்பட்டவர் என்பதை இந்த அவையும், நாடும் தெரிந்துகொள்ள வேண்டும்.

எம்.இராஜேந்திரன். ரௌடி லிஸ்டில் உள்ள, காவல் துறைக் கண்காணிப்பில் உள்ள ஒரு நபர் ஆவார்- குடவாசல் காவல் நிலையத்தில் (போக்கிரி பதிவேடு)-ரௌடி லிஸ்டில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றார். இவர் இதற்கு முன்பே, 1990ஆம் ஆண்டில், தி.மு.க.கழக ஆட்சி நடைபெற்ற போதே, முத்துகிருஷ்ணன் என்பவரைக் கொலை செய்த வழக்கில் முதல் எதிரி ஆவார். குடவாசல் காவல் நிலையக் குற்ற எண் 257/90, சட்டப் பிரிவுகள் 147, 148, 341 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டத்தின்படியான வழக்கில் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற விசாரணைக்கு ஆளானவர்.

இந்தக் கொலை வழக்கு விசாரிக்கப்பட்டு, நீதிமன்றத்திலே தள்ளுபடி செய்யப்பட்டபோதிலும், அந்தத் தீர்ப்புரையிலே நாகப்பட்டினம் மாவட்ட அமர்வு நீதிபதி அவர்கள்

29-9-1992ல் அ.இ.அ.தி.மு.க.ஆட்சி நடைபெற்றபோது அளித்த தீர்ப்பில் தெரிவித்த ஒரு சில வாசகங்களைத் தெரிவித்தாலே இந்த மாவட்டச் செயலாளரைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

நீதிபதி தனது தீர்ப்பில், ''கொலை செய்யப்பட்ட முத்து கிருஷ்ணன் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் என்பதும், இந்த வழக்கில் உள்ள முதல் எதிரி எம்.இராஜேந்திரன் அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்தவர் என்பதும் அரசுத் தரப்பு சாட்சி 1-இன் சான்றுரையிலிருந்து தெரிகிறது.

சாட்சிப் பட்டியலில் சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சி களாகப் பலரும், சம்பவத்திற்குப் பிறகு அந்த இடத்தில் எதிரிகளைப் பார்த்ததாகக் கூறும் பலரும் உள்ளனர். அவர்களில் யாரையும் அரசுத் தரப்பினர் விசாரிக்கவில்லை, இந்தக் கேஸிலே.

முதல் எதிரி இராஜேந்திரன் அரசியல் செல்வாக்கும், பண பலமும் உடையவர் என்பது இங்குள்ள சாட்சிகளின் சான்றுரை யிலிருந்தும் முதல் எதிரி எழுத்து மூலமாகக் கொடுத்த வாக்கு மூலத்திலிருந்தும் தெரிய வருகிறது. அவரது தலையீட்டால் சாட்சிகளுக்குச் சம்மன் சார்வு செய்யப்படவில்லை என்று அனுமானிக்க இடமும் உள்ளது.

முதல் எதிரி இராஜேந்திரன் மற்றும் கலியமூர்த்தி இருவரின் சதியின் பேரில்தான் இந்த நிகழ்ச்சி நடந்துள்ளது என்பதை அனுமானிக்கிற சூழ்நிலைதான் உள்ளன.

மேலே இந்தத் தீர்ப்புரையில் நான் ஆராய்ந்துள்ள காரணங்களில், குறிப்பாக, அரசியல் செல்வாக்கின் தலையீடு, பொது மக்களின் ஒத்துழையாமை, இந்த நீதிமன்றத்தில் விசாரிக் கப்பட்ட மற்றும் விசாரிக்கப்படாத சாட்சிகளின் ஒத்துழையாமை, சாட்சிகள் அச்சுறுத்தப்பட்டுள்ளமை, திறமையற்ற புலன் விசாரணை ஆகியவற்றின் காரணமாக, பட்டப் பகலில் நடந்த ஒரு கொலைக் குற்றத்திலிருந்து குற்றம் புரிந்தவர்கள் தப்பித்துக் கொண்டார்கள் என்ற மன வேதனையோடு இந்தத் தீர்ப்புரையி லிருந்து பிரிந்து செல்கிறேன்'' என்று நீதிபதி அப்போதே தீர்ப்பு எழுதி இருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு நாகப்

பட்டினம் மாவட்ட அமர்வு நீதிமன்ற நீதிபதி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருக்கிறார்.

இவருடைய கதை இத்தோடு முடியவில்லை, 22-8-1994 அன்று குடவாசல் கடைத் தெருவில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து ஊர்வல மாகச் சென்றபோது, இதே இராஜேந்திரன் மற்றும் இவரது ஆட்கள் 25 பேருடன் சேர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தைத் தாக்கிச் சேதப்படுத்தியும், ஊர்வலம் சென்ற வர்களை ஆயுதங்களால் தாக்கியும், காயப்படுத்தியும் உள்ளார். குடவாசல் காவல் நிலையம் வரை துரத்திச்சென்று, காவல் நிலையத்திற்குள்ளே சென்ற புளிச்சங்காடி தங்கையனை, மார்ச்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்காரரை - தலையில் அடித்துக் காயப்படுத்தி, அதனால் மருத்துவமனையிலே சிகிச்சையில் இருந்தபோது தங்கையன் இறந்தார். (குறுக்கீடு)

திரு. இரா. தாமரைக்கனி: இந்தத் தீர்மானத்திலேதான் பேச வேண்டும் (குறுக்கீடுகள்)...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பிரச்சினை கொண்டு வந்தீர்கள். அதற்கான பதிலை முதல மைச்சர் தந்துகொண்டு இருக்கிறார். அவர்கள் பதில் சொன்ன பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: இது சம்பந்த மாக, குடவாசல் காவல் நிலையக் குற்ற எண் : 444/64, பிரிவுகள் 147, 148, 336, 324, 323, 427 மற்றும் 302 இந்திய தண்டனைச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்ட இந்த வழக்கு, 1996-இல் மீண்டும் கழக ஆட்சி வந்த பிறகுதான் தீவிரப்படுத்தப்பட்டு, 19-12-1996-இல் இவர் கைது செய்யப்பட்டு, வழக்கு, நீதிமன்றத்தில் விசாரணையிலே இப்பொழுது இருக்கிறது.

அண்மையில் 19-3-1998 அன்று பகல் 2 மணிக்கு, குட வாசல் பேருந்து நிலையம் அருகே தன்னைத் தரக்குறைவாகப் பேசியதற்காக மேலே குறிப்பிட்ட இராஜேந்திரனும் அவரது

ஆட்களும் சக்திவேல் என்பவரை தாக்கி, கடத்திச் சென்றதாக, குடவாசல் காவல் நிலையத்திலே திரு. கே.கே. பாலு என்பவர் கொடுத்த புகாரின் மீது குற்ற எண் 230/98, சட்டப் பிரிவுகள் 147, 363 மற்றும் 323 இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு அந்த வழக்கும் விசாரணையிலே இருந்து வருகின்றது.

ஜெயலலிதா, அறிக்கையிலே கண்டனம் தெரிவித்து, வக்காலத்து வாங்கியிருக்கும் அவருடைய கட்சியின் மாவட்டக் கழகச் செயலாளரின் திருவிளையாடல்கள்தான் இவை என்பதை நான் குறிப்பிடுவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி), ஏதோ மாவட்ட மந்திரி தலையிட்டார் என்றெல்லாம் தாமரைக்கனி சொன்னார்; இந்த வரலாற்றைச் சொன்ன பிறகு, எல்லோருக்கும் இந்த உண்மை நன்றாகப் புரியும்; ஏதோ அவதூறுகளையும், அண்டப் புளுகுகளையுமே வார்த்தைகளாக்கி அறிக்கை விடுகின்றவர்கள் சொல்கிறார்கள் என்றால், தாமரைக்கனி போன்றவர்களும் அதையெல்லாம் கேட்டுக்கொண்டு வந்து, இந்த நாகரிகமான அவையில், மரபுகளைக் காப்பாற்ற வேண்டிய ஓர் அவையில் இப்படியெல்லாம் பேசக்கூடாது என்பதை மாத்திரம் எடுத்துக்கூற விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சிக்கான செய்திகள் அனைத்தையும் இங்கே சொல்லி இருக்கிறேன். வழக்கு விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்ற அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே இரு சிறப்புக் கவன ஈர்ப்பினைத் தந்து, மிகுந்த உருக்கத்தோடு சில செய்திகளை எடுத்துக் கூறி இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களுடைய தலைமையிலே உள்ள தமிழக ராஜீவ் காங்கிரஸ் கட்சியின் சார்பில், ராஜாஜி சாலையில் ஊர்வலம் எடுத்து, ராஜாஜி சாலையிலே உள்ள இந்தியன் வங்கிக்கு முன்பு கூடி, அமைதியாக ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக, அனுமதி கோரி, காவல் துறையிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள். ராஜாஜி சாலையில் அதிகப் போக்குவரத்து

இருக்கும் என்ற காரணத்தால் அங்கு அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, ராஜாஜி சாலைக்குப் பின்புறம் உள்ள, செகண்ட் லைன் பீச், ஜாபர் பெரான் சாலை சந்திப்பில் ஆர்ப்பாட்டம் நடத்த காவல் துறை அனுமதி கொடுத்ததோடு, அங்கே காவல் துறை பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது.

அந்தக் கட்சியின் மாநில செயலாளர் புரசை குமரன், மாநில இணைச் செயலாளர் காஞ்சி சுகுமாரன் மாநிலச் செயற் குழு உறுப்பினர் தேவராஜ், அந்தக் கட்சியின் மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் சந்திரன், மோகன் ஆகியோர் தலைமையில் சுமார் 150 பேர்கள் 18-5-1998 அன்று முற்பகல் ஆர்ப்பாட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள். அமைதியாக அரை மணி நேரம் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக உறுதி கொடுத்துவிட்டுச் சென்ற அந்த ஊர்வலத்தினர், ஆர்ப்பாட்ட முழக்கங்கள் செய்து கொண்டிருந்தபோதே, திடீரென்று ஒரு வாகனத்தில் மறைத்து வைத்திருந்த, வைக்கோலால் செய்யப்பட்ட, மூப்பனார் மற்றும் மத்திய முன்னாள் நிதி அமைச்சர் சிதம்பரம் ஆகியோர் உருவ பொம்மைகளை எடுத்து வந்து கொளுத்தி இருக்கிறார்கள்.

இதுகுறித்து பி-1 கடற்கரை காவல் நிலையக் குற்ற எண் 805/98 சட்டப்பிரிவு 143, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 74 மற்றும் சென்னை நகரக் காவல் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்ற மேலே கூறிய 5 நபர்களும் இன்று அதிகாலையில் கைது செய்யப்பட்டு, ரிமாண்டிற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பாதுகாப்பிற்காகச் சென்றிருந்த ஆய்வாளரும், ஏனைய காவல் துறையினரும், அந்தக் கொடும்பாவி எரிப்பைத் தடுக்காமல் விட்டதற்காக, உடனடி நடவடிக்கையாக, அந்தக் காவல் நிலைய ஆய்வாளர் இன்று அந்தக் காவல் நிலையத்திலிருந்து மாநகரக் காவல் துணை ஆணையாளரால் மாற்றப்பட்டுள்ளார்.

அதை ஏன் தடுக்கவில்லை என்று நம்முடைய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். திடீரென்று நிகழ்ந்து விட்ட நிகழ்ச்சி இது. முதலிலே அமைதியான ஆர்ப்பாட்டம்

நடத்தப் போவதாகச் சொல்லிவிட்டு, நாங்கள் அங்கே உருவ பொம்மையைக் கொளுத்தப் போகிறோம் என்று சொல்லாமலே, மறைத்துவைத்து அதைக் கொண்டுவந்து இந்தக் காரியத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள்.

பொதுவாக இந்தக் கொடும்பாவி கொளுத்துவது என்பது, ஏதோ சில சின்னங்களை கொள்கை ரீதியாக நமக்குப் பிடிக்காத, நாம் எதிர்க்கிற நாம் வெறுக்கிற சில சின்னங்களை வேண்டுமானால் பொம்மைகளாகச் செய்து கொளுத்தலாம். நான் அவர்கள் செய்ததற்கு வக்காலத்து வாங்குவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. கட்டாய இந்தித் திணிப்பு ஆதிக்கம் இருந்த போது, கட்டாய இந்தித் திணிப்பு ஆதிக்கம் என்ற பொம்மை யைச் செய்து அது கொளுத்தப்பட்டது. அதெல்லாம் - அவைகள் எல்லாம் சின்னங்கள். அதைப்போல ஒரு சர்வாதிகார நாடு என்றால், அந்தச் சர்வாதிகாரத்தைக் கொளுத்த, சர்வாதிகாரம் என்ற ஒரு சின்னத்தைச் செய்து கொளுத்தலாம். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, தி.மு.க.வாக இருந்தாலும் சரி, அ.இ.அ. தி.மு.க.வாக இருந்தாலும் சரி, கம்யூனிஸ்டுகளாக இருந்தாலும் சரி, அதே தமிழ் மாநில காங்கிரசாக இருந்தாலும் சரி, தனிப்பட்டவர்களுடைய உருவ பொம்மைகளைக் கொளுத்துவது, தனிப்பட்ட முறையிலே தலைவர்களுடைய கொடும்பாவிகளைக் கொளுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று என்பதை நாம் அனைவருமே ஒருமித்த கருத்தோடு எண்ணிப்பார்த்து, அவைகளைத் தவிர்க்க வேண்டுமென்பது தான் என்னுடைய வேண்டுகோளாகும்.

இது கடந்த காலத்திலே தி.மு.க. சார்பிலும் அல்லது வேறு பல கட்சிகளின் சார்பிலும் அ.இ.அ.தி.மு.க. போன்ற கட்சி களின் சார்பிலும் வேறு கட்சிகளின் சார்பிலும்கூட நடத்தப் பட்டிருக்கக்கூடும். இனிமேலாவது அப்படிப்பட்ட காரியங்களை நடைபெறாமல் நாம்தான் தடுக்கவேண்டும். நாம்தான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு சின்னம் ஒரு பொதுவான கருத்து, ஒரு கொள்கை - அதை வேண்டுமானால் நம்முடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு கொடும்பாவியாக, உருவ பொம்மை களாக ஆக்கிக் கொளுத்தலாம். ஆனால் தனிப்பட்டவர்கள்

மக்களால் மதிக்கப்படுகின்றவர்கள் ஒரு கட்சியினுடைய தலைவர் என்கிற அளவிற்கு செல்வாக்குப் பெற்றவர்கள், மூப்பனாரைப் போன்றவர்கள் அவர்கள் குறிப்பிட்டதைப் போல இந்தியாவினுடைய நிதித்துறை அமைச்சராக இருந்து புகழ்பெற்ற சிதம்பரம் போன்றவர்கள், இவர்களுடைய கொடும் பாவிகளைக் கொளுத்துவது என்பது ஒரு அநாகரீகமான செயல் என்பதை மாத்திரம் நான் இங்கே எடுத்துக்கூறி, அந்தச் செயல் உடனடியாகத் தடுக்கப்படா விட்டாலும்கூட, அந்தச் செயலில் ஈடுபட்டவர்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக் கின்றார்கள் என்பதையும், அங்கே தகுந்த முறையிலே தவிர்ப்பதற்கு முன்வராது இருந்த காவல் நிலைய ஆய்வாளர் அந்த நிலையத்திலிருந்து மாற்றப்பட்டிருக்கிறார் என்பதை நான் தெரிவித்து இந்த அளவோடு என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சி பற்றி ஒரு வாரத்திற்கு முன்னாலே வாழப்பாடி ராமமூர்த்தி கட்சிக்காரர்கள் பத்திரிகையிலே விளம்பரமாகக் கொடுத்திருக்கிறார்கள். செய்தி கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக இந்தியன் வங்கியில் நம்முடைய அருமைத் தலைவர் மூப்பனார் அவர்களோ, சிதம்பரம் அவர்களோ ஏதாவது ஒரு சிறிய கடன்கூட வாங்கியிருக்கிறார்கள் என்று நிரூபிக்கமுடியுமா என்று ஒரு சாவாலாகக் கூட ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் பிறகும்கூட, நம்முடைய போலீஸ் துறை, இப்படிப்பட்ட மிகப் பெரிய தலைவர்களை அங்கே அவமானப்படுத்துகின்ற ஒரு பெரிய மனவேதனைபடுத்துகின்ற அளவிற்கு நடந்துகொண்டதற்காக, எங்களுடைய வருத்தத்தைத் தெரிவிக்கின்ற வகையில், நாங்கள் வெளிநட்புச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(தமிழ் மாநில காங்கிரஸ் (மூப்பனார்) கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வெளிநடப்பு எனக்கு மிகுந்த வியப்பாக இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது. ஒரு வாரத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டது என்றார். அதைப்போலத்தான் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியும் கூட மத்திய அரசை எதிர்த்து அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற வருமான வரி அதிகாரிகளின் டிரான்ஸ்பர்களை எதிர்த்து, மத்திய அமைச்சர் அவ்வாறு நடந்துகொள்கிறார் என்பதைக் கண்டிக்கின்ற வகையிலே, அவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தி யிருக்கிறார்கள். அதைப்போலத்தான் இந்த ஆர்ப்பாட்டமும் இருக்குமென்று போலீசார் எண்ணியதிலே தவறு இருக்கமுடியாது. அவர்கள் எண்ணினார்கள். ஆனால் அதற்கு மாறாக அவர்கள் இப்படி நடந்துகொண்டு விட்டார்கள். அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை என்று கேட்டால், திடீர், திடீரென்று தலைவர்களுடைய கொடும்பாவிகளை நம்முடைய அலுவலகங் களுடைய வாசலிலேகூட போட்டு நாம் கொளுத்திவிடுகிறோம். அதுதான் கடந்தகால வரலாறு.

இது எல்லாம் அவர்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட கொடும்பாவிகள் கொளுத்தப்பட்ட வரலாறு எல்லாம் இருக்கிறது. நீங்கள் ஏன் முன்பே தடுக்கவில்லை என்று யார் மீதும் கோபித்துக் கொள்ள முடியாது. எனவே, இன்றைக்கு இவ்வளவு சொன்ன பிறகும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றவர்களும் வெளிநடப்புச் செய்வதற்கு நான் மிகவும் வருந்துகிறேன். அவர்கள் திரும்பி வந்து அவை நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்கள் சங்கப் பிரச்சினை

உரை : 85 நாள்: 22.05.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உரையாற்றிய திரு. அழகிரி, திரு. சந்தானம், திரு. திருநாவுக்கரசு, மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் பேசிய திரு. மணி ஆகியோர் இந்த அரசின்மீது ஒரு பெரிய பழியைச் சுமத்தினார்கள். ஏதோ ஆசிரியர்களை எல்லாம் அழைத்துப் பேசவில்லை என்று. முதலில் அதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டால் அது அரசுக்கும் நல்லது. அவர்களுடைய வாய்மைக்கும் நல்லது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் பலமுறை இந்த ஆசிரியர்களுடைய சங்கங்களை அழைத்து நானும் பேசியிருக்கிறேன். கல்வி அமைச்சரும் பேசியிருக்கிறார்.

அப்படிப் பேசிய சூழ்நிலையில், அரசு அலுவலர்களைப் பலமுறை சந்தித்துப் பேசினோம். தனியாகவே ஆசிரியர் பெரு மக்களை, அவர்களுடைய சங்கங்களின் சார்பாக அழைத்துப் பேசினோம். இங்கே ஒருவர் பேசும்போது, ஆசிரியர்கள் விடைத்தாள்கள் திருத்த முடியாது என்று வேலை நிறுத்தம் செய்ததாகக் குறிப்பிட்டார். அந்தப் போராட்டம் வேறு, இந்தப் போராட்டம் வேறு. அதற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அது வேறு, இது வேறு, இந்த ஆசிரியர் சங்கங்கள், கிட்டத்தட்ட 4, 5 சங்கங்கள் என்ற அளவிலே அவர்களை அழைத்து நான் பேசினேன். அதிலே, அந்த 5 சங்கங்களைச் சார்ந்தவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டார்கள். இப்போது போராட்டம் அறிவித்திருக்கின்ற ஒரே சங்கம்தான் நான் சொன்னதை அன்றைக்கு ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ளவில்லை என்பது மாத்திரம் அல்ல.

அவர்களோடு வந்த மற்ற சங்கங்களுடைய தலைவர்கள் அல்லது செயலாளர்கள் எல்லாம் எனக்கு நேராகவே முதலமைச்சர்தான் சொல்லுகிறாரே அதை நம்பி நாம் கொஞ்ச நாள் பொறுத்திருப்போம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள். எனக்கு நேராக சம்மதிப்பதுபோலச் சொல்லி விட்டுச் சென்றவர், மறுபடியும் போராட்ட அறிவிப்பை இன்றைக்குத் தந்துகொண்டிருக்கிறார். நான் இவற்றை எல்லாம் பெரிதுபடுத்தி, அதற்காக அவர்கள்மீது கோபம் கொள்பவன் அல்ல. போராட்ட உணர்வுகள் ஒவ்வொரு தொழிற்சங்கங் களிலும், இதுபோன்ற சங்கங்களிலும் இருக்க வேண்டும் என்பதை நான் என்றைக்கும் அலட்சியப்படுத்துகிறவனும் அல்ல, புறக்கணிப்பவனும் அல்ல. அழைத்துப் பேசியபோது நான் அவர்களிடத்திலே சொன்னது - கடந்த முறை கொடுத்ததை ஏன் கொடுக்கக்கூடாது என்று இப்போது அழகிரி கேட்டாரே இதைத்தான் - அவர்களுக்கு ஞாபகப்படுத்தி 1989ஆம் ஆண்டு இதுபோல ஊதியக் குழு பரிந்துரைகளை இந்தியாவிலேயே முதன் முதலாக, மத்திய அரசு ஊழியர்களுக்கு நிகராக மாநில அரசு ஊழியர்களுக்கும் மற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்கு கின்ற அந்தக் கால கட்டத்தில், அப்போது

Ministerial Staff - அமைச்சுப் பணியாளர்கள்

Junior Engineers - இளநிலைப் பொறியாளர்கள்

Superintendents - மேற்பார்வையாளர்கள்

இவர்கள் சுமார் இரண்டு லட்சம் பேர் இதே Category-ல் வருகிறார்கள். எங்களுக்கு முரண்பாடு ஏற்பட்டுவிட்டது. Anomoly வந்து விட்டது என்று அவர்கள் அப்போது கிளர்ச்சி செய்தார்கள். நல்ல வேளையாக அப்போது ஆட்சி கலைக்கப் பட்டுவிட்டதால் தப்பித்தோம். அப்போது ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது. அதனால் அந்தக் கிளர்ச்சி என்ன ஆயிற்று என்ற வரலாற்றுக் குறிப்பு என்னிடத்திலே இல்லை.

இப்போது நான், என்னிடத்திலே வந்த, இன்றைக்குப் போராட்டத்தை அறிவித்து இருக்கிற நண்பர்களிடத்திலே எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். அவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியாது என்ற அடிப்படையிலே அல்ல, ஏற்றுக் கொள்கிறோம் என்ற அடிப்படையிலே சொன்னேன். சொல்லிவிட்டு, இப்போது One Man Commission ஒன்று

போட்டிருக்கிறோம். அது உங்களிலே வருகின்ற பிரச்சினைகளில் உள்ள முரண்பாட்டை அறிவதற்காக அல்ல. உங்களுக்கு அந்தப் பணி நிலை தந்தால் அமைச்சுப் பணியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் இவர்கள் எல்லாம் உடனடியாகக் குரல் கொடுக்கக்கூடும். அவர்களையும் அழைத்துப் பேசி அவர்களிடத்திலே ஒரு சமரச உடன்பாடு காண கொஞ்சம் காலஅவகாசம் கொடுங்கள் என்றுதான் கேட்டேன். மறுநாள் பத்திரிகையாளர்கள் என்னிடத்திலே பேசும் போது சொல்லியிருக்கிறேன். ஆசிரியர் பிரதிநிதிகள் இன்றைய தினத்திலே போராடுகின்றவர்கள் உட்பட வந்து சந்தித்தபோது அவர்களிடத்திலே நான் சொன்னது 'நல்லதே நடக்கும், என்னை நம்பலாம்' என்ற இந்த வார்த்தைகள்தான். கோரிக்கையைப் புறக்கணித்து உரையாற்றியவர்கள் நம்புகிறீர்களா, எண்ணுகிறீர்களா என கேட்க விரும்புகிறேன். இடையிலே ஒரு சாங்கியமாக, ஒரு சங்கடமாக திரு. சிவசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். ஓய்வு பெற்றவர் அவர்களை, One Man Commission ஆகப் போட்டு, அவர் இந்த Anomoly வருகின்ற நேரத்திலே கிளர்ச்சி செய்யக்கூடிய அமைச்சுப் பணியாளர்களையும் அழைத்துப் பேசட்டும், பேசிய பிறகு ஒரு முடிவு எடுக்கலாம். எப்படியும் இதனால் மேலும் 100 அல்லது 150 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படும். இதை இழப்பு என்று சொல்ல மாட்டேன். அரசு மேலும் இதற்காக செலவு செய்யவேண்டிய நிலைமை ஏற்படும். இதையெல்லாம் எடுத்துச் சொல்லி, அவர்களும் சமாதானம் அடைந்து போய் விட்டார்கள் என்று எண்ணியிருக்கும்போது, இல்லை, போராட்டம்தான் என்று அவர்கள் கூறுவதும், அதற்காக நீங்கள் எல்லாம் பேசுவதும் எனக்கு விந்தையாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. என்னை நம்பலாம். நல்லதே நடக்கும் என்று சொல்லி இடையிலே அந்த One Man Commission இந்த மூன்று பிரிவினர்களிடத்திலும் Categories-அமைச்சுப் பணி யாளர், இளநிலைப் பொறியாளர், மேற்பார்வையாளர் - அந்தப் பிரதிநிதிகளிடத்திலே பேசிவிட்டு, இதுபற்றி நல்ல முடிவு எடுக்கிறோம் என்று சொன்னபிறகும் போராட்டம் என்றால், காக்கை உட்கார பனம்பழம் விழுவது என்பது போன்ற ஒரு நிலையை உருவாக்குவதற்காக நடைபெறுகிறது என்றால் நான் ஆதரிக்கத் தயாராக இல்லை. இந்த அரசினுடைய நல்ல

எண்ணத்தை இப்படி எந்த அளவிற்கு சோதிப்பது என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதே நேரத்திலே ஆசிரியர்களுடைய பிரச்சினைக்கு மிக முக்கியமாக, அவர்கள் எல்லாம் ஒன்றியங்களிலேதான், ஒன்றியத்தினுடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்ற நிலையைக்கூட மாற்றியது இந்த அரசு என்பதையும் யாரும் மறந்துவிடக்கூடாது. மத்தியிலே கொடுக்கிறார்கள் என்றால்- இங்கே சில மாநிலங்களை எல்லாம்கூட நம்முடைய நண்பர் அழகிரி அவர்கள் எடுத்துக்காட்டினார்கள். ராஜஸ்தான், குஜராத் இந்த இரண்டு மாநிலங்களிலும் நாம் செய்திருப்பதைப் போல் Scale to Scale தான் அங்கே இருக்கிறது. மத்திய அரசு கொடுத்து இருப்பது போல அந்த இரண்டு மாநிலங்களிலும் கொடுக்கவில்லை. ஒரிசா அரசில் நம்மைவிடக் குறைவாகத்தான் கொடுத்து இருக்கிறார்கள். உத்தரப்பிரதேசத்தில் அரசு அலுவலர்களுக்கு மாத்திரம்தான் சம்பள உயர்வு கொடுத்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு இன்னும் அறிவிக்கவில்லை. இவற்றையும் நாம் மனதிலே வைத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் இவற்றையெல்லாம் காட்டி உங்களுக்கு எதுவும் கிடையாது என்று சொன்னால்தானே போராட்டம்? பிறகு ஏன் போராட்டம் என்று தெரியவில்லை. எனவே, உங்களுடைய அத்தனை பேருடைய உரையையும் ஏற்று மீண்டும் சொல்கின்றேன். என்னை நம்பலாம், நல்லதே நடக்கும் என்று சொன்ன அந்த வார்த்தை பொய்த்துப் போகாது என்பதை உங்களுக்கு நான் எடுத்துக்கூறி, ஆசிரியர்களும் அவர்களுடைய கடமையுணர்வோடு நாள்தோறும் பள்ளிகளுக்குச் சென்று மாணவர்களைப் பயிற்றுவிக்க வேண்டுமென்று, அந்தக் கடமையைச் செய்ய வேண்டுமென்று, ஆசிரியர்களுக்கும் நீங்கள் இந்த அறிவுரைகளை வழங்க வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டு இந்த அளவில் அமைகின்றேன்.

சித்ரா மரணம் குறித்து பிரச்சினை

உரை : 86 **நாள்: 24.11.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, அமைந்தகரை குற்றப் பிரிவு காவல் துறையினரால் விசாரிக்கப்பெற்ற சித்ராவின் மரணம் குறித்து இங்கே தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிவபுண்ணியம் அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் ஜி. நிஜாமுதீன் அவர்களும், அ.இ.அ.தி.மு.க. சார்பில் தாமரைக்கனி அவர்களும், பா.ம.க. சார்பில் ஐ. கணேசன் அவர்களும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மணி அவர்களும், ஃபார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் சந்தானம் அவர்களும் மற்றும் தீரன் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை அளித்து பல கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். முதலில் அது பற்றிய குறிப்பினை இந்த அவையில் வைக்க நான் விரும்புகிறேன்.

சென்னை, அரும்பாக்கம் காவல் நிலைய குற்ற வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட ரவி என்ற குற்றவாளியின் மனைவி சித்ரா என்பவர் 13.10.1998 அன்று அதிகாலை அமைந்தகரை குற்றப் பிரிவு காவல் நிலையத்தினரால், காவல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு விசாரணை செய்த பின் 13.10.1998 அன்று காலை நெற்குன்றம், மீனாட்சி அம்மன் நகர், கிரி தெருவிலே உள்ள தனது வீட்டில் தூக்கில் பிணமாகத் தொங்கி யுள்ளார்.

இதுகுறித்து இறந்துபோன சித்ரா குடியிருந்த வீட்டின் உரிமையாளர் புருஷோத்தமன் கொடுத்த புகாரின் மீது மதுரவாயில் காவல் நிலையத்தில் குற்ற எண் 1254/88, பிரிவு 174 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு

செய்யப்பட்டுள்ளது. திருமணம் நடந்து 7 ஆண்டுகளுக்குள் சித்ரா இறந்ததால், பிரேத விசாரணையை பொன்னேரி கோட்டாட்சியர் செய்துள்ளார். இது ஒரு விதிமுறை. திருமணம் நடந்து 7 ஆண்டுகளுக்குள் ஒரு பெண் இறந்தால், அது வரதட்சணைக் கொடுமையாக இருக்குமோ என்கின்ற ஐயப்பாட்டின் காரணமாக கோட்டாட்சியர் பிரேத விசாரணை நடத்த வேண்டிய விதியின்படி செய்துள்ளார். புலன் விசாரணையை அம்பத்தூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் முதலில் மேற்கொண்ட போதிலும், பின்னர் அரசின் ஆணைப்படி இந்த வழக்கு மாநில குற்றப்பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப் பட்டுள்ளது. விசாரணையில் 11.10.1998 அன்று சென்னை அரும்பாக்கம் காவல் நிலையத்தில் 10.10.1998 அன்று இரவு தனது கடையிலே இருந்து சுமார் 2.5 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்கள் களவு போய்விட்டதாகக் கொடுத்த புகாரின் மீது அரும்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற எண் 781/98 இந்திய தண்டனைச் சட்டம் 457, 380 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் பதிவு செய்யப்பட்ட விரல் ரேகை, அந்த நிறுவனத்தில் பணிபுரிந்த அருண் என்கின்ற ஆனந்தன் என்பவரது ரேகை எனத் தெரியவந்ததால் அந்த அருண் கைது செய்யப்பட்டுள்ளார். அருண் ஒப்புதல் வாக்கு மூலத்தின்பேரில் திருடப்பட்ட சொத்தில் பாதித்தொகை கைப்பற்றப்பட்டது. அவர் கொடுத்த தகவலின் பேரில் அதே நிறுவனத்தில் பணிபுரியும் ரவி என்பவர் 12.10.1998 அன்று கைது செய்யப்பட்டார். ரவியிடமிருந்து ரூபாய் 10 ஆயிரம் கைப்பற்றப்பட்டது. மீதமுள்ள தொகையைக் கைப்பற்றும் பொருட்டு அண்ணாநகர் காவல் உதவி ஆணையாளர் 12.10.1998 அன்றே ரவியின் மனைவி சித்ராவின் வீட்டுக்குச் சென்று சித்ராவை விசாரணை செய்தும், அன்று இரவு சித்ராவை அமைந்தகரை காவல் நிலையம் அழைத்துச் சென்றும் விசாரித்துள்ளார். சித்ராவோடு அவரது நெருங்கிய உறவினரான சிவா என்கின்ற சிவகணேசனும் அமைந்தகரை காவல் நிலையம் சென்றுள்ளார். 12.10.1998 - 13.10.1998 அன்று அதிகாலை 4.00

மணியளவில் விசாரணை முடிந்து சித்ராவையும் சிவா என்பவரையும் உதவி ஆணையாளர் தனது ஜீப்பில் ஏற்றி அவர்கள் வீட்டின் அருகில் விட்டுவிட்டு வந்துள்ளார்.

சித்ரா, தான் காவல் துறையினரால் கற்பழிக்கப்பட்டதால் தற்கொலை செய்துகொண்டதாக எழுதப்பட்டிருந்த கடிதம் ஒன்று சம்பவ இடத்தில் இருந்ததன் பேரில் அவரது மரணம் பற்றி காவல் நிலைய ஆணை எண் 145-ன் கீழ் விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. பிரேத மறுபரிசோதனை செய்த மருத்துவக் குழுவினர், சித்ரா பாலியல் பலாத்காரத்துக்கு உட் படுத்தப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவுமே இல்லை என்றும், அவர் தூக்கு மாட்டிக் கொண்டுதான் இறந்து உள்ளார் என்னும் கருத்தினைத் தெரிவித்துள்ளார்கள். சித்ராவின் உடல் உறுப்புக்கள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. சித்ரா எழுதியதாகக் கூறப்பட்ட கடிதம் கையெழுத்து நிபுணர்களால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் உள்ள கையெழுத்து சித்ராவினுடையது அல்ல என்று அந்த நிபு ணர்கள் கருத்துத் தெரிவித்து உள்ளார்கள். சித்ரா எழுதியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள கடிதத்தை எழுதிய நபர் யார் என்பது குறித்து விசாரணைசெய்யப்பட்டு வருகிறது. சித்ராவை இரவு நேரத்தில் விசாரணைக்கென காவல் நிலையம் அழைத்து வந்ததற்காக 13.10.1998 அன்று ஒரு இன்ஸ்பெக்டரும், 4 காவலர்களும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். பின்னர் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையை மேற்கொண்டபின், ஒரு துணை ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 4 காவலர்கள் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். மேலும், பிறகு 30.10.1998 அன்று அரசின் ஆணையின் பேரில் ஒரு அசிஸ்டென்ட் கமிஷனர் (ஏ.சி.) தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மேலே சொன்னதிலே இருந்து சித்ராவின் மரணம் தற்கொலை என்பது தெளிவாகத் தெரிய வருகிறது. சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் சித்ராவின் மீது எந்தவிதமான காயங் களும் இல்லை என்பது பிரேதப் பரிசோதனை அறிக்கையி

லிருந்து தெரிகிறது. சித்ரா மரணம் தற்கொலைதான் என்றும் இந்தப் பிரேதப் பரிசோதனை அறிக்கையிலே தெரிவிக்கப் பட்டுள்ளது. சித்ரா, தான் கற்பழிக்கப்பட்டதாகவும், அதனால் தற்கொலை செய்து கொண்டதாகவும் ஒரு கடிதம் அவருடைய வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது. அந்தக் கடிதத்தை சித்ராவின் கையெழுத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, அது சித்ராவால் எழுதப்பட்டது அல்ல என்று கையெழுத்து நிபுணர்கள் சான்றிதழ் வழங்கியிருக்கிறார்கள். இதிலிருந்து துர்நோக்கம் காரணமாக சிலபேர் வேண்டுமென்றே அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எழுதிய இந்தக் கடிதத்தை அனைவ ருக்கும் விநியோகம் செய்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

இரவு நேரங்களில் பெண்களைக் காவல் நிலையத்திற்குக் கொண்டுவரக்கூடாது என்று அரசு பலமுறை அறிவுரைகளை வழங்கி உள்ளது. இருந்தாலும் இதை மீறி, இந்தச் சித்ராவை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்த அனைத்து காவலர்களும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இது உடனடி யாக சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. துணை ஆணையாளர் அந்தஸ்தில் உள்ள அதிகாரியே இது போன்ற சம்பவத்தில் முதல் முறையாக தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கே நீதி விசாரணை வேண்டுமென்று மக்கள் குடியுரிமை அமைப்பு போன்ற அமைப்புகள் தந்துள்ள கருத்துக்களின் அடிப்படையில் அவர்களுடைய ஐயத்தைப் போக்குவதற்கும் நீதி விசாரணை பயன்படும் என்றும் உறுப்பினர்கள் இங்கே கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். நீதி விசாரணை கூடாது என்பதல்ல, எத்தனையோ சம்பவங்களில் இந்த அரசு, இதுவரையிலே நடைபெற்ற ஆட்சிகளைவிட அதிகமாக நீதி விசாரணைகளை நடத்தி அதனுடைய அறிக்கைகளை இந்த அவைக்கு வழங்கி யிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மிக நன்றாக அறிவீர்கள். ஆனால் நீதி விசாரணை, அப்படியே, அப்பட்ட மாக, துல்லியமாக, கருத்துக்களை எது நடந்ததோ அதைச் சொல்லிக்காட்டுகிறதா என்றால், -நான் நீதி விசாரணை அனைத்தையும் குறை கூறவில்லை- ஆனால் உதாரணத்திற்கு

ஒன்றை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். ஏதோ கடந்த கால வரலாற்றைச் சொல்லி இதை நியாயப்படுத்த விரும்பவில்லை.

கடந்த கால ஆட்சியில் சிதம்பரத்தில் பத்மினி என்ற பெண் கற்பழிக்கப்பட்டார் என்கிற செய்தியும், நந்தகோபால் என்கிற அவர் கணவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியும் வந்தது. 3.6.1992ல் அந்த நிகழ்ச்சி நடைபெற்றதாக அந்தச் செய்தி வந்தது. ஆனால் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்பதற்காக ஒரு மாதம் கழித்து 13.7.1992ல் பத்மினி, நீதி மன்றத்திற்கு அவராகச் சென்று முறையீடு செய்து அந்த முறை யீட்டுக்குப் பிறகு, சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று அவர் கேட்டு, அன்றைக்கு இருந்த அரசின் சார்பில் நாங்கள் சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்குத் தயாராக இருக்கின்றோம். சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை' என்று அன்றைக்கு இருந்த கடந்தகால ஆட்சியிலே சொல்லப்பட்டு, அவ்வாறு சி.பி.சி.ஐ.டி. விசாரணைக்கு கோர்ட்டு அன்றைய அரசின் கோரிக்கையை ஏற்று உத்தரவிட்டது. 22.7.1992ல் அந்த உத்தரவு இடப்பட்டது. இந்த சி.பி.சி.ஐ.டி. விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற அதே காலகட்டத்தில் கடலூர் செஷன்ஸ் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கும் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதற்கு இடையில் கடந்த கால ஆட்சியில் நீதி விசாரணை ஒன்றும், Retired District Judge பழனியப்பன் அவர்களைக் கொண்டு ஒரு நீதி விசாரணையும், 17.6.1992லேயே கோர்ட்டுக்கு பத்மினி செல்வதற்கு முன்பாகவே ஒரு நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்பட்டது. நீதி விசாரணையினுடைய ரிப்போர்ட்டில் என்ன வந்திருக்கிறது என்றால்- அந்த ரிப்போர்ட் 31.1.1994 அன்று தரப்பட்டது. ஆனால், அந்த ரிப்போர்ட் அவையிலே 6 மாதங்களுக்குள் வைக்கப்படவில்லை. அந்த ரிப்போர்ட் குறிப்பில் தலைமைச் செயலாளர் குறிப்பு எழுதியிருக்கிறார். கமிஷன் அறிக்கை 31.1.1994ஆம் நாளன்று அரசுக்கு வரப்பெற்றது. நிர்வாகக் காரணங்களால் 30.7.1994ஆம் நாளோடு முடிவடைகிற ஆறு மாதத்திற்குள் இந்த அறிக்கையை தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்க முடியவில்லை' என்று ஆறு மாதம் வரை வைக்கப்படவில்லை

என்று அந்த ஆட்சியின் தலைமைச் செயலாளரே குறிப்பு எழுதியிருக்கிறார். ஆனால் நீதி விசாரணையிலே என்ன முடிவு கூறப்பட்டது என்றால் "...The death of Thiru Nandagopal should have been a suicidal one and the oral and documentary evidence available in the enquiry does not make out the case of rape of Thiumathi Padmini as alleged by her." ஆக, கற்பழிக்கப்படவில்லை. இந்த விசாரணையில் கிடைக்கப் பெறுகின்ற வாய்மொழி சாட்சியங்களும், ஆவண சாட்சியங் களும், பத்மினி குற்றம் மெய்ப்பிக்கவில்லை' என்றுதான் நீதி விசாரணையினுடைய அறிக்கை வந்திருக்கின்றது. ஆனால், வேடிக்கை என்னவென்றால், அந்த வழக்கு செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெற்று, அதனுடைய தீர்ப்பு 1997ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்தத் தீர்ப்பில் பத்மினி கற்பழிக்கப்பட்டது உண்மைதான் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆக, நீதிமன்றத் தீர்ப்புக்கும், நீதி விசாரணையினுடைய கண்டுபிடிப்பிற்கும் உள்ள வேறுபாட்டையும் நாம் உணர்ந்துகொண்டு, அடிக்கடி நீதி விசாரணை கேட்பதிலே உள்ள தாத்பர்யத்தை உங்களுடைய மனசாட்சிக்கே விட்டுவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின்படி அந்தக் குற்றவாளி களுக்கு பத்தாண்டு காலம், ஆறாண்டு காலம் அல்லது ஐம்பதாண்டு காலம் தண்டனை. அஃதன்னியில் பத்தாயிரம் ரூபாய், ஐம்பதாயிரம் ரூபாய் என்றெல்லாம் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டு, இப்போது அப்பீலுக்குக்கூட அந்தக் குற்றவாளிகள் எல்லாம் சென்றிருக்கிறார்கள். எனவே, நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு, அது கற்பழிப்புதான், போலீசார் கற்பழித்தார்கள் என்பதுதான். ஆனால் அன்றைக்கு இருந்த அரசு காவல்துறையினரால் கற்பழிக்கப்படவில்லை என்பது. எனவேதான் நீதி விசாரணையை அறவே புறக்கணிக்க வேண்டுமென்று உடனடியாகக் காவல் துறையினர் இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஒரு ஏ.சி.-யே இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார். இதற்கிடையில் ஆர்.டி.ஓ. விசாரணை யும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நீதி விசாரணை நடை

பெற்று, அதனுடைய பரிந்துரைகளைப் படித்துப் பார்த்து, பிறகு வழக்குத் தொடுத்து, அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்குப் பதிலாக இப்போதே ஆர்.டி.ஓ. விசாரணை முற்றுப் பெற்றதும், உடனடியாக நீதிமன்றத்திற்கே இந்த வழக்கைக் கொண்டு செல்ல இந்த அரசு தயங்காது என்பதையும், அவர்கள் இப்போது இடைக்காலப் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தாலும்கூட, ஆர்.டி.ஓ. விசாரணைக்குப் பிறகு உண்மைகள் தெரியுமேயானால் உரிய நடவடிக்கையைக் காவல் துறையினர் மீது இந்த அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதையும், அநியாயங்களுக்கு இந்த அரசு என்றைக்கும் துணை போகாது. அவர்களுக்கு என்றைக்கும் ஆதரவு தராது என்பதையும் நான் திட்டவட்டமாகத் தெரிவித்து அமைகின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் சரகத்திற்கு உட்பட்ட லட்சுமிபுரம் கிராமத்திலுள்ள புதிய தமிழகம் கட்சி உறுப்பினர்கள் சிமெண்டினால் செய்யப்பட்ட இமானுவேல் சேகர் உருவச் சிலை ஒன்றை ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னர், அவ்வூர் தேவேந்திரகுல கட்டமைப்பின் பராமரிப்பில் இருக்கும் காளியம்மன் கோயிலுக்குச் சொந்தமான இடத்தில் ஒரு பீடம் அமைத்து நிறுவியுள்ளார்கள். சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களைக்கொண்டு இந்தச் சிலையை திறந்துவைக்க வேண்டும் என்பதற்காக சிலையை சாக்குத் துணியால் கட்டி மூடி வைத்திருந்தார்கள். அந்தச் சிலையை நிறுவுவதற்கான எந்தவித முன் அனுமதியையும் யாரும் பெறவில்லை. மூடி வைக்கப்பட்ட சிலையை கடந்த 20.11.1998 அன்று அதிகாலை 2½ மணியளவில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள். 20.11.1998 அன்று இரவு யாரோ சிலர் சிலையின் இடது பக்கத் தலையின் புருவத்திற்கு மேலே சேதப்படுத்தினார்கள். இது குறித்து 21.11.1998 அன்று காலை லட்சுமிபுரத்தைச் சேர்ந்த மாடசாமி என்பவர் கொடுத்த புகார் மீது கழுகுமலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் மேற்கொண்டு அசம்பா

விதம் ஏதும் நேராமல் இருக்க தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சிலை சேதப்படுத்தப்பட்ட தகவல் அறிந்து மீனாட்சிபுரம், வடக்குத் தெரு மற்றும் சுற்றுப்புறங்களிலுள்ள புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த சுமார் 75 பேர் கருப்புசாமி என்பவர் தலைமையில் கூடி வன்முறையில் ஈடுபட்டார்கள். லட்சுமிபுரத்திலே அழகர் என்பவருக்குச் சொந்தமான கோழிப்பண்ணைக்கு வன்முறைக் கும்பல் தீ வைத்ததோடு, இரண்டு வீடுகளையும் சேதப்படுத்தியுள்ளது. இதுகுறித்து கழுகுமலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. 21.11.1998 அன்று காலை 11.00 மணியளவில் கழுகுமலை, வடக்குத் தெருவில் மற்றொரு கும்பல் கற்களை வீசி வீடுகளுக்கும், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கும் சேதம் விளைவிக்கும் செயலில் ஈடுபட்டது. கும்பலைக் கலைக்க முயன்ற காவல் துறையினர் மீது அவர்கள் கல் எறிந்தார்கள். கலைந்து செல்லும்படி எச்சரிக்கை செய்தும் கேளாததால், குறைந்தபட்ச பலத்தை உபயோகித்து காவல் துறையினர் கும்பலைக் கலைத்துள்ளார்கள். இந்தச் சம்பவம் குறித்து, கழுகுமலை காவல் நிலையத்தில் மற்றொரு வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்குகள் சம்பந்தமாக புதிய தமிழகத்தைச் சேர்ந்த கருப்புசாமி, சர்க்கரை, பாலகிருஷ்ணன் ஆகியோர் கைது செய்யப்பட்டு, கலவரத்தின்போது ஏற்பட்ட சிறு காயங்களுக்காக அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். சிலை சேதப்படுத்தப்பட்ட வழக்கில் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த ஐயப்பன், சிவகுருநாத மணிகண்டன் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். கோவில்பட்டி வருவாய் உட்கோட்ட அதிகாரி இதுகுறித்து இரு தரப்பினரையும் அழைத்துப் பேசியுள்ளார். சம்பவ இடத்தில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கிடையே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அக்டோபர் திங்கள் 22, 26 ஆகிய நாட்களில் நடைபெற்ற

அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இனிமேல் புதிதாகச் சிலைகள் வைப்பதாக இருந்தால் அரசின் முன் அனுமதி பெற வேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை அனைவரும் சேர்ந்து நிறைவேற்றியிருந்தும்கூட, அரசுக்குத் தெரிவிக்காமலேயே, முன்னனுமதி எதுவும் பெறாமலேயே இந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டு, அதிலே இத்தகைய சம்பவங்களை உருவாக்கியிருக்கின்றன. எனினும், முன்னனுமதி பெறாத காரணத்தால், கலவரம் நடைபெறலாம் என்று யாரும் வாதிக்க முடியாது. கலவரம் நடைபெறாத ஒரு சூழ்நிலையை உருவாக்க காவல் துறை அங்கே பணியாற்றி வருகின்றது என்பதை எடுத்துக்கூறி இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

தூத்துக்குடி ஸ்டெர்லைட்தொழிற்சாலை

உரை : 87 நாள் : 25.11.1998

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் தொழிற்சாலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் இராமன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும், டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் கருத்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். அவர் களுடைய கருத்துக்களுக்கு முரண்பட்ட கருத்து இந்த அரசுக்கு இல்லை என்பதை முதற்கண் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதிலே நம்முடைய டாக்டர் இராமன் அவர்கள் பேசும்போது, இனிமேலாவது இதுபோன்ற ஆலைகளுக்கு அனுமதி வழங்குவதைத் தீர ஆராய்ந்த பிறகு வழங்கவேண்டுமென்று குறிப்பிட்டார்கள். பேசிய உறுப்பினர்கள் அனைவரும் மத்திய அரசும், மாநில அரசும், இந்த அனுமதியை வழங்கியது தவறு என்ற பொருள்பட கருத்தைக் கூறியிருக் கிறார்கள். மாநில அரசு என்றால், இப்போது நடைபெறுகின்ற மாநில அரசு என்று பத்திரிகைகளிலே செய்தி வந்துவிடும் என்பதால், அதற்கு நான் ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். இப்போது வழங்கப்பட்டுள்ள உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிலேகூட அவர்கள் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக் கிறார்கள்.

"....According to the petitioners, the Union Ministry of Environment and Forests granted environmental clearance to M/s. Sterlite Industries (India) Limited, to set up a large scale Copper Smelter Plant at Tuticorin on January 16, 1995. The Tamil Nadu Government granted the clearance on May 17, 1995. The clearance for the project was given ignoring the fact that three States had already rejected the proposal.

The State Pollution Control Board gave its consent on May 22, 1995 to the industry to establish the plant in the SIPCOT Complex."

இதுதான் உயர்நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள ஒரு வரலாற்றுக் குறிப்பாகும். இந்த ஸ்டெர் லைட் நிறுவனம் நடத்தும் தாமிர உருக்காலை, தூத்துக் குடியிலே உள்ள சிப்காட் தொழிற்சாலை வளாகத்திலே உள்ளது. தீர்ப்பிலே குறிப்பிடப்பட்டு இருப்பதைப்போல.

இந்த நிறுவனம் ஃபிளிஸ்ட்டர் காப்பர் ஆண்டொன்றுக்கு ஒரு டன்னும், கந்தக அமிலம் நாள் ஒன்றுக்கு 1,060 டன்னும், பாஸ்பரிக் அமிலம் நாள் ஒன்றுக்கு 350 டன்னும் தயாரிக்க 1994ஆம் ஆண்டு மார்ச் திங்களில் விண்ணப்பித்து அன்றிருந்த தமிழக அரசு சுற்றுச் சூழல் வாரியம் இந்தத் தொழிற்சாலையி லிருந்து பெறப்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் காற்று, மாசுத் தடுப்பு முறைகளடங்கிய கருத்துரையைப் பரிசீலித்து தடை யில்லாச் சான்றிதழ் No Objection Certificate 1.8.1994 அன்று வழங்கியது. இத்தொழிற்சாலைக்கு மத்திய அரசு சுற்றுப்புறச் சூழல் ஒப்புதல் 18.1.1995 அன்று பெறப்பட்டது. தமிழக அரசின் சுற்றுப்புறச் சூழல் நலக்குழு இத்தொழிற்சாலைக்கு 17.5.1995ல் ஒப்புதல் அளித்தது. தொழிற்சாலை அதன் உற்பத்திச் சோதனையை 1996ஆம் ஆண்டு மார்ச் திங்களில் தொடங்கியது. மே மாதத்திற்குப் பிறகுதான் இந்த ஆட்சி வந்தது. 1996மார்ச் திங்களில் உற்பத்திச் சோதனை தொடங்கப்பட்டு விட்டது. முதலில் இத்தொழிற்சாலை சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை கோவாவிலே உள்ள தேசிய கடல்வள ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையின் பேரில் வங்காள விரிகுடா கடலில் வெளியேற்ற வாரியத்தினால் அனுமதியும் வழங்கப்பட்டது. ஆனால், கழிவு நீரைக் கடலில் வெளியேற்ற எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்ட காரணத்தால் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவு நீரை மீண்டும் தொழிற்சாலையில் செயல்முறையில் பயன் படுத்திட அனுமதியைக் கோரியது. இந்தக் கோரிக்கையை வாரியம் பரிசீலித்து தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்க 14.10.1996 அன்று அனுமதியளித்தது. இந்தத் தொழிற்சாலை

குறித்து பலவித எதிர்ப்புக் கருத்துக்கள் கூறப்பட்டதால், தமிழக அரசு மக்களின் மத்தியில் இருந்த அச்சத்தை மனதிலே கொண்டு மூன்று உறுப்பினர்கள் அடங்கிய ஒரு வல்லுநர் குழுவை நியமித்து இத்தொழிற்சாலை குறித்து அறிக்கை கோரியது. இந்தக் குழுவிலே ஐதராபாத் Indian Institute of Chemical Technologyயைச் சேர்ந்த டாக்டர் ஏ.ஏ. கான். புது டெல்லி I.I.T.-யைச் சேர்ந்த டாக்டர் பிச்சுமணி, Pune National Chemical Laboratory-யைச் சேர்ந்த எச்.ஜி. ஜோக்லேக்கர் ஆகியோர் இடம்பெற்று, தங்கள் அறிக்கையை 1997ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கொடுத்தார்கள்.

இந்த அறிக்கையில் இத்தொழிற்சாலை இயங்குவதால் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்பட வாய்ப் பில்லை எனக் கூறப்பட்டிருக்கிறது. இதன்பேரில் 7.4.1997 அன்று இத்தொழிற்சாலைக்கு நீர் மற்றும் காற்று குறித்த சட்டங்களின்கீழ் இசைவாணை புதுப்பிக்கப்பட்டது. 3.5.1997 அன்று இராகவன் என்ற ஒப்பந்தத் தொழிலாளி gas cutting வேலை செய்து கொண்டிருக்கும்போது தீ விபத்துக்குள்ளாகி 7ஆம் தேதி அன்று இறந்துவிட்டார். இதுகுறித்து தொழிற் சாலைகள் ஆய்வாளர்களால் புலனாய்வு செய்யப்பட்டு, நிர்வாகத்தினர் மீது நீதிமன்றத்தில் தொழிற்சாலைகள் சட்டவிதி களின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, நீதிமன்றம் 65 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தது. இத்தொழிலாளிக்கு அறுபதாயிரம் ரூபாய் இன்சூரன்ஸ் கம்பெனி மூலமும், நிர்வாகத்தால் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்பட்டது. 5.7.1997 அன்று ஸ்டெர்லைட் தொழிற்சாலைக்கு அருகேயுள்ள திருவாளர் ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்துகொண் டிருந்த மகளிர், ஸ்டெர்லைட் ஆலையிலிருந்து வெளிவந்த வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டு, தூத்துக்குடி அரசு மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டார்கள் என்ற செய்தி வந்தது. உடனே தமிழக அரசும், மாசுக் கட்டுப்பாட்டு வாரியமும் சேர்ந்து இந்தத் தொழிற்சாலையை உடனடியாக மூட உத்தரவிட்டன. மேலும் இந்த விபத்தின் காரணத்தை அறிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த காற்று

மாசுத்தடுப்பு நிபுணர், டாக்டர் சொக்கலிங்கம், டாக்டர் எம்.கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் பி.என். சாஸ்திரி மற்றும் டாக்டர் காந்தபாபா ஆகியோர் அடங்கிய குழுவை அமைத்தது.

இந்தக் குழு, அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்ட பாதிக்கப்பட்ட தொழிலாளர்களையும் மற்றும் மருத்துவர் களையும் 10 மற்றும் 11.7.1997 ஆகிய நாட்களில் நேரடி விசாரணை செய்து மேற்படி விபத்தானது ஸ்டெர்லைட் தொழிற் சாலையிலிருந்து வெளிவரும் Sulphur-Di-Oxide வாயுவின் அடர்த்தியானது தொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பில்லை என்று கூறியது. மேற்படி விபத்து, ரமேஷ் ஃப்ளவர்ஸ் தொழிற்சாலையில் கையாளப்படும் இரசாயனப் பொருட்களின் கலவையிலிருந்து வெளிவரும் வாயுக் கசிவு மற்றும் Sulphur-Di-Oxideடுடன் சேர்ந்து மகளிர் வேலை பார்க்கும் பகுதியில் பாதிப்பு ஏற்படுத்தியிருக்கக்கூடும் என்று பாதிக்கப்பட்டவர்களிடம் விசாரித்ததன் மூலம் தெரிய வந்தது.

இதன் பிறகு ஸ்டெர்லைட் தொழிற்சாலையை மீண்டும் இயக்க தமிழக அரசு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் 13.8.1997 அன்று அனுமதி வழங்கப்பட்டது. 30.8.1997 அன்று சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலையில் ஏற்பட்ட வெடி விபத்தில், வெப்ப நிலையிலே உருகிய தாமிரம் தெறித்து, சங்கர் மற்றும் பெருமாள் என்ற இரண்டு தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். இந்த விபத்திற்குப் பிறகு, தாமிர உருக்கு சேமிப்பு உலை சரி செய்யப்படும்வரை அதன் உபயோகத்திற்குத் தடை செய்யப்பட்டு, 3.9.1997 அன்று உடனடியாக ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மும்பையிலே உள்ள தொழிற்சாலைகள் ஆலோசனை இயக்கத்தைச் சேர்ந்த திரு. ஜி. வைத்தியநாதன் தலைமையில் இந்த விபத்தை புலனாய்வு செய்து, விபத்துத் தடுப்பு முறை களைத் தெரிவிப்பதற்கு நான்கு பேர் அடங்கிய வல்லுநர் குழு தமிழக அரசால் 11.9.1997 அன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழு பரிந்துரைத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் பின்பற்றப்பட்டதைச் சரிபார்த்து, சென்னை உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்

அடிப்படையிலே சுழலும் தாமிர உருக்கு சேமிப்பு உலை உற்பத்தி தொடங்குவதற்கான அனுமதி 5.11.1997 அன்று அளிக்கப்பட்டது. தொழிற்சாலைகள் ஆய்வாளர்களால் விபத்து புலனாய்வு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டு, நீதிமன்றம் 3,60,000 ரூபாய் அபராதம் விதித்தது. இறந்த ஒவ்வொரு தொழிலாளிக்கும் இலட்சம் ரூபாய் வீதம் நிர்வாகத்தால் நிதி வழங்கப்பட்டது. 16.4.1998 அன்று தாமிர உருக்கு சேமிப்பு உலையில் தூசி சேகரிக்கும் அறையில் தூசி அடைத்துக் கொண்டது. அதனை, ஒரு திறவையினுள்ளே கடப்பாறையினால் குத்தும்போது வெப்பமான தூசி பறந்து தட்சிணாமூர்த்தி, ராஜா, நடராஜன் என்ற தொழிலாளிகள் இறந்துவிட்டார்கள். நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு, 90 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. மறைந்த தொழிலாளி தட்சிணாமூர்த்தி, ராஜாவுக்கு 1½ இலட்சம் ரூபாயும், நடராஜனுக்கு 1 இலட்சம் ரூபாயும் நிர்வாகத்தால் வழங்கப் பட்டது.

தமிழக அரசு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலம் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து திடீர் சோதனை நடத்தி அறிக்கை தரும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி வாரியத்தின் அறிவியல் ஆலோசகரும், உலக அளவில் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர் எம்.சாந்தப்பா, டாக்டர் கே.ஆர்.ரங்கநாதன், டாக்டர் சி.ஏ.சாஸ்திரி ஆகியோரைக் கொண்ட குழு, இந்தத் தொழிற் சாலையை 16.6.1998 அன்று ஆய்வு செய்தது. இக்குழு, ஸ்டெர்லைட் தொழிற்சாலை பற்றி திருப்தி தெரிவித்தது. சென்னை உயர் நீதிமன்றம் தனது 20.8.1998ஆம் நாளைய உத்தரவில், மத்திய அரசு NEERI நிறுவனத்தின் மூலம் ஸ்டெர்லைட் தொழிற்சாலையை ஆய்வு செய்து 3 மாதத்திற்குள் அறிக்கை தர உத்தரவிட்டது. 23.11.998 அன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நீதிமன்றத்தில் NEERI இயக்குநர் நேரில் வந்து தனது அறிக்கையைத் தந்து, விளக்கத் தையும் எடுத்துக் கூறினார். இதற்கிடையில், 19.11.1998 அன்று கந்தக அமிலம் வெளியேற்றும் வேலையில் ஈடுபட்டிருந்த இரஞ்சன் குமார் உள்ளிட்ட 5 பேருக்குக் காயம் ஏற்பட்டு,

மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். சென்னை உயர் நீதிமன்றம் NEERI இயக்குநர் எடுத்துரைத்த தொழிற் சாலையின் குறைகளையும், 19.11.1998 அன்று நடைபெற்ற தொழிற்சாலை விபத்தையும் காரணமாகக்கொண்டு, தொழிற்சாலையை மூடும்படியாக உத்தரவிட்டுள்ளது. மீண்டும் வழக்கு 1.12.1998 அன்று எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இதுதான் இன்றுள்ள நிலவரம். மாநில அரசு உடனடியாக இந்த அனுமதியை இரத்து செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதில், எந்தவிதமான கருத்து வேறுபாடும் இந்த அரசுக்கு இல்லை என்பதையும், எந்த நடவடிக்கை எடுத்தாலும், நீதிமன்றங்கள் அதற்கிடையிலே தங்களுடைய தீர்ப்புகளை வழங்குவதையும் நாம் மனதிலே கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அந்த வகையிலே, அதையும் கருதிப் பார்த்து, அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும், இந்த அரசு இந்த ஆலை வருவதற்குப் பொறுப்பல்ல என்றாலும்கூட, அதனால் ஏற்படுகின்ற கஷ்ட நஷ்டங்களுக்குப் பொறுப் பேற்று, ஆவன செய்யும் என்ற உறுதியையும் இந்த அளவுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாஞ்சோலை தேயிலைத் தோட்டப் பிரச்சினை

உரை : 88 **நாள் : 25.11.1998**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்கால கூட்டத்தொடர் குளிர்மயமாகவே ஆகிவிடக்கூடாது என்பதற்காக கம்பளி கேட்டதற்கு மாறாக சற்று சூடான விவாதம் இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பிலே நடைபெற்றிருக்கிறது. இருந்தாலும் இந்தச் சூடு இந்த அவையோடு நின்றுவிட வேண்டும். இதற்கு வெளியிலும் பரவிவிடக்கூடாது என்கின்ற ஆழ்ந்த அக்கறை யோடு இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் தாமரைக்கனி, சந்தானம், கிருஷ்ணசாமி ஆகியோருடைய கருத்துக்களின் அடிப்படையில் அல்ல, அவை குறித்து சிலவற்றை நான் இங்கே கூற விரும்புகின்றேன்.

முதலில், இந்த நெல்லை மாவட்டத்திலேயுள்ள மாஞ் சோலை தேயிலைத் தோட்டத்தைப் பற்றி ஒரு சிறு குறிப்பை வழங்க விரும்புகின்றேன். Bombay Burma Trading Corporation Ltd., என்ற நிறுவனம் 1929ஆம் ஆண்டிலிருந்தே திருநெல் வேலி மாவட்டத்தில் மாஞ்சோலைப் பகுதியில் தேயிலைத் தோட்டத் தொழிலைத் தொடர்ந்து செய்து வருகின்றது. இந்தத் தொழிற்சாலையிலே ஆண்களும், பெண்களும் சேர்ந்து நிரந்தரமாக 1,631 பேரும், தற்காலிகமாக 714 பேரும் பணியாற்றி வருகின்றார்கள். இந்த 2,345 தொழிலாளர்களில் 1,190 தொழிலாளர்கள் INTUC., AITUC., தி.மு.க. அ.இ.அ.தி.மு.க. தொழிற்சங்கங்களிலே உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். தொழிலாளர்கள் பிரச்சினை தோன்றும் போதெல்லாம், மேற்கண்ட சங்கப் பிரதிநிதிகளை நிர்வாகம் அழைத்துப் பேசி, சுமுகமான சூழ்நிலையிலே இதுவரையிலே

இயங்கி வந்தது. திடீரென்று கடந்த ஆகஸ்ட் திங்களில் புதிய தமிழகம் கட்சியின் தலைவர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நிர்வாகத்திற்கு நீண்டகால குத்தகைக்கு விடப்பட்ட தேயிலைத் தோட்டத்தை அரசாங்கம் திரும்பப் பெற்று அங்கே பணி யாற்றும் தொழிலாளர்களுக்குப் பிரித்து வழங்க வேண்டு மென்றும், தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூபாய் 150 கூலியாகவும், அதற்குமேல் சில பணச் சலுகைகளையும் வழங்க வேண்டுமென்றும், ஏற்க முடியாத சில கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தைத் தொடங்கினார். 18.8.1998 அன்று சேரன்மாதேவி R.D.P., முன்னிலையிலேயும் 19.8.1998 அன்று திருநெல்வேலி D.R.O. முன்னிலையிலேயும், பேச்சுவார்த் தைகள் நடந்தன. 20.8.1998 அன்று டாக்டர் க. கிருஷ்ணசாமி தடையை மீறி மாஞ்சோலைப் பகுதிக்கு 300 நபர்களோடு சென்று கூட்டங்களை நடத்தியிருக்கிறார். 25.8.1998 மற்றும் 28.8.1998 ஆகிய தேதிகளில் மதுரையில் தொழிலாளர் நலத்துறை இணை ஆணையாளர் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தைக்கு, புதிய தமிழகம் கட்சியைச் சேர்ந்த தொழிற்சங்கம் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் இல்லை என்றபோதிலும் அந்தக் கட்சியின் சார்பில் கிருஷ்ணகாந்த் என்பவர் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டார். இந்தப் பேச்சுவார்த்தையின்போது வேலை நிறுத்தத்தை விலக்கிக்கொள்ளவும் ஊதிய உயர்வு குறித்து ஜனவரி 1999-இல் முடிவு செய்வது என்றும் அனைத்து தொழிற்சங்கங்களாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் புதிய தமிழகம் கட்சியின் சார்பில் கலந்துகொண்டவரும் கையெழுத்து இட்டுள்ளார். ஆனால், அந்த ஒப்பந்தத்திற்கு மாறாக திரும்பவும் வேலைநிறுத்தம் என்று அறிவித்து, அதைத் தொடர அவர்கள் முடிவு செய்தார்கள்.

மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்குத் தற்போது வழங்கப்பட்டுவரும் நாள் கூலி 54 ரூபாய் 68 காசு. இந்த நாள் கூலியை நாளொன்றுக்கு 150 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கிருஷ்ணசாமி கூறுகிறார். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் தனிப்பட்ட ஒரு நிறுவனம் மாத்திரம் செய்ய இயலாது. இந்தக் கூலி, அகில இந்திய அளவில் தேயிலைத் தோட்ட நிர்வாகங்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை பேசி, ஒப்பந்தம் செய்து அதன் அடிப்படையிலே நிர்ணயிக்கப் படுவது ஆகும்.

தற்போது நடைமுறையிலே உள்ள ஒப்பந்தம் டிசம்பர் 1998 வரைதான் அமலிலே இருக்கும். இன்னும் 2 மாதங்கள் முடிந்து அவர்களுடைய கூலி ஒப்பந்தம் புதிதாக நிர்ணயிக்கப்பட வுள்ளது. அவ்வாறு நிர்ணயிக்கும்போது, அதை ஏற்றுக்கொள்வ தாக அந்த நிறுவனம் ஏற்கெனவே ஒத்துக்கொண்டுவிட்ட பிறகு போராட்டத்தை நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் சொன்னார்கள், ஏதோ கொத்தடிமை முறை எல்லாம் அங்கே இருப்பதாக. 27.9.1998 அன்று வெளிவந்த 'எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் தொழிற்சங்கங்களின் தலைவர் களுடைய பேட்டி வெளியாகியிருக்கிறது.

"Leaders of various trade unions have said that the Mancholai B.B.T.C., Estate issue is politically motivated and not even a single case of bonded labour exists in the issue.

கொத்தடிமை என்ற நிலையே அங்கே இல்லை என்று சொல்லுகிறார்கள்.

Speaking to newsmen today, leaders of Anna Thozhil Sangam, National Estate Workers' Union affiliated to INTUC and AITUC said, for the past 70 years the workers had been leading a peaceful and happy life in the estate.

அதற்குப் பிறகுதான் கிருஷ்ணசாமி அங்கே போகிறார்.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

யூனியன் தலைவர்களே சொல்கிறார்கள் இந்தக் கருத்தை.

Dr. Krishnasamy had given tall promises to workers, which nobody could fulfil, they added.

They said the workers had good housing facility, power supply, six schools, hospital, police station, bus services and other facilities. If the factotry was not opened immediately, the workers would be serverely affected."

என்கின்ற அளவிற்கு யூனியனைச் சேர்ந்தவர்கள், மற்ற பல் வேறு யூனியன்களைச் சேர்ந்தவர்கள், நான் குறிப்பிட்டதைப்

போல பெரும்பான்மையான தொழிலாளர்களைக் கொண்ட யூனியனைச் சேர்ந்தவர்கள் அங்கே கொத்தடிமை முறை அறவே இல்லையென்பதை திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதற்கிடையிலேதான் கிருஷ்ணசாமி அவர்கள் அங்கே சென்று 150 ரூபாய் பெறுவதற்கான போராட்டத்தை அந்தத் தொழிலாளர்களிடத்திலே அறிவித்து, அவருடைய சங்கத்தைச் சேர்ந்தவரே கலந்து கொண்ட பேச்சுவார்த்தைக் கூட்டத்திலே ஒப்புக்கொள்ளப்பட்டதை மீறி, மீண்டும் ஒரு போராட்டத்தை நடத்தியிருக்கிறார். இது என்ன நியாயம் என்று எனக்கே தெரியவில்லை. நான் கிருஷ்ணசாமி அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இங்கே நம்முடைய தாமரைக்கனி, சந்தானம் இவர்கள் எல்லாம் குற்றஞ்சாட்டினார்கள் என்பதற்காகக் கேட்டுக்கொள்ளக்கூடாது. அவர்கள் பொதுவுடைமை என்றெல்லாம் சொன்னார்கள். மக்களுக்காகத்தான் தன்னுடைய கடமைகளை ஆற்றுவதாகச் சொன்னார். அதிலே யாருக்கும் கருத்துப் பாகுபாடு இல்லை. ஆற்றத்தான் வேண்டும். கிருஷ்ணசாமியைப் போன்ற வாலிபர்கள் ஆக்கப்பூர்வமான காரியங்களிலே ஈடுபடுவதை எல்லோரும், எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களும் நிச்சயமாக விரும்பத்தான் செய்வார்கள். ஆனால், அவருக்கு ஒன்று சொல்லுகின்றேன். அப்படி, ஆக்கப்பூர்வமான காரியங்களிலே ஈடுபடும்போது, ஒரு பழமொழி உண்டு, "அகல உழுவதைவிட ஆழ உழுவது நல்லது" என்று. எனவே, ஒரு குறிப்பிட்ட இடத்திலே, அவரவர் சக்திக்கு ஏற்றபடி, அவர் வேண்டுமானால் தமிழ்நாடு முழுவதும் தனக்கு சக்தி இருப்பதாக எண்ணிக்கொண்டு பணியாற்றலாம். இருந்தாலும்கூட, ஆழ உழ கற்றுக்கொள்ள வேண்டும். கண்டதேவி தேரா, அங்கே செல்வேன்; கோயம்புத்தூரிலே ஆலயப் பிரவேசமா, அங்கே செல்வேன்; நெல்லையிலே மாஞ்சோலையா, அங்கே செல்வேன் என்று இப்படி அகல உழ ஆரம்பிப்பது நல்லதல்ல என்பதை அவருக்கு நான் உரிமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், 3.9.1998 முதல் இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக அந்தப் பகுதியிலே பதற்றம் நிலவத் தொடங்கியது. 4.9.1998 அன்று மாஞ்சோலையில், நாலுமுக்கு, ஊத்து ஆகிய இடங்களில்

தொழிலாளர்கள் வன்முறையில் ஈடுபட்டார்கள். அன்றே தொழிற்சாலை மூடப்பட்டது. 23.10.1998 அன்று தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படும் என்று 19.10.1998 அன்று நிர்வாகம் அறிவித்ததைத் தொடர்ந்து கிருஷ்ணசாமியும், அவருடைய ஆதரவாளர் கிருஷ்ணகாந்தும் அடிக்கடி மாஞ்சோலைக்குச் சென்று பாதிரியார் பால் ரத்தினசாமி என்பவரோடு கலந்து ஆலோசனை நடத்தினார்கள். 23.10.1998 அன்று 113 தொழிலாளர்கள் வேலைக்குச் சென்றார்கள். 25.10.1998 அன்று காலை மாஞ்சோலை எஸ்டேட்டில் வேலை செய்யும் அந்தோணி முத்து என்ற தொழிலாளியை மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் ஜோஸ், சிங்கராயன் என்கிற மரியசிங்கராஜ், ஜெயபால், சாமுவேல், வேலுச்சாமி, சின்னச்சாமி, மணிவண்ணன், ராபர்ட் என்கிற தொழிலாளர்கள் அறிவாளாலும், கத்தியாலும் தாக்கியதில் அந்தோணிமுத்து என்ற அந்த வாலிபர், அதாவது வேலைக்குச் சென்றார் என்ற காரணத்திற்காக அவர் கொல்லப்பட்டு, சம்பவ இடத்திலேயே அவர் உயிர்விட்டார். இதுகுறித்து மாஞ்சோலை காவல் நிலையத்திலே வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் 3, 4, 5, 6 ஆகியோர் 26.10.1998 அன்றும், இரண்டாவது எதிரி 27.10.1998 அன்றும் கைதுசெய்யப்பட்டு, அவர்களிடமிருந்து கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. கைது செய்யப்பட்ட எதிரிகள் ஐவரும் நீதிமன்றக் காவலில் இருக்கிறார்கள். ஏழாவது எதிரி மணிவண்ணன் 11.11.1998 அன்றும், எட்டாவது எதிரி ராபர்ட் 16.11.1998 அன்றும், திருநெல்வேலி குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் சரண் அடைந்துள்ளார்கள். எதிரி-1 ஜோஸ் என்பவரைக் கைது செய்ய தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

24.10.1998 அன்று கல்லிடைக்குறிச்சியில், கிருஷ்ண சாமி, கிருஷ்ணகாந்த், பாதிரியார் பால ரத்தினசாமி ஆகியோர்ல் கொலை வழக்கின் எதிரிகள் எட்டு பேரைச் சந்தித்து மாஞ் சோலையிலே நிலவி வந்த சூழ்நிலை பற்றியும், நிர்வாகத்திற்கு ஆதரவாக உள்ள அந்தோணிமுத்தை கொலை செய்வது குறித்தும் விவாதித்தார்கள் என்றும், இதுகுறித்து அந்தோணி முத்துவின் மனைவி அந்தோணியம்மாள் கொடுத்த புகாரின் பேரில் இம்மூவரும் வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்

பட்டுள்ளார்கள். அந்தோணிமுத்துவின் கொலைக்கான சதியில் இம்மூவரது பங்கு குறித்து விசாரணை மேற்கொள்ளப் பட்டுள்ளது. Investigation இப்போது நடைபெற்றுக்கொண் டிருக்கிறது. உடனடியாக ஏன் கைது செய்யவில்லை என்று தாமரைக்கனி அவர்களும், சந்தானம் அவர்களும் இங்கே கேட்டார்கள். சந்தானம் அவர்கள் இங்கே பேசும்போது திருவாரூர் இலக்கியம் ஒன்றைச் சொன்னார்கள். ''மகன் தவறு செய்தபோது அவனையே தேர்க்காலில் வைத்த மனுநீதிச் சோழன்'' என்பதை, பூம்புகார், அதாவது சிலப்பதிகாரத்திலே வருகின்ற வரிகளை எடுத்துக்காட்டிச் சொன்னார்கள். அதைச் சொல்லியுங்கூட கண்ணகிக்கு அங்கே நீதி கிடைக்கவில்லை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்கு முன்பே அப்படிப் பட்ட கண்ணகி வந்து வாதாடுகிற அந்தக் கொலு மண்டபத்திலே தான் நெடுஞ்செழியப்பாண்டியன் அவசரப்பட்டு நீதி வழங்கி, நாடு இழந்து, மதுரையே தீக்கு இரையாகிற அளவுக்குச் சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவேதான், நெடுஞ்செழியனைப் போல கருணாநிதி அவசரப்படமாட்டான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சந்தானம் அவர்களுக்கு எடுத்துக்கூறி - பாண்டியனைச் சொல்கிறேன் - விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது; விசாரணையிலே உண்மை வருமானால் யாரும் தப்ப முடியாது என்பதை மாத்திரம் தெரிவித்து அமைகின்றேன்.

கர்நாடகாவில் தமிழர்களுக்குப் பிரச்சினை

உரை : 89 **நாள்:18.2.1999**

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பு குறித்து ஆளுங்கட்சியான தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.ஏ.எல். சுப்பிரமணியன் அவர்களும், எதிர்க் கட்சி - தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.ரங்கநாதன் அவர்களும், மார்க்சிஸ்ட் உறுப்பினர் திரு.சுப்பராயன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.மணி அவர்களும், புதிய தமிழகம் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு.வேலாயுதம் அவர்களும் அளித் துள்ள கருத்துகள், கர்நாடகத்தில் 19 தமிழர்களுக்கு வேலை கொடுத்து இரத்துச்செய்ததைக் கண்டிக்கின்ற வகையிலே அளிக்கப்பட்டுள்ள கருத்துக்களாகும். இந்த வரிசையில், அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள்- தீர்மானம் என்ன கொடுத்தாரோ அதற்கு மாறாக- கர்நாடகத்தில் ஏற்பட்டுள்ள இந்த நிலையைச் சரியென்று ஒப்புக்கொண்டு சில கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினை உருவானவுடன் ஒரு நிமிடம்கூட தாமதிக்காமல் நான் இந்தியப் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினேன் அந்தக் கடிதத்தில்,

"I wist to bring to your noice the blatant violation of the provisions of the Constitution of India and the rulings of the Supreme Court in the case of cancellation of appointment orders issued to 19 Tamils in Karnataka.

According to information received by me, the Staff Selection Commisiion of the Government of India has selected 23 persons of the basis of merit for appointment to Group C category in the Office of the Accountant-General, Karnataka. It so happened that all the persons selected by the Commission after following the proper procedure were Tamils. However, it is learnt that orders of appointment issued to 19 Tamils have since been withdrawn by the Staff Selection Commission despite the advice given by the Controller and Auditor-General to give them training in Kannada Language. You will agree that this order of the Staff training in Kannada Language. You will agree that this order of the Staff Selection Commission is not only discriminatory against Tamils but also violative of the provisions of the Constitution of India and the laws of the land.

Since the matter is very sensitive, I request you to kindly intervene in the matter immediately and instruct the officials concerned to withdraw the cancellation of appointment orders forthwith."

என்று உடனடியாக இந்தியப் பிரதமர் திரு.வாஜ்பேயி அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். இதுவரையில் எனக்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை. ஆனாலும், நம்முடைய தமிழ் நாட்டிலே இருந்து பல்வேறு கட்சிகளுடைய தலைவர்களும், தமிழர் நலனில் அக்கறைகொண்ட எல்லாத் தலைவர்களும், இந்த நிலையைச் சுட்டிக்காட்டி, கண்டித்து, மத்திய அரசு உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அரசியல் சட்டத்திற்கேற்ப நடந்து கொள்ள வேண்டும் என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

நான், இந்தச் சூழ்நிலையோடு எனக்குத் தரப்பட்டுள்ள தகவலை குறிப்பிட விரும்புகிறேன். திருமதி சுபத்ரா நாராயணன் என்பவர், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஊழியர் தேர்வாணையத்தின் பிராந்திய இயக்குநராக இருக்கிறார். தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் ஆந்திரம் ஆகிய மாநிலங்கள் இருவருடைய எல்லைக்குட்பட்டவையாகும். தற்போது கர்நாடகத்திலே துணை இயக்குநர் பதவி காலியாக உள்ளதால், இவர் அதற்கும் கூடுதல் பொறுப்பு வகித்து வருகிறார். இந்தத் தேர்வாணையம், மத்திய அரசின் கீழ்மட்டப் பணிகளுக்குத் தேர்வு நடத்தி, அந்த அந்தப் பகுதிகளில் காலியிடங்களுக்குத் தக்கவாறு ஊழியர்களைப் பணியமர்த்தி வந்தது. பின்னர் 9-12-1996இல் உச்சநீதிமன்றத்தில் சி.ஏ.எண். 4190/95-ல் ராட்னி சியாம் சிங் என்பவரால் தொடுக்கப்பட்ட மேல்முறை யீட்டின்படி இந்தத் தேர்வாணையம், ஊழியர் தேர்வுப் பட்டியலை அகில இந்திய அளவில் தயார் செய்து, அதன் அடிப்படையில், காலி இடங்களில் பணியமர்த்தல் செய்யப்பட வேண்டுமென்று வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில், 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு, உச்சநீதிமன்ற ஆணையைக் கடைப்பிடிக்கத் தொடங்கியது. இம்முறையில், ஒரு பகுதியில், அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் போதிய எண்ணிக்கையில், மதிப்பெண் அடிப்படையில் கிடைக்காத நிலையில் அடுத்த பகுதியில் தேர்வு செய்யப்பட்ட நபர்களை நியமனம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

உதாரணமாக சமீபத்தில், இந்தத் தேர்வாணையத்தால் தேர்ந்து எடுக்கப்பட்ட நபர்களில் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள், 76 பேர்கள் மட்டுமே தகுதி பெற்றவர்களாக உள்ளனர். ஆகையால் மீதமுள்ள 104 காலியிடங்களுக்கு தமிழகப் பகுதியிலே இருந்து தேர்வு செய்யப்பட்ட நபர்கள் மதிப்பெண் அடிப்படையில் கர்நாடகத்திற்கும், 63 நபர்கள் புதுடெல்லிக்கும், 39 நபர்கள் உத்திரப் பிரதேசத்திற்கும், 29 நபர்கள் மேற்கு வங்கத்திற்கும், 179 நபர்கள் மராட்டியத்திற்கும், 5 நபர்கள் அந்தமானிற்கும், 7 நபர்கள் கேரளத்திற்கும் அனுப்பப்பட்டு, அவர்கள் பணியமர்ந்து வேலை செய்து வருகிறார்கள்.

கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்ட 104 நபர்களில் பொதுக் கணக்குத் துறைக்கு அனுப்பப்பட்ட 23 நபர்களைத் தவிர மற்றவர்கள் பிற துறைகளில் சேர்ந்து பணி செய்து வருகின்றார்கள். கர்நாடக பொதுக்கணக்குத் துறையின் ஊழியர்கள் சங்கத்தில் மட்டும் பிற தமிழ் எதிர்ப்பு இயக்கங்களோடும், சில அரசியல் வாதிகளோடும் சேர்ந்து அந்த 23 நபர்களைப் பணியில் சேர விடாமல் மிரட்டியும், வேலை நிறுத்தப் போராட்டத்திலே கடந்த சுமார் 35 நாட்களாக ஈடுபட்டும் வருகின்றார்கள். இவ்வாறு கர்நாடகத்தில் தமிழர்களை அதிக அளவில் வேலையில் சேர்த்தமைக்குத் தமிழ்நாட்டைச் சேர்ந்தவரும், தமிழக பிராந்திய இயக்குநராகவும் உள்ள திருமதி சுபத்ராதான் காரணம் என்று சந்தேகப்பட்டு, திருமதி சுபத்ரா பெங்களூர் சென்றிருந்தபோது, அவரைக் கடுமையாக ஏசிப்பேசியும், மிரட்டியும் உள்ளார்கள். கர்நாடக பிராந்திய அலுவலகத்தில் உள்ள ஒரு தமிழ் அதிகாரியையும் மிரட்டியுள்ளார்கள். ஆகையால், திருமதி சுபத்ரா சமீபகாலமாக, அலுவல் நிமித்தம்கூட, பெங்களூர் செல்வதை நிறுத்திக்கொண்டார். ஆகையினால், இந்த எதிர்ப்பு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தற்போது சென்னையிலே உள்ள திருமதி சுபத்ரா வீட்டிற்கு தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, அவரைத் தீர்த்துக் கட்டி விடுவதாகவும், அவருடைய மகளைக் கடத்திச் சென்று விடுவோம் என்றும் மிரட்டி வருகின்றார்கள். திருமதி சுபத்ரா அவர்கள் வீட்டினுடைய தொலைபேசியைத் தொலை தொடர்புத் துறையினர் கண்காணிப்பிலே வைக்க ஏற்பாடு செய்ய அறிவுறுத்தப்பட்டு உள்ளது. சென்னை மாநகர காவல் துறையினர் திருமதி சுபத்ரா வீட்டிற்குப் போலீஸ் பாதுகாப்பும் அளித்து வருகின்றார்கள். இது உள்ள சூழ்நிலை.

இந்த 23 நபர்களில், 19 நபர்கள் தமிழர்கள், அவர்கள் கன்னடம் கற்காதவர்கள் என்ற காரணத்திற்காக வேலையிலே அமர்த்தப்பட்ட பிறகு, விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, இந்திய ஒருமைப்பாட்டிற்கும், அரசமைப்புச் சட்டத்திற்கும், அண்மையிலே 1996ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கும் முரணானது என்பதைத்

தான் நானும் சுட்டிக்காட்டி இருக்கின்றேன்; பிரதமருக்கும் அதை அறிவித்து இருக்கின்றேன். ஆனால், இந்தத் துறையினுடைய மத்திய அமைச்சர் அவர்கள், இந்தச் செயலுக்கு நியாயம் கற்பித்து ஓர் அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்கள். 'அவர்களுக்கு எல்லாம் வேலை தேவைப்படுகிறது' என்பது போல ஒரு கூற்று வெளியாகியிருக்கிறது.

மாண்புமிகு கர்நாடகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 'அவர்கள் எல்லாம் தமிழகத்திற்கு அனுப்பப்படுவார்கள்' என்று சொல்லியிருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். நான் எப்போதுமே காவிரி பிரச்சினையிலேகூட - இது- 19 தமிழர்களுடைய பிரச்சினை. காவிரிப் பிரச்சினை; தமிழகத்திலே உள்ள பல கோடி தமிழர்களுடைய பிரச்சினை, விவசாயி களுடைய பிரச்சினை. அதிலேகூட - நம்முடைய மாநில மக்களுக்கும் கர்நாடக மாநில மக்களுக்கும் இடையிலே ஓர் அமளி மூளக்கூடாது. கலவரம் ஏற்படக்கூடாது. அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை நாம்தான் அனுபவிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்படுவோம் என்பனவற்றை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதே நிலையைத்தான் இந்தப் பிரச்சினையிலேயும் எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இருந்தாலும், தமிழர்களுடைய உரிமை, அவர்கள் தமிழ் மொழி தெரிந்தவர்கள் என்ற காரணத்திற்காக மட்டும் மறுக்கப் பட்டிருப்பது ஏற்கக்கூடிய ஒன்றல்ல. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, ஒரு பணிக்குச் சேர்ந்த பிறகுகூட, அந்த மாநில மொழியைக் கற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பும் வசதியும் அளிக்கப்படுகிறது; சட்ட ரீதியாக அந்த நிலை இருந்து வருகிறது. நம்முடைய மாநிலத்திலே வந்து சேருகின்ற I.A.S. அதிகாரிகள், பலபேர், அவர்கள் Collector களாக இருந்தாலும், வேறு அலுவலகத்தில் சேர்ந்தாலும்கூட, வந்தபிறகு, நம்முடைய தமிழ் மொழியைக் கற்றுக்கொண்டு, இப்போது அந்தத் தமிழ் மொழியை மழலை மொழியிலே பேசுகின்ற காட்சியை எல்லாம் நாம் பார்த்துக் கொண்டிருக் கிறோம். அப்படியிருக்கும்போது, வேலையிலே சேர்ந்த பிறகு, சேர்ந்த தமிழர்களை விலக்கியிருப்பது

உள்ளபடியே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று அல்ல. அதற்காக நாம் மிக அதிகமாக உணர்ச்சிவசப்படக்கூடாது. தமிழர்கள் என்ற உணர்வு இருக்க வேண்டும். உணர்வுக்கும் உணர்ச்சிக்கும் இருக்கின்ற வித்தியாசத்தையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு, இதுபற்றி தொடர்ந்து மத்திய அரசோடும், தேவையானால் கர்நாடக மாநில முதலமைச்சரோடும், தொடர்புகொண்டு மேலும் முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை எடுத்துக்கூறி, இந்த அளவுக்கு இந்த விவாதம் நடைபெற்றிருப்பதால், இதுவே போதும், இது மத்திய அரசினுடைய கவனத்திற்கும், கர்நாடக அரசினுடைய கவனத்திற்கும் நிச்சயமாகச் செல்லும் என்ற நம்பிக்கையோடு அமைகின்றேன்.

விஷச் சாராயப் பிரச்சினை

உரை : 90 **நாள் : 20.02.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஷச் சாராயம் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு பற்றி தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பெரியசாமி அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் மாண்புமிகு லத்தீப் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் மாண்புமிகு தாமரைக்கனி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு ஐ. கணேசன் அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு சந்தானம் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் மாண்புமிகு வேலாயுதன் அவர்களும், ஜனதாதளக் கட்சியின் சார்பில் மாண்புமிகு வெங்கடசாமி அவர்களும், புதிய தமிழகம் சார்பில் மாண்புமிகு டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், தமிழ் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு பேராசிரியர் தீரன் அவர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கின்றார்கள்.

இன்றைய விவாதம் மிகக் கடுமையான முறையில் நீண்ட நேரம் நடைபெற்றிருக்கின்றது. இதிலிருந்தே கள்ளச் சாராயம் தமிழகத்திலே துளியும் தலைகாட்டக்கூடாது என்பதில் மாண்புமிகு உறுப்பினர்கள் எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் கொண்டிருக்கிறார்கள் என்பதை நிச்சயமாக உணர முடிகின்றது. குறிப்பாக, இந்தப் பிரச்சினை இன்றைக்கு எழுந்ததற்குக் காரணம், 9-2-1999 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில், புட்லூர் கிராமத்திலே உள்ள காலனியில் நடைபெற்ற ஒரு சம்பவம்தான்.

நித்தியானந்தம் என்பவருடைய மறைவுக்காக நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சிக்குச் சென்றவர்கள் போதைப் பொருள் கலக்கப்பட்ட சாராயத்தை அருந்தினார்கள். அதிலே இரண்டு பெண்கள் உள்பட 12 பேர் இறந்தார்கள் என்பதுதான் செய்தி, உண்மையான நிலவரமும் அதுதான். இந்தச் சாராயத்தை விற்றவர்கள், குண்டு என்கின்ற ஜெயராமன், மற்றொருவர் செல்வம் என்பவர். மறுநாள் 10-2-1999 அன்று செல்வம் கைது செய்யப்பட்டார், குண்டு என்கின்ற ஜெயராமன் 11-2-1999 அன்று கைது செய்யப்பட்டார். அவர்கள் அந்தப் போதைப் பொருளை மேலும் போதை தரக்கூடிய அளவுக்கு மற்றொரு இரசாயனப் பொருளை அங்கே உள்ள ஃபிஷர் இனார்கானிக்ஸ் அண்டு அரோமேடிக் லிமிடெட் என்ற நிறுவனத்திலே வாங்கியவர்கள். இந்த நிறுவனத்திலேயிருந்து அதைத் திருடி விற்றவர்கள் செந்தில்முருகன், குமாரசாமி, டில்லிபாபு, அந்த நிறுவனத்தினுடைய காவலாளியாக இருந்த ஏழுமலை. இவர்களும் அடுத்தடுத்த நாட்களில் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் நிறுவனத்திடமிருந்து திருடிய பொருள், 'மெத்தனால்' என்ற ஒரு பொருளாகும். அது அதிகமான போதையைத் தரக்கூடியது, ஆனால் அது சாராயத்திற்காகப் பயன்படுத்தக்கூடியது அல்ல. சாராயத்திலே அந்தப் பொருளைக் கலந்து மேலும் அதிக போதையைத் தருகின்ற அளவுக்கு அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அப்படித் திருடப்பட்ட நாள் 8-2-1999. அந்த மெத்தனாலை 300 ரூபாய்க்கு வாங்கி, இந்த குண்டு ஜெயராமனும், செல்வமும் தண்ணீரிலே கலந்து, தண்ணீரிலே கலந்த பிறகு, அதை சாராயத்தோடு சேர்த்து விற்றிருக்கிறார்கள். காக்கலூர் என்ற இடத்திலே உள்ள அந்தத் தொழிற்சாலை இந்தியா முழுவதும் இருக்கின்ற மெத்தனால் என்ற இரசாயனப் பொருளை வாங்கிச் சுத்தம் செய்து, கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் சோதனைக் கூடங்களுக்காக விற்று வருகின்ற ஒரு நிறுவனம் ஆகும். ஆனால், சோதனைக் கூடங்களுக்காக மாத்திரம் பயன்படுத்தக்கூடிய அந்தக் கடுமையான இரசாயனப் பொருளை இவர்கள் வாங்கி விற்றார்கள். விற்றதை இவர்கள் தண்ணீரோடு கலந்து, சாராயத்தோடு இணைத்து விற்றதன் காரணமாக அதைக் குடித்தவர்களிலே 2 பெண்கள் உட்பட 12 பேர் மரணமுற்று இருக்கின்றார்கள். இந்த குண்டு ஜெயராமன், செல்வம், செந்தில்முருகன், குமாரசாமி, டில்லிபாபு ஆகியோர்

16-2-1999 அன்று குண்டர் சட்டத்திலே காவலிலே வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

காவல்துறைமீதும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இல்லை. மதுவிலக்கு அமலாக்கப் பிரிவிலே உள்ள Additional S.P., Dy. S.P., Inspector, இரண்டு Sub-Inspector-கள் உட்பட 11 பேர் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். காவலர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவர்களைத் தற்காலிகப் பணிநீக்கம் மாத்திரம் செய்தால் போதாது, dismiss செய்ய வேண்டும் என்றெல்லாம் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே மிக ஆவேசமாகக் குறிப்பிட்டிருக் கின்றார்கள். ஆனால், இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்கும்போது அவர்களுக்கு மேல்மட்டத்திலே எத்தனையோ பாதுகாப்புகள் வந்து விடுகின்றன. குறிப்பாக, உங்களுக்குத் தெரியும், சித்ரா தற்கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். பத்திரிகையிலே செய்தி வந்தது. இந்த அரசு அந்த நடவடிக்கையை எடுத்தது காவல்துறை மூலமாக. ஆனால், அப்படி வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் T.A.T. நிர்வாகத் தீர்ப்பாயத்திற்குச் சென்று முறையிட்டு தடை பெற்றிருக் கின்றார்கள். உடனடியாக அவர்களுக்குத் தடை வாங்குவதற்கான இலகுவான வழிகள் எல்லாம் இருக்கின்றன. அப்படிப்பட்ட மன்றங்கள் இருக்கின்றன. எனவே, இங்கு தடை பெற்றுவிடுகின்றார்கள். தற்காலிகப் பணி நீக்கம் செய்யப் பட்டதற்கே தடை பெற்றுவிடுகின்றார்கள் என்றால், அறவே வேலையிலிருந்து நீக்கப்பட்டால், எத்தகைய முறைகளைக் கையாளுவார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியாது. இருந்தாலும்கூட, அப்படி அவர்கள் பெற்றுள்ள தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்திலே இந்த அரசு மேல் முறையீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், அதிகாரிகளை எல்லாம் உடனடியாக நடவடிக்கை எடுத்து வேலையைவிட்டே நீக்கி விடுவது என்பது சொல்வதற்குச் சுலபமாக இருக்கும். ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலே உள்ள சிக்கல்களை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒன்றை நான் நினைவில் கொள்கின்றேன். அது எனக்குத் தெரியாதது அல்ல. எல்லா உறுப்பினர்களுமே, இந்தக் கருத்தின் அடிப்படையிலே பேசிய எல்லா உறுப்பினர்களுமே முக்கியமாகச் சுட்டிக்காட்டிய இத்தகைய முறைகேடான காரியங்களுக்கு, தவறான காரியங்களுக்கு, மனிதர்களுடைய சாவுக்குக் காரணமாக இருக்கின்ற இத்தகைய விஷச் சாராயத்தை ஆங்காங்கு பரப்புவதற்கு, விற்பதற்கு காவல் துறையிலே உள்ள சிலரும் உடந்தையாக இருக்கிறார்கள் என்ற அந்தக் கருத்தை நான் மறுக்கவில்லை. இந்த அரசுக்குத் தெரிந்த உண்மைதான் அது. இருந்தாலும் அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதற்கு ஏராளமான சான்றுகள் என்னிடத்திலே உண்டு.

இங்கே சுட்டிக்காட்டப்பட்ட, தருமபுரி மாவட்டத்திலே, சூளகிரியில் 22-8-1998, 24-8-1998 இரண்டு நாட்களிலும் இதேபோன்ற, நான் இங்கே குறிப்பிட்டேனே, அந்த மெத்தனால், அதைப்போன்ற ஒன்றை விலைக்கு வாங்கி, அதைத் தண்ணீரிலே கலந்து, சாராயத்தோடு இணைத்துத் தரப்பட்டு, 46 பேர் அதிலே சாவுக்கு உள்ளானார்கள் என்பதும் தெரிந்த விஷயம். அதிலே 24 பேர் கைது செய்யப்பட்டார்கள். அந்தச் சாவு நிகழ்ச்சியில் குற்றவாளிகள் 29 பேரும், அதிலே 5 பேர் விஷச் சாராயத்தைச் சாப்பிட்டு அவர்கள் மறைந்து போய்விட்டார்கள். அவர்கள் மரணம் அடைந்ததற்குப் பிறகு, மீதமுள்ள 24 பேரும் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த 46 பேர்களுடைய விஷச்-சாராய சாவுகளுக்குக் காரணமான முக்கியமான குற்றவாளி யார், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதெல்லாம் நம்முடைய தாமரைக்கனி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் இதிலே கட்சி வித்தியாசம் எதுவும் பார்த்துப் பேசவில்லை. எல்லாக் கட்சிகளிலுமே இத்தகைய முறைகேடான காரியங்கள் நடைபெறுவதற்கு உடந்தையாக உள்ளவர்கள் உண்டு என்பதை நான் மறுக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள்மீது தயவு தாட்சண்யம் இல்லாமல் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதையும், எடுத்து வருகிறது என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

யுகயுகமாக ஆனாலும் இதை ஒழிக்கவே முடியாது என்று ஒரு கவியரங்கமே நம்முடைய கணேசன் அவர்கள் இங்கே

நடத்தினார்கள். ஓர் அழகான கவிதையை எழுதிக்கொண்டு வந்து அதை இங்கே படித்தார். பேரவைத் தலைவர் அவர்கள்கூடக் குறிப்பிட்டீர்கள். திரும்பத் திரும்ப படிக்கிறீர்களே இது என்ன புதுக்கவிதையா என்றுகூடக் கேட்டீர்கள். அந்த அளவுக்கு ஓர் அழகான கவிதையை கணேசன் இங்கே படித்தார். ஆனால், இப்படி யுகம் யுகமாக இதை அழிக்க முடியாமல் இருப்பதற்கு, இதற்கெல்லாம் யார் குரு என்பதை நம்முடைய கணேசன் அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அத்தகைய குருக்களையெல்லாம் காப்பாற்ற முற்பட்டவர்கள் யார் என்பதையும் நம்முடைய நண்பர் கணேசன் அவர்கள் சிந்தித்துப் பார்ப்பார் என்று எனக்குத் தெரியும். அவருடைய மனசாட்சிக்குத் தெரியும், என்னுடைய மனசாட்சிக்கு இதெல்லாம் தெரியும். இன்று மாத்திரமல்ல, கடந்த காலத்திலேகூட, அது காங்கிரஸ் ஆட்சியாக இருந்தாலும் சரி, அதற்குப் பிறகு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியாக இருந்தாலும் சரி, கடந்த காலத்திலே நடைபெற்ற ஆட்சியாக இருந்தாலும் சரி, எல்லா ஆட்சியிலும் இந்த மாதிரி கள்ளச்சாராயம் அருந்தி பலபேர் உயிர் விட்டுள்ள நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நம்முடைய தாமரைக்கனி அவர்களுடைய நினைவுக்கு வேண்டுமானால் சொல்கின்றேன். இப்போது ஏதோ 300 பேர் செத்துவிட்டதாகச் சொன்னார்கள், இந்த ஆட்சியில். பத்திரிகையில் போட்டு விடுவார்கள், 300 பேர் இறந்தார்கள் என்று தாமரைக்கனி சொன்னதாக. அதனால், புள்ளிவிவரம் தரவேண்டிய அவசியத்திற்கு ஆளாகிறேன்.

1991ஆம் ஆண்டு இரண்டு நிகழ்வுகள், அதிலே 10 பேர் இறந்தார்கள். 1992ஆம் ஆண்டு 15 நிகழ்வுகள்,37 பேர் இறந்தார்கள். 1993-ல் நான்கு நிகழ்வுகள், 18 பேர் இறந்தார்கள். 1994-ல் மூன்று நிகழ்வுகள், 12 பேர் இறந்தார்கள். 1995-ல் 5 நிகழ்வுகள், 55 பேர் இறந்தார்கள். 1996 மே மாதம் வரை, இந்த ஆட்சி வருவதற்கு முன்பு வரை, ஒரு நிகழ்வில் 17 பேர் இறந்தார்கள். 1996 மே மாதத்திற்குப் பிறகு, 1996 இறுதிப் பகுதியில் 3 நிகழ்வுகளில் 29 பேர், 1997-லே 7 பேர், 1998-ல் 69 பேர், 1999 பிப்ரவரி, இப்போது நடைபெற்ற நிகழ்ச்சியில் 12 பேர் இறந்திருக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும் போது, தொடர்ந்து இந்தக் காரியங்கள் நாட்டில் நடைபெற்று

வருகின்றன. சமூக விரோதச் செயல்தான் இது, இருந்தாலும்கூட இதை அறவே ஒழிப்பதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. காவல்துறையிலேயே சில இடங்களில் - நான் எல்லா காவல்துறை அதிகாரிகளையும் சொல்லமாட்டேன், காவல்துறை நண்பர்களையும் சொல்லமாட்டேன், சில இடங்களில், சில பகுதிகளில் இருக்கின்ற சில அதிகாரிகள், இதற்கென்றே - இத்தகைய கள்ளச் சாராய வியாபாரிகளுக்கும், சமூக விரோதி களுக்கும் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரியும். இருந்தாலும், நடவடிக்கை எடுப்பது என்பது, அரசு மாத்திரம் நடவடிக்கை மேற்கொள்ள முடியாது. பொது மக்களும் இதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் முதலில் நம்முடைய - உள்துறை சார்பாகவே ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டது. 25-8-1998 தேதியிட்டு அரசின் சார்பில் செய்யப்பட்ட விளம்பரத்தில் 'கள்ளச் சாராயம், போலி மது வகைகளை அறவே ஒழித்திட அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தாரீர்' என்ற வேண்டுகோளோடு, அதுபற்றி உடனடியாக உள்துறைக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். தொலைபேசி மூலமாகவோ, அஞ்சல் மூலமாகவோ தெரிவிக்கலாம். தகவல் பற்றிய விவரங்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று எல்லா பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அந்த விளம்பரத்தையொட்டி 1,187 பேரிடமிருந்து தகவல்கள் வந்தன. அவற்றில் 463 தகவல்கள் உண்மையானவைகளாகவும், 600 தகவல்கள் தவறானவை யாகவும் இருந்தன. சிலபேர் வேண்டாதவர்கள்மீது எல்லாம்கூட எழுதி போட்டிருப்பார்கள். விசாரித்ததில் 463 உண்மை, 600 தவறானவை, 124 விசாரணை அடிப்படையிலே இன்றைக்கும் உள்ளன. இது தொடர்பாக தவறாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த 818 பேர் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. உள்துறையின் சார்பாக விளம்பரம் வெளியிட்ட பிறகு, 1,187 பொது மக்களிலே உள்ளவர்கள், இதுபற்றிய தகவல்களை இரகசியமாக எழுதி, அந்த அடிப்படையிலே 818 பேர் கைது செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

அதுமாத்திரமல்ல, இங்கே குறிப்பிட்டார்கள், ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்று. மதுவிலக்குச் சட்டத்தினுடைய பிரிவுகள் 4, 5, 7 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மதுவிலக்குக் குற்றங்களுக்கு கடுங்காவல் சிறைத் தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் அளிக்கும் வகையில் சட்டத் திருத்தம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருப்பதை நாம் யாரும் மறந்து விடுவதற்கில்லை. இதன் தொடர்பாக, பிறகு பிப்ரவரி 11ஆம் தேதி திருச்சியில் பத்திரிகையாளர்களுடைய பேட்டியிலே அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் அளிக்கும்போது, ஒன்றைச் சொன்னேன். கள்ளச்சாராயம் காய்ச்சுகின்றவர்கள் பற்றிய புகார்களைத் தரவேண்டுமென்று பொது மக்களைக் கேட்டுக்கொண்டு, ஏற்கெனவே அரசின் சார்பில் பல விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. போலீசார் மாத்திர மல்லாது, பொதுமக்களும் அவற்றைக் கவனித்து, அவ்வப்போது போலீசாருக்குத் தெரிவித்து, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர் களைத் தண்டிப்பதற்கு ஒத்துழைக்க வேண்டும். எந்த ஊரில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்கும் உள்ளூர் போலீசாருக்கும் தொடர்பு இருக்கிறது என்பது பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லக்கூடிய உரிமை பத்திரிகையாளர்களாகிய உங்களுக்கு இருக்கிறது. இந்தத் தகவல்களை இரகசியமாக மேலிடத்திலே உள்ள அதிகாரிகளிடமோ அல்லது என்னிடமோ சொல்லலாம். அவர்களுடைய பெயர் வெளியிடப்படமாட்டாது, இரகசியமாக வைக்கப்படும்; நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினேன். இதைப் பற்றி தினமலர் பத்திரிகையிலேகூட முதல் பக்கத்திலே செய்தி வெளியிட்டு, முதலமைச்சருடைய முகவரி, தொலைபேசி எண் - இவை எல்லாம் வெளியிடப்பட்டு, அப்படி முதலமைச்ச ருக்கு அனுப்புகிற கடிதத்தின் நகலை தங்களுக்கு அனுப்பினால், நடவடிக்கை எடுக்காவிட்டால், அவை வெளியிடப்படும் என்று கூடக் குறிப்பிட்டு இருந்தார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்று. பத்திரிகைகள் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றாகக் கருதுகின்றேன். நானும் அப்படி திருச்சியிலே அறிவித்த பிறகு 11ஆம் தேதி அறிவித்திருந்ததால், 12ஆம் தேதி அன்று 17,

13ஆம் தேதி அன்று 1, 15ஆம் தேதி 20, 16ஆம் தேதி அன்று 16, 17ஆம் தேதி 19, 18ஆம் தேதி 3, 19ஆம் தேதி 5 என்ற வகையில் மொத்தம் 81 மனுக்கள் எனக்கே வந்துள்ளன. அவை உடனுக்குடன் அமலாக்கத் துறைக்கு அனுப்பப்பட்டு, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறித்து எனக்கு அறிக்கை தர வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. அவர்களுக்கு அனுப்பப் பட்ட 81 புகார்களில் இதுவரை 13 புகார்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 9 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். 4 புகார்கள் நிரூபிக்கப்படவில்லை என்று பதில் அளிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, எல்லா வகையிலும் நாம் அந்த முயற்சிகளை மேற்கொண்டு இருக்கின்றோம். இருந்தாலும்கூட இதற்கு ஒரே வழி பூரண மதுவிலக்கு கொண்டு வருவதுதான் என்று நம்முடைய பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் பேசிய வேலாயுதன் அவர்களும் ஜனதா தளத்தின் சார்பில் பேசிய வெங்கடசாமி அவர்களும் சொன்னார்கள். இப்போது இந்த நிலைமையிலேயே கள்ளச் சாராயத்தைப்பற்றி இவ்வளவு நேரம் பேச வேண்டிய நிலையில் இருக்கிறோம். பூரண மதுவிலக்கு கொண்டு வந்துவிட்டால் 2 நாள் பேசவேண்டியதாக இருக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. பூரண மதுவிலக்கு வந்து விட்டால் கள்ளச்சாராயம் இன்னும் மேலும் பெருகுமே அல்லாமல் குறையாது. பூரண மதுவிலக்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தமிழ்நாட்டிலே இருந்பொழுது எத்தனை பேர் கைது செய்யப்பட்டார்கள், எத்தனை வழக்குகள், சாராய வழக்குகள் நாட்டில் நடைபெற்றன, தமிழகத்தில் நடைபெற்றன என்ற விவரத்தை நான் சொன்னால்கூட நீங்கள் நம்புவீர்களோ என்னவோ, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகையிலே எழுதிய ஒரு தொடர் கட்டுரையில், இலட்சக்கணக்கான வழக்குகள் - இந்த மதுவிலக்கு இருந்த காலத்திலேயே சாராய வழக்குகள் நடைபெற்றன என்பதையும், இலட்சக்கணக்கானவர்கள், 2 இலட்சம் பேர் அல்லது 3 இலட்சம் பேர் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டார்கள் ஓராண்டுக் காலத்தில் என்ற அந்த விவரங்களையும் புள்ளிவிவரத்தோடு அன்றைக்கு அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களே அப்போது

ஆனந்த விகடன் பத்திரிகையிலே தொடர் கட்டுரையிலே குறிப்பிட்டு இருக்கின்றார்கள்.

பூரண மதுவிலக்கு இருக்கின்ற குஜராத் மாநிலத்திலே மகாத்மா காந்தியடிகள் பிறந்த போர்பந்தரில், அவர் வீட்டுக்கு மிக அருகிலேயே ஒரு பெரிய tank - இங்கே சொன்னார்களே tank வைத்து சாராயத்தை விற்கிறார்கள் என்று, அதைப்போல ஒரு பெரிய tank இருந்தது போர்பந்தரில்; காந்தியடிகளுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே - ஒரு பெரிய tank வைத்து, பெட்ரோல் bunk என்று எல்லோரும் கருதக்கூடிய அளவுக்கு, எப்படி பெட்ரோல் பங்கிலே பெட்ரோல் டியூப் வழியாகத் தருகிறார்களோ, அதைப்போல சாராய விற்பனை நடைபெற்றதை நாடாளுமன்றத்திலேயே அன்னை இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது எடுத்துச்சொல்லி, இந்திரா காந்தி அவர்களும், ஆமாம், நானும் கேள்விப்பட்டேன் என்று வேதனையைத் தெரிவித்து இருக்கிறார்கள் என்று சொன்னால், பூரண மதுவிலக்கால் காந்தியடிகள் பிறந்த மாநிலத்திலேயே இந்தச் சாராயத்தை, விஷச் சாராயத்தை, கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லை என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

இரண்டு முறை சொல்லப்படுகிறது; ஒரேயடியாக மதுவிலக்கை ரத்து செய்துவிடுங்கள்; அதனால் இந்தக் கள்ளச் சாராய சாவுகள் குறையும் என்று ஒரு முறை சொல்லப்படுகிறது. பூரண மதுவிலக்கைக் கொண்டு வாருங்கள்; அதனால் இந்தச் சாவுகள் குறையும் என்று சொல்லப்படுகிறது. இந்த இரண்டு முறைக்கும் இடையிலே இருந்துதான் இந்த ஆட்சி கள்ளச் சாராயத்தையும் ஒழிக்க வேண்டும்; இந்தச் சாவுகளையும் தடுக்க வேண்டும்; அதேநேரத்திலே இப்போது இருக்கின்ற இதே அளவு மதுவிலக்குக் கொள்கையையும் பின்பற்ற வேண்டும் என்று இருக்கிறது.இதை நிறைவேற்றுவதற்கு உங்களுடைய ஒத்துழைப்புத் தேவை என்பதைக் குறிப்பிட்டு, இதற்கெல்லாம் ஒரு இலட்சம் ரூபாய் தர வேண்டுமென்று நம்முடைய தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக இங்கே உரையாற்றிய இராமன் அவர்கள் சொன்னார்கள். ஆந்திராவிலே இருந்து இங்கே சாராயம் கடத்தப்படுகிறது; அவருடைய தொகுதி

வழியாகத்தான் அது கடத்தப்படுகிறது என்பது அவருக்கும் தெரியும்; எனக்கும் நன்றாகத் தெரியும். அவர் தொகுதியைக் கடந்துதான், ஆந்திராவிலே இருந்து கள்ளச் சாராயம் தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறது. அதற்கு அவர் உடந்தை என்று நான் சொல்லவில்லை. ஆனால், அவர் தொகுதி வழியாகத்தான் வருகிறது. அதையெல்லாம் யார் யார் என்று அறிந்து எனக்கு ஒரு card மூலம் தெரிவித்தால், யாராக இருந்தாலும் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பேன் என்பதை மாத்திரம் அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதிக நிவாரணம் தரக்கூடாது என்ற கருத்து இங்கே சொல்லப்பட்டது; தாமரைக்கனி சொன்னதாக அறிகிறேன்; நம்முடைய அப்துல் லத்தீப் அவர்களும் சொன்னார்கள் நிவாரணம் தரக்கூடாது என்று. சூளகிரியைப் பொறுத்தவரையில், தருமபுரியில் நிவாரணம் தர முடியாது என்றுதான் முதலிலே சொல்லப்பட்டது. ஆனால், பிறகு பல கட்சித் தலைவர்கள் அறிக்கை வெளியிட்டு, அவர்கள் இறந்து விட்டார்கள்; அவர்களுடைய குடும்பங்கள் பரிதாபத்துக்குரிய நிலையில் இருக்கின்றன; அந்தக் குடும்பங்களுக்கு ஏதாவது வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று பல கட்சித் தலைவர்களும் சொன்ன பிறகுதான், அந்தக் குடும்பங்களுக்காக 5 இலட்சம் ரூபாய் தரப்பட்டு, 10 ஆயிரம், 5 ஆயிரம் என்று அங்கே எஞ்சியுள்ள குழந்தைகள், அவர்களுடைய மனைவிமார்கள் இவர்களுக்கு எல்லாம் ஏதாவது தொழில் நடத்திக் கொள்வதற்காகத் தரப்பட்டது. அதைப்போல இங்கே புட்லூர் விவகாரத்திலும் 2 இலட்சம் ரூபாய் பொதுப்படையாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, அவர்களுடைய தேவைக்கேற்ப உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுதான் இப்போதுள்ள நிலவரம். இதை மீறி எதையும் அறவே ஒழித்துவிடுவது என்பது இயலாத காரியம். ஆங்காங்கு தலைகாட்டுகின்ற நேரங்களிலெல்லாம் அதை ஒழிக்க முற்படுவது, அழிக்க முற்படுவது போன்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால் அறவே ஒழிக்கின்ற அளவிற்கு நாம் மக்களைத் தயார்படுத்துவதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை என்பதை மாத்திரம் எடுத்துக்கூறி, இந்த அளவில் இந்தக் கருத்துக்களுக்கு விளக்கமளித்து அமைகின்றேன், நன்றி, வணக்கம்.

மலேசியாவில் பாதிக்கப்பட்ட தமிழர்கள்

உரை : 91 **நாள் : 24.02.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் குறிப்பாக, மலேசியாவில் ஏமாற்றுகின்றவர்களால் ஏமாளிகளாக ஆக்கப் பட்டு, இன்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிற தமிழ் மக்களைப் பாதுகாத்து மீட்டுக்கொண்டு வரவேண்டும் என்கின்ற உள்ள உணர்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பெரியசாமி அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் கணேசன் அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் வேலாயுதன் அவர்களும் மற்றும் விசேஷ அனுமதி பெற்று நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அ.தி.மு.க. சார்பில் தாமரைக்கனி அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் லத்தீப் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்களும் பல நல்ல கருத்துக்களை இங்கே எடுத்துக்கூறி, வெளிநாட்டில் அவதிப்படுகின்ற தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கின்ற உணர்வை வெளிப்படுத்தி இருக்கின்றார்கள்.

மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் மாத்திரம் அல்லாமல், வெளி மாநிலங்களில், வேறு பல நாடுகளில் இத்தகைய அல்லல் நம்முடைய தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இருந்து வருகின்றது. குறிப்பாக, நான் அண்மையில் சிங்கப்பூர் சென்றிருந்தபோது,இப்படி இடைத்தரகர்களால் மோசடிக்கு ஆளாக்கப்பட்டு, வேலை தருவதாக அவர்கள் கூறியதை நம்பி, தங்களுடைய வீடுகளை, வீட்டிலேயிருந்த நகைநட்டுகளை யெல்லாம்கூட விற்று, அந்த இடைத்தரகர்களிடத்திலே பணத்தைக்

கொடுத்து, அவர்களும் முறைப்படி இங்கிருந்து சிங்கப்பூருக்கு அவர்களை அழைத்துச் சென்று, அங்கே சென்றதும் அவர்களை நடுவீதியிலே விட்டுவிட்டு வந்து விட்டார்கள் என்றும், அப்படி நடுத்தெருவிலே இருக்கின்ற தமிழர்களைக் காணுங்கள் என்று என்னிடத்திலே அங்குள்ள தமிழர்கள் சொன்னார்கள். அதையொட்டி அங்கே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியிலேகூட நான் குறிப்பிட்டேன். இதுகுறித்து சிங்கப்பூர் அரசிடம் நான் எடுத்துச் சொல்வேன் என்று குறிப்பிட்டேன். அவ்வண்ணம், 5-1-1999 அன்று சிங்கப்பூர் பிரதமர் கோ சோக் தாங் அவர்களை, அவர்களுடைய இல்லத்தில் சந்தித்து உரையாடியபோது, இந்த வேதனையான நிலையை அவரிடத்திலே எடுத்துரைத்தேன். அவரும் அதை மிகுந்த உருக்கத்தோடு கேட்டு, அதற்கான சட்டங்கள் கொண்டுவரவேண்டுமென்று நான் சொன்னதையும் ஏற்று, மத்திய அரசோடு கலந்து, நம்முடைய மாநில அரசும் இதைத் தடுப்பதற்கான சட்டங்களைக் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் அவரிடத்திலே எடுத்துக் காட்டியதையும் அவர்களும் வரவேற்று ஆவன செய்வதாகக் குறிப்பிட்டார்கள்.

அதன் பிறகு, 14-1-1999 அன்று நான் தமிழகம் திரும்பிய பிறகு சிங்கப்பூர் பிரதமர் அவர்களுக்கு அதுகுறித்து கடிதம் எழுதினேன். அதற்கு 28-1-1999 அன்று சிங்கப்பூர் பிரதமர் எனக்கு எழுதிய பதில் கடிதத்தில், ''வேலை தருவதாக உறுதிகூறி, பிறகு அவர்களைக் கைவிட்டுவிடும் மனசாட்சியற்ற Agent-களினால் உருவாக்கப்படும் பிரச்சினை பற்றி இங்குள்ள மனிதவள அமைச்சகத்தோடு நான் கலந்து பேசினேன். தமிழ்நாட்டில் வேலை தேடுவோரிடையே அவர்கள் எப்படித் தவறான வழிகளில் இட்டுச் செல்லப்படுகிறார்கள் என்பதைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.'' தமிழ்நாட்டிலே அந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்று அவர் குறிப்பிடுகிறார். தனது பங்கிற்கு சிங்கப்பூர் அரசு பொறுப்பில்லாத இதுபோன்ற செயல்களைத் தடுத்து நிறுத்த பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும், மேலும் அந்நடவடிக்கைகள் தொடரும் என்றும் அந்தக் கடிதத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

உதாரணமாக, வேலை தேடித்தரும் எல்லா நிறுவனங்களும் உரிமம் பெற்றாக வேண்டும். தவறான வழியிலே செல்லும் நிறுவனங்களுடைய உரிமங்கள் இரத்து செய்யப்படும். வெளிநாட்டிலேயிருந்து வேலை தேடி வருபவர்களுக்கு வேலை வாய்ப்பு பற்றிய தகவல், வேலை பெறுவதற்கு அவர்கள் யாரோடு தொடர்பு கொள்ள வேண்டும், யாருடைய உதவியை நாட வேண்டும் போன்றவற்றைப் பற்றி அறிவுரைகள் வழங்கப் படுகின்றன, அதுவும் தொடரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரியான நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர் வேலை தேடி வருவோர் கைவிடப்படுவது குறைந்து இருக்கிறது எங்கள் நாட்டில் என்றும் அவர் எனக்கு எழுதி யிருக்கிறார். ஆனால் மலேசியா நாட்டை பொறுத்த வரையில் இங்கே குறிப்பிடப்பட்ட இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நீண்ட காலத்திற்கு முன்பே மலேசியா நாடு ஒரு சட்டத்தை இயற்றி இப்படி Visa போன்ற உரிய அனுமதிகள் பெறாமல் அங்கே வந்து உலவிக் கொண்டிருக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று அறிவித்த பிறகும்கூட, இடைத்தரகர்களுடைய ஏமாற்று மொழிகளிலே மயங்கி வேலையில்லாத வேதனையிலே வாடிக்கொண்டிருக்கிற இங்குள்ள தமிழ் இளைஞர்கள், தமிழ் மக்கள் அவர்களை நம்பிச் சென்று இன்னமும் துயரத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். மலேசிய நாட்டிலே இப்படி அங்கேயுள்ள அகதி முகாம்களில் சிறைப்பட்டவர்களைப் போல தமிழக மக்கள் வாடிக் கொண்டிருக்கிற செய்தி பத்திரிகைகளில் வெளிவந்தது. குறிப்பாக, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'தீக்கதிர்' பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்தது. நான் பத்திரிகைகள் அனைத்தையும் தவறாமல் படிக்கின்ற காரணத்தால் உடனடியாக இதுகுறித்து நம்முடைய மத்திய அரசினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் திரு. ஜஸ்வந்த்சிங் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தில் 'மலேசியாவிலுள்ள தமிழர்களைப் பற்றி ஒரு முக்கியமான பிரச்சினையை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். மலேசியாவிலே அகதிகள் முகாமில் தமிழர்கள் துன்புறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. நிறைய பணத்தை வசூல் செய்து கொண்டு வேலை வாங்கித் தருவதாக

உண்மைக்கு மாறான நம்பிக்கைகளை ஏற்படுத்தி இந்தியர்கள், அதிலும் குறிப்பாக தமிழர்கள் பலர் Agent-களால் ஏமாற்றப் படுகிறார்கள். மலேசியாவிற்குச் சென்றதும் அந்த அப்பாவித் தமிழர்கள் அவர்கள் கையிலே பணி அனுமதிச் சீட்டு Work permit எதுவும் இல்லாததால் வேலை எதையும் பெறமுடியாமல் அவதிக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இந்தத் தமிழர்கள் அகதிகள் முகாம்களில் மாதக்கணக்கில் அவர்களிடம் செல்லுபடியாகும் ஆவணங்கள் எதுவும் இல்லாத காரணத்தால் துன்புறுகின்றார்கள். மலேசியாவிலே உள்ள அகதிகள் முகாம்களில் ஏராளமான இந்தியர்கள், குறிப்பாகத் தமிழர்கள் இதுபோல வாடிக்கொண்டிருக்கிறார்கள்.இந்தப் பிரச்சினையை உடனடியாக மலேசிய அரசின் கவனத்திற்கு எடுத்துச்சென்று தமிழர்களை விடுவித்து விரைவில் அவர்கள் தாயகம் திரும்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்களானால் நான் மிகுந்த நன்றி செலுத்துவேன், என்று வெளியுறவு அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். அதற்கு உரிய பதில் இன்னும் எதுவும் வரவில்லை.

அதைப்போலவே, இதேபோன்ற ஒரு கடிதம் இந்திய அரசின் வெளியுறவுத் துறைச் செயலாளருக்கும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது. வெளிநாட்டிலே துன்பத்திற்கு இவர்களை எல்லாம் உள்ளாக்குகிற இடைத்தரகர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு காவல் துறை இயக்குநருக்கும் D.G.P.-க்கும் சொல்லப்பட்டிருக்கிறது. சிங்கப்பூர், மலேசியாவிற்கு வேலை தேடிச் செல்வதைப் போலவே, துபாய் போன்ற அரபு நாடுகளுக்குச் செல்லுகின்ற தமிழர்கள் பலரும் அவதிக்கு ஆளாகிறார்கள். நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல அவர்களுக்கு எல்லாம் Visa வாங்கித் தருவதாகவும், அல்லது இருப்பதாகவும் அல்லது அங்கே வேலை கிடைக்கும், அங்கே சென்றால் குபேரர்களாகிவிடலாம் என்றெல்லாம் ஏமாற்று மொழிகளைச் சொல்லி அவர்களையும் அங்கே கொண்டுபோய் துபாயிலும் தமிழர்கள் பலர் இப்போது அவதிக்குள்ளாகியிருக்கின்றார்கள் என்ற செய்திகளும் அடிக்கடி வந்து கொண்டிருக்கின்றன.

ஏதோ Collector வேலைக்குப் போவதைப் போல போய் அங்கே Conductor வேலைகூட கிடைக்காத சூழ்நிலையிலே அவதிப் பட்டுக்கொண்டிருக்கிற தமிழர்களைப் பற்றி ஏராளமான செய்திகள் உண்டு.

அதைப்போல, வெளிநாடுகளில் மாத்திரமல்ல, நம்முடைய இந்தியாவிலே வெளி மாநிலத்திலே கர்நாடகத்திலே 19 தமிழர்களுடைய கதி என்ன ஆயிற்று என்பது உங்களுக் கெல்லாம் தெரியும். தமிழன் வெளி மாநிலத்திலும் கஷ்டப் படுகிறான்; வெளி நாட்டிலும் இன்றைக்குக் கஷ்டப்படுகிறான். அன்றைக்குக்கூட அவர்களுக்கெல்லாம் வேலை கிடைத்து விட்டது என்று நம்முடைய நண்பர் திரு. தாமரைக்கனி சொன்னார். இன்று காலையிலே நான் அது பற்றி தொலைபேசி வாயிலாக விசாரித்தேன். இதுவரையிலே யாருக்கும் அங்கே எந்த மாற்று வேலையும் தரப்படவில்லை, அந்த அலுவலகத்திலே கூட இந்த 19 பேருக்கும் வேலை தரப்படவில்லை. நம்முடைய அ.தி.மு.க. அமைச்சர் இருக்கின்ற அந்த இலாக்காவின் மூலமாக இடப்பட்டிருந்த அந்தக் கட்டளை திரும்பப் பெறப்படவில்லை. அந்த 19 பேரும் வேலையில்லாமல்தான் கர்நாடக மாநிலத்திலே இன்றைக்கு இருக்கிறார்கள்.

அதுபோலவே இன்னொரு பிரச்சினை. அடிக்கடி நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள்கூட அறிக்கைகள் மூலமாக, அந்த வேதனையை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். நானும் பலமுறை கர்நாடக அரசுக்கு அதைப் பற்றி எழுதியிருக்கின்றேன். உங்களுக்கு ஞாபகம் இருக்கும் என்று நான் நம்புகின்றேன். 19-8-1997 அன்று கர்நாடக முதலமைச்சர் அவர்கள் வீரப்பனைத் தேடிப்பிடிக்கின்ற விஷயமாக இங்கே வந்து என்னிடத்திலே விவாதித்தபோதுகூட கர்நாடக சிறையிலே அடைத்து வைக்கப்பட்டிருக்கின்ற 12 பெண்கள் உட்பட 48 தமிழர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நான் நேரிடையாகவே கேட்டுக்கொண்டேன். உடனடியாக ஆவன செய்வதாக அவரும் சொல்லிவிட்டுச் சென்றார். அவர்களை தடா கைதிகளாக தேவையில்லாமல் அங்கே அடைத்து வைத்து

வேதனைப்படுத்துகின்றார்கள், அவர்களை விடுவிக்க வேண்டுமென்று கர்நாடக முதலமைச்சருக்கு 9-10-1997-ல் ஒரு கடிதம், 21-11-1998-ல் ஒரு கடிதம், 11-1-1999-ல் ஒரு கடிதம், இறுதியாக நேற்றையதினம் 23-2-1999-ல் கடிதம்; இத்தனை நேர்முகக் கடிதங்களை எழுதியிருக்கின்றேன். இதுவரையில் அவர்கள் அங்கேயிருந்து விடுதலை செய்யப்படவில்லை. எந்தக் குற்றமும் இல்லாமல், அந்தக் காட்டுப் பகுதியிலே அவர்கள் கிடைத்தார்கள், கர்நாடகப் போலீசார் அவர்களைக் கைது செய்தார்கள் என்ற ஒன்றைத் தவிர, பல ஆண்டுகளாக, அவர்கள் அங்கே சிறையிலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களையும் விடுவிக்கின்ற வழி தெரியவில்லை.

அதைப்போலவே தமிழ்நாட்டிலே மீன் பிடிக்கின்ற தமிழர்கள் இருக்கின்றார்களே அவர்களும் பக்கத்திலே இருக்கின்ற இலங்கை அரசால், இலங்கை இராணுவத்தால் எந்த அளவிற்கு அவதிப்படுகிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே நம்மால் முடியவில்லை. அவர்கள் தாக்கப்படுகிறார்கள். கொல்லப்படுகிறார்கள், அவர்களது படகுகள் உடைக்கப் படுகின்றன. எனவே, தமிழன் எந்தத் திசைக்குச் சென்றாலும், அவன் சிங்கப்பூருக்குச் சென்றாலும், மலேசியாவுக்குச் சென்றாலும், துபாய்க்குச் சென்றாலும், கர்நாடகத்திலே சிக்கிக் கொண்டாலும், கடலிலே மீன் பிடிக்கச் சென்றாலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் துபாய் இங்கேயெல்லாம் தமிழன் வேதனைப்படுகின்ற ஒரு சூழ்நிலைதான் இப்போது இருக்கிறது. அதற்காக இந்த அரசு எவ்வளவோ முயற்சி எடுத்தும்கூட அந்த முயற்சிகள் மதிப்பற்று போகின்றனவா அல்லது பாரதி பாடியதைப் போல, ''விதியே என் தமிழ் ஜாதியை என்ன செய்ய நினைத்தாய்'' என்று பாரதி பாடினானே அதைப்போல நாமும் பாடிக்கொண்டே நம்முடைய காலத்தை முடித்துவிடுவதா என்கின்ற வேதனையான வினா, நெஞ்சை அழுத்திக்கொண்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மலேசியா அரசும், சிங்கப்பூர் அரசும் தமிழக சட்டமன்றத்திலே இங்கே, எழுப்பிய இந்தக் குரலை மதிக்கும் என்று நான் நம்புகின்றேன். அவர்கள்மீது நாம் குற்றம் சொல்வதற்கு எதுவுமில்லை. இங்கே இருக்கின்ற தமிழன், தமிழனை ஏமாற்றி அழைத்துச் செல்லுகின்றான். ஏமாளிகள் ஏமாற்றுக்காரர்களிடத்திலே

ஏமாறிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்திலேயே சாமியார்களிடத்திலே ஏமாறுகின்ற தமிழர்கள் அவர்களுடைய விபூதி, குங்குமம் இவற்றைப் பார்த்து ஏமாறுகின்ற தமிழர்கள், அவர்களுடைய வாக்குகளைக் கேட்டு ஏமாறுகின்ற தமிழர்கள், ஒரு சாமியார் பிடிபட்டால் அதைப் பார்த்துக்கூட அடுத்த சாமியாரிடம் எச்சரிக்கையாக இல்லாத தமிழர்கள் இங்கே இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பணம் வருகின்றது. பொருள் கிடைக்கிறது, வேலைவாய்ப்பு கிடைக்கிறது. வாழ்க்கையில் நிம்மதி எற்படும் என்ற நம்பிக்கையூட்டப்படும்போது ஏமாறுவது இயல்புதான். அவர்கள் ஏமாந்தார்கள் என்பதற்காக அவர்களை நாம் தண்டிக்க முடியாது. அவர்களை நாம் விடுவித்தாக வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு அளித்தாக வேண்டும். எனவே இங்கே, இந்தச் சட்டமன்றத்திலே எழுப்பியுள்ள இந்தக் குரலோடு என்னுடைய குரலையும் இணைத்து இருக்கின்றேன். கர்நாடகத்திலே தடா கைதிகளாக சிக்கிக்கொண்டிருக்கின்ற தமிழர்களை விடுவியுங்கள் என்று நான் கர்நாடக முதலமைச்சரை மீண்டும் இந்த அவையின் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போலவே இலங்கையிலே இருக்கின்ற இராணுவத்தினர், தமிழக மீனவர்களை அடிக்கடி சுட்டுக் கொல்வதை, படகுகளைக் கைப்பற்றுவதை, உடைத்தெறிவதை விட்டொழியுங்கள் என்று இலங்கை அரசை நான் இந்த அவையிலேயிருந்து மத்திய அரசின் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, மலேசியா, சிங்கப்பூர், துபாய் போன்ற இடங்களுக்கு ஏமாற்றப்பட்டு அழைத்துச் செல்லப்படுகின்ற தமிழர்களை, அந்த ஏமாற்றத்திலிருந்து மீட்பதற்காக தமிழக அரசினுடைய காவல்துறை கடுமையாக தன்னுடைய பணியை முடுக்கிவிட்டாலும்கூட, அதற்கு ஆதரவாக சட்டங்களை இயற்றுவதற்கு, ஏனென்றால் வெளிநாட்டு தொடர்புடைய சட்டங்கள் என்ற காரணத்தினால் மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவை என்பதை நான் உணர்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு டெல்லி செல்லும்போது அங்கே இருக்கின்ற வெளிவிவகாரத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று நம்முடைய பெரியசாமியும் சொன்னார், தாமரைக்கனியும் சொன்னார். நான் இப்பொழுது எப்படி வெளி விவகாரத் துறையைப் பார்க்க முடியும்? அங்கு எத்தனையோ விவகாரங்கள் இப்போது? (சிரிப்பு) இந்த விவகாரத்திலே, நான் இந்த விவகாரத்தை எடுத்துக்கொண்டு போனால் அது எடுபடுமா, இல்லையா என்பது வேறு விஷயம். இருந்தாலும் கூட முடிந்த வரையிலே முயற்சிப்பேன். இந்த அவையிலே இன்றைக்கு எழுப்பியுள்ள இந்தக் குரலேகூட அவர்களுடைய காதுகளிலே விழும் என்று நான் நிச்சயமாக நம்புகின்றேன். இல்லாவிட்டால், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஒருநாள் வெளி மாநிலங்களிலும், வெளி நாடுகளிலும் வேதனைப்படுகின்ற தமிழர்களை விடுவிக்கின்ற நாள் என்று ஒரு நாளை நாம் எல்லாம்கூட கொண்டாடலாமா என்றுகூட யோசித்துக் கொண்டிருக்கிறேன். அதை அனைத்துக் கட்சிகளையும் கலந்து அப்படி ஒரு ஏற்பாட்டையும் அரசின் சார்பாகச் செய்யலாம் என்று நான் கருதிக் கொண்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நல்ல முறையிலே செயல்படுகின்ற ஒரு நிறுவனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதைப்பற்றியும் கவனித்து, அதைப்பின்பற்றி மற்ற நிறுவனங்கள் செயல்படுவதற்கான ஆக்கப்பூர்வமான பணிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்ற உறுதியையும் தெரிவித்து அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

பேரவைத் தலைவரைப் பற்றி

உரை : 92 நாள் : 24.03.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் காலையிலிருந்து இதுவரையில் எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும், சட்டம் பயின்ற, சட்டம் தெரிந்த மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இறுதியாக எனக்கு முன்னால் பேசிய அவை முன்னவர் பேராசிரியர் அவர்களும், அவருக்கு முன்பாக இங்கே உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் அனைத்துக் கட்சிகளினுடைய தலைவர்களும் வெளியிட்டுள்ள அந்தக் கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் நான் இணைத்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். முதலில் இன்றையதினம் இந்த அவையிலே உங்களைக் காணும்போது உங்களுடைய தோற்றத்தைப் பார்க்கும்போது நான் பல்வேறு உணர்வுகளுக்கு ஆட்படுகிறேன். என்றைக்கும் புன்னகை தவழுகின்ற முகத்தோடு, எந்தக் கடுமையான பிரச்சினைகள் வந்தாலும் அதை இலகுவாக எதிர்கொள்கின்ற திறத்தோடுஅவையை நடத்தி வருகிற தாங்கள் - தாங்கள் அப்படிக் கருதுகின்றீர்களோ இல்லையோ நான் கருதுகிறேன் - இன்றைக்கு ஒரு சிக்கலான நிலையில் அமர்ந்திருக்கிறீர்களோ என்று கருதுகிறேன்.

எப்போதுமே அதிகமாக யாருக்குச் செல்லம் கொடுக்கிறோமே, அவர்களால் ஒரு தொல்லை வருகிறபோது, அளவுக்கு மீறிய துன்பம் நம்முடைய நெஞ்சைத் துளைத்ததுண்டு. என்னுடைய அனுபவத்தைச் சொல்கிறேன். தங்களுடைய அனுபவமும் இந்த அவையைப் பொறுத்த அளவிலே சரியாக

இருக்குமென்றே நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). ஏனென்றால், இன்றைக்குத் தங்களுடைய உயர்வை எடுத்துச் சொல்லி, தங்களுடைய மேன்மையைப் புகழ்ந்து, தங்களுடைய சொல்தான் சட்டம் என்கிற அளவுக்குப் பாராட்டிப் பேசிய பல உறுப்பினர்களுக்கு, கட்சித் தலைவர்களுக்குக் கிடைக்காத சலுகையும், உரிமையும், யாருக்குத் தங்களால் கிடைத்ததோ, அவரால் இன்றையதினம் இந்த அவையில், நாட்டு மக்களுக்குத் தேவையான பல கருத்துக்களை எடுத்துக்கூறக்கூடிய நிகழ்வு நடைபெறாமல், அவரைப் பற்றிய கருத்துக்களை எடுத்துக்கூறக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதை நான் எண்ணிப்பார்த்து வருத்தப்படுகிறேன்.

அவையினுடைய ஒவ்வொரு கணமும் விலையுயர்ந்தது. மக்களுடைய வரிப்பணம் செலவழிக்கப்பட்டு, இந்த அவையினுடைய ஒவ்வொரு கணமும் நகர்ந்துகொண்டிருக் கிறது. ஆனால், இன்றைக்குக் காலை கேள்வி நேரம் முடிந்து, 10½ மணி முதல் இதுவரையில் அந்த மக்களுக்காக, அவர்களுடைய நன்மைகளுக்காக, அவர்களுடைய முன்னேற்றங்களுக்காக வடித்தெடுக்கப்பட்டு இந்த அவையின் முன்னே வைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தை, நிதிநிலை அறிக்கையைப் பற்றிய கருத்துக்களை ஆதரித்தோ, எதிர்த்தோ அல்லது அரிய யோசனைகளைக் கூறியோ வெளிப்பட்டிருக்க வேண்டிய கருத்துகளைப் பெறமுடியாத நாளாக இந்த நாள் ஆகிவிட்டது. ஆனாலும், இங்கு நாம் எல்லாம் வந்து அமர்வதற்குக் காரணமாக இருந்த ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நாளாக இந்த நாள், வேறுவகையிலே அமைந்திருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடவில்லை.

இன்று உருவாகியிருக்கிற பிரச்சினையை, சட்டப் பேரவையா, நீதிமன்றமா என்ற கேள்வியின் அடிப்படையிலே எழுந்துள்ள பிரச்சினையாக நான் எடுத்துக்கொள்ளவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களும் அப்படி எடுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றுதான் திடமாக நம்புகிறேன். இந்தப் பிரச்சினையை இலாவகமாகத் தீர்த்துவைக்க வேண்டும் முதலமைச்சர் என்று நம்முடைய எதிர்ககட்சித் தலைவர் அவர்கள் மெத்தப் பெருந்தன்மையோடு, நல்ல எண்ணத்தின்

அடிப்படையில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் பலம் வாய்ந்தவனோ, இல்லையோ, இந்தப் பிரச்சினையிலே, நீதிமன்றத்திற்கும், சட்டப்பேரவைக்கும் - நான் பலமாக உள்ளவன் அல்ல; இருந்தாலும்கூட - பாலமாக இருப்பேன் என்பதை எடுத்துக்கூறப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய பாலம் அமைக்கப்பட வேண்டும்; அமைந்திருக்கிற பாலத்தை யாரும் தகர்த்துவிடக் கூடாது; பாழாக்கிவிடக் கூடாது என்ற தூய எண்ணத்தினுடைய அடிப்படையிலேதான், இங்கே உரையாற்றிய அத்தனை தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள்.

இதே அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்வை நினைவூட்டுவது என்னுடைய கடமை. 1992ஆம் ஆண்டு மே திங்கள் 4ஆம் நாள், உயர்நீதிமன்றத்திற்கும் சட்டப் பேரவைக்கும் இடையிலே எழுந்த பிரச்சினை அல்ல; உச்சநீதிமன்றத்திற்கும், சட்டப்பேரவைக்கும் இடையிலே எழுந்த ஒரு பிரச்சினை; ஒரு பத்திரிகையின் மீது உரிமைப் பிரச்சினை வழங்கப்பட்டு, அதன் காரணமாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின்பேரில், உச்சநீதி மன்றம் வரையிலும் வழக்குச் சென்று அதைப்பற்றிய ஒரு தீர்மானம், தனித் தீர்மானமாக, அன்றைய அவையினுடைய முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கொண்டு வந்தத் தீர்மானம், அந்தத் தீர்மானத்தினுடைய வாசகங்களில் மிக முக்கியமான சில பகுதிகளை மாத்திரம் இங்கே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

‘‘தீர்மானம் 1992, மே 4, இந்திய அரசமைப்புச் சட்டம் 194-வது பிரிவின்படி, தமிழ்நாடு சட்டப் பேரவை, மற்ற பேரவைகளைப் போல தனித்தன்மை வாய்ந்த பொறுப்புகள், கடமைகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றைப் பெற்றுள்ளது. பேரவையின் உரிமைகளையும், உறுப்பினர்களின் உரிமை களையும் எல்லா வகையிலும் காக்கவேண்டிய முழுப் பொறுப்பும், கடமையும் இந்தப் பேரவைக்கு இருக்கிறது. இவற்றைப் பொறுத்தவரை, பேரவையின் உரிமைகளும் நடவடிக்கைகளும் நீதிமன்றங்கள் மற்றைய அமைப்புகள் தனி

மனிதர் ஆகியோரின் மதிப்புரிமைகளைப் பாதிக்கின்ற முறையிலும் புறக்கணிக்கின்ற வகையிலும் தவறான கருத்துக்களையும் தவறான செய்திகளையும் வெளியிட்ட ஒருசில பத்திரிகைகள் மீது சட்டமன்ற விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய தீர்ப்புகளும் வழங்கப்பட்டன. இப்படிப்பட்ட நிலையில் இந்தச் சட்டமன்றப் பேரவையின் செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர்கள் தொடுத்துள்ள வழக்கை ஒட்டி 5-5-1992 அன்று உச்ச நீதிமன்றத்தில் அவையின் நடவடிக்கை தொடர்பான சில குறிப்பிட்ட தகவல்களோடு நேரில் வருகை தரவேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டுள்ளார்கள். 27-4-1992 அன்று உச்ச நீதிமன்றம் பேரவைச் செயலாளரை பிரதிவாதியாகச் சேர்த்து நோட்டீசை அனுப்பியதாக உள்ள பிரச்சினை சில செய்தித்தாள்களில் வந்தபோது பேரவைத் தலைவர், இப்பேரவை இடும் கட்டளை மற்றும் தெரிவிக்கும் அறிவுரை ஆகியவை தவிர வேறு எதையும் பேரவைச் செயலாளர் பொருட்படுத்தத் தேவையில்லை, வேண்டியதேயில்லை என்று தீர்ப்பு அளித்துள்ளார் என்று இந்தப் பேரவை நினைவுகூர்கிறது. மேலும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை ஆகியவற்றின் செயலாளர்களோ, இந்திய மாநிலங்களின் மேலவை, பேரவை ஆகியவற்றின் செயலாளர்களோ இதுவரையில் உச்ச நீதிமன்றம் அல்லது பிற நீதிமன்றங்கள் ஆகியவற்றின் வரம்பு கடந்து நிற்கும் ஆணைகளை ஏற்று எந்த ஒரு நீதிமன்றத்திலும் ஆஜரானதில்லை என்பதை இப்பேரவை தெளிவுபடுத்துகிறது. ஆகவே, பேரவையின் ஆணைகளை நிறைவேற்றி வைக்கின்ற பேரவைச் செயலாளர், உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகவேண்டிய அவசியமேயில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது. இதேபோல, அவை உரிமை மீறல் பிரச்சினைக்காக உச்ச நீதிமன்றத்திலேயுள்ள இப்பேரவை தொடர்பான அனைத்து வழக்குகளிலும் பேரவையின் எந்த ஓர் உறுப்பினரோ, செயலாளரோ, பேரவைச் செயலக ஏனைய அதிகாரிகளோ, எவ்வித நோட்டீஸ்களையும், அழைப்பு ஆணைகளையும், பிற ஆணைகளையும், அறிவுறுத்தல்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

என்னைப் பொறுத்தவரையில், நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மாமன்றம், இன்றைக்கு அவர்கள் அளித்திருக்கின்ற அந்தத் தீர்ப்பை - நேற்று வெளிவந்த அந்தத் தீர்ப்பை அல்ல - இன்றைக்கு அறிவித்திருக்கின்ற அந்தத் தீர்ப்பை ஏதோ நமக்கு ஏற்பட்ட ஒரு தோல்வியாக யாரும் கருதிக் கொள்ளக்கூடாது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்களும் கருதிக்கொள்ள மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால், இது தோல்வியே அல்ல. தோல்வி என்றால், அன்றைக்கு, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் வரையிலே தாமரைக்கனி கூட்டத்திலே கலந்துகொள்ளக் கூடாது என்று எடுக்கப்பட்ட முடிவு ரத்துச்செய்யப்படவில்லை நீதிமன்றத்தால். எனவே, இது தோல்வி அல்ல. ஒரு சிறு சறுக்கல். நாம் சறுக்கினோமா அல்லது நீதிமன்றம் சறுக்கியதா என்ற அந்தக் கேள்விக்கும் நான் விடை காண விரும்பவில்லை. ஏதோ ஒரு சறுக்கல் எப்படியோ ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சறுக்கலின் காரணமாக, அவர் ஜாமீனிலே இன்றைக்கு வெளிவர வேண்டுமென்று நேற்றையதினம் கருத்துத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. ஆனால், நேற்று - 1¼ மணிக்கு - இந்த அவையில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து தாமரைக்கனிக்கு 15நாள் சிறைவாச தண்டனை என்கிற கருத்தை அனைவருமே ஒருமனதாக ஏற்றுக்கொண்டு, அதைத் தாங்கள் ஏற்று அவரை அந்தத் தண்டனைக்கு உரியவராக ஆக்கியது 1 மணி 15 நிமிட அளவிலே. 2½ மணி அளவிலே நடைபெற்ற நீதிமன்ற விசாரணையில் அவர்கள் அவரை வெளியிலே விட வேண்டும் என்கிற ஆணையைப் பிறப்பித்தார்கள். அந்த ஆணை 8¾ மணிக்கு மேல்தான் சிறைச்சாலைக்குச் சென்றிருக்கிறது. சிறை அதிகாரிகளுக்குச் சென்றிருப்பதாக இன்றைக்கு பத்திரிகை களிலே எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன. ஆனால், இங்கிருந்து, மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தாங்கள் இட்ட ஆணை 6 அல்லது 6½ மணி அளவிலே சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. இதிலே சிறை அதிகாரிகளுக்குப் பெரும் சங்கடம். எந்த ஆணையை

நிறைவேற்றுவது என்று. ஆனால், அவர்களைப் பொறுத்த வரையிலே முன்னாலே வந்த ஆணை 15 நாள் தண்டனை என்கின்ற ஆணை மாமன்றத்தினுடைய ஆணை. ஆனால், நீதிமன்றம் வெளியிட்டிருக்கின்ற தீர்ப்பில், 7 நாள் அவர் காவலிலே வைக்கப்பட வேண்டும் என்பதைத்தான் அவர்கள் கருதிப் பார்த்து அவருக்கு ஜாமீன் வழங்கப்பட்டிருக்கிறது. இதிலே எந்த ஆணையை நிறைவேற்றுவது என்ற சங்கடத்திற்கிடையிலே நீதிமன்றத்திற்கும் இந்த மாமன்றத்திற்கும் இடையிலே ஒரு மோதல் ஏற்பட்டு விடுமோ என்று இந்தப் பிரச்சினையை வெகு ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என்றுதான் நானும் கருதுகின்றேன்.

இங்கே பலப்பல உதாரணங்கள் எல்லாம் சொல்லப் பட்டன. இலை, துணி, தண்டவாளம் என்றெல்லாம் சொல்லப் பட்டன. இன்னும் சொல்ல வேண்டுமேயானால், நீதிமன்றம், இந்த மாமன்றங்கள் இரண்டுமே ஒரு மத்தளத்தினுடைய இரண்டு பக்கங்களைப் போன்றது. ஒரு பக்கத் தோல் கிழிந்தாலும் மத்தளம் ஒழுங்காக ஒலிக்காது. எனவே இரண்டு பக்கத் தோலையும் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்டுகின்றேன்.

தங்களைப் பொறுத்தவரையிலே எனக்கு நிறைந்த நம்பிக்கை உண்டு. பாரம்பரியம் மிக்க நீதிக் கட்சியினுடைய பெருந்தலைவர்களில் ஒருவரான பி.டி.ஆர். அவர்களுடைய மகன் மாத்திரமல்ல தாங்கள். நீதிக்கட்சியின் இன்றைய வாரிசுகளிலே ஒருவராக விளங்குபவர் தாங்கள். 'நீதிக் கட்சி'யிலே இருக்கிற, கட்சி இருக்கிறதோ, இல்லையோ, நீதி என்றைக்கும் உங்களுடைய நெஞ்சிலே நிலைத்து இருக்கும் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே இந்த அவையினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுகின்ற, உரிமையைக் காப்பாற்றுகின்ற அத்தனை பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. நான் சொல்லுகின்றேன். உங்களுக்கு விட்டுக் கொடுக்கவும் தெரியும். விட்டுப் பிடிக்கவும் தெரியும், நிறைவேற்றுங்கள் என்று கூறி விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஆடிட்டர் இராஜசேகரன் தாக்கப்பட்ட சம்பவம்

உரை : 93 நாள் : 25.03.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, Auditor இராஜசேகரன் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து இந்த அவையிலே தரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பின் மீது தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ரங்கநாதன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களும், இந்திய தேசிய லீக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் நிஜாமுதீன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்களும், எம்.ஜி.ஆர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டி. மணி அவர்களும், பாரதிய கட்சியின் சார்பில் தேசிய மாண்புமிகு வேலாயுதன் அவர்களும், ஜனதா தளம் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் வெங்கடசாமி அவர்களும், புதிய தமிழகம் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களும், தமிழ்ப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் தீரன் அவர்களும், நீண்ட நேரம் தங்களுடைய விளக்கங்களையெல்லாம் இங்கே அளித்திருக் கின்றார்கள்.

அதிலும் குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள், ஒரு நீண்ட, நெடிய வரலாற்றை, வரலாற்றுச் சம்பவங்களை இங்கே அடுக்கடுக்காக எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். மகாபாரத்தை எழுதிய வேதவியாசர் அந்த மகாபாரதச் சம்பவங்களிலே ஒரு கதாபாத்திரமாக இருந்த காரணத்தினால் அந்த மகாபாரதம் மிக அருமையாக அமைந்தது

என்று பாராட்டுவது உண்டு. அதேபோல, வேதவியாசர் எழுதிய மகாபாரதத்தைப்போல, நம்முடைய தம்பி திருநாவுக்கரசு அவர்கள், இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையில், இந்த அவையிலே உள்ளவர்களுடைய கவனத்தை மாத்திரம் அல்ல; பத்திரிகைக் காரர்கள் மாத்திரம் அவருடைய முழுப்பேச்சையும் வெளியிடுவார்களேயானால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மக்களுடைய கவனத்தையும் ஈர்க்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி). நல்ல உரையினை, தேவையான உரையினை இங்கே ஆற்றியிருக்கின்றார்கள்.

நான் இங்கே விரிவாக எதையும் பேச விரும்பவில்லை. ஆனால், இவ்வளவு பேர் பேசியதற்கிடையில் நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பில் பேசிய உறுப்பினர் மணி அவர்களுடைய கருத்துக்கு மாத்திரம் ஒரு விளக்கத்தை அளிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

நம்முடைய பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் பேசிய வேலாயுதன் அவர்கள், ''சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யட்டும்'' என்று வாஜ்பாய் தோரணையில் (சிரிப்பு) இங்கே தன்னுடைய கடமையை ஆற்றி அமர்ந்திருக்கின்றார்.

ஆனால், மணி அவர்கள் ஒரு சந்தேகத்தை எழுப்பினார்கள். ஒரு பெண்மணி இப்படிச் செய்வார் என்று நம்ப முடிகிறதா என்று கேட்டார். பெண்மணி நிச்சயமாகச் செய்யமாட்டார் (சிரிப்பு) என்பதை நான் மணி அவர்களுக்கு எடுத்துச் கூற விரும்புகின்றேன்.

ஒன்றை மாத்திரம் இங்கே நான் படித்துக் காட்ட விரும்புகிறேன். அந்தப் பெண்மணி, 'இதுபோன்ற காரியங்களில் நான் ஈடுபடக் கூடியவளா'? என்று கேட்டு, தன்னுடைய நாகரிகத்தைப் பற்றியும், கண்ணியத்தைப் பற்றியும், - அவர்கள் இப்பொழுது அறைகூவல் விட்டுக் கேட்கிறாரே, - அந்த அம்மையார் ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கை முழுவதையும் நான் படிக்க விரும்புகிறேன். சின்ன அறிக்கைதான்.

''ஒரு சில தலைவர்களுக்குக் கூட்டம் போடத் தெரியும், ஊர்வலம் நடத்தத் தெரியும். தொண்டர்களைத் தூண்டிவிட்டு வன்முறையிலே ஈடுபடச் செய்து பொதுச் சொத்துக்களுக்குச்

சேதம் விளைவிக்கவும் தெரியும். ஆனால் காவல்துறை சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டால் அவர்கள் பேசிய வசனங்கள் காற்றில் பறந்தோடி விடும். தொண்டர்களின் நினைவு மறந்து விடும். சிறையில் அசௌகரியங்களைச் சிறிது நேரம்கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல், எப்படியாவது வெளியே வந்துவிடத் தோன்றும். அதற்குத் தயாராக இடுப்பு வலி, தலை வலி, திருகு வலி, நெஞ்சு வலி என்று இதுவரையில்லாத வலிகளெல்லாம் திடீரென முளைத்துவிடும். டாக்டர் இராமதாஸைக் கைது செய்து ரிமாண்டு செய்யும்பொழுது, அதை எப்படியும் தடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் திடீரென இடுப்பு வலி, நெஞ்சு வலி என்று மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்தார். அங்கு மருத்துவப் பரிசோதனையிலே அவருக்கு ஒன்றுமில்லை என்று தெரிந்த பின்பு காவலர்கள் அவரை ரிமாண்டு செய்ய முற்பட்டவுடன், வேறு வழியின்றி சிறையிலுள்ள சௌகரியங்களைப் பொறுத்துக்கொள்ள முடியாமலும், பழகிப்போன சுகங்களை விட்டுக்கொடுக்க முடியாமலும், தன்னை உடனே விடுவிக்க ஏற்பாடு செய்யும்படி தனது மனைவி மூலமாக எனக்கு ஒரு வேண்டுகோள் அனுப்பி இருக்கிறார். டாக்டர் இராமதாஸின் மனைவி எனக்கு அளித்துள்ள வேண்டுகோளை ஏற்று, ஒரு பெண்மணியின் துயரை இன்னொரு பெண்மணியால்தான் புரிந்துகொள்ள முடியும் என்பதால் டாக்டர் இராமதாஸை உடனடியாக வேலூர் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்க, காவல்துறைக்கு ஆணைபிறப்பித்துள்ளேன்.''

இது நாகரிகம் தெரிந்த - நயத்தகு நாகரிகம் கற்ற (மேசையைத் தட்டும் ஒலி). அவரா இப்படிச் செய்திருப்பார் என்று என்னுடைய அருமை நண்பர் மணி அவர்களால் இங்கே ஐயப்பாட்டோடு வினா எழுப்பப்பட்ட, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது விடுத்த அறிக்கை. அதை மறுத்து டாக்டர் இராமதாஸ் அவர்களுடைய துணைவியார், நான் அப்படி ஒன்றும் மன்னிப்புக் கேட்கவும் இல்லை; என் கணவருக்காக வேண்டுகோள் விடுக்கவும் இல்லை என்று மறுத்து அப்பொழுது அறிக்கையும் வெளியிட்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட அபாண்டங்களைச் சொல்வதில் வெகு சமர்த்தராகத்தான் அம்மணி ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய ஆட்சியை நடத்தினார். இன்றைக்கும் அது தொடர்கிறது.

இன்றைக்குக்கூடப் பார்த்தால் 33 சதவீதம் பெண்களுக்கு எங்களுடைய கட்சியில் இடம் தந்திருக்கிறேன் என்று கூறி, அதற்கு ஒரு விழா டெல்லியில் நடப்பதாக இங்கேயுள்ள பத்திரிகைகளில் எல்லாம் செய்தி வெளியிட்டு, அதற்கு குஜ்ரால் தலைமை வகிக்கப் போகிறார் என்றும் செய்தியைப் பரப்பி, அதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி மாறன், குஜ்ரால் அவர்களுக்கு எழுதிக் கேட்க, ''அப்படி ஒரு பாராட்டு விழாவும் கிடையாது, நான் தலைமை வகிக்கவும் இல்லை, நடக்க இருப்பது மகளிர் கருத்தரங்கம். அதில் நானும் கலந்து கொள்கிறேன், வேறு சிலரும் கலந்து கொள்கிறார்கள், ஜெயலலிதாவும் கலந்து கொண்டு பேசுகிறார்; அவ்வளவுதானே தவிர, பாராட்டு விழா 33 சதவீதம் அவருடைய கட்சியில் உள்ளவர்களுக்கு தந்ததற்காக அல்ல'' என்று மாறனுக்கு விளக்கமாக குஜ்ரால் பதிலும் எழுதியிருக்கிறார்.

இவையெல்லாம் பத்திரிகைகளில் வெளிவந்தவுடன் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் விடுதலை விரும்பி இதைப்பற்றிய பிரச்சினையை இன்னும் பெரியதாக்கி செய்தியை வெளியிட்டார். இவருடைய கட்சியில் 29 மாவட்டங்களை 50 மாவட்டங்களாகப் பிரிப்பது - நிர்வாக வசதிக்காக அது இயல்பு. கட்சியின் வசதிக்காக எத்தனை மாவட்டங்களாக வேண்டு மானாலும் பிரித்துக் கொள்ளலாம். அப்படிப் பிரிக்கப்பட்ட 50 மாவட்டங்களில், 48 மாவட்டங்களில் ஆண்களே மாவட்டச் செயலாளர்கள், இரண்டே இரண்டு மாவட்டங்களில்தான் பெண்கள் மாவட்டச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கின்றார்கள், என்ற செய்தியை மாறனும், விடுதலை விரும்பியும் பத்திரிகைகளில் வெளியிட்ட பிறகு, இன்றைக்கு அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப் பட்டிருந்தாலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களையும் அந்த ஆண்களோடு கூடுதல் செயலாளர்களாக நியமிக்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

கூடுதல் செயலாளர் என்றால் - Additional Secretary - யாகப் பெண்களையும் நியமிக்கப் போகிறேன் என்று அம்மையார் அவர்கள் அறிக்கை வெளியிட்டு, தான் சொன்ன உண்மைக்கு மாறான தகவலை இன்றைக்குச் சமாளிப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இப்படித்தான் ஒவ்வொன்றையும் சமாளிப்பதற்காக - ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் என்று சொல்வார்களே - அதைப்போல, பொய்களைச் சொல்வதில்

வல்லவராக ஜெயலலிதா அம்மையார் இருக்கிறார். அதனால்தான் அவருடைய இல்லத்தில் Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டார், அவரும், திருமதி சசிகலா அவர்களும், மகாதேவனும் சேர்ந்து தாக்கினார்கள் என்ற செய்தி வெளிவந்து, பத்திரிகைகளில் அது பெரிய அளவில் பிரசுரிக்கப்பட்ட சூழ்நிலையில், இது எல்லாம் கருணாநிதியின் வேலை என்று என் மீது ஓர் பழி சுமத்தினார். அதற்கு உதாரணம் சொன்னார். ஏற்கெனவே இப்படித்தான், தாணு என்ற பெண்ணோடு நான் இருப்பதாக ஒரு படத்தை வெளியிட்டு கருணாநிதி பொய்ச் செய்தியைப் பரப்பினார் என்று சொன்னார்.

உங்களுக்கெல்லாம் நன்றாக நினைவிருக்கும் என்று கருதுகின்றேன். 27-3-1997 அன்று இதே அவையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் ஞானசேகரன், சுப்பராயன், சொக்கர், குமாரதாஸ், எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர்கள் எல்லாம், ஒரு பத்திரிகையில் வந்த அந்தப் படத்தைப்பற்றிப் பிரச்சினையை எழுப்பியபோது, நம்முடைய நண்பர் வெங்கடசாமி அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டு, அந்தப் படத்தில் இருப்பவர் தாணு அல்ல, எங்கள் ஊர் வக்கீலைப்போல இருக்கிறது என்று சொன்னவுடன், அதைப்பற்றி விபரமாக விசாரித்து நாளைக்கு அறிக்கை தருகிறேன் என்று சொன்னேனேயல்லாமல், அது தாணுதான் என்று இந்த அவையில் நான் சொல்லவும் இல்லை, ஜெயலலிதாவை அதுகுறித்துக் குற்றம் சாட்டவும் இல்லை. இதுகுறித்து மாநில அரசு விசாரித்துத் தெரிவிக்கும் என்றுதான் குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, சில பேர் பேசுகின்றபோதுகூட நான் குறுக்கிட்டு, ''இங்கே குற்றம்சாட்டப்பட்ட நிலையிலே, முன்னாள் முதல்வர், செல்வி ஜெயலலிதா குற்றவாளி என்று சொல்லப்பட்ட அந்தச் சொற்களை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஏனென்றால், எந்த ஒரு முடிவுக்கும் வருவதற்கு முன்பு, இங்கே சொல்லப்பட்ட அந்த வார்த்தைகள் சற்று அதிகமானவை என்பதை நான் நிச்சயமாக உணர்கிறேன்'' என்றுகூடக் குறிப்பிட்டேன்.

அன்றைக்கே போலீஸ் அதிகாரிகளை ஒகேனக்கலுக்கு அனுப்பி, அந்தப் படத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்ளச் சொல்லி, மறுநாள் நான் டெல்லிக்குச் செல்ல வேண்டியிருந்த காரணத்தால், அவை முன்னவர் பேராசிரியர் அவர்களிடத்திலே, போலீசார் சேகரித்த அந்த அறிக்கையைத் தந்து, அந்தச் செய்தி ஆதாரமற்றது, பத்திரிகையில் வந்த செய்தி தவறானது, அவர்கள்

வக்கீல்தான், நம்முடைய வெங்கடசாமி அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் வழக்கறிஞர்தான் என்ற விளக்கம் இந்த அவைக்கு அளிக்கப்பட்டது. இருந்தாலும் வேண்டுமென்றே அன்றைக்கு நடைபெற்ற ஒரு செய்தியை இணைத்து, இப்படித்தான் கருணாநிதி எப்போதும் என்மீது பழி சுமத்துவார் என்பதைப்போல சொல்லி, அந்த மறைவிலே இராஜசேகரன் தாக்கப்பட்ட செய்தியையும் மறைத்துவிடலாம் என்ற எண்ணத்தோடு அவர்கள் அறிக்கையை வெளியிட்டிருக் கிறார்கள்.

இங்கே இன்னொன்றையும் நான் குறிப்பிட வேண்டியவனாக இருக்கின்றேன். Auditor இராஜசேகரன் தாக்கப்பட்டது சம்பந்தமாக, ஏதோ மத்திய அரசு மாநில அரசிடத்திலே விளக்கம் கேட்டதாகவும், மாநில அரசு தந்த விளக்கம் மத்திய அரசுக்கு ஏதோ புரியாமல் போய் விட்டதாகவும், அது Vague-ஆக இருப்பதாகவும் 19ஆம் தேதி காலை வந்த ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வந்தது.

நான் பத்திரிகையினுடைய பெயரைக் குறிப்பிட விரும்ப வில்லை. தேவையும் இல்லை என்று கருதுகிறேன். ஓர் ஆங்கிலப் பத்திரிகை. எப்போதுமே அந்த ஆங்கிலப் பத்திரிகை எந்தத் தகவலானாலும், அதை நன்றாக விசாரித்து வெளியிடக்கூடிய பத்திரிகை. அதனால்தான், அதிலே வருகின்ற செய்திகளைப் பொதுமக்கள் நம்புகின்ற அளவுக்கு இருப்பதால், அந்தப் பத்திரிகையினிடத்திலே ஒரு கண்ணியமான மதிப்பை எங்களைப் போன்றவர்கள் எல்லாம் வைத்திருக்கின்றோம். ஆனால், 19ஆம் தேதி காலையிலே வந்த அந்தச் செய்தி, 18ஆம் தேதியிட்டு வரப்பெற்ற செய்தியாகும். சில தமிழ் ஏடுகளும் அதை நம்பி, அந்தச் செய்தியை மாலையிலே எடுத்து மறுபிரசுரம் செய்திருக் கின்றன. அந்தச் செய்தியிலே காணப்பட்டது தவறானது. ஏனென்றால், 19ஆம் தேதி காலையிலே அந்தப் பத்திரிகையிலே 18ஆம் தேதியிட்டு செய்தி வருகிறது. ஆனால், மத்திய அரசிடமிருந்து அதைப்பற்றி விவரம் கேட்டு Fax மூலம் வருகின்ற கடிதம் 19ஆம் தேதி மாலையில்தான், தமிழக அரசுக்கே வருகிறது. ஆனால் 19ஆம் தேதி காலையிலே ஆங்கிலப் பத்திரிகையிலே செய்தி வந்துவிட்டது. எங்களுக்கு வந்ததாகவும், நாங்கள் அளித்த பதில் மத்திய அரசுக்கு திருப்திகரமாக இல்லை என்பதாகவும்

செய்தி வந்துவிட்டது. ஆனால் Fax மூலம் மத்திய உள் துறையினுடைய கடிதம் 19ஆம் தேதி மாலைதான் தமிழக அரசுக்குக் கிடைக்கிறது. அதற்கு, 20ஆம் தேதி மாலையில் தமிழக அரசு பதில் அனுப்பியிருக்கிறது. 19ஆம் தேதி மாலையில் கடிதம் வந்து, 20ஆம் தேதி மாலையில் தமிழக அரசு பதில் அனுப்பிய அந்தச் சூழ்நிலையில், 18ஆம் தேதியே, நாங்கள் அனுப்பிய கடிதம் திருப்தியாக இல்லையென்று எப்படி மத்திய உள்துறை அலுவலகம் ஒரு செய்தியை வெளியிட்டிருக்க முடியும் என்பது வியப்புக்குரிய ஒன்று.

ரஸ்டோகி, இயக்குநர், S.B., உள்துறை அமைச்சகம், புதுடெல்லி - அவர்தான் 19ஆம் தேதி இந்தச் செய்தியை அனுப்புகின்றார். ''பூர்ணலிங்கம், முதன்மைச் செயலாளர், உள் துறை, தமிழ்நாடு அரசு, சென்னை''. அவர் என்ன குறிப்பிடுகிறார் என்றால், ''முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் வீட்டில் Auditor தாக்கப்பட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது. அந்தச் சம்பவம் பற்றிய விவரங்களையும், அதன் மீது மாநில அரசால் எடுக்கப்படும் நடவடிக்கைகளையும் உள்துறை அமைச்சருக்கும், உள்துறைச் செயலாளருக்கும் தெரிவிக்க வேண்டியிருப்பதால், உடனடியாக எங்கள் அமைச்சகத்திற்குக் கிடைக்கச் செய்யக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.'' அவ்வளவுதான்.

Explanation என்று அல்ல. விவரம்தான் கேட்டிருக் கிறார்கள். ''ஒரு செய்தி வந்திருக்கிறது. இதைப்பற்றி நாங்கள் உள்துறைச் செயலாளருக்கும், உள்துறை அமைச்சருக்கும் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எனவே, விவரத்தை எங்களுக்கு அறிவிக்க வேண்டுகிறோம். இப்படிக்கு, பி.சி. ரஸ்டோகி, இயக்குநர், S.B.'' என்று வந்திருக்கிறது.

அதற்கு, உடனடியாக நம்முடைய அரசின் சார்பில் அவர்களுக்குப் பதில் அனுப்பப்பட்டது. அந்தப் பதில் 20-3-1999 அன்று உள்துறைச் செயலாளர் மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்படுகிறது. அந்தப் பதிலில், 13-3-1999 மாலை 5¾ மணிக்கு இ-3, தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு, இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலே இருந்து, பி-4, எண் 38, வெங்கட்ராமன் தெரு, தியாகராய நகர், சென்னை - 17 என்ற விலாசத்திலே வசிக்கும் Auditor ஆர். இராஜசேகரன் என்பவர் தாக்கப்பட்டது குறித்துத் தகவல் தரப்பட்டது. இ-3,

தேனாம்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர், மாலை 6½ மணிக்கு அரசு இராயப்பேட்டை மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே, காயமடைந்த நபர் ஏற்கெனவே எழும்பூரில் உள்ள கண் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார் என்ற தகவலை அறிந்து, எழும்பூர் கண் மருத்துவமனைக்குச் சென்றார். அங்கே இராஜசேகரன் மருத்துவ அலுவலர்கள் முன்னிலையில் எழுத்து மூலமாகப் புகார் ஒன்றைக் கொடுத்தார். அப்புகாரில், Auditor இராஜசேகரன் பின்வருமாறு கூறியிருக்கிறார். இது, மாநில அரசு, மத்திய அரசுக்கு எழுதிய விவரக் கடிதம்.

''தான் ஒரு தணிக்கையாளர் என்றும், செல்வி ஜெயலலிதா மற்றும் திருமதி சசிகலா ஆகியோரின் வருமான வரிக் கணக்குகள் பற்றிய விவரங்களைத் தான் பார்த்து வந்ததாகவும், பின்னர் அந்தப் பணியிலே இருந்து விடுவிக்கப் பட்டதாகவும், 13-3-1999 அன்று, மகாதேவன் என்பவர் அழைத்ததன் பேரில் தானும், தனது சகோதரர் கணேசன் என்பவரும் சுமார் 11-00 மணி அளவுக்கு போயஸ் தோட்டத்திலே உள்ள ஜெயலலிதாவின் இல்லத்திற்குச் சென்றதாகவும், எதிர்த்திசையில் தமது காரை நிறுத்திவிட்டு, காரில் தனது சகோதரரை இருக்கக் கூறிவிட்டு, தான் மட்டும் வீட்டிற்குள் சென்றதாகவும், அங்கே திரு. சண்முகம் என்ற தணிக்கையாளர், அவர் எழுதிய கடிதம் குறித்து இவரிடம் விளக்கம் கேட்டதாகவும், அதன் பின்னர், ஜெயலலிதா உள்ளே வந்து, சண்முகத்தை வெளியே செல்லுமாறு கூறிவிட்டு, சசிகலாவை மட்டும் உள்ளே அழைத்துக்கொண்டு, பின்னர் கதவைத் தாளிட்டுவிட்டு, செல்வி ஜெயலலிதா, திருமதி சசிகலா மற்றும் மகாதேவன் ஆகியோர் தன்னை high-heel chappal கொண்டும், மற்றும் லத்தியைக் கொண்டும் மாற்றி, மாற்றி, கைகள், தொடைகள், தலை மற்றும் கண் ஆகிய இடங்களைத் தாக்கியதாகவும், தமிழில் சசிகலா சொல்லச்சொல்ல இரண்டு கடிதங்களை எழுதுமாறு பணித்து, அதிலே கையெழுத்திடச் செய்தும், பின்னர் ஜெயலலிதா அவ்வாறே ஆங்கிலத்தில் dictate செய்து, மற்றொரு கடிதத்தை எழுதச் செய்து, அதிலே, வருமான வரிக் கணக்குகளைத் தாக்கல் செய்வதில் தவறு ஏற்பட்டமைக்கு

இவர்தான் காரணம் என்று அதிலே எழுதச் செய்து, கையெழுத்துப் பெற்றதாகவும், மற்றும் இரண்டு முத்திரைத் தாள்களில் ஒன்றில் 30 லட்சமும், மற்றொன்றில் 20 இலட்சமும் இவர் பெற்றுக்கொண்டதாக எழுதி தன் கையெழுத்துக்களை அதிலே போடச் செய்ததாகவும், அந்தக் கடிதங்களில் தனது அலுவலக முத்திரை இடப்பட வேண்டுமென்று ஜெயலலிதா கட்டளை இட்டதாகவும், அந்த அலுவலக முத்திரையைத் தன்னிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கூறியதாகவும், மூவரும் இவருடைய குடும்பத்தினரின் உயிருக்கு ஆபத்தை உண்டாக்குவதாகக் கூறினார்கள் என்றும், அதன் பின்னர், மகாதேவன் மற்றும் இருவர் இவரை ஒரு காரில் இவருடைய அலுவலகத்திற்கு அந்த முத்திரையிடுவதற்காக அழைத்துச் சென்றதாகவும், போகும் வழியில் மகாதேவன் ஒரு துப்பாக்கியை எடுத்து இவரை மிரட்டியதாகவும், அலுவலகம் அன்றையதினம் பூட்டியிருந்ததாகவும், அங்கே தான் இறக்கி விடப்பட்டதாகவும், அதன் பின்னர் தன்னைத் தொடர்ந்து வந்த சகோதரர் கணேசனிடம் ஜெயலலிதா வீட்டில் தான் அடிபட்டதை விவரித்ததாகவும், தனது புகார் மனுவிலே Auditor இராஜசேகரன் தெரிவித்திருக்கிறார். எழுத்து மூலமான அந்தப் புகாரின் அடிப்படையில், தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் 13-3-1999 அன்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, குற்ற எண் 303/99-ன்கீழ் வழக்கு ஒன்று இந்திய தண்டனைச் சட்டம், பிரிவுகள் 343, 323, 324, 347, 385, 506 (2), 307 மற்றும் படைக்கலச் சட்டப் பிரிவு எண் 25 ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. வழக்குப் பதிவு செய்யப்பட்ட பின்னர், தேனாம்பேட்டை காவல் நிலைய சட்டம்- ஒழுங்குப் பிரிவு ஆய்வாளர், வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளார். புகார் மனுக் கொடுத்த Auditor இராஜசேகரன் 15-3-1999 அன்று சென்னை 22-ஆவது கூடுதல் பெருநகர மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 164-ன்கீழ் வாக்குமூலம் கொடுத்துள்ளார். குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவரான மகாதேவன் 20-3-1999 அன்று கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் வழக்கில் புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுதான் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அனுப்பியுள்ள விவரமான பதிலாகும். இதைத் தொடர்ந்து புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஏன் மூவரும் கைது செய்யப் படவில்லை என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும் ஓரிருவரைத் தவிர பெரும்பாலானோர் கேட்டிருக்கின்றார்கள். நியாயமான கேள்வியாக இருந்தாலும்கூட, புலன் விசாரணை முழுமையாக முடிவுற்ற பிறகு எடுக்கப்படவேண்டிய சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாத்திரம் தெரிவித்து, இந்த அளவில் இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறி அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

நீதிமன்றத் தீர்ப்பு

உரை : 94 நாள் : 26.03.1999

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நீதிமன்றத்திலே வழங்கப்பட்டுள்ள ஓர் இடைக்காலத் தீர்ப்பு, ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ள நிலை, இவை குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்றக் கட்சிகளின் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும் பல சட்ட நுணுக்கங்களின் அடிப்படையிலும், உச்ச நீதிமன்றத்திலேயிருந்து பல்வேறு உயர் நீதிமன்றங்கள் வரையில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையிலும் அருமையான வாதங்களை இங்கே எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்பொழுதும், அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசும்பொழுதும், நாம் தணிந்து போகிறோம்; அது கூடாது என்று ஓர் அறிவுரையை இந்த அவைக்கு அல்லது தங்களுக்கு அல்லது எங்களுக்கு அல்லது நமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

ஞானசேகரன் சொன்னார், சோப்பு, தண்ணீரில் விழுந்ததைப் போலக் கரைந்துவிட்டீர்கள் என்று. சோப்பை வெறுமனே மேலே போட்டுக்கொண்டால் அது பயன்படாது. தண்ணீரில் நனைத்துத்தான் சோப்பை உடம்பிலே தேய்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் சோப்பினால் பயன் இருக்காது.நாம் தணிந்து போகிறோம் என்றால் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஒரு வீடு கட்டும்போது அந்த வீட்டைப் பாதுகாக்க

கதவை வைக்கிறோம். கதவு இல்லாமல் வீடு கட்ட முடியாது. அந்தக் கதவுக்குப் பிடிமானமாக நிலைப்படியும் அமைக்கிறோம். அமைக்கப்பட்ட நிலைப்படியின் உயரம் குறைவாக இருந்தால் உயரமானவர்கள் உள்ளே செல்லும்போது குனிந்துதான் செல்ல வேண்டும்; என்ன செய்வது? நிலைப்படி அப்படியிருக்கிறதே! நாம் உயரமான மனிதர்களாக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே, குனிந்து செல்ல வேண்டிய நிலைமை நமக்கு ஏற்பட்டு இருக்கிறது. இல்லை நிமிர்ந்துதான் செல்வேன் என்று கிருஷ்ணசாமியைப் போல, ஞானசேகரனைப் போலச் சொன்னால் நிலையின் மீது குற்றமில்லை. நம்முடைய தலையில் நாமே அடித்துக் கொள்வோம். எனவே, சில நேரங்களில் சாதுர்யங்களும் தேவைப்படுகின்றன. சாதுர்யத்தைப் பயன்படுத்து கின்ற காரணத்தால் சுயமரியாதையை இழந்துவிட வேண்டும் என்று யாரும் கருதமாட்டார்கள்.

நாம் எடுத்துள்ள நிலை நம்முடைய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல எல்லோராலும் பாராட்டப்பட்டு இருக்கிறது. டெல்லி, கல்கத்தா, பம்பாய் போன்ற பகுதிகளிலேயிருந்து வெளிவருகின்ற ஆங்கில நாளேடுகள் அனைத்தும் நம்முடைய நிலையை ஆதரித்து எழுதியிருக்கின்றன. பெங்களூர் போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற ஏடுகளிலும் நம்முடைய நிலை ஆதரிக்கப்பட்டு இருக்கிறது. இன்றைய தினம் இந்து பத்திரிகையிலே எழுதப் பட்டுள்ள தலையங்கத்தில்கூட,

"In the present context, it is commendable that the Legislature and the Executive have shown an eagerness to avoid a confrontation with the judiciary, witness the Speaker, Mr. P.T.R. Palanivel Rajan's categorical declaration that the Assembly had no intention of crossing swords with the judiciary and the Chief Minister, Mr. M. Karunanidhi's statement that he would act as a 'bridge' between the two. Yet another positive signal is provided by the readiness with which the administration has complied with the High Court's order directing the release of Mr. Thamaraikani on bail. One hopes that this trend continues with matching indications by the judiciary, that it recognises that the

questions involved are extremely sensitive, given that they have a significant bearing on the functioning of the Constitutional scheme of things." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இந்த மாமன்றத்திற்கு ஒரு மகத்தான சிறப்பைச் சேர்க்கின்ற வகையில் நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கடமையின்பாற்பட்ட அணுகுமுறை சிறந்தது, வரவேற்கத்தக்கது என்ற நிலையும் நாடு முழுவதும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இந்தப் பிரச்சினை குறித்துச் சொல்லவேண்டுமேயானால், இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அ.இ.அ.தி.மு.க. கட்சிக்கும் இடையிலே ஏற்பட்ட பிரச்சினை என்று மாத்திரம் இதைப் பார்க்கக் கூடாது. அதுபோல மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு கட்சிகளின் சார்பில் அமர்ந்து இருக்கின்ற உறுப்பினர்கள் அடங்கிய இந்தப் பேரவைக்கும், நீதிமன்றத்திற்கும் இடையிலே ஏற்பட்டுள்ள பிரச்சினை என்று மாத்திரம் இதைக் கருதி விட்டுவிட முடியாது அல்லது நீதிபதிக்கும் இங்கே அமர்ந்திருக் கின்ற பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் இடையிலே ஏற்பட்டுள்ள பிரச்சினை என்று மாத்திரம் எடுத்துக்கொள்ள முடியாது. பிறகென்ன?

அரசமைப்பு சாசனத்தில், நீதிமன்றத்திலே உள்ள இறையாண்மை, அதனுடைய எல்லை என்ன, அதைப்போல சட்டமன்றத்திற்கு தரப்பட்டுள்ள இறையாண்மை, அதனுடைய எல்லை என்ன என்பதை அறுதியிட்டுத் தெரிந்துகொள்ள வேண்டிய ஒரு காலகட்டத்தில் இன்றைக்கு நாம் இருக்கின்றோம். எல்லாவற்றிற்கும் வழிகாட்டியாக தமிழ்நாடு இருப்பதைப்போல இந்தியா முழுமைக்கும் உள்ள நாடாளுமன்ற, சட்டமன்றங் களுக்கு வழிகாட்டியாக (மேசையைத் தட்டும் ஒலி). இப்போது தமிழ்நாட்டிலே உருவாகியிருக்கின்ற இந்தப் பிரச்சினை இருக்கும் என்று நான் நம்புகின்றேன். எனவே, உறுப்பினர்கள் எல்லாம் இங்கே எடுத்துக்காட்டியதைப்போல, அகில இந்திய அளவிலே - ஏதோ ஒரு தமிழ்நாடு சட்டமன்றம் என்ற அளவிலே எடுத்துக்கொள்ளாமல், அகில இந்திய அளவிலே - உள்ள பல்வேறு சட்டமன்றங்களினுடைய இறையாண்மையைப்பற்றி நாம் இங்கே எடுக்கின்ற முடிவுகள்தான் அவர்களையும் பாதிக்கக்

கூடிய முடிவுகளாக இருக்க முடியும். எல்லா மாநிலங்களிலு முள்ள சட்டமன்றங்கள், சட்டமன்றப் பேரவைத் தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தமிழ்நாட்டிலே எழுந்துள்ள இந்தப் பிரச்சினை குறித்து ஆழ்ந்த கவலையோடு இருக்கின்றார்கள்; விசாரித்துக் கொண்டிருக்கின்றார்கள். தங்களுக்கும் அது சம்பந்தமாக தொலைபேசி அழைப்புகள் வருகின்றன; எங்களுக்கும் வருகின்றன; எனவே, இங்கே எடுக்கும் நிலையைப் பொறுத்துத்தான் மற்ற சட்டமன்றங்கள் நடந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இதற்கான ஒரு நல்ல முடிவை எடுக்க நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு கருத்தைச் சொன்னார். உடனடியாக ஒரு தலைமை நீதிபதியை நியமிக்க முயற்சிக்க வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொன்னார். அவர் ஏதோ பழைய ஞாபகத்தில், போயஸ் கார்டனில் இருக்கிற முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வதைப்போல கேட்டுக் கொண்டார். நான் இப்போது, போயஸ் கார்டனிலே உள்ள முதலமைச்சர் அல்ல; நான் சொன்னவுடனே மத்தியிலே இருக்கிற அரசு அதை உடனே கேட்டு, 'அப்படியா' நாளைக்கே ஒரு நிரந்தரமான தலைமை நீதிபதியை நியமிக்கிறேன், என்று சொல்வதற்கு அங்கே யாரும் இல்லை. எனவே, நாமேதான் நமக்காகப் போராட வேண்டும். நமக்கான நிலையை உருவாக்க வேண்டும். சட்டமன்றத்தினுடைய இறையாண்மையைக் காப்பாற்ற நாமேதான் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நான் நிச்சயமாகச் சொல்கின்றேன், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு இந்தப் பேரவையினுடைய இறையாண்மையைக் காப்பாற்றுகின்ற வகையில் நிச்சயமாக நாம் அநாதைகளாக விடப்படமாட்டோம் என்பதை மாத்திரம் உங்களுக்கு நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இதற்குமேலாக தொடர்ந்து கருத்துக்களை நம்முடைய பேரவையினுடைய தலைவர் அவர்கள், நாம் எல்லாம் நம்பிக்கை பெறுகின்ற அளவிற்கு இங்கே கூறுவார்கள் என்று எதிர்பார்த்து, கூறவேண்டும் என்று அன்போடும், பணிவன்போடும் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காவல் துறையினர் பிரச்சினை

உரை : 95 நாள் : 5.4.1999

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு.சந்தானம் அவர்களும் எடுத்துக் கூறியது அத்தனையும் உண்மை. வழக்கமாக அரசின் சார்பில் இது போன்ற கவன ஈர்ப்புகள் வரும்போது காவல் துறைக்கு சார் பாகப் பேசுவதுதான் பெரும்பாலும் நடைபெறுகின்ற காரியம். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில் உண்மைகள் தெளி வாகத் தெரிகின்ற நேரத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்க என்றைக்குமே தவறியதல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டி யதைப் போல ஒன்றியத்தினுடைய துணைப் பெருந்தலைவர் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு.இராமமூர்த்தி அவர்கள், அந்தப் பகுதியிலே எல்லோருக்கும் தெரிந்தவர்தான். அங்கேயுள்ள Sub-Inspector-க்குப் புதியவரும் அல்ல. அவர்கள் குறிப்பிட்டதைப்போல - அவர்கள் ஒன்றிய துணைப் பெருந்தலைவர் என்று காரிலேயே பெரிய எழுத்துக்களில், கொட்டை எழுத்துக்களில் எழுதி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் அவருடைய காரை நிறுத்தி R.C. புத்தகம் இருக்கிறதா என்று கேட்டு, 'நான் அவசரமாகக் கூட்டத்திற்குச் செல்ல முயல் கின்றேன். எடுத்துவர மறந்துவிட்டேன்' என்று சொன்ன பிறகும் Sub-Inspector-க்கும் அவருக்கும் வாய்த் தகராறு முற்றி- இவர் சொல்கிறார் அவர் சட்டையைப் பிடித்து இழுத்தார் என்று; அவர் சொல்கிறார், இவர் சட்டையைப் பிடித்து இழுத்தார் என்று - அதற்குப் பிறகும் அவரை விடாமல் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்றதன் காரணமாக அங்கே ஒரு குமுறல், ஒரு

கிளர்ச்சி ஏற்பட அது காரணமாக ஆகியிருக்கிறது. இதைக் கூட்டத்திலே இருந்த ஒன்றியப் பெருந்தலைவர், தமிழ் மாநில காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த திரு.பி.கே. கிருஷ்ணன் அவர்கள் கேள்விப்பட்டவுடன் அந்தக் கூட்டத்திலே இருந்த அத்தனை பேருமே போலீஸ் நிலையத்திற்கு அவரை விடுவிப்ப தற்காக வந்திருக்கிறார்கள். அங்கு ஏற்பட்ட வாய்ப்பேச்சு அல்லது தகராறு இவற்றின் காரணமாக அவர்களிடத்திலே மிகுந்த கண்டிப்போடும், வன்முறை வார்த்தைகளைப் பயன் படுத்தியும் காவல் துறையினர், அதிலும் குறிப்பாக Sub-In-spector நடந்து கொண்டார் என்கின்ற தகவலும் எனக்கு உடனடியாகக் கிடைத்தது. அன்று இரவே நான் அங்குள்ள காவல் துறை அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்று கேட்டு எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டேன். அவரும்- சந்தானம் அவர்களும்- குறிப்பிட்டதைப் போல, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. பி.கே. கிருஷ்ணன், துணைப் பெருந்தலைவர் திரு.இராமமூர்த்தி, திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணியினுடைய ஒன்றியச் செயலாளர், அந்தப் பஞ்சாயத்து யூனியனிலே கவுன் சிலராக இருப்பவர் செந்தூர்ப்பாண்டியன், திராவிட முன் னேற்றக் கழகத்தின் பஞ்சாயத்து யூனியன் மற்றொரு கவுன்சிலர் குருவையா, நாகப்பன் என்கிற மாவட்டத் தொண்டர் படை தி.மு.க. துணை அமைப்பாளர் - அவரும் தி.மு.க. கவுன்சிலர்- அ.தி.மு.க.வைச் சேர்ந்த கவுன்சிலர் பூமிநாதன், அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒன்றியச் செயலாளர் காளிமுத்து, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த காசி ஆகியோரும் தாக்கப்பட்டிருக்கிறார்கள் பேலீசாரால். இதிலே அதிகமாகக் காயம்பட்டவர்கள், செந்தூர்ப்பாண்டியன், தமிழ்மாநில காங்கிரசைச் சேர்ந்த வெள்ளைச்சாமி, அ.தி.மு.க.-வைச் சேர்ந்த காசி, ஆகிய இந்த 3 பேர்களும் - தமிழ் மாநிலக் காங்கிரஸ், தி.மு.க, அ.தி.மு.க.- ஆகிய 3 இயக்கங்களைச் சேர்ந்தவர்கள்- பெரிதும் பாதிக்கப்படுகின்ற அளவுக்குக் காயம் பட்டிருக்கிறார்கள்.

இந்தச் செய்திகள் எல்லாம் எனக்கு உடனடியாக வந்தன. உரிய நடவடிக்கை, கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று நான் உள்துறைச் செயலாளரிடத்திலே கூறியதற்கிணங்க,

அவர் ஆணையிட்டு அந்த Sub-Inspectorஐ உடனடியாக முதலிலே அவரை - மாற்றி, கொண்டு போனார்கள். அவரைத் தற்காலிக வேலைநீக்கம் செய்து, அவர்மீது விசாரணை நடைபெறுவதற்கு ஏதுவாகச் செய்யப்பட்டிருக்கிறது. இவற்றைப்பற்றி உடனடியாக அறிந்து எனக்கு விவரம் தெரிவிக்க, இராமநாதபுரம் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும், கடலாடி சட்டமன்றப் பேரவை உறுப்பினருமான பரமக்குடி தங்கவேலன் அவர்களையும் அனுப்பிவைத்தேன். இங்கே இருந்து தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, விசாரித்து எனக்குத் தகவல் தருமாறு அவரையும் கேட்டுக் கொண்டேன். இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், திரு. சந்தானம் அவர்களும் சொன்ன அதே தகவல்களைத்தான் அவர்களும் என்னிடத்திலே சொன்னார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரையிலே ஒன்றை விட்டுவிட்டார். அதற்கிடையிலே அவர் என்னிடம் பேசினார். அவர் என்னிடத்திலே பேசி, இந்தத் தகவலையும் சொன்னார். சொல்லும்போது நான் சொன்னேன்: ''அந்த Dy.S.P.-யைப் பற்றியும் விசாரிக்க வேண்டும்; அவரும் தவறு செய்திருக்கிறார்'' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், இவ்வளவையும் சொன்ன எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இரண்டு மாணவர்கள் பரீட்சை எழுதுகிற காலகட்டத்திலே கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தியைச் சொல்லவில்லை. ஒருவேளை (குறுக்கீடு) அது இன்றைக்கு நடந்ததாகச் சொல்கிறார்கள். இப்போது சொல்லிக்கொண்டிருக்கும் போதே, நான் கடிதம் எழுதி அனுப்பிவிட்டேன். அதற்கான பதிலும் வந்து விட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, கைதானவர்களை உடனே விடுதலை செய்யச் சொல்லவும் என்று எழுதி அனுப்பினேன். அதற்குப் பதிலாக I.G. Intellingence மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்கப் பட்டுவிட்டது என்ற செய்தியும் வந்திருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்ற காரியங்களில் சில நேரங்களில், காவல் துறையினர் அத்துமீறி ஈடுபடுகின்றார்கள். அதுவும் இந்தக்

காவல்துறை Sub-Inspector ஒரு நல்ல திடகாத்திரமான வாலிபர் என்பதும், முரட்டுச் சுபாவம் உடையவர் என்பதும் எனக்கு வந்த தகவல். காவல் துறையிலே உள்ளவர்கள் மக்களுக்கு நண்பர்களாக இருக்க வேண்டுமேயல்லாமல், மக்களோடு சேர்ந்து சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டுமேயல்லாமல், அது போல மக்களும், மக்களின் பிரதிநிதிகளும், காவல்துறையோடு சேர்ந்து சட்டம்- ஒழுங்கைப் பாதுகாக்க உதவிகரமாக இருக்க வேண்டுமேயல்லாமல், இதுபோன்ற சூழ்நிலை உருவாவது நல்லதல்ல என்பதை இந்தக் கவன ஈர்ப்பைக் கொண்டுவந்த எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் போல, திரு.சந்தானம் அவர்களைப் போல, அவையிலே உள்ள அனைவரையும் போல நானும் உணர்கிறேன்.

ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக இப்போது பரமக்குடியிலே Sub-Collector- ஆக இருக்கின்ற திரு.உதயசங்கர் அவர்கள் மூலமாக Police Standing Order 145-ன்கீழ், விசாரணை போடப்பட்டிருக்கிறது. திரு.கிருஷ்ணன் அவர்கள்கூடச் சொன்னார்களாம்; தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த ஒன்றியத் தலைவர், நேர்மையான விசாரணை நடைபெறும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். அந்த விசாரணையைத் தொடர்ந்து, உரிய நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமைகிறேன்.

குமரியில் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை

உரை : 96 நாள் : 7.4.1999

மாண்புமிகு கலைஞர் மு.கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதிர்பார்த்தபடியே கன்னியாகுமரியிலே ஏற்பட்ட Tension இங்கேயும்- அவையிலே இந்த விவாதம் வந்தால் - ஏற்படும் என்று அன்றைக்கு நான் சொன்னபடியே Tension - னோடு இந்த கவன ஈர்ப்பு மற்ற மாண்புமிகு உறுப்பினர்களால் கையாளப்பட்டு, பேசப்பட்டிருக்கின்றது. ஏழு மாதங்களுக்கு முன் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. இது சிறப்புக் கவன ஈர்ப்பாக, தங்களுடைய பெருந்தன்மையின் காரணமாக எங்களுடைய விட்டுக் கொடுக்கும் தன்மையின் காரணமாக இந்த அவையிலே எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போது விவாதிக்கப்படுகின்றது.

நான் முதலில் சில விவரங்களை இதுபற்றிக் கூற விரும்புகிறேன். பிறகு இங்கே ஆவேசமாகவும், உருக்கமாகவும் பேசிய பேச்சுகளுக்கு பதில் சொல்லவும் கடமைப்பட்டிருக் கின்றேன். 9-9-1998 அன்று கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை காவல்நிலைய சரகம், தேங்காய்ப்பட்டினம் கல்லாம் பொத்தையில் அப்துல் ரகுமான் என்பவருடைய மகன் அஜீர் என்பவர் விளையாடிக்கொண்டிருந்தபோது ஒரு நாட்டு வெடிகுண்டை எடுக்கும்போது அது வெடித்ததில் அவர் காய மடைந்தார். இதுகுறித்து தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம் ஜமாத் தலைவர் ஜமாலுதீன் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் புதுக் கடை போலீஸ் குற்ற எண் 664/98, இந்திய வெடி பொருள் சட்டம், பிரிவு 3-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. புதுக் கடை காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த ஆய்வாளர்

திரு.பாஸ்கரன் இது சம்பந்தமாக விசாரணை செய்து (1) பீர் முகமது, (2)அமீர், (3)ஹுசேன், (4)ஜமீல், (5) மொஹீன் ஆகியோரைக் கைது செய்து, அவர்களிடமிருந்து 43 நாட்டு வெடிகுண்டுகளை தேங்காய்ப்பட்டினம் கல்லாம்பொத்தைப் பகுதியிலிருந்து கைப்பற்றினார் என்பது குறித்து 2 வழக்குகள் புதுக்கடை காவல் நிலையக் குற்ற எண் 66/98 மற்றும் 67/98 - 98 என்றால் போன வருடம் - ஆகியவற்றின் கீழ் பதிவு செய்து, முகமது என்பவரைக் கைது செய்து அவரிடமிருந்து முக்கால் கிலோ கந்தகம், 1400 கிராம் வெடி மருந்துகள், 3-ல் பியூஸ் ஒயர், 15 டெட்டனேட்டர்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது - கூறப்பட்டது என்றுதான் குறிப்பிடுகிறேன். நிச்சயப்படுத்திச் சொல்லவில்லை எதையும்- பின்னர், இந்த வழக்கு விசாரணை குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, விசாரணை மேற்கொண்டதில் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு, கைது செய்யப்பட்டவர்கள் உண்மையான குற்றவாளிகள் அல்லர் என்று தெரிய வந்துள்ளது. தொடர்ந்து மேற்கொண்ட தீவிரப் புலன் விசாரணையின் பயனாக 22-2-1999 அன்று பீனார் தெருவைச் சேர்ந்த அப்துல் கரீம் என்பவருடைய மகன் சபாகீர் கைது செய்யப்பட்டு அவருடைய வாக்குமூலத்தின் பேரில் 6 நாட்டு வெடிகுண்டுகள் கைப்பற்றப்பட்டன.

தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம்களுக்கும், முள்ளூர்துறை, இராமன்துறை, இனையம், இணையம் புத்தன்துறை ஆகிய கிராமங்களிலுள்ள மீனவ கிறிஸ்தவர்களுக்குமிடையே 1993ஆம் ஆண்டு முதல் அடிக்கடி மோதல்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள தேங்காய்ப்பட்டினம் முஸ்லீம்கள் நாட்டு வெடிகுண்டுகளை வைத்திருந்ததாக சில தகவல்கள் வெளியாகி இருக்கின்றன. மேலும் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 8 நபர்களை போலீசார் தீவிரமாகத் தேடி வருகிறார்கள். முஸ்லீம் இனத்தவர்மீது C.B.C.I.D., போலீசார் பொய் வழக்குகள் பதிவு செய்கிறார்கள் என்பதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. அப்படி இருந்தால் உண்மையான குற்றவாளிகள் அல்ல என்று, கைது செய்யப்பட்ட 6 முஸ்லீம்கள், திரும்ப விடுவிக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதிலிருந்தே இது தெளிவாகப் புரியும். அவர்களும் முஸ்லீம்கள்தான். அவர்கள் குற்றவாளிகள் அல்ல என்று விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, மாநில குற்றப்

புலனாய்வுத் துறை முஸ்லீம்களுக்கு எதிராக பொய் வழக்குப் போடுவதாகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு சரியானதாகத் தெரியவில்லை. குற்றங்கள் நடக்கும்போது காவல் துறை பாரபட்சம் இன்றி விசாரணை செய்யவேண்டும் என்றும், சிறுபான்மையினருக்கு எந்தவிதமான துன்புறுத்தலும் கூடாது என்றும் அறிவுரைகளை அரசால் வழங்கப்பட்டு இருக்கின்றன.

இதுபற்றி இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் குமாரதாஸ் அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு.சுப்பராயன் அவர்களும், இந்திய தேசிய லீக் சார்பில் உரையாற்றிய திரு.அப்துல் லத்தீப் அவர்களும், பா.ம.க. சார்பில் உரையாற்றிய திரு. கணேசன் அவர்களும், சி.பி.எம். சார்பில் உரையாற்றிய திரு.மணி அவர்களும், பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் உரையாற்றிய திரு.வேலாயுதன் அவர்களும், தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் முதலில் எடுத்துரைத்த டாக்டர் குமாரதாஸ் அவர்களுடைய அந்தக் கருத்தில் ஒருசில வேறுபாடான கருத்துக்களையும் எடுத்துக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். குமாரதாஸ் அவர்கள் உரையாற்றியபோது, இந்த விவரங்களையெல்லாம் சொல்ல வில்லை. அவருடைய சொந்தத் தொகுதி. இருந்தாலும்கூட, சிதம்பரநாதன் என்ற C.B. C.I.D., ஆய்வாளர், நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்ட இஸ்லாமிய சமுதாயத்தைப் பற்றிய அந்த வார்த்தைகளை அவர் சொன்னாரா என்பதை டாக்டர் குமாரதாஸ் அவர்கள்தான் எனக்கு விளக்க வேண்டும். சொன்னதாகத் தெரியவில்லை. உடனடியாக நான் அதைப்பற்றி விசாரிக்கும்போது, அவர் அப்படிப்பட்ட தவறான வார்த்தையைப் பயன்படுத்தவில்லை என்று ஏ.டி.ஜி.பி., வி.கே. இராஜகோபாலன் அவர்கள் மூலம் தொலைபேசியிலே கேட்டு அறிந்திருக்கிறேன். அப்படி அவர் சொல்லவில்லை. சிதம்பர நாதன் அவர்கள் இந்து என்றாலும், நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர். அத்தகைய வார்த்தையைப் பயன்படுத்த மாட்டார் என்பதற்கு என்ன ஆதாரம் என்றால், தமிழகத்திலே சுயமரி யாதை இயக்கம் தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலும், அடுத்தபடி யாக நாடார் சமுதாயத்திலும்தான் உருவாயிற்று. அதுதான் அதற்குத் தொட்டில், எனவே, சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்த

சமுதாயத்தினர், அன்றைக்கு ஆதாரப்பூர்வமாக இருந்து வளர்த்த அந்த சமுதாயத்தினர், இப்படிப்பட்ட வார்த்தைகளை நிச்சய மாகச் சொல்லியிருக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. யாரோ தவறாக, நம்முடைய திரு.அப்துல் லத்தீப் அவர்களுக்கு அந்த வார்த்தைகளை அவர்கள் சொன்னதாகச் சொல்லியிருக்கக் கூடும். இந்த விசாரணையிலே என்னென்ன தவறுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையெல்லாம் ஆராய வேண்டியது என்னுடைய கடமை.

நம்முடைய திரு.சுப்பராயன் அவர்கள் பேசும்போது சொன்னார் - எப்போதுமே அது கம்யூனிசத் தத்துவம் - ஐ.ஏ.எஸ். ஆக இருந்தாலும், ஐ.பி.எஸ். ஆக இருந்தாலும், ஒரு ஜாதி என ஒதுக்கி, அவர்களைக் கண்டிப்பது கம்யூனிசம். இல்லா விட்டால் அவர்கள் கம்யூனிஸ்டுகள் ஆக இருக்கமுடியாது (சிரிப்பு). ஆனால் அவர் ஒன்றை அழகாகச் சொன்னார்; ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். இது ஒரு ஜாதி பொதுவாகவே எதிர்க்கப்பட வேண்டிய அல்லது புறக்கணிக்கப்படவேண்டிய ஜாதி என்பதைப் போல அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இந்தக் கருத்துப்பட இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால் இன்னொன்றையும் சொன்னார். முஸ்லீம்கள் எல்லோருமே எப்படி தீவிரவாதிகளாக இருக்க முடியும் என்று அவர் சொன்னார். நான் இங்கே திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். முஸ்லீம்கள் எப்படி எல்லோருமே தீவிரவாதிகளாக இருக்க முடியாதோ, அதைப்போல ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் எல்லோருமே தீயவர்களாக இருக்க முடியாது. அதிலேயும் நல்லவர்கள் நிச்சயமாக இருக்க முடியும் என்பதை திரு.சுப்பராயன் போன்றவர்கள் மறந்துவிடக் கூடாது. சி.பி.ஐ. ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், சி.பி.எம். ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், தி.மு.க. ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், காங்கிரஸ் ஆட்சி நடத்துகிற மாநிலமாக இருந்தாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான் ஆட்சி நடத்த வேண்டும், அதை நாம் மறந்துவிடக்கூடாது.

ஒருமுறை அண்ணா அவர்கள் சொன்னார்கள். அண்ணா வினுடைய அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த ஒரு வரைப் பார்த்துச் சொன்னார்கள் - ஒரு அதிகாரியை அமைச்சர்

கொஞ்சம் வேகமாகச் சாடிவிட்டார். அப்போது அண்ணா சொன்னார் அவரைப் பார்த்து - நீ ஒரு அதிகாரியைச் சாடி விட்டாய், நீயும் நானும் இருக்கப் போவது 5 வருஷம்தான். அந்த அதிகாரி நிலையாக இருக்கப் போகிறவர். அவர் மேலே எந்தவிதமான குற்றமும் வரவில்லை என்றால், நிலையாக இருக்கப் போகிறவர். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், இருக்கப்போவது 5 வருஷம்தான். அதனாலே அதிகாரியை வேகமாகப் பேசுவது நல்லதல்ல. அவர்களையும் சேர்த்துத்தான் நாம் அரசாங்கத்தை நடத்த வேண்டும். நிர்வாகத்தை நடத்த வேண்டும்'' என்று அண்ணா சொன்ன அந்த தத்துவங்களை எல்லாம் இப்போது எடுத்துச்சொல்ல விரும்பவில்லை. நீண்ட நேரம் பேசினால், பொதுப்பணித் துறை விவாதத்திலே பலபேர் பல அணைகளை, தேக்கங்களை, எல்லாம் கேட்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதற்கு நான் குறுக்கே நின்றவனாக நான் இப்போது ஆகிவிடுவேன். அதற்கு இப்பொழுது அணைகட்டிவிட நான் விரும்பவில்லை. இருந்தாலும்கூட நான் நம்முடைய திரு.அப்துல் லத்தீப் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்வேன். ஏதோ இந்த அரசாங்கம் முஸ்லீம்களுக்கு விரோதமாகச் செயல்படுவதாக ஒரு தவறான கருத்தை யாரோ பரப்புவதாகச் சொல்லி, அவர்கள் பரப்புவதைவிட அதிக வேகமாக இந்த அறையிலே அந்தத் தவறான கருத்தை அவர் பரப்பினார் என்று நான் உள்ளபடியே வேதனைப்படுகின்றேன். இந்தியாவிலேயே முஸ்லீம் லீக் என்றால் வகுப்புவாத இயக்கம் என்று சொன்னவர்களை எதிர்த்துப்பேசிய ஒரேயொரு இயக்கம் திராவிடர் இயக்கம்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் திரு.அப்துல் லத்தீப் அவர்களுக்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முஸ்லீம் லீக்கிற்கு - இன்றைக்கு முஸ்லீம் லீக், இந்திய தேசிய லீக் என்று இருக்கலாம் - எப்படி தி.மு.க., அ.தி.மு.க. மோதிக்கொள்கிறதோ அதேபோல இரண்டு லீக்குகளும் மோதிக் கொள்ளலாம். அது வேறு விவகாரம். ஆனால், முஸ்லீம் லீக், கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களால் வழிநடத்தப் பட்ட இந்திய யூனியன் முஸ்லீம் லீகைப் பார்த்து வகுப்புவாத இயக்கம் என்று நாடு தழுவிய அளவிலே பிரச்சாரம் நடந்த

போது, இந்தியாவின் தென்கோடி முனையிலே தமிழகத்திலே யிருந்து எதிர்த்துக் குரல் கொடுத்த ஒரே ஒரு இயக்கம் திராவிட இயக்கம்தான், அதுதான், தந்தை பெரியாருடைய தலைமை யிலே, அண்ணாவினுடைய தலைமையிலே - எங்களுடைய பொறுப்பிலே அந்தக் காரியத்தை இன்றைக்கும் நாங்கள் ஒழுங்காக நடத்திக்கொண்டுதான் இருக்கின்றோம். இடையிலே சில கோளாறுகள் ஏற்பட்டன. நீங்கள் இதை எண்ணிப்பார்க்க வேண்டாமா? 1998 தேர்தலிலே, நாடாளுமன்றத் தேர்தலில் நின்றபோது, திராவிட முன்னேற்றக் கழகம், த.மா.கா. போன்ற இந்தக் கட்சிகள் எல்லாம் கூட்டணி அமைத்து நாடாளுமன்றத் தேர்தலிலே நின்றபோது தோற்றதற்கு என்ன காரணம்? ஒரு கோயம்புத்தூர் சம்பவம் அல்லவா? அதை மறந்துவிடக் கூடாது. அந்தக் கோயம்புத்தூர் சம்பவம் நடக்காமல் இருந்திருந்தால் இன்றைக்கு டெல்லியிலே பா.ஜ.க. அரசு இருக்குமா? அதற்கு இங்கே இருந்து சவால்விட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் இருப்பார்களா? நாம் அல்லவா டெல்லியிலே அரசு எது என்று நிர்ணயிக்கக்கூடிய அந்த வலிமையைத் தமிழகத்திலே பெற்றிருப்போம்? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்தக் குறிப்பிட்ட சில பேரால், அந்தத் தீவிரவாதிகளால்தான் கோயம் புத்தூரிலே நடைபெற்ற அந்தச் செயலால்தான் இன்றைக்கு இவ்வளவு பெரிய இழிநிலை இந்தியாவிற்கே ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதற்காக, கோயம்புத் தூரிலே சில பேர் தீவிரவாதிகள் இருந்தார்கள் என்பதற்காக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற முஸ்லீம் மக்கள், இஸ்லாமிய மக்கள் அத்தனை பேரும் தீவிரவாதிகள் என்கிற முட்டாள் தனமான கணக்கை என்றைக்கும் நான் பேசமாட்டேன் என்பதைத் தயவுசெய்து நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் - அப்படி எண்ணுகிறவர்களாக இருந்தால் - அண்மையிலே சென்னைக் கடற்கரையிலே நடைபெற்ற ஒரு மாபெரும் பேரணியில் நானும், மூப்பனார் அவர்களும் கலந்து கொண்டபோது இஸ்லாமிய இனத்தினர் காட்டிய பேரன்பை யாரும் மறந்துவிட முடியாது. தமிழகத்திலேயிருந்து, கேரளாவிலிருந்து, தென்னகத்தின் பல பகுதிகளிலேயிருந்து வந்த இஸ்லாமியப் பெருமக்கள்

தி.மு.க., த.மா.கா. போன்ற இந்த இயக்கங்கள் சிறுபான்மைச் சமுதாயத்தைக் காப்பாற்றுகின்ற இந்த இயக்கங்களே என்கின்ற அந்த உறுதியைப் பெற்றிருக்கின்றார்கள். அந்த உறுதி திரு. அப்துல் லத்தீப் அவர்களுக்கும் உண்டு என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஆனாலும், அவர் இங்கே வீரமாக, ஆவேசமாகப் பேசியதின் மூலமாக எனக்கு அவர் பதில் சொல்லுவதாக அர்த்தமல்ல. நான் உங்களுக்காக வாதாடவில்லை என்று என்மீது தவறாகச் சொல்கிறார்களே பாருங்கள். நான் எப்படி வாதாடிக் காட்டுகிறேன் என்று அவர் இங்கே வாதாடிக் காட்டியிருக்கிறார் என்றுதான் நான் எண்ணிக்கொள்கிறேனே அல்லாமல், தவறாக எடுத்துக்கொள்ளவில்லை. பலர் திரு.வேலாயுதன் வரையிலே நம்முடைய திரு.மணி அவர்கள் அத்தனை பேரும் பேசிய அந்தப் பேச்சுக்களையெல்லாம் கவனித்தால், ஒன்றேயொன்றை நம்முடைய அன்புக்குரிய நண்பர் சி.பி.எம். உறுப்பினர் திரு. மணி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். இதற்கு உரிய ஒரு விசாரணையை வைக்க வேண்டும் என்று. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லியிருக்கின்றீர்கள். ஒரு பெரும் பழி C.B.C.I.D.,யினுடைய ஆய்வாளர்மீதும் போடப் பட்டிருக்கிறது, சிதம்பரநாதன் மீதும் போடப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் சரியாகத் தெரிந்து கொள்வதற்கு, உண்மை இதுதான் என்று அறிந்துகொள்வதற்கு உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்களின் அடிப்படையில், அதிலும் குறிப்பாக மணி அவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டியதன் அடிப்படையில் ஒருநீதி விசாரணை இதற்காக வைக்கப்படும் என்பதைத் தெரிவித்து இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

கள்ளச்சாராய சாவு

உரை : 97 **நாள் : 14.05.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கள்ளச்சாராயச் சாவு குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் - அந்தத் தொகுதியைச் சார்ந்த சுப்பிரமணி அவர்கள் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஞானசேகரன் அவர்கள், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிவபுண்ணியம் அவர்கள், இந்திய தேசிய லீக் சார்பில் நிஜாமுதீன் அவர்கள், அ.தி.மு.க. சார்பில் சுந்தரம் அவர்கள், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில், அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் திரு. ஐ. கணேசன் அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மணி அவர்கள், ஃபார்வர்டு பிளாக் கட்சியினுடைய சார்பில் அந்தக் கட்சியினுடைய சட்டமன்றத் தலைவர் சந்தானம் அவர்கள், பாரதிய ஜனதா கட்சியினுடைய சார்பில் வேலாயுதன் அவர்கள் ஆகியோர் - கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்கு மாறாக எந்தக் கருத்தும் சொல்வதற்கு நான் முன்வரவில்லை. செய்திகளைப் பொறுத்து, நடைபெற்ற உண்மை விவரங்களையே அவர்கள் இங்கே வழங்கியிருக்கின்றார்கள். இதற்கு மாற்றுதேட என்ன வழி என்பதிலேதான் சற்று வேறுபாடான கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றனவே அல்லாமல், நடந்த உண்மையை அனைவரும் இங்கே எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

சக்கரமல்லூர் ஆதிதிராவிடர் குடியிருப்பைச் சேர்ந்த சாராய வியாபாரி கண்ணன் என்பவர், இதன் காரணமாகக் கைது செய்யப்பட்டு, அவர் விசாரணை செய்யப்பட்டதில் பின்வரும் தகவல்கள் தெரியவந்துள்ளன.

சக்கரமல்லூரைச் சேர்ந்த வெங்கடேசனுடைய மகன், டேங்கர் லாரி கிளீனரான மோகன், கண்ணனிடம் 35 லிட்டர் சட்டத்திற்குப் புறம்பான திரவத்தை, ஸ்பிரிட் என்று கூறி, ஒரு வீட்டிலே நடைபெற்ற விழாவிற்கு வந்திருந்த விருந்தினர் களுக்கு அளிக்கும்படித் தெரிவித்ததாகவும், அந்தத் திரவத்தைத் தண்ணீரில் கலந்து, விருந்துக்கு வந்த சிலருக்கு அளித்ததாகவும், அவன் விற்ற திரவத்தை உட்கொண்டவர்கள், எரிச்சல் ஊட்டுவதாகத் தெரிவித்த புகாரின் காரணமாக, அவன், மோகனிடம் வாங்கிய திரவத்தை விற்பனை செய்வதை நிறுத்திவிட்டு, அந்தக் கேனை மோகனிடமே திருப்பி அளித்து விட்டதாகவும், பின்னர், காவேரிப்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பூண்டி என்ற ஊரைச் சேர்ந்த சுந்தரேசனுடைய மகன் சுப்பிரமணி மற்றும் கோவிந்தராஜன் மகன் பெருமாள் ஆகியோரிடமிருந்து வாங்கி வந்த கள்ளச்சாராயத்தை விற்றதாகவும் தெரிய வருகிறது.

முதலிலே விற்கப்பட்ட சாராயம் விஷம் கலந்தது என்று தெரிந்தபிறகு, அத்துடன் வியாபாரத்தை நிறுத்தாமல், அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு, வேறு ஆட்களைத் தேடி, அவர்களிட மிருந்து கள்ளச் சாராயத்தைப் பெற்று, அதை அந்த விருந்துக்கு வந்திருந்தவர்களுக்கு வழங்கியிருப்பதாக இந்த விசாரணையி லிருந்து தெரிய வருகிறது.

மரணமுற்ற, சக்கரமல்லூரைச் சேர்ந்த ஆறுமுகம், கண்ணன் ஆகியோருடைய சடலங்கள் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, குடல் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில், இவர்களுடைய மரணங்கள் மெத்தில் ஆல்கஹால், அதாவது மெத்தனால் என்று அழைக்கப்படுகின்ற மெத்தில் ஆல்கஹால் அருந்தியதால் ஏற்பட்டது என்று தெரிய வந்துள்ளது. எனவே, தற்போது மோகன் என்பவன், கண்ணன் என்பவருக்கு மெத்தனால் விற்றதும், அதனைக் கண்ணன், வந்திருந்த விருந்தினர்களுக்கு விற்றதால் 5, 6 பேர் மரணமடைந் துள்ளதாகவும் தெரிய வந்துள்ளது. 5 என்று ஒரு கணக்கு, 6 என்று ஒரு கணக்கு. 6 என்ற கணக்கையே நாம் கொள்ள வேண்டும். மெத்தனால் என்ற விஷத் திரவமே இவர்களுடைய சாவிற்குக் காரணம் என்பது தெளிவாகிறது.

வேலூர் சரகக் காவல் துறை துணைத் தலைவர் மற்றும் வேலூர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு இந்த நிகழ்ச்சி தொடர்பாக, துரிதமான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அறிவுரை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சி தொடர்பாக, ஆற்காடு கிராமிய காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே. கருணாகரன், சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. மெய்யழகன், தலைமைக் காவலர் ராஜகோபால் மற்றும் முதல்நிலைக் காவலர் மகேந்திரவர்மன் ஆகியோர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, ஒரு புறத்திலே காவல் துறையினர் இதுபோன்ற காரியங்களுக்குத் துணை போகிறார்கள் என்பதும், அதே நேரத்திலே இரண்டு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், ஒரு லாரியிலே பல இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கள்ளச்சாராயம் கடத்தப்பட்டபொழுது, அதை துரத்திச்சென்ற போலீசார் அந்த லாரியினாலேயே மோதப்பட்டு, காயமுற்று, அந்த வீரதீரச் செயலுக்குப் பிறகும்கூட, அவர்கள் சளைக்காமல் லாரியைப் பின்தொடர்ந்து துரத்தி, டயரைச் சுட்டு, அந்த லாரி நிறுத்தப்பட்டு, அந்த லாரியில் இருந்த கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டுள்ள நிகழ்ச்சியும் நடைபெற்றிருக்கிறது. சுந்தரம் அவர்கள் இங்கே கேட்டார்கள். 'கள்ளச்சாராயப் பானைகள் மீது குண்டுகள் பாயுமோ' என்று. பானைகள் மீது மாத்திரமல்ல - சாராயத்தை ஏற்றிச் செல்கின்ற லாரியின் மீதும் பாயும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி). இதனால் நான் திருப்தி அடைந்துவிடவில்லை. இது மனநிறைவை முழுமையாகத் தரக்கூடியது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உணர்வதைப் போலவே நானும் உணர்கின்றேன். இன்னும் இதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்டும் என்பதை உணர்கின்றேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவரும், நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள் தொடங்கி, எங்களுடைய ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர், ஆற்காட்டைச் சேர்ந்த சுப்பிரமணி அவர்கள் - வேலாயுதன் அவர்கள் ஒருவர்தான்

சொல்லவில்லை என்று கருதுகிறேன், மற்ற அனைவருமே - இந்த இறந்து போனவர்களுடைய குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இப்படி ஒரு பழக்கத்தை நாம் தொடர்ந்து ஏற்படுத்திக்கொண்டே போனால், என்ன ஆவது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒன்றிரண்டு பேர் செத்தாலும் பரவாயில்லை என்று, வீட்டிலே பிடிக்காத ஆட்களுக்கு இதுபோன்று கள்ளச்சாராயத்தை ஆசைகாட்டிக் கொடுத்து, கொன்றுவிட்டு, 50 ஆயிரம், 60 ஆயிரம் ரூபாய் என்று பெறக்கூடிய அளவுக்குக்கூட சமுதாயம் இன்றைக்கு இருக்கிறது. நான் எந்தவொரு சமுதாயத்தையும் தாழ்த்திப் பேச விரும்பவில்லை. ஏழ்மை நிலையின் காரணமாக, தாங்களே தாழ்ந்துவிட்ட, தாங்களே தங்களை தாழ்த்திக் கொண்டிருக்கின்ற சில சமுதாயங்கள் நாட்டிலே இருக்கின்றன. எனவே, நம் வீட்டிலே ஒருவர் செத்தாலும் ஒரு 50 ஆயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற அந்த அதிதீவிரமான, தேவையற்ற நச்சு எண்ணம் ஏற்பட்டுவிடுமேயானால் என்ன ஆவது என்கின்ற அச்சமும் இந்த அரசுக்குத் தோன்றாமல் இல்லை. இருந்தாலும் கூட, ஓசூரில் இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அதிலே அரசியல் கட்சியைச் சேர்ந்த ஒரு முக்கியமான பிரமுகரே அந்தக் காரியத்தைச் செய்தார் என்பது வெளிப்படையான உண்மை யாகவும் நாட்டுக்குத் தெரியப்படுத்தப்பட்டது. நம்முடைய ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கு இணங்கவும், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் போன்றவர் களெல்லாம் அந்தப் பகுதிக்குச் சென்று அதுபற்றிய விவரங்களை அறிந்து, அவர்களுடையபரிதாபத்தை உணர்த்தியதன் காரணமாகவும், அந்தக் குடும்பத்தாருக்கு ஒரு தற்காலிகச் செலவு என்பதற்கு, குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு கணக்கு எடுக்கச் செய்து, ஒரு குறிப்பிட்ட தொகை அங்கே வழங்கப்பட்டது. அதைப்போலவே, சென்னையை அடுத்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கும் ஒரு குறிப்பிட்ட தொகை, பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு வழங்கப்பட்டது. நான் மாண்புமிகு உறுப்பினர் களுக்கெல்லாம் சொல்லிக்கொள்கின்றேன். இப்படி தொகை

வழங்கப்படுவது இதுவே கடைசியாக இருக்கட்டும் என்று கூறி, இந்தக் குடும்பங்களுக்கு வேண்டுமானால், மாவட்ட ஆட்சித் தலைவரைவிட்டு, கணக்கு எடுக்கச் செய்து - 5 பேர் அல்லது 6 பேர் இறந்திருக்கின்றார்கள்; அந்தக் குடும்பங்களிலே பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு எந்த வகையிலே நிதி அளித்தால் போதுமானது என்பதைக் கண்டறிந்து, அந்த வகையிலே நிதி அளிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுபோன்ற நிகழ்ச்சிகளில், நம்முடைய சந்தானம் அவர்கள் இங்கே மிக அழகாகச் சொன்னார்கள். ''கள்ளச்சாராயம் அருந்தி இறந்துபோன பிறகு, சாலை மறியல் செய்வதைவிட, அதற்கு முன்பே, கள்ளச்சாராயம் காய்ச்சப்படுகின்ற இடத்தில் சாலை மறியல் செய்கின்ற துணிவு நம்முடைய சமுதாயத்திலே மக்களுக்கு ஏற்படுமேயானால், இந்தக் கள்ளச்சாராயத்தை அறவே ஒழித்துவிட முடியும்'' என்று. (மேசையத் தட்டும் ஒலி). அதற்கான ஏற்பாடுகளை இனியாவது, இந்த மாமன்றம் கலைந்து சென்ற பிறகு, முடிந்து நிறைவுற்றுச் சென்ற பிறகு - கலைந்து அல்ல, நிறைவுற்றுச் சென்ற பிறகு - இந்தக் கூட்டத்தொடர் நிறைவுற்ற பிறகு, ஊருக்குச் செல்லும் நம்முடைய சட்டப்பேரவை உறுப்பினர்கள் எல்லாம் சாலை மறியலுக்கு எது உகந்த காரணம் என்பதைக் கண்டறிந்து, இதுதான் உகந்த காரணம் என்பதைப் புரிந்துகொண்டு, எங்கெங்கே கள்ளச்சாராயம் காய்ச்சுகின்றவர்கள் இருக்கிறார்களோ, அவர்களைத் தடுக்க, எங்கெங்கே இந்த வியாபாரத்திற்கான முஸ்தீபுகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் தடுத்து நிறுத்த, தவிர்த்திட, அத்தகைய சாலை மறியலில் ஈடுபட்டால், அவர்களைச் சிறைக்கு யாரும் அழைத்துச் செல்ல மாட்டார்கள். நானேகூட வந்து மாலை அணிவித்து அவர்களைப் பாராட்டுவேன் என்று குறிப்பிடு கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கள்ளச்சாராயத்தை ஒழிப்பதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒரு நிறைந்த ஈடுபாடான கொள்கை இருக்கின்றது. ஒரு சிலர் இதற்காகப் பயந்துகொண்டு - மூட்டைப்பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்திவிடலாம்

என்பதைப்போல - மதுவிலக்குக் கொள்கையை அறவே ரத்துச் செய்துவிடலாம்; தேவையே இல்லை; சாராயக் கடைகளைத் திறந்துவிடலாம் என்று சொல்வது நல்லதல்ல. அதை ஏற்றுக் கொள்ளவும் இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Non-bailable Section-ல் போட வேண்டுமென்று திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியும் அரசு சட்டத் துறையோடு ஆலோசிக்கும். கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும், இல்லாவிட்டால் இது நிற்காது. இப்போதே ஒருமுறை, அல்ல இருமுறை, மூன்றுமுறை என்று இந்தக் குற்றத்திலே ஈடுபடுவார்களேயானால், குண்டர் சட்டத்திலே - அவர்கள் அடைக்கப்படுகிறார்கள். அதைவிட மேலாக, இந்தச் சாராயம் குடித்து இறந்ததைக்கூட ஒரு கொலைக் குற்றமாக - விபத்தாகக் கருதவேண்டிய அவசியம் இல்லை - வேண்டுமென்றே திட்டமிட்டுக் கொலை செய்வதற்காக இந்தச் சாராயத்தை விற்றான் என்கின்ற அளவில், அத்தகைய செக்ஷன்களைக்கூட அவர்கள் மீது போடமுடியுமா என்பதை யோசித்து, அதுபற்றியும் அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை மத்திய சிறைச்சாலை சம்பவம்

உரை : 98 **நாள் : 18.11.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர் விரும்பியதற்கேற்ப வினாக்கள்- விடைகள் நேரத்தை ஒத்திவைத்துவிட்டு, சென்னை மத்திய சிறைச் சாலையில் நடைபெற்ற எதிர்பாராத, இரங்கத்தக்க, இனி இப்படி நடைபெறக்கூடாது என்று அறுதியிட்டு முடிவு செய்து கொள்ளவேண்டிய, ஒரு பிரச்சினை குறித்து, ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற பெயரில், நீண்டநேரம், முற்பகல் 9-30 மணியிலிருந்து நண்பகல் 12-00 மணி வரையில் தங்களுடைய வாதங்களை, எடுத்துவைத்து அரிய கருத்துகள் பலவற்றை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், மற்ற கட்சியினுடைய தலைவர்களும், உறுப்பினர்களும், இங்கே கூறியிருக் கின்றார்கள். அவற்றுக்கெல்லாம் விளக்கமான ஒரு பதிலை சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தந்திருக்கிறார்கள். இந்த விவாதத்திலே, இடையிடையே எழுப்பப்பட்ட சிலபிரச்சினைகள் குறித்து நான் ஓரிரு கருத்துக்களை இங்கே எடுத்துவைக்க விரும்புகின்றேன்.

இதுவரையிலே தமிழகத்திலே எந்தச் சிறைச்சாலையிலும் இதுபோல எதுவும் நடைபெறவில்லை என்று சொல்லப்பட்ட கூற்றுக்குப் பதிலாக, நம்முடைய நண்பர் சுப்பராயன் அவர்களே, 1950ஆம் ஆண்டு சேலம் சிறைச்சாலையிலே நடைபெற்ற சம்பவத்தை விளக்கினார்கள். அவர்கள் பேசியபோது தொடர்ந்து சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். இப்போது அவர் சொல்லமாட்டார். அந்தச் சேலம் சிறைச்சாலைச் சம்பவத்தை நாடு முழுவதும் பரப்பி, 1952ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்கு அவ்வளவு பெரிய வெற்றி வருவதற்குக் காரணமாக

இருந்தவரே இந்தக் கருணாநிதிதான் என்பதை சுப்பராயன் அவர்களும் நன்றாக அறிவார்கள் என்று எனக்கு மிகத்தெளிவாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இங்கே நண்பர் சந்தானம் அவர்களும் மற்றவர்களும் எடுத்துக்காட்டியதைப்போல, அது ஓர் அரசியல் பிரச்சினை. இலட்சியத்திற்காகச் சிறை சென்ற, வீரம் மிகுந்த, வீரம் மிக்க கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தோழர்கள், வேண்டுமென்றே, சட்ட அமைச்சர் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல, சிறைச்சாலையிலே, கொட்டடிக்குள்ளே அடைக்கப்பட்டு, சுட்டுக்கொல்லப்பட்டார்கள் 1950ஆம் ஆண்டில்.

இது, சிறைச்சாலையிலே இருந்த கைதிகள் கலவரத்திலே ஈடுபட்டு ஓர் அதிகாரியை உயிரோடு நெருப்பில் போட்டு வேக வைத்து, இன்று அவருடைய துணைவியாருக்கும் குழந்தைகளுக்கும் அவருடைய பெயர் பொறித்த தகட்டையும், அவர் தன் சட்டையின் தோளிலே குத்தியிருந்த நட்சத்திரக் குறிகளையும் மாத்திரம்தான் காட்டக்கூடிய அளவுக்கு, நடைபெற்ற கொலைச் சம்பவம். அதைத் தொடர்ந்து சிறைச்சாலையில் நடைபெற்ற கலவரங்கள், இத்யாதி, இத்யாதிகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் இங்கே விரிவாக எடுத்துக்காட்டி விட்டார்கள்.

ஆனால் இதைப்பற்றி இங்கே பேசிய மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. சட்டமன்றக் கட்சியின் தலைவர், அன்பிற்குரிய ராசிபுரம் தொகுதி உறுப்பினர் சுந்தரம் எடுத்துக்காட்டினார், தமிழகத்திலே இந்த நிகழ்ச்சி போல, எந்தச் சிறைச்சாலையிலும் நடைபெறவில்லை என்று. தமிழகத்தில் சேலத்திலே மாத்திரமல்ல, இதே சென்னை சிறைச்சாலையிலே 1995ஆம் ஆண்டு ஒன்பது தடா கைதிகள் தப்பித்ததையொட்டி, சென்னை உயர்நீதிமன்றம், தடா நீதிமன்ற நீதிபதி திரு.இராதாகிருஷ்ணன் அவர்களை சிறைச்சாலைக்குச் சென்று விசாரித்து ஓர் அறிக்கை தாருங்கள் என்று கேட்டு, அவரும் ஓர் அறிக்கை கொடுத்தார். அந்த அறிக்கையில், அவர் ''27 தடா கைதிகள் உள்பட மொத்தம் 87 கைதிகள் பயங்கரமாகத் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். இது 27-2-1995ல் நடைபெற்ற நிகழ்ச்சி.

அதற்கு அடுத்த மாதமே, 18-3-1995 அன்று, கைதிகள் தங்களுக்குப் பல வசதிகளைக் கோரி, மதுரை சிறைச்சாலைக் கட்டடத்தின் உச்சியிலே ஏறி அமர்ந்து கொண்டு, கீழே இறங்க மறுத்து உணவு உட்கொள்ளவே முடியாது என்று கூறி, 18ஆம் தேதியிலிருந்து 21ஆம் தேதிவரை ஒரு பெரும் போராட்டத்தை நடத்தினார்கள் 1995ஆம் ஆண்டில் 21ஆம் தேதியன்று, சிறைக் காவலர்களையெல்லாம் கைதிகள் கம்புகள், கற்கள், இரும்புக் கம்பிகள் போன்றவற்றால் தாக்கத்தொடங்கிய காரணத்தால் காவல் துறை உதவியோடு நிலைமை பிறகு கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இதில் 93 கைதிகளும் Jail Superintendent உள்பட 64 சிறைக் காவலர்களும், 17 காவல் துறையினரும் காயம் அடைந்தார்கள். அவர்களில், தலைமைக் காவலர் வீரபத்திரன், சிறை மருத்துவமனையிலேயே இறந்தார். பைக்காரா பாண்டி என்ற கைதி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலே இறந்தார். மற்றொரு தண்டனைக் கைதி, அத்தியப்பன் என்பவர், மதுரை இராஜாஜி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே இறந்தார். இதிலே எண்ணிக்கை முக்கியம் அல்ல. சம்பவங்கள் சிறைச்சாலை களிலே தமிழகத்திலே எந்த ஆட்சியிலும் நடைபெற்றிருக் கின்றன என்பதற்காகத்தான் இதைச் சொல்கின்றேன்.

நடந்த சம்பவங்களைச் சுட்டிக்காட்டி, இப்போது நடந்துள்ள சம்பவங்களை நியாயப்படுத்த நான் விரும்ப வில்லை. இது எண்ணிப்பார்க்கவே முடியாத வருந்தத்தக்க, கண்டிக்கத்தக்க ஒரு சம்பவம் என்பதை இன்றல்ல, நேற்றைக்கே நான் செய்தியாளர்களைச் சந்தித்தபோது குறிப்பிட்டிருக்கின்றேன்.

நீதி விசாரணை என்று பேசப்பட்டது. இந்த அரசைப் பொறுத்தவரையில் எத்தனை நீதி விசாரணைகள், 1996ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நடைபெற்றிருக்கின்றன என்பதும், அந்த விசாரணை அறிக்கைகள் இந்த அவைக்குத் தயக்கமின்றி தரப்பட்டுள்ளன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

இப்பொழுதும் கொடியங்குளம் சம்பவ நீதி விசாரணை அறிக்கைகூட வந்துவிட்டது. இதுவரையிலே அவையிலே வைக்காமல் இருந்ததற்குக் காரணமேகூட, C.B.I. விசாரணை கேட்டு, அது தரப்பட்டு, ஆனால், C.B.I. விசாரணை இன்னமும் முடியாத காரணத்தால் இடைக்காலத்திலே இந்த அறிக்கையை வைப்பது சரியாக இருக்காது என்பதற்காகத் தாமதப்படுத்தினோம். C.B.I அறிக்கை வருமா என்பது இப்போது கேள்விக்குறியாக ஆகிவிட்ட சூழ்நிலையில், இந்த அறிக்கையை அவையிலே வைப்பது என்று தீர்மானித்திருக்கின்றோம். இந்த வாரத்திலோ அல்லது அடுத்த கூட்டத்தொடரிலோ நிச்சயமாக இந்த அறிக்கை அச்சேற்றப்பட்டு- அதற்குள்ளாக அச்சேறி முடிந்துவிடும்- இந்த அவையிலே வைப்பதாக இருக்கின்றோம். எனவே, நீதி விசாரணைகள் வைப்பதும், அந்த விசாரணையிலே தரப்படுகின்ற கருத்துக்களை, அறிவிப்புகளை அவைக்கு வைப்பதிலும், இந்த அரசைப் பொறுத்தவரையிலும் என்றைக்கும் தயக்கம் காட்டியதில்லை என்பதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்த நிகழ்ச்சிக்கும், நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், முதன்முதலாக உயர்நீதிமன்ற நீதிபதியின் விசாரணை வேண்டுமென்று கேட்டார்கள். நான் இன்னும் ஒருபடி மேலேபோய் சொல்லிக்கொள்கிறேன். இது மிக முக்கியமான, ஒரு சிறப்பான.... சிறப்பான என்றால், நான் நல்ல எண்ணத்திலே, நல்ல அடிப்படையிலே சொல்லவில்லை - ஒரு "Special' என்ற நிகழ்ச்சியாக இது ஆகிவிட்ட காரணத்தால், அந்த உயர்நீதிமன்ற நீதிபதிகூட, Sitting Judge-ஐ கொண்டு நீதி விசாரணை வைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நீதி விசாரணை வேண்டுமென்று கேட்ட வேறு கட்சிகள், குறிப்பாக அ.இ.அ.தி.மு.க.வைப் பொறுத்தவரையில், அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இங்கேயாவது 7 பேர், 8 பேர், 10 பேர் செய்தார்கள். கும்பகோணம் மகாமகத்தில் ஐம்பதா, நூறா இருநூறா என்று தெரியாத அளவுக்கு மக்கள் இறந்தபோது,

மிதிபட்டு அடிபட்டு செத்தபோது, நீதி விசாரணை கேட்டு, நாம் அனைவரும் குரல் எழுப்பியிருக்கின்றோம். ஏடுகள் மூலமாக அறிக்கைகள் தந்திருக்கின்றோம். சட்டமன்றத்திலே கேட்டிருக் கின்றோம். ஆனால், நீதி விசாரணை வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக D.R.O. விசாரணைதான் வைக்கப்பட்டது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. Supreme Court நீதிபதியைக் கொண்டு வா; உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு வா; உயர்நீதிமன்ற நீதிபதியைக் கொண்டு வா; என்று சொல்லியபோது நான் ஒரு Magistrate-ஐக்கூட வைத்து நீதி விசாரணை நடத்தவில்லை. என்பதையும் மனச்சாட்சி உள்ளவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். என்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன். அதைச் சொல்லி, இதை மறுக்கின்ற மனோபாவம் எனக்கு இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள நண்பர்கள் அனைவரும் மிகத் தெளிவாக அறிவீர்கள்.

அதிகாரியினுடைய மரணம் குறித்து அனுதாபம் தெரிவிக்கின்ற அதே நேரத்திலே அவருடைய குடும்பத்திற்கு அரசு உதவிட வேண்டும் என்பதையும் கருத்தில்கொண்டு, நான் இரண்டு அறிவிப்புகளை இங்கே அறிவிக்க விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த Deputy Jailer ஜெயக்குமாருக்கு கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு இந்த அரசின் சார்பில் ஜனாதிபதி விருதுக்குப் பரிந்துரை செய்திருக்கின்றோம். இப்படி ஆகும் என்றுதான் கருதியோ, என்னவோ, அவருக்கு ஜனாதிபதி வீர விருது தரவேண்டுமென்று ஏற்கெனவே அரசு பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின்படி, வருகின்ற குடியரசு தின நிகழ்ச்சியின்போது அந்த விருது அளிக்கப்படவிருக்கிறது. அதோடு, முதலமைச்சரின் விருது என்ற முறையில் ஒரு தனி விருதாக, வீர தீரச் செயலுக்கான விருதும் அதேநாளில் வழங்கப் படும் என்பதை நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுபோன்று, அதிகாரிகளுடைய மரணத்திற்கு, எற்கெனவே உள்ள அரசாணையின்படி மூன்று இலட்சம் ரூபாய் தரவேண்டும். அந்த மூன்று இலட்சம் ரூபாய் ஜெயக்குமார்

குடும்பத்திற்குக் கிடைக்கும் என்பதோடு, இந்த நிகழ்ச்சியை யொட்டி, கூடுதலாக, முதலமைச்சர் நிதியிலிருந்து மேலும் ஐந்து இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு வழங்கப்படும் என்பதை யும் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல, அவருடைய வாரிசுகளுக்கு உத்தி யோகம் அல்லது வேலைவாய்ப்பு உண்டா என்ற வினா எழக் கூடும். அதில் இருக்கின்ற பிரச்சினையை நான் சொல்லியாக வேண்டும். அவருடைய துணைவியார்கூட படித்த பெண்மணி என்று நான் கேள்விப்பட்டேன். அவருடைய வாரிசுகளுக்கு வேலை தராமல் இருந்தால், அவருடைய Retirement காலம் வரையில் - ஓய்வு பெறுகின்ற காலம் வரையில் - இந்த முழுச் சம்பளத்தை மாதந்தோறும் பெற்றுக்கொண்டிருக்கலாம் என்ற விதி இருக்கிறது. வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுத்து விட்டால், அதிலே பெரும்பகுதி குறைய நேரிடும். எனவே அவருடைய ஓய்வு பெறுகின்ற காலம் வரையில் அவருடைய முழு சம்பளம் ஜெயக்குமாரின் குடும்பத்தினருக்கு வழங்கப் படும் என்றும், அதற்குப்பிறகு வேண்டுமானால் அல்லது அதற்கு இடையே வேண்டுமென்று அவர்கள் விரும்பினால், அவர்களுடைய Option-க்கு விட்டு அந்தக் குடும்பத்திலே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவர்களோடு இல்லாமல், கைதிகளாக இருந்தவர்கள், கலவரம் புரிந்தவர்கள், அவர்களும் மனிதர்கள்தான்; திருத்தப் பட வேண்டியவர்கள்தான் அவர்கள் செய்த தவறுகளுக்கு அவர்களுடைய குடும்பங்களிலே உள்ள அனைவரும் பொறுப் பானவர்கள் அல்ல. எனவே, அந்தப் பொறுப்பை இந்தக் குடும்பங்களின்மீது சுமத்தி, இந்தக் குடும்பங்களை அவதிப்பட விடவேண்டும் என்று நான் விரும்பவில்லை. அப்படி மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும் விரும்ப மாட்டார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்களும் அந்தப் பரிந்துரையைச் செய்திருக்கின்றீர்கள். அதையும் ஏற்றுக்கொண்டு இறந்த கைதிகளுடைய குடும்பங்களுக்கு, ஒவ்வொரு குடும்பத்திற்கும், இதுவரையிலும் 9 பேர் என்று கணக்கு வந்திருக்கிறது.

இரண்டொருவர் கவலைக்கிடமாக இருக்கிற காரணத்தால் அந்த எண்ணிக்கை ஒன்றிரண்டு கூடக்கூடும். எத்தனைபேர் இறந்தாலும் 9 என்பது 10 ஆனாலும், 11 ஆனாலும் தலா ஓர் இலட்ச ரூபாய் அந்தக் குடும்பங்களுக்கு பாதுகாப்பு நிதியாக வழங்கப்படும் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொண்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே எல்லாக் கருத்துக்களையும் பேசிவிட்ட காரணத்தால், இனியும் பேசுவதற்கு எந்தக் கருத்தும் இல்லாத சூழ்நிலையில், நான் கூறிய இந்த அறிவுப்புகளை ஏற்று, இந்த அளவில், ஒத்திவைப்புத் தீர்மானத்தை, வலியுறுத்தாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அமைகிறேன், நன்றி, வணக்கம்.

தூசி காவல் நிலையச் சம்பவம்

உரை : 99 **நாள் : 19.11.1999**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தூசி காவல் நிலையச் சம்பவம் குறித்தும் அங்கே பணியாற்றிய ஹரிதாஸ் என்ற காவல்துறை அதிகாரி குறித்தும் பல்வேறு கட்சிகளின் சார்பிலே பல கருத்துகள் இங்கே சிறப்புக் கவன ஈர்ப்பின் அடிப்படையிலே எடுத்துக் கூறப்பட்டுள்ளன. பேசியவர்களிலே பல பேர் பத்திரிகைச் செய்திகளை இங்கே எடுத்துக்காட்டி அவையெல்லாம் உண்மையிலேயே நடந்த சம்பவங்கள் என்று அவர்கள் நம்பி- வேண்டுமென்று அல்ல- அந்தச் செய்திகள் எல்லாம் உண்மையானவை என்ற கருத்துப்பட இங்கே அவர்களுடைய கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றார்கள். நான் பொதுவாக, பத்திரிகைகளைக் குறைகூற விரும்பவில்லை. ஆனால், சில நேரங்களில் பரபரப்பான செய்திகளை வெளியிடுவதில்- நான் முந்தி, நீ முந்தி என்று போட்டி போடுகின்ற அளவிற்கு இப்போது பத்திரிகை உலகம் வந்திருக்கின்றது என்பதைத் தயவுசெய்து யாரும் மறந்து விடக் கூடாது.

இது ஆளுங்கட்சியாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தை மாத்திரமல்ல, எதிரே அமர்ந்திருக்கின்ற பல்வேறு எதிர்க்கட்சிகள் உட்பட எல்லாக் கட்சிகளுக்கும் இத்தகைய ஒரு அனுபவம் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க இயலாது. நான் எல்லா பத்திரிகைகளையும் குறிப்பிட விரும்பவில்லை. ஒரு சில பத்திரிகைகளில் இதுபோன்ற செய்திகளின் உண்மை, உண்மையல்லாத நிகழ்வு இவை இரண்டையும் வெளியிடுவதற்குப் பதிலாக உண்மைக்குப் புறம்பான செய்திகளையே சில நேரங்களில் வெளியிட்டு விடுகின்ற காரணத்தால் இத்தகைய சூழல் ஏற்பட்டுவிட்டது.

நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்தபோதும் சரி, எதிர்க்கட்சித் தலைவனாக இருந்தபோதும் சரி, நானாக இருந்தாலும் நம்முடைய பேராசிரியராக இருந்தாலும் இதுபோன்ற செய்திகள் வரும்போது அதை ஒரு முறைக்கு இருமுறை ஆழ்ந்து பார்த்து அவை பற்றிப் பலரிடம் விசாரித்து அதிகாரிகள் மட்டத்திலேகூட அதைப்பற்றிக் கேட்டறிந்து அதன் பின்னர் ஆதாரபூர்வமாகத்தான் இந்த அவையிலே எதிர்க்கட்சியாக இருந்தபோது எங்களுடைய கருத்துகளை அல்லது அரசின் மீதுள்ள குறைகளை எடுத்துக் காட்டியிருக்கிறோம். அதற்கான நிவாரணங்களையும் பெற முடிந்திருக்கின்றது.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையிலே வந்துள்ள செய்திகளிலே பல ஐயப்பாடுகள் உண்டு என்பதும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் செய்திகளைத் தெரிந்து கொள்ளக்கூடிய எல்லாவித வசதி வாய்ப்புகள் இருந்தும்கூட அவர்களாலேயே முழுமையான உண்மைகளை அறிந்து கொள்ள முடியாதபோது தூசி கிராமத்துப் பகுதிகளிலே உள்ள பாமர மக்கள், பொதுமக்கள், அந்த உண்மைகளைச் சரியாக உணர முடியாததில் ஆச்சரியம் எதுவும் இருக்க முடியாது. எனவே, நீங்கள் யாரும் வேண்டுமென்று இந்த அரசின் மீது குற்றஞ்சாட்ட வேண்டும் என்பதற்காக இந்தச் சிறப்புக் கவன ஈர்ப்பிலே கருத்துகளை எடுத்துக் கூறியதாக நான் தவறாகக் கருதவில்லை. நீங்கள் அறிந்ததை நீங்கள் கேள்விப்பட்டதை, உங்களுக்கு வந்த செய்தியை அடிப்படையாக வைத்துத்தான் இப்படியிருந்தால் இது அநியாயமல்லவா என்று அந்த அடிப்படையில்தான் இந்தச் சிறப்பு கவன ஈர்ப்பின் மீது உங்கள் கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றீர்கள்.

நான் சில விவரங்களை இப்போது எடுத்து வைக்க விரும்புகின்றேன்.

உதவி ஆய்வாளர் திரு. ஹரிதாஸ் 1995ஆம் ஆண்டு அந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். 1995 என்பதை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். பயிற்சி முடிந்து

1997ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராக நியமனம் பெற்றார். போளூரில் செயல்முறைப் பயிற்சி நடைபெற்று அதற்குப் பிறகு 18.12.1998 முதல் தூசி காவல் நிலையத்தில் தனிப் பொறுப்பில் உதவி ஆய்வாளராகப் பணியமர்த்தப்பட்டார்.

இவர், காஞ்சிபுரம் மாவட்டம், தாழம்பூரைச் சேர்ந்த ஆதி திராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். இவர் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவர் என்றும் அவருடைய தாயார் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே வெற்றி பெற்று தாழம்பூர் என்ற கிராமப் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறார் என்றும் செய்திகள் உள்ளன. அவை உண்மையான செய்திகளாக இருக்கக்கூடும்.

26.10.1999, 27.10.1999 ஆகிய தேதிகளில் மதுவிலக்கை இவர் சரியான முறையில் அமல்படுத்தத் தவறிவிட்டதாகவும், கள்ளச் சாராய வியாபாரிகளுடன் இவருக்கு இரகசியத் தொடர்பு உள்ளதாகவும், அநாமதேயக் கடிதம் ஒன்று இவருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்தக் கடிதம், இவரது அணுகுமுறையில் மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்தது என்று எனக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

27.10.1999 மற்றும் 28.10.1999 அன்று ஒரு சில கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைது செய்து கைதி அறையில் அடைத்து வைத்ததாகவும், காவல் நிலையத்தில் அவருடைய நடவடிக்கைகள் அவ்வப்போது முறையற்று இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

28.10.1999 அன்று இவர் சித்தலப்பாக்கம் மற்றும் நரசமங்கலம் கிராமங்களுக்கு கைத்துப்பாக்கி, அரிவாள் ஆகியவற்றுடன் சென்று, கள்ளச் சாராயம் விற்றுக்கொண்டிருந்த ஒரு சில கள்ளச் சாராய வியாபாரிகளைக் கைது செய்து காவல் நிலையத்திற்குக் கொண்டு வந்துள்ளார். ஒரு நேர்மையான காரியத்திற்காக அவர் சற்று முரட்டுத்தனமாக அந்த நடவடிக்கையிலே ஈடுபட்டார் என்றாலும்கூட, அவர்களை மிகக் கொடுமையாக நடத்தினார் என்பதும் ஒரு புகார். பின்னர், அரசு மோட்டார் சைக்கிள் ஒன்றில் முன்பக்க விளக்குகளைக் காரணம்

ஏதுமின்றி உடைத்திருக்கிறார். உதவி ஆய்வாளர் ஹரிதாசின் மூத்த சகோதரர் தேவதாஸ் மற்றும் ஹரிதாசின் தாயார் ஆகியோரை ஆய்வாளர் சந்தித்துப் பேசியபோது, போலீஸ் பயிற்சிக்கு முன்பே ஹரிதாஸ் மனநிலை சரியில்லாமல் இருந்தார் என்றும், கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலும், பின்னர் வேறு சில மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் இருக்கிறது.

29.10.1999 அன்று, செய்யாறு டி.எஸ்.பி. உதவி ஆய்வாளர் ஹரிதாசிடம் பேசி அறிவுரை கூறியுள்ளார்கள். ஆனால், ஹரிதாஸ் அவரது அறிவுரையை ஏற்றுக் கொள்ளாமல், தான் ஒரு குற்றவாளியாகவோ அல்லது வழக்கறிஞராகவோ மாறிவிடுவேன் என்றும் பதிலளித்தார்.

ஹரிதாசின் நடவடிக்கையை கண்ட டி.எஸ்.பி., அவரை சொந்த ஊரான தாழம்பூருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

இதற்கிடையில், ஹரிதாஸ், காவல் நிலையம் முன்பு ஆஜராகி, தான் விஷம் அருந்தப் போவதாக மிரட்டியதோடு, அனைவர் மீதும் எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளார்.

பின்னர், உணர்ச்சிவயப்பட்டு மயக்கமுற்ற ஹரிதாசை 30.10.1999 அன்று காஞ்சிபுரத்திலுள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்து, அவருக்குப் பாதுகாப்பாக இரு காவலர்களும் பணியமர்த்தப்பட்டார்கள். ஆனால், ஹரிதாஸ் 31.10.1999 விடியற்காலையில் மருத்துவமனையிலிருந்து தப்பி, தூசி கிராமத்திற்கு வந்து சேர்ந்து, தனது நண்பர்களைச் சந்தித்து, தன்னைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்துவிட்டதாகவும்- பணி நீக்கம் செய்யப்படவில்லை இருந்தாலும் தற்காலிகப் பணி நீக்கம் செய்துவிட்டதாகவும்- காவல் துறையினர் தன்னை அடித்துத் துன்புறுத்தி விஷ ஊசி போட்டதாகவும் வதந்தியைப் பரப்பி, தனக்கு ஆதரவாக ஒரு கும்பலைத் திரட்டியுள்ளார். ஆனால், அப்போது ஹரிதாஸ் தற்காலிகப் பணிநீக்கம்

செய்யப்படவில்லை. இன்னும் சொல்லப் போனால், 31.10.1999 அன்று நடந்த கிளர்ச்சிக்காக 3.11.1999 அன்று தான் இவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டாரே தவிர, அவர் பிரச்சாரம் செய்து மக்களைத் திரட்டியபோது Suspend செய்யப்படவில்லை. 3ஆம் தேதி பிறப்பித்த அந்த Suspension ஆணையைக்கூட, அவர் மருத்துவமனையிலே இருந்த காரணத்தினால் இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மருத்துவமனையிலே இருந்த டாக்டர், அவரால் அந்த ஆணையைப் புரிந்துகொள்ள முடியாத நிலை இருப்பதால் அதனை அவரிடம் ஒப்படைக்க முடியவில்லை என்று தெரிவித்துள்ளார். தூசி கிராமத்திற்குச் சென்று இவர் செய்த தவறான பிரச்சாரத்தால் பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட, சுமார் 300 கிராமவாசிகள் தூசி காவல் நிலையம் முன்பாகக் கூடினார்கள். தகவலறிந்ததும், செய்யாறு கோட்டாட்சியர் மற்றும் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தூசி காவல் நிலையம் வந்து, அங்கு கூடியிருந்தவர்களிடம் பேச்சுவார்த்தை மேற்கொண்டனர். ஆனால், கூட்டத்தினர், ஹரிதாசை இந்த நிலைக்குக் கொண்டு வந்த காவல் துறை அதிகாரிகளைக் கைது செய்யவேண்டும் என்றும், ஹரிதாசை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளனர். பணியிலேயிருந்து நீக்கப்படாதபோதே பணியிலே அவரைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று முழக்கமிட்டிருக்கிறார்கள். கோட்டாட்சியரும், காவல் துறை அதிகாரிகளும், அவர்களது கோரிக்கைகள் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்துள்ளனர். அதிகாரிகளின் அறிவுரைகளை மக்கள் செவிமடுக்காததுடன், வருவாய் மற்றும் காவல் துறை அதிகாரிகளைக் கீழ்த்தரமாகத் திட்டிப் பேசியுள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து கூட்டத்தினர் தூசி காவல் நிலையத்திலுள்ள தொலைபேசி இணைப்பு மற்றும் வானொலி (Wireless) இணைப்பையும் துண்டித்துவிட்டார்கள். ஹரிதாஸ் அவரிடம் பேச முயற்சித்த போது செய்யாறு Inspector முகத்தில் குத்தியுள்ளார். கூடியிருந்த மக்கள் கற்களை வீசி,

காவல் துறையினரைத் தாக்கினர். தூசி காவல் நிலையம் தாக்கப்பட்டதில், காவல் நிலையத்தின் சுற்றுச் சுவரும், கதவு, ஜன்னல்களும் சேதமடைந்தன. காவல் நிலையத்தின் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டது. Wireless கருவியின் antenna கட்டடத்தின் மேலிருந்து கீழே இழுத்துத் தள்ளப்பட்டு, நொறுக்கப்பட்டது. ஒரு Trax Jeep தீயிட்டு கொளுத்தப்பட்டது. மற்றொரு Jeep-ம் சேதமடைந்தது. மொத்தம் அரசு சொத்துகள் ரூ. 5 இலட்சம் மதிப்பிற்குச் சேதமாயின என்று கணக்கிடப்பட்டுள்ளது.

செய்யாறு வட்டாட்சியர் அளித்த புகாரின் பேரில், தூசி காவல் நிலையத்தில், ஹரிதாஸ் மற்றும் கிராமவாசிகளுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. 31.10.1999 அன்று ஹரிதாஸ் உட்பட 107 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டு, வேலூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உட்பட 14 காவல் துறையினர் காயமடைந்துள்ளனர். தூசி காவல் நிலையச் சம்பவத்தில் (குற்ற எண் 486/99) உதவி ஆய்வாளர் ஹரிதாஸ் ஈடுபட்டதால், 3.11.1999 அன்று தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். நான், அந்த ஆணையை அவர் இன்னும் பெற்றுக் கொள்ளவில்லை என்று முன்பே சொன்னேன்.

சில ஆண்டுகளுக்கு முன்பே மனநிலை பாதிக்கப் பட்டிருந்த ஹரிதாஸ் முறையற்ற வகையில் நடந்தது, தான் பணிபுரிந்துவந்த காவல் நிலையத்தைத் தாக்க வழி செய்துள்ளார். ஆய்வாளரும், துணைக் கண்காணிப்பாளரும், அவருடைய நடத்தையில் மாற்றத்தைக் கண்டு அவருக்கு அறிவுரை கூறியும், இறுதியில் சிகிச்சைக்கு அனுப்பியும் உள்ளனர். ஆனால் இதையே ஹரிதாஸ் தவறாக எடுத்துக்கொண்டுள்ளார். அவருக்குக் குறைகள் ஏதும் இருந்திருந்தால் எஸ்.பி.யிடமோ, ஐ.ஜி.யிடமோ முறையிட்டிருக்கலாம். அதை விடுத்து, கும்பலைக் கூட்டி,

வன்முறையில் ஈடுபட்டதற்காகத்தான் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனநோயாளி என்று அவர் மீது வேண்டுமென்றே இட்டுக்கட்டி பொய் கூறப்பட்டிருக்கின்றது என்று எல்லா உறுப்பினர்களும் இங்கே பேசியிருக்கின்றார்கள். எதிர்க்கட்சி உணர்வோடு பேசியவர்கள், ஆளுங்கட்சி சார்புடையவர் களாகப் பேசியவர்கள் அனைவருமே, கூறப்படுகிறதென்று குறிப்பிட்டார்கள். நான் அதைப்பற்றி சில விளக்கங்களை அளிப்பதற்கு முற்படுவதற்கு முன்பு, அவர் வந்த பிறகுதான் அந்தக் காவல் நிலையத்திலே மதுவிலக்கு, கள்ளச்சாராய வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டன என்பதைப் பற்றி ஒன்று கூற விரும்புகின்றேன்.

அவர் தூசி காவல் நிலையத்திற்கு வந்தது, 18.12.1998இல். அவர் அந்தக் காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பு, 1.1.1998 முதல் 18.12.1998 வரை, தூசி காவல் நிலையத்தின் சார்பில் பதிவான மதுவிலக்கு வழக்குகள் 401. இவர் வந்தபிறகு, 1.1.1999 முதல் இதுவரை பதிவான மதுவிலக்கு வழக்குகள் 341. எனவே, இவர் பொறுப்பேற்ற காரணத்தால் கள்ளச்சாராய வழக்குகள் அங்கே பெருகிவிட வில்லை. பிடிபட்டுவிடவில்லை என்பதற்கு இந்தப் புள்ளி விவரம் ஒரு சான்றாகும்.

அவர் மிகவும் நல்லவர், ஆனால் வேண்டுமென்றே அவர் மீது மன நோயாளி என்று குற்றஞ்சாட்டப்பட்டுவிட்டது என்று பேசப்பட்டது. அவர் எப்படி இருக்கிறார் என்பதை அறிந்துவர நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. சோ. பாலகிருஷ்ணன் அவர்களும் மற்றும் சில சட்டமன்ற உறுப்பினர்களும், மத்திய சிறைச்சாலைக்கே இரண்டு நாட்களுக்கு முன்பு சென்று, அவரை நேரடியாகவே பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அதைப்பற்றி அவர்கள் Jail Superintendent இடத்திலே என்ன சொன்னார்கள், என்ன பேசினார்கள் என்ற தகவலும் அரசுக்கு வந்திருக்கின்றது. வேண்டுமென்றே அவரை இந்த ஆட்சியிலே மன நோயாளி

என்று குற்றஞ்சாட்டவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்பு கின்றேன். அவர் இந்த நிகழ்ச்சியிலே கைது செய்யப்பட்ட பிறகு அவரைச் சோதனை செய்து பார்க்க, கீழ்ப்பாக்கம், மனநல மருத்துவமனைக்கு அவர் அனுப்பப்பட்டு, அறிக்கை கேட்டபோது, அவர்கள் கொடுத்த அறிக்கையில் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால்-

"On Interview, Mr. J. Haridoss gave history of previous admission and treatment in the Institute of Mental Health, Chennai on two occasions, Previous Case Records indicate that he was admitted as a voluntary boarder - non paying case from 20.6.1994 to 11.7.1994 (In-Patient No. 2620/94). This was the first admission. He was admitted by his parents for the following complaints:-

1. Sleeplessness;
2. Excessive talking;
3. Aggressive and assaultive behaviour;
4. claiming himself with vast powers; and
5. Obstructing traffice."

இதெல்லாம், அவருடைய பெற்றோர்களே மருத்துவர் களிடம் தெரிவித்தது. அதை அப்படியே 1994ஆம் ஆண்டே பதிவு செய்திருக்கிறார்கள். அப்போது தி.மு.க. ஆட்சியே வரவில்லை. பிறகு 1996இல்தான் தி.மு.க. ஆட்சி வந்தது. பழைய ஆட்சி நடைபெற்றபோதே 1994இல் அவர் தவறாக நடந்துகொள்வதைப் பார்த்து மருத்துவமனையிலே அனுமதிக்கப் பட்டபோது, அவருடைய பெற்றோர்கள் என்ன சொன்னார்கள் என்பதை, தற்போதுள்ள அந்த Record-களைப் பார்த்துத் தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் சில ஆதாரங்களையம் கூறுகிறேன். அப்போதைய மருத்துவமனைப் பதிவிலே மேலும் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதையும் படிக்கிறேன் :-

"These complaints were of one and a half months duration. A diagnosis of acute psychotic episode affective form was made then and he was treated with major tranquilizers, mood stabilizers and psychotherapy.

After treatment his mental condition improved and he was discharged on 11.7.1994 and sent home along with his brother, with the advice of regular out patient treatment and periodic follow up.

He was admitted for the second time on 23.10.1996 at the Institute of Mental Health, Chennai with the following conditions;-

1. sleeplessness;

2. Abusive and assaultive behaviour;

3. Talking excessively;

These complaints were of 3 months duration. He was treated as an in-patient (Inpatient no. 5048/96) with major transquilizers and mood stabiliezers.

He was discharged on 5.12.1996 along with his brother Devadoss. He was advised regular outpatient treatment and periodic follow up at intitute of Mental Health. After discharge, he was attending outpatient treatment regularly, till 26.5.1999. After that his brother reported on 21.8.1999 and 23.9.1999 to collect drugs for the patient."

இதன் தமிழாக்கத்தையும் சொல்லிவிடுகிறேன்:

‘‘விசாரணையின்போது, உதவி ஆய்வாளர் ஹரிதாஸ், சென்னை மனநோய் மருத்துவ நிறுவனத்தில் ஏற்கெனவே இரண்டு முறை அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாகத் தெரிவித்தார். பழைய மருத்துவ ரெகார்டுகளில் ஹரிதாஸ் 20.6.1994 முதல் 11.7.1994 வரை உள் நோயாளியாக

(உள்நோயாளி எண் 2620/94) அனுமதிக்கப்பட்டு இலவச சிகிச்சை பெற்றுள்ளார் என்று குறிக்கப்பட்டுள்ளது. மனநோய் மருத்துவ நிலையத்தில் இதுதான் இவர் முதன் முதலாகச் சேர்க்கப்பட்ட நிகழ்வு. அவருடைய பெற்றோரால் பின்வரும் காரணங்களுக்காக ஹரிதாஸ் அப்போது மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.

1. தூக்கமின்மை;

2. பேசிக்கொண்டே இருத்தல்;

3. மூர்க்கத்தனமாக மற்றவர்களைத் தாக்குகின்ற தன்மை;

4. தனக்கு ஏராளமான சக்தி இருப்பதாகக் கூறிக்கொள்ளல்;

5. சாலையை மறித்தல்.

இந்தத் தொந்தரவுகள் அவருக்கு ஒன்றரை மாதங்கள் நீடித்தன. அவர் மிதமிஞ்சிய மனநோயால்- acute psychotic episode- பாதிக்கப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு, அவருக்குச் சக்தி வாய்ந்த தூக்க மருந்துகளும், மனநிலையைச் சீராக்கும் மருந்துகளும் சைக்கோதெரபியும் தரப்பட்டன.

சிகிச்சைக்குப் பின், அவரது மனநிலை சீரடைந்ததால், அவர் 11.7.1994 அன்று மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருடைய சகோதரருடன் அனுப்பப்பட்டார். தொடர்ந்து மருத்துவமனைக்கு அவ்வப்போது வந்து வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றுச் செல்ல வேண்டுமென்றும் அவருக்கு அறிவுரை வழங்கப்பட்டது.''

இது நடைபெற்றது 1994-இல். அதை நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும். நான் எந்த ஆட்சியையும் குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. உண்மை நிலவரத்தைச் சுட்டிக்காட்டுவதற்காகச் சொல்கிறேன்.

''ஹரிதாஸ் இரண்டாவது முறையாக 23.10.1996 அன்று, சென்னை மனநோய் மருத்துவமனையில் பின்வரும் தொந்தரவு களுக்காகச் சேர்க்கப்பட்டார்.

1. தூக்கமின்மை;

2. பிறரைத் தரக்குறைவாகத் திட்டி, தாக்குதல்;

3. தொடர்ந்து அதிகமாகப் பேசுதல்

இந்தத் தொந்தரவுகள் அவருக்கு மூன்று மாத காலம் நீடித்தன. அவர் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு (உள்நோயாளி எண் 5048/96) சக்தி வாய்ந்த தூக்க மாத்திரைகளும், மனநிலையைச் சீராக்கும் மருந்துகளும் அவருக்குத் தரப்பட்டன.

5.12.1996 அன்று அவர் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு அவருடைய சகோதரர் தேவதாசுடன் வீட்டிற்கு அனுப்பப்பட்டார். தொடர்ந்து வெளிநோயாளியாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையும் அவருக்கு வழங்கப்பட்டது.

மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், ஹரிதாஸ் தொடர்ந்து 26.5.1999 வரை வெளிநோயாளியாகச் சிகிச்சை பெற்றுள்ளார். அதன் பின்னர், அவருடைய சகோதரர் 21.8.1999 மற்றும் 23.9.1999 ஆகிய நாட்களில் நோயாளிக்கான மருந்துகளை நேரில் வந்து பெற்றுச் சென்றுள்ளார்.''

இதைத் தவிர, டாக்டர் சாரதா மேனன், மனநல மருத்துவர் தனியாக ஹரிதாசைப் பார்த்து, அவர் தந்த சான்றிதழிலும் ஒரு பகுதியைப் படிக்கிறேன்;

''This is to certify that Sri Haridoss, aged 22 years, was brought by his brother Devadoss for treatment of abnormal behaviour on 1.7.1994 after a financial loss in tender coconut business.''

சாரதா மேனனை எல்லோருக்கும் தெரியும். எதிர்க்கட்சித் தலைவருக்கும் தெரியும். அவர் எவ்வளவு மூத்த மருத்துவர், எவ்வளவு நேர்மையானவர் என்பது தெரியும். அவர்கள் கொடுத்த சான்றிதழ் இது. ஏதோ இளநீர் வியாபாரத்திலே ஏற்பட்ட நஷ்டத்தின் காரணமாக அசாதாரணமான நடவடிக்கைக்கு ஆளானார் என்று சொல்லியிருக்கிறார். மேலும் சாரதா மேனன்

கூறும்போது, ''He was Hyperactive, talking too much and insomnic'' அவர் துருதுருப்பாக நடந்துகொண்டார், அதிகமாகப் பேசினார், தூக்கமின்றிக் காணப்பட்டார்- அவருக்கு மனநல மருத்துவர் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு பிறகு அவர் மருந்து சாப்பிடுவதை நிறுத்தியதால் ஜூன் 1994இல் மனநல மருத்துவ நிலையத்திலேயே உள்நோயாளியாகச் சேர்க்கப்பட்டார்'' என்றெல்லாம் சாரதா மேனன் எழுதியிருக்கிறார்.

அவ்வப்போது மருந்து சாப்பிடுவதும், அதன் மூலமாகக் குணமாவதும், மருந்தை நிறுத்தினால் மறுபடியும் அந்த நோய் வருவதுமாகத்தான் அவருடைய வாழ்க்கை கடைசி காலத்திலே இருந்திருக்கின்றது. நான் கடைசி காலம் என்று இங்கே கூறுவது, கைது செய்யப்படுகின்ற காலம் வரை என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். வேறொன்றும் அவருக்குக் கடைசி காலம் வரக்கூடாது, நல்ல நேர்மையான ஒரு அதிகாரி என்ற காரணத்தினால். அவருக்குத் தரப்பட்ட மருந்துகள் என்னென்ன என்பதும் சாரதா மேனன் அறிக்கையிலே குறிப்பிடப் பட்டுள்ளது. நேரம் கருதி நான் அவற்றையெல்லாம் எடுத்துக்காட்ட விரும்பவில்லை.

அதுமாத்திரமல்ல. பேரவைத் துணைத் தலைவரிடம் அனுமதி பெற்று, சில ஆதாரங்களை இங்கே காட்ட விரும்புகிறேன். இது 20.6.1994 அன்று ஹரிதாசைப் பற்றி கீழ்ப்பாக்கம் மனநல மருத்துவமனைப் பதிவிதழில் டாக்டரால் எழுதப்பட்ட ஆதாரமாகும்:-

"One and a half months ago, patient was said to have attended Sub-Inspector, interview. Following that patient has started exhibiting abnormal behaviour by saying that he is a Sub-Inspector. Used to talk much about his Sub-Inspector position. Would obstruct the traffic."

இந்த நிலைக்கெல்லாம் பிறகும்கூட, 13.11.1999 அன்று மனநல மருத்துவர்கள் அவரைச் சோதிப்பதற்காக எழுதச் சொல்கிறார்கள். அவர் என்ன எழுதுகிறார் தெரியுமா? ''எனக்கு

சேலம் இரும்பாலை பிரச்சினை

உரை : 100 **நாள் : 08.03.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறையாக சேலம் இரும்பாலையைப் பெற்றவனுக்குள்ள கவலையைவிட, பொதுத் துறைகள் பலவற்றைத் தனியார் துறைக்கு விற்றுவிட்டவர் களுக்கு இருக்க முடியாது என்ற அந்தக் கருத்தை வெளியிட்டு, சில செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஒன்று, தீர்மானமாக நிறைவேற்ற வேண்டுமென்று எல்லா உறுப் பினர்களுமே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட தீர்மானம் முன்மொழியப்பட்டால், எவ்வளவு நேரம் எடுத்துக் கொண்டு, எவ்வளவு கருத்துக்கள் சொல்லப்பட வேண்டுமோ, அவ்வளவு கருத்துக்கள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, ஒரு தீர்மானம் நிறைவேறுவதற்கான சூழ்நிலை உருவாகி இருப்பதாகவே நான் கருதுகிறேன். இருந்தாலும் சொல்லப்பட்ட கருத்துகளுக்கு- இந்த அவையிலே உறுப் பினர்கள் நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களும், சேலம் உருக்காலை, பொதுத்துறை வசமே இருக்க வேண்டும் என்பதுதான் மையக் கருத்து; சில பேர்களுடைய கருத்து- இரண்டு, மூன்று பேர் அங்கே இருப்பவர்களைப் பிடிக்காமல், கண்ணெரிச்சலால், அவர்கள் எல்லாம் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்துக்கு நான் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. இருந்தாலும், ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தது அல்லது கவன ஈர்ப்பு அறிக்கை கொண்டு வந்ததே முரசொலி மாறனையும், ரங்கராஜன் குமாரமங்கலத்தை யும், டி.ஆர். பாலுவையும் இராஜினாமா செய்யச் சொல்லத்தான்

என்கின்ற நிலையிலே கொண்டுவரப்பட்டதோ என்று பொதுமக்கள் சந்தேகப்படும்படியாக சில கருத்துக்கள் இங்கே வெளியிடப்பட்டிருக்கின்றன.

பொதுத் துறையைத் தனியார் துறைக்கு மாற்றுகின்ற ஒரு நிலை இப்போதல்ல; நரசிம்மராவ் அவர்களுடைய காலத்திலேயே ஏற்பட்ட ஒரு நிலை என்பதை எல்லோரும் அறிவார்கள். பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியிலே பொதுத் துறை நிறுவனங்கள் சில தனியார் துறைக்கு மாற்றப்பட்ட செய்திகளையெல்லாம் நாம் அறிந்திருக்கின்றோம். நான் வாதத்திற்காகச் சொல்ல வில்லை. நான் யாரிடத்திலே கம்யூனிசம் படித்துக்கொண்டிருக்கின்றேனோ, யாரை கம்யூனிசத்திற்கு வழிகாட்டி என்று கருதிக் கொண்டிருக்கின்றேனோ, என்னுடைய தோழர் ஜோதிபாசு அவர்கள் ஆளுகின்ற மேற்கு வங்கத்திலேயே பொதுத்துறை நிறுவனங்கள், தனியார் துறைக்குத் தரப்படுகின்ற காட்சிகளையெல்லாம் காண்கின்றோம். இன்று மேற்குவங்கத் தலைநகரமான கல்கத்தாவில் மின்சார விநியோகமேகூட ஒரு தனியார் கம்பெனிக்குத் தரப்பட்டிருக்கிறது. எற்கெனவே அது சரியாக நடைபெறவில்லை, தனியாருக்குத் தரப்பட்ட பிறகு ஒழுங்காக மின்சாரம் வருகிறது; எரிசக்தி நல்லமுறையிலே பயன்படுகிறது என்கின்ற அளவிற்கு நல்ல பெயரையும் அங்கே பெற்றிருக்கின்றார்கள்.

தனியார் துறையா, பொதுத் துறையா என்கின்ற வாதத்திற்கு இப்போது நான் செல்லவில்லை. ஏனென்றால், இந்த நூற்றாண்டிலே தோன்றிய சோஷலிசம், இந்த நூற்றாண்டிலேயே ஒரு முடிவுக்கு வந்துவிட்ட ஒரு காட்சியை நாம் காண்கின்றோம். அது வருந்தத்தக்கதுதான். ஏழையினுடைய கண்ணீர் அறவே வற்றாத இந்தச் சூழ்நிலையில் சோஷலிசத்திற்கு அப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்பட்டது நாமெல்லாம் எண்ணி வருந்தக்கூடிய ஒன்றாகும். இருந்தபோதிலும், இன்றுள்ள நிலையில் மத்தியிலே உள்ள அரசு, மாநில அரசைக் கலந்தாலோசித்து இந்த முடிவை எடுத்திருக்கலாம். ஆனால், இதை நான் ஒரு யோசனையாக, ஒரு கருத்தாகத்தான் சொல்ல முடியும். இருந்தாலும் நான் விரும்புகின்ற கூட்டாட்சித் தத்துவம் இன்னும் முற்றாக வந்தபாடில்லை. அதற்காகத்தான் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம்.

இங்கே பேசும்போது யாரோ குறிப்பிட்டார்கள், வெங்கட்ராமன் அவர்கள் இதற்காக நிரம்பப் பாடுபட்டார், சேலம் Steel Plant என்பதற்காகப் பாடுபட்டார் என்று சொன்னார்கள். ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அமைச்சராக இருந்தபோது, சேலத்தைப் பற்றி இதே அவையிலேதான் நானும் நம்முடைய பேராசிரியர் அவர்கள் எதிர்தரப்பிலேயிருந்து பேசுகின்ற அந்தக் காலகட்டத்தில், சேலம், சேலம் என்கிறீர்களே, சேலம் என்பது அமெரிக்காவில் உள்ள ஒரு ஊரே தவிர, அங்குள்ள இரும்புதான் நல்ல இரும்பே தவிர, இங்குள்ள கஞ்சமலை இரும்பு, சேர்வராயன்மலை இரும்பு எல்லாம் பயனுள்ள இரும்பு அல்ல என்று ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இதே அவையிலே பேசியிருப்பதை நான் மறந்துவிடவில்லை. அப்பொழுதுதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுச்சி நாள் கொண்டாடி சேலம் இரும்புக்காக, அதைப் போலவே இன்னும் பல திட்டங்களுக்காக தென்னகத்திற்கு தரப்பட வேண்டிய திட்டங்களுக்காக,

''சிந்திரி தொழில் சிறக்கிறது அங்கே
முந்திரித் தொழில் சிதைகிறது இங்கே''

என்றெல்லாம் வாசகங்களை அமைத்து, நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி, பல திட்டங்களுக்காகப் போராடினார்கள். அதையொட்டி பல திட்டங்களை நாம் பெற்றிருக்கிறோம். வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்றிருந்த நிலை மாறி இருப்பதை நாம் காண்கிறோம். அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே இன்றைக்கு தெற்கு இல்லை. ஆனால், நம்முடைய நண்பர் ஞானசேகரன் தமிழகம் அப்படியாகிவிட்டது என்று சொன்னார். தமிழகம் தேய்ந்துவிட்டது என்று சொன்னார். அதைக்கூட, இன்னும் அடுக்குச் சொல்லில் தமிழகம் தாழ்ந்து விட்டது என்று சொன்னால் குணசேகரனுடைய வாசகத்திற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். தமிழகம் ஒன்றும் தாழ்ந்துவிடவில்லை. ஞானசேகரன் போன்ற நல்ல நண்பர்கள் எல்லாம் இருக்கும்போது தமிழகம் தாழாது. தாழ விடமாட்டோம் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இன்று ஆளுநர் உரையிலே இன்னும் பலர் உரையாற்ற வேண்டியிருக்கிறது. நாளைய தினம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்றி, நான் பதில் அளிக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு சட்டமன்ற நிகழ்ச்சிகள் ஒத்தி வைக்கப்படும். இந்தச் சூழ்நிலையில் நாம் இருக்கின்றோம். இவ்வளவு நேரம் பேசிய பிறகு இன்னொரு நாள் தீர்மானத்திற்காக செலவழிக்கத் தேவையில்லையென்று நான் கருதி, உங்கள் முன்னிலையில் இந்தத் தீர்மானத்தைப் படிக்கின்றேன். உங்கள் அத்தனை பேருடைய கருத்துக்கு ஏற்ப இப்போது நடைபெற்றதே ஒரு தீர்மானத்திற்காக நடைபெற்ற விவாதம் என்ற அளவில் அதைப் படிக்கின்றேன்.

''பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பொதுத் துறை நிருவாகத்தில் நடைபெற்று வருகின்ற சேலம் உருக்காலை நிருவாகம் தொடர்ந்து பொதுத் துறையிலேயே நடைபெறுவதற்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும், தனியாரிடம் ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் இச்சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதற்கு எதிர்ப்பு உண்டா இல்லையா என்பதைத் தாங்கள்தான் தெரிந்துகொள்ள வேண்டும்.

காவல் துறை பிரச்சினை

உரை : 101 **நாள்: 31.03.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சியினுடைய கொறடா ஞானசேகரன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் ஹேமச்சந்திரன் அவர்களும் எடுத்துவைத்துள்ள சிறப்பு கவன ஈர்ப்பின் மீது சில கருத்துக்களை நானும் கூற வேண்டியவனாக இருக்கிறேன். பொதுவாகச் சில செய்திகளை இருவரும் எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். இந்த விவாதத் தினுடைய நோக்கம் குறிப்பாக ஒன்றாக இருந்தாலும்கூட, இருவருடைய உரையும் பொதுவாக காவல் துறையைக் குற்றஞ் சாட்டுவது என்ற முறையிலே அமைந்திருந்தது. எல்லா வற்றிற்கும் காவல் துறையைப் பொறுப்பாக ஆக்கிவிட முடியாது என்பதையும் மறந்துவிடக் கூடாது. காவல் துறை ஒரு சில இடங்களிலே சில குறைபாடுகள் உடையதாக நடந்து கொண்டாலும், எல்லோரும் நிறைவடையக்கூடிய அளவிலே காவல் துறை நடந்துகொண்ட பல்வேறு நிகழ்ச்சிகள் தமிழகத்தில் நடைபெற்று இருக்கின்றன என்பதை மறந்துவிடக்கூடாது. எத்தனையோ களவுகள் கண்டுபிடிக்கப்பட்டு, எத்தனையோ கொள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டு, எத்தனையோ கொலைகள் கண்டுபிடிக்கப்பட்டு, வீர, தீரத்தோடு போராடி, தங்களுடைய உயிரைக்கூட திரணமாக மதித்து காவலர்கள் எந்த அளவிற்குப் பணியாற்றி இருக்கிறார்கள், பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடுவதில்லை.

அதே நேரத்திலே, ஒன்றிரண்டு இடங்களிலே நடைபெறு கின்ற குறைகளைச் சுட்டிக்காட்டுவதைத் தவறு என்று சொல்ல

மாட்டேன். எதிர் வரிசையில் இருக்கின்றவர்களுக்கு, குறை களைச் சுட்டிக்காட்டுவதுதான் கடமை. அவை எப்படி குறைகள் அல்ல என்றோ அல்லது குறைகள் இருந்தால் அவற்றை எப்படி நிவர்த்தி செய்வது என்றோ முடிவு செய்து அந்தப் பிரச்சினை யைத் தீர்த்துவைப்பது என்பது ஆளுங்கட்சிக்குள்ள கடமை என்பதை நான் மறந்துவிடவில்லை.

இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இதற்குப் பின்னால் இருக்கின்ற ஒரு சிறிய வரலாற்றை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடலூர் மாவட்டம், திருப்பாப்புலியூர் மற்றும் கடலூர் பழைய நகர புகைவண்டி நிலையங்களுக்கிடையே உள்ள சூரப்ப நாயக்கன் சாவடியில், 21-3-2000 அன்று இரவு 9-45 மணியளவில் இருப்புப் பாதையிலே குண்டு ஒன்று வெடித்ததில், ஒரு மீட்டர் நீளம் அளவிற்கு இருப்புப்பாதை சேதமடைந்தது. மேலும், சம்பவ இடத்திலிருந்து ஒரு வெடிக்காத குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அங்கு கண்டெடுக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களிலிருந்து, அமெரிக்க அதிபர் கிளிண்டன் இந்தியாவிற்கு வருவதைக் கண்டித்தும், தமிழ்நாடு விடுதலைப் படை இயக்கத்தைச் சேர்ந்த லெனின் மறைந்த தேதியை நினைவுகூரும் வகையிலும், தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் இக்குண்டுகளை வைத்ததாகத் தெரிகிறது. இது சம்பந்தமாக திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது.

சென்னையிலே இருந்து வந்த வெடிகுண்டு நிபுணர்கள் 23-3-2000 அன்று இரவு 8-00 மணியளவில் வெடிக்காத குண்டைச் செயலிழக்கச் செய்தார்கள். குண்டு வெடிப்பில் எவருக்கும் காயமில்லை. காவல் துறை மற்றும் இரயில்வே துறையினரின் ஒருங்கிணைந்த விரைவு நடவடிக்கையினால், நான்கு மணி நேரத்திற்குள்ளாக இரயில் பாதை சரிசெய்யப் பட்டு, போக்குவரத்து சீரானது.

புலன்விசாரணை, 'Q' பிரிவு வசம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. தீவிர விசாரணையின் அடிப்படையில் குற்றம் புரிந்தவர்கள் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களையும்

அவர்களுடன் இணைந்து இந்தச் சதித் திட்டத்தில் ஈடுபட்டவர் களையும், அவர்களுக்கு ஆதரவு கொடுத்தவர்களையும் பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுமார் 20 ஆண்டுகளாக பெரம்பலூர், கடலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு விடுதலைப்படை என்ற இயக்கத்தினர் இடதுசாரி தீவிர கம்யூனிச சித்தாந்தத்தின் அடிப்படையில் சுய நிர்ணய உரிமை கோரி தீவிரவாத நடவடிக்கைகளில் அவ்வப்போது ஈடுபட்டு வந்துள்ளார்கள். 1987-ல் அரியலூர் இரயில் பாலத்திற்குக் குண்டு வைத்து இரயில் கவிழ்ப்பு ஏற்படுத்தி பல உயிர்கள் பலியானதற்குக் காரணமான இந்த இயக்கத்தினர் அதன் பின்னரும் அவ்வப் போது குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும், காவல் நிலையங் களைத் தாக்குவதிலும், கொள்ளைகளிலும் ஈடுபட்டு வந்தார்கள். 1986 முதல் 1996 வரை சுமார் 35 வன்முறைச் சம்பவங்களில் இப்பிரிவினர் ஈடுபட்டுள்ளார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாடு விடுதலைப் படையைச் சேர்ந்த முக்கியத் தலைவர்களும், உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டுள்ளார்கள். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என்று திரு. ஞானசேகரன் சொன்னார். இந்த இரண்டு ஆண்டுகளிலே மாத்திரம் அந்தப் படையினுடைய முக்கியத் தலைவர்கள், உறுப் பினர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக் கின்றார்கள்.

சுமார் இருபது ஆண்டுகளாக தலைமறைவாக இருந்த சுந்தரம் என்பவர் கைது செய்யப்பட்டது இதில் குறிப்பிடத் தக்கது. இப்பிரிவினர் பலர் N.S.A. அல்லது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழும் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளார்கள். இதுபோன்ற நடவடிக்கைகளினால், கடந்த இரண்டு ஆண்டுகளாக இக்குழுவினரின் நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், தலைமறைவாக உள்ள ஒருசில நபர்கள் கடலூர் இரயில் தண்டவாளம் தகர்ப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார்கள்.

சம்பவ இடத்திலே இருந்த துண்டுப் பிரசுரங்களில் இந்திய பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்) என எழுதப்பட்டிருந்ததால் மேற்படி வெடிகுண்டை வைத்தவர்கள் மார்க்சிஸ்ட் கட்சியினர்தான் எனத் தவறாகக் கருதி, சூரப்ப நாயக்கன் சாவடியைச் சேர்ந்த பொதுமக்கள் ஒன்று கூடி, அப்பகுதியில் அமைந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியி னுடைய தொழிற்சங்க அலுவலகத்தைத் தாக்கி அங்குள்ள பொருட்களைச் சேதப்படுத்தி, ஆவணங்களுக்கும் தீ வைத் தார்கள். மேலும், மேற்படி கும்பல், திருப்பாப்புலியூரிலே உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அலுவலகத்தையும் தாக்க முற்பட்டார்கள். காவல் துறை அதிகாரிகள், மேற்படி கும்பலைத் தடுத்து நிறுத்தி, வன்முறைச் சம்பவங்கள் மேலும் பரவாமல் தடுத்துவிட்டார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்க அலுவலகம் தாக்கப்பட்டதன் தொடர்பாக, குற்ற எண் 227/2000 பிரிவு 147, 148, 448, 427, 435, 307, 506 (ii) மற்றும் 379 I.P.C-ன் கீழ் சுமார் 100 நபர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புலன் விசாரணையின்போது சூரப்பநாயக்கன் சாவடியைச் சேர்ந்த சுப்பிரமணி உள்ளிட்ட 8 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளார்கள். தலைமறைவாக உள்ள மற்ற குற்றவாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. இதில் நடவடிக்கை எடுக்கப்பட்டும்கூட, இங்கே குறை சொல்லப்பட்டது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய அலுவலகத்தைக் குறிவைத்து ஏதோ ஆளுங்கட்சியின் சார்பாகத் தாக்குதல் நடைபெற்றது போன்ற ஒரு தோற்றத்தை நண்பர் ஹேமச்சந்திரன் இங்கே ஏற்படுத் தினார். அது முற்றிலும் தவறு. அதில் உள்ள ஒரு தோழருடைய பெயரைக்கூட பத்திரிகையில் அடிக்கடி வெளியிட்டு ஏதோ ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்பதைப்போலக் குறிப்பிடு கிறார்கள். குறிப்பிடப்படுகின்ற அந்தப் பெயருக்கு உரியவர் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு

முன்பே நீக்கப்பட்டவர் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் விரோத மனப்பான்மை இருக்கிறது அல்லது கொள்கை மாறுபாடு இருக்கிறது என்பதற்காக வேண்டுமென்றே காவல் துறையினர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தாக்கப்படும்போது வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களை விட்டுவிடுகிறார்கள் என்று சொன்ன குற்றச்சாட்டு ஆதாரம் அற்றது என்பதற்கு எத்தனையோ சான்றுகள் உண்டு. மறந்துபோய் இருக்க மாட்டீர்கள், மதுரை சம்பவத்தை அப்போது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின், மதுரை லீலாவதி கொலை செய்யப்பட்டபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்த உறவும் ஒட்டும் கிடையாது. அப்போதும் பல வேறுபாடுகள் உண்டு. அந்த நேரத்தில் இதே அவையில், இதே இடத்தில் நின்று நான் சொன்னேன், குற்றவாளிகள் யாராக இருந்தாலும் கைது செய்யப்படுவார்கள் என்று. மறுநாளே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கைது செய்யப்பட்டு இப்போது அவர்களுக்கெல்லாம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஏறத்தாழ தண்டனை விதிக்கப்பட்டிருக்கிற காலம் வரையில் ஜாமீனில்கூட விடப்படவில்லை என்பதையும் 3½ ஆண்டு காலம், 4 ஆண்டு காலம் அவர்கள் சிறைச்சாலையிலே இருந்து தண்டனையைப் பெற்று இருக்கிறார்கள் என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ளும்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு பாரபட்சமாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது.

ஒன்றை மறந்துவிட்டீர்கள். குடவாசல் நிகழ்ச்சி. குட வாசல் நிகழ்ச்சியிலே ஒரு கம்யூனிஸ்ட் தோழர் கொல்லப் பட்டார். கொன்றதற்குக் காரணம் அ.தி.மு.க.வினர். ஆனால், கொன்றதாகச் சொல்லப்பட்டவர் அ.தி.மு.க. மந்திரிகளுடைய காரிலே சென்னையைச் சுற்றி வலம் வந்தார். அதை இங்கேயே

கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் எடுத்துக் கூறியபோது எவ்வளவு பெரியரகளை இந்த சட்டசபையில் கடந்தகால ஆட்சியிலே நடைபெற்றது என்பதை நானும் அறிவேன், நாடும் மிக நன்றாக அறியும். அப்படிப்பட்டவர்களோடு நீங்கள் உறவு கொள்கிறீர்கள். ஆனால், தயவு தாட்சண்யம் இல்லாமல், யாராக இருந்தாலும், கட்சி சார்பில்லாமல், அதைப்பற்றிக் கவலைப்படாமல் நீதி வழி நடக்கின்ற எங்கள் மீது மாத்திரம் குறை கூறிக் கொள்கிறீர்கள். என்ன காரணம் என்று எங்களுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நீங்கள் என்னதான் சொன்னாலும் நாங்கள் எங்கள் வழியில், நல்ல வழியில், நீதி வழியில், அற வழியில் நடப்போம் என்பதை மாத்திரம் இங்கே எடுத்துக்கூறி, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறி, இந்த அளவில் அமைகிறேன். வணக்கம்.

தடை செய்யப்படாத இயக்கங்கள்

உரை : 102 நாள்: 12.04.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரத்யேகமான காரணத்தையொட்டி இந்தக் கவன ஈர்ப்பைத் தாங்கள் அனுமதித்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், தங்களுடைய அறையில் இதுபற்றி விவாதிக்கப்பட்டபோது, நான் சொன்ன கருத்து, 'தடை செய்யப்படாத இயக்கங்கள் தமிழ்நாட்டில் ஒரு நிகழ்ச்சியை நடத்துகிற காலத்தில், அந்த நிகழ்ச்சியைத் தடைசெய்ய வேண்டுமென்ற நோக்கில் இதுபோன்ற தீர்மானங்களைக் கொண்டு வருவது என்றால், இந்தக் கவன ஈர்ப்புக்கு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு உள்ள மதிப்பு Credit குறைந்துவிடும். எனவே, இதை நீங்கள் பேசும்போது வேண்டுமானாலும் குறிப்பிடுங்கள்; பல மானியங்களிலே பேசவேண்டிய சந்தர்ப்பங்கள் வரும்போது குறிப்பிடுங்கள்; இதை ஒரு கவன ஈர்ப்பாகவோ, ஒத்திவைப்புத் தீர்மானமாகவோ கொண்டுவரத் தேவையில்லை' என்று சொன்னேன்.

ஆனால், எப்படியோ, சுப்பராயன் அவர்கள் அவர்களுக்குள்ள திறமையின் காரணமாக, இந்தப் பிரச்சினையை அவையில் எடுத்து வைத்து சில கருத்துகளைக் கூறியிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தைப் பற்றி என்னுடைய கருத்து என்ன என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும். இன்றைக்குக்கூட ஏதோ, நான் அதை சமுதாய இயக்கம் என்று சொன்னதாகச் சொல்லி, ஒரு குற்றச்சாட்டை என் மீது சுமத்தி, என்னை ஆர்.எஸ்.எஸ். என்றே சுட்டிக்காட்டுகிற நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் அரசியலுக்காக நிறைய பேர் செய்

கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் என்னைப்பற்றி நாத்திகம் பேசுகின்ற நாத்திகர்களைவிட நான் நல்ல நாத்திகன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் அறிவார்கள்.

ஆர்.எஸ்.எஸ். சமுதாய இயக்கம் என்று நான் எந்தச் சூழ்நிலையிலே சொன்னேன்? முதலில் உள்ள வாக்கியத்தையும் அடுத்து வருகிற வாக்கியத்தையும் விட்டுவிட்டு, 'சமுதாய இயக்கம்' என்று சொல்லிவிட்டார் என்று குறிப்பிட்டார். சமுதாய இயக்கம் என்றால் எந்தச் சமுதாயத்தினுடைய இயக்கம் என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது- ஒவ்வொரு சமுதாயத்திற்கு ஒரு இயக்கம் இருக்கும். இரண்டு சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமைகள், வேற்றுமைகள் இருக்கலாம். ஏதோ ஒரு குறிப்பிட்ட சமுதாயத்திற்காக பாடுபடுகின்ற இயக்கம் என்கிறபோது நான் சொன்னேன். 'திராவிடர் கழகம்' போல என்று சொல்ல முடியாது. திராவிடர் கழகம், ஆர்.எஸ்.எஸ். இரண்டிற்கும் மகத்தான வேறுபாடுகள் உண்டு, முரண்பாடுகள் உண்டு. நான் திராவிடர் கழகத்திலிருந்து வந்தவன் என்று சொன்ன பிறகும்கூட ஆர்.எஸ்.எஸ். முத்திரையை எப்படியாவது எனக்கு குத்த வேண்டுமென்று பல பேர் கருதுகிறார்கள்.

நம்முடைய வேலாயுதன் அவர்கள் ஆர்.எஸ்.எஸ். னுடைய தூய்மை, ஆர்.எஸ்.எஸ்.னுடைய நோ்மை இவற்றைப் பற்றிப் பேச அவருக்கும் உரிமை உண்டு. இந்தியாவிலே, பெரிய ஜனநாயக நாட்டில் அவரவர்களுக்கும் பல உரிமைகள் உண்டு. அந்த உரிமைகளில் தலையிட யாருக்கும் நியாயம் கிடையாது.

கோயம்புத்தூரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் இது தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல என்ற காரணத்தாலும், ஜனநாயகத்திலே எந்த ஒரு கட்சியி னுடைய ஊர்வலம், பொதுக்கூட்டம் நடத்துவதாக இருந்தாலும், அவ்வப்போது உள்ள சூழ்நிலைகளை எண்ணிப்பார்த்து, அன்றைக்கு உள்ள சூழ்நிலையை எண்ணிப்பார்த்து, கடந்த காலத்தில் நடந்தது, எதிர்காலத்திலே நடக்கும் என்பதை யெல்லாம் அனுமானிக்காமல், அன்றுள்ள சூழ்நிலையை எண்ணிப்பார்த்து உரிமைகளை வழங்குவது என்பது காவல்

துறையினுடைய கடமையாக இருந்து வருகிறது. இதுபற்றி முதலிலே, கோயம்புத்தூரிலே உள்ள காவல் துறை அனுமதி வழங்குவதற்கு முன்பு, ஒருவேளை அனுமதி வழங்க மாட்டார்களோ என்கின்ற கருத்தோடு என்னிடத்திலே வந்து சில தலைவர்கள் பேசினார்கள். இந்த அனுமதி வழங்கப்பட வேண்டுமென்றெல்லாம் கேட்டார்கள். நானும் கோயம்புத்தூர் என்ற காரணத்தால் பல இடையூறுகள் வரக்கூடுமே என்று எடுத்துச் சொன்னதுண்டு. ஆனால் அவர்களெல்லாம் என்னிடத் திலே உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அமைதியான முறையில் நடத்துகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

இங்கு அனுமதியே கொடுக்கப்படவில்லை என்று லத்தீப் அவர்கள் சொன்னார்கள். அது தவறு. எனக்கு வந்த தகவல் அவர்கள் 3 இடங்களிலே அனுமதி கேட்டார்கள். 3 இடங்கள் வழியாக ஊர்வலம் செல்ல. ஒரு வழிதான் அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் வந்திருக்கிறது. அனுமதியை அங்குள்ள போலீசார் கொடுக்காமல் இருந்திருந் தால் நிச்சயமாக அந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு அனுமதிக்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனுமதி கொடுத்திருக்கும் பட்சத்தில் ஜனநாயக நாட்டில் இவற்றை யெல்லாம், தடை செய்யப்படாத ஒரு இயக்கத்தினுடைய நிகழ்ச்சியைத் தடுப்பது என்பது இயலாத காரியம். எல்லா வகையிலும் அமைதியாக நடைபெற எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். எல்லோரும் ஒத்துழைப்போம் என்கின்ற அந்த உறுதியையும் நான் இங்கே தெரிவித்துக்கொண்டு, உத்தரவாதம் அளித்தவர் களுக்கு உத்தரவாதத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்வார்கள் என்ற எதிர்பார்ப்போடு அமர்கிறேன். (குறுக்கீடு)

அரிசி விலை மானியம்

உரை : 103 **நாள் : 17.04.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின்மீது திரு. ஞானசேகரன் அவர்கள் தொடங்கி, திரு. வேலாயுதன் அவர்கள் வரையிலே, இடையில் நம்முடைய நண்பர் திரு. சுப்பராயன் அவர்கள், திரு. சுந்தரம் அவர்கள், திரு. அப்துல் லத்தீப் அவர்கள், திரு. சந்தானம் அவர்கள், திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள்.

இதிலே ஒரு கருத்து முக்கியமாகச் சொல்லப்பட்டது. ''அரிசி விலை உயர்ந்த ஒரு நேரத்தில், அதற்கான மானியங்கள் குறைக்கப்பட்டும், மாநிலங்களுக்கு மத்திய அரசு வழங்குகின்ற ரேஷன் அரிசியினுடைய விலை அதிகமானபொழுது, அது சரியல்ல என்று நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக்காட்டிய முதலமைச்சர், கச்சா எண்ணெய் விலை ஏற்றப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த மானியம் குறைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், ஏன் அதைப்பற்றிச் சொல்லவில்லை. அதற்கு மாறாக வக்காலத்து வாங்கியது என்ன நியாயம்''? என்ற ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

அரிசி விலையைப் பொறுத்தவரையிலே, அதைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பு இந்தியாவிற்குள்ளேயேதான் இருக்கிறது. மத்திய அரசு அதை இந்தியாவிற்குள்ளே சமாளிக்கக் கூடிய வழிவகை இருப்பதால்தான் இந்தியாவுக்குள்ளேயே சமாளிக்கவேண்டிய பிரச்சினைகள் என்பதால் ''நீங்கள் மாநிலங்களுக்கு வழங்குகின்ற ரேஷன் அரிசியினுடைய விலையை உயர்த்திவிட்டீர்கள். அதைத் திரும்பப் பெற வேண்டும், அதைக் குறைக்க வேண்டும்'' என்று நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்தது மாத்திரமல்ல, பிரதமர்

அவர்களுக்குக் கடிதங்களும் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதங்களுடைய நகல்கள்கூட என்னிடத்திலே இருக்கின்றன. ஆனால், கச்சா எண்ணெய் விலை என்பது சர்வதேச விலை. சர்வதேச விலையின் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடி. அதனால்தான் நான் வேறு வழியில்லை என்று சொல்லவேண்டிய அவசியம் எனக்கு ஏற்பட்டது. வேறு வழியில்லை என்று சொன்ன காரணத்தால், வக்காலத்து வாங்குகின்றேன் என்று பொருள் இல்லை.

நம்முடைய நண்பர் சுந்தரம் அவர்கள் இங்கே பேசும்போது, பதவி போய்விடுமோ என்று பயந்துகொண்டு நீங்கள் மத்திய அரசை இதில் ஆதரிக்கிறீர்கள் என்ற சொன்னார். பதவி போய்விடுமே என்கின்ற பயம் எங்களுக்கு 1976 ஆம் ஆண்டு emergency-யை எதிர்த்தபோது வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பதவி போய்விடுமே என்கின்ற பயம், இலங்கைத் தமிழர்களுக்காக நாங்கள் கண்ணீர் வடித்து எங்களுடைய கண்டனங்களைத் தெரிவித்த காலத்திலே வரவில்லை, (மேசையைத் தட்டும் ஒலி). இப்பொழுது எனக்குப் பதவி போய்விடுமோ என்ற பயம் இருக்கிறது. ஏனென்றால் என்னுடைய பதவி போய், அந்த இடத்திலே மூப்பனார் வந்து அமர்ந்தால் நான் வருத்தப்படமாட்டேன். நல்லகண்ணு வந்து அமர்ந்தால் வருத்தப்படமாட்டேன். சங்கரய்யா வந்து அமர்ந்தால் வருத்தப்படமாட்டேன். வேறு யாரோ வந்து அமர்ந்துவிடுவார்களோ, நான் இந்தப் பதவியை விட்டு விலகினால் (மேசையைத் தட்டும் ஒலி) என்கின்ற அந்த அச்சத்தின் காரணமாகத்தான் பதவி போய்விடக்கூடாது என்று நான் பாதுகாத்துக்கொண்டு இருக்கிறேன் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நண்பர் சுந்தரத்தின் வாயிலாக நாட்டிலே உள்ள நல்லவர்களுக்கெல்லாம் நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

சில விவரங்களை இங்கே நான் சொல்லவேண்டும். வக்காலத்து அல்ல; இவை விவரங்களை தெரிந்துகொள்ள வேண்டிய விவரங்கள் என்பதற்காகச் சொல்லுகின்றேன். 1994ஆம் ஆண்டிலேயே, மத்தியிலே காங்கிரஸ் ஆட்சி இருந்த போது, பிரதமராக இருந்த நரசிம்மராவ் அவர்கள், சமையல்

எரிவாயுவுக்கு மானியத்தைப் படிப்படியாகக் குறைக்கவேண்டு மென்று முடிவெடுத்து, 14.2 கிலோ எடைகொண்ட ஒரு சிலிண்டருக்கு 10 ரூபாய் என்று விலையை உயர்த்தினார். பின்னர் பெட்ரோலியத் துறை சீர்திருத்தம் சம்பந்தமாக ஒரு வல்லுநர் குழுவை பிரதமர் நரசிம்மராவ் நியமித்திருந்தார். அந்தக் குழு, திரு. தேவ கவுடா பிரதமராக இருந்தபோது இரண்டு அறிக்கைகளைத் தந்துள்ளது. அந்தக் குழுவின் இரண்டாவது அறிக்கையை மத்திய அரசு, திரு. ஐ. கே. குஜ்ரால் பிரதமராகவும், திரு. ப. சிதம்பரம் அவர்கள் மத்திய நிதியமைச்சராகவும் இருந்தபோது, ஏற்றுக்கொண்டு 20-11-1997-ல் சில முடிவுகளை எடுத்து அறிவித்தது, 2001-2002ஆம் ஆண்டில் பொது விநியோக முறையிலே வழங்கப்படும் மண்ணெண்ணெய்க்காக வழங்கும் மானியம், கச்சா எண்ணெய் இறக்குமதி விலையில் 33.3 விழுக்காடு அளவுக்குக் குறைக்கப்படும் என்பதும், 2000-2001ஆம் ஆண்டில் சமையல் எரிவாயுவுக்கு (L.P.G. Gas)-வழங்கும் மானியம், இறக்குமதி விலையில் 15 விழுக்காடு அளவுக்குக் குறைக்கப்படும் என்பதும், இறக்குமதி விலைக்கு ஈடாக, பெட்ரோல் மற்றும் விமானத்திற்குப் பயன்படும் எரிபொருள் விலை உயர்த்தப்படும் என்பதும், டீசல் விலை உலக விலைக்கு (International Price) ஏற்ப தொடர்ந்து மாற்றி அமைக்கப்படும் என ஏற்கெனவே இருந்த மத்திய அமைச்சரவை 1-9-1997 அன்று எடுத்த முடிவுகள் பின்பற்றப்படும் என்பதும் அந்த முடிவுகளாகும்.

கச்சா எண்ணெய் விலை 1998 இறுதியிலும் 1999 ஆரம்பத்திலும் barrel ஒன்றுக்கு அமெரிக்க டாலர் 10 என்று இருந்தது. ஆனால் பிப்ரவரி 1999-லிருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் விலை 155 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது, 1999ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஒரு டன் கச்சா எண்ணெய் விலை 3210 ரூபாய் என்பதிலிருந்து மார்ச் 2000-ல் 8180 ரூபாய் என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. உலக சந்தை விலை கச்சா எண்ணெய்க்கு அதிகரித்துள்ள சூழ்நிலையிலும் விற்கும் விலையினை மாற்றாத சூழ்நிலையிலும், oil pool பற்றாக்குறை 31 மார்ச் 1999 அன்று 3408 கோடி

ரூபாயாக இருந்தது, 31 மார்ச் 2000-ல் 6340 கோடி ரூபாயாக உயர்ந்தது. உலக விலை இதே அளவிற்கு தொடர்ந்து கொண்டே போய் விற்பனை விலையையும் மாற்றாமல் இருந்தால், oil pool பற்றாக்குறை மட்டும் 31 மார்ச் 2001-ல் 19,000 கோடி ரூபாயாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சூழ்நிலைதான் மண்ணெண்ணெய், சமையல் எரிவாயுவிற்கான விலை மாற்றத்திற்கு வேண்டிய அவசியத்தை எற்படுத்தியுள்ளது என்று மத்திய சர்க்கார் கூறுகிறது.

1975-ல் ஒரு லிட்டர் டீசல் சில்லறை விலைக்கும், மண்ணெண்ணெய் சில்லறை விலைக்கும் உள்ள வித்தியாசம் ஒரு பைசாதான். ஆனால் 1980-ல் டீசல் விலைக்கும் மண்ணெண்ணெய் விலைக்கும் உள்ள வித்தியாசம் 66 பைசா. இந்த வித்தியாசம் 1985-ல் 119 பைசாவாகவும், 1990-ல் 209 பைசாவாகவும், 1995-ல் 372 பைசாவாகவும் ஆயிற்று. ஆனால் 22-3-2000 அன்று ஒரு லிட்டர் டீசல் விலை ரூ. 14.04 இதே நாளில் ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் விலை ரூ. 2.67 டீசலின் சில்லறை விலைக்கும், மண்ணெண்ணெயின் சில்லறை விலைக்கும் உள்ள வித்தியாசம் 11 ரூபாய் 37 பைசாவாகும். இந்த அளவிற்கு உள்ள விலை வித்தியாசத்தால் பொது விநியோகத்திற்கு ஒதுக்கப்படும் மண்ணெண்ணெய் கள்ளச் சந்தைக்குச் செல்ல அதிக வாய்ப்புகள் உள்ளதையும் மறந்து விடமுடியாது. அதைத்தான் நம்முடைய அருமை நண்பர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். ஒன்றுக்கொன்று விலை வித்தியாசம் இந்த அளவிற்கு இருக்கும் போது இந்தப் பொருள் கலக்கப்பட்டு கள்ளச் சந்தையிலே வியாபாரம் ஆக, கடத்தல் பொருளாக ஆக வாய்ப்புக்கூறுகள் அதிகம். அதேபோல மண்ணெண்ணெயை, டீசலோடு கலப்படம் செய்வதற்கான வாய்ப்பையும் நாம் மறந்துவிடமுடியாது.

இன்றைக்குக்கூட, இந்து பத்திரிகையிலே ஒரு கட்டுரை வந்திருக்கிறது. ''அரிசி விலையை நாம் இங்கே ஏற்றவில்லை; மற்ற மாநிலங்களிலே அரிசி விலையை ஏற்றியிருக்கிறார்கள். அதன் காரணமாக, அரிசி, ரேஷன் அரிசி கடத்தப்படக்கூடும்'' என்று, ''அதற்கெல்லாம், ஏது இருக்கிறது'' என்ற அளவிலே ஒரு கட்டுரை, எச்சரித்துச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

இந்த விலை மாற்றம் கொண்டுவரப்படாமல் இருந்திருந்தால் மண்ணெண்ணெய்க்கு மாத்திரம் 11,000 கோடி ரூபாய் மானியமாகவும், சமையல் எரிவாயு, (L.P.G.)-க்கு 7,000 கோடி ரூபாய் மானியமாகவும், வழங்கவேண்டி இருக்கிறது. மத்திய அரசு விலையை மாற்றியமைத்த பிறகும், 31 மார்ச் 2000-ல் 6,300 கோடி ரூபாயாக இருக்கும் பற்றாக்குறை அளவு 31 மார்ச் 2001-ல் 13,670 கோடி ரூபாயாக உயரும். 22-3-2000 அன்று மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இந்தியாவிலே 2 ரூபாய் 67 காசு என்ற அளவிலே இருக்க - அண்டை நாடுகளில் - மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இலங்கையில் 9 ரூபாய் 15 காசு; பாகிஸ்தானில் 9 ரூபாய் 46 காசு; வங்காள தேசத்தில் 11 ரூபாய் 4 காசு.

அதைப்போலவே சமையல் எரிவாயு விலை ஒப்பீடு பார்த்தால், பாகிஸ்தானில் ஒரு கிலோவிற்கு சமையல் எரிவாயு 15 ரூபாய் 95 காசு; இலங்கையிலே 16 ரூபாய் 68 காசு; வங்காள தேசத்தில் 17 ரூபாய் 19 காசு; இந்தியாவிலே 10 ரூபாய் 68 காசு.

விலையேற்றத்திற்கு முன் மண்ணெண்ணெய் ஒரு லிட்டர் இந்தியாவில் விலை 2 ரூபாய் 67 காசு என்பது இப்போது 5 ரூபாய் 17 காசாக ஆகியிருக்கிறது. 22-3-2000 அன்று மத்திய அரசு gas விலையில் அதிகபட்சமாக, 14.2 கிலோ கொண்ட சிலிண்டருக்கு 30 ரூபாயும், மண்ணெண்ணெய் விலையில் லிட்டருக்கு ரூ. 2.50-ம் உயர்த்தியது.

இந்த விலை உயர்வை நான் ஆதரிக்கிறேன் என்றொரு குற்றச்சாட்டு இங்கே கூறப்பட்டது. எதிர்க்கட்சி என்பதாலோ அல்லது தோழமைக்கட்சி என்பதாலோ எதையும் கண்ணை மூடிக்கொண்டு எதிர்க்க முடியாது. சில நடைமுறை உண்மைகளை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

இந்த விலை உயர்வைப் பற்றி என்னுடைய கருத்தை நிருபர்கள் கேட்டபோது, வேறு வழியில்லாமல் விலை ஏற்றப் பட்டுள்ளது என்றும், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே அங்கம் வகிக்கும் தி.மு.க- உள்ளிட்ட எல்லோருடனும் கலந்து ஆலோசித்த பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும், இதை

எதிர்க்கட்சியினர் கண்டிப்பது அவர்களுடைய கருத்து என்றும், ஏறத்தாழ 16,000 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு இருக்கும் என்று கருதப்பட்டு இந்த விலை உயர்வின் மூலமாக 6,000 கோடி ரூபாய் அளவிற்குத்தான் ஈடு செய்ய முடியும் என்று சொல்லப்படுவதாகவும், ஆதலால் மத்திய அரசின் இந்த முடிவைச் சரியென்று அவர்கள் கருதுகிறார்கள் என்றுதான் உண்மை நிலையை விவரித்தேனே தவிர, இந்த விலை உயர்வை ஆதரித்து நான் எந்தக் கருத்தையும் எப்போதும் தெரிவிக்கவில்லை.

அதுமாத்திரமல்ல, இந்த விலை உயர்வு குறித்து 22-3-2000 அன்று அறிவிப்பதற்கு முன்பு, அதே நாளில் அதைப்பற்றி ஆலோசிக்கக் கூட்டப்பட்ட தேசிய ஜனநாயகக் கூட்டணி கூட்டத்தில் என்ன பேசப்பட்டது என்பதை 23-3-2000 தேதியிட்ட ஸ்டேட்ஸ்மன் ஏடு விரிவாக வெளியிட்டிருக்கிறது. அது வருமாறு :-

"Several partners of the N.D.A. today resisted the Government's move on administered price hike and were able to reduce the original proposal considerably by their opposition. At the meeting of the N.D.A. partners called at the residence of the Prime Minister, heated protests from the Trinamul Congress and the D.M.K. prevented the Government from going for the hike that it originally proposed. The Petroleum Minister tried to explain the Government's logic over the subsidy cut while N.D.A. partners - the most vocal being Mr. Murasoli Maran, D.M.K. and Mr. Ajit Panja, Trinamul Congress - protested vehemently. They said it would be a tough decision to sell to the masses."

‘‘தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உறுப்புக் கட்சியினர் பலர் விலையை உயர்த்துவதாக இருந்த அரசின் முயற்சியைத் தடுத்தார்கள். மேலும், தமது எதிர்ப்பின் மூலமாக அரசின் மூலக் கருத்தில் இருந்த அதிக உயர்வைக் கணிசமாகவும் குறைத்தார்கள். பிரதமர் இல்லத்தில் கூட்டப்பட்டிருந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில்

திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் தரப்பில் பலத்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதால், மத்திய அரசு ஏற்கெனவே உத்தேசித்திருந்த அளவிற்கு விலை உயர்வு செய்வது தடுக்கப்பட்டது'' என்று ஸ்டேட்ஸ்மேன் எழுதுகிறது. ''மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் இந்தக் கூட்டத்தில் பெட்ரோலியப் பொருட்களுக்கு மானியக் குறைப்புக்கான காரணங்களை விளக்குவதற்கு முற்பட்டபோது, தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உறுப்பினர்கள் குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த திரு. முரசொலி மாறன் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு. அஜித் பாஞ்சா ஆகியோர் மிகக் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தார்கள்'' என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, எதிர்க்காமல் இல்லை. எதிர்த்த காரணத்தால்தான், இன்னும் அதிக அளவுக்கு உயர்த்தப்படக்கூடிய யோசனை முதலில் சொல்லப்பட்டதை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த அளவுக்கு உயர்த்தப்பட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

''இதற்கு என்ன காரணம், இதன் காரணமாக எந்த அளவுக்கு மானியம் தரப்படவேண்டியுள்ளது. இது யாருடைய தலையிலே விழும்'' என்றெல்லாம் நம்முடைய சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். ''100 கோடி மக்கள் தலையிலே விழும்'' என்று சொன்னார்கள். அவருடைய அந்த வாதத்திலே ஒரு நல்ல logic-ம் இருக்கிறது. ஒருவனே அவ்வளவையும் சுமப்பதைவிட 100 கோடி மக்களும் அதைப் பகிர்ந்துகொள்ள முடியும் என்கிற அந்த logic அதிலே இருப்பதை நானும் உணராமல் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி). எனவே இது இந்திய அளவிலே செய்யப்பட்டிருக்கிற ஒரு காரியமாக இருந்தால் இந்திய அரசு பொறுப்பு ஏற்று அதைக் குறைக்க வேண்டுமென்று சொல்லுகின்ற கடமை நமக்கு இருக்கிறது. அந்தக் கடமையை நாம் வரவு-செலவுத் திட்ட அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். பிறகு பிரதமருக்குப் பல கடிதங்களை எழுதி அதிலேயும் நான் வலியுறுத்தியிருக்கிறேன். இது சர்வதேச அளவில் ஏற்பட்டுவிட்ட ஒரு நிலை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

இங்கே இதைத் தொடர்ந்து நெல்லைப் பற்றியும், அரிசியைப் பற்றியும்கூடப் பேசப்பட்டது. ஆனால் மத்திய ரேஷன் அரிசி விலை உயர்வுக்குப் பிறகு கர்நாடகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.40; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 12.75. கேரளத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரேஷன் அரிசி விலை ரூ. 6.40; வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு ரூ. 11.40. ஆந்திராவிலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு கிலோ ரூ. 5.50; மேலே உள்ளவர்களுக்கு ரூ, 12.50. மேற்கு வங்கத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கு ரூ. 6.40; மேலே உள்ளவர்களுக்கு ரூ. 13.00. தமிழ்நாட்டில்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருந்தாலும், மேலே இருந்தாலும் ஒரே விலை ரூ. 3.50 (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்ற விலை இருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது என்று கூறிக் கொள்கிறேன். இதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று சொல்லப்பட்டது. நீங்கள் சொல்லி நான் எதையும் மறுப்பவன் அல்ல. இருந்தாலும்கூட, இது இப்பொழுது தேவையில்லாத ஒன்று என்பதையும் நான் தெரிவித்து இந்த அளவோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

உரை : 104 நாள்: 25.04.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது கவன ஈர்ப்புக் கொண்டு வந்தவர்கள், சுருக்கமாகப் பேசினாலும், நான் விளக்கமாகப் பதில் சொல்ல வேண்டிய அவசியத்திலே இப்போது இருக்கின்றேன். முதலில், நம்முடைய தாமரைக்கனி அவர்கள், எம்.ஜி.ஆர். கொண்டுவந்தத் திட்டம் என்பதால், சத்துணவு ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்று சொன்னார். எம்.ஜி.ஆர். அந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார்; அவரே, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை என்பதை தாமரைக்கனிக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன். எம்.ஜி.ஆர். கொண்டு வந்தத் திட்டம் என்பதற்காக அதை நிறுத்திவிடவில்லை. மாறாக, ஏறத்தாழ 70 இலட்சம் பிள்ளை களுக்கு வாரம் ஒரு கோழிமுட்டை வழங்குகின்ற இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தை மேலும் வலுப்படுத்துகின்ற வகையிலேதான் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. ஏதோ போகிற போக்கிலே புழுதிவாரித் தூற்றிவிட்டுப் போகிறவர்கள் வேண்டுமானால் தாமரைக் கனியைப் போல் இப்படிப் பேசலாம். எம்.ஜி.ஆர். அவர்கள் பெயரால், மருத்துவப் பல்கலைக்கழகம் அமைந்து, அது தொடங்கப்படுவதற்கு முன்பு எம்.ஜி.ஆர். மறைந்து, அதைத் தொடங்குவதற்காக வந்திருந்த முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. வெங்கட்ராமன் அவர்கள், தொடங்காமலேயே திரும்பிச் சென்று, பிறகு இந்த ஆட்சி உருவான பிறகு, அதே குடியரசுத் தலைவரை அழைத்து, எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தை-

மருத்துவப் பல்கலைக்கழகத்தைத் திறந்து வைத்தவன் நான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய உணர்வு படைத்த வர்களுக்கெல்லாம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எம்.ஜி.ஆர். சினி சிட்டி என்று பெயர் வைக்க வேண்டு மென்று கலை உலகம் முழுவதும் கதறியது. ஆனால், ஜெயா பிலிம் சிட்டி என்று பெயர் வைத்துக்கொண்டார்கள். எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி என்று பெயர் வைக்கவில்லை. நான் ஆட்சிக்கு வந்த பிறகுதான் அந்தப் பெயர் மாற்றப்பட்டு, எம்.ஜி.ஆர். பிலிம் சிட்டி (மேசையைத் தட்டும் ஒலி) என்று பெயர் வைக்கப் பட்டது என்பதை நண்பர் தாமரைக்கனி அவர்களுக்கு ஞாபகப் படுத்துகிறேன். அவருக்குச் சில நேரங்களில் ஞாபகம் வரும்; சில நேரங்களிலே ஞாபகம் வராது. (சிரிப்பு) அது என் குற்றம் அல்ல.

முதலில் தேர்தல் அறிக்கையைப் பற்றி நம்முடைய ஞான சேகரன் அவர்கள் உரையைத் தொடங்கியபோது குறிப்பிட் டார்கள். தேர்தல் அறிக்கையிலே சொல்லியிருக்கிறேன் என்று; அதை நம்முடைய சிவபுண்ணியம் அவர்கள், அவர்களுக்கு எடுத்துக் காட்டினார்கள். 1996 அல்ல- மன்னிக்கவும்- 1989ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேதான், சத்துணவு ஊழியர்களை Part time-Permanent ஊழியர்களாக ஆக்குவோம் என்று சொல்லி அதை நிறைவேற்றினோம், 1989-ஆம் ஆண்டு. ஆட்சிக்கு வந்தவுடன் அந்த வாக்குறுதியை நிறைவேற்றினோம், பகுதி நேர-நிரந்தரப் பணியாளர்கள் என்ற நிலையை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தோம். அதுவரையிலே அவர்கள் நிரந்தரம் அல்ல; பகுதி நேரப் பணியாளர்கள்தான், நிரந்தரமாக ஆக்கப்படவில்லை. அதற்குப் பின்னர் 1996 தேர்தல் அறிக்கை யிலே என்ன குறிப்பிட்டிருக்கிறோம் என்றால், இந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு சத்துணவு ஊழியர் என்ற தலைப்பில், 'சத்துணவு அலுவலர்களின் பல்வேறு கோரிக்கைகள், தற்போது உள்ள ஆட்சியிலே புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளன- கடந்தகால ஆட்சியைக் குறிப்பிடுகிறோம். -எனவே சத்துணவு அலுவலர் களின் குறைகள் பரிவுடன் கவனிக்கப்படும் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறோம், என்றுதான் 1996-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்றோம்.

1989-லே குறிப்பிட்டதை நிறைவேற்றி அவர்களைப் பகுதிநேர- நிரந்தர ஊழியர்களாக ஆக்கியிருக்கிறோம். ஆனால், அரசு ஊழியர்களாக ஆக்கவில்லை. அரசு ஊழியர்களாக அவர்கள் ஆவதென்றால், அவர்கள் வேலைவாய்ப்பகத்தின் மூலமாக மனு போட்டு, அல்லது வேலை வாய்ப்பகத்தின் மூலமாக தேர்ந்தெடுக்கிற அந்த நிலையிலேதான் அவர்கள் வர வேண்டும். அதற்கு அவர்கள் தயாராக இருப்பார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால்- அப்படி என்றால் எல்லாவற்றையும் கூட்டிக் கழித்துவிட்டு மறுபடியும் வேலை வாய்ப்பகத்திலே இருந்து அனைவரையும் தேர்ந்தெடுத்து, அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும். அதற்கும், இயலுகிற அளவுக்கு நிதிநிலை இடம் கொடுக்கிறதா- Employment Exchange-ல் இருந்து வருவதாக இருந்தாலும் கூட, நிதிநிலை இடம் கொடுக்கிறதா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். கழக அரசு 1989-ஆம் ஆண்டு முதல் சத்துணவுப் பணியாளர்கள், வெறும் தற்காலிகப் பணியாளர்களாக இருந்ததை மாற்றி, நிரந்தர பகுதிநேர- பணியாளர்களாக Permanent-Part time employees என்று ஆக்கியது. 25.4.1998 முதல் சத்துணவுப் பணியாளர்களுக்கு சிறப்பு சேம நல நிதித் திட்டத்தை (Special Provident Fund) விரிவாக்கியதும் இந்த அரசுதான்.

சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப் பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் நிலை-1 மற்றும் நிலை-2, ஊட்டச் சத்துப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூ. 200-5-250-10-400 என்று இருந்த ஊதிய விகிதத்தை ஆண்டுக்கு 140 கோடி ரூபாய் செலவையும் பொருட்படுத் தாமல், 1-1-1996 முதல் ரூ. 600-10-700-20-1100 என உயர்த்தி, அடிப்படை ஊதியம் ரூ. 760 என நிர்ணயிக்கப்பட்டது. இதன் காரணமாக அதுவரை மாத ஊதியமாக, சராசரியாக 450 ரூபாய் வாங்கிக்கொண்டிருந்த சத்துணவு ஊழியர், இந்த ஊதிய விகிதம் திருத்தியமைக்கப்பட்டதன் காரணமாக சராசரி 1,150 ரூபாய் மாதம் ஒன்றுக்கு ஊதியமாகப் பெறக்கூடிய நிலை ஏற்பட்டுவிட்டது. நம்முடைய ஞானசேகரன் அவர்கள் இங்கே

குறிப்பிட்டார்கள். பணியாளர்களுக்கு, கிராம நலப் பணியாளர் களுக்கு எல்லாம் ஊதியம் அதிகமாகப்பட்டது என்றும் குறிப் பிட்டார்கள். அவர்களுக்கு 1,150 ரூபாய் என்பதை மறந்து விட்டார்கள்.

மேலும் இதற்கான ஆணை 25-4-1998 அன்று பிறப்பிக்கப்பட்ட போதிலும், 1-1-1996 முதலே இந்த ஊதிய உயர்வு அமல்படுத்தப்பட்டு சத்துணவுப் பணியாளர்களுக்கு பணப்பயன் கிடைக்கத்தக்க வகையிலே (back date) போட்டு வழிவகை செய்யப்பட்டது.

அதைப்போலவே இந்தத் துறையிலே சமையலர் களுக்கு, அதுவரை மாதம் ஒன்றுக்கு 175 ரூபாய் மட்டுமே மதிப்பூதியமாகப் பெற்று வந்தவர்களுக்கு 1-1-1996 முதல் 450 ரூபாய் வீதமும், சமையல் உதவியாளர்கள் அதுவரையில் 125 ரூபாய் மட்டுமே பெற்று வந்தவர்களுக்கு மாதம் 400 ரூபாய் வீதமும் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான். சத்துணவு மையங்களில் பணியாற்றும் சமையலர், உதவியாளர்கள் ஓய்வு பெறும் வயது 55 என்றிருந்ததை 58ஆக உயர்த்தி ஆணை பிறப்பித்ததும் இந்த ஆட்சிதான், 25-4-1998ல்.

சத்துணவுப் பணியாளர்கள் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் ஈமச் சடங்குக்காக வழங்கப்பட்ட தொகை இரண்டா யிரம் ரூபாய் என்பது 1997-ஆம் ஆண்டில் ஐந்தாயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டதும் இந்த ஆட்சியிலேதான்.

பள்ளிச் சத்துணவுப் பணியாளர்கள் பணியில் இருக்கும் போது இறக்க நேரிட்டால் அவர்களுக்கு குழுக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ்- Group Insurance Scheme- குடும்ப நல நிதி வழங்க 7-11-1990 அன்று தி.மு.க. ஆட்சியில் உத்தரவிடப் பட்டது.

ஆனால், இந்தத் திட்டத்தை கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1994ஆம் ஆண்டில் நிறுத்தி வைத்துவிட்டார்கள். மீண்டும் கழக ஆட்சி அமைந்த பிறகு 1997ல் அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ஆணையிடப்பட்டது.

சத்துணவுப் பணியாளர்களுக்கு கோடை விடுமுறைக் காலத்திற்கும் ஊதியம் வழங்கப்படும் என 27-6-1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, அவ்வாறே வழங்கப்பட்டு வருகிறது.

சத்துணவுத் திட்டத்திலே பணியாற்றும் சமையலர், உதவியாளர் ஆகியோர் பணிக்காலத்தில் இறக்க நேர்ந்தால் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கருணை அடிப்படையிலே வேலை வழங்கப்படும் என்று 27-6-1998 அன்று சத்துணவு ஊழியர் மாநாட்டிலே என்னால் அறிவிக்கப்பட்டு, அவ்வாறே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 13 காசு என்பது 18 காசுகளாக 1996 முதல் உயர்த்தப்பட்டது இந்த ஆட்சியில். பிறகு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் சத்துணவு மானியம் 18 காசு என்பது இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 23 காசு ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

1995-96ல் சத்துணவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 360 கோடி ரூபாய். இதிலே சத்துணவுப் பணியாளர்களுக்கான ஊதியத்திற்கு மட்டும் தரப்பட்ட தொகை 115 கோடி ரூபாய், 1995-96இல், 2000-2001இல் சத்துணவுத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு 581 கோடி ரூபாய். இதில் சத்துணவுப் பணியாளர் களுக்காக வழங்கப்படும் ஊதியம் 215 கோடி ரூபாய். சத்துணவுப் பணியாளர்களுக்கான சங்கத்தின் பொதுச் செயலாளர் ராமமூர்த்தி 1986ஆம் ஆண்டிலிருந்தும், தலைவர் பழனிநாதன் 1988ஆம் ஆண்டிலிருந்தும், பொருளாளர் ராஜாராம் 1991ஆம் ஆண்டிலிருந்தும் அ.தி.மு.க. ஆட்சியிலே பணி நீக்கம் செய்யப்பட்டு வேலை இழந்திருந்தார்கள். அவர்களை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேதான் அந்தப் பணி நீக்கத்தை இரத்துசெய்து மீண்டும் பணியிலே அமர்த்தப்பட்ட இந்த மூன்று பேரும்தான் தற்போது இந்தப் போராட்டத்தைத் தூண்டிவிட்டு முற்றுகைப் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டும்.

சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்களை முழு நேர அரசுப் பணியாளர்களாக நியமித்து குறைந்தபட்ச ஊதிய விகிதப்படி சம்பளம் கொடுக்க ஒப்புக் கொண்டால், மேலும் கூடுதலாக 270 கோடி ரூபாய் அரசுக்குச் செலவாகும். சத்துணவுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு 581 கோடி ரூபாய். சத்துணவுப் பணியாளர்களின் கோரிக்கையை ஏற்றால், அவர்களது ஊதியத்திற்காக மாத்திரம் 485 கோடி ரூபாய் ஆகும். மீதியுள்ள 100 கோடி ரூபாயைக் கொண்டு எந்த அளவுக்கு சத்துணவு அளிக்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த அளவிற்கு சத்துணவுப் பணியாளர்களுக்காக திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்ததற்குப் பிறகும், தமிழகத்திலே உள்ள நிதி நிலைமை தெரிந்த பிறகும், மேலும் கூடுதலாக 270 கோடி ரூபாய் செலவழிக்கத்தக்க வகையிலே நிரந்தர அரசு அலுவலர்களாக ஆக்க வேண்டுமென்றால், அது நியாயமான கோரிக்கையா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

அரசு அலுவலர் நலன்

உரை : 105 **நாள்: 27.04.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவி மருத்துவர்கள் குறித்த பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் குமாரதாஸ், திரு. தாமரைக்கனி, திரு. சந்தானம், திரு. வேலாயுதன், திரு. தீரன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களையும், அவர்களுக்கு உடனடியாக உதவிட வேண்டும், ஒப்புதல் அளித்திட வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்திருக்கின்றார்கள். எப்போது வேண்டுகோள் வந்தாலும் முடியாத பட்சத்தில் அதை நேரடியாக நிராகரிக்கின்றேன் என்று ஒரே வார்த்தையிலே சொல்வது. உண்மையான நிலை என்றாலும்கூட, நாகரீகமாக இருக்காது. அதனால்தான் அந்த நேரத்தில் அதைப் பரிசீலிக்கிறேன்; பரிசீலிக்கப்படும் என்கிற வார்த்தைகள் ஏற்கெனவே இந்த அரசாங்கங்களால் நமக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப்பயன்படுத்துவதில் எந்தவிதத் தவறும் கிடையாது.

மனம் குளிரும்படியாக முடிவு எடுப்பேன் என்று சொன்னால் மனம் குளிர்வதும், குளிராததும் முடிவு எடுக்கின்றவர்களைப் பொறுத்தது அல்ல; மனம் உடையவர்களைப் பொறுத்தது. மனம் உடையவர்கள் குளிர்ந்திருப்பார்கள் என்கிற எண்ணத்தோடுதான் சில கருத்துக்களைச் சொல்வது வாடிக்கை. அப்படிச் சொல்லப்பட்ட கருத்துகளை வைத்துக்கொண்டு மத்திய சர்க்காருடைய அலுவலர்களுடைய ஊதியத்திற்கு இணையான சம்பளம் தருவதாகச் சொன்னீர்கள். ஆனால், தரவில்லை என்று குற்றஞ்சாட்டுவது பொருத்தம் உடையதல்ல. ஏனென்றால் இந்தியாவிலேயே மத்திய சர்க்காருடைய ஊழியர்களுக்குத்

தரப்படும் சம்பளத்திற்குச் சமமான சம்பளத்தை மாநில அரசு அலுவலர்களுக்கு முதன்முதலாகத் தந்த அரசு இந்த அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள்.

குமாரதாஸ் அவர்கள் பேசும்போது 21,000 கோடியில் ஒரு கோடி என்ன பெரிதா என்று கேட்டார். ஒவ்வொரு கோடியாகச் சேர்ந்துதான் 21,000 கோடி என்பது அவருக்குத் தெரியாத கணக்கு அல்ல. இதனுடைய விளைவுகள்- Implication ஒரு பிரிவினருக்குக் கொடுத்தால் அதே பிரிவில் உள்ள மற்றவர்களும் அதையே கேட்க ஆரம்பிப்பார்கள் என்கிறபோது ஒரு கோடி இரண்டு கோடியாகி, இரண்டு கோடி நான்கு கோடியாகி- இப்பொழுதே 21,000 கோடி ரூபாயில் ஏறத்தாழ 10,000 கோடி ரூபாய் அரசு ஊழியர்களுடைய ஊதியத்திற்காகச் செலவிடப்படுகிறது- அது 14,000, 15,000 கோடி என்று ஆகிவிட்டால், பிறகு 21,000 கோடியில் மிச்சப்படுவது எவ்வளவு என்பதை நாம்தான் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த நிலைகளெல்லாம் யோசித்துத்தான் இது போன்ற விஷயங்களில் இறுதியாக ஒரு முடிவை நாம் எடுக்க வேண்டிய சூழ்நிலை அமைகின்றது. அதற்கிடையே அவசரப் பட்டு அல்லது காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்; சட்டமன்றம் நடக்கும்பொழுதே இதையெல்லாம் நாம் தீர்க்க வேண்டும்; போராட்டம் நடத்த வேண்டும் என்கின்ற ஒரு நிலையில் பொதுவாக எல்லா எதிர்க்கட்சிகளும் இத்தகைய போராட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளும். நானேகூட எதிர்க்கட்சியிலே இருந்தால், பயன்படுத்திக்கொள்ளத் தவற மாட்டேன். அதுதான் எதிர்க்கட்சியினுடைய இலக்கணம். அந்த இலக்கணப்படி எதிர்க்கட்சி நம்முடைய கோரிக்கையை எடுத்துக்கொண்டு வாதாடும் என்ற நம்பிக்கையோடு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், கால்நடை உதவி மருத்துவர்கள், மத்திய அரசு அலுவலர்களுக்கு ஈடான ஊதிய விகிதம் அளிக்கப்படவில்லை என்பதற்காகப் போராட்டம் நடத்துவதாகச் சொல்லப்படுகிறது. ஊதியக்

குழுவின் பரிந்துரைப்படி ஊதிய விகிதத்தை மாற்றுவதற்கு முன்பு கால்நடை உதவி மருத்துவர்களுடைய ஊதிய விகிதம் ரூ. 2000-3,500 என்று இருந்தது. இதே ஊதிய விகிதம்தான் உதவிப் பொறியாளர், வேளாண்மை அலுவலர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு வந்தது. கால்நடை உதவி மருத்துவர்களுடைய தற்போதைய ஊதிய விகிதம் ரூ. 6,500-ரூ. 11,000 என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதே ஊதிய விகிதம்தான் உதவிப் பொறியாளர், வேளாண்மை அலுவலர்கள் ஆகியவர்களுக்கும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், அவர்கள் எந்த விதமான போராட்டமும் நடத்தவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

மத்திய அரசிலே கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே கிடையாது. அங்கே கால்நடை மருத்துவர் என்ற பதவிதான் உள்ளது. அங்கே கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லாதபோது அதற்குச் சமமான ஊதியத்தை இங்கே யுள்ள கால்நடை உதவி மருத்துவர்களுக்கு எப்படித் தரமுடியும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். பேரவைத் தலை வருடைய அறையிலேகூட குமாரதாஸ் அவர்கள் என்னிடம் விவாதித்தபோது மத்திய அரசிலே கால்நடை உதவி மருத்துவர் பதவி இருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்குப் பிறகு நான் அந்தப் பட்டியலையே அதிகாரிகளிடம் பெற்றேன். மத்திய அரசிலே இந்தக் கால்நடைத் துறையிலே உள்ள பதவிகள், நுழைவுப் பதவிகள், அதாவது ரூ. 8,000 - ரூ. 13,500 என்ற அளவில், உதவி இயக்குநர்- அமைச்சகத்தில் பணிபுரிவோர்; கால்நடை மருத்துவர்- களப்பணியில் பணிபுரிபவர்; உதவிப் பேராசிரியர்- ஆசிரியர் பணிபுரிபவர்- ஆகிய பதவிகள்தான் இருக்கின்றனவே தவிர, கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லை. கால்நடை மருத்துவர் என்றுதான் அங்கே பதவி உள்ளது. அதைத் தவிர மத்திய அரசிலே இரண்டாம் நிலைப் பதவிகளிலே துணை இயக்குநர், மூன்றாம் நிலைப் பதவியிலே இணை இயக்குநர், நான்காம் நிலைப் பதவிகளிலே இயக்குநர் என்றுதான் பதவிகள் அங்கே இருக்கின்றனவே தவிர கால்நடை உதவி மருத்துவர் என்ற பதவியே இல்லாத

சூழ்நிலையில் அங்கே கால்நடை உதவி மருத்துவர்களுக்குத் தரப்படுகின்ற அதே ஊதிய விகிதம் இங்கே தரப்படவேண்டும் என்று கேட்பது பொருத்தமான வாதமாக இல்லை.

தமிழகத்திலேயுள்ள கால்நடை உதவி மருத்துவர் பணிக்குத் தேவையான கல்வித் தகுதிதான் மத்திய அரசின் கால்நடை மருத்துவர் பதவிக்கும் என்பதால் மத்திய அரசிலே கால்நடை மருத்துவர் பணிக்கு வழங்கப்படும் ரூ. 8,000 - ரூ. 13,500 என்ற ஊதிய விகிதத்தைத் தங்களுக்கும் வழங்க வேண்டுமென்று போராட்டம் நடத்துகிறார்கள். இது நியாயமாகத் தெரியவில்லை. ஏனென்றால், எம்.ஏ. படித்த ஒருவர் Inspector ஆகவும் இருக்கலாம்; Sub-Inspector ஆகவும் இருக்கலாம். அதற்காக படிப்பை வைத்து சம்பளத்தை வழங்க இயலாது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மையாகும். இவர்களுடைய கோரிக்கையை ஏற்று இவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தினால், ஊதியக் குழுவின் பரிந்துரைக்கு முன் இவர்களுக்குச் சமமான ஊதியம் பெற்று வந்த உதவிப் பொறியாளர் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் தங்களுக்கும் இந்த ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று உடனே போராட்டம் நடத்தத் தொடங்கிவிடுவார்கள். இந்தச் சங்கடமும் அரசுக்கு இருக்கிறது. மத்திய அரசில் கால்நடை மருத்துவர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 8,000-ரூ. 13,500. நமது மாநிலத்திலும் கால்நடை மருத்துவர் (Veterinary Surgeon) மற்றும் உதவி இயக்குநர் ஆகிய பதவிகளுக்கு மத்திய அரசில் உள்ளது போல் ரூ. 8,000-ரூ. 13,500 என்ற ஊதிய விகிதம்தான் இப்பொழுதும் வழங்கப்பட்டு வருகின்றது. அதிலே எந்தவிதமான வேறுபாடும் காட்டவில்லை.

தமிழகத்திலே கால்நடை உதவி மருத்துவர்கள் பணியிலே இருப்பவர்கள்தான் பதவி உயர்வு பெற்று கால்நடை மருத்துவர்களாகவும் உதவி இயக்குநர்களாகவும் வருகிறார்கள். எனவே கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ரூ. 6,500-ரூ.11,100 என்று ஊதிய விகிதமும் அவர்கள் பதவி உயர்வு பெற்று கால்நடை மருத்துவர்களாக ஆகும்போது மத்திய அரசிலே

கால்நடை மருத்துவர்களுக்குத் தரப்படும் அதே ஊதிய விகிதமும் தரப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

மேலும், சில கால்நடை உதவி மருத்துவர்கள், தங்களது ஊதிய விகிதத்தை ரூ. 6,500-ரூ. 11,100 என்பதில் இருந்து ரூ. 8,000-ரூ. 13,500 எனத் திருத்தி வழங்க வேண்டி தமிழ்நாடு தீர்ப்பாயத்திலே வழக்கு ஒன்றும் தொடர்ந்திருக்கிறார்கள். இதற்கு அரசின் சார்பிலே எதிர் மனுவும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது. கால்நடை உதவி மருத்துவர்களைவிட உதவி மருத்துவர்கள் (Assistant Surgeons) எப்போதும் ஒரு நிலை கூடுதலாகவே ஊதியம் பெற்று வருகிறார்கள். தற்போது கால்நடை உதவி மருத்துவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவர்களுடைய ஊதிய விகிதத்தை உயர்த்தினால் உடனே உதவி மருத்துவர்கள் தற்போது பெற்றுவரும் ஊதிய விகிதத்தைவிட தங்களுக்கு மேலும் ஒரு நிலை ஊதிய விகிதத்திலே உயர்த்தித் தரவேண்டுமென்ற கோரிக்கையை வைக்கத் தயங்கமாட்டார்கள். இப்படிப்பட்ட தர்மசங்கடமான் சூழ்நிலைகள் எல்லாம் வரும். எனவே நான் கால்நடை உதவி மருத்துவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்காக இங்கே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் குமாரதாஸ் தொடங்கி திரு. தீரன் வரையிலே பேசியிருக்கிறார்கள்; இந்த அனுபவம் என்றைக்கும் அவர்களோடு சேர்ந்து இந்த அரசுக்கும் இருக்கும் என்று கூறிக்கொண்டு கால்நடை உதவி மருத்துவர்கள் இதற்குப் பிறகாவது தங்களுடைய போராட்டத்தைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேளுங்கள்.

திரு. ச. அழகிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது பரிசீலிக்கப்படும் என்கிற வார்த்தைக்கு அவ்வளவுதான் என்கிற பொருள்படுகிற மாதிரிச் சொன்னார்கள். அது

முடிந்துபோன விஷயம் என்கிற மாதிரிச் சொன்னார்கள். சட்ட மன்றத்திலே பல கேள்விகளை நாங்கள் கேட்கிறோம். அமைச் சர்கள் அவையெல்லாம் பரிசீலிக்கப்படும் என்று சொன்னவுடன் நம்பிக்கையாக நாங்கள் அமர்கிறோம். அதுமட்டுமல்ல. நீங்கள் ஒரு குழு அமைத்திருக்கிறீர்கள், உறுதிமொழிக் குழு என்று. அந்த உறுதிமொழிக் குழுவிலேகூட, அமைச்சர்கள் பரிசீலிக்கப் படும் என்று சொன்னால், அதை அரசாங்கம் ஒத்துக்கொண்ட தாகப் பொருள் என்று நீங்கள் அதிலே விளக்கம் அளித்திருக் கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானா?

திரு. ச. அழகிரி: அதாவது பேரவையினுடைய உறுதி மொழிக் குழுவிலே அப்படி இருக்கிறது. எனவே பரிசீலிக்கப் படும் என்பதற்கு அரசாங்கத்தினுடைய பொருள் என்ன? அவர் களுடைய அகராதியிலே என்ன பொருள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போது அவருக்கு வேறொன்றும் பிரச்சினை இல்லை. பரிசீலனை என்றால் என்ன பொருள் என்று கேட்கிறார். இதற்குப் பொருள் ஆய்வு செய்தல் என்பதாகும். நிறைவேற்றப்படும் என்று பொருள் அல்ல; ஆய்வு செய்யப்படும் என்பதுதான் பொருள்.

காவல் துறையினர் பிரச்சினை

உரை : 106 நாள்: 28.04.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் ஞான சேகரன் அவர்கள் கற்பழிப்பு என்கின்ற ஒரு கதைச் சுருக்கத்தை மாத்திரம் இங்கே சொல்லி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுகின்ற அத்தனை பேரும் தீயவர்கள் என்பதைப்போல, காமாந்தக் காரர்கள் என்பதைப்போல, கடத்தல்காரர்கள் என்பதைப் போல, ஒரு கருத்தை இங்கே வெளியிட்டார். எல்லோருமே நல்லவர் களும் அல்ல, எல்லோருமே கெட்டவர்களும் அல்ல என்ற அந்தத் தத்துவத்தை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்தக் கதைக்கு உள்ள ஒரு flash-back கொஞ்சம் இருக்கிறது. அந்த flash-backஐ நான் சொல்வது நல்லது என்று கருதுகின்றேன். அதிகாரிகள் மூலமாகக் கிடைத்த flash-back அது உண்மையா, பொய்யா என்பது இந்தப் பிரச்சினை வழக்கு மன்றத்திற்கு வருகிற காரணத்தினால் விரைவிலே தெரிந்துவிடும். இருந்தாலும் எனக்குக் கிடைத்த விவரத்தை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

மீனம்பாக்கம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வானிலை ஆராய்ச்சியாளர் குடியிருப்பு எண் 21-ஏ என்ற முகவரியில் உள்ள ஜோகி நாயுடு என்பவர், 14 வயதுள்ள தன் மகள் உமாமகேஸ்வரி மீனம்பாக்கம் கேந்திர வித்யாலயா பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருப்பதாகவும், 12.4.2000 அன்று பள்ளிக்குச் சென்றவள் வீடு திரும்பவில்லை என்றும், 13.4.2000 தேதி மாலை மீனம்பாக்கம் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார்.

அந்தப் புகாரின் பேரில் குற்ற எண் 74/2000-ல் பெண் காணவில்லை என்பதற்காக வழக்கு ஒன்றினைப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் அதே குடியிருப்பில் எண் 21-பி, வீட்டில் உள்ள தஸ்தகீர் என்பவர் 18 வயதுடைய தன் மகள் மீராபி, அதே தேதியில் காணாமல் போனதாகக் கூறி, அவர் உமாமகேஸ் வரியின் தோழி என்றும் சொல்லி, மீனம்பாக்கம் காவல் நிலை யத்தில் ஒரு புகார் கொடுத்தார்.

அதன் அடிப்படையில் மீனம்பாக்கம் காவல் நிலைய குற்ற எண் 75/2000-த்தில் பெண் காணவில்லை என்பதற்கான வழக்கு ஒன்றும் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்குகளில் இம்மாணவிகள் எங்கு சென்றிருப்பார்கள் என்று அவர்களுடைய குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சூழ்நிலையில், மீனம்பாக்கம் எம்.ஜி.ஆர். நகரைச் சேர்ந்த 23 வயதுடைய ஆட்டோ ஓட்டுநர் சுரேஷ்பாபு என்பவரையும் காணவில்லை என்றும், அவருக்கும் உமாமகேஸ்வரிக்கும் இடையே காதல் இருந்து வந்ததாகவும் தெரியவந்துள்ளது. காணாமல் போன வர்கள் பற்றி அனைத்து காவல் நிலையங்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டு, ஆய்வாளர் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு பல இடங்களில் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் 15.4.2000 அன்று மீராபி தன் வீட்டிற்குத் திரும்பினாள். இந்த விவரத்தை மீராபியின் தந்தை தஸ்தகீர் 17.4.2000 அன்று காவல் நிலையத்திலே தெரிவித்ததன் அடிப்படையில் ஆய்வாளர் அந்த மீராபியை அழைத்து விசாரித்தபோது உமாமகேஸ்வரியும், சுரேஷ்பாபுவும் சுமார் 1½ ஆண்டுகளாகக் காதலித்து வருவதாகவும், அவர் சுரேஷ்பாபுவுடன் பல்லாவரம் சென்றதாகவும் தெரிய வந்தது.

ஆய்வாளர், பல்லாவரம் பகுதியிலே தேடியபோது, அவர்கள் இருவரும் செங்கல்பட்டு சென்றுவிட்டதாகத் தகவல் கிடைத்தது. ஆனால் இதற்கிடையில் 18.4.2000 அன்று மேற்படி

இருவரும் மீனம்பாக்கம் இரயிலடிச் சாலையிலே கண்டுபிடிக்கப் பட்டார்கள்.

உமாமகேஸ்வரியை பெண் போலீஸ் உதவியோடு விசாரணை செய்தபோது, தனக்கும் சுரேஷ்பாபுவிற்கும் பழக்கம் ஏற்பட்டு, பள்ளிக்குச் செல்லாமல் அவரோடு பல இடங்களில் சுற்றியவுடன் அது காதலாக மாறிவிட்டதாகவும், பிறகு இருவரும் திட்டமிட்டு 12.4.2000 அன்று பள்ளிக்குச் செல்வ தாகச் சொல்லி, மீராபியுடன் சுரேஷ்பாபுவைச் சந்தித்து அவரது ஆட்டோவில் மாங்காடு கோயிலுக்குச் சென்று, அவருடைய நண்பர்கள் முரளி, அருள் ஆகியோரைச் சந்தித்து கோயில் வாசலில் நின்று திருமணம் செய்துகொண்டதாகவும் தெரிவித் திருக்கிறார்.

அனைவரும் பிறகு பாண்டிச்சேரிக்குச் சென்றதாகவும், தானும் சுரேஷ்பாபுவும் Lodge-ல் ஓர் அறையிலும், மீராபி, முரளி மற்றும் அருள் ஆகியோர் மற்றொரு அறையிலும் இரண்டு நாட்கள் தங்கியதாகவும், அப்படித் தங்கியபோது, சுரேஷ்பாபுவும், தானும் உடலுறவு கொண்டதாகவும், பின்பு 14-4-2000 அன்று திருப்பதி சென்று அங்கு அனைவருக்கும் அறை கிடைக்காததால் முரளி, அருள் இருவரும் சென்னைக்குத் திரும்பி விட்டதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

மீனம்பாக்கம் காவல் துறையினர் தங்களைத் தீவிரமாகத் தேடுவதாகத் தொலைபேசி மூலம் தகவல் தெரிந்ததும், 15.4.2000 அன்று, தாங்கள் மூவருமே மீனம்பாக்கம் வந்ததாக வும், பிறகு தானும், சுரேஷ்பாபுவும் சுரேஷ்பாபுவின் வீட்டிற்குச் சென்றதாகவும் தெரிவித்திருக்கிறார்.

சுரேஷ்பாபுவினுடைய அம்மா தங்களைச் சேர்க்கவில்லை என்பதால் சுரேஷ்பாபுவினுடைய நண்பர் வீட்டில் தங்கி, மறுநாள் பல்லாவரம் வந்து அங்கு ஒரு நண்பருடைய வீட்டிலே தங்கி, 18.4.2000 அன்று தன் அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவே, சுரேஷ்பாபுவுடன், மீனம்பாக்கம் வந்தபோது காவல் துறையினரிடம் பிடிபட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

Minor பெண்ணாகிய உமாமகேஸ்வரியை பெற்றோரின் அனுமதியின்றி அழைத்துச் சென்றது கடத்தல் குற்றமானதாலும், Minor பெண்ணோடு உடலுறவு கொள்வது கற்பழிப்பு குற்றமானாதாலும், வழக்கின் சட்டப் பிரிவு 366 (அ) பிரிவு 376 இ.த.ச.-வாக மாற்றப்பட்டு சுரேஷ்பாபு கைது செய்யப்பட்டு 19.4.2000 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமியான உமாமகேஸ்வரி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இவ்வழக்கிலே, சுரேஷ்பாபுவிற்கு உதவியாக இருந்தவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்போது அப் பகுதியிலே எந்தப் பதட்டமும் இல்லை. இதுதான் கதை. இவ்வளவுதான் நான் ஞானசேகரனுக்குச் சொல்ல முடியும்.

தேயிலை குறித்த பிரச்சினை

உரை : 107 **நாள்: 29.04.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நீலகிரி, கோவை, நெல்லை, தேனி ஆகிய மாவட்டங்களில் உருவாகியுள்ள தேயிலை குறித்த பிரச்சினை பற்றி ஒரு தீர்மானம் கொண்டுவந்து விவாதித்தால், அதற்காக எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்ளப்படுமோ, அந்த அளவுக்கு ஏறத்தாழ ஒரு மணி நேரம் இந்தப் பிரச்சினைக்காக எடுத்துக்கொள்ளப் பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. முபாரக், திரு. அழகிரி, திரு. சுப்பராயன், திரு. சுந்தரம், திரு. அப்துல் லத்தீப், திரு. சந்தானம், திரு. ஹேமச்சந்திரன், திரு. வேலாயுதன் ஆகியோர் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக் கின்றார்கள்.

அநேகமாக எல்லோருமே, திரு. சுந்தரம் ஒருவரைத் தவிர, இதை ஒரு கட்சிப் பிரச்சினையாக, அரசியல் பிரச்சினை யாக ஆக்காமல், ஒரு மனிதாபிமான பிரச்சினையாக, ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக கருதி, தங்களுடைய அரிய கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். இதுபற்றி ஒரு குறிப்பை இந்த மாமன்றத்திலே வைக்க நான் விரும்புகின்றேன்.

தமிழ்நாட்டில், நீலகிரி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, தேனி ஆகிய மாவட்டங்களில் தேயிலை சாகுபடி நடைபெறு கின்றது. இதில் அதிக அளவு தேயிலை சாகுபடி, நீலகிரி மாவட்டத்திலே நடைபெற்று வருகின்றது. நீலகிரி மாவட்டத் திலே மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் தேயிலை சாகுபடியாகிறது. இதில் சுமார் ஐம்பதாயிரம் ஏக்கர் அளவுக்கு ஏறத்தாழ 25,000 சிறு விவசாயிகள் தேயிலை சாகுபடியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

வழக்கமாக தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் தேயிலை ஆண்டு ஒன்றுக்கு சுமார் 100 மில்லியன் கிலோ அளவுக்கு ரஷிய நாட்டிற்கு ஏற்றுமதி ஆகிக்கொண்டு இருந்தது. நீலகிரி தேயிலைக்கு ரஷிய நாட்டில் நல்ல கிராக்கி இருந்தது. ஆனால் சமீப காலங்களில், இதற்குச் சமமான தேயிலை மலிவான விலையில் கென்யா நாட்டிலிருந்து கிடைக்கின்ற காரணத்தால் ரஷிய நாட்டிற்கு அவ்வளவாக நீலகிரித் தேயிலை ஏற்றுமதி ஆவதில்லை. மேலும் தேயிலை சாகுபடி செய்யப் படும் பரப்பளவு கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துள்ளதோடு தேயிலை சாகுபடியில் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட குளோனிங் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் காரணமாக தேயிலை விளைச்சலும் அதிகமாகி இருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்து, இந்திய தேயிலையுடன் கலந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதனாலும் தென்னிந்திய தேயிலையின் மார்க்கெட் குறைந்துவிட்டது. தேயிலையின் உற்பத்தி அதிகரித் துள்ள நிலையில், இதுபோன்ற காரணங்களினால் தேயிலை விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் தேயிலை சாகுபடி செய்யும் சிறு விவசாயிகள் பாதிப்புக்கு உள்ளாகி இருக் கின்றார்கள்.

தேயிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை களை உணர்ந்து 2000 ஆண்டு ஜனவரி மாதத்திலேயே மத்திய அரசுக்கு இங்கிருந்து கடிதங்கள் அனுப்பப்பட்டன. 27.1.2000 அன்று மத்திய அரசின் நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்கா விற்கும், வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கும் நான் எழுதிய கடிதத்தில், இடுபொருட்களின் உயர்ந்து வரும் விலையின் காரணமாகவும், தேயிலையின் விலை குறைந்து வருவதன் காரணமாகவும், தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுவரும் நெருக்கடியான நிலையை அவர்களுக்கு நேரடி கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், மத்திய அரசின் 1999 நிதிநிலை அறிக்கையின் தொடர்ச்சியாக தேயிலையின் மீது கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் என்று விதிக்கப்படும் சுங்க வரியும் ஏற்கனவே உள்ள துன்பத்தை

மேலும் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டு அதனைத் தீர்க்க நல்ல முடிவு காண வேண்டுமென்று வலியுறுத்தி இருந்தேன்.

தொடர்ந்து, 21-4-2000 அன்று இந்தியப் பிரதமருக்கும் மத்திய அரசின் நிதி அமைச்சருக்கும், சுங்க வரியை முழுமையாக விலக்கிக்கொள்ள வேண்டுமென்றும், தேயிலை இறக்கு மதியைத் தடைசெய்ய முடியவில்லை என்றாலும் தேயிலையின் மீதான இறக்குமதி வரியை அதிகப்படுத்திட வேண்டுமென்றும் வலியுறுத்தியிருக்கிறேன்.

தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைப் பற்றி அனைத்துத் தரப்பினரின் கவனத்தை ஈர்ப்பதற்காக 10.4.2000 அன்று உதகமண்டலத்தில் நீலகிரி மாவட்ட அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கைக் குழுவினர் சார்பாகப் பேரணியும் நடத்தப்பட்டுள்ளது. அந்தக் குழுவினர் சென்னைக்கு வந்து என்னிடம் நேரடியாகத் தேயிலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பற்றி விவாதித்தார்கள். இவர்கள் பேசியதன் தொடர்ச்சியாக மத்திய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சருடன் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் உடனடியாகத் தலையிட்டுத் தேயிலை விவசாயிகளின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தினேன்.

நீலகிரி மாவட்ட அரசியல் கட்சிகளின் கூட்டு நடவடிக்கை குழுவினர் சார்பில் திரு. உச்சி கவுடர், திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ராமச்சந்திரன், திரு. மாஸ்டர் மாதவன் எம்.பி., திரு. முபாரக் எம்.எல்.ஏ., திரு. குண்டன் எம்.எல்.ஏ., திரு. ரங்கநாதன் எம்.எல்.ஏ., ஆகியோர் புது டில்லிக்குச் சென்று மத்திய நிதி அமைச்சர் திரு. யஷ்வந்த் சின்கா அவர்களையும் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சர் அவர்களையும் 26, 27 ஆகிய நாட்களில் நேரில் சந்தித்து தேயிலை விவசாயிகளுடைய பிரச்சினை குறித்து விரிவாகப் பேசியிருக்கிறார்கள்.

குழுவின் கோரிக்கைகளைக் கேட்ட மத்திய அமைச்சர்கள் இந்தப் பிரச்சினை குறித்து உடனடியாகக் கவனித்து ஆவன செய்வதாகவும் உறுதி கூறியுள்ளார்கள்.

குழுவின் தலைவரான தமிழ் மாநில காங்கிரசைச் சேர்ந்த திரு. உச்சி கவுடர் மத்திய அமைச்சர்களைச் சந்தித்ததற்குப் பிறகு விடுத்துள்ள அறிக்கையில் ''எங்களுடைய அனைத்துக் கோரிக்கைகளையும் ஏற்றுகொண்டு மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் எங்களிடம் கூறும்போது, நீலகிரியிலே பச்சைத் தேயிலை விலை வீழ்ச்சி, தேயிலை விலை வீழ்ச்சி குறித்து முக்கிய தேயிலை வர்த்தகர்களிடம் கலந்து ஆலோசிப்பதாகவும், இறக்குமதி செய்யப்படும் தேயிலையைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலே இறக்குமதித் தேயிலைக்கு அதிக இறக்குமதி வரி விதிப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்'' என்று உச்சி கவுடர் அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே குறிப்பிட்டுள்ளார்கள்.

மத்திய அரசிடமும் குறிப்பாக மத்திய அமைச்சர் களிடமும் நமது அரசின் சார்பாகத் தொடர்ந்து வலியுறுத்தப் பட்டு வரும் இந்தப் பிரச்சினையில் வெகுவிரைவில் மத்திய அரசு உரிய சுமுகமான முடிவுகளை எடுத்து அறிவிக்கும் என்று நம்புகின்றேன். கடந்த ஆட்சிக் காலத்திலும்- சுந்தரத்திற்காகச் சொல்கின்றேன். கடந்த ஆட்சிக்காலத்திலும்- இதுபோன்ற நெருக்கடி நிலை 1994-95ல் ஏற்பட்டது. அப்பொழுது கிலோ ஒன்றுக்குத் தேயிலை விலை ரூபாய் 4.40 என்ற அளவுக்குச் சரிந்து போனது. ஆனால் அந்த நிலையில் அன்றைய ஆட்சி யாளர்கள் தேயிலை விவசாயிகளின் பிரச்சினையைப் பற்றிக் கண்டுகொள்ளாமலே காலம் கடத்தினார்கள் என்பது நாட்டுக்கு மிக நன்றாகத் தெரியும்.

நீலகிரித் தேயிலை விற்பனையாகாமல் தேங்கியுள்ள இன்றைய நிலையில் இந்திய இராணுவத்தின் தேவைக்காக 3,000 மெட்ரிக் டன் அளவுக்குக் குன்னூரில் உள்ள தேயிலைத் தொழில் கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து வாங்குவதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்திட வேண்டுமென்று மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களுக்கும் நான் கடிதம் எழுதியிருக்கிறேன். நேரிலும் அதைப்பற்றி அவரிடத்திலே கூறியிருக்கிறேன்.

அத்துடன் தேயிலைத் தொழிலுக்கு உடனடியாக நிவாரணம் அளித்திடும் எண்ணத்தோடு தமிழக அரசின் சார்பில் தற்போது தேயிலை மீது விதித்து வரும் எட்டு சதவிகித விற்பனை வரியை இந்தப் பிரச்சினைக்கு நல்லதோர் விடிவு வருகின்ற வரையில் அதாவது சுமார் ஆறு மாத காலத்திற்கு நான்கு சதவிகிதமாகக் குறைக்கவும் முடிவு செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி)

வறட்சி நிவாரணம்

உரை : 108 **நாள்: 02.05.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றில் இரண்டு அல்லது ஒன்றில் மூன்று என்று சொல்வதைப்போல, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு சிறப்பான கவன ஈர்ப்பு அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்து விட்டு, அதிலே மூன்று பிரச்சினைகளைப் பற்றி இங்கே விளக்கியிருக்கிறார்கள். ஒன்று, ஆடு மேய்த்த நண்பர்களுடைய திடீர் சாவு. மற்றொன்று, இராமநாதபுரம் மாவட்டத்திலே ஏற்பட்டுள்ள வறட்சி, மூன்றாவதாக, ஏர்வாடியில் இஸ்லாமியர்கள் தனிப்பட்ட முறையில் நடத்துகின்ற மருத்துவ மையங்களில் ஏற்பட்டுள்ள சாவுகள் - இந்த மூன்றையும் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

முதலில் சூறாவளிக் காற்றினால் ஏற்பட்ட நிலை என்ன என்பதை விளக்கி விடுகிறேன். இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், இதம்பாடல் குரூப்பைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் அவர்களது மகன் ஆனந்தன், மற்றொரு கருப்பையா அவர்களுடைய மகன் முருகேசன் மற்றும் பரமக்குடி வட்டம், பொதுவாக்குடி கிராமத்தைச் சேர்ந்த சுந்தரக் கோனார் என்பவர் மகன் முத்து, ஏர்வாடியைச் சேர்ந்த திரு. கருப்பையா கோனார் மகன் உடையார் ஆகியோர் ஆட்டுக்கிடை அமைப்பதற்காக இராமநாதபுரம் வட்டம், உத்திரகோசமங்கை அருகிலே மேலசித்தை கிராமத்திற்குச் சென்றுள்ளார்கள். 25.4.2000 அன்று இரவு மேற்படி கிராமத்தில் ஆட்டுக் கிடை அமைத்துவிட்டு, அன்று பெய்த மழை காரணமாக அருகிலே உள்ள தனியாருக்குச் சொந்தமான சேதுமாணிக்கம் உயர்நிலைப்

பள்ளிக் கட்டடத்திலே தங்கினார்கள். அப்பொழுது கட்டடத்தின் ஒரு பகுதி மழையினால் இடிந்து விழுந்ததினால் இடிபாடுகளில் சிக்கி, திரு. கருப்பையா கோனார் மகன் ஆனந்தன் என்பவரும், மற்றொரு கருப்பையா என்பவரது மகன் முருகேசன் என்பவரும் இறந்துவிட்டார்கள். மேலும், சுந்தரக்கோனார் அவர்களுடைய மகன் முத்து என்பவரும், கருப்பையா அவர்களுடைய மகன் உடையார் என்பவரும் காயமடைந்துள்ளார்கள்.

இறந்துவிட்ட இந்த இரண்டு பேருடைய குடும்பங் களுக்குத் தலா ஆயிரம் ரூபாய் வீதம் 29ஆம் தேதி காலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிவாரணம் வழங்கப் பட்டுள்ளது. அது போதுமானதல்ல, இன்னும் அதிகமாகக் கொடுத்திருக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். காயம் அடைந்தவர்களுக்கும் ஏதாவது செய்ய வேண்டுமென்று சொன்னார்கள்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கலந்து பேசி காயமடைந்தவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

பொதுவாக இதுபோன்ற விபத்துக்களில் அரசின் சார்பில் ஏற்கெனவே 3 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப் படுவதற்கு மாறாக இப்பொழுது 15 ஆயிரம் ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுவிட்டார் என்பதற்காக இந்த 15 ஆயிரம் ரூபாயோடு மேலும் 10 ஆயிரம் ரூபாய் சேர்த்து, தலா 25 ஆயிரம் ரூபாயாக அவர்களுக்குத் தரப்படும் என்று நான் இப்போது கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏர்வாடியிலே இஸ்லாமியர்கள் நடத்துகின்ற அந்த மையங்களில் அவர்களுடைய அசிரத்தையின் காரணமாக, அலட்சியத்தின் காரணமாக சுகாதாரக் குறைவு ஏற்பட்டு அதனால் சிலர் மாண்டுபோக நேரிட்டிருக்கிறது. அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே குறிப்புகள் கேட்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்புகள் வந்தவுடன் அதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கத் தேவைப்பட்டால் அமைச்சர்களே சென்று

பார்வையிட்டு, தக்க பரிகாரம் செய்வார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே வறட்சி நிலை குறித்துக் குறிப்பிட்டார்கள். 1999-ல் அந்த மாவட்டத்திலே மழை 278 மில்லி மீட்டர்தான் பெய்திருக்கிறது. பொதுவாக ஒவ்வோர் ஆண்டும், சராசரியாக அந்த மாவட்டத்திலே 827 மில்லிமீட்டர் மழை பொழிவது வழக்கம். அதற்கு மாறாக 1999-லே 278 மில்லி மீட்டர் மழைதான் பெய்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரும் அரசுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கின்றார். உடனடியாக வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேலாக, கிட்டத்தட்ட 1¼ இலட்சம் ரூபாய்க்கு ஒரு கணக்கு எழுதி உடனடியாக அனுப்ப வேண்டுமென்று நிவாரணப் பணிகளுக்காக கடிதம் எழுதியிருக்கிறார். அதுவும் அரசாங்கத்தினுடைய பரிசீலனையிலே உள்ளது என்பதை நான் தெரிவித்துக் கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் மாத்திரமல்ல, வேறு பகுதிகளிலும் தண்ணீருக்காகக் கஷ்டப்படுகின்ற மக்களுடைய தண்ணீர்த் தேவையைத் தீர்ப்பதற்கு அரசு போர்க்கால நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் எடுக்கும் என்பதையும் தெரிவித்து, சிறப்பாகவும், குறிப்பாகவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் தனிக் கவனம் இந்த வறட்சி நிலை குறித்து செலுத்தப்படும் என்பதை அறிவித்து அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மீனவர்கள் பிரச்சினை

உரை : 109 நாள் : 03.05.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியத்துவம் வாய்ந்ததும், தமிழ்நாட்டு மக்களுடைய உள்ளத்தில் பெரும் வேதனையை ஏற்படுத்தியதும் அதன் விளைவாக இன்று கவன ஈர்ப்பு, ஒத்தி வைப்பு அறிவிப்புகள் என இங்கே விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. நிஜாமுதீன், திரு. இரா. பெர்னார்டு, திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. பி. ஆர். சுந்தரம், திரு. ஐ. கணேசன், திரு. டி. மணி. திரு. ஏ. வி. ஏ. நாசர், திரு. சி. வேலாயுதன், டாக்டர் க. கிருஷ்ணசாமி, திரு. தீரன் ஆகியோர், அடிக்கடி நம்முடைய கடல் பகுதியில் தமிழகத்தினுடைய மீனவர்கள் வேட்டையாடப் படுகின்ற இந்த வேதனையான நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்த என்ன செய்யலாம் என்கின்ற யோசனைகளையெல்லாம் அவரவர்களுடைய எண்ணத்தின் அடிப்படையிலே இங்கே எடுத்து வெளியிட்டிருக்கின்றார்கள். அவற்றையெல்லாம் எந்த அளவிற்கு நிறைவேற்ற இயலும், எந்த அளவிற்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதை நானும் சிந்தித்து, முடிந்தவரையிலே, இயன்றவரையிலே செயல்படுவேன் என்ற உறுதியை அவர் களுக்கும், இந்த மாமன்றத்திற்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக அ.தி.மு.க. சார்பில் பேசிய நம்முடைய சுந்தரம் அவர்கள் இப்போதுள்ள இந்தப் பிரச்சினையை கச்சத்தீவுப் பிரச்சினையோடு இணைத்து, அதையும் அரசியல் ஆக்க வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு இங்கே உரையாற்றியது உள்ளபடியே இந்த வேதனையான நேரத்திலே தேவையற்ற ஒன்று என்பதே என்னுடைய கருத்து.

அவர் அந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்ட காரணத்தால், அதற்கு விளக்கம் தருவது என்னுடைய கடமையாகும். அன்னை

திருமதி இந்திரா காந்தி அவர்கள் பிரதமராக இருந்த காலத்திலேதான் கச்சத்தீவு இலங்கைக்குத் தரப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாயிற்று அப்பொழுது அவர்கள் வெளியுறவுத் துறை அமைச்சரை தமிழகத்திற்கு அனுப்பி என்னிடத்திலே விவாதிக்கச் செய்து, வெளியுறவுத் துறை அதிகாரிகளையும் அனுப்பி அவர்கள் மூலமும் பல தகவல்களை சொல்லியனுப்பி, அந்தச் சூழ்நிலையிலே தமிழக அரசினுடைய எதிர்ப்பையும் நாங்கள் பதிவு செய்து, அதற்கு அப்பாலும் கச்சத்தீவை இலங்கைக்குத் தரவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டதை திருமதி இந்திரா காந்தி அம்மையார் விளக்கியதன் பேரில், கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டது.

அப்போது வழங்கப்பட்டபொழுது, தமிழக அரசினுடைய பிடிவாதத்தின் காரணமாக ஒப்பந்தத்திலே சேர்க்கப்பட்ட ஒரு ஷரத்து - யாத்ரீகர்கள், தமிழ்நாட்டு யாத்ரீகர்கள் கச்சத் தீவுக்குச் சென்று வரவும், தமிழக மீனவர்கள் கச்சத் தீவிலே மீன்பிடிக்கவும் தடை கூடாது என்ற ஒரு ஷரத்து - அதிலே சேர்க்கப்பட்டிருந்தது. ஆனால் 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்டவுடன் அப்போது நடைபெற்ற கவர்னர் ஆட்சியில் கடிதப் போக்குவரத்து பரிவர்த்தனையின் அடிப்படையில் அந்த ஷரத்துக்கள் என்ன காரணத்தாலோ எடுக்கப்பட்டுவிட்டன. அந்த ஷரத்துகள் மீண்டும் இணைக்கப்பட வேண்டுமென்று தமிழக அரசு அன்று முதல் இன்று வரையிலும், எந்தத் தலைவருடைய தலைமையிலே மத்திய அரசு அமைந்தாலும் அவர்களிடத்திலே வாதாடிக்கொண்டுதான் இருக்கிறது. இப்போதும் வாதாடிக் கொண்டிருக்கின்றது; இப்பொழுது வாதாடவும் தயாராக இருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கின்றேன்.

கச்சத் தீவு அல்ல, இப்போதைய பிரச்சினை. தமிழகக் கடற்கரையிலேயிருந்து மீனவர்கள் தங்களுடைய பிழைப்புக்காக, வாழ்க்கைக்காக கடலிலே மீன்பிடிக்கச் செல்லும்பொழுது எல்லாம் இந்தச் சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இன்று நேற்றல்ல, கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலமாக நமது நிஜாமுதீன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, எண்ணிக்கையிலே சற்று ஏற்றத்தாழ்வு இருக்கலாம். அடிக்கடி இது

நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், பத்தாண்டுகளில், 1992 ஆம் ஆண்டில் இதுபோன்ற 6 சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டிருக் கின்றார்கள் தமிழக மீனவர்கள். 11 பேர் காயமடைந்திருக் கின்றார்கள். 1993 ஆம் ஆண்டு 13 சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள், 16 பேர் காயமடைந்திருக் கின்றார்கள். 1994 ஆம் ஆண்டில் 17 சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டு, 28 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1995 ஆம் ஆண்டில் 15 சம்பவங்களில் 16 பேர் கொல்லப்பட்டு, 14 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1996 ஆம் ஆண்டில் 37 சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டு, 39 பேர் காயமடைந்து இருக்கின்றார்கள். 1997 ஆம் ஆண்டில் 21 சம்பவங்களில் 22 பேர் கொல்லப்பட்டு, 18 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1998 ஆம் ஆண்டில் 7 சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டு, 4 பேர் காயமடைந்திருக்கின்றார்கள். 1999ஆம் ஆண்டில் 5 சம்பவங்களில் 2 பேர் கொல்லப்பட்டு, 5 பேர் காயமடைந்திருக் கின்றார்கள். 2000 ஆம் ஆண்டில் ஏப்ரல் 30 ஆம் தேதி வரையில், 8 சம்பவங்களில் 4 பேர் கொல்லப்பட்டு, 6 பேர் காயமடைந்துள்ளார்கள்.

ஏறத்தாழ இப்பொழுது நடைபெற்றுள்ள சம்பவத்தையும் சேர்த்தால் 80 பேர் கொல்லப்பட்டு, பலர் காயமடைந்த சம்பவங்கள், தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டேயிருக் கின்றன. இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரையில், நாகப்பட்டினம், அக்கரைப்பேட்டை, மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் 20 வயதுடைய குமார், 24 வயதுடைய முனுசாமி, 28 வயதுடைய அஞ்சப்பன், 28 வயதுடைய வேலுசாமி, 30 வயதுடைய சந்திரசேகரன் மற்றும் அரிச்சந்திரன் ஆகியோர் மீன்பிடிக்க, நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியிலிருந்து 29-4-2000 அன்று அதிகாலை 1 மணியளவில் மன்மதசாமி என்பவருக்குச் சொந்தமான இயந்திரப் படகில் சென்றுள்ளார்கள். 29-4-2000 அன்று காலை 10 மணியளவில் கோடியக்கரையிலிருந்து சுமார் 25 கிலோ மீட்டர் தொலைவில் இவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தபொழுது, இலங்கைக் கடற்படையைச்

சேர்ந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டதில், குமார், முனுசாமி, அஞ்சப்பன் ஆகியோர் அதே இடத்தில் துப்பாக்கிக் குண்டுக்குப் பலியாகியுள்ளனர். வேலுசாமி என்பவருக்கு தொண்டையிலே குண்டு பாய்ந்துள்ளது. அங்கே அருகில் மற்றொரு இடத்தில் இயந்திரப் படகிலே மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் உதவியோடு நாகப்பட்டினம் துறைமுகத்திற்குத் திரும்பி இருக்கின்றார்கள். தொண்டையிலே துப்பாக்கிக் குண்டு காயம்பட்ட வேலுசாமி நாகப்பட்டினம் மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இவர்கள் சென்ற விசைப்படகின் கேபின் பகுதியில் உள்ள கண்ணாடிகள் சேதம் அடைந்துள்ளன. படகின் உரிமையாளர் மன்மதசாமி கொடுத்த புகாரின் பேரில் நாகப்பட்டினம் காவல் நிலைய குற்ற எண் 269/2000, சட்டப் பிரிவுகள் 288, 326 மற்றும் 302 உப பிரிவு 25(1) ஆயுதச் சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செய்தி முதல்வர் அலுவலகத்திற்கு வந்த ஒருசில மணித்துளிகளிலேயே துப்பாக்கிச் சூட்டிலே இறந்த மூன்று பேர் குடும்பங்களுக்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி வழங்கிடவும், காயம் அடைந்தவருக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும் ஆணையிடப்பட்டது. மேலும் இந்திய - இலங்கை நல்லுறவில் பாதிப்பு ஏற்படாமலிருக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டு மீனவர்களுடைய உயிர் பலியாவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும், மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு இனியாவது தமிழ்நாட்டு மீனவர்களின் உயிர் பலியாவதைத் தடுத்து நிறுத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு ஓர் அறிக்கை வெளியிட்டேன். மத்திய அரசுக்கு கடிதமும் எழுதப்பட்டுள்ளது. அதற்கு இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து ஒரு பதிலும்கூட வந்திருக்கிறது.

என்னைப் போலவே தமிழகத்திலே உள்ள பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் மத்திய அரசுக்கு இத்தகைய வேண்டுகோளை விடுத்து, இலங்கை இராணுவத்திற்குக் கண்டனத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

1-5-2000 அன்று நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமைச் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில், உயிரிழந்த

மீனவர்களின் குடும்பத்தாருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் நிவாரண நிதி, அறிவித்தவாறு வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்துள்ளார். தற்போது சட்டம் - ஒழுங்குப் பிரச்சினை எதுவும் அங்கே இல்லை என்றும், 4-5-2000 அன்று இலங்கை கடற்படையினரின் நடவடிக்கையைக் கண்டித்து அமைதி ஊர்வலம் ஒன்று மீனவர்களால் நடத்தப்படவுள்ளது என்றும், நிலைமைகளைக் கண்காணித்து வருவதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

இறந்த மீனவர்களுடைய குடும்பத்திற்கு தமிழக அரசின் சார்பில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று ஆறுதல் வழங்கியதோடு துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மருத்துவமனையிலே சிகிச்சை பெறும் மீனவர்களையும் நேரில் பார்த்து விசாரித்துள்ளார். இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு நாம் அளித்த நிதி அன்னியில், மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபாயும், மீனவர் தனிநபர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் இவ்வாறு தொடர்ந்து கொல்லப்படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே கண்டித்ததைப்போலவே, நானும் தமிழக அரசின் சார்பில், தமிழக மக்களின் சார்பில் கண்டிக்கின்ற கடமை உடையவனாக இருக்கின்றேன்.

இன்றுள்ள மத்திய அரசிடம் மாத்திரமல்ல, கடந்த காலத்திலே மத்திய பொறுப்பிலே இருந்த எல்லா அரசுகளிடமும் நாம் இதுபோன்ற கோரிக்கைகளையும், வேண்டுகோளையும் வைத்திருக்கிறோம். நம்முடைய முறையீடுகளைக் கடிதம் மூலமாகவும் நேரிலும் தெரிவித்து வந்திருக்கிறோம். 1997 ஆம் ஆண்டு மத்திய அரசின் வெளி விவகாரத்துறை அமைச்சராக இருந்த திரு. குஜ்ரால் அவர்கள் எனக்கு எழுதிய கடிதத்தில் தமிழக மீனவர்களின் இந்தப் பரிதாப நிலை குறித்து இலங்கை அரசின் அதிபரும், வெளி விவகாரத்துறை அமைச்சரும் டெல்லிக்கு வந்திருந்தபோது நேரில் கூறியிருப்பதாகவும், தமிழக மீனவர்களோடு இலங்கைக் கடற்படையினர் சுமுகமான முறையிலே நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தி

இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். என்றாலும், இத்தகைய கொடுமைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன என்பது வருந்தத்தக்கது.

மத்திய அரசுக்கு இந்தச் சம்பவம் குறித்து நமது அரசின் சார்பில் தற்போது வலியுறுத்தியதின் காரணமாக மத்திய அரசின் வெளிவிவகாரத்துறை இலங்கை அரசின் டெபுடி ஹைகமிஷனரின் கவனத்திற்கு மத்திய அரசின் ஆழ்ந்த வருத்தத்தைக் கொண்டு சென்றுள்ளது. மேலும், இலங்கையிலே உள்ள இந்திய தூதுவருடனும் தொடர்புகொண்டு, இலங்கை அதிகாரிகளிடம் இச்சம்பவம் குறித்து நேரில் எடுத்துச்சென்று எதிர்காலத்திலே இதுபோன்ற நிகழ்வுகளில் நிதானமான போக்கைக் கடைப்பிடிக்க வலியுறுத்த வேண்டுமென்றும் தெரிவித்திருப்பதாக நேற்று மத்திய அரசிலிருந்து நமக்குத் தகவல் வந்துள்ளது. இன்று வந்துள்ள கடிதத்தில்,

"From the Ministry of External Affairs, New Delhi reference your letter, dated 29-04-2000.

Regarding the unprovoked firing on some Indian Fishermen by the Sri Lankan Navy on 29-04-2000 near Kodiakarai, Government of India's strong concern on the incident has been conveyed to the Sri Lankan High Commission in Delhi and the concerned authorities of Sri Lanka in Colombo. The Sri Lankan Government has been requested to ask its Navy personnel deployed in the area to act with restraint.

As discussed with you on phone, I have requested the Navy authorities here to ask their detachment for a detailed report on the incident including their assessment on the involvement of the Sri Lankan Navy. The Naval detachment is being instructed to by NHO to get in touch with the district authorities."

என்று குறிப்பிடப்பட்டு, இன்றைக்குக் கடிதம் டெல்லியிலேயிருந்து நம்முடைய அரசுக்கு வந்திருக்கிறது.

நாம் நம்முடைய குரலைத் தொடர்ந்து எழுப்பிக் கொண்டிருக்கிறோம். ஆனாலும், இலங்கை இராணுவம் அதனுடைய வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. கேட்டால் கடல் எல்லையைத் தாண்டி நம்முடைய மீனவர்கள் வந்துவிட்டார்கள் என்று ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள். அது உண்மையாக இருந்தால்கூட அப்படித் தாண்டிச் சென்றிருந்தால் கூட, அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை, அமைதியான முறையிலே அவர்களைக் கைது செய்து இலங்கைக்கு எடுத்துச் சென்று, புகார் கூற வேண்டும். இந்திய இராணுவத்திடமோ அல்லது இந்திய அரசுக்கோ அந்தப் புகாரைத் தரவேண்டு மேயல்லாமல், அவர்களை அந்த இடத்திலேயே கொன்று குவிக்க என்ன உரிமை இலங்கை இராணுவத்திற்கு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அந்த உரிமையை யார் கொடுத்தது என்பதும் எனக்குப் புரியவில்லை.

இந்தச் சம்பவத்தை வைத்து இங்கே பேசிய பேச்சுக்களில் வேறு சில கருத்துகளும் வெளிப்பட்டன. அவற்றிற்கெல்லாம் நான் பொறுப்பல்ல; பொறுப்பாகவும் இருக்கக்கூடாது. பேசியவர்களும் அந்தக் கருத்தை வலியுறுத்துகிற ஒரு வழியாக இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்றால், இரு நாடுகளுக்கும் உள்ள உறவைப் பற்றி, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தமிழகத்திலேயுள்ள பல அரசியல் கட்சிகளுக்கும் ஒருமித்த உணர்வு உண்டு. வெளிநாட்டு விவகாரங்களிலே நம்முடைய அரசு என்ன கொள்கையைக் கடைபிடிக்கிறதோ அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்வது என்பது நாம் கடைப்பிடிக்கின்ற ஒரு கொள்கையாகும். எனவே, இங்கே பேசிய பல கருத்துகள் அவரவர்களுடைய உணர்ச்சி வசப்பட்ட கருத்துகளாக இருந்தாலும்கூட, இவை எல்லாம் இந்த நிகழ்ச்சியின் காரணமாக இங்கே வெடித்துச் சிதறிய கருத்துகள் என்ற அளவிலே இலங்கை அரசும் எடுத்துக்கொள்ள வேண்டும்; இந்திய அரசும் எடுத்துக்கொண்டு, எவ்வளவு வெப்பமான விவாதமாக இது அமைந்தது. அதற்கு என்ன காரணம்? 3 மீனவர்கள் உயிர் என்பது சாதாரணமானதல்ல. இதுவரையிலே

இந்த 10 ஆண்டு காலத்திலே 100 மீனவர்கள் ஏறத்தாழ கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதும் சாதாரண விஷயமல்ல. அவர்களுக்கு நாம் தருகின்ற நிதி மாத்திரம் அந்த உயிர் நஷ்டத்தை அந்தக் குடும்பத்திற்கு ஈடுகட்டிவிடாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

பல உறுப்பினர்கள் ஒரு இலட்சம் போதாது, 3 இலட்சம் தர வேண்டுமென்று சொன்னார்கள். ஞானசேகரன் சொன்னார். (குறுக்கீடு) இரண்டு இலட்சமா? ஞானசேகரன் இரண்டு இலட்சம் என்றார். நம்முடைய ஐ. கணேசன் 3 இலட்சம் என்றார். போட்டி போட்டுக்கொண்டு ஒவ்வொருவரும் சொன்னார்கள். ஒரு நல்ல வழி, நம்முடைய உறுப்பினர்களுக்கும் அதிலே உள்ள அனுதாபத்தை வெளிப்படுத்துகிற வகையில், 50 இலட்சத்தை 60 இலட்சமாக ஆக்கித் தந்திருக்கிறோம், சட்டமன்ற உறுப்பினர் களுடைய மேம்பாட்டுத் திட்டத்தில். அந்த உறுப்பினர்களுடைய கட்சியின் சார்பாக அந்த உறுப்பினர்கள் எல்லாம் ஓரளவு தொகையைத் தந்து, இன்னும் தரவேண்டிய மிச்சம் எவ்வளவு என்று கருதுகிறார்களோ அதை ஈடுசெய்வார்களானால், அதை வாங்கி நான் அந்தக் குடும்பங்களுக்குத் தரத் தயாராக இருக்கின்றேன். உறுப்பினர்களுடைய உளப்பாங்கை இதிலே நான் தெரிந்துகொள்ளவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழர்களின் பாதுகாப்பு

உரை : 110 **நாள்: 04.05.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக மிக முக்கியமான, குறிப்பாக நம்முடைய இன மக்களை இன்னொரு நாட்டில் காப்பாற்ற வேண்டும் என்கின்ற உணர்வோடு அளிக்கப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களில் நம்முடைய மதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா திரு. ஞானசேகரன் அவர்களும், பாரதிய ஜனதாக் கட்சியின் சார்பில் திரு. வேலாயுதன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. ஜி.கே.மணி அவர்களும், எம்.ஜி.ஆர். அ.இ.அ.தி.மு.க. சார்பில் திரு. சி. அன்பரசன் அவர்களும் தங்களுடைய சீரிய கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இன்றுள்ள நிலையில் இன்று காலையிலேயே நான் பத்திரிகையிலே படித்த செய்தி, ''இலங்கைக்கு இராணுவத்தை அனுப்புவதில்லை'' என்று பாதுகாப்பு அமைச்சகக் கூட்டத்திலே முடிவு செய்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் ஆயுதத் தளவாடங்களை அனுப்பி வைக்கக்கூடும் என்ற செய்திகளும் வந்துள்ளன. இராணுவத்தை அனுப்பக்கூடாது என்பதே தமிழ் நாட்டு மக்களுடைய ஏகோபித்த கருத்து. நம்முடைய நண்பர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போதுகூட, நான் கருதினேன். இராணுவத்தை அனுப்பினால் தவறு இல்லை என்று கருத்துப்பட ஒருவேளை பேசுவாரோ என்று நான் சந்தேகப்பட்டேன். ஆனால், அவரே அழுத்தந்திருத்தமாக இராணுவத்தை அனுப்பக் கூடாது என்று சொன்னவுடன், எனக்கு பாதிபலம் வந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வு இன்றைக்கு இருக்கிறது என்பதை இங்கே நடைபெற்றுள்ள இந்த

விவாதம் மத்திய அரசுக்குப் புலப்படுத்தும் என்றே நான் கருதுகிறேன்.

இராணுவத்தை அனுப்பக்கூடாது என்பது மாத்திரமல்ல; இராணுவத் தளவாடங்களையும் இலங்கைக்கு அனுப்பி உதவக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்தும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலே பேசிய உறுப்பினர்களுடைய கருத்தும் ஆகும். நேற்று இரவு இதுபற்றி 8½ மணியளவில் இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் என்னிடத்திலே தொலைபேசியில் தொடர்பு கொண்டு இன்று காலையிலே உடனே வரவேண்டும் என்று சொன்னார்கள். நான், ''சட்ட மன்றம் மற்றும் இன்று அமைச்சரவைக் கூட்டம், இவை எல்லாம் இருக்கின்ற செய்திகளைச் சொல்லி, காலையில் வர இயலாது'' என்று சொன்னேன். ''மாலையிலாவது வர முடியுமா?'' என்று கேட்டார்கள். மாலையில் நான் செல்வதைப் பற்றி இன்னும் முடிவாகவில்லை. அதுபற்றி யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஒருவேளை செல்லக்கூடும். ஆனால், ஒன்று, இந்த முடிவு பாதுகாப்பு அமைச்சகத்திலே மாத்திரம்தான் எடுக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. பத்திரிகைச் செய்தியாகத்தான் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவிலே பல மாநிலங்கள் இருந்தாலும்கூட, மிகவும் பாதிக்கப்படக்கூடிய மாநிலம் இந்தப் பிரச்சினையில், நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை நான் சொல்லத் தேவை யில்லை. இங்கு இருக்கிற நீங்கள் அனைவரும் மிகத் தெளிவாக உணர்வீர்கள். ஏற்கெனவே ஒருமுறை பாதிக்கப்பட்டு, பல வகைகளில் பாதிக்கப்பட்டு விரும்பத்தக்க, விரும்பத்தகாத பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஒரு மண் இந்த மண் என்பதையும் நாம் எல்லாம் அறிந்து அதன் உணர்விலேதான் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றோம். ஆனால், இந்தச் செய்தி, பாதுகாப்பு அமைச்சகத்திலே எடுத்த ஒரு முடிவாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. தமிழ்நாட்டு அமைச்சர்களும் அங்கு இருக்கிறார்கள். அவர்களில் யாரையும் கலந்து பேசியதாகத் தெரியவில்லை. அது எனக்குள்ள ஒரு மனக்குறை. குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அங்கே இருக்கின்ற முரசொலி மாறனையோ

அல்லது டி.ஆர். பாலுவையோ அல்லது ராஜாவையோ அல்லது மற்ற கட்சிகளின் சார்பாக, தமிழகத்தின் சார்பாகச் சென்றிருக்கின்ற கட்சிகளின் சார்பில் இருக்கின்ற அமைச்சர்களையோ கலந்து பேசியதாகத் தெரியவில்லை. என்னைப் பொறுத்த வரையில் தி.மு.க. அமைச்சர்களைக் கலந்து பேசவில்லை என்பதுதான் எனக்குத் தெரியும். மற்ற அமைச்சர்களைப் பற்றி எனக்குத் தெரியாது. அப்படி கலந்து பேசாமல் ஓர் அறிக்கை வெளியிட்டிருப்பது, அது நாம் வரவேற்கத்தக்க அறிக்கை என்றாலும்கூட, ஒரு மனக்குறைதான் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியாது. இராணுவத்தை அனுப்பி ஏற்கெனவே நாம் அனுபவப்பட்டிருக்கிறோம். இராணும் சென்றதால், நம்முடைய ராணுவத்திற்குத்தான் பெரும் இழப்பு. ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களைக் கடந்த காலத்திலே இலங்கைக்கு அனுப்பியதன் காரணமாக அவர்களை நாம் இழந்திருக்கிறோம். அதையெல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது.

எல்.டி.டி.ஈ. பிரச்சினைக்கும்- விடுதலைப் புலிகள் பிரச்சினைக்கும்- இதற்கும் சம்பந்தம் இல்லை. இங்கேகூட சில பேர் அதைத் தொட்டுக்காட்டிப் பேசினார்கள். நம்முடைய நண்பர் அழகிரிகூட அதுகுறித்து வேறு ஓர் ஒத்திவைப்பு அறிவிப்பை தங்களிடத்திலே கொடுத்திருக்கின்றார்கள். ஆனால், அதையும் ஒட்டிப் பேசிவிடலாம் என்று தங்களிடத்திலே அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை மாத்திரம் என்ன என்று சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: சரி. தீர்மானத்தில் ''சிதம்பரத்திலே தமிழர் மகாநாடு, எழுச்சி மகாநாடு விடுதலைப் புலிக்கு ஆதரவாக நடைபெறுகிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். விடுதலைப் புலிகள் விவகாரத்தில் தமிழ்நாட்டினுடைய நிலை வேறு. தமிழக அரசு எடுக்கிற நிலை வேறு. ஆனால், இலங்கையிலே இன்றைக்கு தமிழர்களைக் காப்பாற்றுகிற நிலை வேறு. எனவே, தனித்தனியாகப் பிரித்துப் பார்க்க வேண்டும். அப்படி பிரித்துப் பார்த்த காரணத்தால்தான்

அழகிரி ஒரு தீர்மானத்தையும், ஞானசேகரன் ஒரு தீர்மானத்தையும் இங்கே கொடுத்திருக்கின்றார்கள் என்றுகூட என்னால் புரிந்துகொள்ளக்கூடிய ஓர் உண்மையாக இருக்கிறது. ஞானசேகரன் கொடுத்த தீர்மானம் இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பக்கூடாது என்ற தீர்மானம். அழகிரி அவர்கள் கொடுத்திருக்கின்ற தீர்மானம் இங்கே விடுதலைப் புலிகள் மீண்டும் இதுபோன்ற காரியங்களில் எல்லாம் ஈடுபடுகிறார்கள் அது தேவையற்றது. அது கூடாது என்று தடுக்கின்ற தீர்மானமாகும்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளாக இருந்தாலும், வேறு எந்தத் தீவிரவாத அமைப்புகளாக இருந்தாலும் அவர்களின் வன்முறைகளுக்கோ தீவிரவாதச் செயல்களுக்கோ இடம் இல்லை, இடம் நிச்சயமாக அளிக்கப் படமாட்டாது. அதிலே தமிழக அரசு மிகுந்த கண்காணிப்பாக இருக்கும் என்பதை திரு. அழகிரி போன்ற நண்பர்களுக்கு நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தப் பிரச்சினை வேறு என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். பல்லாயிரக்கணக்கான தமிழர்கள், அங்கு இருக்கின்ற சிங்கள இராணுவ வீரர்களால் வேட்டையாடப் படுகின்ற ஒரு கொடுமை நடைபெற்று, அந்தக் கொடுமையினுடைய ஓர் இறுதிக் கட்டமாக இன்று சிங்கள வீரர்கள் எல்லாம் பாதுகாப்புத் தேடுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை உருவாகி, அதற்கு இந்தியா உதவ வேண்டும் என்று சொன்னால், மறைமுகமாக அங்கே இருக்கின்ற தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்றுதான் ஆகிவிடும்.

'இந்து' பத்திரிகையிலே, எழுதியிருப்பதாக நம்முடைய அன்பரசன் அவர்களும் மற்றவர்களும் இங்கே எடுத்துச் சொன்னார்கள்- இலங்கை அரசுக்கு உதவியாக வேறு நாடு வராதா, பாகிஸ்தான் வராதா, சீனா வந்து உதவாதா என்று. பாகிஸ்தானோ, சீனாவோ, வேறு எந்த நாடாக இருந்தாலும், தமிழர்களை அங்கே பழிவாங்க அவர்கள் காரணமாக இருக்கலாம். இந்தியா அதற்குக் காரணமாக இருக்கக்கூடாது என்பதுதான் என்னுடைய பலமான, வலிமையான கருத்தாகும்.

தமிழர்களைப் பழிவாங்க, தமிழர்களைக் கொன்று குவிக்க, இந்தியா காரணமாக இருக்கக்கூடாது; இந்திய இராணுவம் காரணமாக இருக்கக்கூடாது; அதற்கு இந்திய இராணுவ தளவாடங்கள் பயன்படக் கூடாது என்பதுதான் என்னுடைய அழுத்தந்திருத்தமான கருத்து என்பதை எடுத்துக்கூறி, நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வுகளோடு என்னுடைய உணர்வையும் பகிர்ந்துகொள்கிறேன். நன்றி. வணக்கம்.

வாசுதேவநல்லூர் பிரச்சினை

உரை : 111 **நாள்: 10.05.2000**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவநல்லூர் ராமர் என்பவருடைய சாவு குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. சுப்பராயன், திரு. சொ. கருப்பசாமி, திரு. டி. மணி, டாக்டர். க. கிருஷ்ணசாமி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது என்ற வினாவையும் எழுப்பியிருக் கிறார்கள். அந்த மாவட்டத்தினுடைய காவல் துறையும், மாவட்ட ஆட்சித் தலைவரும் தந்துள்ள விவரங்களை, அவைக்கு நான் அறிவிக்க விரும்புகிறேன். அவர்கள் தந்துள்ள விவரங்கள் இவை. நானாக எதையும் கணித்து இப்படித்தான் நடந்தது என்று சொல்லவில்லை. ஏனென்றால் மேற்கொண்டு விசாரணை நடத்துவதற்கு இந்த அரசு தயாராக இருப்பதால், தந்துள்ள விவரங்கள்:

வாசுதேவநல்லூர் மாரியம்மன் கோயில் பூக்குழி 2.5.2000 அன்று மாலை 4.15 மணி முதல் 5.00 மணி வரை நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதிலே கலந்துகொண்டு தீ மிதித்தார்கள்.

பகல் சுமார் 2.00 மணி முதல் தீ மிதிக்கும் இடத்தைச் சுற்றி சங்கரன்கோயில் உதவி காவல் கண்காணிப்பாளர், புளியங்குடி ஆய்வாளர் மற்றும் 100 காவலர்கள் பாதுகாப்புப் பணியிலே ஈடுபட்டிருந்தார்கள்.

மாலை சுமார் 3.30 மணிக்கு, கீழப்புதூரைச் சேர்ந்த நாற்பது வயதுடைய அ.இ.அ.தி.மு.க. பிரமுகர் ராமர், குடி போதையில் அங்கே தள்ளாடிக்கொண்டே வந்தார். வாசுதேவ

நல்லூர் பஜாரில் சித்திரைக்கனி என்பவரின் பூச்சிமருந்துக் கடையில் பூச்சி மருந்து பாட்டில் கேட்டார். அவர் குடிபோதை யில் இருந்ததாலும், வழக்கமாகக் குடித்துக்கொண்டு அடிக்கடி பஜாரில் தள்ளாடியபடி திரியும் பழக்கம் உடையவர் என்பதாலும் கடைக்காரர் பூச்சிமருந்து தர மறுத்துவிட்டார்.

பின்பு மாலை 5.30 மணியளவில் Kayalvizhi Readymade Store-க்கு மேற்கே தென்காசி மதுரை Main Roadல் பிதற்றிக் கொண்டு ராமர் கிடந்துள்ளார். வாயில் நுரை தள்ளியபடி கை கால் உதறிக்கொண்டு கிடந்த ராமரை அருகில் Medical Store வைத்திருக்கும் ம.தி.மு.க. நகரச் செயலாளர் மகாலிங்கம் பார்த் துள்ளார். அப்போது ராமர் வாயிலிருந்து பூச்சிமருந்து வாடை அடித்துள்ளது. அதுசமயம் அங்கு வந்த வாசுதேவநல்லூரைச் சேர்ந்த ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் ரங்கசாமியும் மற்றும் ஒருவரும் சேர்ந்து ஒரு தள்ளுவண்டியில் ராமரைத் தூக்கிப்போட்டு வாசுதேவநல்லூர் Main Road-ல் உள்ள டாக்டர் திருமலை கணேசனிடம் சிகிச்சைக்குச் சேர்த்துள்ளார்கள். டாக்டர், வயிற்றைச் சுத்தம் செய்து முதலுதவி செய்துள்ளார். பூச்சிமருந்து போன்ற விஷயத்தை யாராவது அருந்தினால் உடனடியாக வயிற்றைச் சுத்தம் செய்வது மருத்துவர்களின் வாடிக்கை. உடனே ரங்கசாமி வாடகைக் கார் எடுக்க கடைத்தெருவுக்கு வந்துள்ளார். அங்கு வாசுதேவநல்லூரைச் சேர்ந்த தங்கப்பழம், வாசுதேவநல்லூர் அ.இ.அ.தி.மு.க. ஒன்றியச்செயலாளர் ஆயுள்ராஜா பாண்டியன் ஆகிய இருவரையும் காருடன் பார்க்க, ராமரை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல காரைக் கேட்டுள்ளார். கார் அவசரமாக சிவகிரிக்குப் போக இருப்பதால், பணம் தருகிறேன் என்று கூறி ஆயுள்ராஜா பாண்டியன் ரூ. 200-ஐ ரங்கசாமியிடம் கொடுத்துள்ளார். இதற்கிடையில் ரங்கசாமி மருத்துவமனைக்குச் சென்றபோது இரவு 8½ மணிக்கு ராமர் இறந்துவிட்டதாக டாக்டர் கூறியுள்ளார். இதன்பிறகு வெளி ஆட்களின் தூண்டுதலின் பேரில், இறந்துபோன ராமரின் 15 வயதுடைய மகள் தங்கம், காவல் துறை ஆய்வாளர் ராமரை பூக்குழி நடந்த பகுதியிலே பிடித்துத் தள்ளி அடித்ததால்தான் இறந்துள்ளார் என்று கொடுத்த புகாரின் பேரில் வாசுதேவநல்லூர் காவல் நிலையக் குற்ற எண் 106/2000

சட்டப் பிரிவு 174 கு.வி.ந.ச.ன்படி வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தென்காசி வருவாய்க் கோட்டாட்சியரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

ராமரின் சடலம் தென்காசி அரசு மருத்துவமனையில் 3.5.2000 அன்று பிற்பகலில் இரண்டு மருத்துவர்களால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டது. பிரேதப் பரிசோதனையில் இறந்தவரின் உள் உறுப்புகள் யாவும் நல்லநிலையில் இருந்த தாகவும், வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், அது ஏற்கெனவே மருத்துவமனையில் முற்றாகக் கழுவப்பட்டுவிட்ட காரணத்தினால் வயிறு மற்றும் குடல் காலியாக இருந்ததாகவும், இறந்தவர் விஷம் அருந்தினாரா என்பது குறித்து குடல் உறுப்பு களை இரசாயனப் பரிசோதனை செய்த பின்னரே கருத்துக் கூற முடியும் என்றும் பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் தெரிவித்தார். பிரேதப் பரிசோதனைக்குப் பின்னர், இறந்து போனவரின் சடலம் உறவினர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

ஆய்வாளரின் தொடர் சாராய வேட்டையினாலும், அவ ருடைய கண்டிப்பான செயல்பாட்டினாலும், வேண்டுமென்றே ஆய்வாளரைச் சம்பந்தப்படுத்தி புகார் கூறப்பட்டுள்ளதாகப் போலீஸ் தரப்பிலே சொல்லப்படுகிறது.

இறந்துபோன ராமரின் முதல் மற்றும் இரண்டாவது மனைவிகள் காரணமாக ஏற்பட்டுள்ள தகராறுகள் காரணமாக ராமர் மனம் உடைந்து தினந்தோறும் குடித்துவிட்டு நிம்மதி இழந்து இருந்ததாகவும் தெரிகிறது. தென்காசி கோட்டாட்சித் தலைவர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையைப் பெற்று உடனடியாக வாசுதேவநல்லூர் அருணகிரி மருத்துவமனைக்கு விரைந்து, இறந்தவருடைய பிரேதத்தைப் பார்வையிட்டு, பிரேத விசாரணை செய்துள்ளார். கூடியிருந்த மக்களிடம் ராமர் இறந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் எனக் கோட்டாட்சித் தலைவர் தெரிவித்ததன் பேரில் கூட்டத்தினர் கலைந்து சென்றுள்ளனர் என்றும், தென்காசி கோட்டாட்சித் தலைவர் இறந்தவருடைய உடலைப் பார்வையிட்டபோது, பின்வரும் காயங்கள் அவருடைய உடலில் இருந்துள்ளன என்றும் நெல்லை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

1. இடது கால் மூட்டுக்கு கீழ் இடது பக்கம் சிறிய காயம்.

2. இடது காலில் ஒரு சிறிய காயம்.

3. மேற்கண்ட காயத்திற்குக் கீழ் இடது காலில் ஒரு சிறிய காயம்.

இந்தக் காயங்கள் எல்லாம் அவர் குடிபோதையிலே கீழே விழுந்தபோது ஏற்பட்ட சிராய்ப்புகள் என்றும், யாரும் அடித்து அதனால் ஏற்பட்ட காயங்கள் அல்ல என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். பிரேத விசாரணை நடத்தி உடலை தென்காசி அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக கோட்டாட்சியர் அனுப்பியதாகவும், தென்காசி அரசு மருத்துவமனையில் பிரதேப் பரிசோதனை செய்து முடித்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு 3.5.2000 அன்று இரவு நல்லடக்கம் செய்யப்பட்டது என்றும், உடல் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப் பட்டுள்ளன என்றும் தென்காசி கோட்டாட்சியர் தமது விசாரணையில் தெரிவித்துள்ளார். ராமர் மரணம் குறித்து காவல் துறைத் தரப்பில், அவர் விஷம் அருந்தி இறந்ததாகவும், ராமர் தரப்பைச் சேர்ந்தவர்கள் காவல் துறையினரின் தாக்குதல் காரணமாக இறந்ததாகவும் கூறுவதால் இந்தச் சம்பவம் குறித்து காவல் நிலை ஆணை எண் 145-ன் கீழ் விரிவான விசாரணை நடத்த உத்தரவிடலாம் எனத் தெரிவித்ததன்பேரில் காவல் நிலை ஆணை 145-ன் கீழ் தென்காசி கோட்டாட்சித் தலைவரின் மேல் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும், விசாரணையை இரண்டுவார காலத்தில் முடிக்கும்படி தென்காசி கோட்டாட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ள தாகவும், திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் மேலும் தெரிவித்துள்ளார். இந்த விவரங்கள்தான் எனக்குக் கிடைத்துள்ளன. இதை வைத்து மேலும் விசாரணை நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். என்ன Subject?

திரு. பி.ஆர். சுந்தரம்: முதல்வர் சொன்னதிலிருந்து.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஈஸ்வரன், நீங்கள் எப்படிப் பேசுவீர்கள்? மூன்று நாட்களாகக் கேட்டீர்கள். உங்களுக்கு அனுமதி கொடுத்து, உங்களைத்தான் கூப்பிட்டேன். அவைக்கு வருவதே இல்லை. சரி, சொல்லுங்கள்.

திரு. ரா. ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் முதலமைச்சர் அவர்கள் பதிலே சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் பதில் சொன்ன பிறகு, திரு. ஈஸ்வரன், நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? இதுகுறித்து ஏதாவது இருந்தால், தனியாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: முத லமைச்சர் பேசிய பிறகு உறுப்பினர் பேசுவது முறையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் பேசியதற்குப் பிறகு எப்படிப் பேசுவீர்கள்?

திரு. ரா. ஈஸ்வரன்: சரி.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் கூறும்போது, உயர் அதிகாரிகள் கொடுத்த தகவலின்பேரில் நான் இதைப் பேசுகிறேன் என்று குறிப்பிட்டார்கள். மேலும் கோட்டாட்சியரை வைத்து ஒரு விசாரணைக் கமிஷன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே என்ன இருக்கிறது? முதலமைச்சர் தனக்கு வந்த தகவல்- எது உண்மை என்று எனக்குத் தெரியாது; வந்த தகவலைச் சொல்கிறேன்- என்று சொல்கிறார் (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், நீங்கள் எதற்கு எழுந்திருக்கிறீர்கள்? இப்படி ஒவ்வொருவராக எழுந் தால் என்ன அர்த்தம்? இது சட்டசபையா என்ன? (குறுக்கீடு)

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டாட்சியரின் விசாரணை மூலம் நியாயம் கிடைக்காது. நீதிபதியை வைத்து விசாரணையை நடத்த வேண்டும்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் நீதிபதி விசாரணை வேண்டும் என்று சொல்கிறார். அதை த.மா.கா. கேட்டால், நான் அதைப்பற்றி யோசிப்பேன்; கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்கள் கேட்டால், அதைப்பற்றி யோசிப்பேன். 100 பேர் கும்பகோணம் மகாமகத்திலே இறந்தபோது நீதி விசாரணை வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) எல்லாக் கட்சிக்காரர்களும் கேட்ட நேரத்தில், அதுமாத்திரமல்ல, அதற்காக வழக்கேகூட நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் தொடுத்தார்கள். அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், அலட்சியப்படுத்திவிட்டு, D.R.O. விசாரணை போதும் என்று, 100 பேர் மகாமகக் குளத்திலே மூழ்கி இறந்துபோனதற்குக் காரணமாக இருந்த ஜெயலலிதாவும் சசிகலாவும் அதற்கு இணங்கவில்லை என்பதை சுந்தரம் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆள் கடத்தல் விவகாரம்

உரை : 112 நாள்: 11.05.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்வு சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இராமலிங்கம், திரு. ஞானசேகரன், திரு. சிவபுண்ணியம், திரு. ஹேமச்சந்திரன், திரு. தாமரைக்கனி ஆகியோர் தங்களுடைய கருத்துகளை எடுத்துக்கூறி, உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்கின்ற கோரிக்கையினை வைத்திருக்கின்றார்கள். இது சம்பந்தமாக அதிகாரிகள் எனக்கு அனுப்பியுள்ள தகவல்.

திருபுவனம் பட்டு கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர், முன்னாள் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் திரு. எம்.ஜி. சுந்தர மூர்த்தி 8.5.2000 அன்று திருவிடைமருதூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் அவரது தம்பி திரு. அரிதாஸ், அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகத் தெரிவித்ததன் பேரில் குற்ற எண் 125/2000-ன்படி வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

9.5.2000 அன்று காலை 9.00 மணியளவில் திருபுவனம் குட்டையில் அரிதாஸ் சடலம் கிடப்பதாக சுந்தரமூர்த்தி மீண்டும் புகார் செய்தார். அதன்பேரில் வழக்கு 'சந்தேக மரணம்' என்ற பிரிவுக்கு மாற்றப்பட்டது. காவல் துறையினர் அரிதாஸின் சடலத்தை திருவிடைமருத்தூர் அரசு மருத்துவமனைக்கு பிரேதப் பரிசோதனைக்காக எடுத்துச் சென்றார்கள். பிரேதப் பரிசோதனையில் அரிதாஸினுடைய உடம்பில் இரண்டு தொடைகளிலும் சிராய்த்த காயம் காணப்பட்டது. இது தவிர, வேறு காயங்கள் இல்லை. பிரேதப் பரிசோதனை முடிந்த பிறகு உள் உறுப்புகள் இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அரிதாஸ்

சடலம் வாகனத்தில் ஏற்றப்பட்டு அவருடைய வீட்டிற்குக் கொண்டுசெல்லப்பட்டது.

மாலை 6.30 மணியளவில் பிரேதத்தை எடுத்துச்சென்ற வாகனத்தோடு ஊர்வலமாக வந்து திருபுவனம் கடைத்தெருவில் நிறுத்தி அரிதாஸ் இறப்புக்குக் காரணமான குற்றவாளியைக் கைதுசெய்யக் கோரி இறந்தவரின் உறவினர்களும், தமிழ் மாநிலக் காங்கிரஸாரும் சாலை மறியலில் ஈடுபட்டனர். இது போன்ற சாலை மறியல்களால் கோரிக்கையை வலியுறுத்துவது ஒருபுறம் இருந்தாலும்கூட, சில நேரங்களில் சாலை மறியலைக் கைவிட வேண்டுமென்பதற்காக காவல் துறையினரேகூட யாரை யாவது இரண்டு பேரைக் கைது செய்வோம் என்று, சம்பந்தம் இல்லாத நிரபராதிகளைக்கூட கைது செய்துவிடக்கூடும் என்பதை சாலை மறியலில் ஈடுபடுகின்றவர்கள் அல்லது அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பவர்கள் உணர வேண்டுமென்பதை நான் இங்கே கவனப்படுத்த விரும்புகிறேன்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்குக் கும்பகோணம் வருவாய்க் கோட்ட அலுவலர், துணைக் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் சென்று பேச்சுவார்த்தை நடத்தி அது பயன்தராமல் போகவே, இரவு 9.20 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பிலே உள்ளவர்) மற்றும் காவல் கண்காணிப்பாளர் விரைந்து வந்து பேச்சுவார்த்தை நடத்தி இவ்வழக்கை மாவட்டக் குற்றப்பிரிவிற்கு மாற்றுவதாக உறுதி அளித்ததன் பேரில் சாலை மறியல் விலக்கிக்கொள்ளப்பட்டது. இரவு 11.45 மணியளவில் உடல் தகனம் செய்யப்பட்டது. தற்போது அசம்பாவிதம் ஏதுமில்லை என்றாலும்கூட, இந்த நிகழ்வையும், வழக்கையும் C.B., C.I.D., பிரிவுக்குக் கொடுக்கவேண்டுமென்று நம்முடைய ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள். இறந்து போனவருடைய கட்சி சார்பில் அவர்கள் பேசிய காரணத்தினாலும், அந்தக் கட்சிக்கு உரிய குரல் என்கின்ற முறையினாலும், மற்ற உறுப்பினர்கள் வலியுறுத்தலின் பேரிலும் இந்த அரசு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் நியாயம் வழங்கக்கூடியது, நியாயத்தை நிலைநாட்டக் கூடியது என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபிக்கின்ற வகையிலும், இந்த வழக்கை சி.பி.,

சி.ஐ.டி.-க்கு இந்த அரசு மாற்றித் தரும் என்ற செய்தியை நான் இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையினுடைய கைகள் கட்டப்பட்டதாக நம்முடைய தாமரைக்கனி சொன்னார். அதெல்லாம் அந்தக் காலம். காவல் துறையினுடைய கைகளைக் கட்டிப்போட்டு, கொடவாசல் நடத்துவதெல்லாம் அந்தக் காலம், இந்தக் காலத்தில் அல்ல என்பதையும் தெரிவித்து உரிய நடவடிக்கைகள்- ஆளுங்கட்சியா, எதிர்க்கட்சியா என்று பாராமல்- ஆளுங்கட்சியினராக இருந்தாலும் எடுப்பதற்கு காவல் துறையினருக்கு இந்த அவையின் மூலமாக நான் அறிவுறுத்துகின்றேன். C.B., C.I.D., விசாரணையும் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த விசாரணைக்குப் பிறகு அந்தக் குடும்பத்திற்குத் தரவேண்டிய நிவாரண நிதியைப் பற்றிப் பிறகு அறிவிக்கலாம் என்று இந்த நேரத்திலே உறுதி கூறி, இந்த அளவில் அமைகின்றேன்.

தேயிலை உற்பத்தியாளர்கள் பிரச்சினை

உரை : 113 நாள் : 16.05.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எழுதப்படாத ஒப்பந்தம், அறிவிக்கப்படாத விஷயம் என்பதைப் போல, எனக்குச் சொல்லப்படாமலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. முன்கூட்டியே சொல்லியிருந்தால், மேலும் சில விவரங்களை என்னால் சேகரித்து இருக்க முடியும். ஒத்திவைப்புத் தீர்மானம் அல்லது சிறப்புக் கவன ஈர்ப்பு வந்த பிறகுதான், நீலகிரி மாவட்டத்திலிருந்து ஏதாவது செய்தி வந்திருக்கிறதா என்று உடனடியாக நான் என்னுடைய செயலாளர்களுக்கு தாக்கீது அனுப்பி, அவர்கள், வந்துள்ள செய்தியை எனக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நீலகிரி மாவட்டத்திலே எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த விவசாயிகளின் சார்பாக ஒரு குழு. இந்தத் தேயிலைப் பிரச்சினைக்காக அமைக்கப்பட்டது. அது அரசியல் ரீதியாக இல்லாமல், விவசாயி களுடைய பிரச்சினையை மாத்திரம் ஒட்டுமொத்தமாகக் கவனிக்கின்ற குழுவாக அமைந்தது. ஆனால் சில ''பிரபு''க்களின் சூழ்ச்சியின் காரணமாக, விவசாயிகளை பகடைக்காயாகப் பயன்படுத்துகின்றவர்கள், தங்களுடைய தோல்வியை எப்படியாவது இந்த முறையிலே பழி தீர்த்து, அதை மறைத்துவிட வேண்டும் என்பதற்காக, நிறையப் பணம் செலவழிக்கப்பட்டு, விவசாயிகள் அங்கே தூண்டிவிடப்பட்டு இருக்கின்றார்கள் என்பதுதான் எனக்கு வந்துள்ள உண்மையான தகவலாகும்.

இந்தப் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர்களால், இந்த மாமன்றத்திலே எழுப்பப்பட்டபோது, இந்தப் பிரச்சினைக்கு,

ஒருவழியாக மாநில அரசால் செய்ய முடிந்தது என்ற அளவில் - 8 சதவிகிதம் என்று இருந்த விற்பனை வரியை, 4 சதவிகிதம் என்று மாற்றியமைத்தது தமிழக அரசு. அதிலே திருப்தி அடைந்தவர்களைப் போல, அறிக்கையெல்லாம் விட்டார்கள், அந்தக் குழுவிலே உள்ளவர்கள். அந்தக் குழுவிலே உள்ள தி.மு.க-வைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் அல்ல, எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அறிக்கையெல்லாம் விட்டார்கள். அதற்குப்பிறகு, இந்தக் குழுவினர் சென்று, மத்திய அரசினுடைய வர்த்தகத்துறை அமைச்சரைச் சந்தித்துப் பேசிய பிறகு, அவரும் மத்தியிலே உள்ள பிரதமர் போன்றவர்களைக் கலந்து பேசி, அவர்களும் 5 ரூபாய் மானிய விலையாகத் தருவது என்கின்ற அறிவிப்பைச் செய்தார்கள்.

அதுமாத்திரமல்ல, இறக்குமதி ஆகாமல் இருக்க, தடுப்பதற்கு, அதிகப்படியான சுங்க வரியை விதிக்க வேண்டு மென்ற விவசாயிகளுடைய கோரிக்கை ஏற்கப்பட்டு, 15 சதவிகிதமாக இருந்த சுங்க வரி 35 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், இறக்குமதி வரி உயர்த்தப்பட்டதே தவிர, இன்னும் எந்தப் பொருளும் வெளிநாட்டிலே யிருந்து, இந்தத் தேயிலை சம்பந்தமாக, எந்த இலையோ, எதுவுமோ இங்கே இறக்குமதி ஆகவில்லை. இதுதான் உள்ள சூழ்நிலை. இவ்வளவு தாராளமாக உதவிகளைச் செய்தும்கூட, தேயிலைப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியவில்லை என்றால், அது அரசின் குற்றமல்ல. ஆனால், ஏதோ அரசின் குற்றமாக ஆக்க வேண்டுமென்கின்ற ஒரு எண்ணத்தில், சர்வகட்சிகளும், எல்லாக் கட்சிகளும் இருந்தும்கூட, சில கட்சிகளைப் பற்றி கவலைப் படாமல், குறிப்பாக ஆளும் கட்சியைப் பழி தீர்க்க வேண்டுமென்கின்ற எண்ணத்தோடு, ஒரு ஊர்வலத்தை நேற்றையதினம் நடத்தியிருக்கின்றார்கள். அதுபற்றிய குறிப்பு எனக்கு வந்திருக்கின்றது.

நீலகிரி மாவட்டத்தில், சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் 7000 பேர் தங்கள் உற்பத்திப் பொருட்களுக்கு கூடுதல் விலை கோரி, 15-5-2000 அன்று காலை 11-00 மணியளவில் அரை நிர்வாண ஊர்வலத்தை, ஊட்டி பேருந்து நிலையத்தில் இருந்து, மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் வரை நடத்தினார்கள்.

ஊர்வலம் முடிந்து கூட்டம் கலையும் நேரத்தில் கூட்டத்தினர் கல்வீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டார்கள். இது வந்த அறிக்கை மாத்திரமல்ல. இன்று காலையில் பத்திரிகைகளிலேகூட இந்தச் செய்தி வந்திருக்கிறது. அது தி.மு.க. சம்பந்தமுடைய, ஆளும் கட்சி சம்பந்தமுடைய பத்திரிகைகள் அல்ல. பொதுவான, பத்திரிகைகளிலேகூட, இந்தக் கல்வீச்சு சம்பவத்தைப் பற்றிய செய்தி வந்திருக்கிறது ஈடுபட்டார்கள் என்று. கூட்டத்தின் ஒரு பகுதியினர் 1000 பேர், சாரிங் ரோடு, ஸ்டேன்ஸ் சந்திப்பில் சாலை மறியல் மற்றும் கல்வீச்சுச் சம்பவத்தில் ஈடுபட்டார்கள். மேலும் பாதுகாப்புப் பணியில் இருந்த காவல் துறையினரைச் சுற்றி வளைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள். நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள், பாதசாரிகள், சுற்றுலா பயணிகள் ஆகியோரைத் தாக்க முற்பட்டார்கள். காவல் துறையினர் கூட்டத்தினரைக் கலைந்து செல்லுமாறு விடுத்த எச்சரிக்கைகள் பயனளிக்காமல் போனதால், ஊட்டி, காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுகுமாரன் அவர்களால், ஊட்டி வட்டாட்சியர் அவர்கள் முன்னிலையில், கூட்டத்தைக் கலைக்க குறைந்த அளவிலான தடியடிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

இந்தக் கல்வீச்சுச் சம்பவத்தில், ஊட்டி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் திரு. சுகுமாரன், ஊட்டி மத்திய நகரக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. கே. சி. நந்தகுமார், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 4-ஆம் அணியைச் சேர்ந்த பெண் காவலர் அழகேஸ்வரி, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 7-ஆம் அணியைச் சேர்ந்த காவலர்கள், 1005 ஆம் நம்பர் உள்ள காளீஸ்வரன், 1019 எண்ணுள்ள இராஜசேகரன், ஈரோடு மாவட்டம், ஆயுதப்படையைச் சேர்ந்த காவலர்கள் - 1907 எண்ணுள்ள முருகேசன், 1814 எண்ணுள்ள முருகேசன், 1775 எண்ணுள்ள சுந்தரராஜன், 1823 எண்ணுள்ள பாண்டுரங்கன் 1787 எண்ணுள்ள தேவேந்திரன் மற்றும் ஊட்டி மத்திய நகரக் காவல் நிலையத்தைச் சேர்ந்த முதுநிலைக் காவலர் 626 எண்ணுள்ள சந்திரசேகரன் ஆகிய 11 காவல் துறை அதிகாரிகள் காயம் அடைந்துள்ளார்கள். இவர்களில், காவலர் காளீஸ்வரன் மற்றும் பெண் காவலர் அழகேஸ்வரி ஆகியோர் ஊட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாகவும், மீதமுள்ளவர்கள் புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். கலவரத்திலே

ஈடுபட்டவர்கள் தரப்பில் மூன்று பேருக்குக் காயம் ஏற்பட்டது. புறநோயாளிகளாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். இக்கல்வீச்சுச் சம்பவம் தொடர்பாக, ஊட்டி மத்திய நகரக் காவல் நிலைய குற்ற எண் 520/2000, சட்டப்பிரிவுகள் 147, 148, 427, 506(ii) 307, 188 ஐ.பி.சி. 3 (1) P.P.P. Act மற்றும் 7(I) (A) CLA Act-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 47 நபர்கள் கைது செய்யப்பட்டு காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். கூட்டம் கலைந்து செல்லும் வேளையிலும், அக்கும்பல் சாலை மறியல் மற்றும் அரசு பேருந்துகள் மீது கல்வீச்சு போன்ற சம்பவங்களில் ஈடுபட்டது. பாறாங்கற்களை சாலைகளில் வைத்துப் போக்குவரத்தைத் தடை செய்தார்கள்.

ஊட்டி-குன்னூர் சாலையில் எல்லநள்ளியில் ஒரு கும்பல், 2000 பேர் உள்ளவர்கள், 13-00 மணியிலிருந்து 17-00 மணி வரையிலே போக்குவரத்தைத் தடை செய்துள்ளார்கள். அதிரடிப் படையைக் கண்டவுடன் கூட்டம் கலைந்து சென்றது. ஊட்டி-கேத்திக்கு இடையில் மேட்டுப்பாளையம் செல்லும் நீலகிரி எக்ஸ்பிரஸ் வண்டி, கலவரக்காரர்கள் ஏற்படுத்திய தடைகளால் மூன்று மணி நேரம் காலதாமதமாகச் சென்றது. ஆரவேலு, எலித்துறை செலஸ் ஆகிய இடங்களில் அக்கும்பல் சாலை மறியலில் ஈடுபட்டது. அதனால், ஊட்டி-கோத்தகிரி, ஊட்டி-கோயம்புத்தூர் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இந்தக் கல்வீச்சு சம்பவத்தில் சேதமான பொருட்களின் மதிப்பு பற்றிக் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. பிரச்சினைக்குரிய இடங்களில் காவல் துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள். கோவை நகர காவல் துறை ஆணையர் (கோயம்புத்தூர் சரக கூடுதல் பொறுப்பு), கூடுதல் படையோடு வந்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தார். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது.

இதுதான் ''மிகவும் அமைதியாக'' நடைபெற்ற விவசாயிகளுடைய போராட்டம். இந்தப் போராட்டத்தை இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் ஆதரிக்கிறார்களா என்று எனக்குத் தெரியவில்லை. தேயிலைப் பிரச்சினைக்காக மாநில சர்க்கார், மத்திய சர்க்கார், இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள், எல்லாக் கட்சித் தலைவர்களும், நாமும்

எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு பாடுபட்டு வருகிறோம் என்பதை நீங்கள் எல்லாம் உளமார உணர்வீர்கள். அப்படியிருந்தும்கூட வேண்டுமென்றே இதை அரசியலாக ஆக்க வேண்டும் என்கின்ற ஒரு வீண் முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதை அரசு வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்காது என்கின்ற எச்சரிக்கையோடு என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : ஒரு விளக்கத்திற்காகத் தான் சொல்கிறேன். பெரிய பிரச்சினை ஒன்றுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, விளக்குங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தானே தவிர, இதை ஒரு பெரிய குற்றச்சாட்டாக, இங்கே நான் சொல்லவில்லை.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியிலே, 12-5-2000 அன்று, மாநகராட்சி சார்பாக, ஒரு அழைப்பிதழ் அடித்து, விழாவிற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்முடைய சென்னை மாநகர மேயர் அவர்கள், அந்த விழாவில் கலந்து கொள்வதாக அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள். மேயர் அவர்கள் நான் வருகிறேன் என்று ஒரு தகவல் கொடுத்தால், எங்களுடைய திருச்சிராப்பள்ளி மாநகர மேயர் அவர்கள், அவர்களை நல்ல முறையில் வரவேற்று, சிறப்பான முறையில் விழா நடத்துவதற்கு ஏற்பாடு செய்யத் தயங்கமாட்டார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இருந்தும்கூட அந்த மேயர் அவர்களுக்கு ஒரு அவமானம் ஏற்படுகின்ற வகையில் என்றுதான் சொல்ல வேண்டும், அந்த அளவிற்கு ஒரு அழைப்பிதழை, அடித்துக் கொடுத்து, அவர்களை அங்கே விழாவிற்கு அழைத்திருக்கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சி ஏற்கெனவே ஒரு தடவை நடந்திருக்கிறது. சரி, இது ஏதோ நம்முடைய அரசியல் உறவு கெட்டதன் காரணமாகச் செய்கிறார்கள் என்று நினைத்து, அவர்களும் நாகரீகம் கருதி, அந்த விழாவிலே கலந்து கொண்டு மேயர் அவர்களைப் பாராட்டி, சிறப்பான வாழ்த்துரையையும் வழங்கிவிட்டு வந்தார்கள்.

இது இரண்டாவது தடவை. நம்முடைய திருச்சி மாநகராட்சி மேயர் அவர்களே பத்திரிகைக்கு ஒரு செய்தி கொடுத்திருக்கிறார்கள். ''திருச்சி மாநகராட்சியின் பெயரால் அழைப்பிதழ் அச்சடிக்கப்பட்டுள்ள இந்த விழாக்கள் பற்றி எனக்குத் தெரிவிக்கக்கூட இல்லை. அழைப்பிதழே வியாழக் கிழமை மாலைதான் எனக்கு வந்தது. நான் வாழ்த்திப் பேசுவதாக அச்சடிக்கப்பட்டிருந்தாலும் என்னிடம் யாரும் ஒப்புதல் பெறவில்லை. நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை மாநகராட்சி சம்பந்தப்பட்டவை. தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் திரு. பரணிகுமார் நிதி ஒதுக்கி இருந்தாலும், மாநகராட்சிதான் எடுத்து செயல்படுத்து கிறது. இவ்வளவு காலமும் மாநகர மக்களின் நலன் கருதி நான் மிகவும் இணக்கமாகவே செயல்பட்டு வந்துள்ளேன். கரூர் புறவழிச்சாலையில் பாலத்தை நமது வணக்கத்திற்குரிய மேயர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தபோதுகூட நான் பின்னுக்குத் தள்ளப்பட்டேன் என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். என்றாலும்கூட, விழாவில் கலந்துகொண்டு, நாகரீகமாக வாழ்த்திப் பேசிவிட்டு வந்தேன். ஆனால், இந்தமுறை இவர்களுடைய செயல்பாடுகள் மிகவும் புறந்தள்ளுவதாக இருக்கின்றன. எனவே, வணக்கத்திற்குரிய ஸ்டாலின் இன்று கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் அனைத்தையும் புறக்கணிக்க முடிவு செய்துள்ளேன். எங்கள் கட்சி மேலிடத்திற்கு இதுபற்றித் தெரிவித்துவிட்டேன். இதுபற்றி முதல்வர் அவர்களுக்கு இன்றே பே஼க்ஸ் மூலம் செய்தி அனுப்பியிருக்கிறேன்.'' என்று நம்முடைய திருச்சி மாநகர மேயர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். இது நம்முடைய - அதாவது சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து செய்தாலும்கூட மாநகராட்சி தான் இதைச் செய்துகொண்டிருக்கிறது. இங்கே சென்னையிலே நடக்கின்ற விழாக்களில் எல்லாம், சட்டமன்ற உறுப்பினருடைய நிகழ்ச்சிகளில் மாநகர மேயர் அவர்கள் இல்லாமல்தான் நடத்துகிறார்களா? எங்களுடைய திருச்சி மாநகர மேயரை இவ்வளவு மிக மோசமான நிலையில் நடத்துவது நியாயம்தானா என்ற கோரிக்கையை மட்டும் வைத்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

சந்தனமரக் கடத்தல் வீரப்பனிடமிருந்து நடிகர் ராஜ்குமார் மீட்பது குறித்து

உரை : 114 நாள் : 13.11.2000

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனிடமிருந்து கன்னட நடிகர் ராஜ்குமார் அவர்களை மீட்பது குறித்து, இன்று இந்த அவையில், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியினுடைய சார்பில் திரு. அழகிரி அவர்கள் 18 நிமிடங்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. பழனிசாமி அவர்கள் 8 நிமிடங்களும் அ.தி.மு.க. சார்பில் திரு. சுந்தரம் அவர்கள் 10 நிமிடங்களும், பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் திரு. ஐ. கணேசன் அவர்கள் 19 நிமிடங்களும், இந்திய தேசிய லீக் சார்பில் திரு. லத்தீப் அவர்கள் 28 நிமிடங்களும், அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பில் திரு. சந்தானம் அவர்கள் 5 நிமிடங்களும், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் 6 நிமிடங்களும், பி.ஜே.பி. சார்பில் திரு. வேலாயுதன் அவர்கள் 8 நிமிடங்களும், புதிய தமிழகம் சார்பில் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் 4 நிமிடங்களும், பேராசிரியர் தீரன் அவர்கள் 10 நிமிடங்களும் ஆக மொத்தம் ஏறத்தாழ 2 மணி நேரம், இந்த விவாதத்திலே பங்கேற்று, அவையை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையை முன்னிறுத்தி இதுபற்றிய முடிவை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, உரையாற்றியிருக்கிறார்கள்.

நம்முடைய நண்பர் திரு. அழகிரி அவர்கள் முதலிலே இதை ஆரம்பித்து வைத்தார்கள். அவருடைய பேச்சு மென்மையாக தொடக்கத்திலே இருந்தாலும்கூட இறுதியாக இரண்டொரு கருத்துக்களை, இந்த அரசைத் தாக்குகிற வகையில்,

குறிப்பாக என்னைப் புண்படுத்துகின்ற வகையில், இங்கே வெளியிட்டார்கள். அதைத் தவிர, அவருடைய பேச்சு மிக ஒழுங்காக வரையறுக்கப்பட்ட வகையில் அமைந்திருந்ததை நான் பாராட்டுகின்றேன்.

பிரிவினைவாதிகளுக்கு இந்த அரசு துணை போகிறது என்று சொன்னதோடு நிறுத்தாமல், பிரிவினைவாதிகளை யெல்லாம் ஒன்று சேர்க்கிறது; அதாவது, பிரிவினைவாதத்திற்குப் புதிய பலத்தைத் தருகிறது என்று இந்த அரசை அல்லது அரசை நடத்துகின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒரு பிரிவினைவாத இயக்கம்போல அவர்கள் இங்கே கற்பித்துக் காட்டினார்கள்.

இன்னொன்று சொன்னார்கள்; 30 கோடி ரூபாய் வீரப்பனுக்குச் சென்றிருக்கிறது; அது தமிழ்நாடு அரசின் சார்பாகவா, கர்நாடக அரசின் சார்பாகவா என்பது எனக்குத் தெரியாது; இப்படிச் சொல்லப்படுகிறது என்று குறிப்பிட்டார்கள்.

பொதுவாக, இப்படிச் சொல்லப்படுகிறது. கேட்கப்படுகிறது. செய்தி வெளியாகிறது. மக்கள் பேசிக்கொள்கிறார்கள் என்ற அளவில், பொத்தாம் பொதுவிலே பேசுவது, அழகிரி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்களுக்கு அழகல்ல என்றாலும்கூட நான் அதை, அந்தச் சொல்லப்படுவதாக அவர் சொன்ன அந்தக் கருத்தை, அந்தச் செய்தியை வன்மையாக மறுக்கிறேன். அதுபோன்று பணம் கொடுத்து, பேரம் பேசி, ராஜ்குமாரை மீட்பதாக இருந்தால், தொடக்கத்திலேயே அந்தக் காரியத்தைச் செய்து, இந்நேரம் மீட்டிருக்கலாம். ராஜ்குமார் மீட்கப்பட்டு 100 நாட்கள் ஆகிவிட்டன என்று விழாகூட கொண்டாடியிருக்கலாம். இப்போது, இன்னும் மீட்கப்படவில்லை 100 நாட்களாக, என்று வருந்திக்கொண்டிருக்கிறோம். நான் அவருக்கும், தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும், இந்த அவைக்கும் இந்த அவையின் வாயிலாக நாட்டு மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன், நாடு பிரிய வேண்டும் என்ற கருத்தை, அந்தக் கொள்கையை, திராவிட முன்னேற்றக் கழகம் கைவிட்டு பல ஆண்டுகள் ஆகின்றன.

1962 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராக, எங்கள்

தலைவராக வீற்றிருந்தபோது, பொதுக்குழுவைக் கூட்டி, இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கும், ஒற்றுமைக்கும் நாம் என்றைக்கும் உதவியாக இருக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தி, திராவிட நாடு பிரிவினையை, கோரிக்கையைக் கைவிட்டாயிற்று. நான் திரு. அழகிரி அவர்களுக்கும், மற்றவர் களுக்கும் உறுதியாகச் சொல்கிறேன். நாங்கள் கைவிட்டது மாத்திரமல்ல, அந்தப் பிரிவினையைக் கோரி, யார் குரல் கொடுத்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாக அடக்கியே தீருவோம் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது, திரு. அழகிரி அவர்களுக்கும், அவருடைய கட்சியினருக்கும், நாட்டு மக்களுக்கும் நான் தருகின்ற உறுதிமொழியாகும்.

இப்போது, வீரப்பனுடைய இந்தப் பிரச்சினையில் கொஞ்சம் நாம் பின்னோக்கிச் சென்று, இன்றைய நிலைக்கு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். 1978 ஆம் ஆண்டு, கர்நாடக மாநிலத்திலே, இராமாபுரம் காவல் நிலைய எல்லையில், பரமசிவம் என்பவரைக் கொலை செய்ய குரூப்பன் என்பவருக்கு உதவி செய்ததிலே தொடங்கி, கடந்த 22 ஆண்டுகளிலே 124 பேரைக் கொலை செய்ததாக வீரப்பன்மீது 156 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. வழக்குகள் பதிவு செய்யப்பட்டுவிட்ட காரணத்தினாலேயே குற்றவாளி வாதம் சரியல்ல; அப்படியே வீரப்பன்மீது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டு, வீரப்பன் தண்டிக்கப்பட்டாலும்கூட, மேல் கோர்ட் இருக்கிறது என்கின்ற சமாதான வாதம்கூட, இன்றைய அரசியல் சூழ்நிலையிலே எழலாம். நான் அதைப்பற்றி கவலைப் படாமல் செய்திகளை வரிசைப்படுத்திச் சொல்கின்றேன்.

வீரப்பன், கர்நாடகாவிலே 1986 ஆம் ஆண்டு ஒருமுறை பிடிபட்டதாகவும், வனத்துறை பயணியர் இல்லத்திலே சில நாட்கள் கைதியாக வைக்கப்பட்டிருந்ததாகவும், பெங்களூரிலே, சார்க் மாநாடு நடைபெற்ற நேரத்தில் காவல் துறையினுடைய முழுக் கவனமும் அது தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள்மீது இருந்த காரணத்தால், வீரப்பன் தப்பிச் சென்றுவிட்டதாகவும் ஒரு செய்தியும் உண்டு.

தமிழகத்திலே வீரப்பன் குழுவினர் நடத்திய சம்பவங்களை மாத்திரம் வரிசைப்படுத்திப் பார்த்தால், 14-7-1987, அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இல்லை. நான் எந்த ஒரு ஆட்சியையும் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. வரலாற்று விவரங்களைச் சொல்வதற்காக இதைக் குறிப்பிடுகின்றேன்.

14-7-1987 அன்று வீரப்பன் குழுவினர், சத்தியமங்கலம் வன அலுவலர் சிதம்பரம் என்பவரைச் சுட்டுக் கொலை செய்தார்கள்.

7-8-1989 அன்று தமிழ்நாடு பர்கூர் காவல் நிலைய எல்லையில், வனக் காவலர் பழனிச்சாமி, வாட்ச்சர் சுப்பிரமணியம் மற்றும் மஸ்தி என்ற நபர் ஆகிய மூவரையும் வீரப்பனுடைய கும்பல் கொலை செய்தது.

1991 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பெண்ணாகரத்திலே இருக்கின்ற இந்தியன் வங்கியைக் கொள்ளையடிக்க வீரப்பன் தலைமையிலே ஒரு குழு சென்றபோது, அந்த வங்கியைக் கொள்ளையடிக்கக்கூடும் என்ற தகவலின் அடிப்படையில், அங்கே போலீஸ் பாதுகாப்பு போடப் பட்டிருந்தபோதும்கூட, வீரப்பன் ஒரு காவலரைச் சுட்டுக் கொன்றுவிட்டு 303 என்ற துப்பாக்கி ஒன்றையும் திருடிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டான். ஆயுதம் தாங்கிய காவலர்களை நேருக்கு நேர் சந்தித்தும், வீரப்பன் தப்பிச் சென்ற இந்தச் சம்பவம் 4-7-1991 அன்று நடைபெற்றது.

1993-ல் வீரப்பன் கும்பலால் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடிகள் வெடித்ததில், சுரைக்காய்மடுவு என்ற இடத்தில் ஐந்து காவலர்கள் உட்பட 22 பேர் மாண்டார்கள். இதில் காவல் துறை கண்காணிப்பாளர் S.P. கோபாலகிருஷ்ணன் படுகாயம் அடைந்தார்.

கடந்த ஆட்சியில் 3-12-1994 அன்று, வீரப்பன் காவல் துறை கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் உட்பட மூன்று பேரைக் கடத்திச் சென்றபோது, அவர்களை விடுவிக்க வீரப்பன் விதித்த நிபந்தனை என்ன தெரியுமா? அதிரடிப் போலீசை வாபஸ் பெற வேண்டும். வீரப்பனைத் தேடும் பணியைக் கைவிட வேண்டும்.

வீரப்பனுடைய அண்ணன் மாதய்யனை விடுதலை செய்ய வேண்டும். வீரப்பன் சரணடைந்தால் அவன்மீது வழக்கு போடவே கூடாது. இதுதான் நிபந்தனை.

ஆனால் இதைப்பற்றி 4-12-1994 அன்று அரசு சார்பில் கோவை மாவட்ட கலெக்டர் விடுத்த அறிக்கையில், வீரப்பனால் கடத்தப்பட்டிருக்கின்றவர்களுடைய உயிரைக் காப்பாற்றுவது தான் முக்கியம். எனவே வீரப்பனைத் தேடும் பணி, வீரப்பனுடைய நிபந்தனைகளின்படி நிறுத்தப்பட்டுவிட்டது என்று தெரிவித்தார்.

6-12-1994 அன்று அரசாங்கத்தின் சார்பில் கோவை மாவட்ட ஆட்சியர் மீண்டும் கூறியது. ''வீரப்பனிடமிருந்து எனக்குச் செய்தி வந்துள்ளது. அந்தச் செய்தியிலே வீரப்பன் கேட்டுக்கொண்டபடி, வீரப்பனோ, அவரது பிரதிநிதியோ என்னைச் சந்திக்கலாம். அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது என்ற உறுதி அளிக்கப்படுகிறது. மேலும், பணயமாக பிடித்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்குத் தேவையான உணவுப் பொருளைக் கொண்டு செல்ல தடை எதுவும் இருக்காது. அதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. வீரப்பனுடைய ஆட்கள் மலைக் கிராமங்களுக்கு நேரிலே வந்து, எவ்வித தடையும் இல்லாமல் உணவுப் பொருளை எடுத்துச் செல்லலாம். அதற்குத் தடை கிடையாது.'' கலெக்டர் இதைச் சொல்லும்போது, ஒரு நிருபர் குறுக்கிட்டு, ''வீரப்பனுடைய தூதுவன் வர அரசுத் தரப்பில் வாகன வசதி செய்து கொடுக்கிறீர்களே, இந்த நிலையிலே தூதுவன் துப்பாக்கியுடன் வந்து பேசுகின்றானே, இது சரியா?'' என்று கேட்கிறார். கலெக்டர் சொல்கிறார். ''அவர் சொந்த பாதுகாப்புக்கு துப்பாக்கியுடன் வருகிறார். காரணம் அவர் காட்டுக்குள் போகிறார், வருகிறார். எனவே துப்பாக்கி ஏந்துகிறார்'' என்று கலெக்டர் செய்தியாளர்களுக்குப் பதில் அளித்தது, அன்றைய செய்தி ஏடுகளிலே வந்திருக்கிறது. அப்போது தலைமைச் செயலாளராக இருந்த அரிபாஸ்கர் விடுத்துள்ள செய்தியில் ''வீரப்பனுடைய தளபதி பேபி இரண்டு கோரிக்கைகளைச் சொன்னார். ஒன்று வீரப்பன் கோஷ்டியினர் காட்டுக்குள் உணவு கொண்டு வரும்போது, எவ்வித துன்புறுத்தலுக்கும் ஆளாகக் கூடாது. மற்றொன்று, சிறையிலே

உள்ள வீரப்பன் கோஷ்டியை தளபதி பேபி பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும்.'' ''மாவீரன் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் (இங்கே சொல்லிவிட்டதற்கு கோபித்துக் கொண்டோம். சொல்லலாமா என்று எனக்கெல்லாம்கூட சந்தேகம் ஏற்பட்டது. ஆனால், அன்றைக்கு தலைமைச் செயலாளரே சொல்கிறார் தளபதி பேபி என்று) மேலும் அரிபாஸ்கர், ''இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டால், மற்ற கோரிக்கைகள் பிறகு தெரிவிக்கப்படும்'' என்று பேபி, கோவை கலெக்டரிடம் கூறியிருக்கிறார். இந்தக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து வருகிறது. இப்போது அரசினுடைய மிக முக்கியமான முன்னுரிமை கடத்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும், மற்றவர்களையும் மீட்பதுதான். விசேஷ அதிரடிப் படையின் பணிகள் நிறுத்தப்பட்டுவிட்டன. இந்தப் படைகளை அனுப்பினால் வீரப்பன் போலீஸ் அதிகாரிகளையும் மற்றவர்களையும் கொன்றுவிடக்கூடும். பேச்சுவார்த்தை முடிந்து, பேபி வீரப்பன் மீண்டும் காட்டுக்குள் செல்ல முழு பாதுகாப்பும் அளிக்கப்படும்''.

இதற்குப் பிறகு, வீரப்பன் தம்பி அர்ஜுனன் செய்தியாளர்களிடம் பேசுகிறார். ''நாங்கள் சரண் அடைய மாட்டோம். தண்டனை அனுபவிக்க மாட்டோம். எங்களுக்கு மன்னிப்பு கொடுத்து ஜனாதிபதி எழுத்து மூலம் உத்தரவு கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆயுதங்களை ஒப்படைப்போம்.

'இதற்கு மீண்டும் தலைமைச் செயலாளர் சொல்கிறார்' ''ஒரு அடிப்படை விஷயத்தை நாம் மறந்துவிடக்கூடாது. இது உயிர்கள் சம்பந்தப்பட்ட விஷயம், போலீஸ் துணை சூப்பரின் டென்டெண்ட் மற்றும் இரண்டு நபர்களை நாம் மீட்க வேண்டும்'' என்று தலைமைச் செயலாளர் அப்போதும் சொல்கிறார். கேள்வி கேட்கிறார்கள் செய்தியாளர்கள் ''வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியுமா?'' அரிபாஸ்கர் சொல்கிறார், ''வீரப்பன் இருக்குமிடம் அரசுக்குத் தெரியும். ஆனால் 3 பேர்களை மீட்க அரசு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறது''.

இதிலே அப்போது கடத்தப்பட்ட சிதம்பரநாதனைக் கூட போலீஸ் மீட்டதா, தானாக வந்து விட்டாரா என்கின்ற செய்தி அப்போது வந்தது. தானாகவே ஓடி வந்துவிட்டேன் என்று சிதம்பரநாதன் சொன்னது மாண்புமிகு உறுப்பினர்களுக் கெல்லாம் நினைவிருக்கும் என்று நான் கருதுகின்றேன்.

பிறகு, 1-1-1995 அன்று ஈரோடு மாவட்டம் பர்கூர் காவல் நிலைய எல்லையில் வீரப்பன் குழு, ராஜேந்திரன், சுப்பிரமணியம் என்ற இரு காவலர்களையும், உடையார் என்ற வாட்ச்சரையும் கடத்திச் சென்றது. 17-2-1996 அன்று ஈரோடு மாவட்டம், ஆசனூர் காவல் நிலைய எல்லையில் ஆரேபானைத்தில் வீரப்பன் குழு மறைந்திருந்து நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காவல் துறை கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் காயமுற்று, அவரது கை விரல்கள் துண்டிக்கப்பட்டன. செல்வராஜ் என்ற தலைமைக் காவலர் அந்தத் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார். இதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 12-7-1997 அன்று வீரப்பனும், கூட்டாளிகளும் கர்நாடக வனத்துறையைச் சார்ந்த 9 நபர்களைப் பிடித்து வைத்துக்கொண்டு தனக்கும் தன்னுடைய கூட்டாளிக்கும் பொது மன்னிப்பு உள்ளிட்ட சில சலுகைகளை வழங்கினால் மட்டுமே அவர்களை விடுவிக்க முடியும் என்று கூறிவிட்டார்கள். தமிழக அரசும், கர்நாடக அரசும் பிடிபட்ட நபர்களுடைய உயிருக்கு ஆபத்து என்று கருதி, வீரப்பன் சரண் அடைவது குறித்து கர்நாடக மாநில முதலமைச்சர் மற்றும் அவரது குழுவினரோடு சென்னையில் 19-8-1997 அன்று நான் கலந்துரையாடியபோது எடுத்த முடிவுகளில் ஒன்றுதான் வீரப்பன் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புலன் விசாரணையின் போது கைது செய்யப்பட்ட வர்கள்மீது எந்தவிதமான தனிப்பட்ட குற்றச்சாட்டும் இல்லையென்றால், அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதைத்தான் நண்பர் சந்தானம் அவர்கள் இங்கே சொன்னார். அந்தப் பேச்சுவார்த்தையில் அந்தக் கைதிகள் எல்லாம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிபந்தனையும் விதிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஏதாவது குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அவர்கள்மீது இருக்குமேயானால், அவை உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப் படும். மேலும் அனைவரையும் சட்டப்படி ஜாமீனில் விடுதலை

செய்யப்படும் என்பதாகும். இந்த முடிவு அப்போது எல்லா ஏடுகளிலும் வெளியிடப்பட்டது. இந்த முடிவின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் 9-10-1997 அன்று கர்நாடக மாநில முதலமைச்சருக்கு நான் எழுதிய கடிதத்தில் 19ஆம் தேதி நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது எடுக்கப்பட்ட முடிவை நினைவுபடுத்தி கர்நாடக சிறையிலே இன்னமும் ஏராள மானவர்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் கர்நாடக அரசு அதிகாரிகளுக்குத் தகுந்த அறிவுரை கூறி உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தேன்.

இதைத் தொடர்ந்து 11-10-1997 அன்று நம்முடைய தலைமைச் செயலாளர் மத்திய உள்துறை அமைச்சரோடு தொலைபேசியில் பேசியதோடு, நமது அரசின் சார்பில் மத்திய அரசுக்கு எழுதிய கடிதத்திலும் 19-8-1997 அன்று இரண்டு மாநில அரசுகளிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையின் விவரத்தைத் தெரிவித்து கர்நாடக அரசினால் தடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட 121 பேர்களில் 70 பேர் நிபந்தனை ஜாமீனில் வெளிவந்துவிட்டார்கள் என்றும், 51 பேர் இன்னமும் சிறையிலே அவதிப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் விளக்கியதோடு அவர்களுடைய விடுதலைக்கு உதவி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தடா சட்டத்தைப்பற்றிக் குறிப்பாக நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர்கள் என்ன கருத்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நன்றாக அறிவேன். முற்போக்கு எண்ணம் உடைய எந்தக் கட்சிக்காரர்களும் தடா சட்டத்தை ஆதரிப்பதில்லை என்பதையும் நான் நன்றாக அறிவேன். ஆனால் இந்தத் தடா சட்டம் யார்மீது பாய்ந்தது என்றால் உள்ளபடியே தீவிரவாதிகள்மீது பாய்ந்து அதன் காரணமாக அவர்கள் மைசூர் சிறையில் அடைக்கப்பட்டார்களா என்றால் இல்லை. சாதாரண ஏழை - எளிய, பஞ்சைப் பராரிகள் - நீங்கள் இப்பொழுதுகூட டி.வி-யிலே அவர்கள் காட்சியாகக் காட்டப் படும்போது கவனித்திருப்பீர்கள். எப்படிப்பட்ட பெண்கள், எத்தகைய தாய்மார்கள், எவ்வளவு வயதான கிழடு கட்டைகள் - இவர்கள் எல்லாம் அந்தச் சிறையில் இருக்கிறார்கள் என்பதை

நாம் தெரிந்துகொள்ள முடியும். அதனால்தான் அழகிரி அவர்கள் கூட கேட்டார்கள். பிறகு எந்த முயற்சியாவது எடுத்தீர்களா அவர்களை விடுவிப்பதற்கு என்றுகூட கேட்டார்கள். பலமுறை முயற்சி எடுக்கப்பட்டது. ஒவ்வொரு முறையும் நான் தொலைபேசியிலே பேசும்போதெல்லாம், பார்க்கிறோம், பார்க்கிறோம் என்று அன்றைக்கிருந்த கர்நாடக முதலமைச்சர் எனக்கு உறுதியளித்தார். ஓர் ஆண்டுக்கு மேலாகியும்கூட கர்நாடக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் இதிலே எடுக்கவில்லை என்பதால், 21-11-1998 அன்று மீண்டும் கர்நாடக முதலமைச்சருக்கு ஒரு D.O. லெட்டர் நான் எழுதியிருக்கிறேன். அந்தக் கடிதத்திலும் இந்த விவரங்களை எல்லாம் குறிப்பிட்டு நாம் அப்பொழுதே பேசியிருக்கிறோம், அதன்படி அவர்களை விட்டுவிட வேண்டும் என்று. ஏனென்றால் அந்த வன அதிகாரிகளை, கர்நாடக வன அதிகாரிகளை வீரப்பன் விட்டாகி விட்டது. விட்ட பிறகு நக்கீரன் கோபால் அவர்களுடைய முயற்சியால் அவர்கள் விடுபட்ட பிறகும் இவர்கள் விடுவிக்கப் படவில்லை, அதை ஞாபகப்படுத்தித்தான் நான் பலமுறை அவருக்குக் கடிதம் எழுதினேன். ஆனால் எந்தவிதமான பயனும் ஏற்படவில்லை.

தொடர்ந்து 11-1-1999, 23-2-1999, 28-3-1999, 5-5-1999, 28-5-1999 ஆகிய நாட்களில் நினைவூட்டல் கடிதங்கள் என்னாலேயே கர்நாடக அரசுக்கு எழுதப்பட்டன. கர்நாடக அரசின் சார்பில் முதலமைச்சராக இருந்த ஜே.எச். பட்டேலே 28-5-1999 அன்று எழுதிய கடிதத்தில் வீரப்பன் சரணடையும் பட்சத்தில்தான் அந்தக் கைதிகளை விடுவிப்பதாக ஒப்பந்தம் செய்யப்பட்டது; சரணடையாத பட்சத்தில் இந்தக் கேள்வி எழவில்லை என்று அதற்குப் பதில் எழுதிவிட்டார்.

இத்தடா கைதிகள் விஷயத்தில் யாரோ ஏழை - எளியவர்கள், அப்பாவி மக்கள், அவர்கள் தடா சட்டத்தின்படி கைது செய்யப்பட்டிருக்கும்பொழுது வீரப்பன் சரணடைவதைப் பற்றிய பிரச்சினையே கிடையாது. இது வீரப்பன் ஒரு நிபந்தனையாக இப்பொழுது வைத்தான். அதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அதைக் காரணமாகக் காட்டி அவர்களை

விடுதலை செய்வது என்ற கேள்வியே எழவில்லை என்று பதில் தெரிவித்துவிட்டார். இப்பொழுது வீரப்பனுக்கு அதுதான் பெரிய கோரிக்கையாக ஆகிவிட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள். தமிழக எல்லையைப் பொறுத்தவரையிலே மாத்திரம் நாம் எடுத்துக் கொண்டால், இங்கே ஒன்றுமே செய்யவில்லை என்று நம்முடைய அண்ணா தி.மு.க. தலைவர் இங்கே பேசினார்.

1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையில் தமிழக எல்லையிலே மாத்திரம் வீரப்பனால் கொலை செய்யப்பட்டவர்கள் 63 பேர். 1996-ல் இந்த ஆட்சி வந்த பிறகு ஜூன் முதல் இதுவரை மூன்றே பேர்தான் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். தமிழக போலீஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் வீரப்பனைச் சேர்ந்தவர்கள்; வீரப்பனைச் சேர்ந்தவர்கள் என்றால் யாரும் தவறாக கருதிக் கொள்ளக்கூடாது. வீரப்பன் ஒரு படை வைத்திருப்பதாகவும், அந்தப் படையிலே 150 பேரோ, 200 பேரோ இருப்பதாகவும் யாரும் கருதிக்கொள்ளக்கூடாது. அந்தக் காட்டிலேயிருக்கின்ற மக்களிலே பல பேர் வீரப்பனுக்கு உதவி செய்யக்கூடியவர்கள், அவர்களுடைய எண்ணிக்கையைத்தான் நான் சொல்கிறேன். அந்த எண்ணிக்கையிலே 1991 ஆகஸ்ட் முதல் 1996 மே வரையிலே 121 பேர் கைது செய்யப்பட்டார்கள், அந்த ஆட்சியிலே. 1996 ஜூன் முதல் இதுவரையிலும் இந்த ஆட்சியில் 135 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த விவரங்களையும் இந்த அவைக்கு அளிப்பது என்னுடைய கடமை என்பதால் அளித்துவிட்டேன்.

ஏதோ முன்னால் இருந்த டி.ஜி.பி. கூறிய கருத்துகளையும் அவர் எவ்வளவு சாதனைகளைப் புரிந்தார் என்பதையும் இங்கே நம்முடைய அண்ணா தி.மு.க. கட்சித் தலைவர் சுந்தரம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி நான் சொல்வதைவிட கடந்த ஆட்சியில் செல்வி ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த போது டி.ஜி.பி.யாக இருந்து ஓய்வுபெற்ற பிறகு 'நான் சமாளித்த சவால்கள்' என்று வைகுந்த் அவர்கள் எழுதியுள்ள பெரிய புத்தகத்தில் இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அவர் பதிலளித்திருக்கிறார். அவர் சொல்கிறார், ''வீரப்பனைப் பிடிக்கப் பொதுவான

வழிமுறைகளை வகுக்கும்பொருட்டு 10-5-1995 அன்று, அன்றைய கர்நாடக முதல்வர் தேவ கௌடாவும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் இரண்டு மாநில அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். வீரப்பனைப் பிடிக்க மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பொறுத்தவரையில், அவன் மறைந்திருக்கும் பகுதி மிகவும் அடர்ந்த காட்டுப் பகுதி என்பதால் அதற்குள் நுழைந்து அவனைப் பிடிப்பது அவ்வளவு எளிதான காரியமல்ல என்பதையும் நாம் முதலில் ஒத்துக்கொள்ள வேண்டும். அதோடு, அந்த அடர்ந்த காட்டுப் பகுதி தமிழ்நாட்டில் 5 மாவட்டங்களிலும், கர்நாடக மாநிலத்திலே மைசூர் மாவட்டத்திலும் சுமார் 6000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும், வீரப்பனும் அவன் கும்பலைச் சேர்ந்தவர்களும் நவீன ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள் என்பதும், கண்ணிவெடி வைப்பதில் அவன் நிபுணத்துவம் பெற்றிருப்பதும், அவன் அந்தப் பகுதியிலேயுள்ள பணக்காரர்களை மிரட்டிப் பண வசூல் செய்து வருகிறான் என்பதும் தெரிய வந்தது.'' (இதையெல்லாம் வைகுந்த் அவர்கள்தான் சொல்கிறார்கள்.)

''இதுபோன்று மலைப்பகுதிகளில் நடவடிக்கை எடுக்கும்போது வழக்கமாகப் பின்பற்றப்படவேண்டிய இராணுவ நடவடிக்கையை ஒத்த வழிமுறைகள் இங்குக் கடைப் பிடிக்கப்படவில்லை. மேலும், காவல் துறை நடவடிக்கையின் போது அப்பாவி மலைவாசிகள் துன்புறுத்தப்படுவதைத் தடுக்க எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.''

தேவ கௌடாவும், செல்வி ஜெயலலிதாவும் சேர்ந்து நடத்திய கூட்டத்தில் இந்தக் கருத்துக்களை வைகுந்த் எடுத்து வைத்ததாக இதிலே குறிப்பிடுகிறார்.

வீரப்பனுக்கு எதிராக எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கையில் முக்கிய தகவல்களைச் சேகரிக்க எந்த வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கு வீரப்பன்மீது ஒரு ராபின் ஹூட் போன்றதொரு நல்ல கருத்து இருந்து வந்தது. தனது எதிரிகளை அரக்கத்தனமாக தயவுதாட்சண்யம் இல்லாமல் கொலைசெய்யும் அவன் ஏழை மலைவாசிகளுக்கு எப்போதுமே

உதவிசெய்துகொண்டிருக்கிறான். ஆகவே பயம் காரணமாகவும் மரியாதை காரணமாகவும் மக்கள் அவனைப் பற்றிய தகவல்களைக் கொடுக்க முன்வராமலே இருந்துவிட்டார்கள். ஆனால் துரதிருஷ்டவசமாக அப்பாவி மலைவாழ் மக்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். சில சமயம் பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகிறார்கள் அல்லது கற்பழிக்கப்படுகிறார்கள் என்ற அவப்பெயரை காவல் துறையினர் சம்பாதித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினால்தான் வீரப்பனுக்கெதிராக காவல் துறை எடுத்துவரும் நடவடிக்கையில் மக்களுடைய ஆதரவையும் ஒத்துழைப்பையும் அவர்களால் பெற முடியவில்லை.

இதில் கவனிக்கத்தக்க வேறொரு விஷயம் என்ன வென்றால், வீரப்பனுக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள ஒரு சிறு அளவு முன்னேற்றத்தைவிட பெரிய அளவிலே விளம்பரப்படுத்திவிடும் ஒரு போக்கு உயர் அதிகாரிகள் மத்தியிலே காணப்பட்டது. அனைத்து முன்னேற்றங் களுக்கும் கிடைக்கவேண்டிய பெருமை முழுவதையும் உயர் அதிகாரிகளே எடுத்துக்கொள்வதால், சார்நிலை அதிகாரிகளுக்கு மனஉறுதி பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டது. இதன் காரணமாகப் பொதுமக்களைப் பொறுத்தவரையில், காவல் துறையின் செயல்பாடுகள் நகைப்பிற்குரியதாக ஆகிவிட்டன. ஆகவே வீரப்பன் விவகாரம் குறித்து ஆழமாக ஆராய்ந்து மேலே கூறிய பொருள்பட ஒரு விரிவான அறிக்கையைத் தயார் செய்து ஜெயலலிதா அவர்களிடம் நான் கொடுக்க அதை அவர் அந்தக் கூட்டத்திலேயே படித்தார். தேவாரம் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முயன்றபோது, தேவ கௌடா அவர்கள் குறுக்கிட்டு, ''தேவாரம் அவர்களே, நாங்கள் எப்போதும் பெங்களூரில்தான் இருக்கிறோம். அவ்வகையில் உங்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் போர் உடையுடன் கையில் ஏ.கே. 47 துப்பாக்கி வைத்துக்கொண்டிருப்பதைப் போன்ற புகைப்படங்கள் மட்டும் அடிக்கடி பத்திரிகையிலே வருவதால்தான் நீங்கள் யார் என்று எங்களுக்குத் தெரிகிறது. மேலும், ஒவ்வொரு முறையும் நீங்கள் காட்டுப்பகுதிக்குப் போகும்போது வீரப்பன் மற்றும் அவனுடைய ஆட்களால் கொல்லப்பட்ட காவல் துறையினர் உடல்கள்மீது மலர் வளையம் வைக்கத்தான்

போகிறீர்களோ என்ற ஐயம் ஏற்படும் வகையில் இதுவரையில் உங்களால் வீரப்பனைப் பிடிக்க முடியவில்லை'' என்று உறுதியான குரலில் தேவகௌடா தெரிவித்தபோது. தேவாரம் பதில் பேசாமல் மௌனமானார்.

வீரப்பன் கும்பலைச் சேர்ந்தவர்களுடைய எண்ணிக்கை 150-லேயிருந்து வெறும் 5 ஆகக் குறைக்கப்பட்டுவிட்டது என்பதுபோல ஒரு பேச்சு அப்போது அடிபட்டு வந்தது. இது போலீஸ் தரப்பில் தரப்படும் புள்ளி விவரமே தவிர, இதில் ஒன்றும் உண்மை கிடையாது'' என்று வைகுந்த் அவர்கள் அந்தப் புத்தகத்திலே எழுதியிருக்கிறார்.

மேலும், இப்போதும் ''வீரப்பனிடமிருந்து நம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில்தான் இருக்கிறோம். இது மிகவும் வெட்கக்கேடானது என்றாலும் இதுதான் இன்றுள்ள நிலைமை. வீரப்பனைக் கண்டுபிடிக்க காவல் துறையால் முடியவில்லை என்பதைப் பொதுமக்கள் கேவலமாகப் பேசுவது குறித்து ஜெயலலிதா அவர்கள் நன்றாகவே அறிந்திருந்தார்கள்.

ஆர்.எஸ்.எஸ். அலுவலகக் குண்டு வெடிப்பு வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த முஸ்லீம் தீவிரவாதி இமாம் அலியைப் பிடிப்பது குறித்து ஒருமுறை விவாதம் நடந்தபோது முதல்வர் ஜெயலலிதா தேவாரத்தைப் பார்த்துக் கேட்டார், ''தேவாரம் அவர்களே, வீரப்பனைப் பிடிப்பது பற்றித்தான் நீங்கள் பல கற்பனைக் கதைகளைக் கூறி வந்திருக்கிறீர்கள். இந்த இமாம் அலியையாவது பிடிக்கப் பாருங்கள்'' என்று கிண்டலாகக் கூறியதை (சிரிப்பு) இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்'' என்று வைகுந்த் அவர்கள் அந்த நூலிலே விஸ்தாரமாக எழுதியிருக்கின்றார்கள்.

இன்னொன்று; இந்த அரசை, முதலமைச்சரை அல்லது போலீஸ் இலாகாவை குறை கூறிப் பேசும் எதிர்க்கட்சிகளிலே பெரும் எதிர்க்கட்சி தமிழ்நாட்டிலே இன்றைய நிலையிலே, அந்தக் கட்சியினுடைய சார்பிலே இங்கே பேசிய சுந்தரம் ஆகட்டும் அல்லது வெளியிலே இருக்கின்ற அதனுடைய தலைவர்களாகட்டும் என்ன பேசுகிறார்கள்? ஏன் சர்வகட்சிக்

கூட்டங்களைக் கூட்டவில்லை என்றெல்லாம் கேட்கப்பட்டது. நல்ல கேள்வி, சர்வகட்சிக் கூட்டங்களைக் கூட்டிக் கூட்டி பழகியவன் நான். பழக்கப்பட்டவன் நான். எந்த ஒரு விஷயத்திற்கும் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக் கிறோம். காவிரிப் பிரச்சினையாகட்டும் அல்லது வேறு எந்தப் பொதுப் பிரச்சினையாகட்டும், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நானே கையெழுத்திட்டு, சர்வ கட்சித் தலைவர்களுக்குக் கடிதம் அனுப்பி செயலாளரை விட்டல்ல, நானே கையெழுத்திட்டு கூட்டத்திற்கு வர வேண்டுமென்று சொல்லி நானே டெலிஃபோனில் அழைத்து, நானே வாசலில் சென்று வரவேற்று, சர்வ கட்சிக் கூட்டங்களை நடத்திப் பழக்கப்பட்டவன்தான் இந்தக் கருணாநிதி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதிலே எந்தச் சந்தேகமும் தேவை இல்லை.

ஆனால் இந்தப் பிரச்சினை எவ்வளவு பெரிய சிக்கலானது என்பதை அறிவீர்கள். காவிரிப் பிரச்சினையிலே சொன்னார்கள். கருணாநிதி துரோகம் செய்துவிட்டு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு எங்களை அழைக்கிறார் என்று சொன்னார்கள். கூட்டத்திற்கு வருகின்றவர்கள் சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவுகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா என்றால் இல்லை.

சாதி, மதச் சண்டையின்போது ஒரு அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலே ஒரு அருமையான கருத்தை மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை எல்லோரும் ஏற்றுக் கொண்டோம். மாவட்டங் களுக்குத் தலைவர்களுடைய பெயரை வைக்கவேண்டாம், பேருந்து கழகங்களுக்குத் தலைவருடைய பெயரை வைக்க வேண்டாம் என்று மூப்பனார் அவர்கள் சொல்லி அதை எல்லா கட்சிக்காரர்களும் ஏற்றுக்கொண்டு உடனடியாக இந்த அரசு அதை அமல்படுத்தியது. நீங்கள் யாரும் அதை மறந்திருக்க முடியாது. இன்றைக்கும் அது நடைமுறையில் இருக்கிறது.

ஆனால் அந்த சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்துகொண்ட அ.தி.மு.க. அதைப் பின்பற்றுகிறதா? இன்றைக்கும் சிவகங்கை மாவட்டம் என நாம் மாற்றி விட்டோம், சர்வ கட்சிக் கூட்டத்திலே எடுத்த முடிவின்படி. ஆனால் அவர்கள் இன்றைக்கும்

பசும்பொன் தேவர் மாவட்டம் என்றுதான் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். பிறகு சர்வ கட்சிக் கூட்டத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஒரு பெரிய கட்சி நான் அதை இல்லையென்று மறுக்கவில்லை. இன்றைக்குப் பிரதான எதிர்க்கட்சி, த.மா.கா. இங்கிருக்கிறது. தமிழ் மாநில காங்கிரஸ். ஆனால் வெளியிலே ஒரு பெரிய எதிர்க்கட்சி என்று இன்றைய அளவிலே வடிவமைத்துக்காட்டப்படுகின்ற ஒரு கட்சி அ.தி.மு.க. அந்த அ.தி.மு.க. சர்வ கட்சிக் கூட்டத்திலே கலந்து கொண்டு, எல்லோரும் இணைந்து ஏற்றுக்கொண்ட ஒரு முடிவை இன்றைக்கு அமல்படுத்துகிறதா என்றால் இல்லை.

திருவாரூர் மாவட்டத்தைப் பன்னீர்செல்வம் மாவட்டம் என்றுதான் அழைக்கிறார்கள்; அதைப்போலத்தான் அம்பேத்கர் மாவட்டம் என்றுதான் வேலூர் மாவட்டத்தை அழைக்கிறார்கள். அவர்களுடைய செய்திகளிலே, அவர்களுடைய விளம்பரங் களிலே அப்படித்தான் வந்துகொண்டிருக்கிறது. சர்வக் கட்சிக் கூட்டத்தினுடைய முடிவை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதுபோல, காவிரிப் பிரச்சினைக்கு நாம் சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினோம். அதிலே நாம் எல்லாம் சேர்ந்து எடுத்த முடிவை அவர்கள் ஏற்றுக் கொண்டார்களா என்றால் இல்லை. வெளியிலே வந்த பிறகு எதிர்த்து முழக்கமிட்டார்கள். அதாவது பரவாயில்லை. இப்போது இந்தப் பிரச்சினையிலே சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டினால் என்ன சொல்வார்கள்? என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், என்ன அறிக்கை விட்டார்கள்? நாங்கள் யாரும் படித்துப் பார்க்கவில்லையா அந்த அறிக்கைகளை? வீரப்பன் கருணாநிதிக்கு பணம் கொடுக்கின்றான். வீரப்பனிடத் திலிருந்து பணம் வாங்கி கருணாநிதி கட்சி நடத்துகிறார். தேர்தலுக்காக பணம் வாங்கிக்கொண்டிருக்கிறார். வீரப்பனுடைய நிறுவனம்தான் சன் டி.வி. சன் டி.வி-யை வீரப்பன்தான் நடத்திக் கொண்டிருக்கிறான் என்கின்ற அளவிற்குப் பேசுகிற ஒரு நிலையில் சர்வ கட்சிக் கூட்டத்திலே அவர்களை உட்கார வைத்து. . . .

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலமைச்சர் yield பண்ணினால்தான் நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கமுடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். திரு. சுந்தரம் நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து கழகங்களின் பெயரை மாற்ற வேண்டும் என்று கூட்டத்தில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டபோது, அதற்கு ஒப்புதல் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வரவில்லை. அவர்கள் மீதிக் கருத்துக்களை ஏற்றுக் கொண்டார்கள். அந்தக் குறிப்பிட்ட கருத்திலே எங்களுக்கு உடன்பாடில்லை என்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆக, அந்தச் சூழ்நிலை வேறு, இந்தச் சூழ்நிலை வேறு. ஒன்றை வைத்துக்கொண்டு நீங்கள் அடுத்த கூட்டத்தை நான் கூட்டவில்லை என்று கூறுவது எந்தவிதத்தில் நியாயம்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் திரு. வி. பி. சிங் அவர்களைப் பார்க்கப் போவதற்காக, சர்வ கட்சிக் கூட்டம் கூட்டியபோது, உங்கள் கட்சியின் சார்பிலே, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த நீங்கள், வருகிறோம் என்று சொல்லி, விமான டிக்கெட்டுகள் வாங்கப்பட்ட பிறகு, இறுதிக் காலத்திலே வரமாட்டோம் என்று ஓடிவிட்டீர்களே. அதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள்.

திரு. பி. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையிலே, அந்த உடன்படிக்கையிலே உங்களுடைய கட்சியின் நிலை எங்களுக்கு உடன்பாடு இல்லையென்ற காரணத்தினால்தான் அதற்கு நாங்கள் வரவில்லை.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் சொல்வது அதுவல்ல. எல்லோரும் சேர்ந்து திரு. வி. பி. சிங் அவர்களைப் பார்ப்பதற்கு - அப்போது அவர் பிரதமர்; அவரைப் பார்ப்பதற்கு எல்லா கட்சிகளும் சேர்ந்து செல்வது என்று முடிவு எடுத்து, அப்போது வருவதாகத் தெரிவித்துவிட்டு விமான டிக்கெட் எல்லாம் வாங்கிய பிறகு கடைசியாக இரத்து செய்து விட்டார்கள். அதுதான் அவர் இப்போது சொல்வது. காவிரிப் பிரச்சினைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்று சொல்லி விடலாம். அது வேறு.

அப்போது இதே அவையில் எதிர்க்கட்சியிலே நம்முடைய அன்பிற்குரிய திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் இதே பிரச்சினையைப் பற்றிப் பேசும்போது, இங்கே முதலமைச்சராக வீற்றிருந்த அம்மா ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

''தமிழக அரசும் காவல் துறையும் எந்த அளவிற்கு விவேகத்துடனும், கட்டுப்பாட்டுடனும் நிதானம் தவறாமல் செயல்பட்டன என்பதை எதிர்க்கட்சித் தலைவர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் அவர்களுக்குப் பாராட்ட மனம் வரவில்லை. என்றாலும், தமிழகக் காவல் துறையை இழிவுபடுத்தும் வண்ணம் அவையில் அவர் பேசியது வேதனைக்குரியதாகும். வீரம் இருக்கும் இடத்தில் விவேகமும் இருக்க வேண்டும். அப்போதுதான் வீரத்தின் பலன்கள் நமக்குக் கிடைக்கும். வீரப்பனிடம் 3 உயிர்கள் சிக்கிக் கொண்டிருந்த சூழ்நிலையில், அந்த வீரர்களுக்கு எந்த ஆபத்தும் ஏற்படக்கூடாது என்கிற எண்ணத்தினால்தான் காவல் துறையினரையும், மாவட்ட ஆட்சித் தலைவரையும் தகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் எனது ஆணையின் பேரில் பேச்சுவார்த்தை நடத்த ஆரம்பித்தார். மூன்றாவது நாளில் வீரப்பன் கூட்டத்தைச் சேர்ந்த பேபி வீரப்பன் மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்துப் பேசினான். பேபி வீரப்பன், பின்னர்

வீரப்பனின் மனைவியையும் வேறு சிலரையும் பாதுகாப்பாக வைத்துள்ள இடத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வந்தான். வீரப்பனின் தம்பி, அர்ச்சுனன் 12-12-1994 அன்று மருத்துவச் சிகிச்சை செய்து கொள்வதற்கும், வீரப்பனின் அடாவடித் தனமான நிபந்தனைகளைத் தெரிவிப்பதற்கும் வந்தான். சிறையில் அடைக்கப்பட்டிருக்கின்ற அவனது சகோதரன் மாதையனைப் பார்ப்பதற்கும் தனது காயத்திற்கு மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கும் அர்ச்சுனனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

நாம் வெளிப்படுத்துகின்ற எந்தச் செய்தியும் மேற் கொண்டுள்ள பணிக்கு இடையூறாகப் போவது மட்டுமின்றி மூன்று பேர்களின் உயிருக்கும் ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்கின்ற எச்சரிக்கை உணர்வும்தான் பல செய்திகளை நாங்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணம்.

இன்று காவலர்கள் மேற்கொண்ட பணிகளை வாய்க்கு வந்தபடி ஏசுபவர்கள். வீரப்பனைப் பிடிக்க முடியவில்லையா; தனி ஆள், இரட்டை ஆள் என்று வீரப்பனைக் கூறுகின்றவர்கள். இத்தனை பெரிய காவல் படை சென்று வீரப்பனையும் அவன் கூட்டத்தையும் பிடிக்க முடியவில்லையா என்று நிதானமின்றி இந்தப் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொள்ளாமல் பேசுகிறவர்களுக்கு சில உண்மைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறேன்.''

நான் அல்ல, இதுவெல்லாம் ஜெயலலிதா பேச்சு. இப்போது ஜெயலலிதா பேசிக் கொண்டிருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

''பிணைக் கைதிகளாக வீரப்பனிடம் சிக்கிக் கொண்ட மூன்று பேர்களையும் எப்படியாவது காப்பாற்றி அழைத்து வருவதற்காக National Security Guard (NSG) Brigadier ஒருவரின் தலைமையிலே 180 பேர்கொண்ட ஒரு குழு மீட்புப் பணியை மேற்கொள்ள டெல்லியிலிருந்து வந்தது. N.S.G. என்பது மத்திய அரசின் அதிரடிப் படையாகும். கிட்டத்தட்ட 6,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள அடர்த்தியான வனப் பகுதிகளை நேரில் கண்ட பின்பு, இத்தகைய இடங்களில் மீட்புப்

பணியை மேற்கொள்வது மிகவும் கடினமான காரியம் என்று கருத்து தெரிவித்து N.S.G. குழுவினர் திரும்பிச் சென்று விட்டார்கள்.'' இதுவும் ஜெயலலிதா சொன்னதுதான்.

''வீரப்பன் எங்கே ஒளிந்திருக்கிறான்? கட்டாந் தரையிலோ அல்லது களத்துமேட்டிலோ அல்ல; அடர்த்தியான மரங்கள் வளர்ந்து, ஆறு அடிக்கு அப்பால் ஒரு யானை நின்றால் கூட அது கண்ணுக்குத் தெரியாத ஒரு வனாந்தரப் பகுதியில் ஒளிந்துகொண்டிருக்கிறான். யானை நின்றாலே கண்ணுக்குத் தெரியாத அடர்த்தியான காட்டுப் பகுதியில் ஒரு ஒல்லியான மனிதன் மறைந்து நின்று, கொரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டால் அந்தச் சூழ்நிலையை எப்படிச் சமாளிக்க முடியும்?

மனைவி மக்களைப் பிரிந்து, மாதக் கணக்கில் ஓய்வு ஒழிச்சலின்றி, தங்களது உயிருக்கு எப்போது ஆபத்து வரும் என்று தெரியாத நிலையில் பாடுபட்டு வரும் காவலர்களின் கடுமையான வாழ்க்கையைப் புரிந்து கொள்ளாமல், சிலர் வக்கணை பேசுகிறார்கள். வசைச் சொல் கூறுகிறார்கள். இவற்றை யெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல் காவல் துறையைக் களங்கப் படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது.'' (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவில்லை. ''அறிவுடைமை ஆகாது'' என்று ஜெயலலிதா அம்மையார் சொல்கிறார். ''வக்கணை பேசுகிறார்கள். வசைச்சொல் கூறுகிறார்கள். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்காமல், காவல் துறையைக் களங்கப்படுத்திப் பேசுவது அறிவுடைமை ஆகாது'' என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

பிறகு, 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இதே போன்றதொரு கடத்தல் வீரப்பனால் நடத்தப்பட்டபோது, ஒத்தி வைப்புத் தீர்மானம். அதிலே அந்த அம்மையார் பேசுகிறார். ''வீரப்பனைப் பிடிப்பதற்காக இராணுவத்தின் உதவியை நாட வேண்டும். இராணுவத்தினரால்தான் இது முடியும் என்று இங்கே எதிர்க்கட்சித் தலைவர் பேசினார். அதை இந்த நேரத்தில் நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. இராணுவத்தினர் இங்கே வந்தால் அதனால் வேறு சில பிரச்சினைகள் எழக்கூடும். இராணுவத்தினர் போடுகின்ற ஒரு நிபந்தனை, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களையெல்லாம் காலி செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அது சாத்தியமான காரியமல்ல. இந்த விஷப் பரீட்சையில்

இறங்க இந்த அரசு விரும்பவில்லை. இராணுவத்தினருக்கு என்று சில திறமைகள் இருக்கலாம். ஆனால் அந்தப் பகுதியைப் பொறுத்தவரை, அந்தக் காடுகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அது ஒரு Unknown terrain இந்தக் காட்டுப் பகுதியிலே உள்ள பாதைகள் எங்கே போகின்றன, எப்படிப் போகின்றன என்பதெல்லாம் இராணுவத்திற்குத் தெரியாது. ஆகவே இராணுவத்தை அழைக்க இயலாது'' என்றும் ஜெயலலிதா அவர்களே இதே அவையிலேதான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். (குறுக்கீடு).'

திரு. பி. ஆர். சுந்தரம் : ✱ ✱

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் முதலமைச்சர் yield ஆகவில்லை, உட்காருங்கள் (குறுக்கீடு) இல்லை. நான் அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள் இப்போது (குறுக்கீடு) சரி, நீங்கள் உட்காருங்கள் இப்பொழுது. உங்கள் பேச்சு குறிப்பேட்டிலே ஏறாது, உட்காருங்கள், நீங்கள் என்ன பேசினாலும் ஏறாது.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி : தீவிரவாதி களை அனுப்பி இதுபோன்ற கடத்தல் சம்பவங்களில் அவர்களை விடுவிக்கின்ற முயற்சி ஒன்றும் புதிது அல்ல. இதற்குப் பல முன்மாதிரிகள் இருக்கின்றன.

சமீபத்திலே காத்மாண்டிலேயிருந்து 181 பயணிகளோடு புறப்பட்ட இந்தியன் ஏர்லைன்ஸ் விமானம் 5 தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது. அதில் 41 பேர் தமிழர்கள் இருந்தார்கள். மொத்த பயணிகளில் 27 பேர் விடுவிக்கப்பட்டார்கள். 4 பேர் கொல்லப்பட்டார்கள். கடத்தப்பட்ட விமானம் இறுதியாக

ஆப்கானிஸ்தானத்தில் இருந்த காந்தகார் விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமான கடத்தல்காரர்களோடு ஐக்கிய நாடுகளின் தூதுக் குழுவே பேச்சுவார்த்தை நடத்தியது. அப்பொழுது, காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானுடைய மதத் தலைவர் மவுல்லி மசூத் அசாரையும், வேறு சில தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாத வரையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கடத்தல்காரர்கள் திட்ட வட்டமாகக் கூறிவிட்டனர். பயணிகளை விடுவிக்குமாறு தூதுக் குழு விடுத்த வேண்டுகோளைக் கடத்தல்காரர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். தங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத நிலையில் பயணிகளை விடுவிக்க முடியாது என்று கூறிவிட்டதால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது, தூதுக் குழு திரும்பிவிட்டது. விமானக் கடத்தலுக்குக் காஷ்மீர் தீவிரவாத அமைப்பான இஸ்லாமிய மீட்பு முன்னணி பொறுப்பேற்றுக் கொண்டது. மவுல்லி மசூத் அசார் உள்ளிட்ட தீவிரவாதிகளை விடுவிக்கக்கூடாது என்று இராணுவத் துறை நிபுணர்களெல்லாம் வற்புறுத்தியும்கூட கடத்தல்காரர்களோடு பேச்சுவார்த்தை நடத்த இந்தியத் தூதுக் குழு ஒன்று சென்று பேச்சுவார்த்தை நடத்தியது. இறுதியாக 8 நாட்களுக்குப் பிறகு உடன்பாடு ஏற்பட்டு, சிறைகளிலே அடைக்கப்பட்டிருந்த 3 தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்ட பிறகுதான் பயணிகள் எல்லாம் விடுவிக்கப்பட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒரு செய்தி.

அதுமாத்திரம் அல்ல. அதற்கு முன்பேகூட, 1989-ல் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில், மத்திய உள் துறை அமைச்சராகயிருந்த முப்தி முகம்மது சையத் அவர்களுடைய மகள் ரூபையா சையத் அவர்களைக் காஷ்மீர் தீவிரவாதிகள் கடத்திச் சென்றுவிட்டார்கள். அவரை விடுவிக்க டிசம்பர் 13, 1989 அன்று ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி - J.K.L.F. என்ற தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 தீவிரவாதிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

மீண்டும் மார்ச் 1991-ல் காஷ்மீர் அரசியல் தலைவர் சைபுதீன் சோஸ் அவர்களின் மகள் நாஹீது என்பவர் தீவிரவாதி களால் கடத்திச்செல்லப்பட்டபோது அவரை விடுவிக்க காஷ்மீர்

தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 3 தீவிரவாதிகள் விடுவிக்கப் பட்டார்கள்.

1991-ல் இந்தியன் ஆயில் கம்பெனியின் மூத்த அதிகாரி துரைசாமி என்பவர் காஷ்மீர் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப் படும்பொழுது, அவரை விடுவிக்க ஆகஸ்ட் 20 அன்று 11 காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

இன்னொன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றேன். பழ. நெடுமாறனையும், வேறு சில தீவிரவாதிகள் என்று உங்களால் சொல்லப்படுகின்றவர்களையும் குற்றம் சாட்டப்பட்டவர்களையும் அனுப்பியது தவறு என்று கூறப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு ஆந்திராவில் நாலைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நக்சலைட்டுகள் கடத்திக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களிடம் பேசி அதிகாரிகளை மீட்க யாரை அனுப்புவது என்ற கேள்வி எழுந்தது. அப்போது நச்சலைட்டுகளைச் சந்தித்துப் பேச்சு நடத்த யாரை அனுப்பலாம் என்ற ஒரு கருத்து உருவானது. நச்சலைட்டுகளால் கடத்தப்பட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை விடுவிக்க நச்சலைட் இயக்கத்திற்காக வாதாடிக்கொண்டு இருக்கின்ற வக்கீலையே அனுப்பலாம் என்று ஒரு கருத்து வந்தது. இந்தக் கருத்தை ஆந்திர அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஐ.பி.எஸ். அதிகாரிகள் கடுமையாக எதிர்த்தார்கள். ஆனால் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் சங்கம் கூடி, எங்களைச் சேர்ந்த நாலைந்து அதிகாரிகள் நச்சலைட்டுகளால் கடத்தப்பட்டிருக்கும்பொழுது அதுபற்றி விவாதமா? எனவே அவர்களை மீட்க, வழக்கறிஞர் கண்ணபிரானைக் கட்டாயம் காட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று தீர்மானமே போட்டார்கள். பிறகு ஆந்திர அரசு, வழக்கறிஞர் கண்ணபிரானை அனுப்பி, அந்த நான்கைந்து ஐ.ஏ.எஸ். அதிகாரிகளையும் மீட்டு வந்தது. ஆகவே முள்ளை முள்ளால் எடுப்பது என்பார்களே, முள்ளிலே விழுந்த சேலையை, துணியை எடுப்பதைப் போல, ஆரம்பத்தில் செய்தோம். பிறகு, முள்ளை முள்ளால் எடுப்பதைப் போல, அந்தக் காரியத்தையும் செய்யவேண்டிய அவசியத்திற்கு நாம் வந்திருக்கின்றோம் என்பதை இங்கே எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

திரு. நெடுமாறன் அவர்களைப்பற்றிப் பேசப்பட்டது. நெடுமாறன் என்னமோ பிரிவினைவாதி. நெடுமாறன் தேசவிரோதி என்றெல்லாம்கூட நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குப் பேசும்போது குறிப்பிட்டார்கள். நெடுமாறன் நடத்துகின்ற தமிழர் தேசியக் கட்சி, தடை செய்யப்பட்ட இயக்கம் அல்ல. அல்லது அவரும் அவரோடு சென்றிருக்கின்ற இரண்டு பேர், பேராசிரியர் கல்யாணி என்பவரும், பாண்டிச்சேரியைச் சேர்ந்த அவருடைய இயக்கத்தைச் சேர்ந்த சுகுமாரன் என்பரும் மனித உரிமை மீட்பு கூட்டு இயக்கம் என்ற ஒன்றை நடத்துகிறார்கள். அதன் சார்பாகத்தான் போய் இருக்கிறார்கள். கேட்கலாம். அவர் பிரபாகரனுக்கு வேண்டியவர் அல்லவா, பிரபாகரனை ஆதரிப்பவர் அல்லவா, ராஜீவ் காந்தி கொலை வழக்கிலேகூட அந்தக் கொலையாளிகளுக்காகக் கருணைகாட்டக்கூடியவர் அல்லவா என்றெல்லாம்கூடக் கேட்கலாம். நான் அதை மறுத்தோ அல்லது ஆதரித்தோ, அவர் அப்படிச் செய்தது சரிதான் என்றோ பேச வரவில்லை. ஆனால் அதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு இருக்கிறது. அதை மறந்து விட்டீர்களே. நெடுமாறன் என்ன செய்தாரோ, அதே காரியத்தை வீரமணி செய்து கொண்டிருக்க வில்லையா? என்ன பேசினார்? ஒரு ஆண்டுகூட முடியவில்லை. 1999 ஜனவரி 24 ஆம் நாள் சென்னையில் நடைபெற்றது. 'எம்.ஜி.ஆரும், ஈழத் தமிழர்களும்' என்ற நூல் வெளியீட்டு விழா. அதில் வீரமணி பேசினார். ''விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது, அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ, விரோத மானதோ அல்ல''. அரசியல் சட்டம்பற்றி லத்தீப் அவர்களுக்கு என்னைவிட நன்றாகத் தெரியும். இங்கே பேசினார்கள். வீரமணி சொல்லியிருக்கிறார். ''விடுதலைப் புலிகளின் மீதுள்ள தடையை நீக்குக என்று கோருவது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானதோ விரோதமானதோ அல்ல.'' மேலும் வீரமணி, ''என்னைப் பொறுத்தவரையில், பிரபாகரன், தமிழ்ச் சமுதாயத் தலைவர் மட்டுமல்ல, என்னுடைய இளைய சகோதரனாகும்'' என்று பேசியுள்ளார். யாருக்கு? வீரமணிக்கு ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள பிரபாகரன், வீரமணிக்கு இளைய சகோதரன். மறந்துவிடாதீர்கள். நான் நெடுமாறனோ அல்லது வீரமணியோ இப்படிப் பேசுவதோ

கருதுவதோ சரியென்று ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆள் அல்ல நான் என்பது உங்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும். ஆனால் அதே வீரமணி அவர்கள், அவருடைய கட்சியினுடைய சார்பில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 13 ஆம் நாள் மயிலாடுதுறையில் நடைபெற்ற - சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற - திராவிடர் கழகத்தினுடைய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் என்ன தீர்மானம் நிறைவேற்றினார் தெரியுமா? ''ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட நான்கு கைதிகளுக்கான தண்டனையைக் குறைக்க வேண்டுமென்று'' குடியரசுத் தலைவர் திரு. கே. ஆர். நாராயணன் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானத்தினுடைய முழு வாசகத்தையும் படிக்கிறேன்.

''அண்மையில் ராஜீவ் காந்தி கொலை வழக்கில், தடா சட்டம் அவ்வழக்கிற்குப் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்ச நீதிமன்றம், அதே சட்டத்தின் அடிப்படையில் சட்ட வலிமை பெற்ற சாட்சியங்களை ஏற்று பலருக்குத் தண்டனை அளித்தது நியாயப்படி ஏற்கத் தக்கதல்ல''. ''அதில் தூக்குத் தண்டனை பெற்றவர்களான நளினி, திருவாளர்கள் முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து அவர்களுக்கு கருணை காட்ட வேண்டுமென்று குடியரசுத் தலைவரை இக்குழு வேண்டிக் கேட்டுக்கொள்கிறது''.

அது மாத்திரமல்ல, 27-5-1999 'விடுதலை' பத்திரிகையில் வீரமணி எழுதிய தலையங்கத்தில் - ''தமிழ்நாட்டு அரசியலிலும் சரி, இந்திய அரசியலிலும் சரி, எப்போதாவது, யார் மீதாவது பழிபோட்டு மற்றவர்களைப்பற்றித் தவறான பிரச்சாரம் செய்வதற்கு 'ரெடிமேடு' பலிகடாவாக ஆக்கிட, என்றும் பலரால், குறிப்பாக சில அரசியல் கட்சிகளாலும், உளவுத் துறைகளில் மேலோங்கியுள்ள பார்ப்பன ஆதிக்கவாதிகளாலும் பயன் படுத்தப்படும் அமைப்பு ஈழத்தில் தன்னுரிமை, மனித உரிமைக்குப் போராடிக் கொண்டு இருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பேயாகும். தமிழ்நாட்டிலோ, தென்னாப்பிரிக்காவிலோ அல்லது உலகெங்கும் உள்ள நாடுகளில் வாழும் தமிழர்களோ, ஈழத் தமிழர்களின் உரிமைப் போரை, விடுதலைப் போராட்டத்தை

ஆதரிப்பது என்ன மாபெரும் சமூகக் குற்றமா'' என்று கேட்ட வீரமணி அவர்கள் யாரோடு இருக்கிறார்; எங்கே இருக்கிறார்; எங்கே ராஜகுரு என்ற நிலையிலே இன்றைக்கு அவர் இருக்கிறார் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரியும். அவருக்கு டெல்லியிலே, அங்கு நடைபெற்ற ஒரு விழாவிலே, டெல்லியினுடைய முதலமைச்சர் ஷீலா தீட்சித் அவர்கள் 5 இலட்சம் ரூபாய் அவருடைய நிறுவனத்திற்கு நிதிகூட, இப்போதுதான் ஒரு மாதத்திற்கு முன்புதான் கொடுத்திருக்கிறார். இங்கேகூட, பெரியார் விழா - ஒரு கமிட்டி போட்டு, அவர் அமைப்பாளராக இருந்து, நம்முடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் குழுவினுடைய தலைவராக இருந்து நடத்தப்பட்டிருக் கிறது. நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. அதுசரி என்கிறபோது, நெடுமாறன் சென்றதும் சரிதான் என்பதற்காகத் தான் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதைச் சொல்கிறேனே யல்லாமல், அதைத் தவறு என்று நான் சொல்லவில்லை என்று குறிப்பிட்டு, இந்த அளவில் கர்நாடக மக்களும், தமிழக மக்களும் சகோதரர்களாக வாழ்வதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்க இந்தத் தீர்மானம் பயன்படட்டும் என்றுகூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

காமராஜர் சிலை

உரை : 115 **நாள்: 29.05.2007**

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பை திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கின்றார்கள்.

சிலையைப் பொறுத்தவரையில்- அந்தச் சிலைக்குச் சொந்தக்காரரான- பெருந்தலைவர் காமராஜர் இந்த மாநிலத்திற்கு மாத்திரமல்லாமல், இந்தியத் திருநாட்டிற்கே மிக முக்கியமான ஒரு பெருந்தலைவர் என்பதை யாரும் அணுவளவும் மறுத்துக் கூற இயலாது.

கடற்கரையில் இருக்கின்ற சிலைக்கு அமைக்கப்பட்டிருக் கின்ற ஒளி விளக்கு போதாது. அதற்கு ஒரு ஃபோகஸ் லாம்ப் பொருத்தப்பட வேண்டும் என்ற ஓர் எண்ணத்தை இங்கே அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். காமராஜர் அவர்களிடத் திலே- இந்த அரசுக்கு இன்று நேற்றல்ல, இந்த அரசு உருவா வதற்கு முன்பே, சென்னை மாநகராட்சி மற்றும் திராவிட முன் னேற்றக் கழகத்தின் கைக்கு வந்த அந்தக் காலகட்டத்திலேயே, உயிரோடு இருப்பவர்களுடைய சிலைகளைத் திறப்பதில்லை என்று உறுதி எடுத்துக் கொண்டிருந்த பண்டித நேரு அவர் களுடைய உள்ளத்தையே மாற்றி, அவர்களை அழைத்து வந்து- திராவிட முன்னேற்றக் கழகம்தான்- சென்னை மாநகராட்சி மன்றத்திலே காமராஜருடைய சிலையைத் திறந்து வைத்த வர்களே நாங்கள்தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) திரு. சி ஞானசேகரன் அவர்கள் மறந்திருக்க மாட்டார் என்று கருதுகின்றேன். காமராஜருடைய புகழை, சிலையின் மூலமாக மாத்திரமல்ல, அவர்கள் விட்டுச் சென்ற பணிகளையும் நாம்

ஏற்று நடந்தால்தான் அது காமராஜருக்கு நாம் செய்கின்ற தொண்டு, அவருக்கு அளிக்கின்ற காணிக்கை ஆகும். திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னார்கள், 'உங்களால் முடிந்தால் செய்யுங்கள், இல்லையென்றால் நாங்களே எங்கள் கட்சியின் சார்பாகச் செய்கின்றோம்' என்று. அதைச் சொல்லாமல் இருந்திருந்தால் நான் இப்போது சொல்லப் போவதைச் சொல்லி யிருக்கமாட்டேன்.

காமராஜர் சாகிற வரையிலும், அவரோடிருந்து, பணி யாளராக இருந்தவர் வைரவன் என்ற ஒருவர். காமராஜர் சாகிற வரையிலும் இருந்தார். காமராஜர் இறந்துபோன பிறகு அந்த வைரவனைக் கவனிக்க அந்தக் கட்சியிலே நாதியே இல்லை என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வைரவனை, காமராஜர் நினைவு இல்லத்தைப் பார்த்துக் கொள்கின்ற காவலாளியாக நியமித்து, மாதம் 1,000 ரூபாய் சம்பளம் கொடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு வீடு ஒன்று அமைத்துக் கொடுத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி தான் என்பதையும், காமராஜருடைய பணியாளருக்கே வெளிச்சம் கொடுத்த இந்த ஆட்சி, பெருந்தலைவர் காமராஜருடைய சிலைக்கா வெளிச்சம் தராமல் போய்விடும் என்பதைச் சொல்லி, உடனடியாக அதைக் கவனிக்குமாறு-பொதுப்பணித்துறையோ அல்லது மாநகராட்சி மன்றமோ-அந்தத் துறைகளை நான் கேட்டுக்கொள்கின்றேன். உடனடியாக அது செயல்படுத்தப்படும்.

G0059 29.
894.8115
TAM

